# திருவள்ளுவர், வேமனர்-
# ஓர் ஒப்பாய்வு

## A Comparative study
## of
## Tiruvalluvar and Vemana

Dr N. Dharma Reddy M.A., Ph.D. Vidwan

30
3780

Sri Venkateswara University, Tirupathi

# திருவள்ளுவர், வேமனர், ஓர் ஒப்பாய்வு

## ( A Comparative Study of Tiruvalluvar and Vemana )

By

**Dr. N. DHARMA REDDY**, M.A. Ph.D., Vidvan
Reader in Tamil

**திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.**
**( Sri Venkateswara University, Tirupathi. )**

First Edition : 1984
Copy Rights with the Author

Price :

*Published by*
**Sri Venkateswara University**
Tirupathi-517 502

Maruthy Press,
173, Peters Road
Madras-600 014.



Prof. **N. KRISHNA REDDY** — NEW YORK UNIVERSITY

# Dedicated
# to
# My cousin

Padmasri. Prof. **N. Krishna Reddy**
D. Litt. (Honoris Causa)

A dedicated and Internationally reputed Artist Sculptor and Printmaker harmoniously blending the East and the West presenting a unique vision of Universal Symphony.

# AN APPRECIATION

**Prof Dr. G. N. REDDY,**
Department of Telugu Studies,
S. V. University, Tirupati-517 502.

'Unity in diversity' is the adage usually mentioned in projecting the 'Indianness' in the culture, religion, thought etc. of India. In spite of different regional languages and regional literatures, it is not difficult to discern features of 'similarity in dissimilarity' in the literatures of India. This aspect is more evident particularly in the classical literatures of India. Another interesting feature of Indian literatures is the existence of Saint Poets at one period or other in all the literatures of India. Whatever was expressed or written by the Saint poets of India, we find perceptible similarity in their thought and imagination, though their languages are different. Among the Saint poets of South India, Tiruvalluvar in Tamil and Vemana in Telugu provide an interesting theme for a 'compare and contrast study' as Tiruvalluvar appears in a way an antithesis of Vemana if not a complement. In the present work, Dr. N. Dharma Reddy who is well at home in Tamil and Telugu literatures and a good researcher in Comparative South Indian Literatures has successfully brought out very interesting findings in an indepth study of Tiruvalluvar and Vemana. I congratulate Dr. Reddy for undertaking a study of this kind and publishing his work, as this work may inspire other young scholars to pursue similar Comparative studies in Indian literatures.

Social consciousness, social progress, concern of common man, progressive writing, committed writer are some of the expressions commonly used in the literary discussions and reviews in modern times. If these concepts are to be applied

in evaluating the contribution of Tiruvalluvar and Vemana, we find them very unique and exemplary among the clssical poets besides their excellence in poetic art. Whatever they said and wrote bear the stamp of human welfare of universal appeal. As long as the human beings continue to live or behave as human beings, the thought and values embedded in the works of Tiruvalluvar and Vemana would continue to shine and guide the humanity as bright stars in the firmament of Indian literatures. Written in a lucid style, Dr. N. Dharma Reddy presents the ethical, moral and the universal aspects of the two great Saint poets of South India who lived in different periods and in different regions and wrote in different languages.

National integration is the slogan of today and national integration can never be achieved by constituting committees and councils or by organising seminars and symposia. Integration in our thought and outlook and in our understanding of life and society should alone provide the bedrock for the national integration. Study and propagation of the works of Indian Saint poets like Tiruvalluvar, Vemana, Sarvajna, Tukaram, Guru Nanak, Mirabai, Kabir and many others in our country would certainly create an integrated sense of Indianness among the peoples of India and towards this objective also the present work of Dr. N. Dharma Reddy is a welcome contribution.

**G. N. REDDY**

# FOREWORD

**Prof. Dr. N. SANJEEVI**

Head, Dept. of Tamil Literature, University of Madras,
Marina Campus, Madras-600 005.

'World Integration', 'World Peace'—these are the dominan t echoes in most of the human minds of the present century. One amongst the many roads that leads to the above attainment is the comparative study of World Literatures and Cultures.

The study of Comparative Literatures has broadened the human mind to consider a literature as 'a literature **in** a language', instead of 'a literature **of** a language'. By broadening the human mind, the study of the Comparative Literature leads to the idea of Integration of World Literatures and through that, to the integration of the mankind.

* * *

The comparative study of Valluvar and Vemana is a new blossom in the garden of the Comparative Literature. In fact, it serves as the bridge to the spirit of Tamil-Telugu unity.

It is true, that this comparative study on Valluvar and Vemana would result in more enthusiastic involvement of the Tamil scholars with Vemana, than a book written in Tamil only on Vemana. The author of this book has given more clear and useful details about Vemana to the Tamil world. There is no doubt, that those who read this book would be inspired to read more about Vemana.

* * *

There are many methods for comparing World Literatures. This work mainly concentrates to reveal the similarities in

Valluvar's and Vemana's thoughts and their ways of expressions.

Though the author mainly concentrates to reveal the similarities, he has not failed to point out the main differences also.

If this research could have aimed at bringing out the similarities, differences with their causes, it would have been more useful to the research world, though it is a time consuming endeavour.

The ideas stated in this book about Valluvar are well known to the Tamil scholars. But what the novel point here is that the author has compared them with that of Vemana. Valluvar's contribution is a well planned one; whereas the collections of Vemana's are extempored songs expressing his personal experiences. Hence, the researcher was forced to compare the ideas of Valluvar and Vemana following the classifications of the Kural.

When we observe the similarities broughtout by the author, we are convinced of the fact that "Great men think alike". Even though there are similarities between the ideas and the methods of expressions followed by Valluvar and Vemana, we come across certain fundamental differences as well between them, through this work.

Some of them are as follows :

1. Since Valluvar was a learned and matured genius, we find in him a way of tenderness in expressions even at the time of criticising faulty persons. But in Vemana the words are harsh and his expressions appear to be rude, due to his feelings against the hypocritic society.

2. Valluvar and Vemana are crisp and simple in their expressions. But Valluvar's expressions are more crisp than those of Vemana's. On the contrary, Vemana appears superior to Valluvar in using the similies, since they are all used by the common folks in their day-to-day lives. Vemana also uses the common dialect of the folks which makes the reader to understand easily.

3. Both Valluvar and Vemana were for the 'Oneness of the World'; but we observe, that Valluvar was **more free** from the bindings of the religious than Vemana was.

4. Though Valluvar and Vemana consider the ultimate goal of life in the attainment of 'moksha', Valluvar has given primary importance to the emphirical life; whereas Vemana has given primary importance to a life of renunciation.

5. Valluvar and Vemana are equally great social reformers of their period. Valluvar's method of social reformation is a mild one, but that of Vemana seems to be harsh.

Vemana attacks violently not only the Brahmins and others who consider themselves as superior in the society, but also the Vedhas, Puranas and Dharma sastras since they are the root cause for the caste system and communal differences in the human society. The researcher has established these differences by clear evidences.

In toto, with the exemption of a few mistakes owing to the acceptance of some false statements made by some Tamil scholars, this work remains a commendable and more useful one. In fact, this work reveals the author's hard and honest work in the field of comparative study. I commend the book for every one interested in reforming the society.

* * *

I want to conclude by stating the following :

Though Tirukkural has been given the due place in the history of Tamil Literature, it has been virtually neglected at the national level due to reasons that need not be discussed here. The verses of Vemana has also not obtained its due merits even in the history of Telugu Literature for centuries, due to communal hatred and caste mindedness.

In such a situation it is most welcome that Dr. Dharma Reddy has broughtout this good work on Valluvar and Vemana which I heartily recommend to all those interested in comparative literature and particularly, Indian National Integration.

**N. Sanjeevi**

# ஆய்வுரை

பேராசிரியர், டாக்டர் சி. **பாலசுப்பிரமணியன்**
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

"செப்புமொழி பதினெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்ற பாரதியின் பாவடிகளை எடுத்துக் காட்டி, இந்தியாவில் வழங்கும் மொழிகள் வேறுபடுவது உண்மையே யாயினும், அவ்வம் மொழிகளில் அமைந்துள்ள இலக்கியங்கள் உணர்த்தும் சிந்தனைப் போக்கில் ஒத்த இயல்புகளைக் காணக்கூடும் என்றும், இதனை ஒப்பாய்வின் மூலம் உறுதியாக எடுத்துரைக்கலாம் என்றும், ஆய்வாளர் தம் நூலின் முன்னுரைப் பகுதியிலேயே குறிப்பிட்டிருப்பது பொருத்தமுடைத்தாகும்.

திருவள்ளுவர் என்னும் தமிழ்ச் சான்றோரையும், வேமனர் என்னும் ஆந்திர மாநிலச் சான்றோரையும் ஒப்பிட்டு ஆய்வதனை இந் நூல் கருத்தாகக் கொண்டுள்ளது. இவ்விரு பெருமக்களிடையே நிலவும் ஒற்றுமைக் கருத்துகளை ஆராய்வதோடு, வேற்றுமைக் கருத்துகளையும் இந்நூல் திறம்பட ஆராய்கின்றது.

இயலொன்றில் திருவள்ளுவர்—வேமனர் வரலாற்றின் நிலைமை ஆராயப்படுகிறது. இருவர்தம் வரலாறு குறித்து என்னென்ன கதைகள் வழங்குமோ அவ்வளவினையும் ஆய்வாளர் நம் சிந்தனைக்கு எடுத்துவைக்கின்றார். வேமனர் பாடிச்செல்ல அவர்தம் சீடர்கள் ஏட்டில் எழுதிச் சென்றதனால் வேமனர் பாடல்களில் இடைச் செருகலாகச் சில பாடல்கள் இடம் பெற்றுள்ளன என்று கூறித் திருவள்ளுவர் ஒரு திட்டத்தோடு நூலைத் தாமே ஆக்கினமையால் இடைச்செருகல்கள் ஏற்பட இடம் வைக்கவில்லை என்பதனையும் ஆய்வாளர் எடுத்துக் கூறியுள்ளார்.

இரண்டாவது இயல் நூலமைப்புக் குறித்து ஆராய்கின்றது திருக்குறளின் அமைப்பு முறை குறித்து ஆய்வாளர் விரிவாக

ஆராய்ந்து செல்கிருர். பதிப்பிக்கப் பெற்ற வேமனர் பாடல்கள் குறித்தும் இதேபோன்ற ஆய்வுக் கண்ணேட்டத்தைச் செலுத்து கின்ருர்.

திருவள்ளுவர் வேமனர் பாடற் பொருள் குறித்து, பிரிவு இரண்டில் விரிவாக ஆராயும் ஆய்வாளர், பலவிடங்களில் எளிய நடையில் தெளிந்த பொருளைக் கூறிச் செல்வதைக் காணலாம். சான்ருக "நினைப்பும், சொல்லும், செயலும் நன்கு அமைய வேண்டு மானுல், மாசற்ற மனம் வேண்டும். மாசற்ற மனமின்றி எந்தச் செயலைச் செய்தாலும் அதனுல் ஒரு பயனுமில்லை" என்று எழுதும் வரிகளில் இதனைக் காணலாம். இதுபோன்றே 'மக்கட்பேறு' என்ற உள் தலைப்பில், "இல்வாழ்க்கையில் பெறும் பேறுகளில் நல்ல மக்களைப் பெறும் பேறும் ஒன்று; அந்தணர், அரசர், வணிகர் முதலிய இருபிறப்பாளர் மூவராலும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வி யானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் இறுக்கப் படுதலால் நன்மக்கள் பேறு தேவையாக உள்ளது" என்று ஆய்வாளர் எழுதியிருக்கும் விளக்கவுரை ஆழ்ந்த நுண்பொருள் கொண்டு விளங்குகின்றது. வேமனர் 'மருந்து' பற்றிக் குறிப்பிடும் பொழுது "நோயற்ற வாழ்வே சிறந்தது; ஒருகால் நோய் வந்தாலும் நோயாளியை நன்ருக ஆராய்ந்து, அதாவது அவனின் சூழ்நிலை கள் அவனுக்கு வந்த நோயின் நிலை முதலியவற்றை ஆய்ந்து தெரிந்துகொண்டு மருத்துவம் செய்யவேண்டும்; அவ்வாறு செய் கின்ற மருத்துவம் பயனுடையதாகும் என்று கூறுவதோடு, மருந்துக்கு இணையாகப் பால் எப்பொழுதும் அருந்த வேண்டு மென்கிருர். இது வள்ளுவரால் சொல்லப்பெருத செய்தி" என்றும் ஆய்வாளர் திறம்பட ஆராய்ந்து காட்டியிருப்பது, அவர்தம் நுண் மாண் நுழைபுல நோக்கை உணர்த்தும்.

அடுத்து, ஆய்வாளரின் சீரிய கூரிய நோக்கினைப் பின்வரும் பகுதியிற் காணலாம்.

> "வாழ்க்கையை மூன்று நிலைகளில் காணலாம். உடல் வாழ்க்கை, உள வாழ்க்கை, உயிர் வாழ்க்கை. உலகத் தோடு புறநிலையில் வாழும் வாழ்க்கை உடல்வாழ்க்கை. உடன் உறைவாரோடு உளம் கலந்து வாழும் வாழ்க்கை உள வாழ்க்கை. இவ்விரு வாழ்க்கைக்கும் அடிப்படையாய் அமைகின்ற உயிருக்கும் இறைவனுக்கும், அல்லது உயிரியக்கத்திற்கும் அதனை இயக்குகின்ற ஆற்றலுக்கும் உள்ள தொடர்பினைத் தெற்றென உணர்தலே உயிர் வாழ்க்கை. இதுவே மெய்ப்பொருள் உணரும் வாழ்க்கை

யாகும். பருப்பொருள் நிலையினின்றும் நுண்பொருள் நிலையை அடைய இந்த மூன்று நிலைகளும் படிப்படியாய் அமைந்துள்ளன. இந்த நுண்பொருளை—'செம்பொருள்', 'மெய்ப்பொருள்', 'கடவுள்', 'இறைவன்' என்று அறிஞர்கள் சுட்டுவர்.

ஆய்வாளர் கருத்திலேயே சொல்லப் போனுல், 'இவ்வாய்வு இரு இலக்கியங்களைப் புரிந்துகொள்ளவும், இன்பம் துய்க்கவும் பயன் படுவதோடு, சில பொதுநெறிகளையும் படைக்கிறது' எனலாம்.

ஆய்வாளர் திரு. தர்மா ரெட்டி அவர்கள் மும்மொழிப் புலமை முற்றியவர்; இனிய பண்புகள் வாய்ந்தவர். பிறருக்கென உதவும் பெருமனம் படைத்தவர். ஆய்வில் கூர்ந்தும் நுணுகியும் பார்க்கும் திறம் சான்றவர். அடக்கத்தோடு மிளிர்பவர். தமக்கிட்ட பணியினைத் தகைசால் சிறப்போடு நிறைவேற்றுபவர். இத்தகு நல்லியல்புகள் கைவரப்பெற்ற நண்பர்தம் ஆய்வின் விளைவாய் எழுந்திருக்கும் இவ்வரிய ஆராய்ச்சி நூலினைத் தமிழ்கூறு நல்லுலகமும், ஆந்திர உலகமும், ஆராய்ச்சி உலகமும் இருகை நீட்டி வரவேற்பதாக. நூலாசிரியரின் ஆய்வு முயற்சிகள் வெல்வதாகுக, வாழ்த்துகள்.

**சி. பாலசுப்பிரமணியன்**

# அணிந்துரை

பேராசிரியர், டாக்டர் பொன். சௌரிராசன்.

தமிழ்த்துறைத் தலைவர்,

திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி - 517502.

ஒப்பிலக்கிய இயல் உலகளாவிய நிலையில் அகன்றும் ஆழ்ந்தும் இன்று வளர்ந்துவரக் காண்கிறோம். அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாய் ஒரு காலத்தில் முழுமையாக அறிவதற்கரிய இந்த அண்டம், இப்போது கைக்கு எட்டியதாய், கண்ணுக்குப் புலப்படுவதாய், காதுக்குக் கேட்பதாய் அண்மைப்படுத்தப்பட்டு விட்டது. பருமையில் கிடைத்த இவ்வண்மை அனுபவத்தால் நுண்மையான உயர்ந்த பரந்த சிந்தனைகள் பல இன்று உலகில் எழுந்துள்ளன. அச் சிந்தனைகளில் ஒன்றே ஒருலகக் காட்சி.

இக் காட்சியால் விளைந்த அரசியல் பயன்கள் பல; சமுதாயப் பொருளாதாரப் பயன்களும் சில உள. இவ்வகையில் தோன்றிய இலக்கியப் பயனே ஒப்பிலக்கிய இயலாகும்.

வடமொழி, தென்மொழி இலக்கண இலக்கிய ஒப்பியல் சிந்தனைகளைத் தொல்காப்பியத்திலேயே நாம் காண இயல்கிறது. வடவர்தம் யாழோர் மணத்துக்கும் (கந்தருவமணம்) தமிழர்தம் களவு மணத்திற்கும் உரிய ஒற்றுமை வேற்றுமைகளை உள்ளத்தே கொண்டு எழுந்த தமிழ் முதல் இலக்கியம் 'குறிஞ்சிப் பாட்டு' எனலாம். என்றாலும் திறனாய்வுத்துறை உலகில் நன்கு வளர்ந்த இக்காலத்திலேயே இவ்வொப்பிலக்கிய இயல் நெறியும் குறியுங்கொண்டு வளரலாயிற்று. ஏறக்குறையக் கால்நூற்றாண்டாகத் தமிழ் ஆய்வுத் துறையினரும் இப்போக்கில் செயலாற்றத் துவங்கினர்.

துவக்கத்தில் ஒரு மொழியில் தோன்றிய இலக்கியங்களை யாப்பு, வகைமை, பாடுபொருள், சுவை முதலிய அடிப்படையில் ஒப்பாயத் தொடங்கினர். பின்னர் தொடர்ந்து சமுதாய நோக்கில், சமயப் பார்வையில், அரசியல் பொருளியல் அடிப்படையில், தொன்மை

யியல் முதலிய போக்குகளில் பல்வேறு மொழிகளில் இலக்கியங்கள் ஆயப்பெற்றன.

இவ்வாறு அமைந்து வளர்ந்துவரும் பல்வேறு வகையான ஒப்பாய்வுப் போக்குகளுள் "திருவள்ளுவர் வேமனர் ஓர் ஒப்பாய்வு" என்னும் இந்த நூல், திராவிட மொழியினத்தில் சிறந்து விளங்கும் தமிழ் தெலுங்கு மொழிகளில், பாமரரும் படித்துவரும் பரவலாகப் போற்றும் இருபெரும் கவிஞர்களை நூல் அமைப்பு, பாடுபொருள், பாடல்திறன் - என்னும் மூன்று நோக்கில் ஆய்கின்றது. இவ்விரு புலமைச்சான்றோர்தம் இல்வாழ்வும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. காலத்தால் வேறுபட்டிருந்தாலும், மக்கள் அனைவர்க்கும் உரிய கருத்துக்களை வழங்கியதனாலும், எல்லோருடைய நெஞ்சிலும் அக் கருத்துக்களை இனிதாய் எளிதாய் வலிதாய் நிறுத்தற்கு ஏற்றவாறு அன்றாட மக்களோடு தொடர்புடைய பொருள்களைக் கொண்டு சிறந்த உவமை உருவகங்களைத் தந்துள்ளமையினாலும், சீரிய பாட்டு வடிவைக் கொண்டுள்ளமையினாலும், இவ்விருவரும், உலக மக்கள் போற்றத்தக்க பெருமையைப் பெற்றனர்.

காலம் கடந்த இப் பெரும் கவிஞர்களுக்கு இடையே சில வேறு பாடுகள் இல்லாமல் இல்லை. வள்ளுவர் வாழ்க்கையில் அமைந்த அமைவு அவர்தம் நூலில் காணப்படும் திட்டமிட்ட அமைப்பாகத் திகழ்கிறது. ஆனால், வேமனர் வாழ்வில் தோன்றிய அலைவு அவர் பாடலில் திருக்குறளில் அமைந்துள்ளது போன்ற வகை, தொகை அமைப்பினைத் தாராது போய்விட்டது. உள்ளதுள் நல்லதையே அவைக்கு உரியவாறு சொல்லவேண்டும் என்ற பண்டைய தமிழ் நெறியைப் பின்பற்றிய திருவள்ளுவர் தூய சொற்களையே கையாளு கிறார். ஆனால் வேமனரோ பாமரனுக்கும் படுமாறு அன்னார் பேசிவந்த சொற்களையும் ஆங்காங்கே பயன்படுத்தக் காண் கின்றோம்.

திருவள்ளுவர் உலகசிந்தனையாளர்; அறிஞர் தத்தம் துறை களுக்கு ஏற்பத் தத்தம் நோக்கில் ஆராயத்தக்க மாபெரும் கவிஞ ராவார். அப்படியே வேமனரும் இன்று ஆயப்பெறுகிறார். எனவே இவ்விருவரையும் இணைத்து ஆய்ந்த இந்த ஆய்வினுள்ளே அப்பல நோக்குகள் இடம்பெறவில்லை. வேமனரைச் சித்தர்களோடு ஒப்பிட்டு ஆராயலாம். திருக்குறளைத் தெலுங்கில் தோன்றியுள்ள நீதி சதகங் களோடு ஒப்பிடலாம். இருவரையும் கன்பூசியரோடும், புத்தரோடும் சர்வக்ஞரோடும் ஒப்பிடலாம். ஆகவே திருவள்ளுவர்—வேமனர் எனும் இவ்வாய்வு தன்னளவில் நிறையுடையதாயினும், முற்றுப் பற்று விட்டது என்று கருதுவதற்கில்லை.

இத் தமிழ்த்துறையில் இத்தகு ஒப்பியல் தலைப்பில் முதன் முதல் முனைவர் பட்டம் பெற்ற பெருமை இணைப்பேராசிரியர் ந. தர்மா ரெட்டியாருக்கு உரியது. இத் தெலுங்கு மாநிலத்தில் பல்லாண்டு தமிழ்ப்பணி புரிகின்ற வாய்ப்பும், தெலுங்குமொழிப் புலமையும், தெலுங்குக் குடும்பப் பிறப்பும் இவ்வாய்வில் அவர் வெற்றிபெறப் பெரிதும் துணையாய் இருந்தன. தமிழ்நாட்டில் பல பல்கலைக்கழகங் களில் ஒப்பிலக்கியத்துறை உருவாகிக் கொண்டிருக்கும் இந்த நல்ல நாளில், திருவேங்கடவன் பல்கலைக் கழகச் சார்பாக இந்த நூல் வெளிவருவது தமிழ் நெஞ்சங்களுக்கு இன்பந்தருவதாகும்.

வாழ்க முனைவர் ந. தர்மா ரெட்டியார்! வளர்க அவர்தம் ஒப்பிலக்கியப் பணி!

**பொன். சௌரிராசன்**

# என்னுரை

ஆந்திர மாநிலத்தில் தமிழ் ஆசிரியராய்ப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வமயம் 'விஸ்வதாபிராம வினுர வேமா' என்ற தொடரை முடிப்பாகக் (மகுடமாய்க்) கொண்ட பாடல்கள் பல, படித்தவர்களால் மட்டுமேயன்றிப் பாமரமக்களாலும் பாடப்படுதலைக் கேட்கலானேன். தெலுங்கு மொழியையும் அறிந்த வனுகையால் அந்தப் பாடல்கள் என்னைக் கவர்ந்தன. அதன் பொருளை உணரும்போதெல்லாம் என் நெஞ்சில் திருவள்ளுவர் நினைவு எழும். அந்தப் பாடல்களைப் பற்றியும், அந்தப் பாடல்களைப் பாடிய கவிஞரைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவா எழுந்தது. தமிழ் அறிஞர்களும், தெலுங்கு அறிஞர்களும் தமிழ்ப்புலவர் திருவள்ளுவரையும், தெலுங்குக்கவி வேமனரையும் ஒப்பிட்டுப் பேசிவந்த பேச்சுக்களும் எழுதிவந்த எழுத்துக்களும் மேலும் என் ஆர்வத்தை வலுப்படுத்தின.

இவ் வார்வத்தால் பல்கலைக்கழக வாய்ப்பு ஏற்பட்டபோது திருவள்ளுவரையும் வேமனரையும் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளும் எண்ணம் தோன்றிற்று; திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் மறைந்த தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ஜி. தாமோதரனுர் அவர்களின் அறிவுரையாலும், இன்று இப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றிவரும் பேராசிரியர் டாக்டர் பொன். சௌரிராசனுர் அவர்களின் ஆதரவு உரையாலும் ஆய்வை மேற்கொள்ளும் துணிவு எனக்குப் பிறந்தது. டாக்டர் ஜி. தாமோதரனுர் அவர்களின் மேற்பார்வையில் ஆய்வினைத் தொடங்கினேன். அவர் மறைவுக்குப்பிறகு, டாக்டர் பொன். சௌரிராசனுர் அவர்களிள் மேற்பார்வையில் தொடர்ந்து இவ்வாய்வு வடிவங்கொள்ளலாயிற்று.

இவ்வாய்வு செய்ய அனுமதி கொடுத்தும், ஆய்வை மதிப்பிட்டு 1981 ஆம் ஆண்டு முனைவர் பட்டமும் வழங்கிய திருவேங்கடவன் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு நான் நன்றிமிக உடையேன்.

தன்னலம் பாராது, தம் பொன்னுன நேரத்தில் ஒரு பகுதியை எனக்காக ஒதுக்கி, என் ஆய்விற்கு மட்டுமன்றி என் வாழ்விற்கும்

வழிகாட்டி, இந்நூலுக்கு அணியாய் அழகியதொரு அணிந்துரையும் அளித்த சான்றோர் டாக்டர் பொன். சௌரிராசனார் அவர்களின் அன்புக்கு என்றும் கடப்பாடுடையேன்.

இவ் வாய்வுத் தொடர்பாய் எழுந்த சிக்கல்களை எல்லாம் விடுவித்து உதவியதோடன்றி, பல அலுவல்களுக்கிடையில் இந்நூலுக்கு இனியதொரு பாராட்டுரை வழங்கிய திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தெலுங்குப் பேராசிரியர் டாக்டர் ஜி. என். ரெட்டியார் அவர்களுக்குக் கைம்மாறு என்ன செய்ய வல்லேன்!

என் வாழ்நாள் வழித்துணையாய் விளங்கியும், இந்நூலுக்கு முன்னுரை வழங்கியுமருளிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும், ஆய்வுபற்றிய என் முயற்சிகளுக்கெல்லாம் அவ்வப் போது உதவியருளியும், இந்நூலுக்கு ஆய்வுரையளித்தும் உதவிய பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாய்வை மதிப்பிட்டு நூலாக வெளியிட அனுமதி கொடுத்த தோடு நிதி உதவியும் அளித்த பல்கலைக்கழக மானியக்குழுவின் நற்பணிக்கு நன்றியுடையேன்.

குறுகிய காலத்தில், குறைபாடுகளில்லாமல், ஆர்வமுடன் பதிப்பித்துதவிய மாருதி அச்சகத்தாருக்கும் என் நன்றி.

**ந. தர்மா ரெட்டி**

# சுருக்க விளக்கப் பட்டியல்

| | | |
|---|---|---|
| அறு.ச. | ... | அறுவகைச் சமயம். |
| க.பொ.ம. | ... | கழகப் பொன்விழா மலர். |
| சிந்.கள. | ... | சிந்தனைக் களஞ்சியம். |
| சிலம்பு | ... | சிலப்பதிகாரம். |
| த.ம. | ... | தமிழர் மதம். |
| குறள் | ... | திருக்குறள். |
| தி.அ.மு. | ... | திருக்குறள் அமைப்பும் முறையும். |
| திரு.அ.வா.வி. | ... | திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். |
| தி.ஆ.ப. | ... | திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு. |
| தி.உ.வளம் | ... | திருக்குறள் உரைவளம். |
| தி.தி.சொ.அ.சொ.ப.-2 | ... | திருக்குறள் திருமதி சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பகுதி-2. |
| தி.நீ.இ. | ... | திருக்குறள் நீதி இலக்கியம். |
| திரு.ம. | ... | திருக்குறள் மரபுரை. |
| திரு.தி.வி.மலர் | ... | திருவள்ளுவர் திருநாள் விழா மலர். |
| திரு.வ.மா. | ... | திருவள்ளுவ மாலை. |
| திரு.வா. வரலாறு | ... | திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு. |
| தொல். | ... | தொல்காப்பியம். |
| எழுத். | ... | எழுத்ததிகாரம். |
| சொல். | ... | சொல்லதிகாரம். |
| பொருள். | ... | பொருளதிகாரம். |
| புறம். | ... | புறநானூறு. |
| இரா.அ.கி.ச.வே. | ... | இராள்ளபல்லி அனந்த கிருஷ்ண சர்ம-வேமன. |
| நார்ல.வி.ஆர்.வே. | ... | நார்ல வெங்கடேஸ்வரராவ்-வேமன. |
| வ.சு.வே. | ... | வங்கூரி சுப்பாராவ்-வேமன. |
| வே.சூ.ர. | ... | வேமன சூக்தி ரத்னகரமு. |
| வே.ப.ர. | ... | வேமன பத்திய ரத்னகரமு. |
| V.V. | ... | Verses of Vemana. |
| His.Ta.Lit. | ... | History of Tamil Literature. |

# உள்ளுறை...


| | | பக்க எண் |
|---|---|---|
| | An Appreciation | 1 |
| | Foreword | 3 |
| | ஆய்வுரை | 6 |
| | அணிந்துரை | 9 |
| | என்னுரை | 12 |
| | சுருக்க விளக்கப் பட்டியல் | 14 |
| | முன்னுரை | 17 |
| | **பிரிவு—1** | |
| | திருவள்ளுவர், வேமனர் வாழ்வு—இலக்கியம் | 29 |
| இயல் - 1 | வாழ்க்கைச் சுருக்கம்—திருவள்ளுவர், வேமனர் | 31 |
| இயல் - 2 | நூலமைப்பு: திருவள்ளுவர், வேமனர் பாடல்கள் | 53 |
| | **பிரிவு—2** | |
| | திருவள்ளுவர், வேமனர் பாடல் பொருள் | 75 |
| இயல் - 3 | இல்வாழ்க்கை | 77 |
| இயல் - 4 | சமுதாய வாழ்க்கை | 107 |
| இயல் - 5 | புரட்சிப் போக்கும் சீர்திருத்தக் கருத்துக்களும் | 143 |
| இயல் - 6 | சமயமும் தத்துவமும் | 163 |

### பிரிவு—3

திருவள்ளுவர், வேமனர்
பாடற் கலைநலம் 195

இயல் - 7 கற்பனை 197

இயல் - 8 வடிவம் 235

இயல் - 9 இலக்கிய உலகில் திருவள்ளுவர், வேமனர் 247

### முடிவுரை

முடிவுரை 283

### பின்னிணைப்புக்கள்

பின்னிணைப்பு-I

துணை நின்ற நூல்கள் :

1. தமிழ் நூல்கள் 293
2. தெலுங்கு நூல்கள் 299
3. English BooKs 301

பின்னிணைப்பு-II

விளக்கக் குறிப்பு 304

# முன்னுரை

*1-1-1* ஆய்வுகள் பல கோணங்களில் செய்யப் பெற்று வருகின்றன; அவற்றிலொன்று ஒப்பாய்வு; இந்த ஒப்பாய்வு ஒரு மொழி நூல்களுக்கிடையேயும் அமையலாம்; எனின், இந்த ஒப்பியல் ஆய்வுக்குரிய நூல்கள் ஒருபொருள் பற்றியதாகவோ ஒருவடிவு கொண்டதாகவோ, ஒரே காலத்தைச் சார்ந்ததாகவோ, ஒரே உணர்வை வெளிப்படுத்துவதாகவோ அமைந்திருத்தல் வேண்டும். இவற்றில் காணப்படும் ஒற்றுமைகளைக் காண்பதே தொடக்க காலத்து ஒப்பியல் ஆய்வுக் கொள்கையாக இருந்தது.

*1-1-2* ஒப்பிடுவதுதான் ஒப்பீடு என்பதில்லை; ஒப்புமையுடைய வற்றில் காணப்படும் வேற்றுமைகளை எடுத்துச் சுட்டிக்காட்டுவதும் ஒப்பீடேயாகும் என்ற கொள்கை இன்று நிலவிவருகிறது.

*1-1-3* "ஒப்பியல் ஆய்வில், முழுவதும் ஒப்புமையாகும் பொருள்களை ஒப்பிட்டுக் காண்பதில் பயனில்லை. அடிப்படையில் ஒற்றுமையும், கூறுபாட்டில் வேற்றுமையும் உடைய பொருள்களே ஒத்து உறழ்ந்து காணற்கு உரியவை."[1] என்ற கொள்கையை டாக்டர் வ. சுப. மாணிக்கம் நிறுவுகிறார். பண்டைக்காலத்தில் 'ஒப்பு இலக்கியம்' தனிப்பட்ட துறையாக இல்லாவிட்டாலும், 'ஒப்புநோக்கு' நம்முன்னோரிடையே இருந்தது. தொல்காப்பியம் களவுக்கூட்டத்தினைக் கந்தருவ வழக்கத்தோடு ஒப்பிடக் காண்கிறோம்; பல இடங்களில் தொல்காப்பியர் முன்னோரைச் சுட்டிக் காட்டுதலையும் பார்க்கிறோம். 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனவும், 'யாமெய்யாக் கண்ட வற்றுள் இல்லை' எனவும் வரும் திருக்குறள்களில் ஒப்பியல் பார்வை முகிழ்க்கின்றது. அவர்கள் வடமொழி அறிவும், தமிழ்மொழி அறிவும் பெற்றிருந்தனர்; அன்று அறிஞர்கள் தாம் சொல்லக் கருதிய கருத்தைச் செம்மையுறக் கூறித் தெளிவுபடுத்துவதற்கு நடுநிலையான தமது ஒப்பீட்டறிவைப் பயன்படுத்தினர். "ஒப்பீட்டுத் துறையில் பன்முகநோக்கில் இலக்கிய ஆய்வை மேற்கொள்ளு மிடத்தில், தொல்காப்பியம் அவை அனைத்திற்கும் ஈடுகொடுத்து நிற்கும் மாட்சி அறிந்து இன்புறத் தக்கதாகும்."[2]

1-1-4 இடைக் காலத்தில், அரசியல் மாறுபாடுகளா லும், சமுதாய மாற்றங்களாலும் உரையாசிரியர் தம்மிடையே போட்டி மனப்பான்மை கொண்டதாலும் இவ்வொப்பீட்டு முறையில் நடுநிலை நீங்கலாயிற்று; ஒப்பீட்டுணர்வும் நிலை பெறாது குறையலாயிற்று. மற்றும், இடைக்காலத்தில் சமயப் போட்டிகள் வலுக்க வலுக்கத் தத்தம் சமயமே மேலானதெனக் காட்டும் நிலையில், இந்த ஒப்பீட்டு முறை இடங்கொள்ளலாயிற்று. இவ்வாறு வளர்ந்த ஒப்பீட்டுமுறை, இன்று இலக்கியத்தை எட்டிப்பிடித்து 'ஒப்பு இலக்கியம்'—என்று, தனிப்பட்ட துறையாக வளர்ந்து வருகிறது.

1-1-5 ஒப்பு இலக்கியம் (ஒப்பியல் இலக்கியம்—Comparative literature) என்ற தொடர், 18-ஆம் நூற்றுண்டில் ஒரு தனிப்பட்ட இலக்கிய நூலைக் குறித்து நின்றது. எனவே, இச்சொல்லை ஆங்கிலப் பேராசிரியர்கள் தொடக்கத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை; பின் இச்சொல் ஒரு தனிப்பட்ட ஆய்வைக் குறிக்கலாயிற்று. ஆங்கிலத் தில் இத்தொடரை முதன்முதலில் பொருள்பொதிய ஆண்ட பெருமை பேராசிரியர் பாசுனென்ட் (Hutcheson Macaulay Posnett) என்பவரைச் சாரும். ஆங்கிலத்துக்கும், இச்சொல் பிரஞ்சுமொழியைப் பின்பற்றியே வரலாயிற்று.

1-1-6 பிரஞ்சுமொழியில் 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத் தில் 'Literature Compare' என்ற தொடர் எளிதில் அமையலா யிற்று; சார்போன் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் 'வல்ல மெயின்' (Abel Francais Villemain) என்பவர் (1829), இத் தொடரைப் பெருவழக்குப்படுத்தினர்; தொடர்ந்து அமெரிக்க அறிஞர் பலரால் இத்துறை வளரலாயிற்று. பிரெஞ்சு மொழியைப் பின்பற்றி செருமன், இத்தாலியம், ஸ்பானியம் முதலிய ஐரோப்பிய மொழிகளில் இத்தொடர் நிலைபெறலாயிற்று.[3]

1-1-7 தமிழில் ஆங்கிலத்தையொட்டி இத்தொடர் வழக் காற்றுக்கு வந்துள்ளது. கடந்த நூற்றாண்டின் இறுதி முதல் ஒப்பீட்டுச்சிந்தனை கால்கொள்ளத் தொடங்கியது. பன்மொழி அறிஞர் தேவநேயப்பாவாணர் முதன்முதலில்' 'ஒப்பியன் மொழி நூல்' வெளியிட்டார்; ஜி. யு. போப்பையர், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், என். கே. சித்தாந்தா முதலிய அறிஞர்கள்—சங்க இலக்கியம் கிரேக்க இலக்கியத்துடனும், வீரயுகப் பாடல்களோடும் ஒப்பிடத்தக்கது என்ற கருத்தை வலியுறுத்தினர். டாக்டர் க. கைலாசபதியின் Tamil Heroic Poetry எனும் நூல் இந்நோக்கில் எழுதப்பட்டதே. இவர் 'ஒப்பியல் இலக்கியம்' என்னும்

நூலொன்றினை வெளியிட்டு, அதன்கண் ஒப்பிலக்கிய அடிப்படைக் கோட்பாடுகளை முதன்முதலாகத் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்தியுள்ளார். மற்றும் வ. வே. சு. ஐயரும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும் ஒப்பிலக்கியத் துறையில் முன்னோடி களாகத் திகழ்கின்றனர். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, "நம்முள் ஒவ்வொரு மொழியாரும் பிற திராவிட மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களையும், வடமொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களை யும் கற்று அனுபவித்துப் பரஸ்பரம் தன்மதிப்பு தேடிக்கொள்ள வேண்டுமென்கிறார்."[4] தனிநாயக அடிகளார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர் பெரிய கருப்பன், டாக்டர் வை. சச்சிதானந்தம், டாக்டர் எஸ். இராம கிருஷ்ணன், டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்—முதலியோர் இத் துறையில் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றினர்; ஆற்றி வருகின்றனர். டாக்டர் க.த. திருநாவுக்கரசு, திருக்குறளைப் பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காண்கிறார்.

ஆயினும், இந்த ஒப்பிலக்கிய ஆய்வு ஐரோப்பியரைக் கவர்ந்த அளவுக்கு இந்தியரை இன்னும் கவரவில்லை. எனவே இந்திய இலக்கிய ஒப்பீட்டில் வளர்ச்சி மேலும் தேவைப்படுகிறது.

*1-1-8* இந்த வளர்ச்சி பிறமொழி அறிவைப் பெறத் தூண்டு தலோடு தமிழ் இலக்கியங்களின் பெருமையை உள்ளவாறறியவும் துணை செய்யும்; அப்பொழுதுதான் மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசாது, ஓர் இலககியத்தைத் தகுதியான முறையில் மதிப்பீடு செய்ய முடியும்.

*1-1-9* தமிழில் 'இலக்கிய ஒப்பீடு' எனவும், 'ஒப்பியல் இலக்கியம்' எனவும் இரு தொடர்கள் உள; இவ்விரண்டை யும் விட்டு, பேராசிரியர்கள் ரெனிவெலாக்கும் ஆஸ்டின் வாரனும் எழுதிய Theory of LIterature என்ற ஆங்கில நூலைத் தமிழில் 'இலக்கியக் கொள்கை' என மொழி பெயர்த்த டாக்டர். எல். குளோரியா சுந்தரமதி, 'ஒப்பு இலக்கியம்' என்ற செறிவுடைய தொடரை முதன்முதலாகப் பயன்படுத்தியுள்ளார்.

*1-1-10* ஒப்பு இலக்கியக் கோட்பாட்டில் பிரெஞ்சுக் கோட் பாடே முற்பட்டதும், மற்றவர்கட்கு வழிகாட்டியாய் அமைந்ததும் ஆகும் என்று ஒப்பீட்டு அறிஞர் கூறுவர்.[5] உறவுடைய மொழி களிலுள்ள இலக்கியங்களை ஒப்பிட்டாராய்ந்து அவற்றின் மூலத் தையும், தாக்கத்தையும் (Sources and influences) கண்டறிதலே பிரெஞ்சுக் கோட்பாடாய் விளங்கியது—என்பது வான்தீகம், கையார்டு ஜே. எம். கார், அன்று சைத்தா ரெவினான—

ஆகியோர் கூற்றுக்களால் தெரிகிறது. இதனால் வெறுப்பின்றிப் பிற மொழிகள் அறிவும் பெறவேண்டும் என்ற தூண்டுதலுக்கு ஒப்பிலக்கிய ஆய்வு காரணமாய் உள்ளதையும் உணரலாம்.

*1-1-11* பிரஞ்சுக் கோட்பாட்டின் வழிப்பட்டதே அமெரிக்கரின் ஒப்பியல் கோட்பாடாகும். ஆயினும் அமெரிக்கர் உறவுடைய இலக்கியங்களை மட்டுமல்லாமல் ஒப்புமையுடைய எவ்விலக்கியத்தையும் ஒப்பிடலாம் என்று விரிவுபடுத்திப் பொது இலக்கியக் கொள்கையை (General Literature concept)—அதாவது பல்வேறு இலக்கியங்களிடையே யுள்ள பொதுமைத் தன்மைகளை ஆராய்வதை) அறிமுகப்படுத்தினர். ஒப்பாய்வு முறைகளிலும். அமெரிக்கர் பிரெஞ்சுக் கோட்பாட்டினின்றும் மாறினர்; பிரெஞ்சுக் கோட்பாடுகளைக் குறை கூறினர்.[6]

*1-1-12—1954*-ல் நிறுவப்பட்ட அனைத்துலக ஒப்பியல் இலக்கியக் கழகம் International Comparative litereature association) அவ்வப்போது கூடி ஒப்பியல் இலக்கிய ஆய்வு அமையும் வழிவகைகளைப்பற்றிப் பேசலாயிற்று. இந்தக் கழகம் அரசியல்வழிப்பட்ட மொழி, நாடு, இனம் முதலிய தடைகள் நீங்கிய இலக்கிய ஒருமைப்பாட்டைப் போற்றியது; இலக்கியத்தை பிற நுண்கலைகளோடும், அறவியலோடும், வரலாறு, சமூகவியல், தத்துவம், உளவியல்—ஆகியவற்றோடும் ஒப்பிட்டு ஆராயலாம் என்று மீண்டும் விரிவுபடுத்தியது. இவ்வாறு நாளுக்கு நாள் ஒப்பியில் முறைகளில் மாறுபாடும், வளர்ச்சியும் இடங் கொள்ளலாயிற்று. எனவே ஒப்பியல் துறை முடிவற்ற புதிய ஆய்வுக்களமாக விளங்கிவருகிறது என்று கூறலாம்.[7]

*1-1-13* இவ் வாய்வுக்களம் தோற்றுவித்த புதுப்புதுச் சிந்தனைகள் பல. அவற்றுள் சிறந்த ஒன்று இலக்கியத்தை மொழி, நாடு, இனம், படைத்தோனின் தனித்திறன் இவற்றால் தனிதனிப் பெயர்ப்படுத்தாது, பிறவற்றின் நீக்கி முற்றிலுமாகத் தனிமைப்படுத்தாது, இது தமிழ் இலக்கியம், இது வடமொழி இலக்கியம், இது ஆங்கில இலக்கியம் என்று பிரித்துச் சிந்திக்காது, இது தமிழிலுள்ள இலக்கியம், இது வடமொழியிலுள்ள இலக்கியம், இது ஆங்கிலத்திலுள்ள இலக்கியம்,[8] என இணைத்துப் பேச வேண்டும் என்பது. இந்த முறை உலக இலக்கியமனைத்தும் ஒன்றே என்ற முழுமை நோக்கத்தைக் கற்பிக்கிறது.

"கலையும் மனிதமும் ஒருமையுடையதாய் இருப்பது போல இலக்கியமும் ஒருமையுடையதாய் இருக்கிறது" என்று ரெனிவெலாக்குக் கூறுதலும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.[9]

*1-1-14* இங்ஙனம் ஒப்பியல் துறை விரிந்து முழுமை நோக்கத்தைக் கொள்ளலாயிற்று. இவ் வொப்பியல் ஆய்வு—தாக்கம் (Influence), செல்வாக்கு (Literary fortune), இணை வரை (Analogy)—ஆகிய நோக்குகளில் செய்யப்பட வேண்டும் என்பது ஒப்பீட்டாய்வாளர் கொள்கை. இவற்றுள் இவ்வாய்வு இணைவரை நோக்கில் இலக்கியங்களிடை உள்ள உறவையும், ஒப்புமைகளையும் ஆய்தல் வகையில் அமைகிறது.

*1-1-15* ஒப்பீட்டு முறைத் திறனாய்வு வளர்ச்சியின் பயனாக ஒரே நாட்டில் தோன்றிய பல்வேறு இலக்கிய ஆசிரியர்களின் பொதுத்தன்மைகளும், சிறப்புத்தன்மைகளும் அறியப் பெறு கின்றன. உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலங்களில் தோன்றிய இலக்கிய ஆசிரியர்களுக்கிடையே காணக்கூடும் சில அரிய பொது இயல்புகளைப் புரிந்துகொள்ள முடிகிறது; ஒரு நாட்டிற்குள் அமையக்கூடிய இலக்கியத் தொடர்பிற்கும், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையே அமையக்கூடிய இலக்கியப் பண்பாட்டு உறவுக்கும் வழிவகைகள் இந்த ஒப்பாய் வால் ஏற்படுகின்றன. மொத்தத்தில் மனித சமுதாயச் சிந்தனை, கலையுணர்வு, நாகரிகப் பண்பாடு முதலியன இடம்பற்றியும் காலம் பற்றியும் எவ்வெவ்வாறு வளர்ந்து வந்துள்ளன என்பதையும், மனிதகுலம் இதுகாறும் இலக்கியம், கலை முதலிய துறைகளில் எட்டிப்பிடிக்க முயன்றுள்ள இலக்குகள் யாவை என்பதையும் அறிந்து கொள்வதற்கு ஒப்பீட்டு முறைத் திறனாய்வு பெரிதும் பயன்பட்டு வருகிறது.

> 'செப்பு மொழி பதினெட்டுடையாள், எனிற்
> சிந்தனை ஒன்றுடை யாள்'

என்று பாரதி குறிப்பிட்டதுபோல, இந்தியாவில் வழங்கும் மொழிகள் வேறுபடுவது உண்மையே. ஆனால் இலக்கியங்கள் உணர்த்தும் சிந்தனைப்போக்கில் ஒத்த இயல்புகளைக் காண்கிறோம். இதனை ஒப்பாய்வின் மூலம் உறுதியாக எடுத்துரைக்க இயலுகிறது.

*1-2-1* பண்டைக் காலத்துத் தோன்றிப், பொதுமக்கள் உள்ளங்களில் சிறப்பிடம் பெற்று விளங்கும் திருவள்ளுவரோடும், அவர்தம் நூலோடும், பிற்காலத்து ஆந்திர மாநிலத்தில் தோன்றித் தமிழின் இனமொழியாகிய தெலுங்கு மொழியில் புலமைகொண்டு, பொதுமக்கள் உள்ளங்களை எல்லாம் கவர்ந்து நிற்கும் வேமனரோடும், அவர்தம் பாடல்களோடும் ஒப்பிட்டு உண்மைகாண முயல்கிறது இந்த ஆய்வு. இந்த ஆய்வடங்கலில்

திருக்குறள் பாடல்களிலும், வேமனர் பாடல்களிலுமுள்ள சிறந்த ஒப்புமைப் பொருள்களாகிய அறவுரை, சமயதத்துவம், கவிநலம் என்பன ஆயப்பெற்றுள்ளன. இருவருடைய வாழ்வும் முதற்பகுதி யில் ஒப்பிடப்பட்டுள்ளது. தமிழரிடையே மட்டுமின்றி, அயல் நாட்டாரிடையேயும் திருவள்ளுவர் எவ்வாறு சிறப்பிடம் பெற்றுள்ளாரோ அவ்வாறே, வேமனரும் தற்காலத்தில் ஆந்திர மாநிலத்திலும் உலகிலும் மதிக்கப்பெறுகிறார் என்பதும் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*1-2-2* வள்ளுவர்போல் வேமனரும் எல்லா நோக்குகளிலும் மக்கள் வாழ்வைக் கண்டு பல்வேறு கருத்துக்களை வழங்கியுள்ளார். எனவே, பெரும்பான்மை கருத்து ஒற்றுமைநோக்கில் இருவரையும் ஒப்பிட்டு ஆய நான் இத் தலைப்பினை எடுத்துக் கொண்டேன். எனினும், சிற்சில கூறுகளில் வள்ளுவரின் நோக்கிலிருந்து வேமனர் விலகிச் செல்கிறார்; திருவள்ளுவரைச் சித்தராகக் கருதுவதற்கில்லை, ஆனால் வேமனரோ சித்தர் மரபில் வந்தவராகத் தோன்றுகிறார். சித்தர் இயற்றியனவாகக் கருதப்படும் இரசவாதம், வைத்தியம், மாந்திரீகம், சாமுத்திரிகா லட்சணம்—ஆகிய நூல் கருத்துக் களோடும், திருமந்திரத்தோடும் வேமனர் பாடல் கருத்துக்களைத் தனிப்பட்டவகையில் ஓர் ஆய்வு செய்யவும் வாய்ப்புண்டு. சித்தர் நெறியைப் பேணியவராகக் கருதப்படும் இராமலிங்க வள்ளலாரோடும், பத்தரகிரியாரோடும் வேமனரை ஒப்பிட்டுக் காணலாம். மற்றும் ஔவையார் முதலிய நீதிகூறும் புலவர் களோடும்கூட ஒப்பிடத்தக்கவராக வேமனர் திகழ்கிறார்.

*1-2-3* இருவரிடையே உள்ள ஒற்றுமைகளையும், வேற்றுமை களையும் ஒப்பிட்டு ஆய்தல் ஒப்பாய்வுக் கொள்கையாகும்; ஆயினும் இவ்விரு நோக்கில் ஆய்ந்தால் விரியும் என்ற எண்ணத்தினால், இவ்வாய்வு பெரும்பான்மை ஒற்றுமைகளையே எடுத்துரைக்கிறது. ஆங்காங்கு மிகவும் தேவைப்படும் இடங்களில் வேற்றுமைகளையும் சுட்டிக் காட்டுகிறது.

*1-2-4* இந்த ஆய்வேட்டில் ஆய்வுக்குத் தேவையான தெலுங்குப்பாடல்கள் ஆங்காங்கே இன்றியமையாத இடங்களில் மட்டும் தமிழ் எழுத்து வரிவடிவில் தரப்பட்டுள்ளன. மற்ற இடங் களில் இயன்றவரை இருவருடைய கருத்துக்களை மட்டும் ஒப்பிட்டுச் சொல்லி, பாடல்களின் எண்கள் குறிப்பெண் விளக்கத் தில் தரப்பட்டுள்ளன. ஆய்வில் ஆளப்பட்ட தெலுங்கு அறிஞர் களைப் பற்றித் தமிழர் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை எனத் தோன்றும் இடங்களில், அன்னாரைப் பற்றிய விளக்கம் பின்னிணைப் பில் கொடுக்கப் பெற்றுள்ளது.

*1-2-5* குறட் பாக்கள் போன்று, வேமனர் பாடல்களுள் இத்தனை என்ற உறுதியான வரையறை இல்லை; எனவே 'தி வர்சஸ் ஆஃப் வேமன' (The Verses of Vemana) என்ற நூலிலுள்ள 1215 பாடல்களும், 'வேமன பத்திய ரத்னகரமு' என்ற நூலிலுள்ள 2504 பாடல்களுமே இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

*1-2-6* குறிப்பெண் விளக்கத்தில் மேற்கோள் காட்டிய நூல் பெயர்களோடு தேவைப்படும் இடங்களில் ஆசிரியர் பெயர்கள் அல்லது பதிப்பாளர் பெயர்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. மற்ற இடங்களில் நூல் பெயர்கள் மட்டும் தரப்பட்டுள்ளன.

*1-2-7* இந்த ஆய்வடங்கல் முன்னுரை பின்னுரை நீங்கலாக ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. ஒன்பது இயல்களும் பொருள் நோக்கில் முப்பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

*1-3-1* முதல் பிரிவு இவ்விரு சான்றோரின் வாழ்க்கை வரலாற்றினையும், நூல் அமைப்பினையும் கொண்டு அமைந்துள்ளது.

*1-3-2* இரண்டாம் பிரிவு இருவர்தம் பாடுபொருளாகிய இல்வாழ்வு, சமுதாயம் முதலியனபற்றி அமைந்துள்ளது.

*1-3-3* மூன்றாம் பிரிவு பாடல்களின் கலைநலம் பற்றியது.

*1-4-1* முதல் இயலின் முதற்பகுதி திருவள்ளுவரைப் பற்றியது. திருவள்ளுவமாலை, கபிலர் அகவல், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை இவற்றின் துணையைக் கொண்டு வள்ளுவரைப்பற்றித் தெரியவரும் செய்திகள் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

*1-4-2* அதனைத் தொடர்ந்து, வேமனரின் வாழ்வைப் புலப் படுத்தவல்ல கதைபோன்ற மரபுவழிச் செய்திகள் சில குறிப்பிடப் பட்டுள்ளன. இந்தக் கதைகளைக் கொண்டும், அறிஞர் சிலரின் ஆய்வுகளைக் கொண்டும், வேமனர் பாடல்களில் கிடைக்கும் சில அகச்சான்றுகளைக் கொண்டும், இவருடைய வாழ்க்கை வரலாற்றின் கூறுகள் துணியப்பட்டுள்ளன.

*1-4-3* இரண்டாம் இயலில் இவ்விருவரின் நூல்களும் அமைந்துள்ள முறை விளக்கப் பெற்றுள்ளது. முதலில் திருக்குறள் நூல் பெற்ற பெயர் பற்றியும், அடுத்துத் திருவள்ளுவர் பெயர்க் காரணமும், காலமும் ஆராயப்பெற்றுள்ளன. பொதுவாகத்

திருக்குறள் நூல் வள்ளுவராலேயே திட்டமிட்டுச் செய்த ஒன்று என்பதற்குரிய சான்றுகள் ஈண்டுக் காட்டப்பட்டுள்ளன.

*1-4-4* வேமனர் பாடல்கள் திருக்குறள் போன்று திட்டமிட்டுப் பாடப்பட்டவை அல்ல; பாடல்களின் எண்ணிக்கை இவ்வளவு என்ற வரையறையும் இல்லை. வேமனர் பாடல்கள் என்று கருதப்படும் பாடல்கள் அடங்கிய பல வெளியீடுகள் வெளிவந்துள்ளன. அவற்றைப்பற்றிய விளக்கம் ஈண்டுக் கொடுக்கப் பெற்றுள்ளது. அடுத்து, வேமனர் பாடல்கள் சதக இலக்கிய வகையைச் சார்ந்தவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. வேமனர் பாடல்களிலுள்ள 'விஸ்வதாபிராமா வினுரவேமா!' என்ற முடிப்பைப் (மகுடத்தை) பற்றிய செய்திகளும் சொல்லப் பட்டுள்ளன.

இறுதியாக, இருவருடைய நூல்களின் அமைப்பு முறைகள் ஒப்பிடப்பட்டுள்ளன.

*1-4-5* மூன்றுவது இயல் இல்வாழ்க்கை பற்றியது. சமுதாயத்தினிடையே முழுப்பக்குவநிலை எய்துவதற்குரிய வழிவகைகள் படிப்படியாய்த் தோன்றலாயின. அந்த வழிவகைகளை அறிவுறுத்தப் பல அறநூல்கள் தோன்றிய நிலை முதலில் சொல்லப் பட்டுள்ளது. அடுத்து, அறம் என்ற சொல்லின் விளக்கமும், பிற்காலத்தே அறநூல்கள், நீதி நூல்கள் என்று வழங்கியமையும் ஆராயப்பட்டுள்ளன. இந்த நீதி நூல்களில் ஒன்றுகவும் கருதப் பெறும் திருக்குறளில், வாழ்க்கைநெறியின் முதற்படியாக, உலக வாழ்க்கைக்கு அடிப்படையாக நிற்கும் இல்வாழ்க்கை நெறிபற்றி வள்ளுவர் கூறுவனவற்ருேடு வேமனர் கூறுவனவும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. ஒப்பிடுங்கால், வள்ளுவரின் அறத்துப்பால் வழியில் 'அறன் வலியுறுத்தல்,' 'இல்வாழ்க்கை' முதலிய அதிகாரக் கருத்துக்களோடு வேமனர் கூறும் கருத்துக்கள் ஒப்பிடப் பெற்றுள்ளன.

*1-4-6* நான்காம் இயல் சமுதாயம் பற்றியது. இல்வாழ்க்கை நடத்திவரும் குடும்பங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயம் உருவாகின்றது. சமுதாய வாழ்வில் குடிமக்கள் நலம் ஓம்பும் அரசியல் வாழ்க்கை அமைகிறது. அரசியலுக்குத் தேவையான ஆட்சித் தலைவன், அவனுக்கு உறுப்பாய் உள்ள அமைச்சர் குழு, அடிப்படையான குடிமக்கள் முதலியவற்றைப் பற்றி வள்ளுவர் பொருட்பாலில் பேசுகிருர். ஆட்சித் தலைவனுக்கும், குடிமக்களுக்கும் தேவையான செல்வவளத்தைப் பற்றியும் பேசுகிருர். இப்படி வள்ளுவர் பேசும் (1) ஆட்சித் தலைவன், (2) அவனுக்கு உறுப்பாப்

நிற்போர், (3) குடிமக்கள், (4) பொருள்வளம் ஆகிய நான்கு கோணங்களில் வேமனர் கூறும் கருத்துக்களை இந்த இயல் ஒப்பிட்டுக் காண்கிறது. அவ்வாறு ஒப்பிடும்பொழுது, வள்ளுவரின் பொருட்பாலிலுள்ள அதிகார முறைப்படி, வள்ளுவரின் பாடற் கருத்துக்களோடு, வேமனர் பாடற் கருத்துக்கள் ஒத்துள்ள இறைமாட்சி, கல்வி முதலிய அதிகாரங்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப் பெற்றுள்ளன.

1-4-7 ஐந்தாம் இயலில் 'புரட்சிப் போக்கு', 'சீர்திருத்தம் சொற்களுக்கு விளக்கம் தரப்பெற்றுள்ளன. திருக்குறள் நூல் தொடக்கம், நூல் அமைப்பு ஆகியன சீர்திருத்தப்போக்கில் அமைந்துள்ளமை, வள்ளுவரின் காமத்துப்பால் சீர்திருத்தப்போக்கில் உள்ளமை விளக்கப்பட்டுள்ளது. ஒழுக்கம் தவறி நடக்கும் ஆடவர் பெண்டிர் பற்றி இருவரின் கருத்துக்கள், மக்கள் பிறப்பிலே உயர்வு தாழ்வு பற்றி இருவரின் புரட்சிப்போக்கு, வேதங்கள் பற்றி இருவரின் கொள்கைகள், உருவ வழிபாடு, திருநீர் நிலைகளில் (புண்ணிய தீர்த்தங்களில்) படிதல், திருத்தலங்களுக்குச் செல்லல், அவதாரங்களைத் தொழுதல், உண்ணு நோன்பிருத்தல், சகுனம் பார்த்தல், வேள்விகளின் தேவையின்மை, புராணங்களில் கூறப்படும் தேவையற்ற செய்திகள் ஆகியனபற்றித் திருவள்ளுவர், வேமனர் கூறும் கருத்துக்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இந்த இயலில் திருவள்ளுவரும், வேமனரும் வெறும் சொல் லளவோடு நின்றுவிடாது, நடைமுறை வாழ்விலும் எந்த அளவிற்குச் சீர்திருத்த வாதிகளாகவும், புரட்சிப் போக்குடையவர் களாகவும் விளங்கியுள்ளனர் என்பதும் ஆய்ந்து கூறப் பெற்றுள்ளது.

1-4-8 இருவரின் சமயம், தத்துவம் பற்றி ஆறுவது இயலில் விளக்கப்படுகிறது. முதலில் 'சமயம்' என்னும் சொல்லின் விளக்கமும், தமிழ்நாட்டின் சமய நிலையும் சொல்லப்பட்டுள்ளன. அடுத்து, வள்ளுவர் காலச் சமயநிலை, திருவள்ளுவரைச் சமணர், பௌத்தர், இந்து மதத்தார் முதலியோர் தத்தம் சமயத்தாராகக் கொள்ளல் முதலியன கூறப்பட்டுள்ளன. வள்ளுவர் சமயம் கடந்த சான்றோர் என்று துணிவதற்கான ஆதாரங்களும் ஆராயப்பட்டுள்ளன. வேமன்ரை முற்பகுதி வாழ்வில் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவராகக் கொள்ளக் காரணங்கள், பிற்பகுதி வாழ்வில் சமயப் பொதுமை உடையவர் என்பதற்கான விளக்கம், இறுதியில் அத்துவைதியாக மாறிய நிலை ஆகியன இந்த இயலில் இடம் பெற்றுள்ளன.

1-4-9 இதற்கடுத்துத் 'தத்துவம்' என்னும் சொல்லின் விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. விடுதலையைத் தருகின்ற

முழுமுதல் பொருள்பற்றி இருந்து வருகின்ற (1) சகுண (2) நிர்க்குண நெறிகள் பற்றிய விளக்கம் இடங்கொண்டுள்ளது. இந்த இரு நிலைகளிலும் வள்ளுவர் கொள்ளும் சகுண பிரம்மம், வேமனர் கொள்ளும் நிர்க்குண பிரம்மம் பற்றி விளக்கப்பட்டிருக் கின்றன. இருவரும் வேறுவேறு கொள்கையினராக இருப்பினும் இருவரும் மெய்ப்பொருளை ஒப்புக் கொள்கின்றனர். இருவரும் மெய்ப்பொருளை உணர்வதற்குக் கூறும் பொதுவழிவகைகளில் இருவரிடையே ஒற்றுமை காண முடிகிறது. இப்படி ஒப்புமையாய் வரும் பொதுவழிவகைகளில் முன் இயல்களில் சொல்லியவை போக, மெய்யுணர்தல், தவம், கூடா ஒழுக்கம், கொல்லாமை, நிலையாமை, துறவு, அவாவறுத்தல் ஆகிய அதிகாரங்களில் வள்ளுவர் சொல்லும் உண்மைகளோடு வேமனர் சொல்லும் உண்மைகள் ஒப்பிடப்பட்டுள்ளன. ஊழின் வலிமையைப் பற்றி இருவர் கொள்ளும் கொள்கைகளும் ஆராயப்பட்டுள்ளன.

1-4-9-1 ஏழாவது இயலில் கலை எது என்பதும், அது பல வகையாகத் தோன்றும் நிலையும், அவற்றுள் இலக்கியக்கலையின் விளக்கமும், அது செய்யும் பணியும் சுட்டப்பட்டுள்ளன. கவிதைக்கு அடிப்படைத் தேவையாய் அமைந்த, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகிய மூன்றனுள் கற்பனை பற்றிய விளக்கமும், கற்பனைப் படைப்புக்கு இன்றியமையாத அணியைப் பற்றிய பொதுவான விளக்கமும் தரப்பட்டுள்ளன. திருவள்ளுவர் வேமனர் பாடல்களில் உவமைகள், (1) இருவரின் உவமையும் பொருளும் ஒன்றியிருத்தல், (2) இருவரின் உவமை ஒன்றிய நிலையில் பொருள் வேறுபடுதல், (3) இருவரின் பொருள் ஒன்றி உவமை வேறுபடுதல் எனும் முக்கோணங்களில் உவமை நோக்கப்பட்டுள்ளது.

1-4-9-2 அடுத்து ஐம்புலன்களுக்கு விருந்தாக இருவராலும் உவமைகள் எவ்வாறு எடுத்தாளப் பெற்றுள்ளன என்பதும் சொல் லப்பட்டுள்ளது. உருவக அணி விளக்கம், இருவரும் உருவக அணியை ஆண்டுள்ள நயம் தெளிவுறுத்தப் பட்டுள்ளது. மற்றும் தெலுங்கு அணிவகைகள் சில வேமனர் பாடல்களில் அமைந் துள்ள பாங்கும் சுருக்கமாகக் காட்டப்பெற்றுள்ளது.

1-4-9-3 பாடலாகிய வடிவம் அழகு பெறுவதற்குக் கவிஞனிடம் இயற்கையாய் அமையும் ஒலிநயமும், செயற்கையாய் அமையும் மோனை எதுகை முதலிய தொடை நலங்களும் தேவைப் படுகின்றன. இந்த ஆற்றல் இருவரிடத்தும் அமைந்துள்ளமை சில எடுத்துக்காட்டுகளால் உணர்த்தப் பெற்றிருக்கின்றது. இலக்கி யத்திற்கு இன்றியமையாத வீரம், காதல், இரக்கம் முதலிய சுவை

நலங்கள் கவிஞர் ஆளும் சொற்களால் வெளிப்படுகின்றன. இத்தகு சொல்லாட்சி இருவரிடத்தும் அமைந்த திறன் இப் பகுதியில் ஆராயப்பட்டுள்ளது.

*1-4-10* ஒன்பதாவது இயல் இலக்கிய உலகில் திருக்குறள் வேமனர் பாடல்கள் பெறும் இடத்தை வரையறை செய்கிறது. நீதி இலக்கிய இயல்புகள், தமிழில் நீதி இலக்கிய நூல்கள், அவற்றுள் திருக்குறள் தலையாய இடம் பெறுவதற்குரிய காரணங்கள், திருக்குறள் பாடற்சிறப்பு, பாடற்பொருளை உணர்த்திய வெவ்வேறான முறைகள், பிற்காலப் புலவர்களிடையே வள்ளுவரின் செல்வாக்கு, திருவள்ளுவர் அயல்நாட்டாரால் மிகவும் பாராட்டப் பெற்றமை போன்ற சிறப்பியல்புகள் இங்குப் புலப்படுத்தப் பட்டுள்ளன.

*1- 4-11* அவ்வாறே தொடர்ந்து தெலுங்கு மொழியின் சிறப்பு, தெலுங்குமொழி படிப்படியாய் வளர்ந்த வரலாறு, சதக இலக்கியத்தைப் பற்றிய விளக்கம், வேமனர் பாடல்கள் சதக இலக்கிய வகையைச் சார்ந்தவை என்பதற்குரிய காரணங்கள், வேமனர் பாடல்களில் அமைந்த கருத்துச்சிறப்பு, சொற்சிறப்பு, வேமனர் பாடல்கள் முதலில் தெலுங்கு மக்களால் மதிக்கப் படாமை, பின் முதலில் அயல்நாட்டாராலும், அடுத்து ஆந்திரர்களாலும் சிறப்பிக்கப்பெற்றமை ஆகியவை இடங்கொண்டுள்ளன. இந்த அடிப்படையில் இருவர் பாடல்களும் ஒப்பிட்டு ஆயப் பெற்றுள்ளன. இவ்வாறு இவ்வாய்வில் இந்தியாவின் மாபெரும் ஞானிகள் இருவருடைய நூல்களின் இலக்கிய இயல்புகள் ஒப்பாய்வு செய்யப்பெற்றுள்ளன.

## குறிப்பெண் விளக்கம்

1. டாக்டர் வ. சுப. மாணிக்கம் - ஒப்பியல் நோக்கு.

2. தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், பக். 25

3. தமிழண்ணல் (இராம பெரியகருப்பன்) - ஒப்பிலக்கிய அறிமுகம், பக். : 57, 58

4. டாக்டர், க. கைலாசபதி - 'ஒப்பியல் இரகசியம்' (மேற்கோள்) பக். : 38

5. *தமிழண்ணல் - ஒப்பிலக்கிய அறிமுகம், பக். 96*

6. *தமிழண்ணல் - ஒப்பிலக்கிய அறிமுகம், பக். 102, 103*

7. *Werrer P. Friederich - The Challange of Comparative literature and other addresses. pp. 18, 19*

8. *Albert guerard - Preface to world literature. p. 5*

9. *Rene Wellek & Austin Warren - Theory of Literature, p. 50*

# பிரிவு—1

## திருவள்ளுவர், வேமனர்
## வாழ்வு—இலக்கியம்

<u>இயல் - 1</u>

# வாழ்க்கைச் சுருக்கம்— திருவள்ளுவர், வேமனர் வரலாற்றின் நிலைமை

*0-0* ஆங்கிலேயரின் தொடர்பால் நாம் கற்றுக் கொண்டவற்றுள் வரலாற்றுக் கல்வியும் ஒன்று. வரலாறு எழுதுவது நம் முன்னோர் அறியாததல்ல. அவர்கள் தற்காலத்தைப்போல் அதற்கு முக்கிய இடம் கொடுக்கவில்லை. ஒரிருவருக்கு மட்டுமின்றி ஒரு நாட்டுக்குச் சேர்ந்த சாத்திரமாய் வரலாற்றை அவர்கள் கருதவில்லை. அன்று புகழுக்குரிய ஒருவன்மேல் மக்களுக்கு நன்மதிப்பு உண்டாக்கும் வகையில் எழுதுவதற்குச் சிறப்பிடம் கொடுத்து வந்தார்கள்; வரலாறு இதற்கு அடிப்படையாய் இருந்தது. எனவே கண்டதையும் கேட்டதையும்—நம்பியவற்றையும், போதாவிடத்துப் புதிய கருத்துக்களையும் சேர்த்துத் தாம் விரும்பாதவற்றைத் தள்ளி, அன்று வரலாறு எழுதினர்கள். ஆனல் இன்றைய வரலாற்று ஆசிரியன் பணி வேறு; ஒன்றை உண்மை என்று நம்புவதற்கு, நிலைநாட்டுவதற்கு, இன்றைய வரலாற்று ஆசிரியனுக்குப் பல சான்றுகள் தேவையாய் உள்ளன; அவையும் ஒன்றற்கொன்று மாறுபாடு அற்றனவாய் இருக்கவேண்டும். கிடைக்கும் சான்றுகளும் நம்பத்தகுந்தனவா, அல்லனவா என்று ஆராய்ந்து தெரிந்து கொண்டே எழுதுகின்ருன். எனவே இன்றைய வரலாற்று அறிஞன் விருப்பு வெறுப்பு முதலிய உணர்வுகளுக்கு இடந்தராமல் அறிவோடு செயல் புரிகிருன்.

*0-1* தன் சாதி, தன் மதம், தன் நாடு, தன் மொழி முதலியவற்றின்மேல் இந்த இருவருக்கும் பற்று உண்டு. ஆனல் முன்னோரிடையே உணர்ச்சி காரணமாக உயர்வுநவிற்சிக்கு இடமேற்பட்டது; தற்காலத்து ஆசிரியர்களிடையே பற்ருல் பொய்ம்மை இடங்கொண்டது. முற்காலத்து ஆசிரியர்பாலும், தற்காலத்து ஆசிரியர்பாலும், தம்முடைய வாதத்திற்குத் தகுந்த

வற்றைப் பெரிதாகக் கொள்ளல், தகாதவற்றை ஐயப்பட்டு எதிர்த்தல் முதலிய பண்புகளைக் காணலாம். இவ்வாறு இருப்பதற்குக்காரணம் வரலாற்றுக்குப் பயன்படும் நேரடியான, வெளிப்படையான சான்றுகள் கிடைக்காமையே ஆகும்.

*0-2* இந்நிலைமையை ஒட்டியே, திருவள்ளுவர், வேமனர் ஆகிய இருவரைப்பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் ஏற்ற, இதுதான் என்று நம்பத்தகுந்த சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு இவ்விருவரைப் பற்றியும் ஓரளவுக்கு அறியலாம்.

## 1. திருவள்ளுவரின் வாழ்க்கைச் சுருக்கம்

*1-0* திருவள்ளுவர் வரலாற்றைத் தெளிவாகக் கூறும் நூல் எதுவும் இதுவரை இல்லை. அவருடைய பிறப்பு, குலம், தொழில், சமயம், காலம், இடம் ஆகியவற்றைப்பற்றிப் பல்வேறு கொள்கைகள் இருந்து வருகின்றன. நாளாக ஆக வேறுபாடுகள் மிகுகின்றனவே யன்றி, இதுதான் துணிவு என்று கூறும் நிலை இன்னும் வரவில்லை. ஒன்றுமட்டும் உறுதியாகத் தெரிகிறது, திருவள்ளுவர் யாவராலும் மதிக்கப்பெற்ற பெரும்புலவர் ஆதலின், அவரைத் தத்தமக்கு விருப்பமான நெறியைச் சார்ந்தவர் என்று சொல்லும் முயற்சி அவருடைய வரலாற்றைக் கூறும் பலரிடையேயும் இருந்து வருகிறது.

*1-1-0* அவருடைய வரலாறுபற்றிய குறிப்புக்கள் திருவள்ளுவமாலை, கபிலர் அகவல், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றில் காண வருகின்றன. அவை யாவும் நம்புவதற்குரியன என்று சொல்ல இயலவில்லை. திருவள்ளுவமாலை திருவள்ளுவரை நான்முகன் அவதாரம் என்றும்,[1] கலைமகள் அவர் நாவிலிருந்து திருக்குறளைச் சொன்னாள் என்றும்[2], சொல்லுகிறது. எந்தப் பெரியாரையும் ஒரு தெய்வத்தின் அவதாரமாகச் சொல்லுவது இந்த நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு வழக்கு. இந்த வகையிலேயே திருவள்ளுவரை மேற்கூறியவாறு கூறியிருக்கலாம்; வேமனரையும் இராமகிருஷ்ணுவின் மறுபிறவி என்று குறிப்பிடுவதும் இக்காரணத்தாலேயே யாகலாம்.

*1-1-1* கபிலர் அகவல், ஞானமிர்தம் இவற்றை அடிப்படையாகக் கொண்டும், திருவள்ளுவமாலைச் செய்யுட்களை மனத்திற்கொண்டும் திருவள்ளுவரைப் பற்றிய ஒரு வரலாறு உருவாகி இருக்கிறது. அதாவது, ஔவை, உருவை, வள்ளி, அதியமான்,

கபிலர்—ஆக இவரோடு மொத்தம் எழுவர். தாயாகிய ஆதியம்மை பகவனின் கட்டளைப்படி பெற்ற மக்களைப் பெற்ற இடத்திலேயே விட்டுச் சென்றாள்; அங்ஙனம் விட்டுச் சென்ற குழந்தைகளை ஆங்காங்குள்ள பல்வேறு சாதி மக்கள் எடுத்து வளர்க்கலாயினர்; இதனால் வள்ளுவர் முதலானோர் பல்வேறு சாதியினராகக் கருதப் பட்டனர். திருவள்ளுவர் வள்ளுவர் என்னும் சாதியினரால் வளர்க்கப்பட்டமையால் வள்ளுவர் எனப்பட்டாரென்றும், வேளாளன் கொண்டுபோய் வளர்த்தமையால் வேளாளன் எனப் பட்டார் என்றும் செய்திகள் காணவருகின்றன.[3]

*1-1-2* கபிலர் அகவலில் 'ஆதி' என்பாள் கருவூர்ப் புலையனால் வளர்க்கப் பெற்றவள் என்றும், 'பகவன்' திருவாரூர்ப் பார்ப்பனன் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. ஞானமிர்தம் 'ஆதி' என்பாள் 'யாளிதத்தன்' என்னும் பார்ப்பானுக்கும், பார்ப்பினி என்று கருதப்பட்ட ஒரு புலைச்சிக்கும் பிறந்தவள் என்று பேசுகிறது.[4]

*1-1-3* புலவர் புராணமும் வள்ளுவரை, ஆதிபகவனின் இறுதி மகன் என்றும், தம் குரவரால் திருமயிலையில் விடப்பட்ட இவரை மக்கட்பேறில்லா வேளாளன் ஒருவன் வளர்த்து, வாசுகி என்னும் ஒரு பெண்ணை மணஞ் செய்வித்துக் காலகதி அடைந்தனன் என்றும் கூறுகிறது.[5] இவையெல்லாம், குறளிலுள்ள முதல் பாட்டில் வரும் ஆதிபகவன் என்ற தொடரை அடிப்படையாய்க் கொண்டு ஏற்பட்ட கதைகளேயன்றி; உண்மையல்ல. வள்ளுவரின் பெற்றோர் யார் என்பது இன்னும் கேள்விக்குரியதே.

## பெயர்க் காரணம்

*1-2-0* 'திருவள்ளுவர் என்ற பெயரை இயற்பெயராகவும், குலத்தின் பெயராகவும் கொள்ளுகின்றனர். செய்தியை முரசறைந்து தெரிவிக்கும் ஒரு குலத்தாருக்கு 'வள்ளுவர்' என்ற பெயர் வழங்கிவந்தது. இதனைச் 'செய்தி வள்ளுவன் பெருஞ் சாத்தன்',[6] 'நாஞ்சில் வள்ளுவன்'[7] என்ற சங்ககாலப் பெயர் களிலிருந்து அறியலாம். எனவே, திருவள்ளுவருக்கும் 'வள்ளுவர்' என்ற பெயர் குலத்தின் பெயராகவும், 'திரு' என்பது சிறப்பு அடைமொழியாகவும் வந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

*1-2-1* திருவள்ளுவமாலையில்,

அறம்பொருள் இன்பம் வீடென்று நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பான் ஓர் பேதை, அவன்வாய்ச் சொற்கள்
கொள்ளார் அறிவுடை யார்[8]

என்று வரும் பாடல், வள்ளுவரின் குலத்தைச் செப்புகிறது. யாரோ ஒருவர் இவருடைய குலத்தைக் கூறி இழித்துரைத்த போது சீறிச் சொன்னதுபோல் அமைந்திருக்கிறது இப்பாடல்.

*1-2-2* பிங்கல நிகண்டு,

வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னற்
குள்படு கருமத் தலைவற் கொன்றும்

என்றும், சூடாமணி நிகண்டு "வரு நிமித்திகன் பேர் சாக்கை வள்ளுவ னென்றுமாம்' என்றும் குறிப்பது, முறையே கன்மத் தலைவன், கணிவன் எனப் பொருள்படுகின்றதாயினும், உலக வழக்கில் 'வள்ளுவன்' என்பது பறையர்களுக்குக் குருவாய், வருவதுரைப்பதே வாழ்வாக இருக்கும் வள்ளுவச்சாதியில் பிறந் தவனையே குறிக்கும்' என்று டி. செல்வக்கேசவராய முதலியார் கூறுகிறார்.[9]

*1-2-3* "திருக்குறளின் ஆசிரியர், வள்ளுவர் அல்லது திருவள்ளுவர் என்று அழைக்கப்படுகிறார்; 'திரு' என்னும் அடை மொழி குறளின் சிறப்புணர்த்த நின்றது; பறையருக்குள் வருவதை முன்கூட்டிச் சொல்லக்கூடிய ஒரு குழுவோர் 'வள்ளுவர் கள்' என்று சொல்லப்பட்டு வருகிறார்கள். ஆனால், முற்காலக் காப்பியங்களால்[10] அரசனின் செய்திகளைப் பறையறைந்து தெரிவிக்கும் அலுவலாளர்கள் இவர்கள் என்பது தெரியவருகிறது" என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகிறார்.[11]

*1-2-4* ஆசிரியர் தேவநாயகன் என்பவர், "வள்ளுவர் பெயர் 'வள்ளுவன்' என்பதே; 'வள்ளுவர்' என்பது உயர்வுப் பன்மை; இவரது இறைப்பற்றோடு கூடிய ஒழுக்கத்தின் உயர்வும், இவர் நூலின் மறைத்தன்மையும் இவருக்குத் தெய்வத்தன்மையை உண்டாக்கியதனால், இவர் பெயருக்குமுன் 'திரு' என்னும் அடை மொழி சேர்க்கப்பட்டுள்ளது. இவருக்கு வழங்கியுள்ள வேறு பெயர்களெல்லாம் இவருக்கு இடப்பெற்ற புகழ்ச் சொற்களே

யன்றி வேறல்ல'' என்று கூறியுள்ளார்.[12] மற்றும், 'வள்' என்னும் அடிச்சொல்லுக்குரிய பல் பொருள்களுள், கூர்மை, வலிமை, வன்மை என்பன மூன்று. ஆகையால் 'வள்ளுவன்' என்ற சொல்லுக்குக் கூர்மதியன், வல்லவன், வள்ளியோன் என்று முப்பொருள் கொள்ளலாம்' என்றும் கூறியுள்ளார்.[13] இங்ஙனம் வள்ளுவர் பெயரைப்பற்றிப் பல செய்திகள் இருந்து வருகின்றன. இவற்றை எல்லாம் அடிப்படையாய்க் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம்.

*1-2-5* அதாவது 'வள்ளுவன்' என்ற பெயர் குலத்தின் அடிப்படையில் வந்த பெயராக இருக்கவேண்டும். சிறப்புக்குரிய நூல் செய்த காரணத்தாலே 'வள்ளுவர்' என்று உயர்வுப் பன்மையாய் வழங்கி இருக்கவேண்டும். அதோடு 'திரு' என்னும் அடைமொழி சேர்த்துத் 'திருவள்ளுவர்' என்ற பெயர் வந்திருக்கலாம் என்று, முன் சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட கருத்தே பொருத்தமுடையதாகலாம். இவரைப்பற்றி வழங்கும் கதைகள் எல்லாவற்றையும் நம்புவதற்கில்லை. திருவள்ளுவருக்கும் ஏலேலசிங்கருக்கும் நட்பு இருந்தாக ஒரு கதை வழங்கப்படுவதும் நம்புவதற்கு உரியதாக இல்லை.[14]

## 1-3 வள்ளுவர் பிறப்பிடம்

*1-3-0* இவர் எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பற்றிய உறுதியான கருத்தில்லை. மயிலாப்பூரைச் சேர்ந்தவர் என்ற கருத்தே பெருவழக்கில் இருந்துவருகிறது. இதற்குக் காட்டாகச் செவிவழிச் செய்திகளையும், தொண்டை மண்டல சதகத்தையும், மயிலாப்பூரில் இப்பொழுது திருவள்ளுவர் கோயில் இருப்பதையும் காட்டுவார்கள்.[15]

*1-3-1* திருவள்ளுவமாலையில் 'புனற்கூடற்கு அச்சு'[16] என்ற தொடர் வருகிறது. இதனால் வள்ளுவர் மதுரையைச் சார்ந்தவர் என்றும் கொள்கின்றனர்.

*1-3-2* பாண்டிய நாட்டுச் சதகம், இவரைப் பாண்டிய நாட்டினராகச் சொல்லுகிறது. இதற்குச் சான்றாக, வள்ளுவர் தம் நூலில் பாண்டிய நாட்டில் பெருவழக்காய் உள்ள 'ஊருணி', 'கேணி'[17] என்ற சொற்களை ஆண்டிருத்தலைக் காட்டுவர். ஆனால் இவ்விரு கருத்துக்களும் பொருத்தமாகத் தெரியவில்லை.

*1-3-3* மார்க்கசகாயன் என்பானின் ஊமை மகளாகிய 'வாசுகி' என்னும் அம்மையாரை வள்ளுவர் மணந்ததாகவும்,

அவளோடு வாழ்க்கையை நடத்தியதாகவும், அவள் கற்பின் திறத்தைப் பலவகையில் ஆய்ந்ததாகவும் கதைகள் வழங்கி வருகின்றன.[18]

*1-3-4* 'வாசுகி' என்ற பெயர் கி. பி. முதல் நூற்றுண்டில் தமிழ் இலக்கியத்தில் பயிலாத ஒரு பெயர். ஆகையால் அப்பெயருடைய ஒருத்தி வள்ளுவருக்கு மனைவியாக இருந்திருக்க முடியாது என்றும், 'நாகம்மை' என்ற பெயருடைய ஒருத்தியே அவர் மனைவியாக இருந்திருக்க வேண்டும் என்றும் செய்தி வழங்கி வருகிறது.[19]

*1-3-5* மற்றும் வள்ளுவர் இல்லறவாழ்வு மேற்கொண்டாரா என்ற ஐயத்திற்குச் சிறிதும் இடமில்லை. ஏனெனில்— 'பெறுமவற்றுள் யாமறிவ(து) இல்லை அறிவறிந்த மக்கட்பே(று) அல்ல பிற'[20] என்ற பாடலிலுள்ள 'யாம்' என்னும் சொல், தம்பதி களையே குறிக்குமாகையால், வள்ளுவர் இல்லறவாழ்வை மேற் கொண்டிருக்க வேண்டும் என்றும், மற்றும் 'இல்லறவியல்' பாடல்கள் எல்லாம் அவர்தம் பட்டுணர்வை உணர்த்தி நிற்ப தாலும், வள்ளுவர் உறுதியாக இல்லற வாழ்வை மேற்கொண் டிருக்கவேண்டும் என்றும் துணிய இடமுண்டு.

*1-3-6* தம் மக்கள் சிறுகை அளாவிய கூழை உண்பதால் உண்டாகும் பெருமகிழ்வையும், தம் மக்களின் மழலைச் சொற் களைக் கேட்பதால் ஏற்படும் மனநிறைவையும் குறித்து வள்ளுவர் கூறும்,

> அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்[21]
>
> குழலினிது யாழினி(து) என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்[22]

என்ற பாடல்களும், மேற்கருத்துக்குச் சான்ருய் உள்ளன.

## 1-4 திருவள்ளுவரின் காலம்

*1-4-1* திருவள்ளுவரின் காலத்தைப்பற்றி வெவ்வேருன கருத்துக்கள் இருந்து வருகின்றன. டாக்டர் மா. இராச மாணிக்கனர் திருக்குறளின் காலத்தைச் சங்க இலக்கியங்களுக்கு முன்னதாக்குகிருர். "சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆசிரியர்கள் திருக்குறள் கருத்துக்

களையும், சொற்களையும் ஆண்டுள்ளமையே அதற்குக் காரணம்'' என்று எடுத்துக்காட்டுக்கள் காட்டி விளக்கம் செய்கிறார்.[23]

*1-4-2* திருக்குறளைப் போலச் சங்க இலக்கியங்களில் வெண்பா யாப்பு அமைதி இல்லை; சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவாகவே அமைந்துள்ளன. திருக்குறள் பாடல் போக்கிலும், சில இடங்களில் கருத்துப்போக்கிலும் சங்க இலக்கியங்களுக்கு மாறுபட்ட புதுப்போக்கில் அமைந்துள்ளது.[24] சங்க இலக்கியங்களில் திருவள்ளுவரைப்பற்றிய குறிப்பு எங்கும் இல்லை. திருக்குறள் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதாயின் திருவள்ளுவரைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இருந்திருக்க வேண்டும். மேலும், சங்கப்பாடல்கள் வள்ளுவரின் கருத்து அடிப்படையில் அமைந்தன என்பதற்குக் காட்டும் எடுத்துக்காட்டுக்களையே, சங்க இலக்கியங்களின் அடிப்படையில் அவற்றில் விரவிக்கிடக்கும் நீதிகளை மனத்துட்கொண்டு விளக்கியும் விரித்தும் வள்ளுவர் அமைத்து இருக்கலாம் என்று கொள்வதற்கும் வாய்ப்புண்டு. வள்ளுவரின் காலத்தை விளக்க வந்த ஆசிரியர் சாமி சிதம்பரனார், "சங்க இலக்கியங்களில் நீதிகள் விரவி இருப்பினும், திருக்குறள் கண்டிக்கும் கள்ளுண்ணுதல், புலால் உண்ணுதல், உயிர்க்கொலை செய்தல், பரத்தமை முதலியவற்றைச் சங்க இலக்கியங்கள் பேசவில்லை''[25] என்று கூறுகிறார். இக்காரணங்களால் திருக்குறள் சங்ககாலத்துக்குப் பிற்பட்டதே என்று துணிய இடமுண்டு. அதே நேரத்தில், சிலப்பதிகாரம், மணிமேகலை[26] ஆகிய நூல்கள் திருக்குறள் தொடர்களைத் தெளிவாக ஆள்வதோடு, வள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றும் குறித்துள்ளமையால், இவற்றின் காலத்திற்கு முற்பட்டவர் திருவள்ளுவர் என்று கொள்ளலாம். மேலும், நாலடியார், நான்மணிக்கடிகை போன்று நீதிகளை மட்டும் திட்டத்தோடு அறிவிப்பதாய்த் திருக்குறள் அமையாமல், சங்க இலக்கியப் போக்கில் நீதிகளை எடுத்துரைக்கிறது. இதனால் நாலடி, நான்மணி இவற்றின் காலங்களுக்கு முற்பட்டது திருக்குறள் என்ற முடிவுக்கும் வரலாம்.

*1-4-3* திருக்குறளின் காலத்தை ஆராயப்புகுந்த மறைமலை அடிகள், திருக்குறள் கி. மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென்பர்.[72] கி. பி. ஆறும் நூற்றாண்டைச் சார்ந்ததென்று திரு. வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்.[28] தேவநேயப்பாவாணர் என்பவர், திருவள்ளுவர் காலத்தை கி. மு. இரண்டாம் நூற்றாண்டென்று கொள்வதே பொருத்தமாகும் என்றும், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுவரை கொள்ளவும் இடமுண்டு என்றும் கூறுகிறார்.[29]

*1-4-4* டாக்டர் வ. சுப. மாணிக்கம், "திருக்குறள் சங்க இலக்கியத் தொகையிலுள்ள நூற்கள் அனைத்திற்கும் பிந்தியது என்று தள்ள முடியாது; கி. பி. *3* அல்லது 4-ஆம் நூற்றாண்டில் சங்கப் பாடல்கள் அகநானூறு, புறநானூறு என்று தொகுக்கப் பெற்றன; தொகுத்த காலம்வரை தோன்றின அத் தொகையில் இடம்பெறுதல் இயல்பே. திருக்குறள் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 3-ஆம் நூற்றாண்டின் தொடக்க மாகும். ஆதலின் சங்கத் தொகையுள் சில செய்யுட்கள் திருக்குறள் காலத்தனவாகவும், சற்றே பிந்தியனவாகவும் தோற்றம் தருகின்றன" என்ற முடிவுக்கு வருகிறார்.[30]

1-4-5 தெ. பொ. மீ. அவர்கள், காமந்தக, காமசூத்ரா, கௌடில்யா, மனு முதலிய வடமொழி நூல்களினின்று சான்றுகள் காட்டி, வள்ளுவர் காலத்தை கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று கொள்கிறார்.[31] செல்வக்கேசவராய முதலியார், திருவள்ளுவர் கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று சான்றுகள் காட்டிக் கூறுகிறார்.[32] கி. பி. ஏழாம் நூற்றாண்டினராகக் கருதப் படும் சேரமான் பெருமாள் காலத்ததாகிய 'சேரமானின் திருக்கைலாய ஞானவுலா'வில், "இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாருஞ் செய்வர் சிறப்பு; பொருளுரை தேறாய்" என எழுத்தெண்ணிக் குறளைப்பேசுவதால் வள்ளுவர் காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்று கொள்ளலாம்"[31] என்று மு. கோவிந்தசாமி கூறுகிறார்.

1-4-6 இவ்வாறு கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 5-ஆம் நூற்றாண்டுவரை இருக்கப்பெறும் வள்ளுவர் காலத்தைப் பின்வரும் கருத்துக்களால் ஏறக்குறையக் கிறித்து தோன்றிய காலத்திற்குச் சிற்சில ஆண்டுகள் முன்னதாகவோ, பின்ன தாகவோ கொள்ளலாம்.

1. வள்ளுவரைப் போற்றிய பாடல் புறநானூற்றில் காணப்படல்.
2. சங்ககாலக் கள், புலை, பரத்தமை ஆகியவற்றை மறுத்தல்.
3. நாலடியார் போல நீதியை மட்டும் கூறாமல் பிறவற்றை யும் கூறல்.
4. சிலப்பதிகாரத்தில் திருக்குறள் கையாளப்பெறல்.

## 2. வேமனரின் வாழ்க்கை வரலாறு

2. 0. வேமனரின் வாழ்வைப் புலப்படுத்தவல்ல கதை போன்ற செய்திகள் சில வழங்கி வருகின்றன. அவற்றில் முக்கிய மானவை மூன்றாகும். இந்த மூன்று கதைகளும் பலரறிந்தனவே. ஆயினும் வேமனரின் வரலாற்றைத் தெரிந்துகொள்ளத் தேவைப் படும் செய்திகளை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

## 2. 1. வேமனரின் இடம்

2-1-1 'வேமன சூக்தி ரத்னாகரமு' என்னும் நூலின் முன்னுரையில், 'வேமன சரித்திரம்' என்னும் பகுதியில், கீழ்வரும் செய்திகள் காணப்படுகின்றன. கி. பி. 1328லிருந்து 1428 வரை 'கொண்ட வீடு' பகுதியில் ஆண்ட கோமடிரெட்டி அரசர்களுள் இறுதிஅரசன் இராசவேமாரெட்டி. அவன் தம்பிதான் வேமனர். இவ்விருவரும் 'கோமரகிரிக்கு'ப் பிள்ளைகளாவர். தாய் மல்லம்மா. தாயின் மறைவுக்குப் பிறகு அண்ணி சரசாம்பா வேமனருக்குத் தாய் நிலையில் அன்பும் ஆதரவுங் காட்டிவந்தாள்.[34] வேமனர் பரத்தையரின் வலையில் சிக்குண்டு பொன்னையும் பொருளையும் இழந்தார். இந்நிலையில் அண்ணி சரசாம்பா தன் சூழ்ச்சியால் வேமனரைப் பரத்தையரின் தொடர்பினின்றும் பிரித்தாள்.

2-1-2 'அபிராமய்யா' என்னும் ஆச்சாரி, தத்துவ உபதேசத் திற்காக 'இலம்பிகா சிவயோகியை' இரகசியமாய்த் தொழுது வந்தார். ஒருநாள் அந்த யோகி அபிராமய்யாவைப் பார்த்து, 'நாளைய தினம் காலை உபதேசத்தைப் பெறுவாயாக' என்று சொல்லிக்கொண்டிருக்க, அதனை மறைந்திருந்து கேட்ட வேமனர், மறுநாள் அபிராமய்யாவை நகரத்திலேயே நிறுத்தி, அவருக்குப் பதிலாகத் தான் உபதேசம் பெறச் சென்றார். சென்றவர், அபிராமய்யா தான் வரமுடியாக் காரணத்தால் தன்னை அனுப்பிய தாகச் சொல்லி, உபதேசம் பெற்றார். அன்றைய தினத்திலிருந்து வேமனர் ஞானியானார். ஞானியான வேமனர் அபிராமய்யாவிடம் மன்னிப்புப் பெற்று, பல இடங்களுக்குச் சென்று, மக்களுக்கு உபதேசத்தைச் செய்து, இறுதியில் 'கடாருபல்லெ' என்னும் கிராமத்தில் சமாதி ஆனார்.[35] இக்கூற்றால் வேமனரின் பரம்பரை கோமடிரெட்டி பரம்பரை என்றும், கொண்டவீடு என்னும் இடத் தில் பிறந்து 'கடாருபல்லெ' என்னும் கிராமத்தில் முடிவெய்தினர் என்றும், 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்றும் உணரலாம். ஆனால் மேற்குறிப்பிட்ட குறிப்புக்குச் சான்றுகள் ஒன்றும் காணப் பெறவில்லை.

*2-1-3* 'கோமர்ராஜு இலட்சுமணராவ்' என்பவர், வேமன 'சூக்தி இரத்னுகரம்' குறிப்பிடும் வரலாறு உண்மையல்லவென்றும், சூக்தி இரத்னுகரம் குறிப்பிடும் வேமனரின் தந்தையாகிய கோமர கிரிக்குப் பிள்ளைப்பேறே இல்லை; அதனுல் கோமரகிரி தாயாதி யாகிய கோமடி வேமாரெட்டி ஆட்சிக்கு வந்தான் என்றும். கோமரகிரி வேமாரெட்டி மகன் என்று சொல்லப்படும் இராசவேமாரெட்டி இந்தக் கோமடி வேமாரெட்டி மகன் என்றும், யோகி வேமனருக்கும் இவர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும் சொல்லுவதாக வங்கூரி சுப்பாராவ் அவர்கள் குறிப்பிடுகிருர்.[36]

*2-1-4* 'வேதாந்த சித்தாந்தம்' என்னும் நூலின் முன்னுரை யில், கோமகிரி வேமாரெட்டியின் பிள்ளைகள் இருவர் என்றும், அவருள் இராச வேமாரெட்டியே 'வேமன யோகி' என்ற பெயரோடு அழைக்கப் பட்டிருப்பதாகவும் இராள்ளப்பல்லி அனந்தகிருஷ்ண சர்மா குறிப்பிட்டுள்ளார். ஆனுல் இராள்ளப் பல்லி இக்கருத்தைக் குறிப்பிட்டாரே தவிர உடன்படவில்லை. இராச வேமாரெட்டி நான்கு ஆண்டுகள் அரசனுக இருந்தான் என்றும், அதன்பிறகு சூழ்ச்சியால் கொல்லப்பட்டான் என்றும் இராள்ளப்பல்லி நம்புகிருர்.[37]

## பூசாரி சென்னய்ய சொன்ன கதை

*2-1-5* வேமனர், 'கொண்டவீடு' பகுதியைச் சேர்ந்தவர்; ரெட்டி குலத்தைச் சேர்ந்தவர். இவரின் முதற்பெயர் 'புல்லா ரெட்டி.' அரசனுன தன் அண்ணனேடு பகைமை கொண்டு தாயோடு 'நல்லசெருவுபல்லெ' என்ற கிராமத்துக்கு வந்தார். அவ்வூரில் ஒரு குடியானவனுய் அவர் வாழ்ந்துவந்தார். ஒருநாள் அவர் வந்து கொண்டிருக்கும்பொழுது, தலையில் இடிவிழுந்து இறந்தார். பின் நடக்கும் கருமத்தைச் செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுது, இறந்த புல்லா ரெட்டி தாயின் கனவில் தோன்றி, 'இன்னும் ஏழு நாட்களுக்குப் பிறகு எட்டாவது நாளில் மீண்டும் பிறப்பேன்' என்று கூறி, அங்ஙனமே எட்டாவது நாள் பிறந்து 'வேமனர்' என்ற பெயர் கொண்டார். அன்றையிலிருந்து 'சிறந்த மகத்துவம் பெற்றுப் பல இடங்களுக்குந் தாயோடும், மனைவி யோடும் நாடு திரிந்து, இறுதியில் 'கட்டாருபல்லெ' கிராமத்தில் சமாதி ஆனுர்' என்று பூசாரி சென்னய்ய தனக்குச் சொன்னதாக இராள்ளப்பல்லி தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[38]

இந்தக் கதையில் மற்றச் செய்திகள் வேறுபட்டாலும், வேமனரின் ஊர் 'கொண்டவீடு' என்பதும் 'கடாருபல்லெ' கிராமத்தில் அவர் இறுதி எய்தினர் என்பதும் ஒத்துள்ளன.

## தர்மகர்த்தா சென்னராயடு சொன்ன கதை

*2-1-6* வைகுண்டத்தில் சென்னகேசவரும் ஆதிலட்சுமியும் வேமனரை அழைத்து, 'நீ பூலோகத்தில் அவதரிப்பாய்' என்று சொல்ல, அவ்வாறே வேமனர் பூலோகத்தில் அவதரித்துத் தன் பக்தர்களோடு, கதிரிக்கு அருகாமையிலிருக்கும் 'ரேபல்லெ' வந்தாரென்றும், இந்த 'ரேபல்லெ' இவர் தோன்றிய இடம் என்றும், இறுதியில் 'கடாருபல்லெக்கு' வந்ததாகவும், தான் சொல்லும் வேமனர் வேறு, பூசாரி சென்னய்ய சொன்ன வேமனர் வேறு என்றும், தர்மகர்த்தா சென்னராயடு சொன்னதாக இராள்ளப் பல்லி குறிப்பிட்டுள்ளார்.[39]

*2-1-7* வேமனர் 'கொண்டவீட்டில்' பிறந்து வளர்ந்தார் என்று சொல்லுவோருக்குச் சான்ருக, வேமனர் பாடல்களில் ஒரு குறிப்புக் காண வருகிறது.[40] அந்தப் பாடலால் இவர் 'கொண்ட வீடு' பகுதியில் 'மூகசுந்தபல்லெ' கிராமத்தில் மேற்கு வீதியில் முதல் வீட்டில் வாழ்ந்ததாகத் தெரியவருகிறது. இந்தப் பாடலுக்கு வேருெரு உட்பொருளும் உண்டு. "ஊர் நம் உடலாகும்; இந்த உடலில் இறைவன் வசிக்கும் நகரம் தலையாகும் (கொண்டவீடு). அதில் அந்த இறைவனின் பின்னிருக்கும் முதுகெலும்பு பின்தெருவு, அதில் மௌனமே முதல் வீடாகும். இதனைப் பார்த்து நாம் எப்பொழுதும் தொழுதுகொண்டிருக்க அதுவே ஆனந்த மார்க்கமாகும்" என்று ஏட்டுச்சுவடியில் எழுதியிருந்ததாக மேஜர் ஆர். எம். மாக்டோனல்டு குறிப்பிடுவதாக மருவூரி கோதண்டராமி ரெட்டி கூறுகிறுர்.[41]

*2-1-8* மற்றும் இப்பாடலில் காணப்படும், கொண்டவீடு மேற்கு வீதி உனிகிக்கும், பூகசிந்தபல்லெ முதல் வீட்டுக்கும் தொடர்பு என்னவென்று தெரியவில்லை. 'மூகசிந்தபல்லெ' எங்குள்ளது என்பதைப் பற்றிய கருத்துக்களும் பல உள. சேஷாத்திரி ரமண கவிகள் 'மூக சிந்தபல்லெ', 'ஒங்கோல்' தாலுக்காவில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.[42] கடப்பை ஜில்லாவில் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.[43] ஆனால், சித்தூர் ஜில்லா, சந்திரகிரி தாலுக்காவில் தவிர 'மூகசிந்தபல்லெ' என்னும் கிராமம் வேறு எங்கும் இல்லை என்பது ஆசிரியர் ஆருத்ர கருத்து.[44] ஸ்ரீ காமேஸ்வரராவ் என்பவர் 'வேமய்ய' என்னும்

பெயரில் எத்தனையோ பேர் இருந்ததாகவும், அவர்களில் வேமாரெட்டி என்பார் ஒருவரின் பாடலாக இது இருக்கலாம் என்றும் கூறுகிறார்.[45] மூகசிந்தபல்லெ குண்ட்டூர் வினுகொண்டாவி லும், கர்நூல் கிருஷ்ணபாடிலும் இருப்பதாகத் தான் கேள்விப் பட்டதைக் கூறுகிறார் மருபூரி கோதண்டராமிரெட்டி அவர்கள்.[46]

2-1-9 மேற்குறிப்பிட்ட பாடலை அடிப்படையாய்க் கொண்டும், வேமனரைப் பற்றி வழங்கிவரும் கதைகளைச் சான்றாய்க் கொண்டும், வேமனர் 'கொண்டவீடு' பகுதியைச் சேர்ந்தவர் அல்லர் என்று சொல்லுவதற்குத் தகுந்த காரணங்கள் கிடைக்கும்வரை வேமனரைக் 'கொண்டவீடு' பகுதியை சேர்ந்த வராகவே கொள்ளலாம் என்று முடிவுக்கு வருகிறார் இராள்ளப் பல்லி அவர்கள். அத்தோடு, இவர் எங்குப் பிறந்திருந்தாலும், கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் தம் வாழ்நாளில் அதிகம் இருந்திருக்க வேண்டும் என்றும் துணிவு கொள்கிறார்.[47] சி. பி. பிரௌன் என்பவர், தனக்குக் கிடைத்த சான்றுகளைக் கொண்டு, வேமனர் இன்றைய இராயல சீமையின் வடமேற்குப் பகுதியைச் சேர்ந்தவராகக் கொள்ளலாம் என்று கூறுகிறார்.[48] காம்பெல் என்பவர் வேமனர் சென்னைக்கு இருநூறு கல் தொலைவிலுள்ள கடப்பை மாவட்டத்தில் அகிரிகானனப் பகுதியில் பிறந்திருக்கலாம் என்று எண்ணுகிறார்.[49] டாக்டர் கந்தம் அப்பாராவ் என்பவர் வேமனர் கதிரி தாலுக்காவில் 'கடாரபல்லெ' கிராமத்தைச் சேர்ந் தவர் என்பதற்குத் தக்க சான்றுகள் காட்டி அறிவுறுத்துகிறார்.[50] இவ்வாறு வேமனரின் பிறப்பிடம் பற்றிப் பல கருத்துக்கள் இருந்து வருகின்றன. கதைகளை அடிப்படையாய்க் கொண்டும், வேமனர் தாமே தம் பாடலில், 'ஊரு கொண்டவீடு' என்று குறித்திருப் பதைச் சான்றாய்க் கொண்டும் பார்க்க, இவரைக் கொண்டவீடு பகுதியைச் சேர்ந்தவர் என்று துணியலாம்.

2-1-10 இவர் கடப்பை மாவட்டம் 'கட்டாருபல்லெ' என்னும் கிராமத்தில் சமாதியானதாகக் கதைகள் இருப் பதாலும், கடப்பை மாவட்ட மக்கள் சாதாரணமாய்ப் பேசும் சொற்களைத் தம் பாடல்களில் ஆண்டிருப்பதாலும்[51] வேமனர் தம் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கடப்பை மாவட்டத் தில் கழித்திருக்க வேண்டும் என்றும், சித்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டிலும் நடமாட்டம் செய்யும்பொழுது அந்தந்த இடங் களில் சிறிது காலம் தங்கியிருக்க வேண்டும் என்றும் தெளிவு பெறலாம்.

2-1-11 இவர் பாடல்களிலுள்ள சில தொடர்களையும் சொற் களையும் கொண்டு, வேமனர் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்

அல்ல, சாதாரண குடியானவ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், கடப்பை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் கொள்ளலாம்.

தொப்பநேர்சு குக்க துத்தலு மோகனு'
'தூலமுன நடெக்கி தொம்மரிகடனெக்க'[52]

இத் தொடர்களிலுள்ள 'தொப்ப', 'தொம்மரி' முதலிய சொற்களைக் கடப்பை ஜில்லா மக்களே அதிகம் ஆள்வர். இவர் கிராமத்தில் வாழ்ந்து நன்ருகப் பாதுகாப்பவனுக்கே பயிர் பலன் கொடுக்கும் என்பதை அறிந்திருக்கிருர்.[53] கிராமத்தில் எல்லா வீடுகளிலும் பழுது இருப்பதைப் பார்த்திருக்கிருர்; பழுது மீருத இல்வாழ்வு சரியானதல்ல என்கிருர்.[54]

*2-1-12* 'வீடு' என்ற பொருளைக் கொடுக்கும் கிராமவாசிகள் பேசும் 'கொம்ப' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.[55] கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும், பால், தயிர், நெய் சேர்த்து உண்ணுதலைப் பார்த்திருக்கிருர். தானும் அம்மூன்றும் இன்றி உண்ண மாட்டார்.[56] பிடித்த பிடி விடாத உடும்பைப் பார்த்திருக்கிருர்.[57] சாப்பிடும்பொழுது இரண்டாம் முறை 'அன்னம்' வைத்துக் கொண்டு (ரசத்துக்கு அல்லது மோருக்கு) உண்ணுதலை முறையாகக் கொண்டுள்ள கிராமநிலையைப் பார்த்திருக்கிருர்.[58] கழனிகளில் நடக்கும்பொழுது நெருஞ்சில் முள்ளைக் காலால் மிதித்து நடந்து பழகி இருக்கிருர்.[58]

*2-1-13* இத்தகைய அனுபவங்கள் அரச குடும்பத்தாருக்கு இருக்குமா? பெரும்பாலும் கிராமவாசிகளுக்கே இருக்கும். எனவே இத்தகைய அனுபவங்களை வேமனர் குறிப்பிடுவதால், கிராமத்தில் வாழ்ந்தார் என்றும், ஓரளவுக்குப் பொருள்வளம் பெற்றிருந்தார் என்றும் கொள்ளலாம். ஆனுல் கொண்டவீட்டை ஆண்ட அரசர்களின் பரம்பரைக் குழுவில் சேர்ந்தவராகக் கருத வாய்ப்புண்டு. அதோடு அந்தணர்களின் ஆதிக்கம் அதிகமாய் இருந்த அந்தக் காலத்தில் அந்த அந்தணர்களை எதிர்த்துச் சமுதாயத்துக்கு அறிவுரைகள் வழங்குதல் சாதாரணக் குடியானவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு இயலுமா என்பதும் வினு. அரச குடும்பத்தைச் சேர்ந்தவரால் அவ்வாறு எதிர்த்து அறிவுரைகள் வழங்க இயலும். எனவே வேமனர் பேரரசர் குடும்பத்தைச் சேர்ந்தவரல்லர் என்று கொண்டாலும், சிற்றரசர் (ஜமீன்தார்) குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கொள்ள வாய்ப்புண்டு. கிராமத்தில் வாழ்ந்த சிற்றரசர் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆகையால், மேற்கூறியவாறு கிராம மக்கள் அன்ருடம் பேசும் மொழியையே இவர் ஆண்டிருக்கலாம்.

*2-1-14* கட்டமஞ்சி இராமலிங்கா ரெட்டி வேமனரைக் குறித்து ஒரு செய்தியைக் கூறுகிறார். "மனிதன் இறைவனோடு ஒன்று சேரவேண்டுமானால் சமுதாயத்தோடு கலந்துபோக வேண்டும்; குலம், மதம், பேர் இவற்றால் வேறுபடுதல் குற்றமாகும். 'மதத்தின் பேரில் தான் செய்யும் ஒழுக்கமற்ற முறைகளை நீக்கிக் கொள்ள வேண்டும்' என்ற பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் போதனைகள் யோகி வேமனரிடம் காணப்படுவதால், பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் முன் உருவமே வேமனராகும்" என்ற கருத்தும் உண்டு என்று கூறியுள்ளார்.[60]

## 2-2 குலம்

*2-2-1* வேமனர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர். அவரைக் 'காபு' குலத்தைச் சேர்ந்தவராகக் கொள்ளலாம் என்று எண்ணுவதற்கு ஏற்றவாறு அவர் பாடல்கள் அமைந்துள்ளன. வேமனர் தன் புகழால் கலியுகத்திலுள்ள 'காபு குலத்தாருக்கெல்லாம் புகழ்வரச் செய்தார்' எனத் தன் புகழே தன் காபு குலத்தார் புகழ் என்று செருக்குக் கொள்கிறார்.[61] மேலும் இவர் பாடல்களைப் படிக்கும்பொழுது, இவர் சொந்த வாழ்வு பற்றியும் சிறிது உய்த்துணர வாய்ப்புண்டு.

*2-3-1* இல்வாழ்வில் எல்லாவற்றிற்கும் மனைவியின் அறிவுரையைப் பெறுதலோ, அவள் சொற்படி நடத்தலோ கூடாது. அப்படி நடத்தல் இல்வாழ்வோனுக்கே தீமையைப் பயக்கும். மனைவி பேச்சுக் கேட்டு உடன்பிறந்தாரை வெறுத்து, வேறுபட்டு வாழ்வர். இது நாய்வாலைப்பற்றிக் கொண்டு கோதாவரி நதியைக் கடக்க எண்ணுவதைப் போன்றது.[62] இதனால் இவர் மனைவியோடு வாழ்ந்திருக்க வேண்டும் என்றும். மனைவியின் பேச்சைக் கேட்டுக் குடும்ப வாழ்வில் நிம்மதியை இழந்திருக்க வேண்டும் என்றும் எண்ணலாம்.

*2-3-2* துறவறத்தை மேற்கொள்ளுவதற்கு முன்பு வேமனர் காமவெறி பிடித்தவராய் வேசியர் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பதற்கும் இவர் பாடல்கள் இடந்தருகின்றன.[63] இவரே ஒரு பாடலில், "இல்வாழ்க்கை வழிநின்று உலக இன்பங்களை அனுபவிக்காதவன் சிறந்த புலவனாக மாட்டான்; புகழும் அடையான்; இறைமேல் காமமின்றேல் (பற்று) வீட்டின்பமும் இல்லை; எனவே இல்வாழ்க்கை வழிநின்று உலக இன்பங்களை அனுபவிப்பவரே சிறந்த புலவர்களாகவும் புகழுடையவர்களாகவும் விளங்க முடியும்" என்று கூறுகிறார்.[64]

*2-3-3* இந்தப் பாடலுக்கு வேறு பொருள் கூறுவோரும் உளர்; காம உணர்ச்சியுடையவரே சிறந்த புலவராகவும், புகழுடையோரரகவும் விளங்குவார்கள்.வீட்டின்பத்திற்கும் அந்தக் காமமே காரணமாகும் என்பது அப்பொருள். இதனுல் வேமனர் காமவெறி பிடித்தவராய் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லு கின்றனர். பின்வரும் நார்ல வெங்கடேஸ்வரரவ் அவர்களின் கூற்றும் இதற்கு ஏற்ப உள்ளது :

*2-3-4* ''தன் குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக வேமனர் தாசியோடு தொடர்புகொள்ள வேண்டிய நிலே ஏற்பட்டது, தொடர்பு ஏற்பட்ட பிறகு வேமனர் தாசியோடு இன்பமாக சிலநாட்கள் கழித்தார். ஆயின் தாசிக்குக் கொடுக்க வேண்டிய பொருளே ஒழுங்காகக் கொடுக்காத காரணத்தால் தாசியின் தாயால் வெறுக்கப்பட்டார். வேமனர் தன் வீட்டுக்கு வருதலேயும் தடுத்தாள். இதனுல் மனவேதனேப்பட்ட வேமனர் குழப்பமான நிலேயில் இருந்தார். இந்நிலேயில் தந்தை, வேமனரின் குழப்பநிலேயை மாற்றும்பொருட்டு வேமனரை வற்புறுத்தித் திருமணம் செய்வித்தார்; ஆனுல் அந்த வாழ்விலும் வேமனர் நிம்மதியைப் பெறவில்லே. மனேவிக்கும் அவருக்கும் ஒற்றுமை இல்லாமல் போயிற்று. பொருள்வளம் குறைந்தது. மனேவி மக்களேக் காப்பாற்றும் நிலேயிலும் வேமனர் இல்லே. இந்நிலேயில் மனவேதனேப்பட்டு இல்லற வாழ்வை முழுமையாகவேதுறந்தார்'' என்று நார்லவெங்கடேஸ்ராவ் அவர்கள் தக்க சான்றுகள் காட்டி அறிவித்துள்ளார்.[65] வேமனரின் வரலாற்றைக் கூறிய அனேவரும், வேமனருக்கு 'திகம்பர வேடத்தை'யும் கொடுத்துள்ளார்கள். வேமனர் பெயரால் வெளியான எல்லா வெளியீடுகளிலும் அட்டைமேல் இந்தத் திகம்பர வேடமுடைய உருவத்தையும், அதோடு அதன்கீழ் 'தாய் வயிற்றிலிருந்து (கர்ப்பத்திலிருந்து) பிறக்கும்பொழுதும் உடையால் உடலே மறைப்பதில்லே; செத்த பிறகு புதைக்கும்பொழுதும் உடம்பிலிருக்கும் உடையையும் நீக்கியே புதைக்கிறுர்கள். இப்படியிருக்க, இடைப்பட்ட காலத்தில் உடையைத் தரித்தல் சிரிப்புக்குரியது'[66] என்ற பொருளுடைய வேமனர் பாடலேயும் சேர்த்துள்ளார்கள்.

## வேமனரின் காலம்

*2-4-1* ஆய்வாளர்கள் வேமனரின் காலத்தை இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற முடிவுக்கு வந்தனர். சி.பி. பிரௌன் அவர்கள், வேமனர் 17-ஆம் நூற்றுண்டைச் சேர்ந் தவர் என்றும், காம்பெல் என்பவர் 16-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்

தவர் என்றும், மாக்டோனுட் 18-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்றும், கோவர் என்பவர் 12-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்றும்[67], பூர்ணயாச்சாருலு 14-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்றும்[68], வங்கூரி சுப்பாராவ் 15-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்றும்[69], 18-ஆம் நூற்றுடைச் சேர்ந்தவர் என்று இராள்ளப் பல்லி அனந்தகிருஷ்ண சர்மாவும்[70] கூறுகின்றனர்.

2-4-2 இவ்வனைவர் கருத்துக்களையும் ஆய்ந்த பண்டாரு தம்மய்ய, வேமனர் 1650க்கும் 1750க்கும் இடைப்பட்ட காலத் தவராய் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறுர்[71]. இவ் வனைத்து ஆய்வாளர்களிலும், வங்கூரி சுப்பாராவும்[72] இராள்ளப் பல்லி அனந்தகிருஷ்ண சர்மாவும்[73] தக்க சான்றுகள் கொடுத்து வேமனரின் காலத்தை முறையே 15-ஆம் 18-ஆம் நூற்றுண்டென நிறுவியுள்ளனர். கவி சௌடப்ப, 'இரகுநாத பூபாலன்' என்பாரைக் கி. பி. 1614-1633இல் பார்த்ததாகக் குறிப்புண்டு[74]. இதே காலத்தில்தான் வேமனரும் தஞ்சாவூரில் இரகுநாத இராயலையோ, அல்லது விஜயாகவ இராயலையோ பார்த்திருக்க வேண்டும் என்று இராள்ளப்பல்லி குறிப்பிடுகிறுர். கவி சௌடப்ப தன் பாடல்களில் வேமனரையும் குறித்துள்ளார். எனவே, வேமனரை 1650-1750க்கு இடைப்பட்ட காலத்தவர் என்று எண்ணுவதற்கு வாய்ப்புண்டு.

2-4-3 கந்தம் அப்பாராவ், வேமனர் காலம் 1650-1700 இடைப்பட்டதாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வருகிறுர்[75].

2-4-4 இந்தியாவின் மத்திய அரசு, அக்டோபர் மாதத்தை இவர் பிறந்த தேதியாக முடிவு கொண்டு, 1972ஆம் வருடம் ஒரு தபால் தலையை வெளியிட்டது.

2-4-5 வேமனர் பாடல் ஒன்றினுல்[76] ('நந்தன சம்வத்ஸரமுன' என்று தொடங்குவது) வேமனர் நந்தன வருஷத்தில் தோன்றிய வராக இருக்கலாம் என்று எண்ண இடந்தருகின்றது. இந்த நந்தன வருடம் 1824க்கு முன்பு 52-ஆம் ஆண்டாகவோ, அல்லது 112-ஆம் ஆண்டாக இருக்கலாம். எனவே, வேமனர் கி. பி. 1712 அல்லது 1652-ஆம் வருடத்தைச் சேர்ந்தவராகலாம் என்ற கருத்தும் உண்டு என்று மருவூரி கோதண்டராமி ரெட்டி குறிப்பிடுகிறுர்[77].

2-4-6 எனவே இவற்றை எல்லாம் அடிப்படையாய்க் கொண்டு பார்க்க, வேமனர் பதினேழாம் நூற்றுண்டைச் சார்ந்தவர் என்று ஒருவாறு முடிவு கொள்ளலாம்.

2-5-1 அவரைப் பற்றிய வரலாறுகளிலிருந்தும், அவர் பாடல்களிலிருந்தும் அவரைப்பற்றிக் கீழ்வருமாறு துணியலாம்: அவர் பேச்சில் கள்ளமற்றவர்; சட்டென்று முடிவெடுப்பவர்; செயலில் துணிவுடையவர்; தெளிந்த கருத்துடையவர். கீழ்த் தரமான சமூகக்கொடுமைகளை அவர் பொறுத்துக்கொள்ள மாட்டார்; எப்பொழுதும் எளியோர் பக்கமும், ஏழைகள் பக்கமும் பேசுவார்; அப்படிப் பேசுவதால் தனக்குக் கேடுவருவதாய் இருந்தாலும் பொருட்படுத்த மாட்டார்.

2-5-2 வேமனர் தம் பெற்றோரிடம் அன்பையும் ஆதரவையும் காட்டினர்; தம் பெற்றோர்களுக்கு இவர் செல்வக்குழந்தையாய் இருந்தார். முன் குமரப்பருவம் தாண்டும்வரை இவரின் வாழ்க்கை கவலையற்றும் மகிழ்ச்சியாயும் இருந்தது. பின்பகுதி வாழ்வில் மேடுபள்ளங்கள் அமையலாயின. அந்த மேடுபள்ள வாழ்வில் அவர் மீண்டும் மீண்டும் உழன்றார். இந்நிலையில் அண்ணியின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. இவருக்கு ஏற்பட்ட கடுந்துயர் இவரை வாழ்வில் திண்மை உடையவராக்கியது; விரிந்த நோக்குடனும், பலர் புகழ்ந்து கூறும் கருத்துடனும், துணிவானதும், மரபொழுங்கிற்கு மீறிய தத்துவத்துடனும் கூடிய தனித்தன்மை வாய்ந்த மனிதராகப் பண்படுத்தி உருவாக்கிற்று.

## ஒப்பு

2-6-0 திருவள்ளுவர், வேமனர் இவ்விருவருடைய வாழ்வை ஒப்பிட்டுப் பார்ப்பின், இந்த இருவரிடையே காணப்படும் ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமைகளே அதிகம் தென்படுகின்றன.

## ஒற்றுமைகள்

2-6-1 இருவரும் சிறந்த புலவர்கள். தம் நலத்தைக் காட்டிலும் சமுதாய நலத்தையே பெரிதும் எண்ணியவர்கள்; சமுதாயத்துக்கு நன்கு வாழும் வழிவகைகளை அறிவித்தவர்கள். இந்த இருவரிடையே காலமும் இடமும் வேறுபட்டாலும் சிந்தனைகள் ஒன்றலாயின. இருவரும் தம் புகழ் கருதிப் பாடல்களை இயற்றவில்லை; அல்லது பிறரை மகிழ்வித்துப் பொருள் பெற வேண்டும் என்ற நோக்கிலும் பாடல்களைப் பாடவில்லை. தாம் உலகுக்கு உணர்த்தவேண்டும் என்று நினைத்தவற்றை அஞ்சாது இருவரும் உணர்த்தினர். அறிவுரைகள் வழங்குங்கால், பழிக்க வேண்டிய இடங்களில் பழித்தும் அறிவுரை வழங்கி இருக்கின்றனர்.

பழித்து அறிவுரை வழங்குவதில் இருவருக்கும் சிறிது வேறுபாடு உண்டு. வள்ளுவர் நாகரிகமாகப் பழிக்கிறார்; வேமனர் உணர்ச்சி வயப்பட்டுப் பழிக்கிறார். இருவரும் தாம் உணர்த்த நினைத்த கருத்தைத் தெள்ளத்தெளிய உணர்த்துவதற்கு உவமை, உருவகம் முதலான இலக்கிய உத்திகளைக் கையாண்டனர். பல இடங்களில் இருவரும் ஒரேவகையான உவமைகளையே ஆண்டுள்ளனர். பாமர மக்களின் அனுபவத்திலுள்ள பொருள்களையே உவமைகளாகவும், உருவகங்களாகவும் இருவரும் கொண்டனர். இந்த இருவரின் பாடல்கள் மக்களிடையே சிறப்பிடம் பெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மனத்தில் மாசற்ற தன்மையே அறமாகும் என்பது இருவருடைய கருத்துமாகும். வேமனர் நம்முள்ளே இறைவன் உள்ளான் என்ற கருத்தைப் பல இடங்களில் உணர்த்துகிறார்.

## வேற்றுமைகள்

2-6-2 வேமனரின் முற்பகுதி வாழ்வு ஒருவகையாகவும் பிற்பகுதி வாழ்வு வேறு வகையாகவும் உள்ளது. இவரின் பிற்பகுதி வாழ்வை ஓரளவுக்கு வள்ளுவர் வாழ்வோடு ஒப்பிடலாம். முற்பகுதி வாழ்வில் இருவருக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. முற்பகுதி வாழ்வில் வேமனருக்கு வேசியர் தொடர்பு இருந்த தாகவும், ஒழுங்கற்ற முறையில் வாழ்வைக் கழித்ததாகவும், அவரின் பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன. வள்ளுவரிடத்து இத் தன்மையைப் பார்க்க முடியாது. வள்ளுவர் மணவாழ்வு பெற்று வாழ்ந்ததாக அவர் வரலாறு சொல்லுகிறது; குறளிலுள்ள பாடல் களாலும் உணரலாம். வேமனருக்கு மணவாழ்வு இல்லை என்று பல கதைகளிலும், மணவாழ்வு இருந்தது என்று ஓரிரு கதைகளிலும் சொல்லப்பட்டு வருகின்றன. வேமனர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்றும். சாதாரணக் குடியானவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், இருவிதக் கருத்துக்கள் இருக்கின்றன. வள்ளுவருக்கு அவ்வாறில்லை. சாதாரண குடும்பத்தைச்சேர்ந்தவர் என்பது எல்லோரும் ஒத்துக்கொண்ட முடிவு. வேமனர் வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டபிறகு துறவி ஆகிச் சென்ற இடமெல்லாம் பாடல்களைப் பாடினாரே தவிரத் தானாக எழுதவில்லை; பாடிய பொழுது உடனிருந்த அவரின் சீடர்கள் ஓலைச்சுவடியில் எழுத லாயினர்; இதனால்தான் வேமனர் பாடல்களில் இடைச் செருகலாகச் சில பாடல்கள் இடங்கொள்ளலாயின. வள்ளுவர் இவ்வாறன்றித் திட்டத்தோடு நூலைத் தாமே ஆக்கினார். பின்வரும் இயல்களில் இவ்விருவரைப் பற்றிய ஒப்புமையை விளக்கமாகவும் விரிவாகவும் காணலாம்.

## மதிப்பீடு

2-6-3 காலமும் இடமும் வேறுபட்டாலும், சமுதாயத்திற்குத் தேவையான அடிப்படை அறநெறிகளில் பெரிதும் மாற்றம் நிகழ்வது இல்லை. இந்த அறநெறிகளை அறிஞர்கள் பாடல் வாயிலாக உணர்த்தும்பொழுது பல உத்திகளை மேற்கொள்ளுகின்றனர். இத்தகு உத்திகளை மொழிவதில் வேண்டுமாயின் சில மாறுபாடுகள் காணக்கூடும். மேலும், அறிஞர்களிடையே பல பொதுப்பண்புகள் இருப்பினும், சில தனிப்பண்புகளும் உள. அத்தகைய பண்புகளின் தாக்கமே ஒரே பொருள் பற்றி இருவர் பாடும்பொழுது, பாடும் முறையில் தோன்றும் வேறுபாட்டுக்குக் காரணம் ஆகும். இத்தகு செய்திகளை இவ்வாய்வு தெளிவு செய்கிறது. மேலும், இவ்விருவரின் வாழ்வு முறைக்கும், இலக்கியப் போக்கிற்கும் அவர்கள் காலச்சூழலும், குடும்பநிலையும் தான் காரணமாய் இருந்திருக்கவேண்டும்—என்கிற உண்மையை இந்த ஆய்வால் அறியமுடிகிறது.

## குறிப்பெண் விளக்கம்

1. திரு. வ. மா., 4, 28.
2. திரு. வ. மா., 2.
3. காண்க : தி. ஆ. ப., பக். 180.
4. காண்க : பெரியண்ணு, ப. எ., திரு. வா. வரலாறு, பக். 25.
5. காண்க : செல்வக்கேசவராய முதலியார், திருவள்ளுவர், பக். 12.
6. குறுந். 228ஆம் பாடல் ஆசிரியர்.
7. புறம். 137.
8. திரு. வா. மா. 8.
9. திருவள்ளுவர், பக். 14.
10. கொங்குவேள் பெருங்கதை, 212 : 32-34.
11. *His-Ta-Lit.* p : 47.
12. திருக்குறள் மரபுரை, பக். 4.

13. திரு. மரபுரை, பக். 4.
14. திருவள்ளுவர், பக். 16; திரு. வா. வரலாறு, பக். 21.
15. தி. ஆ. ப., பக். 183.
16. திரு. வ. மா., பக். 21.
17. குறள் 215, 396.
18. தி. வா. வரலாறு. பக். 15.
19. தி. வா. வரலாறு. பக். 25.
20. குறள் 61.
21. குறள் 64.
22. குறள் 66.
23. திருவள்ளுவர் காலம், பக். 8.
24. புறம். 188; குறள் 66.
25. வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், பக். 42.
26. சிலம்பு. 21 : 34; மணிமேகலை 22 : 60 : 61.
27. தி. ஆ. ப., பக். 17.
28. தமிழ்க் கட்டுரை மணிகள், பக். 72.
29. திருக்குறள் மரபுரை, பக். 11.
30. சிந். கள. பக். 197.
31. *His-Ta-Lit.*, p. 49.
32. திருவள்ளுவர், பக். 10.
33. குறள் மனம், பக். 37.
34. தாய் இறந்த செய்தியை, இவரின், ''தாய் இருக்கும் பொழுதே பிள்ளை மனக்குறைவில்லாத அன்பு நிறைந்த வாழ்வை அடைய முடியும்; அவள் மறைந்தால் அந்த அளவுக்குப் பாசம் காட்டுவோர் யார் உளர்?''

    —(வே.பா.50) என்று வருந்திச் சொல்லும் பாடலால் அறியலாம்.
35. பூர்ணயாச்சார்லு, ஆர்., வே. சு. ர. பக். 5.
36. வங்கூரி சுப்பாராவ், வேமன, பக். 95.
37. இரா. அ. கி. ச., வேமன, பக். 22.
38. இரா. அ. கி. ச., வேமன, பக். 23-24.

39. இரா. அ. கி. ச., வேமன, பக். 25.

40. "ஊரு கொண்டவீடு உனிகி பச்சிமவீதி
மூக சிந்தபல்லெ மொதடி இல்லு
எட்டிரெட்டி குலமதேதனி தெல்புது-விஸ்வ"
—பே. பா. 940

41. வேமன-பார்ச்சாயத்துலு - பக். 124.

42. வாவிள்ள, வேமன பத்தியமுலு, பக். 54.

43. இரா. அ.கி.ச. வேமன, பக். 28.

44. ஆருத்ர, சமக்ர ஆந்திர சாயித்யமு, பக். 67.

45. காமேஸ்வரராவ், பூர்வாந்திர கவுலு, பாகம்-37, பக். 38.

46. பிரஜாகவி வேமனயோகி, பக். 12.

47. இரா. அ. கி. ச. வேமன, பக். 23.

48. *Vemana - through Western eyes*, p. 21.

49. *Vemana - through Western eycs* p. 52.

50. சர்வக்ஞ வேமன, பக். 19.

51. வே. ப. ர. 89, 525.

52. வே. ப. ர. 89, 525.

53. வே. ப. ர. 235, 1134.

54. வே. ப. ர. 283.

55. வே. ப. ர. 489.

56. வே. ப. ர. 534.

57. வே. ப. ர. 791.

58. வே. ப. ர. 310.

59. வே. சூ. ர. 2302.

60. கவித்வ தத்துவ விசாரமு, பக். 10, 11.

61. வே. சூ. ர. 995.

62. வே. ப. ர. 7.

63. வே. ப. ர. 1040, 2041, 2185, 1850.

64. காமி காணிவாடு கவிகாடு ரவிகாடு
காமிகாக மோட்ச காமிகாடு
காமி அய்யின வாடே கவி அவ்வுனு
ரவி அவ்வுனு.

65. நார்ல, வி. ஆர்., வேமன, பக். 38-39.

66. வே. ப. ர., 2247.

67. *Vemana - through Western eyes, p. 17, 52, 40, 43.*

68. வேமன யோகிந்திர சரித்திரமு, பக். 12.

69. வ. சு. வேமன, 37-42

70. இரா. அ. கி.ச., வேமன, பக். 20-25.

71. பண்டாரு தம்மய்ய, வேமன, சரித்திரம், பக். 21.

72. வ. சு., வேமன, பக். 37-42.

73. இரா. அ. கி. ச., வேமன, பக். 20-25.

74. பூர்வாந்திர கவுலு, பக். 40.

75. சர்வஞ்ன வேமன, பக். 12.

76. வே. சு. ர. 1304.

77. பிரஜாகவி வேமன யோகி, பக். 13.

## இயல்—2

# நூலமைப்பு : திருவள்ளுவர், வேமனர் பாடல்கள்

## திருக்குறள் நூல் அமைப்புமுறை

*1-0* பண்டை நாளில் பெருவழக்காய் இருந்த நால்வகைப் பாவினுள்ளும், வள்ளுவர் தம்முடைய கருத்துக்களை வெளியிடக் கருவியாகக் கொண்டது, வெண்பா வகைகளுள் ஒன்றான குறட்பா வகையாகும். சுருங்கிய சொற்களால், அரும்பொருள்களை எளிதில் எடுத்துக்கூறும் தன்மை குறட்பாவுக்கு இருப்பதாலும், நினைவுகூர்வது எளிதாகையாலும், குறட்பாவை முன்னாளில் புலவர் பலர் இலக்கணம், நிகண்டு முதலியவற்றிற்கு மேற்கோளாகக் காட்டியது இயல்பே.[1] வள்ளுவரும் சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதற்கு ஏற்புடையதாக இப்பாவகையை மேற்கொண்டார் எனலாம்.

## 1-1 நூற் பெயர்

*1-1-1* ''திருக்குறள்' என்று இன்று வழங்கும் பெயர் யாப்புக் காரணமாக அமைந்தது. முன்பு இதற்கு 'அறம்' என்ற பெயரே வழங்கியிருக்க வேண்டும்; எனவே 'திருவாசகம்' என்பது போலத் 'திருஅறம்' என்று வழங்கலாம்'' என்று கருதுகிறார் வ. சுப. மாணிக்கம் அவர்கள்.[2] திருக்குறளின் அமைப்புமுறையை ஆராய்ந்த மு. சண்முகம் பிள்ளை அவர்கள், ''ஆசிரியர் திருவள்ளுவர் திருக்குறளுக்கு இட்ட பெயர் 'முப்பால்' என்றும், 'குறள்' என்னும் பாட்டுவகையினால் நூலை ஆக்கியிருப்பதால், 'குறள்' என்பது கருவியாகுபெயராய் இவருடைய நூலுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், 'திரு' என்பது இந்நூலின் சிறப்புக் கருதி வரும் அடைமொழியாகும்'' என்றும் கூறுகிறார்.[3]

*1-1-2* எனவே, 'முப்பால்' என்ற சொல் பல இடங்களில் திருக்குறளைக் குறிக்கும் வகையில் எடுத்தாளப்படுவதால்,[4] தக்க சான்றுகள் கிடைக்கும்வரை, 'முப்பால்' என்பதே திருக்குறளுக்கு வள்ளுவர் இட்ட பெயராய் இருக்கவேண்டும் என்றும், நாள்படக் காரணவகையில் குறட்பாவினாலாகிய பெருநூல் திருக்குறளைத் தவிர வேறு ஒரு நூல் முன்பு இல்லையாதலால், 'குறள்' என்ற பெயரும், 'திரு' என்ற சிறப்பு அடைமொழியும் சேர்ந்து 'திருக்குறள்' என்று வழங்கி இருக்கலாம் என்றும் கொள்ளலாம்.

## 1-2 நூல் பாகுபாடு

*1-2-1* இந்நூலின் பெரும்பிரிவு 'பால்' என்றும், சிறுபிரிவு 'இயல்' என்றும், அதனிற் சிறுபிரிவு 'அதிகாரம்' என்றும் அமைக்கப்பட்டுள்ளன. வள்ளுவர் தம் கோட்பாடுகளை உணர்த்தும் நூலை மூன்று பெரும்பிரிவுகளாக அறத்துப்பால், பொருட்பால், காமத்து பால் என்று அமைத்தார். இந்த முப்பெரும் பிரிவுகள் எங்ஙனம் ஏற்பட்டன என்பது வினா. திருவள்ளுவர் தாமாகவே இப் பிரிவுகளைக் கொண்டாரா, முன்னோர்வழி போற்றினரா, இவ்விரு வழியுமின்றி உரையாசிரியர்களால் இப் பாகுபாடு கொள்ளப்பட்டதா என்பனவற்றை ஆய்ந்து அறிதல் வேண்டும்.

*1-2-2* மக்களுக்கு வேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு என்பது நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் ஒரு கொள்கை. வடமொழியில் இவற்றைத் தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என்று வழங்குவர். இந்த நான்கில் "வீடு என்பது, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப் படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்" என்று பரிமேலழகர் தம் பாயிர உரையில் குறித்துள்ளார்.[5] எனவே, வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் வீட்டை அடக்கிக் கூறினர் என்று தெளிய இடமுண்டு. முப்பாலில் நாற்பாலை மொழிந்ததாகத் திருவள்ளுவமாலையும் செப்புகிறது.[6] தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரையில் நச்சினர்க்கினியரும் பரிமேலழகர் கருத்தை ஒத்தே வள்ளுவரின் கோட்பாட்டை விளக்கியுள்ளார். அதாவது முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலாகிய கோட்பாட்டை விளக்கி யுள்ளார்.[7] திருக்குறள் உரையாசிரியர்களில் ஒருவராகிய பரிப்பெருமாள், 'வீடாவது அறம்செய்வாரது பயன் ஆகலின், அவ் வீடுபேற்றை அறத்தினுள் அடக்கி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்றார்' என்று தம் உரை நூலின் தொடக்கத்தே

கூறியுள்ளார்.[8] மற்றும், அறம், பொருள் இரண்டையும் புறமாக வும், இன்பத்தை அகமாகவும் பழந்தமிழர் மரபாகக் கொண் டனர். திரு. வி. க. அவர்களும்,

"அறம், பொருள், இன்பம் வழிநின்று ஒழுகினல்
விளைவது வீடாகும்"[9]

என்று கூறுகிருர். புறநானூற்றிலும் தொல்காப்பியத்திலும் வரும் தொடர்களிலும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பிரிவுகளைக் காணலாம்.[10] எனவே, வள்ளுவர் ஆன்ருேர் மரபின்வழித் தம் நூலை முப்பாலாகப் பிரித்திருக்கலாம் என்று துணியலாம். குறட்பா விலேயே அறன், பொருள், இன்பம் என்ற முப்பாகுபாட்டைக் காணலாம்.[11]

*1-2-3* பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்துரைக்கும் 'நாலடி நான்மணி' என்று தொடங்கும் பழைய செய்யுளில், 'முப்பால்' என்று திருக்குறள் குறிக்கப்பெற்றுள்ளது.[12] திருவள்ளுவ மாலையில் 'முப்பால்' என்னும் பெயர் வழக்கே மிகுதியாய் உள்ளது.[13] உரையாசிரியர் பரிமேலழகர், திருவள்ளுவர் முப்பால் பாகுபாட்டை வடநூல் வழக்குப் பற்றிக் கொண்டதாகக் கூறுகிருர்.[14] ஆனல் தமிழ் இலக்கியங்களிலேயே இந்த 'முப்பால்' பகுப்பு இருப்பதை முன்பு காட்டியுள்ள சான்றுகளால் அறியலாம். திரு. வ. சுப. மாணிக்கம், "திருக்குறளில் காணப்படும் முப்பால் பாகுபாடு சங்க மரபே ஆகும்; பரிமேலழகர் கூறுவது போன்று வடநூல் வழக்குப்பற்றி வந்ததன்று' என்று பரிமேலழகர் கருத்தை மறுத்து, அறம், பொருள், இன்பம் என்னும் பாகுபாடு தொல்காப்பியம் முதல் வழிவழி வந்ததாகும் என்று முடிவு கொள்கிருர்.[15] மேற்குறிப்பிட்ட சான்றுகளாலும், திருக்குறள் உரை யாசிரியர்களிடையே இயல் பாகுபாட்டில் இருப்பதுபோன்று, பால் பாகுபாட்டில் யாதொரு வேறுபாடும் இன்மையானும், முன்ஞேர் மரபின்வழி ஆசிரியர் திருவள்ளுவர் முப்பால் பகுப்பைத் தாமே கொண்டார் என்று துணிந்து கூறுவதற்கு வாய்ப்புண்டு. நூலுக்குப் பெயரும் முதன்முதலில் 'முப்பால்' என்றே இருந்திருக்க வேண்டும்; பின்பு காரணவகையால் 'குறள்' என்றும், 'திரு' என்ற சிறப்பு அடைமொழியோடு 'திருக்குறள்' என்ற பெயர் வந்திருக்கலாம் என்றும் ஒரு முடிவுக்கு வரலாம்; அதே நேரத்தில் ஆசிரியர் திருவள்ளுவரே 'திருக்குறள்' என்ற பெயரைச் சூட்டியிருக்கலாம்; நூல் முப்பாலாக அமைந்திருப்பதால் திருவள்ளுவமாலையிலும், மற்ற இடங்களிலும் 'முப்பால்' என்ற வழக்கு வந்திருக்கலாம் என்று எண்ணுவதற்கும் வாய்ப்புண்டு.

## 1. 3 முப்பால் வைப்புமுறை

*1-3-1* திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்று வள்ளுவர் கொண்ட முறைப் பாகுபாட்டின் நோக்கம் இதுவாய் இருக்குமென உணர்ந்து கூறியிருக்கிறார்கள்.

*1-3-2* பரிமேலழகர், 'அறத்தின்வழி ஒழுகிப் பொருள்தேடி இன்பம் துய்த்தலே வாழ்க்கை முறையாதலின், வள்ளுவர் அம் முறையில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பகுத்தார்' என்று கொண்டிருக்கிறார்.

*1-3-3* பரிப்பெருமாள், "அறமானது அறம் முதலாகிய நான்கினையும் பயத்தலின் வள்ளுவர் அறத்துப்பாலை முற்படக் கூறினர்; பொருளானது வீடொழிந்த மூன்றினையும் பயத்தலின் அதன்பின் கூறினர்; காமத்துப்பாலின் உரைத் தொடக்கத்தே, 'காமத்துப்பாலானது மைந்தர்க்கும் மகளிருக்கும் கலவியானுய இன்பப்பகுதி கூறுதல்; அஃது யாங்ஙனம் கூறினர் எனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்வதற்கு இடம் கன்னியரும், கணிகையரும், பிறர் தாரமும் என மூவகையல்லது இல்லை; அவற்றுள் பிறர்மனைக் கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப்பாலுள் கூறினர்; கணிகையர் கூட்டம் பொருட்கேடுதரும் என்று பொருட் பாலுள் கூறினர்; ஆதலின் அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் என்று அது ஈண்டு கூறப் பெற்றதென்க" என்று கூறியுள்ளார்.[16]

*1-3-4* 'நாலடியார்' பாடலொன்றில்[17] பொருட்பால் நடு நாயகமாக அமைத்துப் பாடப்பட்டுள்ளது. இவற்றால் அறம், பொருள், இன்பம் என்று வள்ளுவர் கொண்ட முறைக்குக் காரணத்தை ஓரளவுக்கு அறியலாம். முப்பால் வைப்பு முறையி லும் வள்ளுவர் முன்னோர் பொது வாழ்வு மரபையே மேற் கொண்டார் என்று துணிவதற்குச் சான்றுகள் உண்டு.[18] அகவாழ்வு இன்பத்தை முதலாகக் கொண்டதாகலின், தொல் காப்பியர் சிறப்புநோக்கி இன்பத்தை முற்கூறினர் என்க. இந்த வைப்புமுறையைத் தலைகீழாக்குகிறார் டாக்டர் மு. வ. அவர்கள். காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் எனக்கொண்டு மனித உயிர் முயற்சிக்கு ஏற்பப் புத்துரை வழங்குகிறார்.

*1-3-5* காமத்துப் பாலில், காதலர் இருவர் இன்பமும் துன்பமும் உற்றுப் பண்படுவதே தனிக்கல்வியாகும். உணர்வும், அறிவும் பண்பட்டு ஒத்த வளர்ச்சிபெற்று நல்வாழ்வு வாழக்

கூடியவகையில் காதல் அவர்களுக்குப் பயிற்சி நல்குகிறது; இந்தப் பயிற்சி பெற்ருல்தான் இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைய வாழ்க்கையாக வளர்ந்தோங்க முடியும்; இங்ஙனம் இவர்களுக்கு காதல் கற்பிக்கும் இப் பண்பாடே அறத்துப்பாலில் காணும் அனைத்து அறங்களுக்கும் அடிப்படையாகும். இத்தகைய காதல் வாழ்க்கை சிறப்படைய வேண்டுமாஞல் நாடு நல்லவகையில் அமைந்திருக்க வேண்டும்; நாடு நல்ல முறையில் அமைந்திருக்கத் தேவையானவற்றை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். எனவே, காதலர்க்கு நற்பண்பு கற்பிக்கும் காமத்துப்பாலை முதலிலும். அன்னாரின் சிறந்த வாழ்க்கைக்குக் காரணமாய் உள்ள நல்ல நாட்டுக்குத் தேவையானவற்றைக் கூறும் பொருட் பாலை அதற்கு அடுத்தும், இவ்விரண்டால் வரும் வாழ்க்கையின் உயிர்நிலை ஆகிய அறத்தைப் பற்றிய கருத்துக்களை மூன்ருவ தாகவுங் கொண்டார் ஆசிரியர் மு. வ. அவர்கள்.[19] திருவள்ளுவ மாலையில் வரும் பாடலும் மு. வ. வின் கருத்துக்குத் துணை செய்கிறது.[20] மற்றும் தொல்காப்பிய நூற்பாவும் சிறப்புநோக்கி முறைமாறி அமைந்திருப்பினும் இக்கருத்துக்கு அடிப்படையாய் நிற்கிறது.[21]

## இன்பப்பாலா? காமத்துப்பாலா?

*1-3-6* அறம், பொருள், இன்பம் என்ற முறைப்படி மூன்ரும் பாலை 'இன்பத்துப்பால்' என்றுதானே வள்ளுவர் கொண்டிருக்க வேண்டும். 'காமத்துப்பால்' என்ற பெயர் ஏன் அமைந்துள்ளது என்பது விஞ. இதற்கு உரையாசிரியர் பரிமேலழகர் காரணங் கூறுங்கால், "ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை; ஆகையால் வள்ளுவர் மூன்ரும் பாலைக் 'காமத்துப்பால்' 'எனக் கொண்டார்" என்று கூறுகிருர்.[22]

> "இன்பத்திற்கு முதற்காரணமாக அமைவது இச்சையாகிய
> காமமேயாதலின் இதற்குக் காமத்துப்பால் என்று
> கொள்ளுதலே பொருத்தமாகும்"[23]

என்று கூறுகிருர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள். 'ஊடல், உணர்தல், புணர்தல், இவை காமம் கூடியார் பெற்ற பயன்'[24] என்பதால், இன்பம் விளைக்கும் காமமே இங்கு முதன்மை பெறுதல் விளங்கும்.

*1-3-7* அறம், பொருள், இன்பம் என்ற முறையில் சொல்லும் பொழுது, 'இன்பம்' என்ற சொல் இனம் பற்றிக் காமம் என்பதைக் குறிக்கும். இவ்வாறின்றித் தனியே இன்பம் என்ற சொல் ஆளப்படின், அது துன்பத்திற்கு மறுதலையானது என்ற பொருளையே கொடுத்து நிற்கும். வள்ளுவரும் இன்பம் என்ற சொல்லைக் 'காமம்' என்ற பொருளில் வழங்காது, துன்பத்திற்கு மறுதலையான பொருளிலேயே வழங்கியுள்ளார்.[25] காமத்தைக் குறிக்க வேண்டிய இடங்களில் 'காமம்' என்ற சொல்லையே ஆண்டுள்ளார்.[26] வள்ளுவருக்கு முன்பே தொல்காப்பியரும் 'காமம்' என்ற சொல்லை ஆண்டுள்ளார்.[27] குறுந்தொகைப் பாடலிலும் 'காமம்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது.[28] எனவே சான்றுகளை எல்லாம் பார்க்கக் 'காமத்துப்பால்' என்ற பெயர் வள்ளுவராலேயே அமைக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம். 'அறம், பொருள், இன்பம்' என்ற வரிசையில் காமத்தைக் குறிக்க 'இன்பம்' என்ற சொல் இடங்கொண்டது தொன்று தொட்டு வந்த மரபாகும்.

*1-3-8* இந்தக் காமத்துப்பால் மற்ற இரு பால்களினும் வேறுபட்டுள்ளது. அறத்துப்பாலினும் திருவள்ளுவர் தம் காலத்து வழங்கிய பல அறநூல்களின் கருத்துக்களை உணர்ந்து தேவை யானவற்றை எடுத்தாண்டுள்ளார். காமத்துப்பாலில் 'தமிழருக் கென்றே அமைந்த தனிமுறையைத் தழுவிப் புதிய அமைப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்; அதாவது, அகப்பொருள் இலக்கணங்களை உள்ளீடாகக் கொண்ட இலக்கியமாக, கூற்று வகைகளாய் அமைந்த பாடல்களின் தொகுதியாக, பொருளால் ஒருவகைத் தொடர்புபெற்ற காதற்கதையாக அமைத்துள்ளார்.

## 1-4 இயல் பாகுபாடு

*1-4-1* 'பால்' என்னும் பெரும்பகுப்பின் உட்பிரிவாக 'இயல்' என்னும் சிறு பகுப்பு உரைகாரர் முதலியோரால் கொள்ளப் பட்டுள்ளது. இந்த இயல்பகுப்பில் திருக்குறளுக்கு உரையெழுதிய உரையாசிரியர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது; ஆகவே இயல் பாகுபாட்டை நூல் ஆசிரியர் கொள்ளவில்லை; உரையாசிரியர்களே கொண்டனர் என்று துணிய வாய்ப்புண்டு.

### அறத்துப்பால் இயல் பாகுபாடு

*1-4-2* பரிமேலழகர், அறத்துப்பாலை 'இல்லறம்', 'துறவறம்' என இரண்டு இயல்களாகப் பகுத்தார். இல்லறவியலின் முதல் நான்கு அதிகாரங்களை (கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்

பெருமை, அறன் வலியுறுத்தல்) இவர் 'பாயிரம்' என்று கொண்டார். இவற்றோடு இல்லறவியலில் 24 அதிகாரங்களும், துறவறவியலில் 14 அதிகாரங்களுமாக மொத்தம் அறத்துப்பாலில் 38 அதிகாரங்களைக் கொண்டார். காளிங்கரும், பரிப்பெருமாளும் இம்முறையையே கொண்டனர். உரைகாரர் காளிங்கரின் அறத்துப் பால் உரைமுடிவில் காணும் பாடலால், அவர், பாயிரம்—4, இல்லறம்—20, துறவறம்—13, ஊழ்—1, ஆக மொத்தம் 38 அதிகாரங்களாகக் கொண்டதாகத் தெரிகிறது.[29] பரிப்பெருமாள் உரையின் தோற்றுவாய்ப் பகுதியில் "கடவுள் வாழ்த்தும், வான் சிறப்பும், நீத்தார் பெருமையும், அறன் வலியுறுத்தலும் ஓரோரதி காரமாகவும், இல்வாழ்க்கை முதலாகப் புகழ் ஈறாக இல்லறம் 20 அதிகாரங்களாகவும், அருளுடைமை முதலாக அவாவறுத்தல் ஈறாகத் துறவறம் பதின்மூன்று அதிகாரங்களாகவும், ஊழ் ஒரு அதிகாரமாகவும், ஆக முற்பட முப்பத்தெட்டு அதிகாரங்கள் கூறப்பட்டன"[30] என்று கூறியிருப்பதும் மேற்கருத்தை வலி யுறுத்தும்.

**1-4-3** இதனுள் 'ஊழ்' என்னும் அதிகாரம் தனிப்பட அமைந் திருப்பினும், அதனைத் தனியியலாகக் கொள்ளல் சிறப்புடைத் தன்று; அறத்துப்பாலில் சேர்த்தலே சிறப்புடைத்து. இதுவே அறிஞர் பலருக்கும் ஒத்த கருத்தாகும்.

## பாயிரம் கடவுள் வாழ்த்தா?

**1-4-4** திருக்குறளின் பாயிரமாக விளங்கும் நான்கு அதிகாரங் களையும், சிலர் அறத்துப்பாலின் அங்கமாகவும்,[31] வேறு சிலர் அறத்துப்பாலுக்குப் புறம்பாகவும் கொள்வர்.[32] 'தெய்வ வணக்க மும் செயப்படு பொருளும் எய்த உரைப்பது தற்சிறப்பாகும்' என்பது தற்சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்.[33] திருக்குறளின் பாயிரம் தற்சிறப்புப் பாயிரம் ஆயின் முன் குறிப்பிட்ட இலக் கணத்தின்படி அமைந்திருக்க வேண்டும். இந்நோக்கில் பார்க்கும் பொழுது 'கடவுள் வாழ்த்து' அதிகாரமாகிய தெய்வவணக்கமும், அறன் வலியுறுத்தலாகிய செயப்படுபொருளும் எய்த உரைத் தலின் இது தற்சிறப்பு ஆகும் என்பது தண்டபாணி தேசிகர் கருத்து.[34]

**1-4-5** ஆயினும் இந்நூல் கடவுள் வாழ்த்திற்கும் ஏனைய நூல்களின் கடவுள் வாழ்த்திற்கும் வேறுபாடு உண்டு. ஏனைய நூல்களில் எடுத்துக் கொண்ட நூல் இனிது நிறைவேறுவதற்கும், நின்று நிலவுவதற்கும் கவிஞர் கடவுளை வாழ்த்துவர். ஆனால்

இந்நூலில் அவ்வாறின்றிக் கடவுளின் பொதுவியல்பும், சிறப்பியல் பும் கூறி, அவரை வாழ்த்துதல் கற்றறிந்த மாந்தரின்கடன் என்று கூறப்பட்டுள்ளது.

*1-4-6* கடவுள் வாழ்த்தை அடுத்து வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் இடம் பெற்றுள்ளன. தொல்காப் பியத்தில் பாடாண்திணைப் பகுதியாக, 'அமரர்கண் முடியும், அறு வகையானும்'[35] என்னும் சூத்திரத்து, தெய்வங்களில் சிறந்தாரை வாழ்த்துதலும், நிறைமொழி மாந்தர், உயர்ந்த அந்தணர், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகம் இவற்றை வாழ்த்து தலாகிய அறுமுறை வாழ்த்துக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தெய்வவாழ்த்து கடவுள் வாழ்த்திலும், நிறைமொழி மாந்தர், அந்தணர் வாழ்த்துக்கள் நீத்தார் பெருமையிலும், மழை வாழ்த்து வான்சிறப்பிலும் அமைக்கப் பெற்றுள்ளன என்பர்.[36] அறன் வலியுறுத்தலையும் தெய்வ வாழ்த்தாகக் காட்டுவர் மு. இராகவையங்கார் அவர்கள்.

*1-4-7* "கொடிநிலை கந்தழி வள்ளி என்னும் வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"[37] என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இணங்கத் திருக் குறள் பாயிரம் அமைந்ததாகவும் கொள்ளும் கருத்துண்டு. 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்பதால் கடவுள் வாழ்த்து முதலில் வரத்தக்கதென்றும், அதற்கடுத்து கொடிநிலை மேகத்தைக் குறிப்பதால் வான்சிறப்பு அதிகாரமாகவும், வள்ளி அறம் என்பதால் அறன் வலியுறுத்தல் அதிகாரமாகவும் அமைந்த தாகவும் கருத்துண்டு.

*1-4-8* கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை. எனும் மூன்று அதிகாரங்களும் கடவுள் வாழ்த்தாகவும், அறன் வலியுறுத்தல் திருக்குறளுக்கு முகவுரையாகவும் கொண்டு, நூல் முழுவதும் அறமே உரைக்கப்படுகிறது என்றும் கூறும் கருத்துண்டு.[38] இவ்வாறு வெவ்வேறான கருத்துக்கள் இருந்து வருகின்றன.

*1-4-9* 'பாயிரம் வள்ளுவர் இயற்றியதல்ல; பிறரால் பாடப் பெற்றுப் பின்னர் சேர்க்கப்பட்டது' என்ற கருத்துமுண்டு.[39] இது பொருந்தாத கருத்து. திருவள்ளுவமாலையில் "ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பாயிரத்தினோடுபகர்ந்ததற்பின் போய் ஒருத்தர் வாய்க் கேட்க நூலுளவோ"[40] என்ற பாடலிலுள்ள 'ஆயிரத்து முந்நூற்று முப்பது' என்ற எண்ணிக்கை பாயிரம் வள்ளுவர் செய்ததே என்பதைக் காட்டுகிறது. மற்றும் திருக்குறளிலுள்ள முதற்குறள் 'அ' எழுத்தோடு தொடங்கி

இறுதிக் குறள் 'ன்' மெய்யோடு முடியும் பாங்கும் *1330* பாடல்களையும் வள்ளுவரே பாடினுர் என்பதை உணர்த்துகிறது. ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் தக்க காரணங்கள் காட்டி, பாயிரம் வள்ளுவராலேயே எழுதப்பெற்றது என்று துணியலாம் என்று கூறுகிறுர்.[41]

## பொருட்பால் இயல் பாகுபாடு

*1-4-10* மணக்குடவர் அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பியல், குடியியல் என அறுவகையாகப் பொருட்பால் அதிகாரங்களைக் கொள்கிறுர். இதற்கு ஆதாரமாகப் பாடல் ஒன்றும் காணக்கிடைக்கவில்லை. செந்தமிழ்ப் பத்திரிகையில், பொருட்பால் பகுதி *70* அதிகாரங்களும் அறுவகைப் பகுப்பாக ஒருசாரார் கூறுவர் என்ற கருத்துண்டு.[42]

*1-4-11* காளிங்கர் பொருட்பாலை ஏழு இயல்களாகக் கொள்கிறுர்; பரிமேலழகர் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று இயல்களாகப் பகுத்துள்ளார்.

## காமத்துப்பால் இயல் பாகுபாடு

*1-4-12* காமத்துப்பாலை மூன்று பகுதிகளாக்கிக் கூறுகிறது திருவள்ளுவமாலைப் பாடலொன்று.[43] இந்தப் பாடல், காளிங்கர் தம் உரையில் கொள்ளுகின்ற 1. தலைமகள் கூற்று, 2. தலைமகள் கூற்று, 3. இருபாற்கிளவி என்னும் முப்பிரிவுகளுக்கு அடிப்படையாய் நிற்கிறது. மணக்குடவர், காமத்துப்பாலில், தம் உரை முன்னுரையில், அருமையிற்கூடலும் அதற்கு நிமித்தமும், பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும், ஊடிக்கூடலும் அதற்கு நிமித்தமும் என முப்பகுதிகளாகக் கொள்கிறுர்.

*1-4-13* பரிமேலழகர் களவு, கற்பு என்னும் இரண்டே பகுதிகளில் காமத்துப்பாலை அடக்கியுள்ளார். களவு, கற்பு என்று பரிமேலழகர் கொள்ளும் பகுப்புத் தமிழ் அகத்திணை மரபிற்கேற்றதாய்ப் பொருத்தமுடையதாய்த் தோன்றுகிறது.

## 1-5 அதிகாரப் பகுப்பு முறை

*1-5-1* அதிகாரப் பெயர்களிலும், அவற்றின் அடைவிலும் பெரும் மாறுதல் இன்றி எல்லா உரையாசிரியர்களும் ஒருபடித்தாகக் கொண்டிருப்பதால், அதிகாரப் பெயர்களும், அதிகார வைப்பு முறையும் ஆசிரியரால் தரப்பட்டவை என்று துணிய இடமுண்டு. திருவள்ளுவமாலைப் பாடலொன்றின்படி[44]

திருவள்ளுவர்தம் நூலை 133 அதிகாரங்களாகப் பகுத்தார் என்பது தெரிய வருகிறது.

## 1-6 அதிகாரப் பெயர் வைப்பு முறை

*1-6-0* திருக்குறள் அதிகாரப் பெயர் வைப்பு முறையைத் தெரிந்துகொள்ள, உரையாசிரியர்களின் உரைகள் நன்கு பயன்படுகின்றன.

*1-6-1* இப்பொழுது நமக்குக் கிடைக்கும் உரைகளுள், காளிங்கர் உரையிலும், பரிமேலழகர் உரையிலும் அதிகார அடைவிற்குரிய காரணங்களை முறையாகக் காணலாம். காளிங்கர் ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதிக்குறளின் உரை முடிந்ததும், அடுத்த அதிகாரத்திேனாடு அதற்குரிய தொடர்பினை விளக்குகிறார். பரிமேலழகர் ஒவ்வோர் அதிகாரத்தின் முதலில், அடுத்த அதிகாரத்துக்குரிய தொடர்பினை விளக்கி இருக்கிறார். இவ்விருவரும் ஆசிரியர் திருவள்ளுவர் உள்ளம் இதுவாக இருக்கவேண்டும் என்று தம் கூர்த்த மதியினால் ஆராய்ந்து அமைதி கூறுகின்றனர்.

## 1-7 அதிகாரப் பெயர்கள்

*1-7-1* சிற்சில அதிகாரங்களின் பெயர்களாய் வரும் சொல் தொடர்கள் ஒரு சில பாடல்களில் இடம்பெற்றுள்ளன. வேறு சில அதிகாரங்களில் அதிகாரப் பெயரோடு அப் பொருள்தரும் வேறு பெயர்களும் பாடல்களிலே இடம்பெற்றுள்ளன. அதிகாரப் பெயர்கள் எல்லாருக்கும் எளிதில் விளங்கும்படியாய் உள்ளன. அந்தந்த அதிகாரங்களின் பொருள் தெள்ளிதின் புலப்படக் கட்டுரைச் சுவையோடு அதிகாரங்களை ஆசிரியர் அமைத்துள்ளார் என்று கருதலாம். தள்ளவேண்டிய கருத்துக்களை எதிர்மறைப் பெயருள்ள அதிகாரங்களாலும், கொள்ளவேண்டிய கருத்துடைய பாடல்களை உடன்பாட்டு வகையாலும் கூறியிருக்கின்ற போக்கு அதிகாரப் பெயர்களை ஊன்றிப் பார்க்கத் தெரிய வருகிறது.

## 1-8 பத்துக் குறள் முறை

*1-8-1* ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துப்பத்துக் குறளாக அமைத்து இந்நூலை இயற்றியிருக்கிறார் திருவள்ளுவர். ஒரு பொருளைப்பற்றிப் பத்துப் பத்தாகப் பாடுவது இலக்கியங்களில் தொன்றுதொட்டு வந்த மரபே ஆகும். சங்கநூல் வரிசையில் ஒன்றாகிய ஐங்குறுநூறு, சிறு பாடல்கள் பத்து கொண்டது. பத்துப் பாட்டு பத்து நெடும் பாடல்கள் அமைந்த தொகுதி. பத்து என்ற

தொகை, இயற்கையாக அமைந்த ஒரு தொகை. திருவள்ளுவர், தாமாகப் பத்து என்ற வரையறை வைத்துக் கொண்டு, தாம் விளக்கக் கருதிய ஒவ்வொரு பொருளையும் பத்துப் பாடல்களில் விளக்கி உள்ளமையும், பத்தும் போதாவிடத்து, அதற்குத் தொடர்பான பெயரில் அதனை அடுத்து மற்றுமொரு அதிகாரத்தில் பத்துப் பாடல்களால் விளக்கியுள்ளமையும், சில பொருள்களை விளக்கும்பொழுது பத்துக்கும் குறைவாக ஒரு சில பாடல்களே போதுமாயினும் தான் கொண்ட பத்துப்பாடல்கள் வரையறைக் காகத் தொடர்ந்து அப்பொருளில் பாடல்கள் ஆக்கியுள்ளமையும் திருக்குறளைப் படிப்போர் நன்கு அறிவர். வேமனருக்கு இத்தகைய நெருக்கடி இல்லை.

*1-8-2* இத்தகைய வரையறையைக் கொண்டே திவ்வியப் பிரபந்தத்திலும் தேவாரத் திருமுறையிலும் உள்ள திருப்பதிகங்கள் அமைந்துள்ளன. இந்தத் திவ்வியப் பிரபந்தத்திலும், திருமுறை யிலும், திருக்கடைக் காப்பாக வரும் பாடல் பதிகத்தின் புறவுறுப்பாகக் கொள்ளப்படுகிறது. பிற்காலப் பிரபந்த நூல்களில் ஒரு பா ஒரு பஃது, பதிகம் என்பன பத்துப் பாடல்களை கொண்டு நடப்பவை.

*1-8-3* ஒவ்வோர் அதிகாரத்திலும் உள்ள பாடல்களை நோக்கும் பொழுது, அவ்வதிகாரத்திலுள்ள பாடல்களின் வைப்புமுறையைப் பற்றிக் கீழ்வரும் வகையில் நாம் தெளியலாம். மிக அரிய செய்திகளை வரையறைப் படுத்திச் சுருக்கமாகச் சொல்லுதலும், ஒரு பொருளைப்பற்றி விளக்குதற்கு முன்பு அப்பொருளின் இலக்கணம் கூறுதலும், அதன் இன்றியமை யாமையைக் கூறுதலும், நன்மை தீமை பலன் அறிவுறுத்தலும், மேற்கொள்ளக்கூடிய உபாயத்தை உரைத்தலும், உலகப் பொருளின் வாயிலாக உண்மையை நிறுவுதலும், உவமைகள் வாயிலாக உண்மையைப் புலப்படுத்தலும் ஆகிய வகையில் அமைந்திருப்பதை அறியலாம்.

இவற்றை எல்லாம் பார்க்கத் திருக்குறள் நூல் வள்ளுவரால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட பெருநூலாம் என்பது தெரிய வருகிறது.

## 2. வேமனர் பாடல்நூல் அமைப்புமுறை

*2-0* வேமனரின் பாடல்கள் அடங்கிய வெளியீடுகள் சில வெளிவந்துள்ளன. ஒவ்வொரு வெளியீட்டிலும் பாடல் எண்ணிக்கை வேறுபட்டுள்ளது. நூல் அமைப்பு முறையும்

வேறுபட்டுள்ளது. கருத்து அமைப்பிலும், நூல் அமைப்பிலும் வேமனர் திட்டமிட்டுப் பாடல்களைப் பாடி இருந்தால், இந்தச் சிக்கல் வந்திருக்காது. வள்ளுவரைப் போன்று திட்டமிட்ட வகையில் வேமனரின் போக்கு அமையவில்லை. மனத்துக்குத் தோன்றியவாறெல்லாம், எண்ணியவாறெல்லாம் அவ்வப்போது பாடல்களைப் பாடினர்; அதுவும் போகுமிடமெல்லாம் பாடினர். அப்படிப் பாடிய பாடல்களை அவர்தம் சீடர்கள் சேர்த்து வைத்தார்கள். காலப்போக்கில் அவர் பாடல்களில் சில கிடைக்காமல் போயின. நல்ல காலமாகப் பல கிடைத்தன. இதற்கிடையில் வேறு கவிஞர் பாடிய பாடல்கள் சில வேமனரின் பாடல்களைப் போலத் தோன்றின. எனவே, வேமனர் பாடல்களில் இடைச்செருகல்களும் ஏற்படலாயின. சிலர் வேண்டுமென்றே வேமனருக்கு இழிவுதரும் நோக்கில் தகாத சொற்களால் அமைந்த பாடல்களைத் தாமே பாடி வேமனர் பாடல்கள் என்று சொல்லலாயினர். எனவேதான், வேமனர் பாடல் வெளியீடுகள் பாடல்கள் எண்ணிக்கையிலும் நூல் பகுப்பிலும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இனி, இங்கு ஒவ்வொரு வெளியீடும் அமைந்த முறை விளக்கப்படுகிறது.

## தி வர்சஸ் ஆப் வேமன

2-1 சி.பி. பிரௌன் என்பவர், ஆங்கில நாட்டிலிருந்து வந்து, சென்னை குடிமுறைத்துறையில் பணியாற்றி வந்தார். வேமனர் பாடல்களின் பெருமையை முதன்முதலாக உணர்த்தியவர் இவரே. இவர் அரும் முயற்சி செய்து வேமனர் பாடல்களின் ஏட்டுப்படிகளைச் சேகரித்தார். அவற்றிற்கு ஆங்கிலத்தில் உரையும் எழுதினர். இவ்வாறு தான் சேகரித்து, ஆங்கிலத்தில் உரை எழுதி முடித்த 693 பாடல்களை, 1829ஆம் வருடம் முதன் முதலாக அச்சிட்டு வெளியிட்டார். இந்தப் பாடல்கள் மீண்டும் 1911ஆம் வருடம் வாவிள்ள நூல் வெளியீட்டாளரால் வெளியிடப்பெற்றன.

2-2 அடுத்து, அவற்றோடு மேலும் சில பாடல்களைச் சேர்த்து, மொத்தம் வேமனரின் 1169 பாடல்கள் கொண்ட (ஆங்கில உரையற்ற) நூலொன்று, 1839ஆம் வருடம் மீண்டும் சி.பி. பிரௌன் அவர்களால் வெளியிடப்பட்டது. எக்காரணத்தாலோ அந்நூல் இன்று எங்கும் காணக்கிடைக்கவில்லை. பொங்கோரே கோபால் ரெட்டி[45] அவர்களின் பெருமுயற்சியால் இன்று அது மீண்டும் அச்சாகி வருகிறது.

2-3 1892ஆம் வருடம், சென்னையில், சிவராம் பிரசாத் என்பவர் உரையோடு கூடிய, 100 பாடல்கள் கொண்ட நூலொன்று, 'தெய்வீகத் தன்மை பொருந்திய வேமன்ன யோகீஸ்வரர் திருவாய் மலர்ந்தருளிய தெலுங்கு பத்தியங்கள்' என்னும் பெயரில், தமிழில் வெளியாகியுள்ளது.

2-4 ஆந்திர மாகாண சாகித்திய அகாடமியார், சி.பி. பிரௌன் சேகரித்து ஆங்கிலத்தில் உரை எழுதிய பாடல்களோடு[46] சிலவற்றைச் சேர்த்து, 1215 பாடல்கள் கொண்ட நூலொன்றை 1967ஆம் வருடம் வெளியிட்டனர். இந்த நூல் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## 2. 4. 1. கவிசௌத்வமு

இதன்கீழ் நான்கு பாடல்கள் உள்ளன. முதல் இரு பாடல்கள் சிவபெருமானைப் பற்றியும், அடுத்த இரண்டு பாடல்கள் வேமனரின் பாடல்களைப் படிப்பதால் உண்டாகும் பயனைப் பற்றியும் பகர்கின்றன.

## 2. 4. 2. வேமன ஞானமார்க்கப் பாடல்கள்

267 பாடல்கள் இத் தலைப்பின்கீழ் உள்ளன. ஞானத்தைப் பெறுவதற்குரிய வழிவகைகளான மனத்தூய்மை, செயல் தூய்மை, தன்னுள்ளே இறைவன் உள்ளமை, அந்த இறைவனை அடையும் பற்றற்ற மனம் முதலிய செய்திகளை இந்த அமைப்பில் பார்க்கலாம்.

## 2. 4. 3. சில்லர பாகம்

இதில் 271லிருந்து 485 வரை மொத்தம் 215 பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்களில் புராணங்கள் கூறும் செய்திகள் பல உள்ளன. மற்றும் குருவின் இன்றியமையாமை, இல்வாழ்வான் பெறும் இடுக்கண்கள், ஊழின் வன்மை, அறத்தின் பயனையும் பாவத்தின் பயனையும் இப்பிறவியிலேயே காணலாம் என்பன போன்ற செய்திகள் கூறப்படுகின்றன.

## 2. 4. 4. உபபாகம்

இப்பகுதியில் 485லிருந்து 1215 வரை மொத்தம் 730 பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்களில் பெரும்பான்மையும் ஈகையைப் பற்றியும், சிறுபான்மை நிலையாமையைப் பற்றியும், செய்யும் வினையை இடன் அறிந்து செய்தல் வேண்டும் என்பதையும், உலோபிகளைப் பற்றி நகைச்சுவையோடு பேசுதலையும், தூயமனம்

ஒன்றுலேயே இறைவனை உணரலாம் என்பதைப் பற்றியும் அமைந்துள்ள பாடல்களைக் காணலாம். இந்த நான்கு பகுப்பிலுள்ள அனைத்துப் பாடல்களையும், ஒழுக்கம் (Moral), அங்கதம் (Satirical), மெய்யுணர்வு (Mystic) என்னும் மூவகையில் அடக்குகிறார் பிரௌன்.

## 2. 5. வேமன சூக்தி ரத்னாகரமு

ஆர். பூர்ணமாச்சாருலு என்பவர் உரையோடு இந்நூலை 1913 ஆம்ஆண்டு வெளியிட்டார். இன்று கிடைக்கும் நிலையில் இல்லை. இதனுள் 4035 பாடல்கள் உள்ளன.

## 2. 6. வேமன்ன பத்தியம்

2-6-1 தெலுங்கு ஒலியைத் தமிழ் எழுத்துக்களால் உணர்த்தும் 1000 வேமனர் பாடல்களைக் கொண்டது. சி. பி. பிரௌன் 1875ஆம் ஆண்டு வேமனரின் 700 பாடல்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதினார். அந்த 700 பாடல்களோடு மேலும் வேமனரின் 300 பாடல்களைச் சேர்த்துப் புதுவை நாராயணசுவாமி எழுதிய தமிழ் உரையோடு, எஸ். துரைசுவாமி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது. தமிழ் உரையோடு வெளிவந்த நூல்களில் இதுவே முதல் நூலாகும்.

2-6-2 பாடல்களின் பொருள் அடிப்படையில், ஒரே தன்மைத்தான கருத்துடைய பாடல்களை ஒவ்வொரு குழுவாக்கி, அக்குழுவிற்கு, அந்தக் குழுவிலுள்ள பாடற்பொருளின் அடிப்படையில் பேயரிட்டு, மொத்தம் 162 பகுப்புக்களாக வகைப்படுத்தி அமைத்துள்ளார் உரையாசிரியர்.

## 2. 7. வேமன ஞானமார்க்க பத்தியமுலு

2-7-1 இந்த நூல் 3002 பாடல்களைக் கொண்டது. முத்தியால நரசிம்மயோகி அவர்களால் அகர வரிசையில் அமைக்கப்பட்டு 1961 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. இந்த நூல், மூன்று வகையாய்ப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் வகையில் 2474 பாடல்கள் உள்ளன. இந்தப் பகுதியில் நீதியை அறிவுறுத்தும் பாடல்கள் அதிகம் உள்ளன; மடாதிபதிகளையும், செல்வர்களையும், உலோபிகளையும் எள்ளி நகையாடும் பாடல்களும், அரசியல் அறிவூட்டும் பாடல்களும் உள்ளன.

2-7-2 இரண்டாம் பகுதியில் 401 பாடல்கள் உள்ளன. இந்தப் பகுதியில்தான் நூலின் பெயருக்கேற்றவாறு ஞானத்தைப் பெறும் வழியை அறிவுறுத்தும் பாடல்கள் உள்ளன.

2-7-3 மூன்றும் பகுதியில் 126 பாடல்களே உள்ளன. இந்தப் பகுதியில் முன்னிரு பகுதிகளையும் படிப்பதால் வரும் பயனை அறிவுறுத்தும் பாடல்கள் உள்ளன.

2-8 நெடுனூரி கங்காதரம் என்பாரின் உரையோடு 1960 ஆம் ஆண்டு வெளியான 5010 பாடல்கள் அமைந்த (வேமன பத்தியமுலு) பதிப்பும், வாவிள்ள வாரி வெளியீடு போலவே அமைந்துள்ளது. ஆனால் இதன்கண் வேமனர் எழுதிய பாடல் களேயன்றி, வேறு பாடல்களும் அதிகம் இருப்பதாக எண்ண இட முண்டு. எனவேதான், இந்தப் பதிப்பில் பாடல்கள் எண்ணிக்கை அதிகமாயின.

2-9 வெறும் நீதிகளை மட்டும் அறிவுறுத்தும் 1116 வேமனர் பாடல்களை ஒன்றுகத் தொகுத்து கிருஷ்ணு புத்தகத்தார் ஒரு புத்தகத்தை 1961ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். அதற்கு வேமன நீதிபத்திய இரத்னுவளி என்று பெயரிட்டனர்.

2-10 மீர் மஹமத் அலிகான் என்பவர் வேமனர்பாடல்களில் ஈடுபட்டு, அவற்றில் சமூகத்துக்கு மிகவும் தேவையான 100 பாடல்களை ஆங்கிலத்துக்கு மாற்றி The musings of a mystic (மறைஞானி ஒருவனின் சிந்தனையோட்டங்கள்) என்ற பெயரில் 1966 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

## 2. 11. வேமன பத்திய இரத்னுகரமு

இந்தப் பதிப்பில் மொத்தம் 2504 பாடல்கள் உள்ளன. 'வேமனர் பாடல்கள்' என்று கொள்ளத்தக்க பாடல்களே இதன் கண் உள்ளன. 45 ஆண்டுகளுக்கு முன்பு வாவிள்ள நிலையத்தார் வெளியிட்ட நூல் இன்று கிடைக்காத காரணத்தால், அந்த நூலின் அடிப்படையில் இந்த நூல் வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலுக்குத் தெளிவுரை எழுதிய 'புலுசு வெங்கடரமணய்யா' என்பவர் இதனை 17 வகைகளாகப் பிரித்துள்ளார்.[47] இந்த 17 வகைப் பகுப்போடு முதலில் 'கடவுள் வாழ்த்து' என்ற தலைப்பில் நான்கு பாடல்கள் அமைந்திருக்கின்றன; முதற்பாடல் ஸ்ரீராமர் துதியைக் கொண்டுள்ளது; இரண்டு, மூன்று பாடல்கள் இன்பச் செல்வங்களுக்குக் காரணமாயும், முத்தேவருக்கும் மூல காரண மாயும் இலக்குமி உள்ளாள் என்று சொல்வனவாய் அமைந் துள்ளன. நான்காம் பாடல், பிரம்மன் துதியாக அமைந்தது. இத்தகைய அமைப்பில் இந்த நூல் அமைந்துள்ளது. இங்குக் குறிப்பிட்ட வெளியீடுகள் அனைத்திலும், ஒரு வெளியீட்டிலுள்ள பாடல்கள், மற்ருெரு வெளியீட்டில் சிலவும், பலவுமாக விரவி வந்திருக்கின்றன.

## 2. 12. பாடல் வகையும் அமைந்த முறையும்

*2-12-1* வேமனரின் பாடல்கள் சதக இலக்கிய வகையைச் சேர்ந்தவை என்பது பலர் கருத்து.[48] ஒவ்வொரு பாடலிலும் இறுதி அடியோ, அல்லது இறுதி அடியின் இறுதிச் சீரோ மகுடமாய் இருத்தல் தெலுங்குமொழிச் சதக இலக்கியத்தின் இயல்பாகும். வேமரின் பாடல்களில்,இறுதி அடி 'விஸ்வதாபிராமா வினுரவேமா' என்ற தொடர் மகுடமாய் இருப்பதால், இவை சதக இலக்கிய வகையைச் சேர்ந்தனவாகக் கொள்ளலாம். சாதாரணமாய்ச் சதக இலக்கியத்தில் நூறு பாடல்கள் இருத்தல் இயல்பு. சிறிது ஏறக்குறைவாகவும் இருக்கலாம். ஆனால் வேமனரின் பாடல்கள் அவ்வாறின்றி ஆயிரக்கணக்காய் இருக்கின்றன. எனவே வேமனர் பாடல்களைச் சதக இலக்கியப் போக்கில் அமைந்தவை யாகக் கொள்ளலாமேதவிரச் சதகஇலக்கியங்களில் ஒன்றாகக் கொள்வது பொருந்தாது.

*2-12-2* வேமனர் பாடல்கள் பெரும்பான்மையும் ஆட வெலதி என்னும் பாவகையால் அமைந்திருக்கின்றன. வேமனர் பாடல்களில் ஆடவெலதி வகையோடு, அருகி. தேடகீதலு, கந்தமுலு, சீசமுலு, மத்தகோசிலமுலு முதலிய பாவகைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

*2-12-3* ஆடவெலதி என்பது மிகவும் எளிமையான பாவகை யாகும். படிப்போர் எளிதில் புரிந்து கொள்ளலாம்; பாடுவோ ருக்கும் எளிமையாகும். அதனால்தான் இந்தப் பாவகையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் வேமனர். இந்த ஆடவெலதி பாவில் நான்கு அடிகள் இருக்கும்; முதல் அடியிலும், மூன்றாம் அடியிலும் வரிசையாய் முதல் மூன்று சூரிய கணங்களும், அடுத்து இரண்டு இந்திரகணங்களும் இருக்கும். இரண்டாம் அடியிலும், நான்காம் அடியிலும் ஐந்து சூரிய கணங்கள் முறையாய் இருக்கும். ஒவ்வொரு அடியிலும் முதல் சீரின் முதல் எழுத்தும், நான்காம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றியிருக்கும். இதனை 'யதி' என்று சொல்லுவர்.[50] இதுவே ஆடவெலதி பாவகை இலக்கண மாகும்.

## 2. 13. இடைச்செருகல் உண்டா?

அனேக பாடல்களில் பாடல்கள் போக்கிலும், கருத்திலும் பொருத்தம் காணப்படவில்லை. எடுத்தாண்டுள்ள சொற்களிலும் வேறுபாடு காணப்படுகிறது. சில பாடல்களில் மிகவும் அநாகரிக

மான சொற்கள் ஆளப்பட்டுள்ளன. வேமனர் பாடல் முழுதும் கொண்டு அமைந்துள்ள நூல்களிலுள்ள பாடல் எண்ணிக்கையும் வேறுபடுகின்றன. இந்த நேரத்தில் வேமனர் பாடல்களைப் படிக்கும் பொழுது அவற்றில் இடைச்செருகல் உண்டு என்றே சொல்லலாம்.

## 2. 14. கருத்துப் போக்கு

பக்தி முக்திகளை விவரித்தல், உலகத்தன்மையை விவரித்தல், தானம் தவம் முதலிய நற்செயல்களைப் பற்றிக் கூறுதல், பெண்களைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் பேசுதல், அறச்செய்திகளைக் கூறுதல், ஒழுக்கமற்றோரையும் உலோபிகளையும் இகழ்ந்தும் பழித்தும் பேசுதல் முதலியவை வேமனரின் பாடல்களில் காணப்படும் செய்திகளில் தலைமையாகத் தோன்றுகின்றன. இவர், சொல்வளத்தைக் காட்டிலும் கருத்து வளத்துக்கே அதிகம் இடங்கொடுத்தார்; வள்ளுவரிடத்துச் சொல்வளத்தையும், கருத்து வளத்தையும் காணலாம்.

## 2. 15. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்துப் பகுதி வெவ்வேறு தலைப்புக்களில், இரண்டு, மூன்று பாடல்களைக் கொண்டு, ஒவ்வொரு வெளியீட்டிலும் அமைந்துள்ளது. அத்துவைதப் போக்குடைய சித்தராக மதிக்கத்தக்க வேமனர் தனித்து ஒரு கடவுளை வாழ்த்திப் பாடுவதுபோல அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாக்களைச் செய்திருத்தல் கூடும் என்ற ஐயம் எழல் இயற்கையே. வேமனர் பாடல்களுக்கு உரை எழுதியவர்களோ அல்லது வெளியிட்டோரரோ சேர்த்த பாடல்களாய் இருக்கலாம், இக்கடவுள் வாழ்த்துப் பாடல்கள் என்று எண்ணுவதற்கும் வாய்ப்புண்டு.

## 2. 16. மகுடம்

*2-16-0* ‘விஸ்வதாபிராமா வினுரவேமா’ என்ற மகுடம் வேமனரின் ஒவ்வொரு பாடலிலும் நான்காவது அடியாக உள்ளது. வேமனர் இந்தத் தொடரை ஆண்டமைக்குப் பல கதைகள் சொல்லப்பட்டு வருகின்றன.

*2-16-1* விஸ்வதாபி(Visvathabi), விஸ்வதாபி (Visvadhabi), விஸ்வதாபி (Visvathobi) என்று மூன்று பாடங்கள் உள. இவற்றுள் விஸ்வதாபி (Visvathabi) என்னும் பாடமே பெருவழக்கில் இருக்கிறது. இதனை மூலபாடமாகவுங் கொண்டுள்ளனர். இச்

சொல்லுக்கு (1) விஸ்வதுடு—உலகத்தைக் கொடுக்கும் இறைவன். அபிராமுடு—அன்புக்குரியவன்; எனவே இறைவனின் அன்புக் குரியவன் என்றும், (2) வேமனர் வைத்துக் கொண்ட பரத்தை யாகிய ஒரு பெண்ணொருத்திக்கு 'விஸ்வத 'என்று பெயர் சூட்டி, அவளின் அன்புக்குரியவர் வேமனர் என்றும், (3) விஸ்வதுடு— சிவன், அபிராமுடு—அன்புக்குரியவன்; எனவே சிவனின் அன்புக் குரியவன் என்றும், வேறு வேறு பொருள்கள் சொல்லப்படு கின்றன.

2-16-2 இராள்ளப்பல்லி அனந்தகிருஷ்ண சர்ம, 'Visvathabi Rama' என்ற பாடத்தைக் கொண்டு, இறைவன் எல்லாம் தானாய் இருப்பதால் அவனின் அன்புக் குரியவன் என்று பொருள் கொள்கிறார்.[51]

2-16-3 இவையேயன்றி, விஸ்வதுடு—உலகத்தில் எல்லோ ரையும் கண்டித்தவன் (மறுத்துப் பேசியவன்); ஆகையால் வேமன எல்லோரின் அன்புக்குரியவன் என்றும் (அதாவது எல்லா மதத் தாரையும் வேமனர் இழித்துப் பேசுவதால், படிப்போர் தம்மைப் பழித்ததை மறந்து மற்ற மதத்தாரைப் பழித்ததாகக் கொள்வ தால் வேமனர் எல்லோரின் அன்புக்குரியவனாயினார்) பொருள் கொள்கின்றனர்.

2-16-4 இந்த மகுடத்தின் காரணமாக, ஆச்சாரி அபிராமய்ய என்பவருக்கு இலம்பிகா சிவயோகி தத்துவ மறைப் பொருளைப் போதிப்பதற்காக மறுநாள் அவரைத் தம்மிடம் வரு மாறு சொல்லிக் கொண்டிருந்தார். அதை மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த வேமனர் அபிராமய்யாவை மறைத்துத் தானே இலம்பிகா சிவயோகியிடம் சென்று தத்துவ மறைப் பொருளைத் தெரிந்து கொண்டார். அன்றையிலிருந்து வேமனர் ஞானியானார். நன்றி மறவா நோக்கில் வேமனர் அபிராமய்யா வின் பெயரைத் தன் பாடல்களில் மகுடமாய்க் கொண்டார் என்ற ஒரு கதையும் வழங்கி வருகிறது.

2-16-5 இவற்றுள் 'எல்லாம் கொடுக்கின்ற இறைவனுக்கு விருப்பமானவனே' என்று பொருள் கொடுக்க இந்தத் தொடரை ஆண்டார் என்று கொள்ளுதலே பொருத்தமாகும். வள்ளுவர் பாடல்களில் இத்தகைய மகுடத்தைக் காண முடியாது. வேமனரைக் காட்டிலும் சொற்சுருக்கத்தைக் கையாண்டவர் வள்ளுவர். அதனால்தான் ஏழு சீர்களாலான பாவகையில் தம் கருத்துக்களை வெளியிட்டார்.

## 2. 17. ஒப்பு

*2-17-1* திருக்குறளின் வைப்பு முறையையும், வேமனர் பாடல்களின் வைப்பு முறையையும் ஒப்பிட்டு நோக்க இரண்டிற்கும் வைப்பு முறையில் ஒப்புமை இல்லை என்பதைத் திட்டமாய்க் கூறலாம். திருக்குறள், ஆசிரியரால் திட்டமிட்டுப் பாடப்பட்ட ஒன்று. திருக்குறளில் நூல் அமைப்பிலும், கருத்துப் போக்கிலும், ஓர் ஒழுங்கான ஒன்றிற்கொன்று தொடர்பான அமைப்பைக் காணலாம். வேமனர் பாடல்களில் இத்தகைய ஒழுங்குமுறையைக் காணமுடியாது; அதிகாரப் பிரிவோ, அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்கள் என்ற வரையறையோ வேமனர் பாடல்களில் காண முடியாது. வேமனர் பாடல்களில் இடைச்செருகல் உண்டு என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். வள்ளுவர் பாடல்களில் அவ்வாறு எண்ணுவதற்கு வாய்ப்பே இல்லை. பாயிர அதிகாரங்களும், காமத்துப்பாலும் இடைச்செருகல் என்ற ஒரு கருத்து இருப்பினும் அது ஆதாரமற்றது என்பது முன்குறிக்கப் பெற்றுள்ளது. வள்ளுவர், பாவகைகளுள் சிறியதாயினும், பாடுவதற்குக்கடினமான குறள் வெண்பா வகையைக் கொண்டார். வேமனர் பாடுவதற்கு எளியதும், படிப்போருக்கும் எளிதில் பொருள் உணர்த்துவமாகிய 'ஆடவெலதி' பாவகையைக் கொண்டார். இரண்டு அடிகளால் ஆன பாவகையும் தெலுங்கு இலக்கியத்தில் உண்டு; இதனை 'த்ருபத' என்று அழைப்பர்.

*2-17-2* வள்ளுவர் நூலில் அறம், பொருள், காமம் என்ற முறையைக் காணலாம். வேமனரிடம் இந்த முறையைக் காண முடியாது. எனினும், இங்குமங்குமாக இந்த மூன்று வகையான கருத்துக்களுடைய பாடல்களை வேமனர் நூலிலும் காணலாம். மேலும் வீடுபற்றிய கருத்தும்வேமனர் பாடல்களில் உளது.வேமனர் பாடல்களில் தத்துவக் கருத்துடைய பாடல் எண்ணிக்கையே அதிகம். காமத்துப்பால் அமைப்பும், அந்தக் காமத்துப்பாலினை இல்வாழ்க்கை நடத்தும் தலைவன், தலைவியர்க்கு வேண்டிய பயிற்சியைக் கொடுக்கும் நிலைக்களனாகவும் அமைத்துள்ள பெருமை வள்ளுவருக்கன்றி வேறு யாருக்கும் கிடையாது. அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் என்ற இருவகையான வாழ்வை விளக்கித் துறவறத்தினும் இல்லறமே சிறப்புடையது என்று நிலைநாட்டுகிறார்.[52] 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற பழமொழியும் இவர் கருத்தை வலியுறுத்தும். வேமனரிடம் இத்தகைய தெளிவான பகுப்பு முறையினையோ, கருத்துக்களையோ காணமுடியாது. இல்வாழ்க்கை பற்றிய பாடல்கள் வேமனரிடம் அருகி இருக்கின்றன. துறவு நிலையைப் பற்றிய பாடல்கள் அதிகம் உள்ளன.

2-17-3 வாழ்க்கைத் துணைவியைத் தெய்வநிலையில் வைத்துப் பேசுகிறார் வள்ளுவர். அதோடு பிள்ளைப்பேற்றையும் சிறப்பித்துப் பேசுகிறார்.[53] வேமனரிடம் இத்தகைய நிலையைக் காணமுடியாது. மனைவி மக்களைப் பெற்று வாழும் வாழ்வு மிகவும் சுமையான வாழ்வு என்று இல்வாழ்வு முறையை வெறுத்துப் பேசுகிறார் வேமனர்.[54] பொருளதிகாரத்திலும், அரசர்க்கும் அமைச்சர்க்கும் வேண்டிய வற்றைப் பற்றியும், பொருளைப்பற்றியும், நட்பைப்பற்றியும், மனித சமுதாயத்துக்கு வரும் கேடுகளைப் பற்றியும், மக்களின் இயல்புகளைப் பற்றியும் முறையாகப் பேசுகிறார் வள்ளுவர். வேமனரும் மேற்குறிப்பிட்ட அனைத்தைப் பற்றியும் பேசுகிறார்; ஆனால், வள்ளுவர் போன்று முறையாக அமையவில்லை, வேமனரிடம்.

இவையே யன்றிப் பின்வரும் இயல்களில் ஆய்கையில் இருவருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சற்று விரிவாக விளக்கப்பெற்றுள்ளன.

## குறிப்பெண் விளக்கம்

1. தொல். சொல். சூ. 284; யாப்பருங்கலம், சூ. 85; சிலம்பு. கனாத்திறம் உரைத்த காதை 78:79; கலி. 101:34-35. 102:34-35. 103:63-64, 104:63-64.

2. கட்டுரை : சங்க இலக்கிய வழி திருக்குறள், பக். 177.

3. தி.அ.மு., பக். 3.

4. 'நூல் பாகுபாடு' தலைப்பில் பக். முப்பால் என்று வரும் இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

5. திருக்குறள், பரிமேலழகர் உரை, பக். 1.

6. திரு. வ.மா., பா. 19.

7. தொல். எழுத். நச். சிறப்புப் பாயிரம், பக். 19.

8. திருக்குறள், பரிப்பெருமாள் உரையின் தொடக்கம்.

9. மு.வ., தி.அ.வா.வி., முன்னுரை, பக். 16.

10. 'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் பெரும நின் செல்வம்'.—புறம் 28; வரி 15-16.

'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம் தோற்றம்போல'—புறம் 3; வரி 1-2.

'இன்பமும் பெருளும் அறனும் என்றுங்கு அன்பொடு
புணர்ந்த ஐந்திணை மருங்கின்,—தொல். பொருள் களவு 1-1.

11. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். —கு : 754.

12. பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள் பக். 4

13. திரு. வ. மா., பா. 9, 10, 11, 12, 15, 17, 18, 19, 30, 31, 39, 44, 46, 49, 53.

14. திருக்குறள், பரிமேலழகர் உரை, பாயிரம் முன்னுரை.

15. சிந்தனைக் களஞ்சியம், கட்டுரை, சங்க இலக்கிய வழித் திருக்குறள் பக். 197.

16. திருக்குறள், பரிப்பெருமாள் உரை, காமத்துப்பால் உரைத்தொடக்கம்.

17. நாலடி. ப. 114.

18. புறம். 28:15-16; 31:1-2. நன்னூல், சூ. 10.

19. தி.அ.வா.வி., முன்னுரை, பக். 23.

20. 'இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்'
—திரு. வ.மாலை 33.

21. 'இன்பமும் பொருளும் அறனும் என்றுங்கு அன்பொடு
புணர்ந்த ஐந்திணை மருங்கின்.'
—தொல். பொருள். களவு. 1.

22. திருக்குறள், பரிமேலழகர் உரை, காமத்துப்பால் முன்னுரை.

23. தி.அ.மு., பக். 9.

24. குறள் 1109.

25. குறள் 39, 65, 98, 156, 173, 228, 352, 369, 615, 628, 629, 630, 669, 738, 854, 869, 946, 1052 1166, 1330.

26. குறள் 1090, 1092, 1109, 1110, 1131, 1134, 1137, 1138, 1139, 1144, 1145, 1148, 1159, 1163, 1164, 1166, 1175, 1191, 1196, 1201, 1202, 1214, 1247, 1251, 1252, 1253, 1254, 1255, 1257, 1264, 1280, 1281, 1282, 1289, 1306, 1326, 1330.

27. தொல். பொருள். களவு. 1.

28. 'பொழுதிடை தெரியிற் பொய்யா காமம்' குறுந். 32.

29. 'பாலாகும் வேதப் பயனுகும் பாயிரம் நான்கு ஏலா கேள் இல்லறமும் நாலேந்தாம் - மேலாம் துறவு பதின்மூன்று தோமிலூழ் ஒன்றென்ப அறிவு நெறி ஆய்ந்துடையர் தாம்'.

30. திருக்குறள், பரிப்பெருமாள் உரை, தொடக்கம்.

31. திரு. வ.மா. 22, 25 - பாடல்களின் ஆசிரியர்கள்.

32. திரு. வ.மா. 20ஆம் பாட்டு ஆசிரியர்.

33. யாப்பருங்கலக் காரிகை, பக். 4.

34. தி. உ. வளம், பக். 13.

35. தொல். பொருள். சூ. 81.

36. தண்டபாணி தேசிகர், தி. உ. வளம், பக். 59.

37. தொல். புறத். 33.

38. தண்டபாணி தேசிகர், தி.உ.வளம், பக். 61.

39. சுப்பிரமணிய அய்யர், ஏ. வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பக். 106.

40. திரு. வ.மா., பா. 26.

41. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பக். 108.

42. செந்தமிழ்ப் பத்திரிகை, பக். 70.

43, திரு. வ.மா., பா. 27.

44. திரு. வ.மா., பா. 28.

45. காண்க : இவ்வாய்வு பின்னிணைப்பு.

46. தமிழ்நாடு அரசு கிழக்கியல் கையெழுத்துப்படி நூலகம், சென்னை, கையெழுத்துப்படி எண். டி. 1774.

47. வே.ப.ர. பக். 5.

48. வே.ப.ர., முன்னுரை, பக். 10.

49. ஆடவெலதி அல்லாத வேறு பாவகையால் அமைந்த பாடல்கள் வேமனர் பாடியவை அல்ல; வேறு சிலர் இயற்றி வேமனர் பாடல்களோடு சேர்த்திருக்க வேண்டும் என்ற கருத்துண்டு.

50. பாலவியாகரணம் : பக். 33.

51. இரா.அ.கி.ச., வேமன, பக். 13

52. குறள். 42, 47, 48, 160.

53. குறள். 55, 61.

54. *V. V.* 307.

## பிரிவு—2

திருவள்ளுவா, வேமனர்
பாடல் பொருள்

## இயல்—3

# இல்வாழ்க்கை

*0-1* மனிதன் தன் முரட்டுப் போக்கை அடக்கி ஒரு குழுவினர் கடைபிடிக்கும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றித் தன் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டதே மனித முன்னேற்றத்தின் முதற்படி எனலாம். பழக்க வழக்கம் சட்டதிட்டம் இறைவர்ஆணை என்பனகொண்டு, சமுதாயம் தனிமனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாயிற்று. இந்நிலை சம்பிரதாய தருமநிலை எனப்படும்.

*0-2* சமூகம் அதற்குப் பிறப்பிடம். சமூக நன்மைக்குக் கருவிகளாய் இருந்த வழக்கங்களே அறநெறிகளாக உருவெடுத்தன. இது மனித முன்னேற்றத்தின் இரண்டாவது நிலை அறக்கூறு ஆகும். இந்த நிலை ஒருபடி உயர்ந்தது. இது நல்லது, இது தீயது என்று துணிதற்கேற்ற ஓர் அளவுகோல் இந்நிலையில் விளங்குகிறது. இந்த அறவாழ்க்கை, சம்பிரதாய ஆதிக்கத்தினின்றும் விடுதலைபெற்றுத் தனிமனித மனச்சாட்சிப் பிரமாணமாகிப் பூரண பக்குவநிலை எய்துகிறது; இது மூன்றாவது நிலை.[1]

*0-3* இவ்வகையில் சமுதாய முழுப்பக்குவ நிலை எய்துவதற்குரிய வழிவகைகளை அறிவுறுத்தப் பல அறநூல்கள் (நீதி நூல்கள்) தோன்றி உள்ளன.

*1-1* நீதிகளை அறிவுறுத்தும் நூல்கள் நீதி நூல்கள் ஆகும். நீதி நூல்கள் என்று குறிப்பிடும் வழக்கு தேவார காலத்தில் தோன்றியதாகும். இதற்கு முற்பட்ட காலத்தில் 'அறம்' என்ற சொல்லையே அறநூல் என்ற பொருளில் கையாண்டுள்ளனர்.[2] 'அறம் பாடிற்றே யாயிழை கணவ',[3] 'அறங்கூறும் ஆக்கந் தரும்'[4] என்னும் இடங்களில் அறம் என்னும் சொல் ஆகுபெயராய் அறத்தை உணர்த்தும் நூல்களையே குறிப்பிடுவதாக உரையாசிரியர்கள் கருதுகின்றனர்.

*1-2* அறம் என்னும் சொல்லிற்குப் பின்வரும் விளக்கம் தரலாம். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் ஆகும். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையின் பயனாக அறியாமையை அறுத்தெறிவதே அறம் என்று மற்றொரு விளக்கமும் தரலாம். ஆங்கிலத்தில் 'எதிக்ஸ்' என்னும் சொல்லால் அறம் சொல்லப்பட்டு வருகிறது. திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர், "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாகும்; அஃது ஒழுக்கம், வழக்கம், தண்டம், என மூவகைப்படும்; அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல்"[6] என்று விளக்கியுள்ளார்.

*1-3* எனவே, ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களுள் ஒவ்வொரு குழுவும் வழக்கமாகக் கொள்ளும் முடிவையே ஒழுக்கமாகக் கொண்டனர் என்று தெரிகிறது. இதுவே சமுதாயத்தின் புகழ்வாய்ந்த வாழ்க்கை நெறியாக (அறநெறியாக) மாண்புற்றது.

*1-4* நல்ல ஒழுகலாறாகிய செயலுக்கு அடிப்படையாய் இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் தூய்மையாக இருக்கவேண்டுமானால், எண்ணத்திற்கு நிலைக்களனாகிய மனம் மாசற்றுத் தூய்மையாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் நோக்கும்பொழுது அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றாகவே கொள்ள வேண்டும்.

*2-0-1* திருக்குறளில் முதற் பகுதியாகிய அறத்துப்பாலில் தனிமனிதனுக்கும் இல்வாழ்வானுக்கும் தேவையான ஒழுக்க நெறியின் பலதிறப்பட்ட பகுதிகளையும், இயல்புகளையும் மிக நுட்பமாக எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர் வள்ளுவர்.

## தனிப்பட்டவனும், இல்வாழ்வும், அதன் நெறிகளும்

*2-0-2* ஒருவனும் ஒருத்தியும் அன்பால் ஒன்றி, இல்லறம் நடத்தி, மக்களைப் பெற்று, அன்பு பரப்பி, இம்மைப் பயனும் புகழை எய்தி, மறுமைக்கு வேண்டிய புண்ணியத்தையும் தேடி, உலக நிலையாமையை உணர்ந்து, மனத்துக்கண் மாசிலனாகி, அருள்கொண்டு, தவ ஒழுக்கத்தில் நின்று, மெய்யுணர்வு பெற்று, முடிவில் பேரின்பம் எய்துவதே வாழ்க்கை நெறி. அதில் உலக

வாழ்க்கையின் முதற்படியாக, உலக வாழ்க்கைக்கு அடிப்படையாக நிற்கும் இல்வாழ்க்கை நெறிபற்றி வள்ளுவர் கூறுவதனோடு வேமனர் கூறுவதனை ஒப்பிட்டுப் பார்த்தலே இந்த ஆய்வின் நோக்கம்.

## அறன்வலியுறுத்தல்

*3-0* இல்வாழ்க்கையில் தொடங்கும் உலக வாழ்க்கை, அறத்தை அடிப்படையாய்க் கொண்டது; இந்த அறமே துறவறத்திற்கும் அடிப்படையாகும். இந்த அறத்தை 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தில் ஆசிரியர் திருவள்ளுவர் அமைத்து, வாழ்க்கை முழுவதிலும் விளக்கமுறுமாறு விவரித்துள்ளார். வேமனரும் ஆங்காங்கு சிலபாடல்களில் இத்தகைய அறத்தை அமைத்து, வாழ்க்கை முழுவதிலும் விளக்கமுறுமாறு விரித்துள்ளார்.

*3-1-1* 'அறம் என்பது யாது? எண்ணமா? சொல்லா? செயலா?' எனில், மூன்றுமே என்பதே விடை. இந்த மூன்றனுள்ளும் செயலுக்கும் சொல்லுக்கும் எண்ணமே அடிப்படையாகும். எண்ணத்தில் தூய்மை வேண்டும். அதுவே அறமாகும். அப்பொழுதுதான் சொல்லிலும் செயலிலும் அறம் தானக அமையும். இதனைத்தான் வள்ளுவர்,

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற'[7]

என்று கூறுகிறுர்.

*3-1-2* நினைப்பும், சொல்லும், செயலும் நன்கு அமைய வேண்டுமானல், மாசற்ற மனம் வேண்டும். மாசற்ற மனமின்றி எந்தச் செயலைச் செய்தாலும் அதனல் ஒரு பயனுமில்லை.[8] தெய்வ அருச்சனை, தவங்கள், தீர்த்த யாத்திரை, தானதருமங்கள், யாகங்கள் முதலியவற்றைக்கூடத் தூயமனத்தாலே மேற்கொள்ள வேண்டும்; தூய மனம்தான் அறத்திற்கு அடிப்படையானது என்பதை வேமனர் உணர்த்துகிறுர்.[9]

*3-1-3* ஒருவருக்கு நோயற்ற வாழ்வே குறைவற்ற வாழ்வாகும்; அதுவே சிறந்த செல்வமுமாகும்; நோயற்ற பொழுது தான் அவர் தம் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியும். ஆகவேதான் வேமனர், "ஒருவருக்குத் தூயமனம் மட்டும் இருந்தால் போதாது; உடலும் தூய்மையாய் இருத்தல் வேண்டும்;

அதுவே இகத்து வாழ்வுக்கும், பரத்து வாழ்வுக்கும் பயன்படுவதாகும்''[10] என்கிறுர்.

3-2-1 மாசற்ற மனத்தால் செய்கின்ற அறத்தைக் காட்டிலும் உயிர்க்கு ஆக்கமானது வேறு எதுவும் இல்லை. அதை மறந்து கைவிடுதலைவிடக் கெடுதியும் இல்லை; ஆகையால் அறச்செயல்களை இயலும் வகையில் ஒயாமல் செய்ய வேண்டும். அறம் செய்வதில் காலம் தாழ்த்தல் கூடாது. இளமை முதற்கொண்டே அறம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் அறமே அழிவு வருங்காலத்தில் அழியாத்துணையாக நின்று காக்கும்.[11] என்கிறுர் வள்ளுவர்.

3-2-2 கீரை வேகாத முன்பே அந்தக் கீரையிலிருக்கும் களரை எடுத்துவிட வேண்டும்; அதாவது உரிய காலத்தில் களரை நீக்கிவிட வேண்டும். அதுபோலவே அறத்தை உரிய காலத்தில் செய்தலை மேற்கொள்ள வேண்டும்.[12] அவ்வாறு உரிய காலத்தில் செய்யாது நாளை நாளை என்று நாள் கழிக்கக்கூடாது. நாளை ஒருவனின் நிலை என்னுகும் என்பது யாருக்கும் தெரியாது. அவ்வாறு வீணுள் கழிக்கின்றவர்கள் மூடர்களே. எனவே, அறத்தை உரிய காலத்தில் நாள் வீணுக்காது செய்ய வேண்டும்.[13] பாவ எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமல் தம்மிடமுள்ள செல்வத்தால் அறம் செய்ய வேண்டும்.[14] என்பார் வேமனர்.

3-3 இவற்றுல், ஒருவன் வாழ்நாளில் செய்யத்தக்கது அறமே; செய்யாமல் ஒதுக்கத்தக்கது பழியேயாகும்; பழியை நீக்காது இருத்தல் பாவத்தால் அவதிப்படுவதற்கு ஏதுவாகும் என்ற இருவரின் குறிக்கோள்களை அறியலாம்.[15]

## இல்வாழ்க்கை

4-0 இனி, இந்த அறஞ் செய்வதற்குரிய இருவகை நிலையுள் முதல் நெறியாகிய இல்லற நெறியைப் பற்றிப் பார்ப்போம். இல்வாழ்க்கை என்பது காதலர் இருவர் கருத்தொருமித்து வாழும் வாழ்க்கையாகும். அதாவது காதலர் தங்களுக்குள் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்து வாழும் வாழ்க்கையினின்றும் முதிர்ந்து, காதலர் இருவரும் ஒரு மனப்பட்டு மக்கள், விருந்தினர், அக்கம் பக்கத்தார் முதலானவர்களுக்காகத் தியாகம் செய்து வாழும் வாழ்க்கையாகும். இந்த இல்வாழ்க்கை அன்பு நெறியையும் அருள் நோக்கப் போக்கையும் பயில்வதற்குரிய பல்கலைக்கழகம் ஆகும். வள்ளுவரின் இல்வாழ்க்கை அதிகாரம் இந்தத் தியாகப் பண்பை அறிவித்து நிற்கிறது.

4-1-1 தன்னையும் காத்துப் பிறரையும் காக்க வல்லது இல்லறம். சிறப்பாகத் துறவறத்தாருக்கு இல்லறத்தாரின் துணை பெரிதும் வேண்டும். எனவே, இல்லறத்தாருக்கு உழைத்துப் பொருள் ஈட்டும் ஆற்றலும், பகுத்துண்ணும் திறனும் வேண்டும். துறந்தவருக்கும், வறியவருக்கும், தன்னிடத்தே யாசிப்போருக்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்பவன் துணையாய் இருக்க வேண்டும்.[16] இது வள்ளுவர் அறவுரை.

4-1-2 வேமனரும் வள்ளுவர் எண்ணும் இந்தக் கொள்கை உடையவரே. எனவேதான், இல்வாழ்க்கைக்கு ஏற்ற பண்பு இல்லாதவர்களை வேமனர் 'மூடர்' என்று இழித்துப் பேசுகிறார். அவர்கள் தம் வயிறு நிரப்புவதையே பெரிதாகக் கருதுவாரே தவிரத் துறவிகளுக்கும் மற்றவர்களுக்கும் பயன்பட மாட்டார்கள்; தம் நிலையைப்பற்றியும் அறிந்து கொள்ள மாட்டார்கள்[17] என்று கூறுகிறார்.

## வாழ்க்கைத் துணைநலம்

5-0 இல்வாழ்க்கை நெறிக்குத் துணையாக இருப்பவள் வாழ்க்கைத் துணைவி. நல்லதொரு இல்வாழ்க்கைக்கு வாழ்க்கைத் துணைவியின் நற்குண நற்செய்கைகள் பெரிதும் வேண்டற்பாலன. இல்வாழ்வு ஒளி பெற்று விளங்க வேண்டுமானால், இல்லாள் பண்புடையவளாய் அமைய வேண்டும்; இல்லறத்திற்குரிய பண்பில்லாத இல்லாள் இல்லாத வீடு விளக்கு இல்லாத இருட்டறையைப் போன்றது.[18]

5-1-1 வள்ளுவர் 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் வாழ்க்கைத் துணைவிக்கு வேண்டிய பண்புகளைத் தொகுத்துப் பேசுகிறார். இல்லறத்துக்குத் தக்க மாண்புடையவளாகிய இல்லக்கிழத்தி (இல்லாள்) ஒவ்வொருவருக்கும் வாய்த்திட வேண்டும்.[19] அப்பொழுது இல்லக்கிழவனும், மாண்புடை மக்களும், அறம்புரி சுற்றமும், நல்ல பண்புள்ள சுற்றுச் சூழலும், சமுதாய வாழ்க்கையும், சமய வாழ்க்கையும் சிறப்பாக அமைந்திட வாய்ப்புண்டு. இல்லறத்துக்கு உரிய மாண்பற்றவளாக இல்லக்கிழத்தி அமைந்தால், அந்த இல்வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புப் பெற்றிருந்தாலும் பயனில்லை.[20] இல்லாளுக்குத் தனிச் சிறப்பான பண்பு ஒன்றுண்டு; அதுவே கற்பு என்னும் உறுதி உண்டாகப் பெறல்.[21] பெண்கள் நிறை என்னும் பண்பினால் தம் நெஞ்சத்தை நெறியில் நிறுத்திக் காத்துக்கொள்ளும் காப்பு மிகச் சிறந்த முறையாகும்.[22] இப்பண்பினால் தன்னையும் தலைவனையும்

காத்துக் கொண்டு, இல்லறப் புகழையுங் காத்துக் கொண்டு சோர்வின்றி இல்லறம் நடத்த வழி உண்டாகும்.[23] தன் கணவனையே தெய்வமாக நினைக்கும் நிலை ஏற்படும்.[24] இப்படிக் கணவனைப் போற்றிக் கடமையைச் செய்தால் மகளிர் சிறப்புடைய மேலுலக வாழ்வையும் பெறுவர்.[25]

*5-1-2-1* இக் கருத்துக்களையே வேமனர் வேறு போக்கில் கூறுகிறார். இல்லாள் தன் கணவனை எப்பொழுதும் பழித்தல் கூடாது; தான் ஒருவருக்குச் செய்த நன்மையைப் பிறருக்குச் சொல்லிப்புகழ் பெறவேண்டும் என்ற பெருமை இருக்கக்கூடாது; குணமுடைய இல்லாள் எந்நிலையிலும் கணவனை மீறி நடக்கக் கூடாது.[26] இல்லாள் நிறைகாக்கும் பண்புடையவளாய் இருக்க வேண்டும்; அவ்வாறிருப்பின் அவளை அடையும் தீங்கொன்றுமில்லை.[27] ஒருவனுக்குக் கற்புடைய மனைவி வாய்க்கப்பெறின் அவனுக்கு இகத்து இன்பங்களுக்குக் குறை இல்லை; அவள் கற்பற்றவளாயின் யமனுக்குத் தூதுவளாகக் கருதப்படுவாள்.[28] இல்லாள் தன் கணவனிடம் பேரன்புடையவளாய், கணவனையே கண்கண்ட தெய்வமாகத் தொழுதலைச் செய்ய வேண்டும்.[29] அவள் தன்னைக் காத்துக்கொண்டு, தற்கொண்டானுக்கு வேண்டியன செய்து தன் கடமையை ஆற்றுபவளாக இருக்கவேண்டும்.[30] இவ்வாறு செயல் புரியும் இல்லாள் நற்கதி பெறுவதோடு சிறந்த புகழையும் பெறுவாள் என்றும், அவ்வாறு செயல் புரியாது கணவனையே பழிக்கிறவளுக்குப் பாவம் கிடைத்தல் உறுதி என்றும் கூறுகிறார்.[31]

*5-1-2-2* மகளிர் நிறை என்னும் பண்பால் தம்மைத்தாம் காத்தலே சிறந்தது என்பதை இருவரும் வற்புறுத்துகிறார்கள்.[32] இங்ஙனம் கூறினாலும் மகளிர் ஆடவருக்கு அடங்கி நடக்க வேண்டும்; அடங்கி நடக்காதவர்களுக்குத் தம் சீலத்தினின்றும் கெடும் வாய்ப்பு ஏற்படும். இந்தக் கருத்தை ஒரு உவமையால் விளக்குகிறார் வேமனர். 'வீட்டின் பின்புறத்தில் இருக்கும் ஒரு செடிக்கு தேவையான ஒளி இல்லை என்றால், ஒளியை நாடி அதன் கொடிகள் வெளிச்செல்லுதல் போன்று, கொழுநரின் கட்டுக்கடங்காதவர்களும் சீலத்தினின்றும் கெடுவதற்கு வாய்ப்பு உண்டு, என்று கூறுகிறார்.[33] மற்றும் அப்படி அடங்கி நடக்காத பெண்ணை நஞ்சுடைய பாம்பென்றும், கணவன் நலன் கருதாத ஓர் அரக்கி என்றும் துணிந்து பேசுகிறார் வேமனர்.[34]

5-2 புகழைக் காக்க விரும்பும் மனைவியாகப் பெண் அமைய வேண்டும்; அத்தகைய மனைவி இல்லாதவருக்குப் பகைமுன் இகழ்ச்சியே கிடைக்கும்; அவர்கள்முன் ஏறுபோன்ற பீடுநடை

இருக்காது[35] என்று வள்ளுவர் கூறுவதையே, 'கணவனுக்கு அடங்காத மனைவியால் தன் புகழ் குன்றும்; அவளுக்கு எவ்வளவு தான் முயன்று அறிவுரையைக் கூறினும் அது பயனற்றுப் போகும்' என்று வேமனர் கூறுகிறார்.[36]

5-3 எனவே, கணவனும் மனைவியும் மனமொத்து இல்வாழ்க்கை நடத்த வாழ்க்கைத் துணைவியே காரணம்[37] என்பதை அறியலாம்.

## மக்கட்பேறு

6-0 இல்வாழ்க்கையில் பெறும் பேறுகளில் நல்ல மக்களைப் பெறும் பேறும் ஒன்று; அந்தணர், அரசர், வணிகர் முதலிய இரு பிறப்பாளர் மூவராலும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வி யானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் இறுக்கப்படுதலால் நன்மக்கள் பேறு தேவையாக உள்ளது.

6-1-1 அறிய வேண்டியவற்றை அறிவதற்குரிய மக்களைப் பெறுவது போல மற்றப் பேறுகள் அவ்வளவு சிறப்புடையவை அல்ல என்றும், அவர்களும் பழி பிறங்காப் பிள்ளைகளாய் அமைய வேண்டும் என்றும், அத்தகைய பிள்ளைகளைப் பெற்ற பெற்றோருக்கு ஏழுபிறவியினும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா என்றும் வள்ளுவர் கூறுகிறார்.[38]

6-1-2 பெற்றோர்களுக்கு முக்திக்கு (மோட்சத்துக்கு) ஏதுவாய் இருப்பது மக்கட்பேறே; மக்கள் பேறு அற்றவர்கள் முக்தியை அடைய முடியாது.[39] அந்த மக்களும் காலை எழுந்தவுடன் பெற்றோரைத் தொழுது, பின் ஞானத்தைக் கொடுத்த ஞான குருவைச் சேவிப்பவராயும்,[40] தீநட்புக் கொள்ளாது நல்லாரோடு பழகி நற்பண்புகளைக் கொண்டு ஒழுகுபவராயும் அமையவேண்டும். பெற்றோர் நலனைப் பாராது மனைவியோடு கொஞ்சிக் குலாவும் பிள்ளையாய் இருக்கக் கூடாது; அப்படிக் கொஞ்சிக் குலாவும் மக்கள் திருடருக்கும், மூடருக்கும், பசுக்களுக்கும் இணையாவர் என்று இழித்துப் பேசுகிறார். இதோடு நிற்கவில்லை; மேலும் அத்தகைய பிள்ளைகள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? இரண்டும் ஒன்றே என்றும் வேமனர் துணிகிறார்.[41]

6-2-1 தம் மக்கள் பசுங்குழந்தைகளாய் இருக்கும்பொழுது, பெற்றோர்கள் குழந்தைகளோடு உணர்ச்சி நிலையில் தேங்கி

இருப்பர்; குழந்தை வளர வளரப் பெற்றோர் உணர்ச்சி நிலையிலிருந்து எழுந்து அறிவு நிலையில் நின்று பிள்ளைகளுக்குத் தம் கடமைகளைச் செய்ய வேண்டும். தம் மகன் கல்வி, கலை, தொழில் முதலியவற்றைக் கற்றுத் தேறும் வாய்ப்பைப் பெற்றோர் படைத்துத் தரவேண்டும்; பிள்ளைகளை அவையத்து முந்திஇருக்கும் படியாய் ஆக்க வேண்டும்; தம்மினும் தம் மக்கள் அறிவுடையவராய் விளங்கும்படிச் செய்ய வேண்டும்; இப்படிப் பிள்ளைகள் இருத்தல் பெற்றோர்க்கும் நல்லது; உலகத்தாருக்கும் இனியதாய் அமையும்.[42] அப்பொழுது இல்வாழ்க்கை பிறருக்கும் பயன்படும் நல்வாழ்க்கையாக அமையும் என்ற வள்ளுவரின் அறிவுரையை வேமனரிடமும் காண்கிறோம்.

6-2-2 பிள்ளை தந்தையைக் காட்டிலும் அறிவுடையவனும், சிறப்புடையவனும், பிறரிடத்து அன்புடையவனும் அமைந்து, புகழ் தேடிக்கொள்ள வேண்டும். இப்படிப் பிள்ளை புகழ் தேடிக் கொண்டாலும், மிக உயர்ந்த நிலையில் இருந்தாலும், பெற்றோரை அவமதிக்கக் கூடாது. அவமதித்துப் பேசுபவனுக்கு இகத்து இன்பமும் இல்லை; பரலோக இன்பமும் இல்லை[43] என்று தெளிவு படக் கூறுகிறார் வேமனர். தாய், தந்தை, உடன்பிறந்தோர் இவர்களிடத்து எதிர்த்துப் பேசாது, இவர்களிடத்தும், அரசனிடத்தும் பயபக்தியுடையவர்களாய், ஏழை எளியோர்கள்மேல் அருளுடையவராய்ப் பிள்ளைகள் விளங்க வேண்டும் என்பது வேமனரின் கருத்து.[44]

6-3 இவ்வாறு நல்ல பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய குணங்களை இருவரும் எடுத்துரைக்கின்றனர். ஒரு குடும்பத்தில் இல்லாளும், பிள்ளைகளும் குணமுடையோராயின் அதுவே முக்தி உலகமாகும்[45] என்பது இவர்கள் கொள்கை.

## அன்புடைமை

7-0 அன்புடைமை, பெற்றோர் பிள்ளைகளிடம் இயற்கையாக அமைந்து, பின் சுற்றத்தார், பற்றற்ற பிறர், மற்ற உயிரினங்கள் என்று படிப்படியாய் வளர்ந்து அருளாக மாறும். வள்ளுவரும் அன்பின் வழியது உயிர்நிலை; அஃதில்லாதார் என்புதோல் போர்த்த நடைப்பிணங்களே என்று கூறுகிறார்.[46] காதலர் இருவரிடத்து அருந்த அன்பு முகிழ்த்து விரிந்து பிள்ளைகளிடத்தில் பரவும்போது, படிப்படியாகத் தன்னலமே கருதும் தன்மை குறைந்து, பிறர் நலம் பேணும் பெற்றி சிறந்து விளங்குகிறது; மனைவாழ்க்கையின் நன்கலமாகிய மக்கள், குடிவாழ்க்கையில்

அன்பு நிலை வளர முதற்படியாய் அமைந்திருக்கிறார்கள். இதனால் தான் போலும் மக்கட் பேற்றிற்குப்பின் அன்புடைமை அதிகாரம் இடங்கொண்டுள்ளது.

*7-1-1* இந்த அன்புடைமையைப் பற்றி வள்ளுவர் பத்துப் பாடல்களில் தெளிவு செய்கிறார். தன் எலும்பும் பிறர்க்கு உரித்து என்று நினைக்கும் அளவுக்கு அன்பு இருக்க வேண்டும்; அதுவே ஆர்வமுடைமையையும், நண்பென்னும் நாடாச் சிறப்பையும் நல்கவல்லது; வையத்து இன்புற்று வாழவும், சிறப்பு எய்தவும் அந்த அன்புடைமையே காரணம். எனவே எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராய் இருத்தல் வேண்டும்; அப்படி இல்லை என்றால் பிறரிடத்திலிருந்து ஒருவன் அன்பைப் பெற முடியாது; அதனால் துன்பமும் சேரும்[47] என்கிறார்.

*7-1-2* ஒருவன் பிறர்மேல் அன்பு காட்டத் தனக்கும் பிறரிடத்திலிருந்து அன்பு கிடைக்கும்; தன்னிடம் அன்பு இல்லை என்றால் தானும் பிறரிடத்திலிருந்து அந்த அன்பை எதிர்பார்க்க முடியாது.[48] அன்பற்று, உள்ளத்தில் வஞ்சனைகொண்டு நடப்பதால் தனக்கு வருவது தீமையே; பிறருக்கு வரும் தீமையை மனத்தால் எண்ணிப் பார்க்காது, பறவைகள் மேல் அன்பு கொள்ளாது, அவற்றைக் கூடுகளில் அடக்கிச் சிறைபடுத்துவதால் என்ன பயன்? அவர்களுக்கும் அந்நிலையே வரும்[49] என்று வேமனர் கூறுகிறார்.

*7-1-3* எனவே, இருவரும் இந்த வாழ்வு அன்பின்வழி இயங்க வேண்டும் என்று உணர்த்துதலை அறியலாம்.

## விருந்தோம்பல்

*8-0-1* விருந்தினர் என்போர் தம்பால் புதியவராய் வருபவர் ஆவர். முன்பின் அறியாத ஒருவருக்குக் குறிப்பறிந்து, கைம்மாறு கருதாமல், உரிய காலத்தே செய்யும் உதவிகளே விருந்தோம்பலாகும்.[50] இது இல்வாழ்வார் கடமைகளுள் ஒன்றாகும். அன்புடைய கணவனும் மனைவியும் மனமொத்துச் செய்ய வேண்டியது, பலகாலும் பழகி அறிந்தவர்க்குச் சிறந்த உணவு அளித்துச் செய்யும் உதவியே. தம்மைவிட மிக்க செல்வம் உடையவர்க்குப் புகழ்கருதிப் போற்றிச் செய்யும் ஆடம்பரச் சிறப்பும், ஏதேனும் நன்மையைக் கருதிச் செய்யும் உதவியும் விருந்து என்று இக்காலத்துப் போற்றப்படுகின்றன. ஆனால் திருவள்ளுவர் இத்தகையவற்றை விருந்து என்று கொள்ளவில்லை. முற்கூறியாங்கு, முன்பின் அறியாதவருக்கு உணவு விடுதிகளும்

அறச்சாலைகளும் பிற வசதிகளும் இல்லாத நிலையில் ஓம்பும் பண்பாட்டு முறையையே திருவள்ளுவர் விருந்து ஓம்புதல் என்று கொண்டிருக்க வேண்டும். இந்த விருந்தோம்பலே திருவள்ளுவர் காலத்தில் பெரிதும் இல்லறக் கடமைகளுள் சிறந்ததாய்ப் போற்றப்பெற்று வந்துள்ளது.

8-0-2 வள்ளுவரும் வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்வதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும் என்கிறார்.[51] கணவனை விட்டுப் பிரிந்து இருந்ததனால், விருந்தோம்பல் முதலான இல்லறக் கடமைகளில் வழுவ நேர்ந்ததை, வள்ளுவர் வழிநின்று, கண்ணகி வாயிலாக ஆசிரியர் இளங்கோவடிகள் கூறியுள்ளார்.[52] இவ்வாறே விருந்தோம்பற் கடமையை இராமன் ஆற்ற முடியாது வழுவ நேர்ந்ததை அசோக வனத்திலுள்ள சீதையின் வாயிலாகக் காட்டுகிறார் கம்பர்.[53]

8-1-1 வள்ளுவர் விருந்தினர்களை நாள்தோறும் போற்ற வேண்டும்; முகமலர்ச்சியோடு போற்ற வேண்டும்; அப்பொழுதே மனமகிழ்வோடு திருமகள் அன்னாரிடம் வாழ்வாள் என்கிறார்.[54]

8-1-2 வேமனரும், விருந்தை அன்போடும் மனமகிழ்வோடும் மேற்கொள்ள வேண்டும்; இவ்வாறு செய்யாத விருந்து விருந்தாகாது; இறந்தவர்களுக்கு இடும் பிண்டச்சோறே ஆகும் என்று கூறுகிறார். எப்படிப் பத்தி இல்லாத பூசை, பதிபக்தி இல்லாத மனைவி இருந்தும் பயனில்லாததைப் போன்று, அன்பு இல்லாமல் செய்யும் விருந்தும் பயனற்றதென்றும், அந்த விருந்து காய்ந்த புல்லுக்கும் குழம்பில்லாது உண்ணும் உணவுக்கும் ஈடாகும் என்றும் கூறுகிறார்.[55] எனவே, விருந்து மேற்கொள்ளுங் கால் தூய இனிமையான உள்ளம் தேவை என்பதை இருவரும் அறிவுறுத்துகின்றனர்.

8-2-1 வள்ளுவர், எத்தகைய ஏழ்மை நிலையிலும் விருந்தை உபசரித்தலை மேற்கொள்ள வேண்டும்; தன் இல்லத்தில் இருக்கும் நெல்மணிகளை உணவாக்கி, அந்த உணவால் வந்த விருந்தினர்களைப் போற்றி, வரப்போகும் விருந்தினர்களை எதிர்பார்க்கும் பண்புடையவன் வானத்தாருக்கு நல்ல விருந்தினனாக ஆவான் என்கிறார்.[56]

8-2-2 வேமனர், மணிகள்போன்ற தானியத்தை உணவாக்கி விருந்தினர்களுக்கும், மற்றவர்களுக்கும் மனம் மகிழ உணவிடுபவன் தெய்வத்துக்குச் சமானமாகக் கருதப்படுவான் என்று கூறுகிறார்.[57]

*8-3-1* வள்ளுவர், விருந்தினர்கள் தன் இல்லத்தின் புறத்தே இருக்க, அவர்களுக்கு இடாது, ஒருவன் தான் மட்டும் சாவா மருந்தாயினும் உண்ணக்கூடாது; அப்படி உண்ணுதல் அறம் அற்ற செயலாகும் என்கிறார்.[58]

*8-3-2* வேமனர், தம்மை நோக்கி விருந்தினர் வர அவர்களுக்கு ஆவன செய்யாது துரத்துபவர்கள் அறம் அற்றவர்கள் என்றும், அச்செயல் பின் அவருக்குப் பாவத்துக்குக் காரணமாகும் என்றும் கூறுகிறார்.[59]

*8-4* எனவே, இல்வாழ்க்கையில் குழந்தைகள் மாட்டுப் பரவிய அன்பு, விருந்தினர்களை முகம் திரிந்து நோக்காது ஆதரிக்கும் அளவுக்கு விரிவதை அறியலாம்.

## இனியவை கூறல்

*9-1* அன்புடையராய் விருந்தோம்பும் வஞ்சனையற்ற நெஞ்சமுடைய இல்லறத்தார்கண்ணே இன்சொல் நிலவும்; அகத்தில் இருக்கும் அன்பைப் புறத்தே இன்சொற்களே புலப்படுத்துவன. முகமலர்ந்து எப்பொழுதும் இன்சொல் கூறவேண்டும். மாசுள்ள மனங்கொண்டு ஒருவன் அல்லவை பேச அல்லவையே வரும். எனவே நல்லவற்றை நாடி இனியவற்றைச் சொல்ல வேண்டும்; அதுவே அறம் பெருகுவதற்கு வழியாகும் என்று வள்ளுவரும் வேமனரும் கூறுகின்றனர்.[60]

## செய்ந்நன்றி யறிதல்

*10-0* இப்படி இன்சொல் கூறும் இல்லறத்தாருக்கு ஒருவருக்கொருவர் உதவி செய்துவாழும் உலக வாழ்க்கை தேவையாய் உள்ளது. அவ்வாறு உதவி செய்வோரை மறவாமல் அவர் செய்த நன்மையைப் போற்றுவது சிறந்த கடமையாகும். ஒருவருக்கு ஒருவர் செய்துகொள்ளும் உதவிகளில் பலவகை உண்டு. வள்ளுவர் மூன்று வகையான உதவிகளைக் குறிப்பிடுகிறார். அவை, தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்குச் செய்த உதவி; உற்ற காலத்தில் ஒருவன் செய்த சிறிய உதவி; இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் செய்த உதவி[61] என்பனவாகும்.

*10-1-1* இத்தகைய உதவியை என்றும் மறக்கக் கூடாது. இந்த உதவிகளின் பயனைத் தெரிந்தவர்கள் எப்பொழுதும் நன்றியை

மறவாது போற்றுவார்கள்; அப்படிப் போற்ருது மறக்கின்றவர் களுக்கு என்றும் உய்வில்லை என்று வள்ளுவர் கூறுகிருர்.[62]

*10-1-2* வேமனரும், நாய் அறிவினில் குறைந்ததாயினும் பிறர் செய்த நன்றியை மறவாது; அதுபோல் மக்களும் பிறர் செய்நன்றியை மறக்கக் கூடாது; உத்தமர் இந்தச் செய்நன்றியை என்றும் மறக்க மாட்டார்கள்; மறக்கின்றவர்கள் நாயினும் இழிந்தவர்கள் என்று கூறுகிருர்.[63]

*10-2* துன்பம் வந்த காலத்து உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்பொழுதும் விடலாகாது என்று வள்ளுவர் கூறுவதையே, வேமனர், பிள்ளைப்பேறு பார்த்த மருத்துவரின் உதவியைத் தாய் எப்பொழுதும் மறக்கக் கூடாது; அந்த உதவியை மறக்கிறவர்கள் தம் செயல் ஒன்றில் மட்டுமே கருத்தாக இருக்கும் தன்னலக் காரர்கள் என்று கூறுகிருர்.[64] எனவே, தன்னலமின்றி நன்றியை மறவாத நிலை வேண்டும் என்பதை இருவரும் வலியுறுத்து கின்றனர்.

## நடுவுநிலைமை

*11-1-1* இல்வாழ்வார், தம்பால் பழகுபவர் எல்லாரிடமும் பொதுநோக்கோடு பழகுவராதலின் ஒரே செயலில் பகைவர்க்கு ஒருவிதமாகவும், அயலார்க்கு ஒருவிதமாகவும், நண்பர்க்கு ஒருவிதமாகவும் நடந்துகொள்ளுதல் கூடாது. இம்மூவரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நின்று ஒழுக வேண்டும். இருவருக் கிடையே வந்த சச்சரவுகளைத் தீர்க்கும் சமயங்களில், சச்சரவுகளைத் தீர்ப்போர் தாம் சமமாக இருந்து, பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றும் பண்புடன் அமையவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிருர்.

*11-1-2* வேமனரும் சச்சரவுகளைத் தீர்க்கும் சமயங்களில் நியாயம் தவறக் கூடாதென்றும், அப்படித் தவறியவனுக்கு முக்தி கிடைக்காதென்றும், நியாயமாய் நடந்து கொள்பவனுக்கே முக்தி கிடைக்கும் என்றும் கூறுகிருர்.[65]

## அடக்கமுடைமை

*12-0* இல்வாழ்க்கையின் முடிந்த நிலைக்கு அடக்க முடைமையும் வேண்டற்பாலது. அதாவது மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன் ஆட்சியின்கீழ் வைத்திருக்கும் ஆற்றல்

வேண்டும். அந்த ஆற்றல் வாய்ந்த வாழ்வே சிறந்த வாழ்வு. இந்த அடக்கமுடைமை எந்தெந்த வகையில் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் விளக்கிக் கூறுகிறார்.

*12-1-1* மலையின் நிலையையும் ஆமையின் தன்மையையும் எடுத்து காட்டி அடக்கமுடைமையை விளக்குகிறார் வள்ளுவர். எத்தனையோ தட்பவெப்ப மாறுதல்கள், எத்தனையோ புயல்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் இடம் தந்தும், தான் மட்டும் அசையாமல் தன் நிலையில் நிற்கிறது மலை; தன் கடமையை ஆற்றி வருகிறது. இதை எடுத்துக்காட்டாகக் காட்டி, ஒருவன் தன் கடமையைச் செய்து அடங்கி அமைதியாக வாழ வேண்டும் என்று உணர்த்துகிறார்.[66] அடங்கி அமைதியாக வாழ்வதென்றால், வெறுமனே இருப்பதன்று; ஐம்புலன்களும் ஒடுங்க இருப்பதன்று; ஐம்புலன்களையும் வேண்டிய பொழுது தொழில் செய்யவிட்டு வேண்டாதபொழுது ஆற்றலுடன் அடங்கி இருப்பச் செய்வது; இதுவே ஆமைபோன்ற நிலையாகும். ஆமை தனக்குத் தீங்கு நேரும் என்று அறிந்தபொழுது தன் ஐந்து உறுப்புக்களையும் தன் ஓட்டினுள் அடக்கிக்கொண்டு அமைதியாக இருக்கும். தனக்கு ஒரு தீங்கும் இல்லை என்று அறிந்தபோது ஐந்துறுப்புக்களையும் வெளியே நீட்டி இயங்கும். இவ்வழியில் ஐம்புலன்களையும் நல்ல நெறியில் செலுத்துவதும் தீய நெறியில் செல்லவிடாமல் அடக்கிக் கொள்வதுமே அடக்கமாகும்.

*12-1-2* இவ்வாறு எடுத்துக் காட்டுகளோடு வள்ளுவர் கூறிய கருத்தை வேமனரின் பாடலிலும் காணலாம். மானிடன் கால் போகும் போக்கில் திரிகிறான்; அதாவது ஐம்புலவழி ஒழுகுகிறான். இப்படி ஒழுகுவதால் அவனுக்குப் பாவம் வருதல் திண்ணம். எனவே ஐம்புலன்களையும் வேண்டும்பொழுது (நல்ல நெறியில் ஒழுகும்பொழுது) செல்லவிட்டு, வேண்டாதபொழுது அடக்கி ஆளுதல் வேண்டும் என்று வேமனர் கூறுகிறார்.[67]

*12-2-1* இந்த அடக்கமுடைமை பொதுவாய் எல்லோருக்கும் தேவை. செல்வர்க்கு மிகமிகத் தேவை. செல்வர்க்கு, அடங்கி இருத்தல் மற்றொரு செல்வமாகவே கொள்ளப்படும் என்கிறார் வள்ளுவர்.

*12-2-2* வேமனரும், செல்வன் ஒருவன் செருக்கால் தன்னிடம் வந்தவனைப் பார்த்தும் பாராதவனைப் போலவும், கேட்டும் கேளாதவனைப் போலவும் இருப்பான்; வாய்திறந்து ஏழை எளியோருடன் பேசவும் மாட்டான் என்று, செல்வந்தர் செருக்கால்

கொள்ளும் நிலையை அறிவிக்கிறார். இவ்வாறு சொல்வதின் நோக்கம் செல்வர் செருக்கின்றி இருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தலே ஆகும்.[68]

*12-3-1* அடக்கத்தில் சிறந்தது நாவடக்கமாகும். வேறு எவற்றைக் காக்காவிடினும் நாவை அடக்கிக் காக்க வேண்டும். அதைக் காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புற நேரும். தீய சொல்லைவிடத் தீயே மேலானது; ஏன் என்றால் தீயினால் சுட்டபுண் உள்ளத்தில் வடுவை ஏற்படுத்தாது. உடம்பின் புறத்தே ஏற்படுத்தினாலும் அது ஆறிவிட வாய்ப்புண்டு. ஆனால் நாவினால் சுட்ட புண் உள்ளத்தில் வடுவை ஏற்படுத்தும்; அது ஆறுவதற்கும் வாய்ப்பில்லை[69] என்கிறார் வள்ளுவர்.

*12-3-2* வேமனர், 'பிறரை எந்நேரத்தும் பழித்தல் கூடாது. பிறரைப் பரமாத்மாவாக ஒருவன் நினைக்க வேண்டும். அவ்வாறு நினைக்காது நாவிற்கு வந்தவாறெல்லாம் பிறரைப் பழித்தலால் வருவது பாவமே தவிர வேறன்று.[70] ஒருகால் யுத்தத்தில் ஏற்பட்ட புண்ணை வேண்டுமாயின் மருந்து கொடுத்துக் குணமாக்க வழியுண்டு; ஆனால் பழித்தலால் ஏற்பட்ட புண்ணைக் குணமாக்கவே முடியாது; அதற்கு எந்த மருந்தும் இல்லை. எனவே நாவாகிய உறுப்பைக் காத்தல் மிக அவசியமாகும்' என்று தாமும் கூறுகிறார்[71]. மேலும் இந்த நாவடக்கத்தை ஓர் உவமையாலும் விளக்குகிறார். ஒரு வீட்டின் வாயிலுக்குக் கதவு, தாழ்ப்பாள் இருப்பது போலவே, சொற்களுக்கும் வரையறைகள் இருக்க வேண்டும்[72]. எனவே தருமம் அறிந்து தகுதியானவற்றையே சொல்லவேண்டும் என்பது இருவரின் எண்ணம்.

## பிறனில் விழையாமை

*13-1-1-1* வள்ளுவர் பிறனில் விழையாமை, பெண்வழிச் சேரல், வரைவின் மகளிர் ஆகிய மூன்று அதிகாரங்களுள் பிறனில் விழையாமையை அறத்துப் பாலிலும், பெண்வழிச்சேரல் வரைவின் மகளிர் அதிகாரங்களைப் பொருட்பாலிலும் சேர்த்துள்ளார். பிறனில் விழைதல் 'அறத்தையே—சிறப்பாக இல் வாழ்க்கையாகிய குடும்ப அமைப்பையே—கொல்லும்' என்பதைக் காட்ட அறத்துப்பாலில் சேர்த்து, 'அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்க்கை வாழ்பவன், பிறனுக்கு உரிமையானவளின் பெண்தன்மையை விரும்பாதவனே—என்று இல்வாழ்வானுக்கு படைக்கிறார்.[73] பொதுமகளிராகிய வரைவின் மகளிர் மாட்டும், தமக்குரிய மனைவியிடத்தும் சிற்றின்பமாகிய உடலுறவு

ஒன்றைக் கருதி, பாலுணர்ச்சிக்கு மட்டும் அடிமைப்பட்டு அளவு கடந்த இன்பம் துய்த்தல், பொதுவாக எல்லோருக்கும், சிறப்பாக அரசர்க்கும் பழியைப் பயந்து, ஆக்கத்தையும் புகழையும் கொல்லுமாதலின், அவற்றைப் பொருட்பாலில் ஆசிரியர் வள்ளுவர் அமைத்துள்ளதாகக் கொள்ளலாம்.[74]

*13-1-1-2* பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழும் நல்லியல்பே அறத்தின் அடிப்படையாகும். பிறருடைய உரிமையில் தலையிடுவதும் பிறருக்குத் தீங்கு செய்தலாகும்; எனவே பிறருடைய மனைவியை விரும்பாமையும் அறவோரின் கடமையாகிறது. இதனுல் தான் வள்ளுவர், உலகத்தில் பிறருக்குத் தீமை செய்யக்கூடாது என்ற அறநூலின் முடிவையும், பிறருடைய உரிமையைக் கெடுக்கக் கூடாது என்ற பொருள்நூலின் முடிவையும் ஆராய்ந்து கண்டவர்களின் வாழ்க்கையில், பிறருடைய மனைவியை விரும்பி ஒழுகும் அறியாமை இல்லை; பிறர் மனைவியை எப்பொழுதும் விரும்பி ஒழுகுவோர் நீங்காப் பெரும்பழியை அடைவர் என்றும், பிறன் மனைவியை விரும்பி நிற்பவர்கள் கீழ்ப்பட்டவர்கள் என்றும், அன்னுரிடத்துப் பகை, பாவம், அச்சம், பழி என நான்கும் நீங்காமல் சேரும் என்றும் கூறுகிருர்.[75]

*13-1-2* வேமனரும் எல்லாவித இழிவுகளுக்கும் இருப்பிடமானது இந்த உடல். பிறருடைய மனைவியை விரும்பும் செயல் இழிவினும் இழிவாகும்; இந்தச் செயல் ஒருவனுக்கு இழிவைக் கொடுப்பதோடு அவன் அழிவுக்கும் காரணம் ஆகும் என்றும், அவன் அரசர்களாலும் தண்டிக்கப்படுவான் என்றும், பிறர் மனைவியை விரும்புதல் நரகத்தை விரும்பியது போலாகும் என்றும் கூறுகிருர்.[76]

*13-2-1* அறநெறிப்படி இல்வாழ்க்கை நடத்துகிறவன் பிறன் மனைவியைக் காமத்தோடு நோக்காது வாழ்தல் வேண்டும். அது பேராண்மை ஆகும். அப்பேராண்மை சான்ருேர்க்கு அறமுமாகும்; ஆன்ற ஒழுக்கமுமாகும் என்கிருர் வள்ளுவர்.

*13-2-2* வேமனரும், இந்த நோக்கிலேயே பிறன் மனைவியைக் காம நோக்கோடு பார்க்காது, தாயாக நினைத்துப் பார்க்க வேண்டும்; அறிவிலிகளே காம நோக்கோடு பார்ப்பர் என்று கூறுகிருர்.[77] மேலும் தீயவழியில் ஒழுகும் சில பெண்களைப் பற்றிச் சித்திரிக்கிருர் வேமனர். பெண்கள் கற்புடையவராக இருக்க வேண்டுமானுல், ஆடவர்களின் ஒழுக்கமும் நன்ருக இருக்க வேண்டும்; ஆடவர்கள் ஒழுக்கம் தவறினுல் பெண்களும் ஒழுக்கம்

தவறுவர்; எனவே நல்லதொரு இல்வாழ்க்கை மற்றவருக்கும் மாதிரியாக அமைய வேண்டுமானுல், இருவரும் பிறரைக் காம நோக்கில் நோக்காத பெருந்தன்மை வேண்டும் என்கிருர் வேமனர்.[78]

## பொறையுடைமை

*14-0-1* உலகத்தில் தேவையற்ற எத்தனையோ தீய பழக்கங்கள் சமுதாயத்திடையே இருந்து வருகின்றன. பழிக்குப்பழி என்றுல் ஒரு முடிவு இல்லாமல் போகும். முடிவு காண வேண்டு மானுல், சமுதாயத்திடையே பொறையுடைமை இருக்கவேண்டும். இந்தப் பொறுமையை உயிரற்ற ஒரு மலையைக் கொண்டு விளக்குகிருர் வள்ளுவர். மலை எத்தனையோ துன்பங்களுக்குள்ளா யினும் பொறுத்துக் கொண்டிருத்தல்போலத் தீமைகளைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிருர்.

*14-0-2* பொறையுடைமை இல்லையென்றுல் எத்தனை காவியங்கள் கற்றுலும், எத்தனை மந்திரங்கள் உச்சரித்தாலும் அவற்றுல் ஒரு பயனும் இல்லை; பொறுமையைக் கடைப்பிடிக் கிறவனே கற்றவனுவான்.[79]

*14-1-1* தீமை செய்தவர்க்குத் தீமையே செய்து அவர்களைத் தண்டிக்கலாம். அதனுல் இருவரின் மனமும் கெடும். தண்டனை பெற்றவனும் திருந்துவதில்லை; தண்டனை கொடுத்தவனும் பண்படுவதில்லை. தண்டித்தவர் மனவலிமையற்றவராவார். ஆகையால் சான்றோர் தண்டித்தவர்களை ஒரு பொருளாக வைப்பதில்லை; ஆனுல் பொறுத்தவர்களைப் பொன்போல் நன்கு போற்றி மதிப்பார்கள்; அது மட்டுமின்றித் தண்டிப்பவர் பெறுவது சிறுபொழுது இன்பமே. பொறுத்தவருக்கு நிலைத்த இன்பம் உண்டு; எப்பொழுதும் புகழ் நிலைத்து நிற்கும். ஆகையால் தமக்குப் பிறர் தீமை செய்தபோதிலும் பதில் தீமையைச் செய்யாமலிருப்பதே அறமாகும். ஒருகால் சிலர் மனச்செருக்கால் தீமையைச் செய்தபோதிலும், அதையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிருர்.[80]

*14-1-2* வேமனரும் வேறுவேறு கோணங்களில் இதனை அறிவுறுத்துகிருர். உடல் வலிமை இருந்தால் மட்டும் போதுமா? அந்த வலிமை எப்பொழுதும் நிலைத்து நிற்காது; நிலைத்து நிற்பது பிறன் தனக்குத் தீமை செய்ய அதனைப் பொறுத்துக் கொள்ளுதலே ஆகும். இப்படிப் பொறுத்துக் கொள்வதால் தம்மைப் பாராட்டிப் பேசுவர்,[81] பொறுமையால் மானிடன் சாதிக்காதது ஒன்றுமில்லை.

சான்ருேர் பேரும் புகழும் பெற்று வாழ்வதற்குக் காரணம் பொறுமையே.[82] பொறுமையை மேற்கொண்டு ஒழுகுவோர் பரமாத்மா நிலையில் வைத்து எண்ணப்படுவர்.[83] இத்தகையவரே உயர்ந்தோராவார்; மேலும் பிறன் தனக்குத் தீமை செய்யாத நிலையினும் ஒருவன் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் என்கிருர்; அதாவது மனக்குழப்பமுடைய ஒருவன் தம்மிடம் அறிவுரைக்கு வரும்பொழுது பொறுமையாய் அவனுக்குத் தேவையானதைச் செய்து அனுப்பவேண்டும்[84] என்று கூறுகிருர்.

*14-2-1* இல்வாழ்க்கையில் அன்பு வளரவளரத் தன்னலம் தேயத்தேய உலகக் குடும்பத்தில் தன் உயிர்க்கும், மற்ற உயிர்க்கும் உள்ள வேற்றுமை உணர்ச்சி மறையும். அப்போது பிறர் செய்யும் தீமையைப் பொறுத்தலேயன்றி மறத்தலும் முடியும். எனவே பிறர் செய்த தீமையை எப்போதும் பொறுப்பது நல்லது; அதைப்பற்றி நினைக்காமலே மறந்து விடுவது அதைவிட நல்லது என்கிருர் வள்ளுவர்.[85]

*14-2-2* வேமனரும், தீயோன் எவ்வளவு நிந்தனை செய்தாலும் அதைப் பொறுத்தலோடு மறந்து விடுதல் நல்லது என்ற கருத்தைப் பித்தளை, தங்கம் என்ற உலோகங்களைக் கொண்டு விளக்குகிருர். தங்கம் மதிப்புடைய ஒரு பொருள்; பலராலும் உயர்நிலையில் வைத்து எண்ணப்படுவது. பித்தளையோ தங்கம் போல் அவ்வளவு சிறப்புடையது அன்று. தங்க உலோகத்தை அடிக்க அது அதிக ஒலியைக் கொடுக்காது; ஆயின் பித்தளைப் பாத்திரத்தை அடிக்க அது அதிக ஒலியைக் கொடுக்கும்; இது போலவே, உயர்ந்தோர் பிறர் செய்யும் தீமையை வெளிப் படுத்தாது பொறுத்துக் கொள்வர்; தீயோர் சிறு பிழை செய்யினும் பொறுக்காது பொங்கி எழுவர்[86] என்கிருர். மேலும் கட்டை நெருப்பில் வீழ்ந்து உருவம் மாய்வது போன்று பொறுமை உடையோனிடம் பிறர் செய்யும் தீமைகள் அழியும் என்றும் கூறுகிருர்.[87]

*14-3* எனவே, நல்ல சமுதாயத்திற்கு வேண்டிய குணங்களில் மிக முக்கியமானது பொறுமைக் குணம் என்பதும், அதுவே மனிதனை மனிதனுக்க வல்லது என்றும், மனிதனுக்குச் சீரும் சிறப்பும் நல்க வல்லது என்றும் அறியலாம்.

## அழுக்காருமை

*15-1-1* பொருமையை ஒழித்தால்தான் பொறுமை வரும். பொருமையற்ற அன்புடையோர் பிறர் சீரும் சிறப்புமாக இருப்பதைக் கண்டு மனம் மகிழ்வர்; பொருமையுடையோர் மனம்

புழுங்குவர். இப்படிப் பிறர் ஆக்கத்தைக் கண்டு பொறுமை கொள்வோருக்கு அறமும் ஆக்கமும் நில்லா.[88] எனவே அறிவுடையோர் பொறுமை கொள்ளுதலாகிய தவறான நெறியில் துன்பம் வருதலை அறிந்து அறமல்லாதவற்றைச் செய்ய மாட்டார்கள்.[89] பொறுமையால் அறம் அல்லாத தவறான வற்றைச் செய்யின் அதுவே அவர்களுக்குப் பகையாய் அமையும்[90] என்கிறார் வள்ளுவர்.

*15-1-2* வேமனரும், உலகத்தில் பிறக்கிறோம்; வளர்கிறோம்; சாகிறோம். இச்செயல் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால் உலகப்பொருள்கள் இவ்வனைத்துப் பிறவிகளிலும் நம்முடன் இருப்ப தில்லை; இதையறிந்திருந்தும் மக்கள் பிறர் ஆக்கம் கண்டு பொறுமை கொள்ளுகின்றனர். அப்படிக் கொள்வதால் ஒருவனுக்கு வருவது தீமையே.[91] பொறுமையால் ஒருவன் பிறனுக்குத் தீங்கு நினைத்தால் அது அவனுக்கே தீமையாய் விளையும்[92] என்று கூறுகிறார்.

*15-2-1* தான் கொடுக்கவில்லை என்றாலும், பிறருக்குக் கொடுத்தலைக் கண்டு அழுக்காறு கொள்வோன் கெடுவதோடு, அவன் சுற்றமும் உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிக் கெடும். எனவேதான், வள்ளுவர் அழுக்காற்றை ஒரு பாவி என்றே குறிப் பிடுகிறார். இந்தப் பாவி ஒருவனின் செல்வத்தை அழித்தலோடு அவனைத் தியுழியும் உய்த்துவிடும்[93] என்கிறார்.

*15-2-2* வேமனரும், தான் பிறருக்கு உணவிட இல்லை என்றாலும் இடுவோரைக் கண்டு அதற்காகப் பொறுமைப்படுதல் கூடாது; முன்னிருந்து ஒரு திருமணத்தை நல்லமுறையில் நடத்திய பெருமை உடையவனாக அழுக்காறில்லாதவன் மதிக்கப்படுவான்.[94] பொறுமை கொள்வோனுக்கு எவ்விதப் பாக்கியமும் இல்லை; அவன் அறிவிலியே; அவன் வாழ்வும் பயனற்றதே என்று கூறுகிறார்.[95]

## வெஃகாமை

*16-0* பிறர் பொருளைக் கண்டு பொறுமைப்படுதலே குற்ற மாகும் பொழுது பிறர் பொருளை வெளவக் கருதுதல் அதனினும் பெரிய குற்றமாகும் என்பது சொல்ல வேண்டியதில்லை. எனவே இல்வாழ்வோர்க்கு வெஃகாமையும் மிகமிகத் தேவையே.

*16-1-1* பிறர் பொருளை வெளவுதலால் வருவது சிற்றின்பமே. அதற்காகத் தம் உயிரையும் பொருட்படுத்தமாட்டார்கள். ஆயின் அறநெறியால் வரும் பேரின்பம் விரும்புவோர் வெளவுதலை மேற் கொள்ள மாட்டார்கள்.[96] புலனடக்கம் இல்லாத காரணத்தால்

பிறர் பொருளை விரும்பிச் சிறிய இன்பத்தைப்பெற மனம் அலையும். ஆனால் புலன்களை வென்ற குற்றமற்ற அறிவுடையோர் வறுமையுற்ற காலத்தும் பிறர் பொருளை விரும்ப மாட்டார்கள்[97] என்கிறார் வள்ளுவர்.

*16-1-2* வேமனரும், உயிரினும் சிறப்புக் கொடுத்துப் பிறர் பொருளை வெளவ நினைப்போரை மிகவும் இகழ்ந்து பேசுகிறார்.[98] யாம் புலனடக்கமுடைய பிராமணர்கள் என்று சொல்லிக் கொண்டு, பிறர் பொருளை வெளவக் கருதுவோரை அவர்கள் பிராமணர்களே அல்லர் என்று இழித்துப் பேசுகிறார்.[99]

*16-2* வெஃகுதலால் வரும் தீமையைப் பற்றிப் பேசுங்கால், வள்ளுவர், ஒருவன் நடுவின்றி நன்பொருளை வெஃகினால், அவன் குடி அழிதலோடு பெருங்குற்றத்தையும் அந்த வெஃகுதல் தேடித்தரும் என்று கூறுகிறார்.[100] வேமனர், பிறர் பொருளை வெளவுதல் பாவத்துக்குக் காரணம் என்றும், அன்னானுக்கு முக்தியே இல்லை என்றும் கூறுகிறார்.[101] எனவே, பிறர் பொருள் மேல் ஆசை இருக்கக்கூடாது என்ற கொள்கையை இருவரும் அறிவுறுத்துகின்றனர்.

## புறங்கூறாமை

*17-0* ஒருவனைப் புறத்தில் பழித்துக்கூறி, நேரில் கண்டபோது பொய்யாகப் பழகுவது வஞ்சகம். அது அன்பான வாழ்க்கைக்கு முரண்பட்டதாகும். இதனை வள்ளுவர் பெருங்குற்றமாகவே கருதுகிறார். அவ்வாறு பழிப்போருக்கு ஏற்ற அறிவுரையையும் இயம்புகிறார். "பிறரைப் புறத்தே பழித்துக் கூறுவோர் தாமும் பிறரால் அவ்வாறே பழித்துக் கூறப்படுவர்; எனவே புறங்கூறுகின்றவர்கள் தமக்குத் தாமே தீமையைத் தேடிக் கொண்டவராகிறார்கள்.

*17-1-1* புறங்கூறுவோர் மற்றவரின் குற்றங்களைக் காண்பது போலத் தம் குற்றத்தையும் காண நேர்ந்தால், அவர் உயிர்க்கு எத்தீங்கும் வராது. அவ்வாறு காண நேர்ந்தால் புறங்கூறுவதையும் ஒரு குற்றமென உணர்ந்து அதைக் கைவிடுவார்கள்; திருந்தி நன்மையும் அடைவார்கள்"[102] என்று வள்ளுவர் கூறுகிறார்.

*17-1-2* இவ்வாறே வேமனரும் கூறுகிறார். சொல்லும் போக்கில் சிறிது மாற்றம் இருப்பினும் அடிப்படைக் கருத்து ஒன்றே. தம் குற்றத்தை அறியாது பிறர் குற்றங்களை எடுத்துக் காட்டுதல் தகாத செயலாகும்.[103] உலகத்தில் குற்றமே

செய்யாதவர்கள் இல்லை. இவ்வாறிருக்கத் தம் குற்றத்தைப் பாராது பிறர் குற்றங்களை எடுத்துக் கூறிப் பழிப்போர் பலர் இருக்கின்றனர். இவர்கள் இதைக் குற்றம் என்று தெரிந்து கொண்டால், திருந்தி நன்மை அடைவர் என்று வேமனர் கூறுகிறார்.[104]

*17-2* எனவே, புறங்கூறி அதனால் எல்லோருக்கும் தீமை விளைவித்துப் பொய்த்து உயிர் வாழ்கின்ற வாழ்வை இருவரும் வெறுத்துப் பேசுதலை அறிலாம்.

## பயனில சொல்லாமை

*18-0* இல்வாழ்வான் புறங்கூறாது இருத்தல்போலவே பயனில சொல்லாமையையும் மேற்கொள்ள வேண்டும். பயனில சொல்லி வாழும் வாழ்க்கை தம்மைத் தாம் ஏமாற்றிக் கொள்ளும் ஒரு போலி வாழ்கையாகும்.

*18-1-1* பயனில்லாத சொற்களை நல்ல பண்புடையோர் சொல்வார்களானால், அதனால் அவர்களுடைய மேம்பாடும், மதிப்பும் நீங்கிவிடும்; அவர்களை மக்களுள் பதர் என்றே இழித்துப் பேசுவர்[105] என்று வள்ளுவர் கூறுகிறார்.

*18-1-2* பயனற்ற சொற்களைப் பேசித் தொண்டைக்கு வீண்வலி உண்டாக்கும் அத்தகையாருக்கு உத்தமரிடத்து மதிப்பு இல்லை;[106] எனவே பயனுடையவற்றைப் பேசுதலும், பயனில்லாதவற்றைப் பேசாது விடுதலும் விரும்பத்தக்கதும், உத்தமர்க்கு வேண்டியதும் ஆகும் என்று இருவரும் அறிவுறுத்துகின்றனர்.[107]

## தீவினையச்சம்

*19-1-1* இவ்வாறு மனமொழிகளில் அடக்கத்தை உடையவர்கள் அடுத்து மெய்யடக்கத்துக்குப் போவர்; அப்போது அது செயலில் மிளிர்ந்து, நல்வினையாற்றித் தீவினை ஒழியச் செய்யும். நல்வினை நன்மையே பயக்கும்; தீவினை தீமையே பயக்கும். ஆகவேதான் வேமனர் 'தீயகுணங்களால் நேர்வது தீமை மட்டுமல்ல; நரகமும் அதனால் பெற வேண்டும்' என்கிறார்.[108]

*19-1-2* வள்ளுவர் இந்தக் கருத்தை அழகான ஓர் உவமையைக் கொண்டு விளக்குகிறார். பிறர்க்குத் தீமை செய்யத்

தமக்குத் தீமை உண்டாதல் உறுதி; அது மட்டுமன்று, அதனால் வரும் தீமை அழியாத ஒன்று; தீயால் வரும் தீமையோ அழியக்கூடியது; ஆனால் தீய செயல்களால் வரும் தீமையோ அழியாது நின்று தீமையை உறுதியாகப் பயந்தே தீரும்[109] என்று கூறுகிறார்.

*19-2-1* தீமையைச் செய்யாது விடுதல் மட்டுமன்று; தீமையை எண்ணுவதும் கூடாது. எண்ணத்து அளவில் தோன்றிய தீமையும் பயனைப் பயந்தே தீரும். ஆகவே மறந்தும் பிறன் கேடு நினைக்கக் கூடாது. அப்படி நினைக்கின்றவனுக்குக் கெடுதி விளையுமாறு அறம் எண்ணிவிடும்[110] என்றும் கூறுகிறார் வள்ளுவர்.

*19-2-2* வேமனரும், பிறருக்கு ஒருவன் தீமையைச் செய்ய நினைத்தால் போதும்; அதனால் தீமை அவனுக்கே வரும். தெய்வமே அவனை அழிக்க எண்ணும். இதனை அறியாதிருக்கிறார்கள்[111] மூடர்கள் என்று கூறுகிறார்.

*19-3-1* உலகில் ஒவ்வொருவரும் இன்பமாகவே இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். அதனால் அதற்குரிய வழியைத் தேடிக்கொள்வதில்லை. துன்பங்கள் தன்னை வருத்தக் கூடாதென்று விரும்புகின்றவன் மற்றவருக்குத் தீய செய்யாது வாழவேண்டும்; அதுவே தக்கவழி. ஏன் என்றால் எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும்; ஆனால் தீயவை செய்வதால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின்சென்று வருத்தும்[112] என்று வள்ளுவர் கூறுகிறார்.

*19-3-2* உலகத்தில் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் அனைவருக்கும் உண்டு. ஆனால் அதனை அனுபவிக்கும் முறை தெரியாது அல்லற்படுகின்றனர்; நல்லதையும் தீயதையும் ஆராயாது மற்றவருக்குத் தீமைகளைச் செய்ய எண்ணுகின்றனர். இவ்வாறின்றி நல்லதையும் தீயதையும் உணர்ந்து நல்லனகொண்டு தீயன நீக்கி நடத்தலே எப்போதும் இன்பம் துய்ப்பதற்கு வழியாகும். இவ்வாறு செய்யாதவன் எல்லாவகையிலும் கேடுறுவான் என்று வேமனர் கூறுகிறார்.[113]

*19-4-1* தீயவன் தன் வயிற்றின்பத்திற்காகப் பல தீமைகளைச் செய்தே வருகிறான். அவனுக்குக் கேடு வருவது உறுதியாகும்; இறப்பும் அவனை விடாது தொடரும்[114] என்றும் சொல்கிறார் வேமனர்.

*19-4-2* வள்ளுவரும் இக்கருத்தையே ஒருவனுடைய நிழல் அவன் எங்குச் சென்றாலும் விடாமல் அடியின்கீழ்த் தங்கியிருப்பது

போலத் தீமையும் செய்தவனை விடாமல் தொடரும் என்று, நிழல் என்ற உவமையைக் கொண்டு விளக்குகிறார்.[115]

*19-5* எனவே, தீயோனுக்குத் தெய்வமும் உதவாது என்றும், இந்தகைய தீய குணங்களை நீக்கி நற்குருவைச் சேர்ந்து உத்தம பதவியை அடையவேண்டும் என்றும், ஒருவன் கேடு இல்லாமல் இருப்பதற்கு அதுவே வழி என்றும் இருவரும் அறிவுறுத்து கின்றனர்.[116]

## ஒப்புரவறிதல்

*20-0* எவ்வளவு அறிவு ஆற்றல் உடையவனும், உலகில் பலருடைய உழைப்பாலாகிய உதவி இல்லாமல் தனி ஒருவனாக வாழ்க்கை நடத்த முடியாது. இந்த உண்மையை உணர்ந்த வர்க்குத் தம் வாழ்க்கை முழுவதும் பிறர்க்குப் பயன்படவேண்டும் என்ற ஆர்வம் பிறக்கும். கைம்மாறு கருதாமல் பலர்க்கும் உதவ வேண்டும் என்ற நல்லெண்ணம் உண்டாகும். அவர்களே ஒப்புர வறிந்தவர்கள். அத்தகைய ஒப்புரவாளர்களைப்பற்றி வள்ளுவர் பத்துப் பாடல்களில் பேசுகிறார். இந்த ஒப்புரவு இல்வாழ்வோர் மேற்கொள்ள வேண்டியவற்றுள் முக்கியமான ஒன்று.

*20-1-1* ஒப்புரவாளனின் தன்மைகளை வள்ளுவர் மூன்று உவமைகளால் விளக்குகிறார். உலகம் வாழவேண்டும் என்று விரும்புகின்ற பேரறிஞனிடம் செல்வம் சேருமாயின் அது ஊரார் நீருண்ணும் குளம் நீர் நிறைந்தது போலாகும். அன்பு மிக்கோன்பால் செல்வம் சேருமாயின் ஊர்நடுவே உள்ள மரம் நிறையப் பழுத்தது போன்றது. அருள்மிக்க பெருந்தகை யாளனிடம் செல்வம் சேருமாயின் எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறுத மரம் போன்றது.[117] அறிஞன் தன்னில் சேர்ந்ததைக் கொடுப்பான்; அன்பன் தன்னில் ஒரு பகுதியைக் கொடுப்பான்; அருள்மிக்க பெருந்தகையாளனோ தன்னிடம் சேர்ந்ததையும், தன்னில் ஒரு பகுதியையும் கொடுப்ப தோடு, தன்னையே முழுவதுமாகப் பிறர்க்குக் கொடுக்கவும் வல்லவன். குளம் தன்னிடம் சேர்ந்த நீரைக் கொடுக்கும்; பழுமரம் தன் பகுதிகளாகிய பழங்களைக் கொடுக்கும்; ஆனால் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும் மரமோ வேர், பட்டை, இலை, பூ, காய், பழம் முதலிய எல்லாவற்றையும் கொடுத்துத் தன்னையே அழித்துக் கொண்டு பிறர்க்குப் பயன்படும்; பெருந்தகையாளன் ஒப்புரவு இத்தகையது.

*20-1-2* வேமனர் இவ்வாறு ஒப்புரவு பற்றிப் பிரித்துப் பேசவில்லை. ஆனால், பிறர்க்கு உதவவேண்டும், தானம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பேசியுள்ளார்.

*21-1-1* ஒப்புரவை அடுத்து, இல்வாழ்வோர் ஈகையையும் செய்யற்பாலர். தம்மாலான உதவியை உரியவர்க்குச் செய்து அவர் துன்பம் துடைப்பதே ஈகையாகும். அவ்வாறன்றி, ஒன்றை எதிர்பார்த்தோ, புகழ்பெற வேண்டியோ பொருள் உடையவருக்கே மேன்மேலும் கொடுப்பது ஈகையாகாது.[118] ஈபவர் நிலை இவ்வாறு இருந்தாலும், பெறுபவர், நல்லாறு எனினும் கொளல் தீது[119] என்று வள்ளுவர் கூறுகிறார். இதனால் பிறர்பால் பொருளைப் பெறுவது இழிவு என்று தெரிகிறது.

*21-1-2* வேமனரும், இல்லை என்று ஒருவனிடம் யாசிப்பவன் கடைப்பட்டவன் என்றும், பிறரிடம் யாசிக்காது தன் முயற்சியால் வாழ்கின்றவன் தெய்வத்துக்கு இணை என்றும், பொருள் இருந்தும் பிறர்க்குக் கொடுக்காதவர்கள் சிறிதும் நன்றியில்லாதவர்கள் என்றும் கூறுகிறார்.[120]

*21-2-1* 'மேலுலகம் இல்லை என்றாலும் ஈக' என்று கூறுவதாலேயே கைம்மாறு கருதாத ஈகையின் சிறப்பை அறிவிக்கிறார் வள்ளுவர்.[121] இல்லை என்று சொல்லி ஒருவன் இரத்தலைச் செய்யாத முன்னே குறிப்பால் அறிந்து அவனுக்குக் கொடுப்பதே சிறந்தது. அவ்வாறு கொடுக்கிற தன்மை நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு[122] என்கிறார் வள்ளுவர்.

*21-2-2* வேமனரும், ஈவோன், வறியவன் தன்னைக் கேட்காமலே குறிப்பால் அறிந்து கொடுக்க வேண்டும்; அத்தகையோனுக்குச் செல்வத்தைத் தெய்வம் மீண்டும் கொடுக்கும்; அதனால் அவன் வறுமையடைய வாய்ப்பில்லை என்று கூறுகிறார்.[123]

*21-3-1* ஈகையிலும் பெரிய ஈகையாகக் கருதப்படுவது பிறர் பசியை நீக்குவதே ஆகும்; தவஞ்செய்வோர் தம் பசியை மட்டும் பொறுத்துக்கொண்டு உடம்பை ஒடுக்கித் தவஞ்செய்கின்றனர்; இல்வாழ்வோர் தம் பசித்துன்பத்தையும் போக்கிக்கொண்டு பிறர் பசித்துன்பத்தையும் நீக்கும் ஆற்றல் உடையவர்கள்; எனவே தவஞ்செய்வோர் ஆற்றலைவிட இல்வாழ்வோரே சிறந்த ஆற்றலுடையவர்கள். பசி வந்துவிட மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காதல் ஆகிய அனைத்தும் பறந்துவிடும். இத்தகைய பசியைப் பிறர் அடையும்பொழுது அப்பசியை நீக்கியதால் செலவழிந்த

பொருளும், பிறவும் கொடுத்தவருக்கே திரும்ப வந்து சேரும். ஆதலால், பொருள் பெற்ரோர் பொருளேச் சேர்த்து வைக்கும் இடம் போன்றது ஈகை என்கிருர் வள்ளுவர்.[124]

*21-3-2* வேமனரும், அன்னதானத்தைக் காட்டிலும் சிறந்த தானம் இல்லே; தானங்களிலெல்லாம் அன்னதானமே சிறந்தது; இரப்போனுக்குப் பிற எந்தத் தானத்தாலும் மனநிறைவு ஏற்படாது; அன்னதானத்தைப் பெறும்பொழுது மட்டும் மன நிறைவு உண்டு; இதனுல், தானம் செய்வோனும் தேவலோகத்தில் விருந்தினனுக ஏற்றுக் கொள்ளப்படுவான் என்றும், அதுவே அவனுக்குப் பொருள் சேர்த்து வைக்கும் இடம் என்றும் கூறுகிருர்.[125] இவ்வாறு ஈவதால் வரும் இன்பம் பெரியது; இந்த இன்பத்தை அறியாதவர்கள் தம் உடைமையைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து, பின் பொருளே இழந்து வருந்துவர். இத்தகையாரை வள்ளுவர் 'வன்கணவர்' என்று ஏசுகிருர்.[126] வேமனர் இத்தகைய ஈயாத உலோபிகளே மலத்துக்குச் சமமாகப் பேசுகிருர்.[127]

*21-4-1* அறநெறி உணர்ந்தவர்கள் பிறர்க்கு ஈயாமல் வாழ மாட்டார்கள்; ஈயாது வாழ்கின்றவர்கள் வாழ்ந்தும் வாழாதவர் களே; காரணம், பொருளிருந்தும் ஈயாமை சாதலேக் காட்டிலும் கொடியது[128] என்று பேசுகிருர் வள்ளுவர்.

*21-4-2* வேமனரும், இப்போக்கிலேயே செல்வன் ஈதலில் வரும் இன்பத்தை அறியாது, ஈயாத அனேத்துச் செல்வமும் தனக்கே என்று செருக்குக் கொள்கிருன். இறுதியில் அவன் எவ்வித நன்மையும் பெறுவதில்லே; தீமையையே பெறுகிருன். புற்றின் மேல் இருக்கும் சிதல் இருந்தும் ஒன்றுதான் இறந்தும் ஒன்றுதான்; எந்நிலேயிலும் அதனுல் சமுதாயத்திற்கு ஒரு பயனுமில்லே; செல்வம் இருந்தும் பிறர்க்கு ஈயாதவர்கள் இத்தகையவரே என்று வேமனர் விளக்குகிருர்.[129]

## புகழ்

*22-1-1* வறியவர்க்குக் கொடுத்து உதவி, அதனுல் புகழ்பட வாழ்தல் வேண்டும். இல்வாழ்க்கையின் பயன்களில் இதுவும் ஒரு சிறந்த பயனுகும். புகழ் என்று திருவள்ளுவர் சொல்வது பிறர் அறியும்படியாக இக்காலத்துச் செய்தித் தாள்களில் வரும் விளம்பரத்தை அன்று; ஒருவனுடைய அற ஒழுக்கத்தின் அடிப்படையாய் அமைவதே புகழ் என்று அவர் விளக்குகிருர். அதனுல்தான் புகழ் அதிகாரத்தை ஆசிரியர் அறத்துப்பாலில்

சேர்த்துள்ளார் போலும். அவர் வறியவர்க்கு ஈதலால் வருகிற புகழ்கொண்டு வாழவேண்டு மென்கிறார். அந்தப் புகழே உயிர்க்கு ஊதியமாவது; மற்றொன்றும் உயிர்க்கு ஊதியமாகாது. புகழே அழியாது இருப்பது. எனவே புகழோடு வாழ வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.[130]

*22-1-2* வேமனர், எப்படிப் புகழோடு வாழ வேண்டும் என்பதை அனுபவ உவமைகளால் விளக்குகிறார். புற்றில் தேன் கிடைப்பது போன்று, மலைச்சுரங்கங்களில் மணிகள் கிடைப்பது போன்று, கட்டையில் நெருப்பு இருப்பது போன்று மனிதன் புகழைப் பெற வேண்டும். இப்படிப் புகழைப் பெறும் பிறவியே சிறந்த பிறவியாகும்[131] என்கிறார்.

*23-0* இவற்றால், அன்புடைமையின் அடிப்படையில், இல் வாழ்வோர் இல்லறமாகிய நல்லறத்தைத் தொடங்கி, படிப்படி யாகக் குடும்பத்தில் பிறர் நலத்தைப் பேணிப் பின் குடும்ப நலத்தையும் சமுதாய நலத்துக்கு ஆட்படுத்தி, ஈகை, ஒப்புரவு களைச் செய்யும் சமுதாயநலத் தொண்டராக விளங்கவேண்டும் என்பதும், இப்படி வாழ்வாங்கு வாழ்பவர் நிலைபேறுடைய புகழைப் பெறுவர் என்பதும் விளங்கும்.

## மதிப்பீடு

*23-1* ஆந்திர, தமிழக மக்கள் சமுதாய வாழ்வின் நெறி முறைகளும், ஒழுகலாறுகளும் ஏறக்குறைய ஒன்றே. ஆயினும், அவற்றை உணர்த்தும் போக்கில் இரு புலவர்களும் ஒத்தும் உறழ்ந்தும் திகழ்கின்றனர் என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.

*23-2* தீநெறி ஒழுகுவோரை, மிகவும் இழிந்த சொற்களால் உணர்ச்சி வயப்பட்டுப் பழித்துப் பேசுகிறார் வேமனர். இத்தகு சொல்லாட்சிகளைக் 'காய்கவரா' வள்ளுவரிடம் காண்பதற்கு இயலாது.

*23-3* பெண்வழிச்சேறல் முதலான சில ஒழுகலாறுகளை வள்ளுவர்போல் வேமனர் வெறுத்துப் பேசவில்லை; அது அவர்கள் காலச் சமுதாயப் பண்பைக் காட்டுகிறது.

இத்தகு உண்மைகளை இவ்வியலால் அறிகிறோம்.

## குறிப்பெண் விளக்கம்

1. கலைக்களஞ்சியம், தொகுதி - 1, பக். 255.
2. தி.நீ.இ., பக். 1.
3. புறம் 34.
4. குறள் 183.
5. *Oxford Dictionary*, p. 408.
6. திருக்குறள், பரிமேலழகர் உரை, பக். 1.
7. குறள் 34.
8. வே. ப. ர. 501.
9. வே. ப. ர. 526.
10. வே. ப. ர. 2442.
11. குறள் 32, 33, 36.
12. வே. ப. ர. 487.
13. வே. ப. ர. 602.
14. வே. ப. ர. 2261.
15. குறள் 40; வே.ப.ர. 2106.
16. குறள் 42.
17. வே. ப. ர. 740.
18. வே. ப. ர. 2288.
19. குறள் 51.
20. குறள் 52.
21. குறள் 54.
22. குறள் 57.
23. குறள் 56.
24. குறள் 55.
25. குறள் 58.
26. வே. ப. ர. 2307, 1240.

27. வே. ப. ர. 2389.
28. " 2202.
29. " 2304.
30. " 2319, 2322.
31. " 2309, 2439.
32. குறள் 57; வே.ப.ர. 2389.
33. வே. ப. ர. 1502.
34. " 2318, 2317.
35. குறள் 59.
36. வே. ப. ர. 2323.
37. " 2369.
38. குறள் 61, 62.
39. வே.ப.ர. 1491.
40. " 249, 407.
41. " 1018, 1022, 1879.
42. குறள் 67, 68.
43. வே. ப. ர. 2391, 2404.
44. வே. ப. ர. 520, 2395.
45. வே. ப. ர. 2230, குறள் : 60.
46. குறள் 80.
47. குறள் 72, 74, 75, 77.
48. வே. ப. ர. 2092.
49. வே. ப. ர. 1921.
50. தி. சொ. அ. சொ. பகுதி-2, பக். 26.
51. குறள் 81.
52. சிலம்பு : கொலைக்களக்காதை, வரி : 71-73.
53. கம்ப. சுந்தரகாண்டம், காட்சிப்படலம். பா : 15.
54. குறள் 81.
55. வே. ப. ர. 1520, 2114.
56. குறள் 85, 86.
57. வே. ப. ர. 2156.

58. குறள் 82.
59. வே. ப. ர. 651, 2075.
60. வே. ப. ர. 1968; குறள் : 96.
61. குறள் 101, 102, 103.
62. குறள் 108, 104, 110.
63: வே. ப. ர. 405.
64. குறள் 106; வே. ப. ர. 1484.
65. குறள் 116; வே. ப. ர. 2388.
66. குறள் 124, 126.
67. வே. ப. ர. 1391.
68. குறள் 125; வே. ப. ர. 295.
69. குறள் 127, 129.
70. வே. ப. ர. 422.
71. வே. ப. ர. 69.
72. வே. ப. ர. 210.
73. திருக்குறள் ; 147.
74. தி. சொ. அ. சொ., பகுதி—2, பக். 22.
75. தி. சொ. அ. சொ., பகுதி-2, பக். 141. 142, 145, 146
76. வே. ப. ர. 2298, 2311.
77. குறள் 148, 150; வே. ப. ர. 2392.
78. வே; ப. ர. 2394.
79. குறள் 151; வே. ப. ர. 238.
80. குறள் 155, 156, 157, 158.
81. வே. ப. ர. 517.
82. வே. ப. ர. 2197.
83. வே. ப. ர. 1434.
84. வே. ப. ர. 2387.
85. குறள் 152.
86. வே. ப. ர. 460.
87. வே. ப. ர. 2425.

88. குறள் 163.
89. குறள் 164.
90. குறள் 165.
91. வே. ப. ர. 1987.
92. வே. ப. ர. 403.
93. குறள் 166, 168.
94. வே. ப. ர. 1252.
95. வே. ப. ர. 670.
96. வே. ப. ர. 2423.
97. குறள் 173, 174.
98. வே. ப. ர. 1916.
99. வே. ப. ர. 1466.
100. குறள் 171.
101. வே. ப. ர. 1920.
102. குறள் 186, 190.
103. வே. ப. ர. 404.
104. வே. ப. ர. 521, 989, 1419.
105. குறள் 195, 196.
106. வே. ப. ர. 454.
107. குறள் 106.
108. வே. ப. ர. 497, 1191.
109. குறள் 202.
110. குறள் 204.
111. வே. ப. ர. 22, 701, 1029.
112. குறள் 206, 207.
113. வே. ப. ர. 2072, 1342.
114. வே. ப. ர. 714, 1444.
115. குறள் 208.
116. வே. ப. ர. 503, 2227; குறள் : 210
117. குறள் 215, 216, 217.

118. குறள் 221; வே. ப. ர. 2403.
119. குறள் 222.
120. வே. ப. ர. 2255.
121. குறள் 222.
122. குறள் 223.
123. வே. ப. ர. 2352, 2239.
124. குறள் 226.
125. வே. ப. ர. 1283, 1241, 2430, 296, 410.
126. குறள் 228.
127. வே. ப. ர. 1204.
128. குறள் 230.
129. வே. ப. ர. 2262, 1934.
130. குறள் 231.
131. வே. ப. ர. 1482.

## இயல்—4

# சமுதாய வாழ்க்கை

*0-1* இந்த இயலில் வள்ளுவர்வழியில் சமுதாய வாழ்வைப் பற்றி விளக்கி, வள்ளுவர் கூறும் சமுதாய வாழ்வோடு வேமனர் கூறும் சமுதாய வாழ்வை ஒப்பிட்டு ஆயப்பெற்றுள்ளது.

*1-1* இல்வாழ்க்கையை நடத்திவரும் குடும்பங்கள் பல சேர்ந்தே ஒரு சமுதாயம் உருவாகின்றது. பல சமுதாயங்கள் சேர்ந்த ஒரு பெருங்குழுவை, மொழி, கொள்கை, குறிக்கோள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றால் ஒன்றுபட்ட ஒரு பெருங் குழுவை. ஒரு நாடு எனலாம். இந்தச் சமுதாய வாழ்வைப் பற்றியும், சமுதாயங்களின் கூட்டான நாட்டைப் பற்றியும், அந்த நாட்டை நல்லமுறையில் நடத்தும் தலைவனைப்பற்றியும் வள்ளுவர் பொருட்பாலில் கூறுகிறார். சமுதாய வாழ்வில் குடிமக்கள் நலம் ஓம்பும் அரசியல் வாழ்க்கை அமைகின்றது. அரசன் ஆட்சி நடத்தும்போது அவனுக்குத் துணையாய் இருந்து உதவும் அமைச்சர்களைக் குறித்தும் நாட்டுப் பெருங்குடிமக்களின் இயல்பு களைப் பற்றியும் வகுத்துரைக்கிறார் வள்ளுவர்.

*1-2* அரசியலில் நேர்ப்பொறுப்பு ஏற்று நடத்துவோருக்கும், உழவும் தொழிலும் செய்து வாழ்வோருக்கும் பொருள் இன்றியமையாத ஒன்று. ஆகவே, வயிறு உள்ள வரையில் ஒவ்வொருவருக்கும் பொருள் நாட்டம் இருப்பது இயற்கை. இந்தப் பொருளைப்பற்றிப் பொருட்பாலில் வள்ளுவர் பேசுகிறார்.

*1-3* திருக்குறளின் பொருட்பாலில் சிறப்புமிகு பரிமேலழகர் உரையில் மூன்று பகுதிகள் அமைந்துள்ளன. முதல் பகுதி அரசியல்; இரண்டாம் பகுதி அரசின் உறுப்புக்களைக் கூறும் அங்கவியல்; மூன்றாம் பகுதி சொல்லாமல் ஒழிந்த பகுதிகளைக் கூறும் ஒழிபியல்.[1] இந்த மூன்று பகுதிகளும், ஆளுபவன், ஆட்சிக் கருவி, ஆளப்படுபவர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

*1-4* ஆட்சிக்கருவி ஒரு கருவிமட்டுமே. அது அரசியலின் முக்கியக் கூறல்ல. ஆளும் அரசன் கருவி அல்ல; கருத்தா மட்டுமே. ஆட்சியின் நலத்துக்குரியவர்கள் ஆளுபவனும் அல்ல; ஆட்சிக் கருவியும் அல்ல; ஆளப்படுபவர்களே (குடிகளே). ஆகவே அரசியலுக்கும் அங்கவியலுக்கும் அடிப்படையான பகுதி குடியியலே. குடியியல் நலமே சமுதாய நலமாகும். வள்ளுவர் இறைமாட்சி அதிகாரத்திலும், குடியியலிலும் குடியைப்பற்றிக் கூறுகிறார். இறைமாட்சி அதிகாரத்தில் வரும் 'குடி' என்ற சொல்லிற்கு அரசியலில் பங்குகொள்ளும் நற்குடிகள் என்றும், குடியியலில் வரும் குடி என்ற சொல்லிற்கு அனைத்துக் குடிமக்கள் என்றும் பொருள்கொள்ள வேண்டும்.

## அரசியல்

*1-5* அரசியலில் ஆளும் தலைவனையும் (சமுதாயத் தலைவன்) அவனது அரசியலையும், அவனது அரசின் மாட்சியையும் பற்றிக் கூறுகிறார் வள்ளுவர். ஆளும் தலைவனை மன்னன், வேந்தன், அரசன், இறைவன் என்று முடியாட்சித் தலைவனைக் குறிக்கும் பல பெயர்களால் குறிப்பிடுகிறார்.[2] வேறுசில இடங்களில் முடியாட்சித் தலைவனுக்கும் குடியாட்சித் தலைவனுக்கும் பொதுவாய் நிலனாள் பவன், கோலோடு நின்றான், காவலன் முதலிய பொதுப்பெயர் களாலும் குறிப்பிடுகிறார்.[3]

*1-6* திருவள்ளுவர் வாழ்ந்த காலம் உலகெங்கும் முடியாட்சி இருந்துவந்த காலம். தமிழ்நாட்டிலும் முடியாட்சியே இருந்தது. வேமனர் வாழ்ந்த காலத்தும் ஆந்திர மாநாட்டில் முடியாட்சியே இருந்தது. இப்பொழுது நாம் வாழும் காலமோ இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் குடியாட்சி பரவிவரும் காலம். ஆகவே திருவள்ளுவர், வேமனர் இருவரும் அரசனைப் பற்றியும், அரசியலைப் பற்றியும் கூறும் பகுதிகள் தற்காலத்துக்கும் பொருந்துமா? அவற்றை நாம் கற்பதால் பயனென்ன? நம் காலத்து நாம் கற்க வேண்டியவை பாராளுமன்றம் பற்றியும், அமைச்சரைப் பற்றியும் அல்லவா? இவற்றைவிட்டு முடியாட்சியைப் பற்றிக் கற்பதால் பயன் என்ன? அந்த முடியாட்சி முறைகள், குடியாட்சி முறைக்குப் பயன்படுமா? என்ற ஆராய்ச்சியோடு வள்ளுவரின் பொருட் பாலையும், வேமனரின் அரசியல் பாடல்களையும் படித்தல் வேண்டும்.

*1-7* முடியாட்சி நீங்கிக் குடியாட்சி வந்தாலும், அடிப்படை யான தேவைகளும் முறைகளும் மாறுவதில்லை. அன்று மன்னன்

இருந்தான்; வழிவழியாக ஆளும் உரிமை அந்த மன்னர் குடிக்கு வந்தது. அவன் அறநெறியில் ஆட்சிபுரிந்தபோது செங்கோலனாய் நெடிது வாழ்ந்தான். இல்லையேல், கொடுங்கோலனாய்க் கடிதில் அழிந்தான். அவ்வரசனுக்கு அமைச்சர்கள் துணையாய் நின்றார்கள். குடியாட்சி முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மன்றம் அமைப்பார்கள். அந்த மன்றத்தார் தம் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அத் தலைவர் அமைச்சர் குழுவை (ஆட்சிக் குழுவை) அமைத்துக் கொள்வார். அந்த ஆட்சி, பொதுநன்மைக்கு ஏற்றதாக அமைந்தால் அது நெடுங்காலம் வாழும்; இல்லையேல் ஆட்சிசெய்வோர் தம் உரிமை இழந்து வெளியேற நேரிடும்.

*1-8* இந்த இருவகை ஆட்சியிலும் அடிப்படைகள் ஒத்திருக்கின்றன. பொதுமக்களின் நன்மையைக் கருதி ஆளுதல், ஒற்றுமையை வளர்த்தல், பகையை அழித்தல், பசியும் பிணியும் நாட்டில் பரவாதபடி காத்தல், நல்ல உழவுவளத்தையும் தொழில் வளத்தையும் பெருக்குதல், எல்லாருக்கும் ஒத்த உரிமை வழங்கி நடுநிலைமை தவறாமல் ஆளுதல் முதலிய அடிப்படைச் செயல்கள் இரு ஆட்சிகளுக்கும் ஒத்தனவே.

*1-9* திருவள்ளுவரும் வேமனரும் மக்களின் வாழ்க்கையை விளக்கி, வழிகாட்டத் தோன்றிய சான்றோர்கள். ஆதலின் அவர்களின் பாடல்களில் இந்த அடிப்படை ஒற்றுமைக் கருத்துக்கள் மிளிர்வதைக் காணலாம். அவர்கள் தம் காலச் சமுதாயத்துக்கு அறிவுறுத்தும் கருத்துக்கள், எந்தச் சமுதாயத்திற்கும் அடிப்படையான, தேவையான கருத்துக்களே ஆகும்.

## இறைமாட்சி

*2-1-0* திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அரசனுக்குத் தேவையான பண்புகளைத் தொகுத்துக் கூறுகிறார். அவர் கூறும் மன்னன் இயல்புகள் குடியாட்சித் தலைவனுக்கும் பொருந்தும். குடிகளைத் தழுவி அவர்களின் கருத்திற்கிசைய ஆட்சிபுரியும் பண்பாளனாக ஆட்சித்தலைவன் அமையவேண்டும்.[4]

*2-1-1* படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு அங்கங்கள் உடையவனாக அரசன் அமைதல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[5] அரசன், தானும் அஞ்சாமையாகிய திண்மையும், ஈகையும், அறிவும், ஊக்கமும் குறைவுபடாமலும்; காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை நீங்காமலும், கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் முதலியன நிலையாய் உடையவனாகவும் இருக்க

வேண்டும்; கடுஞ்சொல்லற்றவனும், குறை கூறுவோரின் சொற்களைச் செவிகைக்கும் நிலையினும் பொறுக்கின்ற பண்புடைய வனுகவும் அவன் திகழ வேண்டும்[6] என்று, சமுதாயத் தலைவனுக்குத் தேவை என்று வள்ளுவர் கூறும் இயல்புகளையே வேமனரும் கூறுகிருர்.

*2-1-2* தானதருமங்கள், அருள், சத்தியம், நீதி, அடக்கம், தைரியம், தியாகம் முதலிய பண்புகள் மிகவும் வேண்டற்பாலன; இவை அரசனுக்கு இராஜயோகத்தைக் கொடுக்கும்; அரசனுய் இருப்பவனுக்குப் பொறுமை மிகவும் தேவை. பொறுமை இல்லை என்முல் தன்னுட்டை இழத்தலோடு மோட்சத்தையும் இழப்பான். இந்தக் கருத்தை வேமனர் ஓர் உவமையைக் கொண்டு விளக்குகிருர். நீரில் கல் போட்டால் அது நீரில் முழுகுதல் தெரிந்ததே. அதுபோல அரசன் நெறிதவறி நடப்பின் கெடுவதும் உறுதி என்று அறிவுறுத்துகிருர்.[7] எனவே, வள்ளுவர், வேமனர் கூறும் ஆட்சிமுறை, தேவையான அளவுக்கு உரிமைகளை உடைய ஒன்று என்று கூறினுல் தவருகாது.

## கல்வி

*2-2-0* சமுதாயத் தலைவன் நெறியோடு ஒழுகவேண்டுமானுல் கல்வியறிவு உடையவனுய் இருத்தல் வேண்டும். அவன் மட்டும் இருந்தால் போதாது; அவன் குடிகளும் நல்லதொரு சமுதாய மாய்த் திகழக் கல்வியறிவு உடையவர்களாய் இருத்தல் வேண்டும். உலகில் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள வேற்றுமையை, மக்களுக்கு இருக்கும் அறிவினுலும், அவ்வறிவு பிற உயிர்களுக்கு இல்லாமையாலும் கண்டுகொள்ள முடியும். இயற்கையாகவே அமைந்துள்ள அறிவோடு நூற்கல்வியும் கேள்வி வாயிலாகப் பெறும் செயற்கை அறிவும் சேர்ந்து மக்கள் வாழ்க்கை சிறப்பது போன்று, மாக்கள் வாழ்க்கை சிறவாது. எனவேதான் வள்ளுவர், ஒரு நாட்டு ஆட்சித்தலைவனுக்குக் கல்வி, கேள்வி, அறிவுடைமை ஆகியவற்றை இன்றியமையாதனவாக வகுத்து, அந்நாட்டின் முதியவர், இளைஞர், ஆண் பெண் ஆகிய அனைவருக்குமே அவை வேண்டுமென்று கருதி, 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு'[8] என்று எல்லோருக்கும் பொதுப்பட அவற்றின் இன்றியமையாமையை வற்புறுத்துகிருர்.

*2-2-1-1* கல்வியைக் கற்கும்பொழுது, கண்ட நூல்களை எல்லாம் கற்பதால் பயனில்லை. கற்க வேண்டிய நல்ல நூல்கள்

எவை என்பதைத் தெரிந்து கற்க வேண்டும். கற்கும்போதே வாழ்க்கையோடு ஒட்டி எண்ணி எண்ணிக் கற்க வேண்டும். அப்படிக் கற்ற வழியில் நிற்க வேண்டும். அதுவே கற்றதற்கு அழகாகும், பயனுமாகும் என்பது வள்ளுவர் கருத்து.

*2-2-1-2* இந்தக் கருத்தை வேமனர் ஓர் உவமையால் விளக்குகிறார். கல்வியைக் கற்க வேண்டும். கற்க வேண்டிய கல்வியை மட்டும் கற்க வேண்டும். கற்பதால் மட்டும் பயனில்லை. கற்றதற்குப் பலன் இருக்கவேண்டும். அதாவது அடக்கமும் ஒழுக்கமும் கொண்டு வாழ்தலை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாளிடம் மங்கல சூத்திரமாகிய ஆபரணமின்றி மற்றப் பல பொன்னாபரணங்கள் இருப்பினும் பயனில்லை. அது போலவே அடக்கமும் ஒழுக்கமும் இல்லாத கல்வியால் ஒரு பயனும் இல்லை என்கிறார் வேமனர். கல்வியில் நீதியைத் தெரிந்து கொள்ளும் கல்வியே சிறந்ததென்றும் வேமனர் கூறுகிறார்.[9]

*2-2-2-1* இத்தகு கல்வி எல்லோருக்கும் மிகமிக இன்றியமையாதது. கல்வியில்லாதவன், வாழ்வில் துன்புறுவானே தவிர இன்பத்தைப் பெறமாட்டான் என்று வேமனர் கூறுகிறார்.[10]

*2-2-2-2* வள்ளுவர் இன்னும் அழுத்தமாகக் கல்வியின் இன்றியமையாமையை விளக்கிக் காட்டுகிறார். கற்றவர் மட்டுமே கண்ணுடையவராகக் கருதப்படுவர். மற்றவர்கள் முகத்திரண்டு புண்ணுடையவர்களாகக் கருதப்படுவர். இந்தக் கல்வியே ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வமாகும். இந்தக் கல்வி எப்பிறப்பிலும் காவலாய் இருந்து கற்றவனுக்கு உதவும். எனவே நல்லதொரு சமுதாயம் அமையக் கல்வி மிகமிகத் தேவை[11] என்று வள்ளுவர் உணர்த்துகிறார்.

*2-2-3* கல்வியின் இன்றியமையாமையை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது; கல்லாமையால் ஏற்படும் குறைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு தெரிந்து கொள்ளாது ஒருவன் தன்னைத்தானே கற்றவனாக மதித்துக் கொண்டு சொல்லாடினால், அச்சொல் கற்றவன் முன் நில்லாது சோர்வு பட்டு விடும் என்று இருவரும் கூறுகின்றனர்.[12]

*2-2-4* அடுத்து, செவி உணவாம் கேள்வி அறிவைப் பற்றி வள்ளுவர் பத்துப் பாடல்களில் பேசுகிறார். வேமனர் கேள்வி அறிவு பற்றி எங்கும் பேசவில்லை; ஆயினும் கல்வி அறிவு வேண்டும் என்று பேசுவதிலேயே கேள்வியால் பெறும் கல்வியையும் நினைத்தே கூறியிருப்பார் என்று கொள்ளுவது தவறாகாது.

## அறிவுடைமை

2-3-0 கற்பவற்றைக் கசடறக் கற்றும், கேட்பவற்றைத் தக்கார்வாய்க் கேட்டும் அறிவுவரப் பெற்றவர், உண்மையான அறிவு வரப் பெற்றவராவார். அவர்கள் தமக்குத்தாமே எண்ணி, துணிந்து, கொள்ளத் தக்கனவற்றைக் கொண்டு, தள்ளத் தக்கனவற்றைத் தள்ளி, செய்யத்தக்கன செய்து, செய்யத் தகாதனவற்றைத் தவிர்த்து, ஆக்க வேலையில் ஈடுபட்டு வாழ வழி உண்டு. சமுதாயத் தலைவனுக்கும், சமுதாயத்திற்கும் (குடிமக்களுக்கும்) ஏதொரு குறையும் வாராமல் காத்துக் கொள்வது அறிவுடைமையின் பயனாகும்.

2-3-1-1 அறிவுடைமை என்பது யாது? என்ற வினாவிற்கு வள்ளுவர் விளக்கந் தருகிறார். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'[13] என்கிறார் உயர்ந்த பொருள் இழிந்தார்வாயிலும், இழிந்தபொருள் உயர்ந்தார் வாயிலும் வரலாம். ஆகவே சொல்லுவார் இயல்பை நோக்காது, அப்பொருளின் பயன்நோக்கிக் கொள்ளுதல் அல்லது தள்ளுதல் செய்யவேண்டும்; கண்ணால் கண்டதும், காதால் கேட்டதுங்கூடப் பொய்யாகலாம்; எனவே ஆராய்ந்து, பகுத்தறிந்து உண்மைகாண்பதே நல்லது; அதுவே அறிவாகும் என்கிறார் வள்ளுவர்.[14]

2-3-1-2 வேமனர் இக்கருத்தை மிகச் சுருக்கமாகக் கூறுகிறார். ஒரு செய்தியைக் காதால் கேட்ட மாத்திரத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடாது. அந்தச் செய்தியின் அல்லது பொருளின் உண்மைத் தன்மையை நன்றாக ஆராய்ந்து தெரிந்துகொண்டு, எண்ணித் துணிந்து, அதன்பிறகு முடிவுக்கு வரவேண்டும்; அதாவது அந்தப் பொருளின் உண்மைத்தன்மையை அறிய வேண்டும்; அதுவே அறிவுடைமையாகும்[15] என்கிறார்.

2-3-2-1 இத்தகு அறிவுடைமையால் படைக்கக் கூடிய செல்வங்கள் அனைத்தையும் படைக்கவும், காக்கவும் முடியுமாதலால், அறிவுடையோர் எல்லாம் உடையவராகக் கருதப்படுவர். அதற்கு மாறாக அறிவு இல்லாமையால் பெறுவன தீமையேதவிர, நன்மையன்று; அதனால் ஏதொன்றையும் சாதிக்க முடியாது. ஆகையால் அறிவிலார் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர் என்கிறார் வள்ளுவர்.[16]

2-3-2-2 வேமனரும், அறிவுடைமையே உடைமை; மற்ற உடல்வன்மையால் பயனொன்றுமில்லை; எச்செயலையும் அறிவு

வன்மையால் மட்டும் சாதிக்க முடியுமே தவிர உடல் வன்மையால் அன்று; கத்திக்குள்ள இருபகுதிகளில் (கத்தி, கத்திப்பிடி) கத்தியால் மட்டும் எதையும் வெட்ட முடியுமேதவிர, கத்திப் பிடியால் அன்று[17] என்கிறார். எனவே அறிவுடைமை இல்லாமையால் ஏதொன்றும் சாதிக்க முடியாதென்பதும், அறிவுடைமையே செயலின் வெற்றிக்குக் காரணம் என்பதும் மக்கள் வாழும்வகையில் வாழ அறிவுடைமை மிகவும் இன்றியமை யாதது என்பதும் வேமனரின் கருத்து என்பது விளங்கும். அது வள்ளுவர்க்கும் ஒத்த கருத்தே. மேலும், அறிவில்லார் தமக்குத் தாம் பயன்படுவதில்லை; பிறருக்கும் பயன்பட மாட்டார்கள் என்கிறார் வேமனர். இக்கருத்தை ஓர் உவமையால் விளக்குகிறார். மலட்டுப் பசுவிடம் பால் கறக்க முயன்றால் பயன் என்ன? கறக்கும் முயற்சி வீணாகும்; அதுபோலவே, அறிவுடைமை இல்லாத வரால் சமுதாயத்திற்கு ஒரு பயனுமில்லை[18] என்கிறார்.

## குற்றங்கடிதல்

2-4-0 செருக்கு, சினம், காமம், பொருள் கொடாத தன்மை மாட்சியில்லாத மானம், தகுதியற்றவற்றிற்கு மகிழ்தல் முதலியவை மக்கள் சமுதாயத்திடையே காணப்படும் குற்றங்கள் ஆகும்: இத்தகைய குற்றங்களைச் சமுதாயம் அறிவுடைமையால் தான் கடிய முடியும். அவ்வாறு கடிந்தவன் வாழ்வில் காணும் பெருக்கம் மேம்பாடு உடையதாகும்.

2-4-1-1 இக்குற்றங்கள் சமுதாயத் தலைவனுக்கும், சமுதாயத் திற்கும் இருக்கக்கூடாது; ஒருகால் தினையளவினதாகிய சிறிய குற்றம் நேர்ந்தாலும், பழி நாணுகின்ற பெரியோர்கள் அதனைப் பனையளவினதாகக் கருதிக் குற்றம் செய்யாமல் இருப்பார்கள்; ஏன் என்றால், ஒருவனுக்கு அழிவை உண்டாக்குவது குற்றமேயாகும்; அது ஒருவனுக்குப் பகையாக அமையும் என்று கூறுகிறார் வள்ளுவர்.[19]

2-4-1-2-1 வேமனரும், குற்றமுடையவராக இருத்தல் எல்லோருக்கும் (தனக்கும், பிறர்க்கும்) தீமையே பயக்கும் என்கிறார். குற்றமுடையனிடம் செல்வம் சேரின், அவனால் சமுதாயத்திற்குத் தீமையேயன்றி நன்மை விளையாது. நஞ்சுள்ள பாம்புக்கு அஞ்சுவது போன்று, இத்தகையாருக்கு மற்றவர் அஞ்ச வேண்டும். பழிக்கு நாணுகின்ற பெரியோர்கள் தினையளவினதாகிய குற்றம் நேர்ந்தாலும் அதனைப் பனையளவினதாக நினைத்தல் வேண்டும்; இல்லையேல் அச் சிறுகுற்றம், அவரிடத்துள்ள எல்லா

நற்குணங்களையும் அழிக்கும். பழத்தின் மேல் பாகத்தில் சிறிது அடி ஏற்பட்டாலும், அதை நல்லதல்ல என்று தள்ளுவர்; அப்படியிருக்கச் சான்றோர் என்று சொல்லிக்கொள்வோர் தம் குற்றத்தை அறியாது இருக்கக்கூடாது என்கிறார் வேமனர். எனவே, சிறு குற்றத்தையும் பெருங்குற்றமாக நினைத்து அக்குற்றம் நீங்கி வாழும் பெருந்தன்மை வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து.

*2-4-1-2-2* குற்றங்கடிதல் வேண்டுமானால் முதலில் எண்ணத்தில் தூய்மை வேண்டும்; தீயனவற்றை மறந்தும் நினைத்தல் கூடாது. ஒருகால் தீயனவற்றை நினைத்தால் அறிவு மங்குவதோடு, மேற்கொண்ட செயலும் வீணாக முடியும். எனவே தீமைக்குக் காரணமான பண்புகளை நீக்கி, நன்மைக்குக் காரணமான பண்புகளையே மேற்கொள்ள வேண்டும் என்று வேமனர் கூறுகிறார்.[20]

## பெரியாரைத் துணைக்கோடல்

*2-5-0* உயிர் சார்ந்ததன் வண்ணமாகும்; அதனால் ஒவ்வொருவரும் தம் சுற்றுச் சார்பும், நட்பினரும், பணிமக்களும், பிறரும் நல்லோராக இருக்குமாறு தேர்ந்து கோடல் நன்மை பயக்கும். சிற்றின்பத்தை ஒதுக்கி, பெரியாரைத் துணைக்கொண்டு வாழும் சமுதாயம் வேண்டும். பெரியார் யார்? அறம் உணர்ந்தவராய்த் தன்னைவிடச் சீலத்தாலும், நீதியையும் உலகியலையும் அறிந்த அறிவாலும், அனுபவத்தாலும் முதிர்ந்தவரே பெரியாராவார். அத்தகையாரை எப்படித் துணையாகப் பெறலாம்? எவ்வாறு அவர்களை நன்கு மதித்து உயரச் செய்து, அவர் வழிநின்று பிணித்துக் கொள்ளலாம் என்னும் திறமெல்லாம் அறிந்து, துணையாகக் கொள்ளவேண்டும்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்''[21]

என்னும் வள்ளுவரின் வாக்கு இக்கருத்தைத் தெளிவுறுத்துகிறது.

*2-5-1-1* இத்தகு பண்பு வாய்ந்தோரைத் துணையாகக் கொண்டால் அது வன்மையுள் வன்மையாகும்; அதோடு அத்தகையோர்பாலிருந்து தீயபண்புகள் எல்லாம் நீங்கும். சமயம் வரும்பொழுது இடித்துக் கூறி அறிவுரை புகட்டுவோரைத் துணையாகக் கொள்வோருக்கு யாரும் எக்கெடுதியும் செய்ய முடியாது[22] என்று வள்ளுவர் கூறுகிறார்.

2-5-1-2 இக்கருத்துக்களையே வேமனர் இரு உவமைகளால் விளக்குகிறார். உடலில் இருக்கும் தீ நாற்றம், அந்த உடம்புக்குச் சந்தனம் பூசிய மாத்திரத்தில் நீங்கும்; அது போலவே பெரியோரின் தொடர்பு, ஒருவனிடத்தில் உள்ள சிறுமையை நீக்க ஏதுவாகும் என்றும், துணியில் இருக்கும் அழுக்கை நீக்கித் தூய்மைப்படுத்தும் வண்ணான், அதனை, தன் வலிமை எல்லாம் காட்டி அடித்துத் தூய்மையாக்குவது போன்று, பெரியோர் தம்மோடு சேர்ந்தவர் தீய பண்பால் தீய செயல்கள் செய்ய முனையும்பொழுது இடித்துக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்துவர் என்றும் கூறுகிறார்.[23]

## சிற்றினம் சேராமை

2-6-1-1 மாந்தர் உணச்சி மனத்தானாகும்; ஆகையால் நல்லோர்கள் சிறியாரோடு சேர்ந்திருக்க அஞ்சுவர்; பெரியாரோடு தொடர்புகொள்ள விரும்புவர். ஆகவே பெருந்தன்மையற்றவர் களோடு சேராமல் வாழவேண்டும். ஒருகால் பெருந்தன்மை யற்றோரைத் திருத்தவேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு இருந்தாலும், அவர்களோடு சேர்ந்து பழகக்கூடாது; சேர்ந்து பழகாமலே அவர்களைத் திருத்த முயற்சி செய்யவேண்டும். ஏனெனில் நிலத்தின் தன்மைக்கு ஏற்றபடி நீருக்கு நிறமும் சுவையும் ஏற்படுவதுபோல, சேர்ந்த இனத்தின் இயல்புக்கு ஏற்றவாறு சேர்ந்தவர்களின் அறிவும் மாறிவிடும்; எனவே சிற்றினத்தாரோடு சேர்ந்தால் சிறுமையே வரும். தன் மனம் தூய்மையாக இருப்பின், அறிவு மாறுவதற்கு வாய்ப்பு இல்லையே என்ற ஐயம் எழலாம். மனத்திற்கு ஏற்றவாறு அறிவு இருப்பதுபோல் தோன்றலாம்; ஆனால் அது உண்மையன்று; பொதுவாய்ச் சேர்ந்த இனத்திற்கு ஏற்றவாறே அறிவு அமையும்; மற்றும், ஒருவனை அவன் பழகும் இனத்தாரைப் பார்த்தே உலகத்தார் அவன் இத்தகையவன் என்று முடிவு செய்வர் என்று கூறி, நல்ல இனத்தாரோடே சேரவேண்டும் என்பதை வற்புறுத்துகிறார் வள்ளுவர்.[24]

2-6-1-2 வேமனரும் இக்கருத்துடையவரே. சாதாரண மனித வாழ்விலுள்ள சில பொருள்களைக் கொண்டு இக்கருத்தைத் தெளிவுபடுத்துகிறார் அவர். சிற்றினம் சிற்றினத்தையே விரும்பும், சான்றோர் இனத்தை விரும்பாது என்று கூறுவதோடு, அவர்களை மூடர்கள் என்றும் இழித்துப் பேசுகிறார். அவர்களுக்கு ஞானமும் கிடைக்காது என்கிறார். சிற்றினத்தாரைச் சிற்றினத்தார் விரும்புவது குரங்கைக் குரங்கே விரும்பி மதித்துச் சேவிப்பது போன்றது என்றும், சாணியைத் தின்னும் புழு வெல்லத்தை

விரும்பாது சாணியையே விரும்புவது போன்றதென்றும் இருவகை உவமைகளால் தெளிவாக்குகிறார். இப்பண்பு ஒருவனுக்குத் தீமையைப் பயக்குமே தவிர, நன்மையைப் பயக்காது. எவ்வாறெனில், பாலில் புளிப்புக் கலந்தால் அந்தப் பால் கெட்டுப் பயனற்றுப் போகும். அதுபோல் சிறியோர் சேர்க்கையால் சிறுமையும் பெரியோர் சேர்க்கையால் நல்லதும் ஏற்படும் என்பது தெரிந்ததொன்று.[25] மனம் சேர்ந்ததன் வண்ணமாகும் என்பதை வள்ளுவர் விளக்கியவாறே[26] வேமனரும் வேறொரு உவமையால் விளக்குகிறார். வெங்காயத் தோட்டத்தில் மணம்மிக்க மல்லிகைச்செடி இருந்தாலும், மல்லியின் மணம் வாராது; வெங்காயத்தின் வாசனையே வரும். அதுபோலவே நல்லோர், தீயோருடன் சேரின் தீயோராகவே மாற வாய்ப்புண்டு என்று அறிவுறுத்துகிறார். மேலும், ஒருவனை இப்படிப்பட்டவன் என்று முடிவுசெய்வது அவன் சேர்ந்த இனத்தைப் பொறுத்ததே என்று வள்ளுவர் கூறும் கருத்தை ஓர் உவமையால் விளக்கிச் சொல்லுகிறார். ஒருவன் கள் விற்போர் வீட்டிற்குச் சென்று பால் பருகினலும் கள் குடித்ததாகவே மக்கள் எண்ணுவர். எனவே தகாத இடத்துக்கு ஒருவன் போயின், அவனுக்குத் தகாதவன் என்ற பெயரே வரும், வேர்ப்புழு செடியைச் சேர்ந்தால் செடிக்கே ஆபத்தாகும் எனறெல்லாம் வேமனர் கூறுகிறார்.[27] எனவே ஒருவனுக்கு நல்ல இனத்தின் சேர்க்கையைக் காட்டிலும் சிறந்த தொன்றில்லை என்பதும், தீய இனத்தின் சேர்க்கையைக் காட்டிலும் தீயதொன்றில்லை என்பதும் இருவரின் முடிவான அறிவுரை யாகும்.[28]

## தெரிந்து செயல்வகை

**2-7-0** நல்லோரைத் துணைக்கொண்ட வழி அவரோடு ஒருவன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறமே தெரிந்து செயல் வகையாகும். வினை செய்யுங்கால் அப்பொழுது அதனல் அறிவதனையும், அறிந்தாற் பின் ஆவதனையும் சீர்தூக்கிப் பார்த்து நிகழ்விலும், எதிர்விலும் தனக்குப் பயன்கொடுப்பதனையே மேற்கொள்ள வேண்டும்.

**2-7-1-1** இவ்வாறு செயலின் வகைகளை எல்லாம் முற்ற எண்ணமல் செய்யத்தொடங்குதல், பகைவரை வளரும் பாத்தியில் நீர்பாய்ச்சி நிலைபெறச் செய்வதொரு வழியாகும். எனவே, செய்யத்தகுந்த செயலையும், அதற்கு வேண்டிய வழிகளையும் எண்ணித் துணிந்த பிறகே செயலைத் தொடங்க வேண்டும். துணிந்தபின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும் என்கிறார் வள்ளுவர்.[29]

2-7-1-2 வள்ளுவர் கூறும் இக் கருத்தையே வேமனர் ஓர் உவமையால் விளக்குகிறார். எந்தச் செயலையும் எண்ணித் தெளிந்து செய்யவேண்டும். பக்குவ நிலையடைந்த காயைப் பழுக்க வைத்தால் அதனால் பலனுண்டு. அவ்வாறின்றிப் பிஞ்சைப் (பக்குவம் அடையாத காய்) பழுக்க வைத்தால், அது பழுக்காது; வெம்பிவிடும். அதனால் ஒரு பயனுமில்லை. முயற்சி வீணாகும். அவ்வாறே ஒரு செயலைச் செய்யும்பொழுது, அச்செயல் வெற்றி பெறும் சூழ்நிலைகள் அமையும்பொழுதே செயலைச் செய்ய மேற்கொள்ள வேண்டும். வெற்றி பெறும் சூழ்நிலைகளைத் தெரிந்து தெளியவேண்டும். தன்னால் தெளிவு பெறமுடியவில்லை என்றால், பிறரிடம் அறிவுரை பெற்றுத் தெளிவு பெறவேண்டும். தெளியாது செய்வதால் வரும் பழியை மறைக்க முடியாது என்று கூறுகிறார் வேமனர்.[30]

## வலி, காலம், இடனறிதல்

2-8-0-1 செய்யத் துணிந்த கருமம் நிறைவேறுவதற்குரிய வலி, காலம், இடம் ஆகியவற்றைக் கவனித்தே செய்யவேண்டும். இம் மூன்றும் முடிஅரசனுக்கு மட்டுமன்று, குடியரசனுக்கும் தேவை; குடிமக்களுக்கும் தேவை. இம்மூன்றைப் பற்றி வள்ளுவர் வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்னும் மூன்று அதிகாரங்களில் பேசுகிறார். முதல் பகுதியில் படையெடுத்துப் போர்செய்யும் முடிவேந்தனுடைய முயற்சியைப் பற்றியே கூறுவன போல் உள்ளது. ஆட்சித் தலைவனுக்கு அந்தக்காலத்தில் போர் செய்யவேண்டிய சமயம் வரும்பொழுது போர்செய்தல் பெரிய கடமையாக அமைந்தது; வினையாக இருந்தது. அதனால் போரில் வெல்வதற்கு வேண்டிய வகையில் தேவையான வலி, காலம், இடமறிதலைப் பற்றிப் பேசுகிறார். வள்ளுவர் வாழ்ந்த காலம், போரை அறிஞரும் போற்றும் காலமாகையால் போரைப் போற்றும் வகையில் சொல்லியுள்ளார். தற்காலத்தில் அவர் வாழ்ந்திருப்பின் போர் ஒழித்தலைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருப்பார். இவர் கூறும் கருத்துக்கள் இந்தக் காலத்துச் சமுதாய வாழ்வுக்கும், குடியாட்சி முறைக்கும் பொருந்துவனவாக இருத்தலை அறியலாம். இது ஒரு பகுதி. மற்றொரு பகுதியில் பொருளைச் செலவு செய்யும் முறைகளைப் பற்றிப் பேசுகிறார். இந்தப் பகுதியையும் காலத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

2-8-0-2 வள்ளுவரின் சில பாடல்களை[31] ஆராய்ந்து பார்த்தால், போர் அறநெறி இழந்து கெட்டு வருதலையும்,

பொதுநன்மைக்குப் பயன்படாமல் பொது அழிவுக்குப் பயன்பட்டு வருதலையும் திருவள்ளுவரே உணர்ந்து, போரை வெளிப்படையாகக் கூறுமல் விட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது; எதிர் காலத்தில் அறிஞர்களாலும், பொதுமக்களாலும் போர் வெறுக்கப்படும் என்று எண்ணி, போரற்ற காலத்துக்குப் பயன்படுமாறு எழுதினுர் என்று கருதவும் இடந்தருகிறது. எனவே இம்மூன்று அதிகாரங்களையும் வாழ்க்கைத் துறைகளுக்குப் பொருந்தும் முறையில், இக்காலக் குடியரசுமுறைக்கு ஏற்பவே அமைந்தனவாகக் கொண்டு, வேமனர் கருத்துக்களை இந்த மூன்று அதிகாரங்களோடும் ஒப்பிடலாம்.

## வலியறிதல்

*2-8-1-1* ஒரு செயலைச் செய்வதற்கு முன், அச்செயலின் தன்மையையும், அச்செயலைச் செய்து முடிப்பவன் வலிமையையும், மாற்றுன் வலிமையையும், அவனுக்குத் துணையாய் வருவோன் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்தே செய்யவேண்டும்.[32] அப்பொழுதே அச்செயல் வெற்றியாய் முடியும். இவ்வாறின்றி ஊக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயலைத் தொடங்கினுல், பின்னுல் இடையூறு பெறும் நிலை ஏற்படும் என்பது வள்ளுவர் அறிவுரை.

*2-8-1-2* இந்தக் கருத்தையே வேமனர் ஓர் உவமையால் விளக்குகிறுர். ஆராயாமல் தீவட்டியைப் பிடிக்கும் பணிக்குத் தீக்கு அஞ்சும் கரடியை நியமித்தால் அதனுல் ஒரு பயனுமில்லை. கரடி தீவட்டியைப் பிடிக்க ஒத்துக் கொள்ளாது. மேற்கொண்ட முயற்சி வீணுகும். அதுபோலவே தன் வலியையும் மாற்றுன் வலியையும் ஆராயாமல், செயல்மேல் பிடிவாதம் கொண்டால், செயல் சாதகமாய் முடியாது என்கிறுர் வேமனர்.[33]

*2-8-2* தன் வலி மிகுதியாயினும், மாற்றுன் வலி குறைந்ததாயினும், குறைந்த வலியுடைய மாற்றுன் இன்னொருவனின் துணையைப் பெற்று, வன்மைமிகுந்து, தன்னினும வன்மையுடையோனை வெல்வான். எனவே குறைந்த வலியுடையோரும் வெல்லும் வாய்ப்புண்டு என்பதை இருவரும் அறிவுறுத்துகின்றனர். இக்கருத்தை இருவரும் வேறுவேறு உவமைகளால் விளக்குகிறுர்கள். வண்டியின் அச்சு எவ்வளவு வன்மை உடையதாயினும், அவ்வண்டியில் ஏற்றிய மயிலிறகுகள் மிக மென்மையுடையன (பாரமில்லாதன) வாயினும், அளவு கடந்து வண்டியில் ஏற்றினுல்

பாரம் மிகுந்து வண்டியின் அச்சு முறிந்துவிடும் என்று வள்ளுவரும், வைக்கோல் தனித்திருக்கும்போது மெல்லியதாயினும், அவற்றை ஒன்று சேர்த்துக் கயிறுகத் திரித்து, அக்கயிற்றைக் கொண்டு யானையையும் கட்டலாம்; அந்த அளவுக்கு வன்மையை அது பெறும் என்று வேமனரும் கூறுகின்றனர்.[34]

## காலமறிதல்

*2-9-1-1* செயலாற்றுவதற்கு வலியறிதல் போலவே, ஏற்ற காலம் அறிதலும் வேண்டும். ஏற்ற காலமில்லாதவழி வலியால் மட்டும் ஒரு பயனுமில்லை. செயலாற்றுவதற்கு ஏற்ற காலமறிந்து, காலம் வரும்வரை பொறுத்திருந்து செயலை மேற்கொண்டால், செயலில் வெற்றி காண்பது உறுதி. இக்கருத்தை இருவரும் வேறுவேறு உவமைகளால் விளக்குகின்றனர்.

கோட்டான் வலியதாயினும், அதற்குத் தகாத, தனக்குத் தகுந்த பகற்காலத்தில் காக்கை அக்கோட்டானையே வெல்லும். எனவே பகையை வெல்லவோ அல்லது தான் நினைத்த செயலை முடிக்கவோ அதற்கேற்ற காலத்தில் செயல்படவேண்டும் காலம் வரும்வரை கொக்குப்போல் பொறுத்திருக்க வேண்டும்; காலம் வந்தபொழுது தப்பாமற் செய்து முடிக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[35]

*2-9-1-2* வேமனரும் இருவேறு உவமைகளால் இக்கருத்தை விளக்குகிறார். பிறரைக் கடிக்கத் துணிந்த பாம்பு தன் புற்றில் தனக்குத் தக்க காலம் வரும்வரை பதுங்கியிருந்து, காலம் வந்த பொழுது தவறாமல் கடித்தலைச் செய்யும். கோவைக்காய் காயாய் இருக்கும்பொழுது கசப்பாக இருக்கும்; அதுவே பக்குவமடைந்து பழமாயின் இனிப்பாக இருக்கும். எனவே தக்க காலம் வரும்வரை பொறுத்திருந்து செயலை ஆற்றினால் அந்தச் செயல் வெற்றியாய்ப் பயனுடையதாய் அமையும். இதற்கு எடுத்துக்காட்டாக எல்லோரும் அறிந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார் வேமனர். செல்வத்தானும் வலிமையானும் சிறந்த இராவணனைத் தலைவனாகக் கொண்ட இலங்கையை, அனுமான் காலம் கருதியிருந்து செயல் புரிந்ததால் அழிக்க நேர்ந்ததைக் காட்டு கிறார்.[36]

இவ்வாறு வேமனரும் வள்ளுவரும் வேறுவேறு உவமைகளால் காலமறிதலின் இன்றியாமையைப் பற்றி அறிவுறுத்துகின்றனர்,

## இடனறிதல்

*2-10-1-1* செயல் வெற்றி பெறுவதற்கு வலிமை, ஏற்றகாலம் தேவைப்படுதல் போலவே, தகுந்த இடத்தை அறிந்து செயல் புரிதலும் வேண்டும். இக்கருத்தை இருவரும் வேறு வேறு உவமைகளாலும், ஒரேவகையான உவமையாலும் தெளிவுறுத்துகின்றனர். ஆழமான நீர்நிலைகளில் முதலையானது மற்ற விலங்குகளை எல்லாம் வெல்லும்; நீரைவிட்டு அந்த முதலை நீங்குமானால் அதனை மற்ற விலங்குகள் வெல்லும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[37]

*2-10-1-2* இந்தக் கருத்தையே வேமனரும் வள்ளுவர் போக்கிலேயே மீன் நீரில் இருக்கும்பொழுது எவ்வளவு தூரமாயினும் போகும்; துள்ளிக்கொண்டும் இருக்கும்; நீரைவிட்டு நிலத்துக்கு வரின் சிறிது தூரமும் செல்லாது உயிரையே விடும் வாய்ப்பு ஏற்படும் என்று கூறுகிறார்.[38] எனவே, செயல் சாதகமாய் முடிய அந்தந்தச் செயலுக்கேற்ற இடம் தேவை என்று இருவரும் முதலையையும் மீனையுங் கொண்டு அறிவுறுத்துவது காண்கின்றோம்.

*2-10-2* மற்றும், நிலத்தில் ஓடும் தேர் அல்லது வண்டி கடலில் ஓடாது; கடலில் ஓடும் கப்பலும் நிலத்தில் ஓடமுடியாது என்று இருவரும் ஒரே உவமை காட்டியும் இக்கருத்தைத் தெளிய வைத்துள்ளனர்.[39]

*2-10-3* இப்படித் தக்க இடமறியாது செயல்புரிதல் அறியாமையே. நல்ல அரணும், மற்றச் சிறப்பும் இல்லாதவராயினும், அன்னார் இருக்குமிடத்திற்குச் (தகுந்த இடத்தில்) சென்று பகைவரால் ஒருவரைத் தாக்கி வெற்றிகோடல் அருமையான செயலாகும் என்று வள்ளுவர் சொல்லும் இக்கருத்தை வலியுறுத்துவதுபோல, பாண்டவர்களில் முதல்வனான தருமன் தனக்குத் தகாத இடம் என்பதையறியாது சூதாடித் தோற்று, அதனால் கானகத்தை அடைந்த நிகழ்ச்சியைக் கூறும் வேமனரின் பாடல் அமைகிறது.[40]

*2-10-4* எனவே ஆண்மையும், பெருமையும் உடையாரும் தமக்கு ஏலாத இடத்தில் சென்று அகப்பட்டுக் கொண்டால், எதிரிகள் மிக எளியவராயினும் அவரால் அழிவார்கள். ஆகையால் வலியறிதல், காலமறிதலோடு ஏற்ற இடத்தையும் அறிந்து சமுதாய வாழ்க்கையில் மன்னரும் தலைவரும் பிறரும் தத்தம் செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதில், வேமனரும் திருவள்ளுவரும் ஒன்றுபடுவதைக் காண்கின்றோம்.

## தெரிந்து தெளிதல்

*2-11-1* சமுதாயத் தலைவன், அமைச்சர் முதலானோரையும், செயல்களைச் செய்யும் பிறரையும் ஆராய்ந்து தெளிந்த பின்னரே செயலில் ஈடுபடுத்துதல் வேண்டும். குணமும் குற்றமும் உடையவர் இவர், தக்கார் இவர், தகாதவர் இவர் என்று அளந்தறிந்து, பணியில் அமர்த்திக் கொள்வதற்கு, பிரத்தியட்சம் (காட்சி), அனுமானம் (கருத்து), ஆகமம் (நூல்) என்ற பிரமாணங்கள் உதவும். இவ்வாறு ஆராயும்பொழுது அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகிய நான்கு வகையாலும் தெளிவுபெற வேண்டும்[41] என்பார் வள்ளுவர். ஆராய்ந்து தெளிவுபெறும்பொழுது, ஒருவன் தனக்குச் சேவகனைத் தன்னினும் அறிவாலும், வலியாலும், திறமையாலும் மிகுந்தானைக் கொள்ளக்கூடாது. அப்படிக் கொண்டால் அந்தச்சேவகனே அவனை எதிர்ப்பான். இச்செயல் ஒரு பெரிய தூலத்தை ஊன்றுகோலாகப் பயன்படுத்த நினைத்தது போலாகும் என்கிறார் வேமனர்.[42] எனவே எதற்கும் பிறரைப்பற்றிய தெளிவு தேவை என இருவரும் கூறுகின்றனர்.

## ஆள்வினை உடைமை

*2-12-1-1* சமுதாயத் தலைவனும் பிறரும் வினைகளைச் செய்யுமிடத்து இடைவிடாது மெய்முயற்சியுடையராதல் வேண்டும். இத்தன்மை இன்றேல் எடுத்துக்கொண்ட எவ்வினையும் இனிது முடிவுறாது. எச்செயலைச் செய்யும்போதும் அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்; சோர்வில்லாமல் அந்தச் செயலை முடித்தற்கு ஏற்ற பெருமையை முயற்சியே உண்டாக்கும்[4] என்கிறார் வள்ளுவர்.

*2-12-1-2* வேமனரும் ஆள்வினையுடைமையை வற்புறுத்தி யுள்ளார். ஒருவன் ஒரு செயலை மேற்கொள்ளும்பொழுது வெறுப்பு என்ற குணம் தன்னை அடையாமல் ஒழுக வேண்டும். வெறுப்பு ஒருவனைச் சேர ஆள்வினையுடைமைக்குப் பங்கமாகும். வெறுப்பே எடுத்துக்கொண்ட காரியத்தின்மேல் சோர்வுகொள்ளக் காரண மாகும். எனவே, வெறுப்பு என்ற ஒன்றிற்கு அடிமையாகில் அதனின்றும் தப்பித்துக் கொள்ள முடியாமல் அவதிப்பட வேண்டிய அவசியம் ஏற்படும். அது மட்டுமின்றி எவ்வகையிலும் அது முக்திக்கு வழிகாட்டாது என்கிறார் வேமனர்.[44] வெறுப்புணர்வு பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லை எனினும், அடிப்படைக் கருத்து இருவர்பாலும் ஒன்றே.

*2-12-2* முயற்சி செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாமை வறுமையைப் புகுத்திவிடும் என்று வள்ளுவர் கூறுவது போலவே, எந்தச் செயலும் பயனுடையதாய் முடிய வேண்டு மென்றால் முயற்சி இருத்தல் வேண்டும்; முயற்சி இன்றேல் ஒரு பயனுமில்லை என்று வேமனரும் கூறுகிறார்.[45] எனவே செயல் முற்றுப் பெறுவதற்கும், வறுமையற்றவராய் வாழ்வதற்கும் முயற்சி இன்றியமையாதது என்பது தெளிவு.

## சொல்வன்மை

*2-13-0* கருதிய வினையை முடிப்பதற்குரிய இடம், காலம், பொருள், ஏவல் முதலியன இருப்பினும், அவற்றை எடுத்துக்கூறிப் பிறரையும் தன் வயப்படுத்துகிற வாக்கு வன்மை ஒரு தலைவனுக்கு வேண்டற்பாலது. இந்த வாக்கு வன்மை சிறப்பாக அமைச்சருக்கு மிகமிக வேண்டற்பாலது.

*2-13-1-1* நல்ல சொல்லால் நன்மை உண்டாகும்; தீய சொல்லால் தீமை உண்டாகும். ஆக்கமும், கேடும் சொல்லால் வருதலால் பேசும்பொழுது விழிப்பாய்ப் பேசவேண்டும். ஒருவன் பேசும்பொழுது கேட்பவர்களைப் பிணித்துக் கவரக்கூடிய தன்மை யுடையனவாயும், கேளாதவரும் கேட்கவேண்டும் என்று விருப்பம் கொள்ளும் தன்மையுடையவாயும் சொற்கள் அமையவேண்டும்[46] என்று வள்ளுவர் கூறுகிறார்.

*2-13-1-2* வேமனரும் சமுதாயத்தில் சிறப்பு, ஆக்கம், மோட்சம் முதலியன சொல்வன்மையாலே அமையும். ஆகவே சொல்லை ஆளும்பொழுது விழிப்பாக இருக்கவேண்டும். பேசும் வகை தெரிந்து, பொருத்தமுள்ளவற்றையே பேசினால் யாரும் எதிர் பேச முடியாது. எனவே நன்றாகத் திறமையாகப் பேசத் தெரிந்து கொள்ள வேண்டும்[47] என்று சொல்லுகிறார். வேமனர் மோட்சத்திற்கும் சொல்வன்மை ஏது என்று ஒரு படி மிகுதியாகவே செல்லுகின்றார்.

## வினைசெயல்வகை

*2-14-1-1* சொல்திறத்திலிருந்து சிறப்பது தொழில்திறம். செய்ய வேண்டிய ஒவ்வொரு செயலையும் முதலில் எண்ணி, அடுத்து எடுத்து மொழிந்து, பின்பு செயலில் காட்ட வேண்டும், ஒருவனுக்கு வாய்த்த துணிவின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்.

ஆனல் செய்யும் வினை நன்மையாக அமைந்தால் அது அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும். எனவே செய்யும் செயல் புகழும் நன்மையும் தருமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும். புகழும் நன்மையும் பயக்காத வினையை என்றும் செய்யாமல் விட வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறர்.[48]

*2-14-1-2* வேமனரும் செய்யும் வினையை, தெய்வத்தை நம்பி, நன்மையுடையதாய், தூயதாய் அறவழியில் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்கிறவனைத் தெய்வமே காப்பாற்றும் என்று கூறுகிறர்.[49]

## மன்னரைச் சேர்ந்தொழுகல்

*2-15-0-1* திருவள்ளுவர் எக்காலத்துக்கும் உரிய பொதுவான உண்மைகளையே கூறியபோதிலும், அவருடைய காலத்து மக்களுக்கு விளங்குமாறு ஆண்டிருக்கிறர். ஆதலின் உண்மைகளைக் கற்க முயலும்போது சில இடங்களில் அக்காலத்துச் சொல்லை விட்டு இக்காலத்துச் சொல்லால் வழங்கினல் கருத்து நன்கு விளங்கும். காட்டாக மன்னரைச் சேர்ந்தொழுகல் அதிகாரத்தில் 'மன்னர்' என்ற சொல்லிற்கு மாருக 'ஆட்சித்தலைவன்' என்ற சொல்லை வழங்கினல் இக்காலத்துக்கு நன்கு பொருந்தும்.

*2-15-0-2* இதற்குமுன் இறைமாட்சி, செங்கோன்மை முதலிய அதிகாரங்களில் திருவள்ளுவர் ஆட்சித்தலைவனுக்குரிய பண்புகளைக் கூறியுள்ளார். இந்த அதிகாரத்தில் அவனைச் சார்ந்து பழகுகிறவர்களுக்கு வேண்டிய சில கடமைகளை வற்புறுத்துகிறர்.

*2-15-1-1* தலைவனைச் சார்ந்து நடக்கின்றவர்கள் அவனிடத்து அளவோடு பழகவேண்டும். 'நம்மிடத்துத் தலைவனுக்குத் தனி அன்பு உண்டு' என்று கருதி அவனுக்கு வெறுப்பு உண்டாகுமாறு தலைமைப் பதவிக்குப் பொருந்தாத செயல்களைச் செய்யக்கூடாது; உரிமைபற்றி அவ்வாறு செய்வது தீங்கு உண்டாக்கும் என்பது வள்ளுவர் கருத்து.[50]

*2-15-1-2* வேமனர் இந்தக் கருத்தை ஓர் உவமையால் விளக்குகிறர். ஆட்சித்தலைவனின் பணியாட்கள் தலைவன் தன்னிடம் அன்பாய் உள்ளதைப் பயன்படுத்திக்கொண்டு தகாத செயல்களைச் செய்யக் கூடாது; ஏழை மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கக் கூடாது. ஏழை மக்களின் நலனை அபகரித்தல் போன்ற கொடுஞ்செயல்களைச் செய்தால் அந்த ஏழைகளின்

வயிற்றெரிச்சல் ஒருவனை விடாது; அவன் தீமையைப் பெறுதல் உறுதி. மேலே வீசிய பந்து மேலேயே தங்காது; அது பூமியை அடைதல் உறுதி. அதுபோலவே பிறர்க்குத் தீமையைச் செய்தோர் தாமும் தீமையை அனுபவித்தல் உறுதி என்று அறிவுறுத்துகிறார் வேமனர்.[51]

## பொருள் செயல்வகை

*2-16-1-1* 'பொருளில்லாருக்கு இவ்வுலகம் இல்லை' ஆதலால், இவ்வுலக வாழ்க்கையை நன்முறையில் கழிக்க எல்லோராலும் பொருள் ஈட்டப்படவேண்டும்; வள்ளுவர் பொருள் ஈட்டும் அறவழியைப் பொருள் செயல்வகை அதிகாரத்து வற்புறுத்துகிறார். மதிப்பு இல்லாதவர்களையும் மதிக்கத்தக்கவராகச் செய்யும் சிறப்புடையது பொருள். ஆகையால் அந்தப் பொருளைவிட ஈட்டத்தகுந்த பொருள் வேறு இல்லை. பொருள் இல்லாதவர்களை எல்லோரும் இகழ்வார்கள்; பொருள் உடைய செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்.[52]

*2-16-1-2* வேமனரும் செல்வமகளைச் சேவித்து, அந்தச் செல்வத்தை நல்வழியில் ஈட்ட வேண்டும்; அப்படி ஈட்டிய செல்வத்தைத் தாராளமாகத் தானம் செய்து, முக்தி பெற வேண்டும்; முக்திக்குக் காரணமாவது பொருளே. செல்வமுள்ளவன் எவ்வளவுதான் இழிந்தவனாயினும், செல்வத்தின் காரணமாக அவன் சொல்லுக்கு மதிப்புண்டு; செல்வன் இல்லத்திலுள்ள இழிந்த பொருளுக்கும் சிறப்புண்டு; அவன் எண்ணங்களுக்கும் சிறப்புண்டு என்று கூறுகிறார்.[53] மற்றும், தன் சொந்த மனைவியும் கணவனிடம் பொருள் இருக்கும்பொழுது அவனிடம் அழகில்லையாயினும் மன்மதனாக மதிப்பாள்; பொருள் இல்லையாயின் அழகுடைய வனாயினும் மதிக்க மாட்டாள். பொருள் இழிந்த குலத்தானையும் உயர்ந்த குலத்தானாக மதிக்கச் செய்யும் என்று, பொருளின் அவசியத்தைக் கூறுகிறார் வேமனர்.

*2-16-2-1* இந்தப் பொருள் செயல்வகையை ஓதும்போது திருவள்ளுவர் அறவழியில் பொருள் செய்தலை வற்புறுத்துகிறார். தீமையில்லாத வழியில் சேர்த்த பொருளாய் இருக்க வேண்டும்; அந்தப் பொருள் அறம் பயக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்; அருளோடும் அன்போடும் ஈட்டிய பொருளாய் இருக்க வேண்டும்; அருள் இல்லாமல் அன்பு இல்லாமல் சேரும் பொருளை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று பொருள் ஈட்டும் துறையில் தூய்மையை வலியுறுத்துவர் வள்ளுவர்.

2-16-2-2 பழுத்த கிழவருக்கும் பொருள்மேல் ஆசை உண்டு எனவே, இதனல் எல்லோரும் பொருள் ஈட்ட முயலவேண்டும் என்பதை அறியலாம் என்று வேமனர் கூறுகிருர்.[54] இவ்வாறு வேமனர் கூறினும், பொருளே அறவழியிலேயே ஈட்ட வேண்டும் என்பதே இதன் உட்கருத்து.

## நட்பு

2-17-11-1 சமுதாய வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் இன்பத்தை அளித்து, ஊக்கத்தையும் கொடுத்து, மன எழுச்சியைத் தந்து, தன்னம்பிக்கையோடு இருக்கும்படி செய்வதும், உற்றுழி உதவுவதும் நட்பேயாகும். ஆனல் அந்த நட்பு சிறந்த நட்பாய் இருக்க வேண்டும். நட்பு பற்றிப் பேசுங்கால் வள்ளுவர் நூலின் நற்பொருள் கற்கக்கற்க மேன்மேலும் இன்பம் தருதலேப் போன்று பண்புடையவரின் நட்பு பழகப்பழக இன்பம் கொடுக்கும்; ஒருவனுக்கு அழிவைத்தரும் தீமைகளினின்றும் நீக்கி நல்லவழியில் நடக்கச் செய்யும். அது மட்டுமன்றிப் பண்புடையோர் நண்பனுக்கு அழிவு வந்த காலத்தில் உடனிருந்து தாமும் துன்பப்படுவர் என்று, பண்புடையோர் நட்பு மட்டும் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் கூறுகிருர்.[55]

2-17-1-2 வேமனரும், சாதுக்கள், நல்லோர்கள் நட்பை மட்டும் கொள்ள வேண்டும்; அது இம்மையிலும் மறுமையிலும் புகழைத் தேடித்தரும் என்றும், நண்பன் துன்பத்தில் உழலுகையில் அந்தத் துன்பத்தினின்றும் நீக்கி, நல்வழிப்படுத்தி, அவனுக்கு வேண்டிய உதவி செய்வதே நட்பாகும் என்றும் கூறுகிருர்.[56]

2-17-2-1 நட்புச் செய்தபிறகு விடுதலே இல்லே; ஆகையால் நட்புக் கொள்வதற்குமுன் நன்ருக ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும். ஆராயாமல் நட்புச் செய்தலேப் போலக் கெடுதியானது வேறென்றும் இல்லே; எனவே குற்றமற்றவரின் நட்பையே கொள்ள வேண்டும்; ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது விட்டுவிடவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.[57]

2-17-2-2 வேமனரும் சேரக்கூடாதவரோடு சேரக்கூடாது; நல்லோருடன் பழகுகிறவன் தீயோருடன் தொடர்பு கொள்ளக் கூடாது. அவர்களோடு தொடர்புகொள்ளின் அதனல் தீமையே ஏற்படும்; பாலோடு கலக்கின்ற நீருக்கும் பால் நிறம் வருவதோடு பாலளவுக்கு நீரும் சிறப்புப் பெறும். அதுபோலவே நல்லோருடன்

நட்புக் கொள்ள நன்மையே ஏற்படும் என்று, நல்லோருடன் நட்புக் கொள்ளும் நன்மையை விளக்கி உரைக்கின்றார்.[58]

*2-17-3-1* நற்பண்பற்றோர், அன்பு மிகுதியால் பழகுகின்ற வர்களைப் போல் உருக்கம் உடையவர்களாய்ப் பழகினாலும் அவர்களின் நட்பு வளர்வதைவிடத் தேய்வது நல்லது. சிலர் உள்ளொன்றும், புறமொன்றுங்கொண்டு நடிப்பது உலகத்தில் உண்டு; அன்னாரோடு நட்புக்கொள்வது கெடுதியையே பயக்கும் என்பது வள்ளுவர் வாக்கு.[59]

*2-17-3-2* இப்போக்கிலேயே வேமனரின் அறிவுரைகளும் உள்ளன. பண்பற்ற தீயோருடன் சேர்தல் எந்நிலையாருக்கும் தகாதது. அத்தகையாரோடு நட்புக் கொள்ளக் கூடாது; கொண்டாலும் அந்த நட்பை நாளுக்கு நாள் குறைத்து விட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அந்த நட்பால் தீமையே ஏற்படும். தீயோர் சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று; உள்ளத்தில் நினைப்பது ஒன்று, செயலில் காட்டுவது வேறொன்று; இத்தகைய இழிந்தாருக்கு மோட்சம் கிடைக்காது; எனவே அத்தகையாருடன் நட்புக் கொள்ளக் கூடாது என்று கூறுகிறார் வேமனர்.[60] எவ்வாறு பாம்பு கடிக்க வரும்பொழுது தன் தலையை மேல் தூக்குகிறதோ அதுபோன்று தீயோன், ஒருவனைக் கெடுக்க நேர்ந்தபொழுது அவனோடு சேர விரும்புவான் எனும் உவமையைக் கொண்டு இதை உணர்த்துகிறார் வேமனர்.[61]

## பேதைமை

*2-17-1-1* தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதலே பேதைமையாகும். இந்தப் பேதையர் சமுதாயத்திற்குத் தகாதவற்றைச் செய்வதற்குச் சிறிதும் அஞ்சமாட்டார்கள்; அன்பற்றுப் பிறர் நன்மையை விரும்பாதவராய் இழிந்தவர்களாக இருப்பர் என்று வள்ளுவர் கூறுகிறார்.[62]

*2-18-1-2* இந்த இழிந்தோரைப் பற்றி அழகானதொரு உவமையால் விளக்குகிறார் வேமனர். ஆடுதின்னாப்பாளையை.[63] எவ்வளவுதான் இடித்தாலும், அதன் கசப்புத் தன்மை குன்றாது; வளர்ந்துகொண்டே இருக்கும். அதுபோலவே பேதையர்கள் தம்மை யார் என்ன பழித்தாலும், இழித்துப் பேசினாலும், சிறிதும் பொருட்படுத்த மாட்டார்கள்; நாணம் கொள்ளாது தம்முடைய பழைய வழியிலேயே நடப்பார்கள்[64] என்று கூறுகிறார். பேதைமையின் இழி இயல்பை இவ்வாறு இருவரும் உணர்த்துகின்றனர்.

## புல்லறிவாண்மை

2-19-1-1 பேதைமை போன்றே சிற்றறிவினனுக இருந்தும் பேரறிஞனுகத் தன்னைத்தான் மதித்துக்கொண்டு, உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற்களைக் கொள்ளாத புல்லறிவாண்மையும் மாந்தர்க்கு மயக்கத்தை உண்டாக்கும். நூல்களைக் கல்லாது கற்றவர்போல் ஒழுகுவோர்களை, வீண் ஆடம்பரத்தைப் பேசுகின்ற வர்கள் என்றும், அன்னுர் அறிவற்றவர்களே என்றும் வள்ளுவர் கூறுகிருர்.[65]

2-19-1-2 வேமனர், இங்ஙனம் வீண் ஆடம்பரம் பேசுவோர் களை அறிவற்றவர்கள் என்று இழித்துக் கூறுவதோடு, அந்த அறிவற்றவர் சொல்லுவதைக் கேட்டு நம்புவோர்களையும் அறிவற்றவர்கள் என்கிருர்; அவர்கள் பேசும் பேச்சில் உண்மை எதுவும் இருக்காது[66] என்கிருர்.

## பெரியாரைப் பிழையாமை

2-20-1-1 சமுதாயத் தலைவனுக்கும், சமுதாயத்திற்கும் அறவோர்களைப் பிழையாது போற்றிக்கொண்டு ஒழுகல் வேண்டற் பாலது. அவர்களை அவமதித்துப் பிழைசெய்வதால் வரும் இடரும் அழிவும் தாங்க முடியாதனவாக இருக்கும் என்று வள்ளுவர் கூறுகிருர்.[67]

2-20-1-2 இதையே வேமனர் ஒரு புராண நிகழ்ச்சியைக் கொண்டு விளக்குகிருர். ஆற்றல் உள்ளவரைப் பழித்ததின் காரணமாகச் சந்திரனுக்குச் சாபம் கிடைத்தது; அதனுல் அந்தச் சந்திரன் அழகு கெட்டது; எனவே ஆற்றல்வல்ல பெரியார்வழி ஒழுக வேண்டும். அவ்வாறின்றி, அறிவுடையோரைப் பொருட் படுத்தாது விடின், அதனுல் துன்புற நேரும். அன்னுர் மூடர்களே! யானையைப் பார்த்து நாய் குரைத்தால் யானைக்கு ஒரு நட்டமும் இல்லை; அறிவுடையோரைப் பற்றி மூடர் தகாதவற்றைப் பேசினுலும், அறிவுடையோருக்கு ஒரு நட்டமும் கிடையாது[68] என்று வேமனர் கூறுகிருர்.

## பெண்வழிச் சேரல்

2-21-1-1 பொதுவாழ்க்கையில் ஈடுபட்டோரும் சமுதாயக் கடமை உணர்ச்சியுடையோரும், பெண்வழிச் சேரலைக் கடிய வேண்டும். சில பெண்கள் தம் கணவர்களின் பதவியைப் பயன்

படுத்திக்கொண்டு தம் சொந்த இலாபத்தைத் திரட்ட முற்படுகின்றனர். பெண்ணாசையால், பெண்ணுக்கு அடங்கி நடக்கின்ற இயல்பை, வள்ளுவர் இந்த அதிகாரத்தில் கண்டித்துப் பேசுகிறார். அவ்வளவே தவிர இயல்பான இல்லறக் கூட்டுறவை அவர் கண்டிக்கவில்லை. மனைவி பித்துப்பிடித்து, அவள் வழியில் நடக்கின்றவன், சிறந்த பயனை அடைய மாட்டான். அவன் பெற்ற செல்வமும் சிறந்த பயனைக் கொடுக்காது. எனவே அறத்தை, நியாயத்தை எண்ணும் நெஞ்சுடையானுக்குப் பெண்வழிச் சேரும் பேதைமை இருக்கக் கூடாது என்பது வள்ளுவர் கருத்து.[69]

*2-21-1-2* வேமனரும் இவ்வகையிலேயே எண்ணுகிறார். பாவப்பிறவிகள் மனைவியின் அழகில் சிக்கிக்கொண்டு அவளால் பெறும் இன்பத்தையே பெரியதாகக் கருதி அவள்வழி நிற்பர். ஆனால் தம்முடைய நிலையை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. இப்படிப் பெண் அழகிற்கு அடிமைப்பட்டு அவள்வழி வாழும் பேதையோன் எங்ஙனம் உத்தமன் ஆவான்? அவள் வழியில் முக்தி கிடைக்குமா? என்று வினவுகிறார் வேமனர்.[70] இயல்பாகப் பெண்ணின் மேல் எந்த அளவுக்கு அன்பு காட்ட வேண்டுமோ அந்த அளவுக்குக் காட்டலாம். ஆனால் அவர்களின் வழிச்சேராது தம் கடமையை நிறைவேற்றுபவராய் ஆடவர் விளங்க வேண்டும் என்று இருவரும் வலியுறுத்துகின்றனர்.

## வரைவின் மகளிர்

*2-22-0* மனஉறுதியும், அறிவுத்தெளிவும் இல்லாத மக்கள் நாடுகின்ற பொருள்கள் சில உண்டு; அவை பொதுமகளிர், கள், சூது என்பவை. பெண்வழிச் செல்கிறவன் எவ்வாறு பொதுக் கடமையைப் புறக்கணிப்பானே, அவ்வாறே வரைவின் மகளிரையும், கள்ளையும், சூதையும் நாடுகின்றவன் பொதுக் கடமையைப் புறக்கணிப்பான்; மறக்கவும் மறப்பான். ஆகையால் பொது வாழ்விற்கு ஏலாதனவாகிய இவற்றை, முதன்முதல் உணர்ந்து தெளிந்தவர் திருவள்ளுவரே என்று கூறலாம். எனவே, இவற்றைப் பொருட்பாலில் கடிந்து பேசுகிறார்.

*2-22-1-1* அன்பு காரணமாக விரும்பாமல், பொருள் பெறும் காரணத்தாலேயே விரும்புகின்ற மகளிரின் இனிய சொல்லை நம்பிப் பழகக்கூடாது; அந்த இனிய சொல்லே பிறகு கேட்டைத்தரக் கூடியதாகும். அவர்கள் ஆடவரிடத்தில் பயன் பெறுகின்ற வரைக்கும் பண்பான இனிய மாயச் சொற்களைப் பேசுவார்கள். அதன் பிறகு அவர்களே அந்த ஆடவரை வெறுத்துப் பேசுவார்கள்.

எனவே அத்தகையாரின் இன்பத்தை வெறுத்து அவர்களை அணுகாமல் விடவேண்டும் என்கிறார் வள்ளுவர்.[71]

2-22-1-2 வேமனர் இத்தகைய பெண்களைத் 'தீயோர்' என்று அழைக்கிறார். இந்தப் பெண்கள் இனிய மாயச் சொற்களைப் பேசி ஆடவர்களைத் தம் வசப்படுத்திக்கொள்வார்கள். அவர்களோடு தமக்கு இலாபம் இருக்கும்வரை பொருந்தி இருப்பர். அதன் பிறகு அந்த ஆடவர்களைப் பிரிதலோடு வெறுத்தும் இழித்தும் பேசுவர். எனவே, இத்தகையாரின் தொடர்பு ஆடவர்களைத் தம் கடமை யினின்றும் நீக்குதலோடு, அவர்தம் வாழ்வின் சீர்மையையும் கெடுக்கும்[72] என்று கூறுகிறார். எனவே, இத்தகைய வரைவின் மகளிர் தொடர்பு கூடாது என்பது இருவரின் கருத்தாகும்.

## மருந்து

2-23-1-1 சமுதாய வாழ்வில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். சுவரை வைத்துக்கொண்டு ஓவியம் வரைவது போல, உடலை வைத்துக்கொண்டே உயிரை ஓம்ப வேண்டும். கள், சூது என்பனபோல உடம்பிற்கு வரும் நோயும்; உள்ளத்தின் உறுதியையும் அறிவின் தெளிவையும் கெடுக்க வல்லதாகும். ஆதலின் மக்கள் நோயற்றவராக வாழவேண்டும், நோய் வந்தாலும் உடனே தீர்த்துக்கொள்ள வேண்டும். எனவே தான், வள்ளுவர் மருந்து அதிகாரத்தில் முதல் ஏழு பாடல்களில் மருந்து வேண்டாமையை அறிவுறுத்தி மற்ற மூன்று பாடல்களில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நோயைத் தீர்க்கும் முறையைக் கூறுகிறார். நோய் வந்தால் அதனைத் தீர்க்கும் முறையைக் கூறுங்கால் கைதேர்ந்த மருத்துவன் நிலையில் இருந்து கூறுகிறார் வள்ளுவர். நோய் இன்னது என்று ஆராய்ந்து, அந்த நோய்க்குக் காரணம் தெரிந்துகொண்டு, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாக மருத்துவம் செய்ய வேண்டும்[73] என்று கூறுகிறார் வள்ளுவர்.

2-23-1-2 வேமனரும் நோயற்ற வாழ்வே சிறந்தது; ஒருகால் நோய் வந்தாலும் நோயாளியை நன்றாக ஆராய்ந்து, அதாவது அவனின் சூழ்நிலைகள், அவனுக்கு வந்த நோயின் நிலை முதலிய வற்றை ஆய்ந்து தெரிந்துகொண்டு மருத்துவம் செய்யவேண்டும்; அவ்வாறு செய்கின்ற மருத்துவம் பயனுடையதாகும் என்று கூறுவதோடு, மருந்துக்கு இணையாகப் பால் எப்பொழுதும் அருந்த வேண்டுமென்கிறார்.[74] இது வள்ளுவரால் சொல்லப்பெறாத செய்தி.

குடிமை

2-24-0 நல்ல குடியில் பிறந்தவர்களுக்கு உயர்ந்த பண்புகள் இருப்பதைச் சான்றோர்கள் கண்டார்கள். அதனுல் பண்டைக் காலத்தில் குடிப்பிறப்புக்கே தனிச்சிறப்புத் தந்து போற்றினுர்கள். இக்சாலத்திலும் இப்பண்பை ஓரளவுக்குக் காணலாம். பண்டைக் காலம்போல் இப்போது இது மாருத உண்மையாக விளங்கவில்லை. இக்காலத்து உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம் இழிந்த பண்பு களும், தாழ்ந்த குடிகள் என்று கருதப்படுவோரிடம் உயர்ந்த பண்புகளும் இருப்பதைக் காணலாம்.

2-24-1-1 திருவள்ளுவரின் குடிமை அதிகாரம் கற்கும்போது, அக்காலத்துக் குடிப்பிறப்புக்கு இருந்த செல்வாக்கை எண்ணிக் கற்கவேண்டும். உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய மூன்றிலிருந்தும் வழுவாமல், இயல்பாகவே நன்னெறியில் நிற்பர். எனவே அடுக்கிய கோடிப் பொருள்கள் பெறுவதாக இருந்தாலும், நல்ல குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்தால், ஆகாயத்திலுள்ள திங்களிடம் காணப்படும் களங்கம் போல், அச்செயல்கள் அவர்களிடம் பலரறியக் காணப்படும் என்று வள்ளுவர் கூறுகிருர்.[75]

2-24-1-2 வேமனர், குடியின் பெருமையை நல்ல பண்பாளனுல் காக்க முடியும் என்றும், பண்பற்றவனுல் குடியின் பெருமை அழியும் என்றும் கூறுகிருர். இக்கருத்தைச் சில உவமைகளைக் கொண்டும் விளக்குகிருர். கரும்பின் நுனியில் பூத்தோன்றினுல் அந்தப் பூவால் அந்தக்கரும்பின் இனிப்பெல்லாம் குறையும். கரும்பு அதனுல் சிறப்பிழக்கும். சதுப்பு நிலத்தில் நன்னீரே சேர்ந்தாலும் நிலத்தின் காரணமாக நீரும் சுவை மாறும். எனவே குணமில்லாதவை குணமுள்ளவையோடு சேரக் குணமுள்ளவையும் தம் சிறப்பினின்று குறைந்து தம் குற்றம் பலரறிய நிற்கும். ஆகவே உயர்ந்த குடியில் தோன்றியவர் தம் குடியின் பெருமையைக் காக்கவேண்டும் என்கிருர்.[76]

2-25-0 வாழ்க்கைப் போராட்டமானது உணவுக்காகவும், உடைக்காகவும், பகையினின்றும் காத்துக் கொள்வதற்காகவும் நடப்பதுண்டு. இவற்றினும் முதிர்ந்த இன்னெரு போராட்டம் உண்டு. அதுவே வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை வைத்துக் கொண்டு அவற்றைப் போற்றி வாழப் போராடுவதாகும். அன்னுருக்கு வாழ்க்கைத் தேவைகளைவிட உயர்ந்த கொள்கை களே பெரியனவாய்த் தோன்றும். அன்னேர் உயர்ந்த கொள்கை களுக்காக என்ன வேண்டுமானுலும் செய்வார்கள். தம்

உயிரையும் மாய்த்துக்கொள்ளத் துணிவார்கள். இத்தகைய உணர்ச்சியே மானம் என்று சொல்லப்படும். இந்த மானத்தைப் பற்றி வள்ளுவர் பத்துக் குறட்பாக்களில் பேசியிருக்கிறார். மானம் உடையவர்களிடம் விளங்கும் பெருமை, சான்றாண்மை, பண்புடைமை முதலியவற்றைப் பற்றி அடுத்துப் பேசியுள்ளார்.

## பெருமை

*2-25-1-1* எல்லா உயிர்களுக்கும் பிறப்பியல்பு ஒத்திருக்கிறது; பிறப்பால் பெருமை சிறுமை இல்லை; செய்கிற தொழில் வேறுபாடு களால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை. நல்ல தொழில் செய்கின்ற வர்கள் குற்றமான தொழில் செய்கின்றவர்களைவிட மேலானவர் கள். மேல் நிலையிலிருந்தும் மேன்மைப்பண்பு இல்லை என்றால் அவர்கள் மேலானவர் அல்லர்; கீழ்நிலையிலிருந்தாலும் இழிகுணம் இல்லாதவர்கள் கீழ்மக்கள் அல்லர். இதை உணர்ந்த பெருமை உடையவர்கள் சிறப்பான நிலைமை உள்ளபோதும் செருக்கு இல்லாமல் பணிவாக நடப்பார்கள். சிறுமை உடையவர்களே சிறப்பு இல்லாதபோதும் தம்மைத்தாமே வியந்து பாராட்டிக் கொள்வார்கள் என்று, பெருமையையும் சிறுமையையும் வேறு படுத்திக் காட்டுகிறார் திருவள்ளுவர்.[77]

*2-25-1-2* வேமனரும், பல இடங்களில் இக்கருத்தை வலியுறுத்துகிறார். சாதிகளில் ஒன்று உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்று சொல்வதற்கில்லை. பிறப்பால் எல்லாரும் ஒன்றே; ஆகையால் சாதியைக் கொண்டு உயர்வு தாழ்வு சொல்லுதல் தகாத ஒன்று. ஞானத்தால்தான் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பிரிவைக் கொள்ளவேண்டும். சிறந்த ஞானம் உள்ளோர் உயர்ந்த குலத்தவராவர்; ஞானமில்லாதவர் தாழ்ந்த குலத்தோர் ஆவர். நற்குணம் இருக்கும்பொழுது இழிந்த குலத்தானாயினும் அவன் உயர்ந்தவனே. எனவே, ஞானமுடை யோர் குணத்துக்கே முதலிடம் கொடுப்பார்களே தவிரக் குலத்துக்குக் கொடுக்க மாட்டார்கள். நற்பண்புக்குத் தகாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். இதையெல்லாம் அறிந்தோர் குலத்தால் தாம் உயர்ந்தவர்கள் என்று கர்வங்கொள்ள மாட்டார்கள்; அப்படிக் கொண்டால் அது அறிவின்மையாகும். இந்தக் கருத்தை ஓர் அழகான உவமையால் விளக்குகிறார் கவிஞர் வேமனர். கத்தூரி பார்ப்பதற்குக் கருமையாய் இருந்தாலும் அதன் மணம் இனியது; அதுபோலவே வெளி ஆடம்பரமற்ற பெரியோர் சிறந்த பண்பு உடையவர்களாக ஞானம் உள்ளவர் களாகத் திகழ்வார்கள்.[78]

**சான்ருண்மை**

*2-26-1-1* சான்ருண்மை வாய்ந்த பெரியார் நல்ல குணங்கள் பலவற்றையும் கொண்டு நிறைந்து நிற்பர். சான்ரோரிடம் நல்லவை எல்லாம் இயல்பாகவே அமைந்திருக்கும். சான்ரோர் நலமெல்லாம் குணநலமே; பிற நலங்கள் நலங்களாகா. இவர் பழிபாவங்களுக்கு நாணங்கொள்வர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் சால்பு என்பதைத் தாங்கும் தூண்களாகும். இத்தூண்களை உடையவர்களே சான்ரோர்கள்.[79] எனவே, நற்குணம் கொண்டிருத்தலே சான்ருண்மையாகும் என்பது வள்ளுவர் நோக்கமாகும்.

*2-26-1-2* வேமனரும், சான்ரோர் என்பதற்கு இலக்கணம் நற்குணங் கொண்டிருத்தலே என்கிருர். குலத்தைக் காட்டிலும் குணமே முக்கியமானது. குணமற்றவன் எதற்கும் தகாதவன் என்று பேசுகிருர்.[80]

**பண்புடைமை**

*2-27-0* பெருமை சான்ருண்மைகளில் வழுவாது நிற்கும் தலைவர்கள் சமுதாய வாழ்க்கையில் தாம் பழகி ஊடாடி வாழ்க்கை நடத்தும் பலரின் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுவர்; உலகத்தோடு ஒட்டி ஒழுகுவர்; ஆன்ற குடிப்பிறந்து அன்பு கொண்டு அதனுல் நல்லன செய்வோராய் அமைவர். இதுவே பண்புடைமை என்று சொல்லப்படும்.

*2-27-1-1* இந்தப் பண்புடைமை என்னும் நன்னெறியை எல்லோரிடத்தும் எளிய செவ்வியுடன் இனிது பழகுவதால் எளிதாய் எய்துவர். கை, கால், தலை முதலிய உறுப்புக்களால் ஒத்திருப்பது மானுடத்துக்குப் பொருந்திய ஒப்புமை அன்று. செறியத்தக்க பண்பினுல் ஒத்திருத்தலே பொருந்திய ஒப்புமையாகும் என்று வள்ளுவர் கூறுகின்ருர்.[81]

*2-27-1-2* இப்படி வள்ளுவர் கூறுவதையே வேமனரும் விளக்கியுள்ளார். ஒழுங்குமுறையைத் தெரிந்துகொண்டு தற்பெருமையற்று, பெரியோருடனும், பிறரோடும் பழகும் தன்மையே பண்புடைமையாகும். அஃது இல்லையெனில் துன்பமே வரும். உருவில் மட்டும் ஒத்திருந்து பண்பினுல் ஒவ்வாதிருத்தல் ஒப்புமையாகாது. உப்பும் கற்பூரமும் தோற்றத்தில் ஒத்திருந்தாலும் அவற்றின் பண்பில் வேறுபடுகின்றன. எனவே மக்களுள்ளும்

அன்பும் அறனும் பண்பும் வாய்ந்த மக்களும் உண்டு; அவை யற்றோரும் உண்டு என்று அறிவுறுத்துகிறார் வேமனர்.[82]

## நன்றியில் செல்வம்

*2-28-0* தன்னை உடையானுக்கும், பிறர்க்கும் பயன்படாத செல்வத்தை நன்றியில் செல்வம் என்கிறார் வள்ளுவர். அந்தச் செல்வம் உடையாரே உலோபிகளாவர். பொருளால்தான் உலகத்தில் எல்லாம் நிகழும் என்று அறிந்திருந்தும், பொருளை ஈட்டிவைத்தும், அதைப் பயன்படுத்தவில்லை என்றால், அது ஒரு மயக்கமேயாகும். இந்த மயக்கத்தால் அவன் மனநிறைவு இல்லாமல் திரிவான்.

*2-28-1-1* எனவே பொருளைச் சேர்த்து, அதை ஒருவருக்கும் செலவழிக்காமல், பற்றுள்ளங் கொண்டு, பொருளைப் பிறர்க்குச் செலவழித்துப் புகழை எய்தாதவர்கள், இவ்வுலகில் இருப்பதும் பூமிக்கு ஒரு பெருஞ் சுமையாகும். அதுமட்டுமன்றிச் செல்வத் துக்கு அவர்களே ஒரு நோயாக அமைவார்கள். எனவே ஒருவன் எல்லாவகையிலும் இழிவைக் கொடுக்கும் உலோபத் தன்மை யினின்று நீங்கி, செல்வத்தை நன்னெறியில் பயன்படுத்த வேண்டு மென்பது வள்ளுவர் எண்ணம்.[83]

*2-28-1-2* வேமனரும் உலோபிகளைப் பலவாறு பழித்துப் பேசுகிறார். உலோபி தன் பொருளைத் தானும் அனுபவிக்க மாட்டான். பிறர்க்கும் சிறிதாவது கொடுத்துப் பயன்பட மாட்டான். இத்தகைய உலோபிகளிடம் பொருளை நாடித் திரிதல் பேதைமையாகும். அந்த உலோபிகளைத் திருத்தவும் முடியாது; குதிரைக்குப் போடும் புல்லைக் கடலில் பன்முறை மூழ்கு வித்துத் தூய்மை செய்தாலும் அதற்குத் தருப்பைப் புல் சிறப்பு வாராது; அதுபோலவே உலோபிகளை எவ்வளவுதான் திருத்த முயன்றாலும் பயனொன்றுமில்லை. உலோபிகள் சொல்லளவில் மிகவும் தாராளமாக இருப்பார்கள்; கொடுக்கும் நிலை வந்தால் பின்வாங்குவார்கள்: இத்தகைய உலோபிகளை அழிக்க வேண்டு மென்றால் மருந்து ஒன்றும் தேவை இல்லை; அவர்களை விடாது கடன் கேட்கக் கேட்க அம்மாத்திரத்திலேயே அவர்கள் அழிவார்கள் என்று, உலோபிகளின் உலோபத் தன்மையை மிகவும் அழகாக அறிவிக்கிறார் வேமனர்.[84]

எனவே, இரு ஆசிரியர்களும் செல்வர் உலோப குணம் நீங்கித் தம் செல்வத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என்று அறிவிக்கின்றமை காண்கிறோம்,

## நாணுடைமை

2-29-1-1 பொதுவாழ்க்கையில் தகாதன செய்வது குற்ற மாகும். அதனல் பலர்க்குத் துன்பம் வரும். ஆகையால் தகாதன செய்ய நாணுகின்ற தன்மை இயல்பாக அமைய வேண்டும். மனம், மொழி, மெய் என்பவை ஒடுங்குவதால் வரும் நாணம் வேறு; தகாத செயல் செய்ய முடியாதவாறு தடுக்கும் நாணம் வேறு; முன் சொன்னது பெண்களுக்கு இயல்பாகவே அமையும்; அடுத்தது நன்மக்கள் பொதுவாழ்வில் மேற்கொள்ள வேண்டிய நாணம் என்று வள்ளுவர் கூறுகிருர்.[85]

2-29-1-2 அவ்வாறு தடுக்காது, நாணமின்றிப் பாவச் செயல்களுக்கு அடிமையாகும் தன்மை மிகவும் இழிவுக்குரியது. இந்த இழிவுத்தன்மை நீங்கி ஞானம் பெற்று உண்மைத் தத்துவத்தை அறிந்து திறலுடையவராய் இருக்கவேண்டும் என்று வேமனர் கூறுகிருர்.[86]

## உழவு

2-30-0 ஒரு குடியும் நாடும் உயர்வதற்குப் பல தொழில்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தப் பல தொழில்களிலும் முன்னணியில் நிற்பது உழவுத் தொழிலாகும். இந்தத் தொழிலே எல்லோருக்கும் அடிப்படை ஆதாரமான உணவுப் பொருள்களை நல்குவதாகும். இந்த ஒரு தொழிலைப் பற்றித்தான் வள்ளுவர் பத்துப் பாடல்களில் பேசுகிருர். வேமனரும் உழவுத்தொழிலால் ஆக்கப்படும் உணவின் இன்றியமையாமையைப் பற்றிப் பேசுகிருர்.

2-30-1-1 வள்ளுவர், வேறு எந்த வழியில் சுழன்றாலும் உலகம் முடிவில் ஏர்த்தொழிலின் பின் நிற்கிறது; உழவுத்தொழில் செய்யாது உயிர்வாழ்கின்ற அனைவரையும் இத்தொழில் தாங்கு வதால், உழவுத்தொழில் செய்வோர் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்; உழவு செய்து அதனல் தாமும் உண்டு பிறரையும் உண்பித்து வாழ்கின்றவர்களே உரிமையோடு வாழ்கின்றவர்கள் என்று உணவுக்குக் காரணமான உழவுத்தொழிலைப் பற்றிச் சிறப்பித்துப் பேசுகிருர்.[87]

2-30-1-2 வேமனர் மக்கள் வாழ்க்கைக்கு உணவே முக்கிய மானது; தான் மனநிறைவாய் வாழ்வதற்கும், பிறர் மனமகிழ் வுக்கும் காரணமாய் இருப்பது உணவே என்றும், தானங்களிலும் அன்னதானமே சிறந்தது என்றும், உடலில் தோன்றும் எல்லாவித ஆசைகளுக்கும் காரணமாய் இருப்பது உணவே என்றும், உணவின் இன்றியமையாமையைப் பேசுகிருர்.[88]

## நல்குரவு

*2-31-0-1* குடிமக்களுக்கு வேண்டிய பல நல்ல இயல்புகளைக் கூறி, உழவுத்தொழில் செய்து வாழும் சிறப்பையும் கூறிய வள்ளுவர், அவர்களின் வாழ்வில் இருக்கத் தகாதன இவை எனவும் கூறுகிறார். நல்குரவு, இரவு, கயமை முதலிய மூன்று அதிகாரங்களில் குடிமக்களுக்குத் தகாதனவற்றை எடுத்துக்கூறிக் கடிகின்றார். நல்லதொரு சமுதாயம் அமைய வேண்டுமென்றால் குடிமக்களிடம் வறுமை இருக்கக்கூடாது; இரந்து வாழும் வாழ்வும் கூடாது; மக்கள் தன்மைக்கு மாறான கீழ்த்தன்மையும் இருக்கக்கூடாது. மேற்கூறிய தகாத மூன்றினும் வறுமையே மிகக் கொடியது.

*2-31-0-2* வறுமையை வள்ளுவர் ஒரு பாவி என்று அழைக்கிறார். அந்தப் பாவி அடைந்தால் மறுமை வாழ்வும் கெடுகின்றது; இம்மை வாழ்வும் கெடுகின்றது. அதுமட்டுமன்றி, அந்த வறுமை ஒருவனுடைய குடிப்பண்பையும், புகழையும் ஒருசேரக் கெடுக்கும்; தன்னை உடையானைப் பெற்ற தாயானும் அயலான்போல் புறக்கணிக்கச் செய்யும்.

*2-31-1-1* வறுமை வந்தபோது ஒருவன் அறநெறியிலிருந்து வழுவ நேரும்; வறுமைத்துன்பம் நல்வாழ்வையும் கெடுக்கக்கூடும்; கெட்டபோது, சாதாரணமாக எந்த நிலையினும் வெறுக்காத ஈன்ற தாயும் அவனைப் புறக்கணிக்கக் கூடும் என்று வள்ளுவர் வறுமையின் கொடுமையைப் புலப்படுத்துகிறார்.[89]

*2-31-1-2* வேமனர் பாடல்களிலும் இந்தக் கொடுமை விளக்கிப் பேசப்பெறுவதைக் காணலாம். வறுமை பெற்றவன் பெருத்த பாவம்செய்தவனாவான். வறுமை தன்னைச் சேர்ந்தானைத் துன்புறுத்துவதோடு அவன் சுற்றத்தாரையும் துன்புறுத்தும்; தீயவழியில் செல்லவிடும். வறுமையால் இருக்கும் அறிவும் அழியும்; புகழும் குறையும். வறுமை அடைந்தவனின் உடல் தூய்மையும் கெடும்; அவன் உள்ளத்தூய்மையும் கெடும். அவன் உறவினர்களாலும், பெற்ற பிள்ளைகளாலும், மணந்துகொண்ட மனைவியாலும் வெறுக்கப்படுதலோடு, பெற்ற தாயாலும் வெறுக்கப்படுவான். அதோடு அமையாது, அன்னார் அவனுக்குப் பகைவராகவும் திகழ்வர்; மிகுந்த வறுமை அடைந்தபோது செய்யும் எந்த வேலையும் வெற்றிகரமாய் முடியாது; அந்தச் செயலால் யாருக்கும் எந்தவிதப் பயனும் இருக்காது; கொண்ட கல்வி அழிவதற்கும் அந்த வறுமை காரணமாய் அமையும். சுடாத மட்பாத்திரத்து நீர் நில்லாது அழிவதுபோன்று, வறுமையில் கற்ற

கல்வியும் நில்லாது என்று கூறுகிறார்.[90] இந்த வறுமை அடைந்தவர்கள் மனவுறுதி அற்றவர்களாயின் அவர்களால் சமுதாயத்திற்கு ஒரு பயனுமில்லாமல் போகும். எனவே வறுமை நீக்கும் தகுதியுடையோர் வறுமையை நீக்க முயலவேண்டும். அப்பொழுதே வறுமையால் பொதுவாழ்விற்குத் தகாதவரும் தகுதி உடையவராவார்கள்.[91]

## இரவு

2-32-0 'ஈ' என்று இரப்போருக்கு ஈவதே மனித இயல்பு; துன்புறுவோருக்கு உதவுதலே மனிதப் பண்பு; ஆனால் இப்படி இரப்போருக்கெல்லாம் உதவி செய்துகொண்டே போனால், இரந்து வாழ்வதற்கு ஊக்கம் காட்டியது போலாகும்; இந்த நல்ல நோக்கத்தால் ஒன்றும் உதவாமல் போனால் உண்மையிலேயே துன்புறுவோருக்கு ஒன்றும் உதவாத குற்றம் சாரும்; உண்மையிலேயே துன்புறுவோர்களில் துணிவுடையோர் தீச்செயல்கள் செய்யமுனைவர், துணிவில்லாதவர்கள் பட்டினியால் வாடுவார்கள். எனவே இந்த நிலையில் என்ன செய்வது? துன்புறும் தனிப்பட்டோரின் நன்மை கருதி உதவி செய்ய வேண்டும்; அதேநேரத்தில் நாட்டு நலனைக் கருதி இரத்தலை நீக்குதலையும் செய்ய வேண்டும். திருவள்ளுவர் இந்த இருவித நோக்கத்தால்தான் இரவு, இரவச்சம் என்று இரண்டு அதிகாரங்களைத் தீட்டியுள்ளார். இரப்போர் நல்லவரை நாடி இரக்க வேண்டும்; அப்படி இரந்தோருக்கு உதவுதல் நல்லோர் கடமை என்று இரவு அதிகாரத்திலும், இரந்து உயிர் வாழ்தல் தவறான வாழ்க்கை என்று இரவச்சம் அதிகாரத்திலும் விளக்கிக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

2-32-1 இதனால்தான் தக்கவர்களைக் கண்டால் இரந்து உதவி பெறலாம் என்று, ஓர் இடத்தில் இரப்பவர்களின் உயிர் வாழ்க்கையைக் கருதி இரக்கங்கொண்டு கூறிப், பின், உள்ளதை மறைச்சாமல் உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண்போன்ற சிறந்த மிக நல்லவர்களிடத்திலும் இரந்து உதவிபெறாமல் வாழ்வதே கோடி மடங்கு நல்லது என்று, நாட்டின் பொதுநலம் கருதியபோது இரத்தலைக் கடிகின்றார் வள்ளுவர். மற்றும் பசுவிற்கு நீர் வேண்டும் என்று அறம் நோக்கி இரந்து கேட்டாலும், அந்த இரத்தலைவிட நாவிற்கு இழிவானது மற்றொன்று இல்லை என்றும் இயம்புகிறார்.[92]

2-32-2 வேமனரும் இரத்தலைத் தக்காரிடம் மேற்கொண்டு உதவி பெறவேண்டும் என்றும், உதவும் பண்பற்றவனிடம் இரக்கக்

கூடாதென்றும் கூறுவதோடு, தக்கார் யார் என்ற வினவிற்கும் விடை பகர்கிறார். தம்மிடம் இரந்தோருக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வோரும், உதவியைச் செய்து, 'அய்யோ! பொருளை இழந்து விட்டோமே' என்று கவலை கொள்ளாதவர்களுமே தக்கார் என்று விளக்குகிறார்.[93] வள்ளுவரும் தக்கோர் என்போர் வஞ்சம் இல்லாத நெஞ்சும், கடமையுணர்ச்சியும், இகழ்ந்து எண்ணாமல் பொருள் கொடுக்கும் பண்பும் இருப்போராவர் என்கிறார்.[94]

*2-32-3* இரப்போனுக்கும், புரவலனுக்கும் இலக்கணம் கூறுகையில், என்றோ ஒருநாள் இரப்போன் இரப்போன் ஆக மாட்டான்; என்றோ ஒருநாள் கொடுப்போன் புரவலன் ஆக மாட்டான்; இயன்றவரை உதவுகின்றவனே புரவலன் ஆவான் என்று இருவருக்கும் இலக்கணம் வகுக்கிறார் வேமனர்.[95]

*2-32-4* அறத்திற்காயினும் சரி, பிறர் பொருட்டாயினும் சரி, இரத்தலைக் கூடாதென்று சொல்லிய வள்ளுவர், பிறிதொரு இடத்தில் இரப்பாரை இரந்து ஒன்று வேண்டுகிறார். இரந்து கேட்க வேண்டிய நிலை நிச்சயம் தேவைப்படும்பொழுது, பொருள் வைத்துக் கொண்டு இல்லை என்று சொல்லிக் கரப்பவர்களிடம் சென்று பொருள் இரக்கக்கூடாது என்று கூறி ஈகையை வேண்டுகிறார்.[96] எனவே இரத்தலும், கரத்தலும் இல்லாத சமுதாயம் அமையவேண்டும் என்று இருவரும் விரும்புவதை நாம் அறியலாம்.

## கயமை

*2-33-0-1* இல்வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் தேவையான இயல்புகளைப் பெற்றுப் பண்பட்டுள்ளோர், இல்வாழ்விலும் (தனிவாழ்விலும்) சமுதாயவாழ்விலும் தமக்கும் பிறருக்கும் ஓர் இடையூறும் இல்லாமல் இன்பமும் அமைதியும் நிலவ வாழ முடியும். பெயருக்கு மட்டும் குடிமக்கள் என்று பெயர்கொண்டு, நற்குடி மக்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இல்லை என்றால் அவர்கள் மக்களே அல்லர்.

*2-33-0-2* அவர்கள் தம் வாழ்க்கையில் பொறுப்பில்லாத காரணத்தால் நெஞ்சில் அவலம் இல்லாதவராவர். நெறி இல்லாத காரணத்தால் தம் விருப்பம் போல் நடப்பார்கள். அவர்கள் தமக்காகவும் கவலைப்பட மாட்டார்கள்; பிறர்க்காகவும் கவலைப்பட மாட்டார்கள்.[97]

*2-33-1-1* வடிவால் மக்களாக உள்ள எல்லோரும் பண்பாலும் மக்களாகவே இருந்தால் பொதுவாழ்க்கைக்கு ஒரு கெடுதியும் வாராது; ஆனால் கீழ்மக்கள் வடிவால் மக்களாகக் காட்சி

யளித்து மக்கட்பண்பில்லாமல் வாழ்கிருர்கள். இந்த வேறுபாடு இருந்தாலும், மக்கள் தம் வெளித் தோற்றத்தால் ஒத்திருக்கும் ஒப்புமைபோல் வேறு எங்குமே கண்டதில்லை என்கிருர் வள்ளுவர்.[98]

*2-33-1-2* இத்தகைய மக்கட் பண்பில்லாதவர்களை வேமனர் பண்பற்றவர்கள் என்றும், அறிவற்றவர்கள் என்றும் இகழ்ந்து பேசுகிருர். அவர்களை மற்றப் பண்புடைய மக்கள் மதிக்கவும் கூடாது என்று கட்டளையிடுகிருர். அவர்கள் கூறும் அறிவுரைகளை மேற்கொள்ளக் கூடாதென்றும் புகல்கிருர்.[99] மற்றும் உப்பும் கற்பூரமும் உருவில் ஒத்திருந்தாலும் அவற்றின் பண்பில் வேறுபடு கின்றன; மக்களுள்ளும், மேலோர் கீழோர் உருவில் ஒத்திருந் தாலும் பண்பில் வேறுபடுகின்றனர்; இதனை அறித்து ஒழுக வேண்டும்[100] என்றும் கூறுகிருர் வேமனர்.

*2-33-2* கயவர்கள் புலனடக்கம் இல்லாதவர்கள்; அதனுல் அவர்கள் தம் மனம் போன போக்கில் போகிருர்கள். அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபடும் பொழுது அந்தக் குறை நன்கு புலப்படுகிறது.

*2-33-3* பொதுவாழ்க்கையில் பிறரோடு பழகும் பொழுது அளவறிந்து பழக வேண்டும்; கீழ்மக்களுக்கு இந்த உரிமை பற்றிய அறிவில்லை, தம்மைவிடத் தாழ்ந்தவர்களைக் கண்டால் அவர்களை விட மேம்பாடுகொண்டு இறுமாப்புக் கொள்வர்; தம்மைவிட மேலோரை ஒப்புநோக்க மாட்டார்கள்[101] என்று வள்ளுவர் கூறுவதையே, உருவில் கரடியைப் போன்ற அஞ்ஞானிகள் தம்மினும் சிறப்புடைய தம் குருமார்களை ஒப்புநோக்க மாட்டார்கள்; தம்மைவிடக் கீழோரைக் கண்டு அவர்களைவிடத் தாம் மேம்பட்டதாக இறுமாப்புக் கொள்வர்[102] என்று வேமனரும் புலப்படுத்துகிருர்.

*2-33-4* இத்தகைய கயவரைத் திருத்த முயல்வது வீணுன செயலே. கழுதைப்பாலில் சருக்கரை சேர்த்தாலும் அது பருகு வதற்குப் பயன்படாது; கழுதைக்கு மணம்மிக்க சந்தனத்தைப் பூசி ஞலும் அது மண்ணில் புரளும் குணத்தினின்று மாருது. கீழோரும் இத்தகையவரே; இவர்களால் சமுதாயத்திற்கு ஒரு பயனுமில்லை.[103]

*2-33-5* இவர்கள் உலகில் வாழ்வதால் பொறுப்பற்ற தன்மை, நெறியின்மை, பொருமை முதலிய மாசுகள் பொது வாழ்வில் இடங்கொள்கின்றன. எனவே கயமை நல்ல சமுதாயத்

திற்குத் தகாத ஒன்று; அவர்களின் தன்மையறிந்து விலக்குவதே பொதுவாழ்வு சீர்பெறுவதற்குரிய வழியாகும்.

**2-34-1-5** இவ்வாறு வள்ளுவர் பொருட்பாலிற் கூறியுள்ள ஐம்பது அதிகாரங்களில், இருவர் கருத்துக்களும் அடிப்படையில் ஒத்து அமைந்துள்ள முப்பத்தொரு அதிகாரங்களையே ஒப்பிட்டுக் காண்கிறது இவ்வியல்.

*2-34-2* இந்த இயலில் திருவள்ளுவரும் வேமனரும் மக்களின் வாழ்வை விளக்கி வழிகாட்டிய சான்றோர்கள் என்பது விளக்கப் பட்டிருக்கிறது. குடிமகனும், அரசனும் சமுதாய நலன் பேணி, தேவையான அளவுக்கு உரிமைகளை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று இருவரும் உணர்த்துகின்றனர். இருவரும் கல்வியின் இன்றியமையாமையைத் தெளிவுபடுத்துகின்றனர். எனினும் வள்ளுவர் அளவுக்கு வேமனர் விரித்துக் கூறவில்லை. உடல் நலம் பேணுவதற்கு ஒரு மருந்து மட்டும் போதாது; மருந்தினும் தக்க உணவை உண்ணுதல் மிகவும் சிறந்தது என்று இருவரும் சொல்லுகின்றனர். பொதுவாய், பொதுமக்கள் நலத்துக்கும் தன் நலத்துக்கும் கேடு பயக்கும் சூது, கள், பொய், கயமை, தீயோர் தொடர்பு, சோம்பல், பிற பெண்களை நாடுதல், பெண்வழிச் சேரல், எப்பொழுதும் எதற்கும் ஐயங்கொள்ளுதல் முதலியன நீக்கிப் பொதுமக்கள் நலத்துக்கும், தன் நலத்துக்கும் தேவையான நற்பண்புகளைக் கொண்டு சமுதாயம் அமைய வேண்டும் என்று இருவரும் வேண்டுகின்றனர் என்பது இந்த இயலால் தெரிய வருகிறது.

## குறிப்பெண் விளக்கம்

1. திரு. தி. விழா மலர், 1967, கழக வெளியீடு, பக். 53.
2. குறள் 386, 389, 385, 388.
3. குறள் 383, 552, 560.
4. குறள் 544.
5. குறள் 381.
6. குறள் 382, 383, 390, 386, 389, 388.
7. வே. ப. ர. 2396, 1980.
8. குறள் 392.

9. வே. ப. ர. 2450, 2451.
10. வே. ப. ர. 257.
11. குறள் 393, 400, 398.
12. வே. ப. ர. 1692.
13. குறள் 405; வே. ப. ர. 2078.
14. குறள் 423, 422; பரிமேலழகர் உரை பக். 162.
15. வே. ப. ர. 942.
16. குறள் 430.
16. அ. வே. ப. ர. 1175.
17. வே. ப. ர. 2367.
18. குறள் 431, 433, 434.
19. வே. ப. ர. 1937, 1188, 399, 2368.
20. குறள் 441.
21. குறள் 444. 447.
22. வே. ப. ர. 529, 692.
23. குறள் 451, 452, 454, 453.
24. வே. ப. ர. 485, 386, 486, 232.
25. குறள் 452.
26. வே. ப. ர. 402, 424, 441.
27. வே. ப. ர. 2415.
28. குறள் 465; வே. ப. ர. 418.
29. குறள் 465, 467.
30. வே. ப. ர. 1885, 516.
31. குறள் 475, 476. 495, 496.
32. குறள் 471.
33. வே. ப. ர. 795.
34. குறள் 475; வே. ப. ர. 2370.
35. குறள் 481, 490.
36. வே. ப. ர. 587, 397, 2448.
37. குறள் 495.
38. வே. ப. ர. 2113, 2386.
39. குறள் 496; வே. ப. ர. 2305.
40. குறள் 499; வே. ப. ர. 4,

41. குறள் 501.
42. வே. ப. ர. 2353.
43. குறள் 611.
44. வே. ப. ர. 1874.
45. குறள் 616; வே. ப. ர. 647
46. குறள் 642, 644.
47. வே. ப. ர. 1993, 43.
48. குறள் 651, 652.
49. வே. ப. ர. 607.
50. குறள் 700.
51. வே. ப. ர. 2430.
52. குறள் 751, 752.
53. வே. ப. ர. 2264, 264, 314, 299, 300, 307, 308
54. குறள் 754, 755; வே. ப. ர. 319.
55. குறள் 783, 787.
56. வே. ப. ர. 593, 505.
57. குறள் 800.
58. வே. ப. ர. 2180, 1923.
59. குறள் 811, 819.
60. வே. ப. ர. 2378, 2354, 430, 852.
61. வே. ப. ர. 420.
62. குறள் 834.
63. பின்னிணைப்பு - 2.
64. வே. ப. ர. 433.
65. குறள் 892.
66. வே. ப. ர. 2242.
67. குறள் 892.
68. வே. ப. ர. 392, 24
69. குறள் 901, 902.
70. வே. ப. ர. 771, 759.
71. குறள் 911, 912.
72. வே. ப. ர. 365.
73. குறள் 948.
74. வே. ப. ர. 1984, 1470.

75. குறள் 952, 954, 457.
76. வே. ப. ர. 380, 498.
77. குறள் 972, 973, 978.
78. வே. ப. ர. 129, 239, 155, 1488, 2141.
79. குறள் 982, 983.
80. வே. ப. ர. 495.
81. குறள் 991, 993.
82. வே. ப. ர. 2351.
83. குறள் 996.
84. குறள் 1002, 1003, 1006.
85. வே. ப. ர. 2159, 2154.
86. குறள் 1011.
87. வே. ப. ர. 1135, 2355.
88. குறள் 1031, 1032, 1033.
89. வே. ப. ர. 2430, 1129.
90. குறள் 1047.
91. வே. ப. ர. 342, 340, 343, 346, 2168, 2260, 2369, 40.
92. வே. ப. ர. 807.
93. குறள் 1051, 1061, 1066.
94. வே. ப. ர. 2235, 2238.
95. குறள் 1053, 1056.
96. வே. ப. ர. 2236.
97. குறள் 1067.
98. குறள் 1072, 1073.
99. குறள் 1071.
100. வே. ப. ர. 1151.
101. வே. ப. ர. 192.
102. குறள் 1074.
103. வே. ஞா. ப. 1324.

## இயல்—5

# புரட்சிப் போக்கும் சீர்திருத்தக் கருத்துக்களும்

*0.* புரட்சி, சீர்திருத்தங்களைப் பற்றி விளக்கி, இரண்டிற்கும் உள்ள தொடர்பைச் சொல்லி, வள்ளுவரும் வேமனரும் புரட்சிக் காரர்களாகவும், சீர்திருத்தவாதிகளாகவும் திகழ்ந்தமை இந்த இயலில் கூறப்பட்டிருக்கின்றன.

*1-0* உலகத்தில் பலவகையான உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. பறவை, விலங்கு முதலியன அனைத்தும் மனித இனத்தினும் தாழ்ந்த உயிரினங்கள். தம் வாழ்வில் யாதொரு மாற்றமும் இன்றி முன்பு போலவே இன்றும் இருந்து வருகின்றன. ஆனால், மனித அறிவு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வருகிறது. குறுகிய காலத்திலேயே மனித வாழ்வில் எண்ணற்ற மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. காரணம், மற்ற உயிர்களை மாற்ற முயன்றாலும் அந்த முயற்சியில் அவ்வளவாக வெற்றியைக் காண முடியாது. அவையெல்லாம் பொதுப்பட்ட இயற்கை நியதி ஒன்றுக்கு முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டே இயங்குகின்றன. ஆனால் மனிதனே மாறும் இயல்பு பெற்றிருக் கிறான்; திருந்தும் மனம் பெற்றிருக்கிறான். இப்படித் திருந்தும் ஆற்றல் மனித இனம் பெற்றிருப்பதால்தான், முன்னையினும் இன்று வியக்குமளவில் மேம்பாடு அடைந்துள்ளான். இந்த மேம்பாடு மனித இனத்தின் சிந்தனைத் திறத்தால், அந்த இனத்தின் உயர்நிலையை நோக்கி வளர்ந்து வருவதாகும். அதாவது நீதி, அமைதி, பிறரை வருத்தாமல் அடையும் உண்மை இன்பம் இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். இதை உட்கொண்டதே சீர்திருத்தம். எனவேதான் மனித இனத்திற்குச் சீர்திருத்தம் தேவையாய் உள்ளது. மனித அறிவு வளர வளரச் சீர்திருத்தம் பயனும் விளக்கமும் அடைகிறது.

*1-1* அறிவின் மூலம் அடையாதது ஒன்றுமில்லை. வள்ளுவரும் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று கூறியுள்ளார்.[1]

அவர்களுக்கு அதிர வருவதோர் நோயும் இல்லை என்கிறார்.[2] ஆனால் வாழ்க்கை நலன், அறிவின் நலன் இவற்றில் எதன்வழி எது திருத்தமுறும் என்பது வினா. உலகில் தத்துவங்களும் மதங்களும் அறிவு நலனையே பெரிதும் வற்புறுத்தும். மனிதனுக்கு அறிவு நலன் உயர உயர, வாழ்க்கை நலன் அதன்வழித் தானே மாறி அமையும், ஆனால், வாழ்க்கை நலன் உயர்ந்தாலன்றி, மனித அறிவும் பண்பாடும் வளரா என்ற கொள்கையை 'மார்க்ஸ்' என்ற புதுக்காலத் தத்துவப் பேரறிஞர் கூறுகிறார். வள்ளுவரும், அறிவையே தலைமையாகக் கொண்டாலும், வாழ்வு நலனின்றி அறிவு உயர்ச்சிச் சிறப்புப் பெறாது எனக் கொள்கிறார். இதனை அவரின்,

> நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
> சொற்பொருள் சோர்வு படும்[3]

என்ற பாடல் அறிவுறுத்தி நிற்கிறது. எனவே, ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல், வாழ்க்கை நலனும் அறிவு நலனும் இரண்டுமே ஒன்றுக்கொன்று இணைந்து இயங்குகின்றபொழுதே செம்மையான வாழ்வு அமையும் என்ற முடிவுக்கு வரலாம்.

*1-2* மனித அறிவு மிகமிக மெல்லவே உயர்வும் விளக்கமும் அடைகிறது. உலக அறிவுப் புத்தகத்தில் ஒரு புதுக்கருத்தைச் சேர்ப்பவன் பேரறிஞன் ஆகிறான். அறிவில் சோர்வு, குறைபாடு, அழிவு இவை அடிக்கடி ஏற்படுகின்றன. இவற்றை நீக்கி முயற்சி, நிறைவு, புதுமை ஆக்கல் இவற்றால் மாறுதலைக் கொண்டு வரும்போதே, மனிதன் திருத்தமும் முன்னேற்றமும் அடைந்தவன் ஆகிறான். இப்பணியினை உலகில் செய்வோரே செயற்கரிய செய்யும் பெரியாராவார்; திருவள்ளுவரும் வேமனரும் இத்தகு பெரியோரே.

*1-3* சீர்திருத்தம் வெறும் வாய்ப்பேச்சல்ல; செயலில் செய்து காட்ட வேண்டும். செயலில் அமைவதற்குமுன் சொல்லிலும் இந்தச் சீர்திருத்தம் இருத்தல் வேண்டும். இந்தச் சீர்திருத்தம் அரசியலிலும் வேண்டும்; சமுதாயத்திலும் வேண்டும். சீர்திருத்த முடைய அரசு இல்லாதபோது சீர்திருத்தமுடைய சமுதாயமும் அமையாது. எனவே கல்வி, கலை, நூல், சொற்பொழிவு முதலிய வற்றால் சமூகத்தைத் திருத்துவதோடு, அரச தண்டனையானும் சீர்திருத்தம் சமுதாயத்திலே இடங்கொள்ள வேண்டும். ஆகவே தான் வள்ளுவர் கல்வி, கலை, நூல் இவற்றைக் காட்டிலும் சீர்திருத்தத் தக்க கருவி 'மன்னன் கோலே' என்று கூறுகிறார்.[4] வேமனர் கல்வி, கலை, நூல், சொற்பொழிவு முதலியவற்றால்

சமுதாயம் சீர்திருத்தம் அடைய வேண்டும்[5] என்று பேசுகிறார். அப்படிச் சீர்திருத்தம் அடையாதபொழுது கல்வியாலும், மற்ற வற்றாலும் ஒரு பயனுமில்லை என்று அவர் தெரிவிக்கிறார்.

2-0 சீர்திருத்துவோனும், புரட்சியாளனும் வேறுபட்டவர் அல்லர்; இருவரும் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்குடையவர்களே. ஆயின் புரட்சிக்காரன் தீவிரவாதியாக விளங்குகிறான். உண்மையை உணர்த்துவதில், செயலில் காட்டு தலில் அஞ்சாதவன்; இத்தகைய தீவிரநிலையைச் சீர்திருத்தவாதி யிடம் காண முடியாது. எனினும் ஓர் அமைதியான போக்கில் உண்மையை உணர்த்தவும், செயலில் செய்துகாட்டவும் இவன் முன்வருவான். இந்த இருபோக்குக் கருத்துக்களையும் இருவரிடமும் காணலாம்.

3-0 வள்ளுவரிடத்துக் கருத்தில் மட்டுமின்றி நூலமைப்பிலும் எத்தனையோ மாறுதல்கள் இருப்பதைக் காணலாம். திருக்குறள் நூல் தொடக்கமே பொதுக்கடவுள் வாழ்த்துக் கொண்டு புதுப்போக்கில் அமைந்துள்ளது. மிகச்சுருங்கிய சொல்லில் விரிந்த உண்மைகளை எல்லாம் விளக்கிப் படிப்போர் உள்ளத்தே அழகு, ஊக்கம், இனிமை இவற்றை எழுப்பும் பாக்களிலே மிகச் சிறியதாகிய 'குறள் வெண்பா'வில் நூல் அமைந்ததும் புரட்சிப் போக்காகும். திருக்குறளுக்கு முன்பு, பண்டைத் தமிழ்நூல்களில் இடையிடையே அறவுரைகள் கூறப்பட்டனவேயன்றி, தனியாக, தெளிவாக அறம், பொருள், இன்பம் என்ற முறையில் உணர்த்தும் ஓர் அறநூல் செய்ததாகத் தெரியவில்லை. திருக்குறள் ஒன்றே தமிழில் முதன்முதல் அம்முறையில் தோன்றிய அறநூலாகும்.

3-1 தமிழ் இலக்கிய அகத்திணையில் மூன்று வகையான பொருள்கள் உள. அவை முறையே, முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என்பன. இந்த மூன்று வகையான பொருள்களிலும் தேவையான அளவுக்கு மட்டுங்கொண்டு அகத் திணை மரபை நாட்டிப் புதுப்போக்கில் நூல் அமைத்துள்ளார் வள்ளுவர். உரிப்பொருளே சிறப்பாக அமையும்படி பாடி யுள்ளார். கூற்று வகைகளிலும், பலருடைய கூற்றுக்களை அமைக் காமல் தலைவன், தலைவி, தோழி என்னும் மூவருடைய கூற்றுக் களையே அமைத்துள்ளார். இந்த மூவரைக்கொண்டே 'காமத்துப் பாலை' ஒரு காதற்கதை நாடகமாக அமைத்துள்ளார். காமத்துப் பாலில் அமைந்த ஊடல்முறை சங்கப்பாட்டுக்களில் அமைந் துள்ள முறையினும் வேறுபட்டுப் புரட்சிப் போக்கில் அமைந் துள்ளது.[6] திருக்குறளில் வரும் ஊடலில் பரத்தை என ஒருத்தி

இல்லை; தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும் இல்லை. சங்க காலத்துப் பாட்டுக்களில் இடம்பெற்றுவந்த பரத்தையர்க்குத் திருக்குறளில் இடம் இல்லை; 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரம் வள்ளுவரின் சீர்திருத்தத்தைப் பேசுகிறது. எனவே தான், குறளில் தலைவி, தலைவன் தவறு இல்லாதவன் என்று அறிந்தும், தவறு செய்ததாகக் கற்பனை செய்துகொண்டு விளையாட்டாக ஊடுகிறாள்; புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை அதிகாரப் பாடல்கள் இந்த உண்மையை உணர்த்தும். இவ்வாறு பிற அகப்பொருள் நூல்களிலே காணுதற்கரிய புதுப்போக்குகளைக் காமத்துப்பால் தன்னிடத்தே கொண்டுள்ளது.

*3-2* பொருட்பாலில் இரத்தப்போருக்கு இடம் கொடுக்காது, கருத்துப்போருக்கு இடம் கொடுத்துள்ளார். வரைவின் மகளை (பொதுமகளிரை) வெறுத்தலும், பிறர் மனையாளை விரும்பாமையும் தமிழில் புதிதாக இவராலேயே கூறப்பட்டதெனலாம். புலால் நீக்கத்தையும், கள்ளுண்ணாமை, பொய் சொல்லாமை, சூது மேற்கொள்ளாமை முதலியவற்றையும் தமிழ்நாட்டில் பொது அறமாகப் பறைசாற்றியவர் திருவள்ளுவரே யாவார்; அதற்குமுன் கள்ளும் ஊனும் தமிழரின் விருந்துணவுகளாக இருந்தமையைச் சங்க இலக்கியங்களில் காணலாம். வள்ளுவர் காட்டும் பொதுமகளிரை வெறுத்தல் முதலிய அனைத்துச் சீர்திருத்தங்களைப் பற்றி வேமனரும் பேசியுள்ளார். வேமனருக்கு முன்பும் தெலுங்கு மொழியில் இந்தச் சீர்திருத்தங்களைப்பற்றிச் சில சான்றோர்கள் எடுத்துரைத்துள்ளனர். ஒழுக்கம் தவறிய அந்தணர்களைத் தாக்கிப் பேசுதல், மூடப்பழக்கங்களை இகழ்ந்து பேசுதல் இவற்றில் வேமனர் தீவிரமாக இருக்கிறார்.

*3-3-1* பரத்தையரை மட்டும் பழித்து, அவர்களை நாடும் ஆடவர்களைப் பழிக்காது விடுதல் கூடாது என்று வள்ளுவர் மனம் நினைத்தது. அதனால்தான் ஆடவரையும் 'பரத்தன்' என்று பழிக்கிறார் வள்ளுவர்.[7] வரைவின் மகளிரை எங்கும் இவர் பரத்தையர் என்று பழிக்காது, அம் மகளிர்பக்கம் பேசுதலைப் பார்க்கிறோம். எனவே 'வரைவின் மகளிர்' அதிகாரத்தில், ஆடவரை 'நிறைநெஞ்சம் இல்லவர், ஆயும் அறிவினர் அல்லர், புரையிலாப் பூரியர்'[8] என்றெல்லாம் வள்ளுவர் பழித்துரைக்கிறார். திரு. வி. க. அவர்களும், 'வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தை வைத்ததின் நோக்கம் ஆடவருக்குக் கற்பு வேண்டும் என்ற நோக்கத்தாலே ஆகும்' என்று கூறியுள்ளார்.[9]

*3-3-2* வேமனர் ஒழுக்கம் தவறி நடக்கும் ஆடவரையும் பழிக்கிறார்; பெண்களையும் பழிக்கிறார். தன் மனைவி இருக்க,

பிறர் மனைவியை நாடுதல் மிகவும் இழிந்த செயல் என்றும், அன்னூர் அறிவற்ற வெறியர் என்றும் பழித்துப் பேசுகிருர் வேமனர். முற்றிய கதிருடைய தன் கழனியைவிட்டு, அறுவடை செய்த கழனியில் விட்டுப்போன கதிர்மணிகளைப் பொறுக்கு வோரை ஒப்பர் அன்னூர் என்று, ஓர் உவமையால் அவர்களின் இழிவுத் தன்மையை அறிவுறுத்துகிருர் ஆசிரியர் வேமனர்.[10] பெண்களையும் இப்படியே இழித்துப் பேசுகிருர். வயது முதிர்ந்த பெண்களாயினும், தொங்கிக் கொண்டிருக்கும் கொங்கைகளை முலைக்கச்சால் இழுத்துக் கட்டி, பருவமங்கையாகக் காட்சி யளிக்க வேடம் தரிப்பர். அந்த வேடத்தால் ஆடவரை அடிமை யாக்க முற்படுவர். ஆடவர் அடிமையானுல் அந்த ஆடவரை நரகத்துக்கே அனுப்புவர் என்று வள்ளுவர் கருத்தை விளக்கும் வகையில் பெண்களையும் பழித்துப் பேசுகிருர் வேமனர்.[11]

*3-3-3* ஒழுக்கம் தவறி நடக்கும் பெண்களைப் பழித்து வேமனர் பேசும் போக்கு, புரட்சிகரமாய் உள்ளது. வேமனருக்கு முன் வாழ்ந்த புலவர்களும் ஒழுக்கம் தவறி நடக்கும் பெண்களையும் ஆடவரையும் பழித்துப் பேசி இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் தம் வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசவில்லை; அவ்வாறு பேசுவது இலக்கியப் போக்குக்கு ஒவ்வாத ஒன்ருக அன்று அவர்கள் நினைத்தார்கள். ஆயின் வேமனர் இவர்கள் போக்கினின்றும் மாறிப் புதுப் போக்கில் பழித்துப் பேசுகிருர். இயல்பாகக் கிராம மக்கள் சினத்தில் பேசிக்கொள்ளும் சொற்களையே தம் பாடல் களில் ஆளுகிருர். அப்படி ஆளும்பொழுது பிறர்க்கு அஞ்சவில்லை. சமுதாயம் என்ன நினைக்கும் என்றும் எண்ணவில்லை. நட்புக் கொள்ளுவதற்குத் தகாத நாணமிழந்த பெண்களோடு காமத் தொடர்பு கொள்ளக் கூடாது; அப்படிக் கொண்டால், அது அவனுக்கு மரணத்துக்கே ஏதுவாய் நிற்கும்[12] என்று, தான் கொண்டவனேடு வாழாத பெண்களை வேமனர் இகழ்ந்து பேசுவ தால், அவரின் புரட்சிப் போக்கு தெரியவருகிறது.

*3-3-4* வேமனர், சமுதாயத்தில் கற்பு அழிவுக்குக் காரணம் பெண்களே என்று நினைப்பதாக அவர் பாடல்கள் காட்டி நிற்கின்றன.

> ‘அழகான ஆடவனைக் காண்டாய், பருவமங்கைக்கு அவன்மேல் மனம் செல்லும்; மனம் மிகவும் பொல் லாதது; அதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்.’

> ‘காதலனைக் கண்டதும் பெண்கள் தம் பார்வையாலேயே தம் அழகை வெளிப்படுத்துவர்; அந்தக் கண்பார்வைக்கு

ஈடு வேறொன்றுமில்லை; அவர்களின் கண்பார்வையே இருவருக்கும் இடையே தூதுவன்போல் பணிபுரியும்.'[13]

ஆனால், வள்ளுவரோ பெண்கள் மட்டுமன்று, கற்பழிவுக்கு ஆண்களே முக்கிய காரணமாகும் என்று நினைப்பதாகத் தெரியவருகிறது.[14] சமூகத்தில் சில பிரிவினர் உண்மையை மறந்தோ, மறைத்தோ மக்களை ஏமாற்றுகின்றனர்; தாங்கள் உயர்ந்தோர் எனவும், மற்றவர் தமக்கு அடங்கி நடக்கவேண்டும் எனவும் விதிக்கின்றனர்; தாங்கள் ஒழுக்கத்தில் குன்றி நடந்தாலும் குற்றமில்லை; அதனைக் குறைகூறுவது பாவம்; தங்குலம் காப்பாற்றப்பட்டதாக யாவருமே மதிக்க வேண்டும் எனப் புகல்கின்றனர். இந்நிலையிலே, இந்திய நாட்டின் சமுதாயச் சீர்திருத்தத்திற்காகப் பலர் பாடுபட்டுள்ளனர். அவர்களில் புத்தரை முதல் சீர்திருத்தவாதி என்றும், முக்கிய சீர்திருத்தவாதி என்றும் கூறலாம். குல, மதவேறுபாட்டை நீக்கவும், மக்களிடையே துன்பத்திற்குக் காரணம் என்ன என்பதையும், அத்துன்பத்தை நீக்க வழிகள் என்ன என்பதையும் அவர் உணர்த்தலானார்; அந்த முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றார். ஆனால், சிறிது காலத்துக்குப் பிறகு அவர் கொள்கைகளும் சிறிது சிறிதாக மதிப்பை இழக்கலாயின. அதற்குக் காரணம் புத்தமதத்தில் ஈனயானம், மகாயானம் என இருபிரிவுகள் ஏற்பட்டுப் புத்த சீடர்கள் தம் கொள்கைகளினின்றும் தவறியதே ஆகும். அவருக்குப் பிறகும் அந்தந்தக் காலத்தில் பல சீர்திருத்தக்காரர்கள் தோன்றினர். அவர்கள் மக்களிடையே பரவியிருக்கும் அறியாமையை நீக்கி, நன்னெறிப்படுத்த முயன்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இராமாநுஜாசாரியர், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகாநந்தர், இராமலிங்க அடிகளார் முதலியோர் ஆவர்.

*3-4-1* திருவள்ளுவரும், வேமனரும் தம்தம் காலத்தில் சீர்திருத்தங்களைப் பேசவும், செயலில் மேற்கொள்ளவும் முயன்றனர். பிறப்பிலேயே உயர்வு தாழ்வு கருதுவோரைக் கண்டு வள்ளுவரின் மனம் கொதிப்படைகிறது. மனிதனை மனிதனாக மதிக்க, மனிதத்தன்மை, நல்லொழுக்கம் இவற்றால் அன்றி வேறு எந்தப் புறச்செயலாலும், குலங்களைப் பற்றிப் பேசுதலாலும் ஆகாது என்பதை உணர்த்த விழைகிறார் வள்ளுவரும். எனவேதான், 'எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒருதன்மையானதே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை' என்று [15] பண்பால் ஒத்திருத்தலே ஒப்புமை ஆகும் என்றும், உடம்பால் ஒத்திருத்தல் ஒப்புமை

ஆகாதென்றும்[16] அவர் புரட்சி மனம் பேசுகிறது. ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்; தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும் எனவும் பிறப்புக்கு இலக்கணம் வகுக்கிறுர் வள்ளுவர்.[17]

*3-4-2* வேமனரின் மனமும் இந்தச் சட்டத்தையே பேசுகிறது. வள்ளுவர் நாகரிமாகப் பேசுவதையே வேமனர் உணர்ச்சிவயப் பட்டுப் பேசுகிறுர். தீய ஒழுக்கங்களை மேற்கொள்ளும் உயர்ந்த குலத்தாரைக் காட்டிலும், பறையராயினும் நற்குணமுடையவர்களே சிறந்தவர்கள்;[18] எனவே பிறவியால் உயர்வு தாழ்வு கொள்ளுதல் மடமை என்றும், குணத்தாலேயே உயர்வு தாழ்வு கொள்ள வேண்டும் என்றும் வேமனர் நினைக்கிறுர். அத்தகையவர்களே உத்தமர்கள் என முடிவு கட்டுகிறுர்.[19] எல்லோருக்கும் உடலும், ஊனும், அதில் ஓடும் இரத்த ஓட்டமும் ஒன்ருய் இருக்க, பறையர் என்று ஒரு பகுப்பாரை நிந்திக்க வேண்டிய அவசியமென்ன என்று வினவுகிறுர் வேமனர்.[20] வள்ளுவரின் கருத்துக்கு இவர் பாடல்கள் விளக்கம் தருவனவாய் அமைந்துள்ளன.

*3-4-3* எனவே குலங்களில் உயர்வு தாழ்வு பேசுதல் தேவையற்றது; குலவேறுபாடு பேசுதல் மடமையாகும் என்கிறது வேமனரின் புரட்சி மனம்.[21] சாதிகள் எல்லாம் ஒன்று என்ற உள்ளம் உடையோர்களே உத்தமர்களாவர் எனவும் நினைக்கிறது.[22] அப்பொழுது ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளுதல் இருக்காது என்கிறுர் அவர்.[23] அதோடு நில்லாது தாம் மட்டும் உயர்ந்தவர் என்று செருக்குக் கொள்ளும் பிராமணர்களை மட்டும் இழித்துப் பேசுகிறுர். 'பூணூல் அணிந்து கொண்டவளவில் பிராமணர்கள் ஆக முடியுமா? இறந்த பிறகு, பிராமணர்க்குரியன என்று சொல்லப்படும் உடலில் இருக்கும் சின்னங்களை நீக்க சூத்திரர் ஆக மாட்டார்களா?' என வினவுகிறுர். கீழ்வரும் பாடற்கருத்துக்கள் அவர் எந்த அளவுக்குப் பிராமணர்களை உணர்ந்தார் என்பதை உணர்த்துகின்றன.[24]

> 'நாமங்கொண்டாரைத் தாசரி என்றுத் சொல்லலாம்; இலிங்கத்தைக் கழுத்தில் அணிந்தாரைத் தேவர் (Lingayats) என்று சொல்லலாம்; ஆயினும் பூணூல் அணிந்த மாத்திரத்தில் ஞானம் இல்லாதாரைப் பிராமணர்கள் என்று சொல்ல முடியாது.'

> 'எல்லோரும்போலத் தானும் தன் தாய் வயிற்றிலிருந்து பிறந்தாலும் தான் உத்தம குலத்தைச் சேர்ந்தவன்

என்று பிராமணன் சொல்லிக் கொள்வது வியப்பாய் உள்ளது.'

'பிராமணர்கள் எல்லோரும் இலைகளில் சாப்பிடுதவால் அவர்களின் எச்சில் இலைகளைத் தெருக்களில் அதிகம் காணலாம்; அந்த இலைகளை நாய்கள் நக்கிக் கொண் டிருக்கும்; பறையர் வாழும் சேரியில் (கிண்ணங்களில் உண்பதால்) நாய்கள் நக்கிக் கொண்டிருக்கும் எச்சில் இலைகள் இல்லை; தூய்மையாக இருக்கும்.'[25]

உண்மையில் பிரம்மத்துவம் அடைந்த பிராமணர்களை அவர் இகழ்ந்து பேசவில்லை.

*3-4-4* சூத்திரர்கள் என்று இழித்துப் பேசுவோர் மிகவும் இழிந்த சாதியைச் சேர்ந்தவராவார். அதாவது பறையரைக் காட்டிலும் தாழ்ந்தவர் என்றும், அப்படிப் பேசுகின்றவர் இறந்த பிறகு நரகத்தை அடைவது உறுதி என்றும் முடிவு கட்டுகிறார்.[26] 'மிக இழிந்த குலம் என்று கருதப்படும் 'சக்கிலி' குலத்தைச் சேர்ந்த அருந்ததியை வசிஷ்ட மாமுனி மணந்தாரல்லவா? இப்படியிருக்க சக்கிலி குலத்தாரைத் தாழ்ந்தவராகக் கருதவேண்டிய அவசியம் என்ன?' என்று வினவுகிறார் வேமனர்.[27]

*3-4-5* இவற்றை நோக்க, வள்ளுவர் சீர்திருத்தம் பொது வான உலக மானிட அடிப்படைக் குறை பற்றிப் பேசுகிறது. பேரளவு காலமும் இடமும் கடந்து நிற்கவல்லது; ஆனால் வேமனரின் சீர்திருத்தம் குறித்த ஒரு காலத்தை, நாட்டை, சமுதாயத்தைப் பற்றியது என்பதை அறியலாம். இத்தகைய குலவேறுபாட்டை நீக்க, செல்வந்தர்கள் முன்வர வேண்டும். எல்லாக் குலத்தாரையும் ஒன்றாக அமரச்செய்து ஏதொரு வேறுபாடும் இன்றி உணவிட வேண்டும்; இன்னும் இத்தகைய எத்தனையோ செயல்களால் குல வேறுபாட்டைத் தீர்ப்போம் என்று செல்வந்தர்கள் சூளுரை கொள்ளவேண்டும் என்று செல்வந்தருக்குக் கட்டளை இடுகிறார் வேமனர்.[28] செல்வந்தர் மட்டுமன்று, எல்லோருமே இத்தகைய சூளுரையைக் கொள்ள வேண்டும்; எல்லாக் குலத்தாருமே குலபேதங்கள் கொள்ளாது ஒரே கிண்ணத்தில் உணவுகொள்ளுதல் போல, மற்ற எல்லா வகையிலுமே குல வேறுபாடு கொள்ளாது இருக்க வேண்டும் என்றெல்லாம் வேமனர் அறிவுறுத்துகிறார்.[29] இவ்வாறாக வள்ளுவர் கருத்தை மேலும் பல விளக்கங்களோடு விரித்துக் கூறுகிறார் வேமனர்.

*3-4-6* செய்யும் தொழிலால்தான் மக்களுள் வேறுபாடு காணப்படுகிறது என்பது வள்ளுவர், வேமனர் இருவரின் கருத் தாகும். அந்தணர், தமக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டும்; தமக்கு விதித்துள்ள ஒழுக்கத்திற்கு மீறி நடந்தால் அந்தணராகக் கருதப்படார் என்று பேசுகிறது வள்ளுவரின் சீர்திருத்த மனம்.[30] அதோடு நற்குலத் தானுக இருக்க வேண்டுமானுல், எல்லோரிடத்தும் பணிந்து ஒழுகும் ஒழுக்கமும் வேண்டும் என்று உணர்த்துகிருர் வள்ளுவர்.[31]

*3-4-7* வேமனர் அந்தணர்களைப் பற்றிச் சிறிது விரிவாகவே பேசுகிருர். அந்தண வருணத்தார், செபத்தைச் செய்தோ வேதங்களைப் படித்தோ முக்தியைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்; வேதங்களைப் படிப்பதன் நோக்கமே பிரம்மத்தைப் (பரத்தை) தெரிந்து கொள்ளுதலாகும்; அவ்வாறு தெரிந்து கொண்டதைப் பிறருக்கு உணர்த்த வேண்டும்; இத்தகையோரே அந்தண வருணத்தார் ஆவார். ஒருவன் பிறந்தது எக்குல மாயினும் முக்தியைத் (பரத்தை) தெரிந்து கொள்ளும் பணியைச் செவ்வனே செய்வானுயின், அவன் அந்தணனுவான். வான்மீகி பிறவியால் சூத்திரர் ஆயினும், பிரம்மஞானம் பெற்றுப் பிராமணர் ஆனதையும் சுட்டிக் காட்டுகிருர் வேமனர். இவ்வாறின்றி, செபத் தைச் செய்தேன் என்றும், வேதங்களைப் படித்தேன் என்றும், வீண் ஆடம்பரங்கள் பேசுவோர் அந்தணர் ஆகார் என்றும் நினைக்கிறது வேமனரின் சீர்திருத்த மனம்.[32] வேதங்களை உணர்ந்து, அவற்ருல் (முக்தியைத்) பரத்தைத் தெரிந்து கொள்ளாத தீய ஒழுக்கங்களை மேற்கொள்கின்ற அந்தணர்களுக்கு, பிறரை இகழ்ந்து பேசும் உரிமை இல்லை என விதியை வகுக்கிறது வேமனரின் மனம். ஞானத்தை உணர்ந்து, அதைப் பிறருக்கும் உணர்த்தி, முக்திக்கு வழிகாட்டும் பிராமணர்களை நன்கு மதிப்பதோடு மட்டுமின்றிப் பொருள் கொடுத்தும் உதவவேண்டும் என்று கட்டளையிடுகிருர் வேமனர். இத்தகைய பிராமணர்களை மதிக்காதவர்களையும், பொருள் கொடுத்து உதவாதவர்களையும் இகழ்ந்து பேசுகிருர்.[33] உத்தமமாகும் ஆத்ம விசாரம் செய்யாது, தாம் பிரம்மத்தின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், பக்தர்கள் என்றும், தாம் மற்ற எல்லோரைக் காட்டிலும் சிறந்தவர்கள் என்றும் வீண் ஆடம்பரம் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்கிருர் வேமனர்.[34] அப்படி வீண் ஆடம்பரம் பேசுபவர்கள் மூடர்களே என்று இவர் தெளிவாக்குகிருர்.[35] நான்கு வருணத்தாருள்ளும் தம் கடமையைச் செவ்வனே நிறைவேற்ருத குறை அந்தண வருணத்தாருள் அதிகம் உண்டு[36] என்று துணிந்து இவர் கூறுகிருர்.

### வேதங்கள்

*3-5-0* இந்து மதத்திற்கு மூலநூல்கள் வேதங்கள். இந்த வேதங்களைக் கற்க, ஓத, எல்லோருக்கும் தகுதி இல்லை என்றும், அதற்குத் தகுதி உடையவர்கள் அந்தணர்களே என்றும், சூத்திரர் அந்த வேதங்களைக் கேட்கத் தகுதியற்றவர்கள் என்றும் இவ்வாறாகத் தருமவிதிகள் தோன்றலாயின. இந்நிலையில் மானமுள்ள, முற்போக்கு நோக்குடைய சிலர் எதிர்க்கலாயினர். உயிர் வாங்குதலை ஆதரிக்கும் யாகங்களைப்பற்றிச் சிறப்பித்துக் கூறும் வேதங்கள் எங்ஙனம் முக்திக்கு வழிகாட்டும் என எண்ணலாயினர்.

*3-5-1* இவ்வாறு எண்ணியவர்களில், எதிர்த்தவர்களில், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வேமனரும் ஒருவர். வேதங்களின் உண்மை நிலையை உள்ளவாறே அறிவிக்கிறார்; இகழ்ந்து பேசுகிறார்.[37] இது இவருடைய தனிப் பண்பாகும். முதலில் சொன்னவாறு வள்ளுவரோ பிறரைப் புண்படுத்தாவகையில் அறிவுரைகளை வழங்குகிறார்; இது வள்ளுவருக்கே உரிய தனித் தன்மையாகும். பொருள் ஒன்றையே நோக்கமாய்க் கொண்டு, ஆடவரை மயக்கும் பண்பு வாய்ந்தவர்கள் பொருட்பெண்டிர் (பரத்தையர்). வேதங்களும் அந்தப் பொருட்பெண்டிர் போல நம்மில் (பிரம்மத்தை) மனமயக்கத்தை உண்டாக்குகின்றன என்று வேதங்களைப் பரத்தையருக்கு ஒப்பிடவும் அஞ்சவில்லை வேமனரின் புரட்சி நெஞ்சம். அதே நேரத்தில் பரப்பிரம்மத்தைத் தெரிந்துகொள்ள உதவும் நற்குலப் பெண்டிரைப் போன்றது என்றும் அறிவுறுத்துகிறார்.[38] இந்தப் பாடலைக் கொண்டு சில ஆய்வாளர்கள் வேமனர் வேதங்களை மதிக்கவில்லை என்று குறை கூறுவர். ஆனால் உண்மை வேறு; வேமனர் தன்னையே 'வேதாந்தி' என்று கூறிக்கொள்கிறார். அதுமட்டுமின்றி, தான் வேதங்களின் இரகசியத்தை உணர்ந்ததாகவும், அதுவே 'பிரம்மம்' என்றும் கூறுகிறார்.[39] எனவே, மேற்பாடலால் வேமனர் வேதாந்தத்தின் உண்மைப் பொருளான பிரம்மத்தை உணரப் பயன்படுத்திக் கொள்ளாது, வேதங்களை வீணே மனனம் செய்வதால் பயனில்லை என்று எண்ணுகிறார் என்பது தெளிவு.

*3-5-2* சிலர் வேதங்களின் உட்பொருளைத் தெரிந்து கொள்ளாது, வாயால் வேதங்களை ஓதுவதாலேயே தாம் வேதாந்திகள் என்று சொல்லுகின்றனர். அத்தகையோர், அறிவிலிகள்; பகவானை அறிந்துகொள்ளுதலே வேதத்தின் உட்பொருளாகும்; அப்படி அறிந்துகொள்வோரே அறிவுடையர்

ஆவார் என்று இருவருக்கும் வேறுபாடு காட்டுகிறுர் வேமனர்.[40] சாத்திரங்கள், வேதங்கள், வாதங்கள் முதலியன முக்திக்கு நெறி காட்டும் வழிகாட்டிகளேயன்றி, அவை முக்தியாகா என்றும், பிரம்மமே முக்தி எனவும் தெளிவுறுத்துகிறுர்.[41] ஆத்மஞானத்தைக் கொடுக்காத, வேத, சாத்திர, புராணங்களின் மனனம் வீணே; அவனிடம் இருக்கும் செல்வமும் வீணே என உணர்த்துகிறுர்.[42] ஒருகால் மக்களை மயக்கி மோசம் செய்வதற்கென்றே இந்த வேத, சாத்திரங்கள் உண்டாக்கப் பட்டனவா? என்று ஐயங்கொள்ளவும் பின்வாங்கவில்லை வேமனர்[43]

*3-5-3* எனவே வீணுக வேதங்களையும் சாத்திரங்களையும் ஓதுவதில் ஒரு பயனுமில்லை; அவற்ருல் பிரம்மத்தை—முக்தியைத் தெரிந்து கொள்ளும் பொழுதே அவற்ருல் பயனுண்டு என்பது வேமனரின் முடிவான கருத்து.[44] இவ்வாருக முக்தியைப் பெற நெறிகாட்டுவதே வேதங்களின் முக்கிய நோக்கமாய் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறுர் வேமனர்.

## உருவ வழிபாடு, மூடப்பழக்கங்கள்

*3-6-0* சிற்சில பொழுது உலகில் பெரியோர் கூறியனவற்றை அப்படியே கண்மூடிப் பின்பற்றிச் செல்கையில் குழப்பங்கள் மிகுகின்றன. காரணம், பெரியோர் கூறியவை அவர்கள் வாழ்ந்த காலத்துக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாம். காலம், இடம், சூழ்நிலை இவற்றிற்கேற்றவாறு சமுதாயக் கொள்கைகளும் மாற்றம் பெற வேண்டும். அப்படி மாற்றம் பெருத கொள்கைகளைச் சமுதாயத்திலே முற்போக்கு நோக்குடையோர் எதிர்ப்பதில் தவறென்றும் இல்லை. இத்தகைய எதிர்ப்புக்கள் குழப்பங்களுக்குக் காரணமாய் நிற்கின்றன. உருவ வழிபாடு, திருத்தலங்களைக் காணல், திருநீர் நிலைகளில் படிதல் (புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல்) முதலியன ஒருகாலத்துப் பெருவழக்காய் இருந்துவந்தன. அந்தக் காலத்து நூல்களும், அந்த வழக்கங்களைச் சிறப்பித்துப் பாராட்டி வந்தன. நாளாவட்டத்தில் இந்தப் பழக்கங்களுக்கு எதிர்ப்புகள் தோன்றலாயின.

*3-6-1* இதனுல்தான் வள்ளுவரின் சீர்திருத்த நோக்கம், உலகத்தின் இயற்கையை அறிந்து அதனேடு பொருந்துமாறு செய்ய வேண்டும்[45] என்று குறிப்பாகப் பேசுகிறது. மற்றும் மெய்ப்பொருள் அல்லாதனவற்றை மெய்ப்பொருள் என்று தவருக உணர்கின்ற மயக்க உணர்வு வேண்டா என்று நினைக்கிறது

வள்ளுவர் நோக்கு. அந்த உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும் என்றும் அறிவுறுத்துகிறது.[46] வெளி ஆடம்பரத் தொழுகைகளால் ஒரு பயனும் இல்லை; தூய உள்ளத்தால் இறைவன் அடி சேர, மனக்கவலையும், பிறவித்துன்பமும் இருக்கா என்றும் அது தெளிவுறுத்துகிறது.[47] வேமனரின் உள்ளம் மெய்ப்பொருள் அல்லாதவை இவை இவை எனத் தொகுத்துக் கூறி, அவற்றை மெய்ப்பொருளாகக் கொள்ளும் உணர்வு நிலையை மாற்ற முயல்கிறது.

3-6-2 இந்த உலகத் தோற்றத்திற்கு மூல காரணம் இறைமை என்பது தத்துவஞானம் அறிந்த உண்மையாகும். இந்த இறைமை புறக்கண்ணால் அறிய இயலாத ஒன்று என்பதும் உண்மை. ஆயினும், புறக்காட்சிக்கு எட்டும் உருவ வழிபாட்டுப் பழக்கம் இந்து மதத்தில் வேரூன்றி விட்டது. அது மட்டுமா? குறிப்பிட்ட சில நீர்நிலைகளில் படிவதால் பாவம் தீரும் என்ற மூடநம்பிக்கையும், மக்களுக்குள்ளேயே சிலரை இறைவனின் அவதாரங்களாகப் போற்றும் அறியாமையும் நிலைத்துவிட்டன. இத்தகைய பழக்கங்களையும், நம்பிக்கைகளையும் கண்டு உணர்ச்சி வயப்படுகிறார் வேமனர். மக்கள் கற்களைச் சிலைகளாகச் செய்து, அச்சிலைகளுக்கு அரசர்களைக் கொண்டு பல சிறப்புக்கள் செய்து அரசர்களால் துதிக்கச் செய்வதாலும், தாம் துதிப்பதாலும் பயன் ஒன்றுமில்லை; இச்செயல்களால் இறைமையை உணர முடியாது எனப் பேசுகிறார்.[48] அறத்தை வணிகமாகக் கருதும் ஆடம்பரவாதிகள், ஆடம்பரமாய்க் கோயில், கோபுரங்களைக் கட்டுகிறார்கள்; அதோடு நில்லாது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும் கற்சிலைகளுக்கு இடுகின்றனர். 'இவற்றை எல்லாம் இறைவன் விரும்புகிறானா?' என்று வினவுகிறார் வேமனர். இத்தகைய ஆடம்பரச் செயல்கள் தேவையற்றவை என்பதே வேமனரின் வேதாந்தம்.[49] உயிருள்ள மக்கள் உயிரற்ற கற்சிலைகளுக்கு வழிபாடு செய்வதைக் கண்டு வியக்கின்றார்.[50] "மக்களால் துதிக்கப்படும் கற்சிலைகளே தேவர்களாயின் அந்தக் கற்சிலைகளைச் செய்தோர் தேவர்களுக்கு எல்லாம் தேவர்களாக, மாட்டார்களா?" என வினவுகிறார்.[51] இவ்வாறு கற்சிலைகளைத் தொழுவோரை மூடர் என்று சொல்லுவதில் தவறில்லை எனவும், உயிரற்ற கற்களைத் தொழும் இவர்களும் கற்களேயாவர் எனவும் முடிவு கட்டுகிறார்.[52] உயிரற்ற பசவர் உருவத்தைத் தேவராக நினைத்து வணங்கும் மக்கள், உயிரோடு உள்ள பசவைகளுக்குக் (எருதுகளுக்கு) கொடுமையைச் செய்வதைக் கண்டு நகைத்துப் பேசுகிறார். அவர்களுக்குக் கிடைப்பது நரகம் அன்றி வேறுண்டோ என்றும் கேட்கிறார்.[53]

*3-6-3* இவ்வாறு தன்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்திய வேமனர், தன்னுடைய தீவிரப்போக்கைச் சிறிது குறைத்துக் கொள்கிறார். மேற்கூறிய அறியாமைகளினின்றும் மக்களை நீக்கச் சில அறிவுரைகள் வழங்க முற்படுகிறார். எனவே, கற்சிலைகளைக் கண்டு, அவையே தேவர்கள் என்று கருதுதல் அறியாமையாகும். அவை கற்கள் மாத்திரமே; அவற்றில் இறைவன் இல்லை; நம்மிடத்திலேயே இறைவன் இருக்கிறான் என அறிவுறுத்துகிறார்.[54] அரசர்களும் கற்சிலைக்குப் பூக்களால் பூசை செய்வதில் பயனொன்றுமில்லை; தம்முள் இருக்கின்ற, ஆத்ம லிங்கத்தைத் தெரிந்துகொண்டு, ஆனந்தம் அடைய வேண்டும் என்று விரும்புகிறார்.[55] எனவே உருவங்களைத் தொழவேண்டியதில்லை என்றும், இறைவனின் ஆணையால் இந்த உலகமே இயங்குகிறது என்றும், இதனை அறிந்து தன்னுள் இருக்கும் பிரம்மத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார் வேமனர்.[56]

## திருநீர்நிலைகளும், திருத்தலங்களும்

*3-7-1* கற்சிலைகளைத் தொழுவோரை இகழ்ந்து பேசியது போலவே, குறிப்பிட்ட சில நீர்நிலைகளில் படிவதால் பாவங்கள் போகும் என்று நம்புவோரையும், வேமனர் இகழ்ந்து பேசுகிறார்; அவர்களையும் மூடர்கள் என்று சொல்லுகிறார்.[57] தன்னுள்ளேயே இறைவனைத் தொழுது பாவத்தை நீக்குவதற்கு வழியிருக்க, இதைத் தெரிந்து கொள்ளாது, தீர்த்த யாத்திரைகளுக்குப் போவோன், சந்தனக் கட்டைகளைச் சுமக்கும் கழுதைக்குச் சமானம் எனவும் சுட்டிக்காட்டிப் பழிக்கிறார்.[58] தீர்த்தங்களில் படிந்தால் புண்ணியம் கிடைக்கும் என்போரைக்கண்டு, இவர்கள் நீர்க்கோழிகள் போன்றோர் என்கிறார். தருமம் செய்யாது இவ்வாறு செய்வதால் என்ன பயன் என்று வினவுகிறார்.[59] இவ்வாறே கிணற்றுநீரைத் தேவரின் பாததீர்த்தம் என்று கொடுப்போரையும், பெறுவோரையும் இகழ்ந்து பேசுகிறார்.[60] நிலையான மனத்தாலே முக்தி நெறியறியாது, தீர்த்த யாத்திரைகள் போவதால் பயன் ஒன்று மில்லை எனவும், தீர்த்தயாத்திரைகளுக்காகத் திரிதலைக் காட்டிலும் பக்தியே முக்கியமானது எனவும் உணர்த்துகிறார்.[61] நம்மிடையே, பாவச் செயல்களால் மனம் மாசு கொண்டிருக்கப் புண்ணிய தீர்த்தங்களில் படிவதாலும். தேவர்களைத் தொழுவதாலும் பயனொன்றுமில்லை என்கிறார்.[62]

*3-7-2* இவ்வாறே, மனத்தில் மோகங் கொண்டு, இறைவன் மேல் பக்தியின்றிக் காசி முதலிய திருத்தலங்களுக்குப் போவதால்

பயனென்றும் இல்லை; பாவத்தின் பலனை அனுபவித்தே ஆக வேண்டும் என்கிறார். மனத்தைக் கட்டுப்படுத்தி உண்மைத் தத்துவத்தை உணர்தலாலே முக்தி கிடைக்கும் எனவும் வழிகாட்டு கிறார்.[63] சில தன்னலக்காரர்கள், இலை முதலியவற்றை உண்பதால் முக்தி கிடைக்கும் என்று மூடமக்களை ஏமாற்றி வந்தனர். அவர் களைப் பார்த்து, இலை முதலியவற்றை உண்பதாலேயே முக்தி கிடைப்பதாய் இருந்தால், தழையையே உணவாகக் கொள்ளும் ஆடுகளுக்கு ஏன் முக்தி கிடைக்கவில்லை என்று கேட்கிறார் வேமனர்.[64]

## அவதாரங்கள்

*3-8-0* "உபநிடதங்களின் மதம் பாமர மக்களுக்கு வெகு தூரம் என்பதையறிந்த பெரியோர்கள், பாமர மக்களும் தொழும் படியாகத் தேவர்களின் பல அவதாரங்களைப் படைத்திருக்க வேண்டும்" என அவதாரங்களின் தோற்றத்திற்குக் காரணம் கூறுகிறார் மருவூரி கோதண்டராம ரெட்டி அவர்கள்.[65] புராணங்கள் திருமாலுக்கே பல அவதாரங்களைப் படைத்திருக் கின்றன. காத்தல் வேலை திருமாலுக்கே ஆதலால், பல அவதாரங் களை அவர் பெறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது என்பர்.[66]

*3-8-1* இந்த அவதாரங்களைப் பற்றி வேமனர் எள்ளிப் பேசுகிறார். இவர் அவதாரப் படைப்புக்களை நம்பவில்லை. அவதாரங்கள் நாமாகப் படைத்துக் கொண்ட உருவங்களே என்பது வேமனரின் கொள்கை. பாற்கடலில் படுக்கைக் கோலமாய்க் கிடக்கும் திருமால் கண்ணனாய்ப் பிறந்து, இடையர் களின் இல்லங்களில் பாலும், வெண்ணெயும் திருடவேண்டிய அவசியம் என்ன என்று வினவுகிறார். பிறர் பொருள் மேல் எல்லோருக்கும் ஆசை என்ற பழமொழிக்கேற்றவாறு திருமால் இவ்வாறாகச் செய்தாரா என்றும் நினைக்கிறார்.[67] நெருப்பு அம்பிட்டு அம்புதியைக் கட்டுப்படுத்திய திருமால், இராமாவதாரத் தில் கடலைத் தாண்ட வானர வீரர்களை அமைக்க வேண்டிய தேவை என்ன எனவும் கேட்கிறார்.[68] பொன்மான் உலகத்து உண்டு இல்லை என்றும் அறியாது, இராமபிரான் மனைவியை விட்டு அந்தப் பொன்மான் பின்னால் ஓடவில்லையா? தேவருக்கும் பொருளின் மேல் ஆசைவிடாது என்பதால், இவ்வாறு செய்தாரா என்று, வெளிப்படையாகவே இகழ்ந்து பேசுகிறார் இராமாவ தாரத்தை.[69] இவ்வாறாகப் பல இடங்களில் திருமாலின் அவதாரங்களை இகழ்ந்து வேமனர் பேசுகிறார்.[70]

3-8-2 இப்படி அவதாரங்களை இகழ்ந்து பேசுவதால், 'வேமனர் ஒரு நாத்திகவாதியோ' என்ற ஐயம் எழக்கூடும். தெய்வமும் பிறவிகளும் வேறன்று; இரண்டும் ஒன்றே என்ற 'அத்துவைத' கொள்கையுடையவர் வேமனர். இதனால்தான், வேமனர் தம்முள் இருக்கும் தத்துவத்தைத் (தெய்வத்தை) தெரிந்து கொள்ளாது, அத் தெய்வத்திற்காக அங்குமிங்கும் அலைபவர்களை அறிவிலிகளாக நினைக்கிறார்; 'சூரிய ஒளி இருக்கத் தீபத்தின் ஒளியால் பொருளைத் தேடுவார்களா?[71]' என்று கேட்கிறார். எனவே அவதாரப் பிறவிகள் இல்லை என்பது வேமனரின் முடிவான கருத்து.

## உண்ணா நோன்பிருத்தல்

3-9-1 உண்ணா நோன்பிருத்தல் வீணான செயல் என்று நினைக்கிறார் வேமனர். மூடநம்பிக்கைகள் கொண்டு உபவாசம் இருப்போரைத் திருத்த எண்ணுகிறார். ஒருவன் 'ஏகாதசி' முதலிய நாட்களில் 'உபவாசம்' இருந்த மாத்திரத்தில், அவனிடத்துள்ள தீயகுணங்கள் எவ்வாறு நீங்கும்? எனக் கேட்கிறார். 'மனத்தில் களங்கம் இருக்க, உபவாசங்களால் என்ன பயன்? புற்றின் உள்ளே பாம்பிருக்க, புற்று மேல் அடித்தால் பாம்பு சாகுமா?' என வினவுகிறார்.[72] விரதங்களால் வீண் சிரமமே தவிர, பரமனைத் தெரிந்துகொள்ள முடியாது என்று சொல்லுகிறார்.[73]

3-9-2 உண்ணா நோன்பிருப்போருக்கு இப்படி அறிவுரை கூறுவதோடு, அவர்களை இழித்தும் பேசுகிறார் வேமனர். உண்ணா நோன்பிருப்போர் மலத்தையே உண்ட்வராவார் என்றும், ஞான மற்றோர் எனவும் இகழ்கிறார். விரதங்கள் மேற்கொள்ளுதல் வீண் ஆடம்பரச் செயல்களே அன்றி, அது உண்மையான பக்தி ஆகாது என்றும், பாவச் செயலே என்றும் இவர் கூறுகிறார்.[74]

## சகுனம்

3-10-1 ஒரு செயலைச் செய்யும்பொழுது, சகுனம் பார்த்துச் செய்தலை வேமனர் கண்டிக்கிறார். நல்ல சகுனம் பார்த்துச் செய்த மாத்திரத்தில் தீமையை வராமல் தடுக்கமுடியாது என்கிறார். 'எல்லோரும் திருமணத்தை நல்ல சகுனம் பார்த்தே செய்கின்றனர். ஆயினும், அந்தத் தம்பதிகள் எல்லோரும் தீமைக்கு உட்படா மலேயா இருக்கின்றனர்?' என்று வினவுகிறார். ஆகவே நல்ல சகுனத்தில் செயலைச் செய்தால் நன்மையாகவே முடியும்

என்பது வெறும் ஊகிப்பேயாகும் என்பது வேமனர் சித்தாந்தம்.[75] சோதிடம், சகுனம் முதலியன சில சமயங்களில் பலித்ததற்காக அவற்றை 'நம்புதல் கூடாது என்பது வேமனரின் கருத்து.[76] இதனுல் ஊழ்வழி செயல் முடியும் என்பது வேமனரின் உட்கருத்து. வள்ளுவர் இப்படிச் சகுனங்களைக் கண்டித்துப் பேசவில்லை. ஆயினும் ஊழின்வழி செயல் முடியும் என்ற கருத்துடையவர் வள்ளுவர் என்பது, அவரது 'ஊழ்' அதிகாரம் நமக்கு உணர்த்தும் உண்மையாகும்.

*3-10-2* இவ்வாறே, இறந்த பெரியோர்களை நினைத்துக் கொண்டு, அவர்களின் பெயர்களால் காக்கைகளுக்குப் பிண்டச் சோறு இடுதலைக் கண்டிக்கிருர் வேமனர். இழிந்த பொருளாகிய மலத்தை உணவாகக் கொள்ளும் காக்கை எவ்வாறு பிதுரர் ஆக முடியும் என்பது அவரது வினு.[77]

**யாகங்கள்**

*3-11-1* வேதங்கள் கூறும் யாகங்களைக் கண்டிக்கிருர் வள்ளுவர் என்பதை அவரது 'கொல்லாமை' அதிகாரத்தால் அறியலாம். யாகங்களில் முக்கியமாய் இடப்பெறும் உயிர்க் கொலையை நீக்க, இவர் முயன்ருர். இதனுல்தான் 'கொல்லாமை' அதிகாரத்தில் பத்துப் பாடல்களில் கொல்லாமையின் இன்றியமையாமையை உணர்த்திச் செல்லுகிருர். ஓர் உயிரையும் கொல்லாமல் இருத்தலே அறமாகிய செயலாகும் என்றும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைவிக்கும் என்றும், வள்ளுவரின் மனம் சீர்த்திருத்த விதியை அமைக்கிறது.[78]

*3-11-2* வேமனரிடமும் இந்தப் புரட்சிப்போக்கைக் காணலாம். இவர் யாகங்கள் செய்வதை முழுமையாகவே கண்டிக்கிருர். யோகத்தால் முக்தியைச் சாதிக்க முடியாத அறிவிலிகளே, யாகத்தால் சாதிப்போம் என்று யாகங்களைச் செய்வார்கள். யாகத்தில் மதுபானத்தையும் பருகுவார்கள். அப்படிச் செய்வதால், அவர்களின் 'விருப்பங்களும் அழியா'; இதனுல் என்ன பயன் என்று வினவுகிருர்.[79] 'சோமயாதிகள்' என்று பெயர் வைத்துக்கொண்டு, சில பிராமணர் குண்டலங்களை அணிந்து கொண்டு யக்ஞ, யாகங்கள் பேரில் ஊன் உண்ணுதலுக்கும், மதுவைப் பருகுவதற்கும் பழக்கப்பட்டுக் களித்து மகிழ்கின்றனர். மறுபிறவியிலும் இந்த யக்ஞ, யாகங்களால் ஆனந்தத்தைப் பெறுவதாகக் கூறிக் கொள்வர். இந்தச் சோமயாதிகளைக்

கண்டு, பெயர் சோமயாதிகள் ஆயினும், யக்ஞ யாகங்களில் ஆடுகளைக் கொலை செய்வதில் மிகவும் வலிமை படைத்தவரா கின்றனர்; இத்தகைய யக்ஞ யாகங்களினுல் முக்தி கிடைக்குமா? இச்செயல் உயிர்க் கொலையாகவே நிற்கும் என்று வேமனர் அறிவுறுத்துகிருர்.[80]

## புராணங்கள்

*3-12-0* உபநிடதங்களில் இருக்கும் உட்பொருள்கள் பாமரர்க்கு எட்டும் நிலையில் இல்லை; எனவே அவரும் அறியும்படி தேவர்களின் குடும்பக் கதைகளைக் கொண்ட புராணங்கள் தோன்றலாயின. கவிஞர்களின் கற்பனைத் திறமே இந்தப் புராணங்களின் படைப்புக்குக் காரணமாய் இருக்கலாம். இந்தப் புராணங்களில் ஒரு மதத்தார் இன்னெரு மதத்தாரைப் பழித்துக் கூறும் நிலையும் உண்டாயிற்று. இன்றுள்ள நகரங்களின் எண்ணிக்கைபோலவே தேவர் உலகங்களின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. தேவர்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு நிலை ஏற்பட்டது. இதனுல் ஊருக்கொரு தேவதை தோன்றலாயிற்று. இப்படி, இந்தப் புராணங்கள் கூறும் செய்திகளில் பலருக்கு நம்பிக்கை இருப்பினும், ஆய்வு மனமுடைய சிலர் எதிர்க்க லாயினர். கவிதைச் சுவைக்காகவே புராணங்களைப் படிக்க வேண்டும் எனவும் சிலர் சொல்லலாயினர்.

*3-12-1* இத்தகு புராணங்களை, மூலத் தத்துவத்தை உணர்ந்த, அத்வைத மதத்தைச் சேர்ந்த வேமனர் பழிக்காமல் இருப்பாரா? புராணங்களையும், புராணங்கள் படைத்துள்ள பாத்திரங்களையும் அவர் நம்பவில்லை. ஆகவேதான் அவர், 'பாரதத்தை பஞ்சவேதமென்று மக்கள் மதிழ்ந்து பேசுவர். கௌரவ, பாண்டவர்களின் யுத்தத்தைப் பற்றிக் கூறும் அந்தப் பாரதம் எங்ஙனம் சிறந்ததாகும்?' என்று கேட்கிருர்[81] 'புராணங்கள் குறிப்பிடும், இந்திரன், மன்மதன், பிரம்மா முதலியவர்களுக்குமா காமம் இருக்கவேண்டும்? காமத்தால் அவர்களுமா அவமானத்தைப் பெறவேண்டும்?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொள்கிருர்.[82]

*3-12-2* இவ்வாறு திருவள்ளுவரும் வேமனரும் தம்முடைய சீர்த்திருத்த நோக்கங்களால் மக்களை அறியாமையினின்றும் விலக்க முயன்றனர். இந்த முயற்சியில் ஓரளவுக்கே வெற்றியும் பெற்றனர் என்று சொல்லவேண்டும். இதனுல்தான், தாம் இவ்வளவு பேசியும் அதை உணராத மக்களைப் பார்த்து, வேமனர்

மிகவும் வேதனைப்படுகிறார். அவர்கள் மூடர்களே என்றும் முடிவு கொள்கிறார். இதனால்தான் 'வளைவு இல்லாமல் நீண்டு வளர் வதற்குப் புடலங்காய் நுனியில் கல் ஒன்றைக் கட்டுவார்கள்; அதனால் பயனுண்டு. ஆனால் நாய்வாலை அவ்வாறு கட்டி நிமிர்த்த ஒரு பயனுமில்லை. மடையோனும் இத்தகையவனே என்று பேசுகிறது அவர் பாடல்.[83]

*3-13-1* கொள்கைக்கு உயிர் கொடுக்கும் நிலை, பேசுவாரிடம் வருதலே உண்மையான சீர்திருத்தமாகும். அதாவது நடத்தையில் சீர்திருத்தத்தைக் காட்ட வேண்டும். புரட்சிப்போக்கை அறியச் செய்ய வேண்டும். இப்படி நடத்தையில் சீர்திருத்தத்தையும், புரட்சிப் போக்கையும் காட்டியவர்கள் திருவள்ளுவரும் வேமனரும். இந்த உண்மையை இதுவரை நாம் பார்த்த அவர் களின் சீர்திருத்தப் பாடல்கள் உணர்த்தும். மேலும் வள்ளுவர் கண்ட சீர்திருத்தம் பொதுவான உலக மானிட அடிப்படைக் குறைகளைப்பற்றிப் பேசுகிறது; காலமும் இடமும் கடந்து நிற்பது. ஆனால், வேமனர் கூறும் சீர்த்திருத்தம் குறித்த ஒரு காலத்தை, இடத்தை, சமுதாயத்தைப் பற்றியது என்பதும் இவ் ஆய்வால் அறியப்படுகிறது.

## குறிப்பெண் விளக்கம்

1. குறள் 430.
2. குறள் 429.
3. குறள் 1046.
4. குறள் 543.
5. வே. ப. ர. 226, 257.
6. வே. ஞா. ப. 783, 799.
7. குறள் 1311, 1313, 1314.
8. குறள் 1311.
9. குறள் 917, 918, 919.
10. திரு. அ. வா. வி., முன்னுரை.
11. வே. ப. ர. 10

12. வே. ப. ர. 2291, 2158.
13. வே. ப. ர. 2181, 1944.
14. வே. ப. ர. 1011, 2164.
15. திருக்குறள், வரைவின் மகளிர் அதிகாரப் பாடல்கள் இந்த உண்மையை உணர்த்தும்.
16. குறள் 972.
17. குறள் 993.
18. குறள் 133.
19. வே. ப. ர. 155.
20. வே. ப. ர. 1179.
21. வே. ப. ர. 735, 893.
22. வே. ப. ர. 967, 949, 9446.
23. வே. ப. ர. 1180.
24. வே. ப. ர. 2330.
25. வே. ப. ர. 1895, 1974, 2173.
26. வே. ப. ர. 2205.
27. வே. ப. ர. 1583.
28. வே. ப. ர. 1969.
29. வே. ப. ர. 280.
30. வே. ப. ர. 1518
31. குறள் 134.
32. குறள் 960.
33. வே. ப. ர. 174, 2204, 2188, 432, 175
34. வே. ப. ர. 167, 240, 1794.
35. வே. ப. ர. 1580
36. வே. ப. ர. 1753.
37. வே. ப. ர. 2341.
38. வே. ப. ர. 2190, 2191.
39. வே. ப. ர. 2189.
40. V.V. 854.
41. வே. ப. ர. 2191, 2190.
42. வே. ப. ர. 1360.
43. வே. ப. ர. 1007
44. வே. ப. ர. 2132.
45. வே. ப. ர. 1551.
46. குறள் 637.
47. 'பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணாப் பிறப்பு' —குறள்: 351

48. குறள் 7, 10.
49. வே. ப. ர. 72, 1469, 1926,
50. வே. ப. ர. 162.
51. வே. ப. ர. 106.
52. வே. ப. ர. 1206.
53. வே. ப. ர. 1146, 163.
54. வே. ப. ர. 2143.
55. வே. ப. ர. 2198, 2199.
56, வே. ப. ர. 2144, 2145.
57, வே. ப. ர. 1249. 58. வே. ப. ர. 79
59. வே. ப. ர. 1004.
60. வே. ப, ர. 1054, 2344.
61. வே. ப. ர. 108.
62. வே. ப. ர. 841, 1031.
63. வே. ப. ர. 1735.
64, வே. ப. ர. 935, 2494, 1887, 1433.
65. வே. ப. ர. 96.
66. வேமன பாச்சாத்துலு, பக். 14.
67. வேமன பாச்சாத்துலு, பக். 15.
68. வே, ப. ர. 349. 69. V. V. 312.
70, வே. ப. ர. 288.
71. வே. ப. ர. 563, 2390.
72. வே. ப. ர. 218.
73. வே. ப. ர. 1042.
74. வே. ப. ர. 2195, 686.
75. வே. ப. ர. 996, 1324, 1344, 105, 1266.
76. வே. ப. ர. 720, 629.
77. வே. ப. ர. 975.
78. வே. ப. ர. 146. 79. குறள் 321
80. வே. ப. ர. 2027, 2342.
81. வே. ப. ர. 147.
82, வே. ப. ர. 2118,
83. வே. ப. ர. 926.
84. வே. ப. ர. 61.

## இயல்—6

# சமயமும் தத்துவமும்

*1-1* இந்த இயலில் சமயம், தத்துவம் பற்றிய விளக்கத்தை முதலில் காணலாம்; அடுத்து, திருவள்ளுவர், வேமனர் இருவருடைய சமயம், தத்துவம் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன.

*1-2* மனிதன் பல இடையூறுகளை எதிர்த்து நாகரிகப் பாதையில் தனது வாழ்வை அமைத்து முன்னேறிக்கொண்டு வரும் பொழுது, ஒரு கட்டத்தில் மொழியைக் கண்டுபிடித்து உருவாக்கினன். அதுபோலவே மற்ருெரு கட்டத்தில் சமயத்தை அமைத்துக் கொண்டான். உலகத்தில் பல பாகங்களிலுள்ள சமுதாயங்களின் நிலைக்கேற்பப் பல மொழிகளும் சமயங்களும் (மதங்களும்) தோன்றி வளர்ந்தன. இதனுல்தான் சமுதாயத்திலே பல சமயங்கள் இடங்கொள்ளலாயின. அந்தச் சமயங்கள் வெவ்வேறு பெயர்களோடு வழங்கலாயின. சமயவாதிகளிடையே ஒருசார் கொள்கையினை உடையோரினின்றும் வேறு பிரித்துக் காட்டுவதற்குச் சைவர் என்றும் வைணவர் என்றும் பௌத்தர் என்றும் இவ்வாருக அறிகுறிகள் தோன்றலாயின.

*1-3* ஒரு பெருங்குழுவினரின் திண்ணமான கொள்கையே சமயம் என்று சொல்லலாம். சமயம் என்னும் சொல்லைக் குறிக்கும் 'ரிலிஜன்' என்ற ஆங்கிலச் சொல், 'ரிலிகெரி' அல்லது 'ரிலிகாரி' என்னும் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் என்றும், முதலது திரும்பத் திரும்பப் படிக்கப்பட்டுச் சிந்திக்கப்பட்டது என்ற பொருளையும், பின்னது கட்டுவது என்னும் பொருளையும் தருவதாகவும் ஆக்ஸ்ஃபோர்டு புதிய ஆங்கில அகராதி கூறுகிறது. சமய அறநெறிக் கலைக்களஞ்சியமும் இவ்வாறே தெரிவிக்கிறது.

'சமயம்' என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கு மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கு உள்ள தொடர்புபற்றியதாக எண்ணப்படுகிறது. எங்கெல்லாம் புனித உணர்வு தோன்றுகின்றதோ அங்கெல்லாம் 'சமயம்' வேரூன்றி நிற்பதாகக்

கொள்ளலாம். பொதுவாகச் சமயங்களில் கடவுள் அல்லது கடவுளர் உண்டு என்ற நம்பிக்கை காணப்பட்டாலும், இத்தகைய நம்பிக்கை இல்லாத கொள்கைகளும் சமயம் என்ற பெயர் தாங்கி நிலவுகின்றன.[1]

1-4 கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட நூல்களில் மட்டுமே 'மதம்' என்னும் சொல் கடவுளைப் பற்றியாதல், உயிரைப் பற்றியாதல், உலகத்தைப் பற்றியாதல், ஒழுக்கத்தைப் பற்றியாதல் மக்கள் குழுவினர் கொண்ட கொள்கைக்குப் பெயராய்த் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வருகிறது. கி. பி. மூன்றும் நூற்றுண்டிற்கு முற்பட்ட நூல்களில், மதம் என்னும் சொல் 'கொள்கை' என்னும் பொருளில் வருதலைக் காணலாம்.[2] கி. பி. மூன்றும் நூற்றுண்டின் முதற்பகுதியில் தோன்றிய மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தி லிருந்துதான் 'மதம்' என்னும் சொல் கொள்கை என்று இன்றுவரை வழங்கி வருவதாக மறைமலையடிகள் கூறுகிருர்.[3]

1-5 இந்த 'மதம்' என்ற சொல்லாதல், 'சமயம்' என்ற சொல்லாதல் பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் எங்கும் காணப்படவில்லை; சங்க நூல்கள் என்று பொதுவாகக் கருதப்படும் எட்டுத் தொகையிலும், பத்துப்பாட்டிலும், அவற்றிற்கு ஒத்த திருக்குறளிலும் இந்தச் சொல் காணப்படவில்லை என்று ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடுகிருர்.[4] ஆயின் திருமாலின் அவதாரமாகிய கண்ணன் என்ற மாயோன், முருகன், இந்திரன், வருணன் ஆகியோரின் வழிபாடு இருந்திருப்பதைத் தொல்காப்பியம் நமக்குத் தெரிவிக்கிறது.[5] பத்துப்பாட்டில் மாங்குடி மருதஞர் தன் பாடலில் வேதம் ஓதிய அந்தணர்களைப் பற்றியும், பௌத்த சமணப் பள்ளிகளிலிருந்த துறவிகளைப் பற்றியும் வியந்து பாராட்டி இருக்கிருர்.[6] முக்கண்ணன், முருகன், திருமால், கண்ணன், பலராமன் முதலிய தெய்வங்களைப் பற்றிய செய்திகள் பழங்காலப் புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. இன்று ஒரே குடும்பத்தினர் பல அரசியல் கொள்கைகளைச் சார்ந்திருத்தல் போன்று, அன்று சமயக் கொள்கைகளை ஒரே குடும்பத்தின் மக்கள் பலர் சார்ந்திருந்தனர்.

ஆனுல் இடைக்காலத்திலோ, முன்னில்லாத பல சமயப் பகுப்புக்களும் மதவேறுபாடுகளும் தோன்றலாயின. இதனுல் நாட்டில் ஒற்றுமை குலைந்து அவர்கள் ஒருவரோடொருவர் மாறுபாடு கொள்ளலாயினர்.

சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்[7]

என்ற மாணிக்கவாசகர் வாக்கு இவ்வுண்மையை விளக்கிநிற்கும்.

இங்ஙனம் சமயங்களிடையே ஒற்றுமை குலைந்தாலும், சமயங்களின் வளர்ச்சி மட்டும் பெருகிக்கொண்டே வரலாயிற்று.

## திருவள்ளுவரின் சமயம்

*2-0* திருவள்ளுவர் தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கமாய்க் கொள்ளாமல், உலகிலுள்ள பல்வேறுவகைப்பட்ட மக்களை நோக்கமாய்க்கொண்டு, மனித இனத்தின் பொதுமையை உணர்ந்து, 1330 பாக்களிலும் குறிப்பிட்ட ஒரு சமயத்திற்கும் முதன்மை இடங்கொடாமல், எம்மதப்பெயரையும் குறிப்பிடாமல் தம் நூலை ஆக்கியுள்ளார். சங்க இலக்கியங்களில் இருப்பதைப்போன்று சமயச்சடங்குகள் யாதும் குறளில் குறிக்கப்படவில்லை. மாயோன் சேயோன் முதலான கடவுளர் பெயர்களையும் நேரிடையாக வள்ளுவர் எங்கும் குறிப்பிடவில்லை. ஆனுல் சமயவாதிகள் சில குறட்பாக்களைத் தம் விருப்பத்துக்கு ஏற்றவாறு இழுத்துப் பொருள் கொடுத்து வள்ளுவரைத் தம் சமயத்தினராகக் கொள்கின்றனர்.

*2-1* திருவள்ளுவரின் காலத்தில் தமிழ்நாட்டில் சமணம்[8] பௌத்தம், சைவம், வைணவம் முதலிய மதங்கள் முக்கிய மதங்களாக விளங்கின. இந்தச் சமண பௌத்த மதத்தாரும்,' சைவ வைணவ மதத்தாரும்[9] குறளிலுள்ள சில பாடல்களைத் தமக்கு சாதகமாய்க் கொண்டு, வள்ளுவரைத் தத்தம் மதத்தைச் சேர்ந்தவர் என்று கொள்கின்றனர்.

*2-2* கிறித்துவர் கூடக் குறளிலிருந்து சில சான்றுகள் கூறி வள்ளுவரைக் கிறித்துவ மதத்தினராகக் கொள்ள முயல்கின்றனர்.[10]

*2-3-1* எல்லா மதங்களும் அறக்கருத்துக்களைக் கூறுபவையே; தமக்கென்று இருக்கும் சில சிறப்புக் கொள்கைகளைத் தவிர, மற்றப் பொது அறக்கருத்துக்களை எல்லா மதங்களும் கூறுகின்றன. இவ்வாறு சிறந்த அறக்கருத்துக்களைக் கூறும் மதங்களுள் ஒற்றுமை நிலவுவது இயல்பே. இது பிரிக்கமுடியாத ஒன்று. எல்லா மதங்களுக்கும் ஒத்த இத்தகைய உயர்ந்த கருத்துக்களை வள்ளுவர் ஆண்டிருக்கிருர். இதனுல்தான் வளுள்வரை அந்தந்த

மதத்தார் தம் மதத்தைச் சேர்ந்தவராகக் கொள்ளலாயினர் போலும்! அவ்வாறு கொள்வது ஏற்றதன்று.

2-3-2 இவற்றை எல்லாம் ஆதாரமாகக் கொண்டு வள்ளுவரின் மதத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வரலாம். வள்ளுவர் ஒரு சமயவாதி அன்று; 'தன் தெய்வம், என் தெய்வம்' என்று உரிமை கொண்டாடும் கடவுள் நிலைக்கு ஒப்பானது திருக்குறள். அந்த அளவுக்கு எல்லாக் கொள்கைகளையும் தன்னுள் கொண்டிருக்கும் சிறப்புப் பெற்றது குறள். நூலின் ஆசிரியரும் இத்தகையவரே. எனவே வள்ளுவர் நூலை 'ஒரு பொது நூல்' என்றே சொல்லலாம். வள்ளுவரையும் 'பொது மதவாதி' என்றே கொள்ளவேண்டும். 'நன்றென எப்பாலவரும் இயையவே வள்ளுவனார், முப்பால் மொழிந்த மொழி' என்ற கூற்றும்,[11] 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்' என்னும் வரிகளும்[12] இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

## வேமனரின் சமயம்

3-1 திருவள்ளுவரை ஒரு பொதுமைச் சமயவாதி என்று சொல் லும் அளவுக்கு வேமனரைச் சொல்லுவதற்கில்லை. இவருடைய முற்பகுதி வாழ்வு ஒரு வகையாகவும், பிற்பகுதிவாழ்வு வேறொரு வகையாகவும் அமைகிறது. முற்பகுதி வாழ்வை நோக்க இவர் விரசைவ மதத்தைச் சேர்ந்தவரா என்று எண்ண இடமுண்டு. இலம்பிகா சிவயோகியிடம் யோகமார்க்க உபதேசம் பெற்றதாக இவரைப் பற்றிய கதை அறிவிக்கிறது. இவர் காலத்து 'ரெட்டி' அரசர்கள் 'சைவ' மதத்தையே தழுவி இருந்தனர். வேமனர் தன்னுடைய பாடல்களில், பல இடங்களில் சிவன், சைவம் என்ற சொற்களை ஆண்டுள்ளார்.[13] இக் காரணங்களால் வேமனர் முதலில் சைவ மதத்தைச் சார்ந்தவர் எனத் துணிய வாய்ப்புண்டு.

3-2 இவருடைய பிற்பகுதி வாழ்வு முற்பகுதி வாழ்வினும் மாறுபட்டது. இலம்பிகா சிவயோகியிடம் உபதேசம் பெற்ற பிறகு, 'சித்தர்'[14] தகுதியை உடையவராயினர்; சைவ மதத்தி லிருக்கும் சில குறைகளையும் உணரலாயினர். சைவ வைணவங் களில் வேறுபாடு காணு நிலை இவருக்கு உண்டாயிற்று: பிரம்மாவைக் கொன்று விட்டுணு பாகத்தில் சேர்த்து, விட்டுணுவைக் கொன்று சிவனோடு சேர்த்து, சிவனைக் கொன்று தான் சிவயோகி ஆகவேண்டும் என்று விழைகிறார்.[15] அதாவது முதலில் பிரம்ம ஞானம் செய்யவேண்டும்; பின் அதனைவிட்டு

விட்டுணு ஞானம் செய்யவேண்டும்; பின் சிவஞானம் செய்ய வேண்டும். சிவஞானம் செய்து சிவயோகி ஆகவேண்டும் என்பதாகும்.

3-3 இந்த நிலையில்தான் வேமனர் 'அத்துவைத' மதத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று; எனவே முதலில் 'வீரசைவ' ராக இருந்த வேமனர், பிற்பகுதியில் 'அத்துவைத' மதத்தவராகத் திகழ்கிறார். ஆந்திர நாட்டுச் சூழ்நிலையும் இவரை அத்துவைத மதத்தை மேற்கொள்ளச் செய்தது. ஆந்திரர்கள் முதலிலிருந்தே அத்துவைத மதத்தையே பெரிதும் கடைப்பிடித்தார்கள். ஆந்திர நாட்டுக்கு மிக அருகிலுள்ள மைசூர் நாட்டைச் சேர்ந்த 'சிருங் கேரி' என்னும் இடத்தில் ஆதிசங்கரர் அத்துவைத மடத்தை ஏற்படுத்தினர். 'திக்கன' சிறந்த அத்துவைதியாகச் சொல்லப் படுகிறார். 1336ஆம் ஆண்டு விஜயநகர ஆட்சியை ஏற்படுத்திய 'வித்தியாரண்யர்' என்பவரும் அத்துவைதியாக இருந்தார். இவர் 'சங்கர விஜயம்', 'சர்வ தரிசன சங்கரஹ' என்ற இரு அத்துவைத மத நூல்களை இயற்றி, அம்மதத்தைப் பரப்ப பெரிதும் முயன்றார்.[16] இந்தச் சூழ்நிலைகள் வேமனரை அத்துவைத மதத்தை தழுவச் செய்யலாயின.

3-4 அத்துவைதக் கொள்கையைத் தழுவிய வேமனர் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், கிறித்துவம் முதலிய சமயங்களைப் பற்றிப் பேசாது, உலக மாயையினின்றும் விடுபட்டுப் பிரம்மத்தை (முக்தியை) அடையும் நெறியை அறிவித்துள்ளார்.

3-5 துவைத, விசிஷ்டாத்வைத மதங்களைத் தழுவி வேமனர் மனம் நடக்கிறது; எனவே பரமாத்மா, ஜீவாத்மா இவற்றிடையே இருக்கின்ற வேறுபாடுகளை அறிந்தவராக வேமனர் காணப்படு கிறார். ஏதோ ஒரு பரமசக்தியின் கட்டுப்பாட்டில் இல்லாமல், சுதந்திரமாய்த் தன்னைத்தான் காத்துக்கொள்ள மானிடனிடத்துத் தனக்கென்று ஓர் அறிவு உள்ளதென்பதை வேமனர் நம்புகிறார். நாம் செய்யும் முயற்சிக்கேற்றவாறு செயல் அமையும்; எனவே ஒருவனின் மேன்மைக்கும், தாழ்வுக்கும் அவன் செயலே காரணம் என்பதை நம்புகிறார் வேமனர்.

3-6 நாம் செய்யும் வினைக்கேற்றவாறு விதி அமையும்; விதிக்கு ஏற்றவாறே நமக்கு வரம் கிடைக்கும்; ஆகவே செயல் நம்மைப் பொறுத்தது; விதி இறைவனைப் பொறுத்தது[17] என்று எடுத்துரைக்கிறார் அவர்.

3-7 விதிக்கேற்றவாறு வினை அமையும். இதற்கெல்லாம் மூலகாரணமான பொருள் ஒன்றே என்பது வேமனரின் கொள்கை.

கபீரைப் போலவே 'ஒருவனே தேவன்' என்ற கொள்கையை வலியுறுத்திக் கூறுவதில் மிக்க அழுத்தத்தைக் காட்டுகின்றார் வேமனர். ஒவ்வொரு பொருளிலுமே அத்தேவன் நிறைந்துள்ளார் என்கிறார் வேமனர். உடல்கள் வேறுபட்டனவே; ஆனால் அவற்றிற்கு எழுச்சியூட்டும் உயிர் ஒன்றே ஆகும். உணவுப் பொருள்கள் வேறுபட்டனவே; ஆனால் பசி ஒன்றே ஆகும். பசுக்கள் யாவும் வெவ்வேறு நிறத்தை உடையன; ஆயினும் அவற்றின் பால் வெண்மை நிறத்தை உடையது. அணிவகைகள் வெவ்வேறு நிறத்தன; ஆயினும் அவை செய்யப்பெற்ற தங்கம் ஒன்றே. இனங்களும் சமயங்களும் வேறுபட்டவை; ஆனால் பிறப்பு ஒன்றே. மொழிகள் வேறுபட்டவை; ஆயினும் சிந்தனை ஒன்றே. மலர்கள் வேறுபட்டவை; ஆனால் வழிபாடு ஒன்றே, மெய்விளக்கத் துறைகள் வேறுபட்டவை; ஆனால் தெய்வம் ஒன்றேயாகும் என்று கண்முன் இருக்கும் காட்சிகளைக் காட்டுகளாகக் காட்டி மெய் விளக்கம் செய்கிறார் வேமனர். எனவே, எல்லாச் சமயங்களும் ஒன்றே என்பதே வேமனரின் கொள்கையாகும் என்பதை, இதனால் அறியலாம்.[18]

## இருவரின் தத்துவம்

*4-0* இந்த உலகப் படைப்புக்குக் காரணம் எது? மனித இன்ப துன்பங்களுக்குக் காரணம் எது? உயிரினங்களுக்கு மறுபிறவி உண்டா? உயிர் இனங்களின் பலன் என்ன?' முதலியவற்றைப்பற்றி மனிதன் ஆதிமுதல் இன்றுவரை ஆராய்ந்துகொண்டே வருகிறான். இந்த ஐயத்தைத் தீர்க்கும் வகையிலேயே தத்துவக் கொள்கைகள் தோன்றலாயின.

## தத்துவ விளக்கம்

*4-0-1* 'தத்துவம்' என்ற சொல்லுக்கு 'உண்மை' என்பது பொருள். கலைக்களஞ்சியம் "தத்துவம் என்னும் சொல்லுக்கு பொருள் என்பது கருத்து, உண்மைப் பொருளிலிருந்து உண்டாகும் காரியங்களிலும் உண்மையான பொருள வியாபித்து நிற்பதால் அக்காரியங்களையும் 'தத்துவம்' என்று அழைக்கிறார்கள்"[19] என்று சொல்லுகிறது. தத்துவம் என்ற சொல்லுக்கு இணையாக 'மெய்ப்பொருள்', 'சமயக்கணக்கு' என்ற குறியீடுகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் தத்துவத்தைக் குறிக்கும் 'பிலாசபி' என்ற சொல்லுக்கு, "ஞானத்திடம் அல்லது அறிவிடம் கொண்டுள்ள முடிவான

என்றுமுள பொருளைப்பற்றி (செம்பொருள்) ஆராயும் ஆர்வமாகும்'' என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.[20] ஆங்கிலக் கலைக்களஞ்சியம், இதற்கு "ஞானத்தைத் தேடுதல், அல்லது அறிய ஆர்வம் காட்டுதல்'' என்று பொருள் கூறுகிறது.[21]

*4-0-2* இந்தியாவில் தத்துவ ஞானமும் வாழ்க்கையும் ஒன்று என்று கருதுமளவுக்கு இவை இரண்டும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. இந்தத் தத்துவஞானம் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமின்றி முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகிறது. இந்தத் தத்துவத்தைப் பற்றிய கருத்துக்கள் 'வேதம்', 'உபநிடதம்', 'ஆகமம்' எனப்படும் மிகப் பழைய வடமொழி நூல்களில் காணப் படுகின்றன.[22] இந்த வேத உபநிடதங்களில் கூறப்பட்டவற்றுக்கு விளக்கம் கூறுவதில் ஏற்பட்ட வேறுபாடுகளால் பிற்காலத்தில் பல பிரிவுகள் தோன்றலாயின.[23]

*4-1-0* வாழ்க்கையை மூன்று நிலைகளில் காணலாம். உடல் வாழ்க்கை, உள வாழ்க்கை, உயிர் வாழ்க்கை. உலகத்தோடு புற நிலையில் வாழும் வாழ்க்கை உடல்வாழ்க்கை. உடன் உறைவாரோடு உளம் கலந்து வாழும் வாழ்க்கை உள வாழ்க்கை. இவ்விரு வாழ்க்கைக்கும் அடிப்படையாய் அமைகின்ற உயிருக்கும் இறைவனுக்கும், அல்லது உயிரியக்கத்திற்கும் அதனை இயக்குகின்ற ஆற்றலுக்கும் உள்ள தொடர்பினைத் தெற்றென உணர்தலே உயிர் வாழ்க்கை. இதுவே மெய்ப்பொருள் உணரும் வாழ்க்கையாகும். பருப்பொருள் நிலையினின்றும் நுண்பொருள் நிலையை அடைய இந்த மூன்று நிலைகளும் படிப்படியாய் அமைந்துள்ளன. இந்த நுண்பொருளை—'செம்பொருள்', 'மெய்ப்பொருள்', 'கடவுள்' 'இறைவன்'—என்று அறிஞர்கள் சுட்டுவர்.

## கடவுள்

*4-1-1* திருக்குறளின் முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்து. இந்த அதிகாரக் கருத்துக்கள் திருவள்ளுவரின் கடவுள் கொள்கையை உணர்த்தி நிற்கின்றன. முப்பத்தாறும் அதிகாரமாகிய 'மெய்யுணர்தல்' அதிகாரத்திலும், இவருடைய கடவுட் கொள்கையை அறியலாம்.

*4-1-2* விடுதலையைத் தருகின்ற முழுமுதற் பொருள் பற்றி இருவிதக்கொள்கைகள் இருந்துவருகின்றன. அவை, 1. சகுண வழி (Personal God), 2. நிர்குண வழி (Impersonal God) என்பன ஆகும்.

## சகுண வழி

உலகத்தின் தோற்றம், நிலைபேறு, மறைவு என்பவற்றின் காரணம் கடவுள் எனக் கொள்கிறது இது. அந்தக் கடவுள் எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமானவர். அந்தப் பொருள் தன் அருளால் உலக உயிர்களை உய்க்கிறது.

## நிர்குண வழி

பரம்பொருளை நிர்க்குணப் பிரம்மமாகவும். இரண்டற்ற தனி முதலாகவும், முழு உண்மையாகவும் கொள்கிறது இது.

*4-1-3* பரம்பொருள் இயற்கையாகவும் அல்லது உலகமாகவும் பரிணமிக்கிறது. ஆனால் பரம்பொருள் இயற்கையாகாது; இயற்கை என்ற அளவில் காட்சிகளாகவும், கடவுள் தன்மையில் இயற்கைக்குத் தாயகமாகவும் விளங்குபவன்.

எனவே, பரப்பிரம்மத்தை அதீதநிலையில் நிர்குண பிரம்மமாகவும் (Impersonal God), காட்சி நிலையில் சகுணப் பிரம்மமாகவும் (Personal God) கருதுவர் ஞானிகள்.

*4-1-4* சகுண நிலைக்கும், நிர்குண நிலைக்கும் உள்ள வேறுபாடுகளாவன :

| | சகுண நிலை | நிர்குண நிலை |
|---|---|---|
| 1. | தெய்வீகத் தோற்றம் | தெய்வீகம் |
| 2. | திரிபுடையது | திரிபற்றது |
| 3. | காலம், இடம் முதலிய வரம்புக்குட்பட்டது | காலம், இடம் முதலிய வரம்புக்குட்படாதது |
| 4. | காரண காரிய முறையில் ஏற்பட்டது | சுயமானது; சத்தானது. |
| 5. | அநித்தமானது | ஆதியந்தமற்றது; ஆனால் அந்தமுடைய படைப்புகளைத் தன்னகத்தே கொண்டது. |

*4-1-5* இயற்கை இறைவனின் படைப்பே; ஆயினும், இறைவன் இயற்கைக்கு அப்பாலாகிய நிலையில் திரிபின்றி நிலையாகவும், தோற்றமும் அழிவும் இல்லாத நிலையில் சத்தாகவும், உயிர்க்குயிராய் நின்று ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் நிலையில்

சித்தாகவும், பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இன்பம் பயக்கலின் ஆனந்தனுகவும் விளங்குவதால், அவ்விறைவன் 'சச்சிதானந்தம்' என்றும் போற்றப்படுகிருன்.

*4-2-1* திருக்குறளின் முதற் பாடல், 'எழுத்துக்களுக்கு அகரம் எப்படியோ, அப்படியே உலகிற்குக் கடவுள்' என்று பகர்கிறது. அவரே உலகத்திற்கு அடிப்படையும் முதலும் முடிவும் ஆவார்.[24] அவர் மெய்யுணர்வினை உடையார்.[25] மாண்புமிகு அடிகளை உடையவர்.[26] அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண்ணே அவர் நினைத்த வடிவோடு விரைந்து சேரக்கூடியவர்.[27] அவருக்கு விருப்பு வெறுப்பு ஒன்றும் இல்லை; எல்லாவற்றிலும் ஒன்ருகவே இருக்கிருர்.[28] மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்து அவாவினையும் அறுத்தவர்.[29] அவர் எண்வகைக் குணங்களை உடையவர்[30] என்றிவ்வாருக இறைவனின் பண்புகளைக் கூறுகிருர் திருவள்ளுவர்.

*4-2-2* இவ்வாறு இறைவனின் பண்புகளைக் கூறவே, இத்தகைய பண்புகளினின்றும் மாறுபட்டவர் மனிதர் என்று எண்ண வாய்ப்புண்டு. அதாவது மனிதர் வாலறிவற்றவர்; ஐம்புல நுகர்ச்சி உடையவர்; வெறுப்பு விருப்புக்கள் உடையவர்; வினைகளால் பற்றி இழுப்புண்ணப்படுபவர். மனிதன் இந்த எதிர்ப்புக்களின் நீங்கி வினைகள் அழியும்போது, அவன் வானுறையும் தெய்வமாக வைக்கப்படும் தகுதியைப் பெறுகிருன்.[31] எனவே பரம்பொருள் வேறு, உலக உயிர்கள் வேறு என்ற வகையில் பேசுகிருர் வள்ளுவர். உலக உயிர்களுக்கு இறப்பும் பிறப்பும் உண்டு என்றும் பேசுகிருர்.[32] இதனுல், வள்ளுவர் அத்துவைதி அல்லர் என்று நினைக்க வாய்ப்புண்டு.

*4-2-3* எனவே, சமயக் கொள்கையில் வள்ளுவரிடத்துப் பொதுமையைக் காண்பது போன்று, தத்துவக் கொள்கையில் பொதுமையைக் காண இயலவில்லை. மெய்யுணர்தல் அதிகாரத்தில் 'மெய்ப்பொருள்'[33], 'செம்பொருள்'[34] முதலிய நிர்குண பிரம்மத்தைக் குறிக்கும் தொடர்களையும் ஆளுகிருர்.

*4-3-0* வேமனரின் கடவுட்கொள்கை திருவள்ளுவருக்கு முற்றிலும் மாறுபட்டது. பரம்பொருள் வேறு; உலகம் வேறு என்று கொள்ளாது, இரண்டற்ற எல்லாம் ஒன்றே என்ற அத்துவைதக் கொள்கையுடையவராக அவர் திகழ்கிருர்.

## நிர்குண பிரம்மம்

*4-3-1* இறைவர் அங்கிங்கு எனுதபடி எங்கும் நிறைந்திருப்பவர். அதுவே பரதத்துவமாகும். அவரே ஆட்சியாளனுவார்[35] என்று துணிவு கொள்கிருர் வேமனர். சுவாமி விவேகாநந்தரும் இறைவன் உலகத்திலுள்ள ஒவ்வோர் அணுவிலும் இருப்பதாகக் கூறுகிருர்.[35]. வேமனர் பல இடங்களில் 'விட்டுணு' என்ற பெயரை ஆளுகிருர். அவர் நோக்கில் 'விட்டுணு' என்ற பெயர் பரதத்துவத்திற்கு அல்லது ஆத்மாவுக்குக் கொண்ட பெயராகும்; அவ்வளவேயன்றி மத அடிப்படையில் கொண்ட பெயரன்று.

*4-3-2* இந்த 'பரதத்துவம் அல்லது பிரம்மம்' உலகத்தினின்று தான் தனித்திருக்கும் தன்மையை உடையது அன்று; உலகத்தோடு ஒன்றுபட்டுள்ளது. அதாவது உலகம் வேறு, தான் வேறு என்றில்லாது தானே எல்லாமாகி இருக்கிறது என்கிருர் வேமனர்.[36] இந்தப் பிரம்மம் அழியாத ஒன்று. மற்ற உலகப் பொருள்கள் எல்லாம் அழியக்கூடியவை. அழியக்கூடிய அந்தப் பொருள்கள் எல்லாம் பிரம்ம மயமானவை. உலகப் பொருள்கள் வேறு, பிரம்மம் வேறன்று. நிலையற்ற உலகப் பொருள்கள் பிரம்ம மயமானவை என்று உணரும் நிலை வரும்பொழுது, மனிதனிடத்திலுள்ள அறியாமை நீங்கும்; அறியாமை நீங்கத் தன்னில் இருக்கும் தத்துவத்தை அறிகிருன்; தானே பிரம்மம் என்று உணருகிருன். உணர, தான் வேறு உலகம் வேறு என்னும் நிலையானது போய், தானே பிரம்மம் என்னும் அழியாத் தத்துவமாகத் திகழ்கிருன்; அதுவே முக்தியாகும்.[37]

*4-3-3* 'பிரம்மம்' உருவம் அருவம் அற்றது. அது ஒவ்வொருவனிடத்தும் உண்டு. ஒவ்வொருவனிடத்தும் காணப்படும் உடல் முதலிய உலகப்பொருள்கள் உருவமுள்ளவை; உருவமுள்ள இவை வரையறை உடையவை. இந்த வரையறையாலும் உருவத்தாலும் அழியாப் பிரம்மத்தைக் காண முடியாது; எனவே வரையறை நீங்கி உருவம் நீங்கும் நிலை எய்தவேண்டும்; அதற்கு உண்மைப் பொருள்மேல் அழியா நம்பிக்கை வேண்டும்; அப்பொழுதே உண்மைப் பொருளைக் காண முடியும்; அவ்வாறு காணும் நிலை வரும்பொழுது தானே நிர்குண பிரம்மமாவான். உண்மைப்பொருள் எல்லாக் குணங்களையும் உறவுகளையும் நீக்குவதால், அல்லது இல்லாது இருப்பதால், வேமனர் தம் பாடலில் அந்தப் பொருளை நிர்குண பிரம்மா என்று அழைக்கிருர்.[38]

*4-3-4* நிர்குண பிரம்மாவாகிய அந்தப் பரம்பொருள் முத்தேவருக்கும் அப்பாற்பட்டது; மூவரும் தானேயாகி இருப்பது;

அது உருவம் அருவமற்ற ஒன்று ஆகையால் அதனை உருவமிட்டுச் சொல்வது அறியாமை ஆகும்.[39] உருவமிட்டு அறிய முயல்வது மணலில் கிணறு தோண்டலாம் என்று முயல்வது போன்ற தாகும்.[40] இங்கு ஆசிரியர் மனித இனத்தின் அறிவை மணல் நிலத்துக்கு ஒப்பிடுகிறார். மணல் நிலத்தில் எப்படிக் கிணறு தோண்ட முடியாதோ அதுபோன்று மனித அறிவால் பரப் பிரம்மாவை அறிய முடியாது; காரணம் மனிதனின் உருவமும் அறிவும் எல்லாம் அறியாமைகளே.

*4-3-5* ஆகையால் நிர்குண பிரம்மத்தை (ஆத்மசொருபத்தை) அறிய எந்தக் கல்வியும் பயன்படாது. கற்றுத் தெரிந்துகொள்ளும் தன்மை உடையது அல்ல பிரம்மம்; காரணம் குணமற்றது; பரமாத்மா நிர்குணமுடையது என்பதை அறிய ஒருவன் தன்னை மறந்த நிலை எய்தவேண்டும்.[41]

*4-3-6* பிரம்மம் ஒவ்வொருவனின் உடலில் இருப்பது. மக்கள் தம்மிடம் (தம் உடலில்) இருக்கும் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாது, அந்தத் தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேறுவேறு இடங்களுக்குச் சென்று முயல்வதோ, அதற்காக உபவாசங்கள் இருத்தலோ அறியாமை. அறியாமை நீங்கியவன் தன்னுள்ளேயே 'பிரம்மம்' உள்ளது என்பதை உணர்ந்து கொள்வான்; இல்லாத இடங்களில் தேடமாட்டான். தன்னில் இருக்கும் தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாது வேறு இடங்களில் தேடுவது சூரியஒளி இருக்க விளக்கொளி கொண்டு பொருட்களைத் தேடுவது போன்றது. எவன் ஒருவன், தான் யார் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லையோ அவன் எப்பொழுதும் தானாகவே இருப்பான். தன்னில் இருக்கும் தத்துவத்தை எவன் தெரிந்துகொள்கிறானோ அவன் ஞான உருவானவன்; அவன் உடலற்ற ஆத்ம உருவனாவான்[42] என்ற முடிவுக்கு வருகிறார் வேமனர்.

*4-3-7* தன்னுள்ளே 'ஆத்மன்' உண்டு என்பதை ஓர் உவமையைக் கொண்டே தெளிவுபடுத்துகிறார் வேமனர். விறகில் நெருப்பு இருப்பது கண்ணுக்குத் தெரியாது; ஆயின் விறகில் நெருப்புண்டு என்பது எல்லோரும் பட்டறிவால் உணர்ந்ததே; அதுபோலவே, உடலிலும் 'ஆத்மா' உண்டு; அவன் கண்ணுக்குத் தெரிய மாட்டான்; பட்டறிவாலேயே உணர வேண்டும்.[43] அப்படிப் பட்டறிவால் உணரும்பொழுது, பிரம்மம் வேறு எங்கும் இல்லை என்பதையும், தானே பிரம்மம் என்பதையும் உணருவான்[44] என்கிறார் வேமனர். அறிஞர் ஹரியண்ணா கருத்தும் இக் கொள்கைக்குத் துணையாய் நிற்கிறது.[44அ].

*4-3-8* வேமனர் நிர்குண பிரம்மாக் கொள்கையராயினும் சகுண பிரம்மாவைப்பற்றியும் பேசுகிறார். பிரம்மம் உலக உருவங்களினின்றும் பெயர்களினின்றும் வேறுபட்டது அல்ல; பிரம்மம் எல்லா மக்களின் எல்லா உயிர்களிடத்தும் காட்சிக்குத் தெரியும் சான்றாய் உருவங்கொண்டும், பெயர் கொண்டும் உள்ளது. அந்தப் பிரம்மம் உலகத்து எல்லாப் பொருள்களின் உள்ளும் உள்ளது; மேலும் எல்லாப் பொருள்களுக்கும் மேலான தாக எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்டதாயும் உள்ளது. காரணம் அது உருவமற்ற ஒன்று. அந்தப் பிரம்மம் எல்லா உயிர்களின் ஆன்மாவாகவும் அதே நேரத்தில் உலகப் பொருள் களின் வரையறைக்குட்படாத ஒன்றாகவும் இருக்கிறது. எல்லா வற்றிற்கும் அப்பாற்பட்ட ஒன்றாகப் பிரம்மத்தைக் கருது வோமானால், அந்தப் பிரம்மம் யாவராலும் காண இயலாது. எல்லா உயிர்களிடத்தும் உள்ளிருக்கும் ஒன்றாகக் கருத, உலகத்து எல்லாமே நிலையற்றன என்றாகும். ஆகவேதான் பிரம்மத்தை உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் கடந்த, உருவம் அருவம் இல்லாத ஒன்றாகவும், எல்லா உருவங்களின் உள்ளிருப்பதாயும் இருக்கிறது என்று வேமனர் கூறுகிறார்.[45] எனவே வேமனர் நிர்குண பிரம்மத்தையும் சகுண பிரமத்தையும் ஒன்றாகவே கருதுகிறார் என்று எண்ண வேண்டியுள்ளது.

*4-3-9* பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகிய மூவுருவங் களும் பிரம்மத்தின் மூன்று தனிப்பட்ட உருவங்களே என்கிறார் வேமனர். பிரம்மன் இந்த உலகத்தைப் படைத்தவன். ஆன்றோர் நம்பிக்கைப்படி ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுக்கும் காரணமானவர் முறையே பிரம்மன், விட்டுணு, உருத்திரன் ஆகிய மூவராவார். இந்த நம்பிக்கை வழியிலே வேமனரும் செல்கிறார். ஆனால் வேமனர் இந்த மூவரையும் வேறுவேறாகக் கொள்ளவில்லை. பிரம்மம் தானே அந்த மூன்று உருவங்களாகவும் தோன்றி, முத்தொழில்களையும் செய்வதாகக் கூறுகிறார். இதனால்தான், 'பிரம்மத்தை' வேமனர் 'விசுவகர்ம' என்று அழைக்கிறார்.[46] பகவத்கீதையிலும் பிரம்மம் உருவமும் பெயரும் கொண்டு விளங்குவதற்குக் காரணத்தைக் காணலாம். அறம் அழிந்து அல்லது பாவம் தலைதூக்கும் பொழுது அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலைநாட்ட திருமால் பல உருவங்களைக் கொள்வதாகக் கூறப்பட்டுள்ளது.[47]

*4-3-10* முன்பு வேமனர் நிர்குண பிரம்மத்தையும், சகுண பிரம்மத்தையும் ஒன்றாகவே கருதுகிறார் என்று எண்ண வேண்டி யுள்ளது என்ற முடிவு கொள்ளப்பட்டது. அதற்கு விடையாக

வேமனர் மற்ருெரு பாடலில் விளக்கம் தருகிருர். பிரம்மம், நிர்குண பிரம்மம், சகுண பிரம்மம் ஆகிய இரண்டாக ஒரே நேரத்தில் இருக்க முடியாது என்று கூறுகிருர். ஒருவன் தன் அறியாமை காரணத்தால், எத்தனே காலம் உருவங்களேயும் பெயர்களேயும் உள்ளத்தால் கொள்கிருனே, அத்தனே காலமும் சகுண பிரம்மம் உண்மைப் பொருளாக அவனுக்குக் காட்சி யளிக்கும். எப்பொழுது நிர்குண பிரம்மம் அறியும் அறிவு (தன்னேத் தான் அறியும் நிலே) வருகிறதோ அப்பொழுது சகுண பிரம்மம் உண்மையற்ற ஒன்று என்பது விளங்க வரும்.

*4-3-11* இப்படிப் பிரம்மம் நிர்குண பிரம்மமாகவும், சகுண பிரம்மமாகவும் இருக்கக் காரணத்தைக் கூறுகிருர் வேமனர். உருவத்தோடும் பெயரோடும் இருக்கிற சகுண பிரம்மம், தியானம் (Meditation) செய்வதற்கு உதவியாய் இருந்து, நிர்குண பிரம்மாவை அறிந்து கொள்வதற்கு வழியாய் உள்ளது என்று விடையளிக்கிருர் வேமனர்.[48] விவேகானந்தரும் நிர்குண பிரம்மத்தை அறிந்து கொள்வதற்குச் சகுண பிரம்மம் ஒரு வழி யாகும் என்று கூறுகிருர்.[49]

*4-3-12* அடுத்து, நிலேயற்ற சகுண பிரம்மத்தைத் தொழுவ தற்கும் காரணத்தைச் சொல்லுகிருர் வேமனர். எவனெருவன் தொடர்ந்து பிரம்மத்தைத் (தன்னே) தொழுகிருனே (அறிய முயலுகிருனே) அவன் உறுதியாய் முக்தியடைவான். ஆகவே பரம்பொருளேத் தொடர்ந்து தொழவேண்டும் என்று கூறுகிருர் வேமனர்.[50] இவ்வாறு தொடர்ந்து தொழ, தொழுவோர், தொழப் படுவோர், இரண்டிற்கும் உள்ள தொடர்பு ஆகிய மூன்றும் அழிந்து, எல்லாம் பிரம்மமாகிய ஒன்றே என்ற எண்ணம் வரும் என்றும் கூறுகிருர்.[51]

*4-4-0* திருவள்ளுவரும் வேமனரும் மெய்ப்பொருளே ஒத்துக் கொள்கின்றனர். திருவள்ளுவர் சகுணபிரம்மத்தையே மெய்ப்பொருளாகக் கொள்கிருர்; வேமனர் நிர்குண பிரம்மத்தையே மெய்ப்பொருளாகக் கொள்கிருர். இப்படி இவர்கள் கொள்ளும் மெய்ப்பொருளே உணர்வதற்குக் கூறும் பொதுவழி வகைகளில் இருவரிடையே ஒப்புமை காண முடிகிறது. மெய்ப்பொருளே அறிவதற்கு முதல் படியாகத் தூய உள்ளம் வேண்டும். வள்ளுவர் மனத்துக்கண் மாசில்லாமையே அறம் என்கிருர்.[52] வேமனர் எந்தச் செயலேயும் மனத்தூய்மையோடு செய்ய வேண்டும் என்கிருர்.[53] அறியாமை நீங்கி மெய் யுணர்தலேப் பற்றி வள்ளுவர் பத்துப் பாடல்களில் பேசுகிருர். வேமனரும் மெய்யுணர்தலே ஆங்காங்கு பேசுகிருர். இதுவேயன்றி

மெய்யுணர்தலுக்குத் தேவையான குணங்களைத் துறவறவியலி லுள்ள அருளுடைமை, புலான் மறுத்தல், தவம், கூடாஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னு செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, அவாவறுத்தல் முதலிய அதிகாரங்களில் உணர வைக்கிறார் வள்ளுவர். வேமனரும் இவ்வனைத்துக் குணங்களையும் முறையாகக் கூறுவிடினும், ஆங்காங்கே கூறி உணர வைக்கிறார். மெய்யுணர்தலுக்குத் தேவையான குணங்களில் முன் இயல்களில் சொல்லியவை[54] போக மெய்யுணர்தல், தவம், கூடாஒழுக்கம், கொல்லாமை, நிலையாமை, துறவு, அவாவறுத்தல் முதலிய அதிகாரங்களில் வள்ளுவர் சொல்லும் உண்மைகளோடு வேமனர் சொல்லும் உண்மைகள் ஈண்டு ஒப்பிடப்பட்டுள்ளன.

## மெய்யுணர்தல்

*4-4-0-1* ஒவ்வொருவரின் வாழ்க்கையில் இன்பங்களும் துன்பங்களும் உண்டாவதற்கு அவரவரிடம் இருக்கும் அறியா மையே காரணமாகும். ஒருவரிடத்து அறியாமையும் போலி அறிவும் உள்ளவரையிலும், இல்லாத துன்பமெல்லாம் இருப்பதாகக் கொண்டு, அச்சத்தாலும் கவலையாலும் வருந்த நேர்கிறது. சிறு துன் பத்தையும் போக்கிக்கொள்ள வழியறியாமல் திகைக்க வேண்டி யுள்ளது. எனவே, ஒருவருக்கு நல்வாழ்க்கை அமைய அறியாமை நீங்கவேண்டும்; மெய்யுணர்வு வேண்டும். அந்த மெய்யுணர்வால் மெய்ப்பொருள் எது என்று தெரிந்துகொள்ள வேண்டும். அவனே தத்துவ ஞானியாவான். மெய்ப்பொருள் அல்லாதனவற்றை எல்லாம் மெய்ப்பொருள் என்று உணர்வதே அறியாமையாகும். இதனால் பிறப்பு இறப்பு என்னும் சூழலில் சிக்குகின்றனர். இந்த அறியாமையே மாயையாகும்.

*4-4-0-2* உலகம் முப்பொருள்களின் கூட்டம்; தானே விளங்குகின்ற முற்றறிவுடைய முதல்வனும், உணர்த்த உணரும் சிற்றறிவும், கருவிகளான சுட்டறிவுமுடைய உயிரும், அறிவே இல்லாத மாயையுமே அம் முப்பொருள்களாகும். இவற்றுள் மாயை என்பது இறைவனிடமுள்ள ஒரு சக்தி; இறைவனால் இயக்கப்படுவது. இறைவன் எப்படி உலகத்தோடு தொடர்பு கொண்டு உள்ளானோ, அவ்வாறே மாயையும் இறைவனோடு தொடர்பு கொண்டுள்ளது. இந்த மாயை பொருள்களை உள்ளவாறே அறிவிக்காது மயக்கத்தை உண்டுபண்ணும். ஆன்மாக் களை மருட்டி, இறைவனைச் சாராதவாறு செய்கிறது. இந்த மாயையால் ஆன்மாக்களுக்கு இறப்பும் பிறப்பும் தொடர்ந்து வருகிறது.

*4-4-1-1* இறைவன் மாயையில் சிக்கிக் கிடக்கும் ஆன்மாக்களை விடுவிப்பதற்கான ஏதுக்களை அவ்வப்போது உணர்த்துகிறான். அந்த ஏதுக்களை உணர்ந்து, உயிர்கள் இறையருள் ஒன்றினால்தான் மாயையின் பிடிப்பினின்று தப்ப முடியும். ஆன்மாக்கள், தன்னை உணர்ந்து, தலைவனை நாடும்பொழுது தலைவனாகிய இறைவன் அருளுக்கு ஆளாகின்றன. அருளுக்கு ஆளாகி, பிறவிப் பெருங் கடலைக் கடக்கின்றன.[55]

*4-4-1-2* இங்ஙனம் உலக உயிர்கள் உய்ய இறைவன் செய்யும் செயலைச் சலவைத் தொழிலாளியின் செயலுக்கு ஒப்பிடுகிறார் வேமனர். வண்ணான் அழுக்குத் துணியிலுள்ள அழுக்கை நீக்கித் துணியைத் தூய்மை செய்வது போன்று, இறைவனும் ஆன்மாக்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துகிறான்.[56]

இவ்வாறு அறியாமை நீங்கி மெய்யுணர்வு பெறுதலைப் பற்றி இருவரும் பேசுகின்றனர்.

*4-4-2-1* மயக்க உணர்வாகிய அறியாமை நீங்கி, மாசற்ற மெய்யறிவு பெறவேண்டும். பலவற்றில் ஒன்றையும், மாறுதல்களுக்குள்ளானவற்றில் மாறாததையும். நில்லாதனவற்றுள் நிலை பெற்றதையும் காண்பதே மெய்யறிவாகும், அந்த மெய்யறிவு துன்ப இருளை நீக்கி இன்ப ஒளியைத் தரும்; பிறவியை நீக்கும். பலதலையாய மயக்க உணர்வால் ஏற்படுகின்ற ஐயத்தினின்று நீங்கி வாழ வேண்டும். அவர்களுக்கு வீட்டுலகம் மிக அருகாமையில் இருக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[57]

*4-4-2-2* ஒருவருக்கு மயக்க உணர்வும், மயக்க உணர்வால் ஏற்படும் ஐயமும் நீங்கி, ஞானம் கைவரப் பெற்றால், மனம் அலையாது நிலையாய் இருக்கும். அறிவு நீதியின் கண்ணும், அயலாருக்கு அருள் காட்டுவதின்கண்ணும் நாட்டங்கொள்ளும். எவ்வாறு சூரிய ஒளி உள்ள இடத்து இருள் நீங்குமோ, அது போன்று ஞானமுள்ள இடத்து மயக்க உணர்வு நீங்கும்; மயக்க உணர்வால் வரும் துன்பங்களும் நீங்கும் என்று வேமனர் கூறுகிறார்.[58]

*4-4-3-1* கற்பன கற்று இவ்வுலகத்தில் மெய்ப்பொருளைக் காண வேண்டும். பொருளின் வெளித்தோற்றத்தை உண்மையெனக் கொள்ளாமல் அதன் மெய்ம்மைத் தன்மையைக் காண வேண்டும். துன்பப் பிறவிக்குக் காரணமான அறியாமை நீங்கி, வீட்டு நெறிக்குக் காரணமான செம்பொருளைக் கண்டுணர்வதே மெய்யுணர்வாகும்.

மெய்ம்மைத் தன்மையைக் காணக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்று படிகள் உண்டு. மெய்யறிவை நாடுவோர் ஆசிரியன் ஒருவனை அணுகி உண்மை எது என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்; இது முதல்படியாகும். பின் கேட்டதைச் சிந்திக்க வேண்டும்; இது இரண்டாம் படி. சிந்தித்து அறிவால் தெளிவடைந்து பின் உள்ளுணர்வால் நேரிடையாக உணர்ந்து புதுவாழ்வை அடைய வேண்டும்; இது மூன்றும் படி. இவ்வாறு மெய்யுணர்வு பெற, துன்ப வாழ்க்கையில் மீண்டும் புகாத நன்னெறியை அடையலாம். மெய்ப்பொருளை வேறுபடுத்தி உணர இயலாத மருளாகிய காரணத்தால்தான் மீண்டும் மீண்டும் பிறப்புத் தோன்றுகிறது. இந்தப் பிறப்பை அறிவுபெறாத இளமை நிலையாக நினைக்கிறார் வள்ளுவர். அந்நிலை நீங்கி, முதிர்ச்சி ஏற்பட்டுச் சிறப்புநிலை வரும்போது, மயக்கம் ஒழிந்து தெளிவு பிறக்க, பிறப்பு நீங்குகிறது என்பது வள்ளுவர் கொள்கை.[59]

*4-4-3-2* அறியாமை உள்ளவன் மீண்டும் மீண்டும் பிறந்து துன்ப இருளில் துன்புறுவான். துன்ப இருளிலிருந்து நீங்கி நன்னெறியை அடைய வேண்டுமானால், அறியாமை நீங்கி ஞானம் பெற வேண்டும். ஞானம் பெற்றுப் பிரம்ம பதவியைப் பெற வேண்டும் என்று வேமனரும் அறிவுறுத்துகிறார். மற்றும் வாழ்ந்த காலமெல்லாம் விருப்பம்போல் நடந்து ஞானம் பெறாது மாயை என்னும் அறியாமையில் சிக்கியுள்ளவர்களுக்கு எங்ஙனம் முக்தி கிடைக்கும் எனவும் வினவுகிறார் வேமனர்.[60]

*4-4-4* எனவே, இவ்வுலகில் மனிதன் அடையும் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான விருப்பு, வெறுப்பு, மயக்கம் ஆகிய மூன்றுமே கெடுமாறு வாழவேண்டும். இவ்வாறு வாழ ஒருவன் உடலோடு இருக்கும் பொழுதே விடுதலையைப் பெற்றவனாகிறான்; அதாவது 'ஜீவன் முக்தனா'கிறான் என்னும் கொள்கையை இருவரும் எடுத்தியம்புகின்றனர்.

## தவம்

*4-5-0* மனம் பொறிகளின்வழி செல்லாது நிற்றற்பொருட்டு, நியமங்களை மேற்கொள்ளுதலே தவம் ஆகும். மெய்யுணர்தலுக்கு மனம் பொறிவழி போகாத தவநிலை வேண்டும்.

*4-5-1-1* ஒருவன் தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும், மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலு

மாகிய நியமத்தை மேற்கொள்ள வேண்டும். அப்படி நியமத்தை மேற்கொள்ளும்போது, துன்பம் மேலும்மேலும் வந்து வருத்தினு லும் பொறுத்திருக்க வேண்டும்; அவ்வாறு பொறுத்திருக்கச் சுடச்சுட ஒளிவிடும் பொன்போல அவர்களின் தவமும் சிறந்து விளங்கும் என்று வள்ளுவர் கூறுகிருர்.[61]

*4-5-12* கோபதாபமின்றிப் பொறுமையும், அமைதியான மனமும் தவம் மேற்கொள்வோருக்குத் தேவையானவை. அவர் களே உண்மையான யோகிகள் ஆவர். அவர்கள் மெய்ப்பொருளே எளிமையாய் உணர்வார்கள். தவம் இருந்தால் மட்டும் போதாது. தவம் மேற்கொள்ளும் ஞானி எத்தகைய துன்பம் வந்தாலும். அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிருர்[62] வேமனர். ஆன்ம தத்துவத்தைத் தெரிந்துகொள்ள இது முதல் நெறியாகும். வேமனர் அத்துவைதக் கொள்கையராகையால், தன் உடலாகிய காட்டில் இருந்து தியானம் செய்ய ஆன்மதத்துவம் (மெய்ப்பொருள்) தெரியும்; மெய்ப்பொருள் அறிவதற்காகக் கானகத்திற்குச் சென்று துன்பப்பட வேண்டிய அவசியமில்லே[63] என்று, மெய்ப்பொருளே அறிவதற்குரிய இரண்டாம் நெறியையும் கூறுகிருர்.

## கூடா ஒழுக்கம்

*4-6-1-1* தவ ஒழுக்கம் உடையவர்களுக்கே தவக்கோலம் பொருந்தும். நெஞ்சில் துறவாது, தீய ஒழுக்கம் உடையவர்கள் தவக்கோலத்தைக் கொண்டு வாழ்வது குற்றம். மிகுதியாகத் தீங்கு செய்வதற்காகத் தவக்கோலத்தைப் பயன்படுத்துவதும் குற்றமா கும். இத்தகைய வஞ்சம் பொருந்திய மனத்தானுடைய பொய் யொழுக்கம் புறத்தாருக்குத் தெரியாவிட்டாலும், அவன் உடம்பிலுள்ள பூதங்கள் அறியும்; அறிந்து அகத்தே சிரிக்கும்.[64] தம் மனத்து மாசு நீக்காது, தவத்தால் மாட்சி பெற்றவர்போலப் புறவேடங்கொண்டு தம் குற்றங்களே மறைத்து வாழ்வோர் பலர் உலகத்தில் இருக்கிருர்கள்.[65] ஒழுக்கம் உடையவர்கள் தவத்திற் கென்று தனிக்கோலம் கொண்டு தலேமயிரை மழித்தலும், (சடையாக்கி) நீட்டலும் தேவை இல்லே. உலகம் பழிக்கும் குற்றத்தை அவர்கள் செய்யாமல் விட்டு வாழ்ந்தால் அதுவே போதும். இதுவே 'மெய்ப்பொருள்' அறிவதற்கு நெறியாகும்;[66] என்றிவ்வாருக வள்ளுவர் கூறுகிருர்.

*4-6-1-2* மனத்தைக் கட்டுப்படுத்தாது, உடலேவருத்தித் தீவிர தவம் செய்வோர் 'மெய்ப்பொருளே' உணரார்; அன்னுர் உலகத்

துக்குக் குற்றம் செய்தவர்களாகவே கருதப்படுவார்கள். ஆன்மத் தூய்மையற்ற வெளி ஆசாரங்களால் பயனொன்றுமில்லை[67] என்றும், யோகிகளாகப் போலிவேடந்தாங்கி வேடத்திற்கேற்றவாறு பேச வேண்டியதில்லை; தலைமயிரை மழித்தலும், சடையாக்கி நீட்டலும் தேவை இல்லை; தலைமயிரை மழித்த அளவில் மனமாசு நீங்காது; யோகிகளுக்கு மனத்தூய்மையே தேவையானது; இதுவே மெய்ப் பொருளை அறிவதற்கு எளிய வழியாகும்; அப்பொழுதே தன்னுள் இருக்கும் இறைவனை (பிரம்மத்தை) மெய்ப்பொருள் என்று உணர முடியும்[68] என்று வேமனரும் கூறுகிறார்.

## கொல்லாமை

*4-7-1-1* ஓர் உயிர் துன்பம் உறுமாறு இன்னா செய்வது தீது; அதுபோலவே உயிர்க்கொலை செய்தலும் தீது. எனவே கொல்வது பாவச்செயலைத் தரும். கொல்லாமையே அறமாகும்.[69] கொல்லுதலை அறவே ஒழிக்க வேண்டுமென்றால் கொலைக்குக் காரணமாகிய வறுமை நீங்க வேண்டும். வறுமை நீங்க வேண்டுமானால் பிற உயிர்களையும் தம் உயிர்போல் கருதிப் பகுத்துண்ணும் பண்பு வேண்டும். இதுவே அறங்களில் எல்லாம் தலையாய அறமாகும்.[70] பிற உயிர்களை அருளின்றிக் கொலை செய்வோர், மறுபிறவியில் கண்ணால் பார்ப்பதற்கும் பொறுத்துக் கொள்ள இயலாத நோயுடம்பைப் பெற்று, வறுமையை அடைந்து, இழிதொழில் வாழ்க்கையினைப் பெறுவர். இத்தகையோர் மெய்ப்பொருளை உணர முடியாது என்பார் வள்ளுவர்.[71]

*4-7-1-2* ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனை இன்னோர் உயிருக்கு விருந்தாக வைப்பதால் தீமையேயன்றிப் பயனொன்று மில்லை. எனவே கொல்லுதல் தீயது. கொல்லுதலால் எப்பொழுதும் பரமபதவியை அடைய முடியாது.[72] பிற உயிர்களையும் தம் உயிர்கள் போல் எண்ணும் நிலை வேண்டும்.[73] பறவைகளையும் தம் உயிர்க்கு இணையாகக் கருதும் அன்புள்ளம் வேண்டும்.[74] வாயில்லாத, பிறரை எதிர்க்க முடியாத உயிர்களைக் கொலை செய்வோரைக் காலன் தக்கவாறு ஒறுப்பான்.[75] இத்தன்மையால் மெய்ப்பொருளை உணர முடியாது. இவ்விடத்தும் தன் அத்துவைதக் கொள்கையை நிலை நாட்டுகிறார் வேமனர். உயிரே சிவன் (பிரம்மம்); உயிரைக் கொல்லுதல் பிரம்மாவைக் கொல்லுதல் போன்றதாகும் என்பது வேமனர் கொள்கை.[76]

## நிலையாமை

*4-8-0-1* வாழும் உலகம் நிலையானதன்று; உடல் நிலையானதன்று; உயிர் நிலையானதன்று; செல்வம் நிலையானதன்று என்று அவற்றின் நிலையாமையைப் பற்றி அறிதல் வேண்டும். அறிந்து கொண்டால் உடல் அழிவிற்காகவும் செல்வ அழிவிற்காகவும் மனக்கலக்கம் ஏற்படாது. அஞ்சாமல் நின்று, சோர்வற்று வாழ்க்கையை நடத்திச் செல்லலாம்.

*4-8-0-2* வள்ளுவர் நிலையாமை அதிகாரத்தில், முதல்பாடலால் பொதுப்பட நிலையாமையைப் பற்றிப் பேசுகிறார். இரண்டு மூன்று பாடல்களில் பொருள் நிலையாமையைப் பற்றிப் பேசுகிறார். ஐந்தாம் பாடலில் நிலையானதை உணர்ந்து செய்ய வேண்டியதை உணர்த்துகிறார். மற்றப் பாடல்களால் உடல் நிலையாமை, உயிர் நிலையாமையைப் பற்றித் தெரிவிக்கிறார்.

*4-8-0-3* வேவனரும் பொருள் நிலையாமையைப் பற்றியும், உடல், உயிர் நிலையாமையைப் பற்றியும் பேசுகிறார். நிலையானதை உணர்ந்து செய்ய வேண்டியதையும் உணர்த்துகிறார்.

## பொருள் நிலையாமை

*4-8-1-1* பொருள் நிலையற்றது. பொருள் சேரும்பொழுது மெல்ல மெல்லச் சேரும். சேர்ந்த பொருள் அப்படியே ஒருவனிடம் நிலைத்து நிற்காது. கூத்தாடும் இடத்தில் மெல்லமெல்லக் கூட்டம் வந்து சேர்தலைப் போன்றது பொருள் சேர்தல். கூத்தாட்டு முடிந்ததும் அந்தக் கூட்டம் ஒருசேரக் கலைந்து போவதைப் போன்று, அழியும் நேரம் வந்ததும் செல்வமும் சொல்லாமல் ஒருசேர அழியும். எனவே செல்வம் சேரும்பொழுதே அதனை நல்வழிக்குப் பயன்படுத்த வேண்டும். அந்தச் செல்வத்தைக் கொண்டு நிலையான அறச்செயல்களை அப்பொழுது செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் கொள்கை.[77]

*4-8-1-2* வேமனரும் இந்தப் பொருள் நிலையாமையைப் பற்றிப் பல பாடல்களில் பேசுகிறார்.[78] போகபாக்கியங்கள் கனவில் தோன்றும் வளத்தைப் போன்றன.[79] வள்ளுவர் கூத்தாட்டு அவை நீங்குதலைப்போன்று பொருள் அழியும் என்று கூறுகிறார். வேமனர் கனவில் தோன்றும் பொருள் அழிதலைப் போன்று செல்வம் அழியும் என்று கூறுகிறார். இங்ஙனம் பொருள் நிலைக்காது அழியும் என்று சொன்னாலும், பொருள் உள்ளபொழுது

யார் அதனைப் பிறருக்கு உதவித் தக்க வழியில் பயன்படுத்துகிறார்களோ அவர்களிடமிருந்து பொருள் நீங்காது என்று, பொருள் நிலைத்திருப்பதற்கும் வழியைக் காட்டுகிறார் வேமனர்.[80] எனவே பொருள் ஒருவனிடம் இருப்பதும் போவதும் அவனுடைய விருப்பத்தைப் பற்றியதன்று; அவனின் வினையைப் பொறுத்தது; எப்பொழுது நீங்கும் என்பதும் யாருக்கும் தெரியாது.[81] ஆகவே ஒருவன் தன்னிடம் பொருள்வளம் இருப்பினும், செருக்குக் கொள்ளலாகாது.[82] பொருள் இருக்கும்பொழுதே பிறருக்கு உதவி செய்ய, அதனால் தானும் பயன் பெறலாம்; பிறரும் பயன் அடைவர்; தான் செய்யும் ஈகையே நிலையானது; இறக்கும் பொழுது உடன்வருவதும் அதுவே; மற்ற எதுவும் உடன் வராது[83] என்று, இவ்வாறாக மிக விளக்கமாகக் கூறுகிறார் வேமனர்.

## உடல் நிலையாமை

*4-8-2-1* இந்த உடல் நிலையற்றது. இந்த உலகைவிட்டு உடல் எப்பொழுது நீங்கும் என்பதும் யாருக்கும் தெரியாது. 'நெருநல் உள்ள ஒருவன் இன்றில்லை' என்னும் பெருமையை இந்த உலகம் உடைத்து. உலக உயிர்களுக்குச் சாக்காடு உறங்குவது போன்றதாகும்; உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. காலம் வரும்பொழுது உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடும். ஆகையால் இந்த உலகத்திலுள்ள பொழுதே செய்யத்தக்க நல்வினையைச் செய்ய வேண்டும். தூங்குவதற்கு முன்னே கடமையைச் செய்து முடிப்பது போன்று, வாழ்வு உள்ள பொழுதே அறத்தைப் போற்றி உயர வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.[84]

*4-8-2-2* இறப்பும் பிறப்பும் எல்லோருக்கும் உண்டு. உயர்ந்த குடும்பத்தில் பிறந்தோரையும் இறப்பு விடாது. சக்கரம் சுழல்வது போன்று இறப்பும் பிறப்பும் மாறிமாறி வரும். எனவே, இருக்கும் பொழுதே தக்கன செய்யவேண்டும்; நிலையான பரதத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.[85] நாக்கு அடங்கி விக்குள் வாராமுன் நல்வினையைச் செய்ய வேண்டும்[86] என்று வள்ளுவர் அறிவுறுத்துவது போன்று வேமனரும் அறிவுறுத்துகிறார். சொல்லாடல் நின்று, கண்கள் மூடுதலைச் செய்து, உடல் உணர்ச்சியிழந்து, எல்லாவற்றையும் மறக்கும் நிலையில், இறைவா! உன்னை அறிதல் இயலாது; ஆகையால் அதற்கு முன்னே உன்னை அறியும் பேற்றைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார் வேமனர்.[87] பிறரையும் இவ்வாறு இறைவனை வேண்டிக் கேட்கும்படி அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு இந்த உயிர் வாழ்க்கை நிலையற்றது என்றும், அதனை அறிந்து தக்கன செய்ய வேண்டும் என்றும், நிலையான பரதத்து வத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும், பல இடங்களில் வற்புறுத்தி உணர்த்துகிறார் வேமனர்.[88] நில்லாதவற்றை நிலையுடையனவாகக் கருதுவோரைப் புல்லறிவாளர் என்று வள்ளுவர் வேமனர் இருவரும் பழித்துக் கூறுகின்றனர்.[89]

## துறவு

*4-9-0* அருளுணர்வு மிகுந்து தன்னலம் தேய்ந்து வாழ்க்கையில் பற்றெல்லாம் அற்று விளங்கும் நிலையே, அதாவது புறமாகிய செல்வத்தின் கண்ணும் சார்பான யாக்கையிடத்தும் உளதாம் பற்றினை அவற்றது நிலையாமை நோக்கி விடுதலே, 'துறவு' நிலையாகும்.

*4-9-1-1* இந்த வாழ்க்கையில் பற்றற்ற துறவு வாழ்க்கையை மேற்கொள்ள அதனாற் கைகூடும் இன்பங்கள் பல உண்டு. பற்றற்ற துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமானால் ஐந்து புலன்களையும் தன்வயப்படுத்தி வெல்லவேண்டும்; புலன்கள் விரும்பும் இன்பங்களை ஒருங்கே விடவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[90]

*4-9-1-2* மனம் போகும்வழி புலன்களும் போகும். ஆகையால் புலன்களுக்கு அடிமையாகாமல் மனத்தைக் கட்டுப்படுத்தி இறைவனை நினைப்பதை மட்டும் மனம் செய்ய வேண்டும். அப்பொழுது புலன்கள் எல்லாம் இறைவனோடு இணைந்து விடும் என்றும் கூறுகிறார்.[91] இங்ஙனம் புலன்களுக்கு அடிமையாகாமல் மனத்தை அடக்கி, தூயமனத்துடன் இறைவனை நினைத்தலே உண்மையான துறவு நிலையாகும் என்று வேமனர் பல இடங்களில் பேசுகிறார்.[92]

*4-9-2-1* பற்றற்றுத் தவம் செய்வோர் தமக்கென்று ஒரு பொருளையும் கொள்ளாமல் வாழ்தல் வேண்டும். அப்பொழுதே பிறவித் துன்பத்தைப் போக்க முடியும்; பிறவித் துன்பத்தைப் போக்க முனைந்தவர்களுக்குத் தம் உடம்பும் மிகையாகும் என்பது வள்ளுவர் கொள்கை.[93]

*4-9-2-2* இவ்வாறு தமக்கென்று ஒரு பொருளையும் கொள்ள லாகாது என்று வள்ளுவர் சொல்வது போலவே வேமனரும் கூறுகிறார்; மனைவி மக்களையும் தமக்கென்று கொள்ளலாகாது என்று சுட்டிக் காட்டுகிறார்.[9]

*4-9-3-1* தன் உடம்பைத் தான் என்று உணர்வதும் பொருளுக்கும் அந்த உடம்பிற்கும் இடையே தொடர்பு கொள்வதும் உண்மையன்று; அது ஒரு மயக்கமாகும். இந்த மயக்கம் நீங்கி வாழ்பவர் வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை அடைவர் என்று வள்ளுவர் கூறுகிறார்.[95]

*4-9-3-2* வேமனரும், 'இது என்னுடையது; அது உன்னுடையது' என்று பாராட்டுதல் மயக்கமாகும் என்றும், எல்லாம் இறைவன் மயம் என்று கொள்வதே முக்திக்கு வழி காட்டும்' என்றும் கூறுகிறார்.[96]

*4-9-4-1* பிறவித் துன்பத்தினின்றும் நீங்க வேண்டுமானால் அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் நீக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.[97]

*4-9-4-2* அகப்பற்று புறப்பற்று நீக்கி மேற்கொள்ளும் யோகத்தை மேற்கொள்ளாதவர்கள் பரத்தை அறிய முடியாது; மேலும் பிறவித்துன்பத்தில் அவதிப்படுவர்'' என்று வேமனர் கூறுகிறார்.[98]

*4-9-5-1* ''ஏதாவது ஒன்றைப் பற்றிநிற்பதே உயிரின் இயல்பாகும்; இறைவன் எந்தப் பற்றும் அற்றவன்; எந்தப் பற்றும் அற்ற அந்த இறைவனைப் பற்றுதல் மற்ற எல்லாப் பற்றையும் விட ஏதுவாகும்' என்பது வள்ளுவரின் திண்ணமான எண்ணம்.[99]

*4-9-5-2* "ஆசையும் மோகமும் பாசங்களாகும். இந்தப் பாசம் நீங்க வேண்டுமானால் மனம் ஒன்றைப் பற்றி இருக்க வேண்டும். அந்த ஒன்றே இறைவனாகும். இறைவனைப் பற்றி நிற்க மற்ற எல்லாப் பாசங்களையும் மனம் பற்றாது விட்டுவிடும்'' என்பது வேமனரின் கருத்தாகும்.[100] இவ்வாறு துறவு மேற்கொள்வதால் வரும் பயனைப் பற்றியும் பல பாடல்களில் பேசுகிறார் வேமனர்.[101]

## அவா அறுத்தல்

*4-10-0* பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு அவா அற்ற நிலைமை இயல்பாகி வரும். இப்படி இயல்பாய் ஒரு பொருளையும் விரும்பாத நிலையே சிறந்த செல்வமாகும்.

*4-10-1-1* இந்த இயல்பு இல்லாது அவாக் கொண்டிருத்தல், எல்லா உயிர்களுக்கும் எக்காலத்துக்கும் அழியாத பிறப்பினை விளைவிக்கும் வித்தாக அமையும் என்பது வள்ளுவர் கருத்து.[102] எல்லாவற்றிலும் அவா இல்லாதவர்களே பற்றற்றவர்களாகக் கருதப்படுவர். அவா என்பது ஒருவனை வஞ்சித்துத் துன்ப வாழ்க்கையில் செலுத்தும்; ஆகையால் அதற்கு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்வதே கடமையாகும். அவா இல்லையென்றால் யாருக்கும் எவ்விதத் துன்பமும் இல்லை. அவா இருப்பின் துன்பம் மேன்மேலும் வந்து கொண்டிருக்கும். எனவே 'என்றும் மாறாத அமைதியான வாழ்க்கை வாய்க்க, எப்பொழுதும் அவாவை நீக்கி வாழவேண்டும்' என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.[103]

*4-10-1-2* மனைவி, மக்கள், செல்வம் ஆகிய மூன்றின்மேல் ஆசை விட்டவர்களே முக்தியை அடைவார்கள்; அதாவது பிறவித் துன்பத்தினின்றும் விடுதலையைப் பெறுவார்கள். இந்த மூன்று ஆசைகளையும் விடாதவர்கள் மோகத்தில் மூழ்கி முக்தியை அடைய மாட்டார்கள். பொருள்மேல் ஆசைகொண்டு அதற்கு அடிமை யாதலே பிறவிக்குக் காரணமாகும். இப்படித் தனக்கு எப்பொழுதும் போகபாக்கியங்கள் இருக்க வேண்டும் என்று மனிதன் ஆசை கொள்ளுதலால், அவனுக்கு வருவது துன்பமே தவிர நன்மை இல்லை. மனத்தைக் கட்டுப்படுத்தி, ஆசைகளுக்கு அடிமையாகாமல், பரமாத்மாவை நினைத்தலே முக்திக்கு வழி யாகும்[104] என்கிறார் வேமனர். இவ்வாறே பல இடங்களில் அவா அறுத்தலைப் பற்றி பேசுகிறார் வேமனர்.[105]

**ஊழ்**

*4-11-0* மனிதன் தான் அறிந்து சில ஒழுங்கு முறைகளை மேற்கொண்டு வாழ்கிறான். தான் அறியாமலே சில ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டும் வாழ்கிறான். இதனால்தான் ஒருவன் தன் எதிர்காலத்தில் எப்பொழுது என்ன நடக்கும் என்பதை அறியாமல் இருக்கிறான். மனிதன், தான் அறியாமலே சில ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்தலே 'ஊழ்' என்று சொல்லப் படுகிறது.

*4-11-0-1* மக்களின் வாழ்க்கையில் நிகழும் எழுச்சி, வீழ்ச்சி, உயர்வு, தாழ்வு, இன்பம், துன்பம் முதலிய அனைத்தும் ஊழால் அமைவனவே. இந்த ஊழை வள்ளுவரும் வேமனரும் நம்புகின்றனர்.

*4-11-1-1* 'நன்மை தோன்றுவதற்குக் காரணமாக ஊழ் நிற்கும்போது அது ஆகூழ் ஆகும்; அப்பொழுது முயற்சி மிகுதியாகும். நன்மை இழப்பதற்குக் காரணமாக ஊழ் நிற்கும் போது அது போகூழ் ஆகும்; அப்பொழுது சோம்பல் மிகும். ஒருவனின் நுண்ணறிவுக்குக் காரணமாய் இருப்பதும் ஊழே ஆகும். ஒருவன் நுட்பமான பலவற்றையும் கற்றாலும் அவனுக்கு ஊழால் உள்ளதாகிய அறிவே முன்னிற்கும்' என்று வள்ளுவர் பேசுகிறார்.[106]

*4-11-1-2* வேமனரும், ஒருவன் ஞானம் பெறுவதற்கு இறைவன் ஆணையே காரணம் என்றும், இறைவனின் ஆணையிருந்தால் ஒருவன் ஞானத்தை எளிமையாக அடையலாம் என்றும் கூறுகிறார்.[107]

*4-11-2-1* ஊழால் உரிமையல்லாப் பொருள்களை எவ்வளவு வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாமற் போகும்; ஊழால் தமக்கு உரிய பொருள்களை எங்காவது கொண்டுபோய்ச் சொரிந்தாலும் தம்மைவிட்டுப் போகாமல் நிற்கும்.[107] கோடி பொருள்களைச் சேர்த்திருப்பினும் ஊழின் அமைப்புக்கு ஏற்றபடியே நுகர முடிகிறது.[109] ஆயின், முயன்றால் அறிவால் நுகரக்கூடியவற்றை நுகர வாய்ப்புண்டு என்று வள்ளுவர் கூறுகிறார்.

எனவே ஊழின் துணை செல்வம் சேர்ப்பதற்கும், செல்வத்தை நுகர்வதற்கும் மிகவும் தேவை என்று இப்பாடல்களால் வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆயின் அறிவு வளர்ச்சிக்கு ஊழின் துணை வேண்டும் என்றோ, நல்லறிவும் நல்லொழுக்கமும் அமைவது ஊழாலேயே ஆகும் என்றோ வள்ளுவர் கூறவில்லை; ஆகவே, நல்லறிவு அமைவதும் நல்லொழுக்கம் கொள்வதும் மனிதன் முயற்சியால் ஆகும் என்ற கருத்தை இதனால் அறியலாம்.

*4-11-2-2* ஒருவன் செல்வந்தனாய் இருப்பதற்கும் மற்றொருவன் வறியனாய் இருப்பதற்கும் காரணம் விதியே ஆகும். பொருள் சேரும் விதி ஒருவனுக்கு இல்லை என்றால் எவ்வளவுதான் முயன்றாலும் செல்வத்தைச் சேர்க்க முடியாது. இறைவனாலும் விதிக்கு மாறி ஒருவனுக்கு செல்வத்தைக் கொடுக்க முடியாது. எனவே செல்வத்தைக் கொடுக்கவில்லை என்று இறைவனைப் பழிப்பதாலும் ஒரு பயனுமில்லை என்று வேமனர் கூறுகிறார்.[110]

*4-11-3-1* 'நன்னெறியால் நன்மையும், தீநெறியால் தீமையும் ஊழ்வினையே செய்யும். ஊழை விட வலிமை வாய்ந்தவை ஏவையும் இல்லை; அதைக் கடந்துபோக முயன்று வேறொரு

வழியைத் தேடினுலும் அப்போதும் அதுவே முன்வந்து ஆட்சி புரியும். ஆகவே அதன் ஆட்சி வலிமையை உணர்ந்து அற நெறியைப் போற்றி வாழ்வதே கடமையாகும்' என்று, முடிவாக வள்ளுவர் கூறுகிருர்.[111]

*4-11-3-2* ஊழ் வலிமை வாய்ந்தது; நம் விருப்பம்போல் ஊழ் நடவாது; ஊழின்படி நன்மையும் தீமையும் வந்தே தீரும். பிரம்மா, விட்டுணு முதலிய தேவர்களையும் முனிவர்களையும் ஊழ் விடாது தொடர்ந்தே வரும். அவர்களும் ஊழினின்று தப்பித்துக் கொள்ள முடியாது. அப்படி இருக்க மக்களால் எப்படி ஊழினின்று தப்பித்துக் கொள்ள முடியும் என்று வினவுகிருர் வேமனர். அறிவில் சிறந்த தருமரும் ஊழின் வலியால் கானகத்தை அடைந்ததையும் சுட்டிக் காட்டுகிருர். ஒருவனுக்குக் குணமுள்ள மனைவி வாய்ப்பதும், ஒருத்திக்கு ஒழுக்கமுடைய கணவன் வாய்ப்பதும், அவர்களுக்கு ஏற்படும் பிள்ளைப் பேறும் ஊழாலேயே அமைகின்றன. ஒருவன் தனக்குத் தீமை வரும்பொழுது, தன்னைப் பழித்துக் கொள்வதால் பயனென்றுமில்லை; அந்தத் தீமை ஊழாலேயே அமைந்தது என்று உணர வேண்டும்; அந்தத் தீமையைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்; அப்படிச் செய்யாதவன் கயவனுவான். எனவே ஊழின் வலியை உணர்ந்து அற நெறியை மேற்கொண்டு நல்லூழுக்கு விதை கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிருர் வேமனர்.[112]

*4-11-4-0* ஊழினும் வலிது வேறென்றில்லை என்பது வள்ளுவர் வேமனர் கருத்தாயின், உலகச் செயல்களில் மானிடனின் முயற்சி வீண்தானே என்ற ஐயம் எழுதல் இயல்பே. 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் வாக்கிற்கும் இடமில்லாமல் போகும். எனவே இதைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது.

*4-11-4-1* மக்களின் முதன்முதல் தோற்றம் விதியின் விளையாட்டின்றி இறைப்பொருளால் இறைவனின் திட்டப்படி உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும்; அவர்களின் அடுத்த பிறவியின் வாழ்வமைப்புக்கு அவர்களின் முதற்பிறவி வாழ்வையே விளைநிலமாக அமைத்திருக்க வேண்டும் இறைவன்; எனவே அவர்களின் முதல்பிறவியின் வினைக்கேற்றவாறு அடுத்த பிறவி அமையும்; செய்வது நல்வினையாயின் நல்லூழ் அமையும்; தீவினையாயின் தீய ஊழ் அமையும். ஆகவே இப்பிறவியில் கொள்ளும் முயற்சியாகிய திருவினை அடுத்த பிறவியில் நலமாய் வாழ்வு அமையக் காரணமாய் இருக்கவேண்டும் என்பதே இருவரின் கொள்கையுமாகும்.

## முடிவு

*4-12-1* காலத்தால் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு இடைவெளிப்பட்ட இருவேறு ஞானிகளும் அடிப்படை ஆன்மிகப் பொதுநோக்கு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்னும் கருத்தொற்றுமை உடையவ ராகத் தோன்றுகின்றனர். அவர்கள் போதித்துள்ள அறவுரை கள் யாவும், மனிதகுலம் அறியாமை இருளிலிருந்து விடுபட்டு அறிவொளி பெறத் தூண்டுகின்றன; பிறவிக்கடலினின்று கரை யேறிப் பேரின்பப் பெருவாழ்வை அடைவதற்கு வழிகாட்டுகின்றன. இவ்வகையில் இவ்விரு சான்றோரும் சமய மெய்ப்பொருளியல் சிந்தனைகளில் ஒத்த இயல்புடையவராக உள்ளனர். எனினும், திருவள்ளுவரை ஒரு பொதுச் சமயவாதி என்று சொல்லும் அளவுக்கு வேமனரைச் சொல்லுவதற்கில்லை; வேமனர் முற்பகுதி வாழ்வில் வீரசைவராகவும், பிற்பகுதி வாழ்வில் 'அத்துவைத' மதத்தவராகவும் திகழ்கிறார்.

*4-12-2* ஆயினும், இவர்கள் மனிதனின் ஆன்மிகக் கடைத் தேற்றத்திற்கு வழிகாட்டும் முறைகள் வெவ்வேறாக அமைந் துள்ளதைக் காண்கிறோம். வேமனருக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட திருவள்ளுவரிடத்துப் பிற்கால இந்தியத் தத்துவ ஞானத்தின் சாயல்களைக் காண இயலவில்லை. 'உலகம் நிலை யில்லாதது', 'உலகம் ஒரு மாயை' என்னும் கொள்கைக்கு அவர் உடன்படவில்லை. "வாழ்க்கை வளமாக, நலமாக, சிறப்பாக வாழ்வதற்கே" என்னும் கோட்பாட்டில் உறுதியுடையவராக விளங்குகிறார். அவர் போற்றும் சமயம் 'பொய்தீர்' ஒழுக்க நெறியே ஆகும். ஆன்மா மும்மலங்களால் மாசு அடைவதி லிருந்து, இறைவன் திருவருளால் அறிவொளி பெற வேண்டும். அப்பொழுது அறு சிறப்பென்னும் செம்பொருள் இயல்பினைக் கண்டறிய இயலும். அந்தச் செம்பொருளாகிய மெய்ப்பொருள் தோற்றமும், அழிவும், மாற்றமும் இல்லாத பரம்பொருள். எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமாக விளங்குவது அதுவே என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

*4-12-3* இதற்குமேல் அந்த மெய்ப்பொருளை, உயர்திணை, ஆண்பால், ஒருமை நிலையில் இறைவனாக வள்ளுவர் உருவகித்துக் காட்டுகிறார். "ஆன்மாக்கள், காமம், வெகுளி, மயக்கம் அற்று, மாசறு காட்சியைப் பெறுமானால், பற்றற்றான் பற்றினைப் பற்றி, முழுமுதற் கடவுளுடைய திருவடிகளை அடைக்கலமாக அடைந்து, பேரா இயற்கைப் பெருவாழ்வினை எய்தி இன்புறும்" என்பது

திருவள்ளுவரின் கடவுள் கொள்கையாகும். இதில் சித்தாந்த நெறியின் மூலத்தை காண்கிறோம்.

4-12-4 வேமனரை நாடு ஒரு சித்தராகவே போற்றி வருகிறது. சித்தர்கள் உருவ வழிபாட்டை அடிப்படையாய்க் கொண்ட பக்தி நெறிக்கு முதலிடம் தருவதில்லை. அவர்கள் யோகநெறியின் மூலம் இறைவனை அடைவதற்குப் பல்லாற்றானும் முயன்றுள்ளனர். வேமனருடைய பாடல்களி லிருந்து அவர் தலைசிறந்த ஒரு யோகி என்பது புலனாகிறது. யோகநெறியில் ஈடுபட்ட வேமனர் தம் அறவுரைகளை ஆதி சங்கரரின் அத்துவைதக் கோட்பாட்டில் குழைத்துத் தந்துள்ளதை மேலே கண்டோம். சீவான்மா ஞானஒளி பெற்று, மாயை இருளிலிருந்து விடுபட்டு, பரமான்மாவாகிய பிரம்மத்தில் கலக்கும் நிலையையே வீடுபேறாக வேமனர் போற்றுகிறார். திருவள்ளுவர் இறைவன் அடிசேர்தலையே மனித வாழ்க்கையின் முடிவான இலட்சியமாக அறிவுறுத்துகிறார்.

இவ்விரு அறிஞர்களின் சிந்தனைகளை எல்லாம் தொகைவகைப் படுத்திப் பார்க்கின்றபொழுது இருவரும் மெய்ப்பொருள் கண்ட தத்துவ ஞானிகள் என்பது எளிதில் புலனாகிறது. ஆனால் திருவள்ளுவர் பக்திநெறிப்பட்ட சித்தாந்த சிந்தனையாளராகத் தோன்றுகிறார்; வேமனரோ யோகநெறியைப் போற்றும் அத்து வைதியாகக் காட்சி தருகிறார்.

## குறிப்பெண் விளக்கம்

1. இச்செய்திகள் சமயம் என்ற தலைப்பில் கலைக்களஞ் சியத்தில் உண்டு. பக். 452.

2. மறைமலை அடிகள், தமிழர் மதம், பக். 19.

3. மறைமலை அடிகள், தமிழர் மதம், பக். 20.

4. அறுவகைச் சமயம், பக். 6

5. தொல். பொருள். சூ. 5.

6. பத்துப்பாட்டு - மதுரைக் காஞ்சி, வரி : 453-488.

7. திருவாசகம், போற்றித் திருவகவல், வரி : 52-54.

8. குறள் 10, 62, 107, 126, 349, 351, 356, 358, 361, 362, 529, 538.

9. குறள் 1, 2, 8, 9, 84.

10. தெய்வநாயகம், திருவள்ளுவர் கிறுத்துவரா? பக்.166

11. திரு. வ. மா. 9.

12. கல்லாடம் 14.

13. வே. ப. ர. 100, 127, 188, 193, 198, 458, 902,1119, 1354, 1568, 1598, 1675, 1705, 1761, 1788.

14. சித்தர் என்போர் சமயக் கொள்கைகளுக்கு அப்பாற் பட்டவர்கள். சமய சமத்துவக் கொள்கை உடையவர்கள்.

15. வே. ப. ர. 1568.

16. *Venkateswara Sastrulu, Vemana (Introduction)*, P. 106.

17. வே. ப. ர. 769.

18. வே. ப. ர. 200, 206, 213, 218.

19. கலைக் களஞ்சியம்.

20. *Lewiswhi te Beck, Philosophic enquiry, P. 4.*

21. *Encyclopedia Britannica, Vol. 17.*

22. *Swami Vivekananda, What Religion, is? P. 18.*

23. லட்சுமணன், இந்திய தத்துவ ஞானம், பக். 5.

24. குறள் 1.

25. குறள் 2.

26. குறள் 3.

27. குறள் 3 - பரிமேலழகர் உரை.

28. குறள் 4.

29. குறள் 5,

30. திருக்குறள் 9, பரிமேலழகர் உரை,

31. குறள் 50.

32. குறள் 339.

33. குறள் 355, 356.

34. குறள் 358.

35. வே. ப. ர. 1281, 1554.

36. வே. ப. ர. 1339.

37. வே. ப. ர. 1338.

38. வே. ப, ர. 1696.

39. *Radhakrishnan, S.: Indian Philosophy, Vol. 1, P. 505.*

40. வே. ப. ர. 597.

41. வே. ப. ர. 1631.

42. வே. ப. ர. 218, 219,

43, வே. ப. ர. 559.

44. வே. ப, ர. 1269.

44. அ. *Hariyana, Popular Essays in Indian Philosophy, P. 72.*

45. வே. ப. ர. 2334.

46. *V. V.* 214.

47, பகவத்கீதை 4-8.

48. வே, ஜா. ப. 2321.

49. *Vivekananda. Advita Vedanta the Scientific Religion, P. 10.*

50. வே. ப. ர. 838.

51. வே. ப. ர. 1496.

52. குறள் 44.

53. வே. ப. ர. 208

54. பார்க்க : இந்த ஆய்வேடு இயல் 3

55. குறள் 10.

56. வே. ப. ர. 692.

57. குறள் 352, 353.

58. வே. ப. ர. 514, 1410, 637.

59. குறள் 355, 356, 351, 358.

60. வே. ப. ர. 699, 1307, 1356, 963, 964.

61. குறள் 261, 267.

62. வே. ப. ர. 635, 1187.

63. வே. ப. ர. 1106.

64. குறள் 271.

65. குறள் 278.

66. குறள் 280.

67. வே. ப. ர. 99.

68. வே. ப. ர. 2475, 128, 1125, 903.

69. குறள் 321.

70. குறள் 322.

71. குறள் 330.

72. வே. ப. ர. 2083.

73. வே. ப. ர. 520

74. வே. ப. ர. 1056.

75. வே. ப. ர. 2115.

76. வே. ப. ர. 1183.

77. வே. ப. ர. 332, 333.

78. வே. ப. ர. 277, 315, 601, 1130, 1190, 1263, 1361, 2080, 2087, 2094, 2231, 2238.

79. வே. ப. ர. 2080.

80. வே. ப. ர. 601.

81. வே. ப. ர. 1130.

82. வே. ப. ர, 1190.

83. வே. ப. ர. 277, 1263, 2087.

84. குறள் 335, 336, 338, 339.

85. வே. ப. ர. 944, 1176.

86. குறள் 335.

87. வே. ப. ர. 29.

88. வே. ப. ர. 506, 818, 897, 992, 1028, 1142, 1142, 1143, 1200, 1218, 1246, 1351, 1624, 1714, 1737, 1757, 1865, 1932, 1963, 2028, 2053, 2059, 2067, 2085, 2263, 2264, 2444.

89. வே. ப. ர. 1361, 1699; குறள் 331.

90. குறள் 342, 343.

91. வே. ப. ர. 1648.

92. வே. ப. ர. 779, 1396, 1084, 1596.

93. குறள் 344, 345.

94. வே. ப. ர. 1348.

95. குறள் 346.

96. வே. ப. ர. 1380.

97. குறள் 346.

98. வே. ப. ர. 785.

99. குறள் 350.

100. வே. ப. ர. 1752, 1973.

101. வே. ப. ர. 822, 906, 1051, 1081, 777, 1108, 1166.

102. குறள் 361.

103. குறள் 365, 366, 368, 370.

104. வே. ப. ர. 936, 1609, 1628, 2088.

105. வே. ப. ர. 825, 1079, 1245, 1432, 1606, 1667, 2015, 2023, 2024, 2025.

106. குறள் 371, 372, 373.

107. வே. ப. ர. 353.

108. குறள் 376.

109. குறள் 377.

110. வே. ப. ர. 353, 693, 611, 543, 539, 1131.

111. குறள் 379, 380.

112. வே. ப. ர. 679, 776, 632, 557, 1495, 1873, 2020, 556, 769.

பிரிவு—3

# திருவள்ளுவர், வேமனர் பாடற் கலைநலம்

## இயல்—7

# கற்பனை

*0* முன்பு முன்னுரையில் குறித்ததுபோல மாபெரும் அறிஞர் பெருமக்களாகிய திருவள்ளுவர், வேமனர் ஆகியோர் உணர்த்தும் கலைநுட்பங்களை இப்பகுதி காணமுயல்கிறது. கலை—இலக்கியக்கலை, —கவிதைக் கலை என்னும் பின்னணியோடு இவ்விரு கவிஞர் பாடல் களும் அணுகப் பெறுகின்றன. கவிதைக் கலையின் உள்ளீடாகிய பொருள்பற்றி முன் இயல்களில் குறிக்கப்பெற்று விட்டதால், இங்கு உலகத்து உண்மையைத் தன்னுணர்வோடு குழைத்து உணர்த்த கவிதைக் கலைஞன் பயன்படுத்தும் கற்பனை, வடிவு முதலியன நோக்கப்பெறுகின்றன. கற்பனையின் விளக்கங்களை இன்று மேனாட்டார் பலவாறு ஆய்ந்திருப்பினும், அவையெல்லாம் சிறப்பாகத் தொல்காப்பியரும், பின்வந்தோரும் கண்ட உவமை, உருவகங்களுக்குள்ளே ஒடுங்கிவிடுவதால், கற்பனை என்ற பகுதி உவமை, உருவகத்தின் விளக்கமாக மேற்கொண்டு ஆயப்பெறு கிறது. உணர்த்தும் முறையில் ஐம்புலக் கோட்பாடு சிறப்பாகத் தோன்றியதால், இப்பகுதியில் அந்நோக்கும் இடம் பெறுகிறது, அடுத்துவரும் இயல்களில் இருபெரும் கவிஞர் பெருமக்களின் பாடல்கள் இருமொழி இலக்கியங்களில் பெற்றுள்ள இடம் தெளிவு செய்யப்பெறுகிறது.

### கலை

*1-0* உணர்ச்சி எல்லோருக்கும் பொதுவானது; கலைஞரிடம் இந்த உணர்ச்சி ஆழமும் ஆற்றலும் நுண்மையும் மென்மையும் பெற்று விளங்குகிறது. தான் பெற்ற அத்தகைய ஆழ்ந்தகன்ற உணர்ச்சியை இன்னொருவரும் பெறுமாறு செய்வது எதுவோ அதுவே கலையாகும். அப்படி இன்னொருவரும் பெறுமாறு செய்வதற்குக் கலைஞன் தன் உணர்ச்சிக்கு வடிவம் தருகிறான்.[1]

அந்த வடிவம் மொழிவடிவு பெற்றால் இலக்கியக்கலை கிடைக் கிறது; வண்ணமானால் ஓவியக்கலை உருவாகிறது. இப்படி வடிவத் திற்குரிய மூலப்பொருளுக்கேற்பக் கலையின் பெயர்கள் மாறு கின்றன. ஆனால் கலைஞன் பெறுகின்ற காட்டு, அதனால் உறுகின்ற

உணர்வு, அதனைத் தருகின்ற நிலை, அந்நிலையினால் கலைஞன் பெறுகின்ற உணர்ச்சி, இவையனைத்தும் எல்லாக் கலைகளுக்கும் பொதுவே.

## இலக்கியக் கலை

*1-1-0* இலக்கியம் ஒலியால் அமையும் கலையே; ஆயினும் இலக்கியத்தில் வழங்கும் ஒலி பொருளுடைய சொற்களால் ஆகியது. ஆகவே, இலக்கியம் சொற்களாய் அல்லது மொழியாய் அமைவது எனலாம்.

*1-1-1* மொழி, முதன் முதல் ஒருவர், தான் எண்ணிய கருத்துக்களைப் பிறர் அறியச் செய்தல், உள்ள உணர்வுகளை உணரும்படி செய்தல், பிறர் எண்ணிய கருத்துக்களைத் தான் உணர்தல் ஆகிய பணியைச் செய்துவந்தது. நாளாவட்டத்தில் அந்த மொழி கருத்தையும் உணர்வையும் கலைநுட்பத்தோடு வெளிப்படுத்தலாயிற்று. எனவே இலக்கியங்கள் மறைநூல்கள் போன்று அறிவுறுத்துவதோடு அமைதிகொள்ளாமல் இன்புறுத் தலையும் செய்கின்றன. வடமொழியில் அபிநய குப்தன் என்பவர் "இலக்கியம் என்பது இனிப்புப் பூசப்பெற்ற மருந்துருண்டை" என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

*1-1-2* இலக்கியம் அறிவுறுத்தலோடு இன்புறுத்தலையும் செய்கிறது என்ற இக்கோட்பாட்டைப் பற்றி ஹெரேசு என்ற கவிஞர், ''கவிதை' இருமுகமான நோக்கங்களைக் கொண்டது; அது இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் ஆசிரியராகவும் பயன்படுகிறது. இன்புறுத்துவதும் அறிவுறுத்துவதும் கலந்த கவிதையே கற்ப வருடைய உள்ளத்தைக் கவரும் ஆற்றல் உடையது'' என்று குறிப்பிடுகிறார்.[3]

*1-1-3* மனித வாழ்விற்கு இன்றியமையாதனவாகிய உணவிலும் உடையிலும் நாகரிகம் முதிர முதிர மாறுதல்கள் ஏற்படலாயின. மொழியும் உணர்த்தும் முறையில் பல மாறுதல் களைக் கொண்டு வளரலாயிற்று. சிந்தனை மிகுதி ஆக ஆகப் பொருளில் அனுபவமும் உண்மைத் தன்மையும் நல்ல பயனும் செறிந்தன. சொற்களைப் புதியனவாக ஆக்கிக்கொண்டு அழகாக அமைக்கும் முறைகள் தோன்றலாயின.

*1-1-4* இவ்வாறு இனிமை உண்டாகும்படி புலவர்கள் பல உத்திகளை மேற்கொள்ளலாயினர். யாப்பு, தொடைநலம், அணிச்சிறப்பு முதலியன பாட்டிலக்கிய உறுப்புக்களாயின. மேலை நாட்டார் நோக்கில் கருத்து, உணர்ச்சி, கற்பனை, அழகிய வடிவம்

ஆகியன இலக்கியத்திறன் உறுப்புகளாயின. இந்த நான்கு உறுப்புகளும் ஒருங்கே மிகச் சிறந்த புலவர் இயற்றிய இலக்கியத்தில் மட்டும் அமையலாயின.

*1-1-5* திருவள்ளுவரும் வேமனரும் நல்ல கவிஞர்கள்; சிறந்த சிந்தனையாளர்கள்; தம் சிறந்த கருத்துக்கள் கலையுணர்ச்சி பொலியும் வகையில், கற்பனை நெஞ்சில் அவை முறையாக உருவாகின்ற வகையில் பாடல் இயற்றிய விழுமிய கவிஞர்கள். இவ்விரு கவிஞர்களின் பாடல்களில் கலைநலன்கள் எந்த அளவுக்கு அமைந்துள்ளன என்பது ஆராயப்படுகிறது.

*1-1-6* இந்த இருநூல்களும் காப்பியங்களைப்போலத் தொடர்நிலைச் செய்யுட்களாகவோ, வருணனை முதலியற்றைச் சொல்லும் தனிநிலைச் செய்யுட்களாகவோ இருந்திருப்பின், கவி இன்பத்தை மிகுதியாக வழங்கும் உத்திகளை அதிகம் ஆளும் வாய்ப்பு இருந்திருக்கும். ஆனல் இந்த இரு நூல்களிலுள்ள ஒவ்வொரு பாடலும் சில சொற்களால் அமைந்து தனித்தனியே ஒவ்வொரு கருத்தைச் சொல்லுகிறது. ஆகவே காப்பியங்களில் காணும் பெரும் இன்பத்தை இவற்றில் காண முடியாது; ஆயினும் இவ்விருவரும் சொல்லும் முறையினல் இன்பம் உண்டாகச் செய்துள்ளார்கள்.

*1-1-6* திருக்குறள் கவி இன்பத்தைப் பற்றி மேனுட்டு அறிஞர்களும், இந்நாட்டு அறிஞர்களும், பாராட்டிப்பேசியுள்ளார்கள்.[4] இவ்வாறே வேமனர் பாடல்களின் கவி இன்பத்தினையும் பாராட்டிப் பேசியிருக்கிறுர்கள்.[5]

## கற்பனையும் கவிதையும்

*1-2-0* நுண்கலைகளில் ஒன்று கவிதை. இந்தக் கவிதைக்கு உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்ற மூன்றும் அடிப்படைத் தேவைகளாகும். இவற்றுள் உணர்ச்சி கவிதைக்கு உயிர்நாடியாய் இருப்பதாகும். இந்த உணர்ச்சியைக் கவிஞன் தான் உணர்ந்தவாறு எடுத்துரைக்க முயலுகிறுன். அவற்றை நயமிக்க முறையிலும், கருத்தைக் கவரும் வகையிலும் வெளிப்படுத்துகிறுன். அப்படி வெளிப்படுத்தும்போது 'கற்பனை' என்னும் இலக்கியத் திறனைக் கருவியாகக் கொள்கிறுன்.

*1-2-1* இதனுல்தான் ஷெல்லி என்ற அறிஞர், "கற்பனையின் வெளிப்பாடே கவிதையாகும்" என்று மொழிந்துள்ளார்.[6] அந்தக் கவிதையில், படைப்போனின் உணர்ச்சி, படிப்போன் உள்ளத்திலும் எழும் ஆற்றல் இருக்க வேண்டும் என்கிறுர்

வின்செஸ்டர்.[7] ரஸ்கின் என்பார், "உயர்ந்த உணர்ச்சிகள் ஊற்றெடுப்பதற்குரிய சிறந்த நிலைக்களன்களைக் கற்பனை மூலம் அமைத்துத் தருவதே கவிதை" என்கிறார்.[8]

1-2-2 சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி 'கற்பனை' என்னும் சொல்லை இருவகையாகப் பிரித்துப் பொருள் கூறியுள்ளது. 'கல்' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த தமிழ்ச்சொல் ஒரு வகை. 'கல்ப' என்னும் பகுதியாகப் பிறந்த வடமொழிச்சொல் மற்றொரு வகையாகும். இவற்றுள் 'கற்பனை' என்னும் தமிழ்ச் சொல்லிற்குக் 'கல்வி', 'போதனை' என்னும் இருபொருள்கள் அப் பேரகராதியில் தரப்பட்டுள்ளன. 'கற்பனை' என்னும் வடமொழிச் சொல்லிற்கு 'சங்கற்பம்' (மனவுறுதி), கட்டளை, காரிய ஏற்பாடு, இல்லாததைக் கட்டிச் சொல்லுகை, வருணனை, மாயை என்னும் பொருள்கள் அதில் கொடுக்கப் பெற்றுள்ளன.[9]

1-2-3 "இயற்கையைப் பாடும் புலவன் உள்ளதை உள்ள வாறே பாடுவதில்லை. உள்ளதில் சிறிது குறைத்தும், சிறிது கூட்டியும் பாடுகிறான்; இயற்கையை உள்ளவாறே பாடவேண்டிய அவசியமில்லை; உள்ளதோடு கற்பனையையும் சேர்த்துக்குழைத்துக் காட்டுகிறான்"[10] என்று அபெர்கிராம்பி கூறியுள்ளார். இங்ஙனம் குழைத்துக் காட்டும்போது, அதில் 'அணி' அழகு முதலியவற்றைச் சேர்க்கிறான். இதனால்தான் பாட்டு என்பது கலையுடையதாகிறது.

1-2-3-1 ரிச்சர்ட் என்ற திறனாய்வாளர், "பாடல்களில் காணப்படும் அணியமைதிகள் கவிஞர்களுடைய உணர்வுத் தன்மை களே" என்னும் முடிவுக்கு வந்துள்ளார்.[11]

1-2-4 "அனுபவங்களைத் திரும்பப் படைக்கும் மனித மனத்தின் ஆற்றலே கற்பனை" என்று, செருமானிய மெய்ப் பொருள் அறிஞர் 'காண்ட்' கூறுவதாக ஆய்வாளர் மாயாண்டி கூறுகிறார்.[12]

1-2-5 "ஒரு சிறந்த கலைஞன் தான் காணும் அழகிய காட்சி யின் கூறுகளைப் பிரித்துப் பார்க்கிறான்; சிலவற்றை ஒதுக்குகிறான்; சிலவற்றை ஏற்கிறான்; ஏற்பன சிலவற்றைத் தொகுத்து ஒரு புதிய முழுமையான காட்சியினைப் படைக்கிறான்; அத்தகைய படைப்பு அவன் கற்பனைத் திறனின் விளைவாகும்" என்பது வின்செஸ்டர் கூற்று.[13]

1-2-6 "'கற்பனை' என்பது புலன்கள் நேரே ஒரு பொருளை அனுபவியாத காலத்தும், அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டு

வந்து, அப் பொருளிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றவல்ல ஒருவகை ஆற்றல் ஆகும்'' என்கிறுர் ந. சுப்பு ரெட்டியார்.[14]

*1-2-7* கவிதைக்குரிய கற்பனையைப் பற்றி மேனுட்டு இலக்கியத் திறனுய்வாளர்கள் பலர் நுட்பமாக ஆராய்ந்திருக்கின்றனர். பலவகைகளாகப் பாகுபடுத்தியும் விளக்கியுள்ளனர்.[15]

## அணி

*2-0* செய்யுளுக்குத் தேவையான கற்பனையைப் படைப்பதற்கு அணிகள் மிகவும் இன்றியமையாதன. அணி, அணியப் படுவதெனவும், அழகைத் தருவது எனவும் பொருள் தரும். பிங்கல நிகண்டு அணி என்னும் சொல்லிற்கு அழகு, வனப்பு, ஒப்பனை, ஆபரணம், பெருமை, இனிமை, வரிசை என்று பொருள் கூறுகிறது.[16] ''உள்ளுணர்வு, கற்பனை, உள்ளக்கிளர்ச்சி, சுவை, மெய்ப்பாடு' என்ற நிலைகள்தான் அணியாக மாறி வெளிப்படுகின்றன'' என்று தெ. பொ. மீ. அவர்கள் கூறுவர்.[17]

## தமிழில் அணியிலக்கணம்

*2-1* அரிய கருத்துக்கள் மனத்தை விட்டகலாமல் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற இவ்வணிகளைத் தமிழ் மொழியிலும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் அழகுற அமைத்துள்ளனர். சங்க இலக்கியங்களிலுள்ள அணிபொருந்திய பாடல்கள் பயில்தொறும் மனத்தை மகிழ்விப்பன. 'உவமை அணியை ஆளும் தன்மையில் சங்கம் மருவிய நூல்களுக்கும், பிற்காலத்து நூல்களுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகிறது. சங்க நூல்களில் காணப்படுகின்ற உவமைகள் பெரும்பாலும் மிகைபடாமல் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்குகின்றன. ஆனுல், பிற்காலத்து ஆளப்பட்டுள்ள உவமைகள் வரம்பிகந்து மிகைப்பட்டு அமைந்திருக்கின்றன' என்பர்.[18]

இந்த அணிகளை நம் முன்னேர் பலவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர்.[19] இவற்றுள் எல்லா மொழிகளிலும் பெரிதும் அடிப்படையாக என்றும் வழக்கிலிருப்பன உவமையணியும், உருவக அணியுமாகும். ஆங்கில மொழியிலும் சிமிலி, மெட்டபார் என்னும் இரண்டு அணிகளே பெருவழக்கில் இருப்பதாகக் கூறப்படுகின்றன.[20]

## உவமை அணியின் பொது இயல்பு

*2-1-1* உவமையாவது ஒப்புமை யளவையாகும்; அறிந்த பொருளைக் கொண்டே அறியாத பொருளைப் பிறர்க்கு உணர்த்த

ஊன்றுகோல் போல் உதவுகிறதுஇது. இந்த உவமை அணி, சிறப்பு, நலன், காதல், வலி—என்னும் நான்கின் அடிப்படையில் பிறக்கின்றது என்பது தொல்காப்பிய விதி.[21]

*2-1-2* தண்டியலங்கார ஆசிரியர் உவமையணியின் இலக்கணத்தை,

> "பண்புந் தொழிலும் பயனுமென்று இவற்றின்
> ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
> ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"[22]

என்று கூறுகிறார்.

*2-1-3* உவமையணியில் அடங்கியுள்ள உறுப்புக்கள் நான்கு என்பர். அவை: பொருள், உவமை, பொதுப்பண்பு, உவம உருபு என்பன. இந்த நான்கனுள்ளும் ஒப்புமையை வெளிப்பட அறிய உதவுவது உவம உருபே ஆகும்.

*2-1-4* உவமையணியைப் பாடுவதில் கவிஞனின் கற்பனைத் திறன் வெளிப்படுகிறது என்பது மேலைநாட்டுத் திறனாய்வாளர்களின்கருத்து. 'கற்பனைத்திறன் ஓர் உவமையை உருவாக்குகின்ற போது புறப்பண்பு ஒப்புமையைக்காட்டிலும் அகப்பண்பு ஒப்புமை சிறந்து விளங்கும்' என்று வேர்ட்ஸ்வெர்த் கூறுகிறார்.[23] கற்பனையை உணர்த்தும் 'இமாஜினேஷன்' என்னும் ஆங்கிலச் சொல் திறனாய்வாளர் உலகில் ஆறு பொருளில் வழங்கப்பெற்று வருவதாகக் கூறுவர். அந்த ஆறனுள் ஒன்றாக உவமை, உருவகம் முதலிய அணிநலம் மிக்க மொழிநடையால் பொருள்களைத் தொடர்புபடுத்திக் காட்டுதல் என்பதனைக் குறிப்பிடுகின்றனர்.[24] எனவே, உவமையணியின் தோற்றத்திற்குக் கவிஞனின் கற்பனைத் திறன் அடிப்படையாக அமைகிறது என்பது புலனாகிறது.

## திருக்குறளில் உவமையணி

*2-1-5* தமிழில் அணியிலக்கணங்கள் அமையப்பெற்ற உயர்ந்த நூல்களுள் வள்ளுவர் அருளிய திருக்குறளும் ஒன்றாகும்.

> எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
> வழுக்கில் வனப்பணி வண்ணம் இழுக்கின்றி
> என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
> இன்றிவர் இன்குறள் வெண்பா[25]

என்னும் நச்சுமனார் பாடல், எல்லா இலக்கணங்களும் பொருந்திய இனிய நூல் திருக்குறள் என்று கூறுகிறது.

திருக்குறளில் அமையப்பெற்ற உவமைகள் ஆழமும் அழகும் நிரம்பப் பெற்றவை; பொருட்செறிவு மிக்கவை; நவில்தொறும் இன்பம் தந்து மகிழ்விப்பவை. உவமைகளுக்காக அவர் எடுத்துக் கொண்டனவும் நம்மைச் சுற்றி நாம் அறிந்த பொருள்களாகவே இருக்கின்றன.

## வேமனர் பாடல்களில் உவமையணி

*2-1-6* வேமனர் சொல்லும் ஒவ்வொரு உண்மைக்கும் உவமைகள் நிச்சயம் உண்டு. அவர் பயன்படுத்திய உவமைகள் தாமாக முயன்று தேடியவையல்ல; அன்றுட மக்கள் வாழ்வில் அனுபவத்திலுள்ள பொருள்களே உவமைகளாய் இயற்கையாய் அவருக்கு அமைந்தன. திருவள்ளுவருக்கும் இவ்வாறே அமைந்தன. இத்தகைய உவமைகளே சிறந்தனவாகும். இதனால் ஒரு மேனாட்டு அறிஞர் "முயன்று தேடாமல் தாமாகவே அமையும் அணிகளே சிறந்தவை" என்று கூறியுள்ளார்.[26] சாதாரண மக்கள் பொருட்படுத்தாதவற்றையே வேமனர் தம் வியத்தகு கற்பனைத் திறத்தால் அவற்றிற்கு ஒரு புதிய வடிவம் கொடுத்துத் தன் பாடல்களில் அமைத்துள்ளார். மற்ற எல்லா அணிகளுக்கும் தாய் போன்றதாகிய உவமையணி இவரிடம் பல வேடங்களைக் கொண்டு காட்சியளிக்கிறது. இவருடைய உவமைகள் சீரும் சிறப்பும் வாய்ந்தவை. பெரும்பாலும் பழமொழிகளே இவர் பாடல்களில் உவமைகளாய் அமைந்து கலையழகோடு அறிவுறுத்த எடுத்துக்கொண்ட உண்மைகளை அறிவுறுத்துகின்றன; பழமொழி நானூறு என்னும் தமிழ் நூலின் போக்கினை இவர் பாடல்களில் காணலாம். 'கரும்பின் நுனியில் கதிர் தோன்றின் கரும்பின் இனிமை குறையும்' என்ற கருத்துடைய,

'எலிமிசெருகுனந்து என்னுபுட்டிலயட்லு'[27]

என்று வழக்கத்திலுள்ள தொடரைக் கொண்டு, 'நற்குலத்தில் தீயவன் ஒருவன் இருப்பின் அவனால் அக்குலத்துக்கே பழிவரும்' என்ற உண்மையை உணர்த்துகிறார் ஆசிரியர் வேமனர்.

இனி, ஈண்டு இவ்விருவரும் உவமைகளை எந்தெந்தக் கோணத்தில் எந்தெந்த உண்மைகளை உணர்த்துகின்றனர் என்பது ஒப்பிட்டு ஆராயப்பட்டிருக்கிறது.

*2-2-0* வேமனர் வாழ்வின் ஏற்ற இறக்கங்களை இன்பத்தின் உச்சியிலும், துன்பத்தின் ஆழத்திலும் உழன்று நன்கு உணர்ந்து அறிந்தவர், தாம் பெற்ற அனுபவ உண்மைகளை உலகமும்

அறியுமாறு சீரிய உவமைகளால் ஆற்றலோடு உணர்த்தியவர். உவமைகளை எளிமையாகவும், இனிமையாகவும் பாமர மக்களுக் கும் விளங்கும் வகையில் பயன்படுத்திய பெருமை தமிழகத்தில் வள்ளுவருக்கு வாய்த்ததுபோல் ஆந்திரத்தில் வேமனருக்கும் வாய்த்தது. இவ்விருவரின் உவமைகளை ஒப்பிட்டுப் பல உண்மைகளை அறியலாம். இங்கு இவ்விருவர் உவமைகளின் ஒப்பீடு மூன்று கோணங்களில் அமைகிறது. ஒரே உவமை இரு புலவர் களாலும் ஒரே பொருளை விளக்க எவ்வாறு கையாளப் பட்டுள்ளது என்பது முதல் கோணமாகும்; ஒரே உவமை வெவ்வேறு பொருள்களை விளக்க இரு புலவர்களாலும் எவ்வாறு கையாளப் பட்டுள்ளது என்பது இரண்டாவது கோணம் ஆகும். பொருள் ஒன்றையே வெவ்வேறு உவமைகளால் இரு புலவர்களும் எவ்வாறு விளங்குகிறார்கள் என்பது மூன்றாவது கோணமாகும்.

## 2-2-1 உவமையும் பொருளும் ஒன்றியிருத்தல்

### பல்லக்கு

*2-2-1-1* அறத்தின் பயனையும் பாவத்தின் பயனையும் ஆகம அளவையானே அறிந்து கொள்ளலாம் என்பது ஒரு கருத்து. இகத்துக் காட்சியுளவானே அறியலாம் என்பது இன்னொரு கருத்து.

> அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோ(டு) ஊர்ந்தா னிடை[28]

என்பது வள்ளுவர் வாக்கு. அறம் செய்தவன் அதனின் பயனாகப் பல்லக்கில் ஊர்ந்து செல்லுகிறான். அறம் செய்யாதவன், எப்பொழுதும் பாவத்தையே நினைத்தவன், அதன் பயனாக அப் பல்லக்கைச் சுமக்கிறான். இதனால் அறம் செய்தவன் நற்பயன் பெறுதலையும், தீமை செய்தவன் தீயபயனைப் பெறுதலையும் அறிவுறுத்துகிறார் ஆசிரியர். இதுவே உரையாசிரியர் பரிமேலழகர் கருத்தாகும்.

கவி வேமனரும் இவ்வண்ணமே எண்ணுகிறார். ‘பல்லக்கைச் சுமப்போர் அனைவரும் மக்களே. அப்பல்லக்கில் இருப்போனும் மனிதனே. அவன் இறைவனை வழிபடுதலால் வரும் பயனை இதனால் அறியலாம்.’ என்பது அவர் கூறும் கருத்து.[29] மனத்துக்கண் மாசில்லாத அறநெறியை எவனொருவன் மேற்கொள்ளுகிறானோ அவன் நற்பயன் பெறுவான் என்றும், அல்லாதவன் அதனைப் பெறாது பல்லக்கைத் தூக்கும் நிலையைப் பெறுவான் என்றும்

ஆசிரியர் எண்ணி இருக்கவேண்டும். இவ்வாறு இருவேறு ஆசிரியர்கள் 'பல்லக்கு' என்ற ஒரே பொருளால் அறத்தின் பயனையும் பாவத்தின் பயனையும் விளக்கியுள்ளனர்.

## நிழல்

*2-2-1-2* இவ்வாறே 'நிழல்' என்ற ஒரே உவமையைக் கொண்டு இவ்விருவரும் ஒரே வகையான உண்மையை உணர்த்தியுள்ளனர். அவனவன் செயலுக்கேற்பப் பயனை அவனவன் பெறுவான் என்பது பொதுவாக எல்லாரிடத்திலும் சொல்லளவில் நிலவிய ஒன்று. செயலளவில் வரும்பொழுது அப்போதைய சிற்றின்ப நலனை எண்ணி நெறிதவறி நடக்கவும் பின்வாங்குவதில்லை மனித மனம். இத்தகையாருக்கு நன்கு அறிவுறுத்த முனைகிறார் வள்ளுவர். தீயவை செய்தாருக்குக் கேடுவருதல் உறுதி. எப்படி ஒருவன் நிழல், அவனை விடாது வந்து அடியில் தங்கியிருக்குமோ, அதுபோலத் தீமையின் பயனும் அவனைச் சூழ்ந்தே இருக்கும் என்று ஓர் உவமைமுகத்தான் உணர வைக்கிறார்.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று.[30]

இங்ஙனம் பாவம் செய்வதால் உண்டாகும் பயனைக் கூறவே, அறஞ்செய்வதால் உண்டாகும் பயன் குறிப்பாய் அறியப்படும்.

வேமனரும் இம்மெய்மையையே வேறுவகையில் உணர்த்துகிறார். ஆங்காங்கு அன்னசத்திரங்களைக் கட்டி நற்செயல்களுக்கு எவனொருவன் தன் பொருளைப் பயன்படுத்துகிறானோ அவனை அந்தச் செயல்களின் பயனும் புகழும் விடாது நிற்கும் என்கிறார்.[31] இவ்விடத்து நற்செயலின் பயன் தன்னைத் தொடரும்; எனவே தீயசெயலின் பயனும் தொடரும் என்பதும் அறியப்படுகின்றது. மற்றொரு அறிவுரையையும் நிழல் என்ற உவமையால் வேமனர் அறிவுறுத்துகிறார்.

செல்வச் சிறப்பையும், மற்றப் பேறுகளையும் விரும்பாதவர் இவ்வுலகத்து இல்லை என்று சொல்லலாம். ஆனால், அவை அவற்றை விரும்புவோருக்குக் கிட்டுவதில்லை. செல்வச் சிறப்பையும், மற்றப் பேறுகளையும் பெறும் தகுதியுடைய சான்றோர் அவற்றைத் தமக்கு வேண்டுமென்று முயலவேண்டிய அவசியமில்லை; அவர் சான்றாண்மையால் அப்பொருள்கள் தாமே அவர்களைத் தொடர்ந்து அடையும். இக் கருத்தை ஒருவனின் நிழல் எப்படி அவனை விடாது தொடர்ந்து வருமோ அதுபோல அந்தப் பேறுகளும் தொடர்ந்து வருமென்கிறார் வேமனர்.[32]

இவ்விரு ஆசிரியர்களும் நிழல் என்ற ஒரே உவமையால், செய்வினைப் பயன் நிழல்போல் தொடர்ந்து வரும் என்கின்றனர்.

## முதலை

*2-2-1-3* காலமும் இடமும் அறிந்து, செய்வன திருந்தச் செய்தல் வேண்டும்; எண்ணிய செயல் முடிப்பதற்கு, வெற்றி பெறுவதற்கு ஏற்ற இடம் வாய்த்த வழி செயலில் இறங்க வேண்டும்; அதற்குரிய இடத்தில் அதற்கு வன்மை மிகும். இந்த உண்மையை உணர்த்த இருவரும் முதலையின் தன்மையை நினைக்கின்றனர்.

முதலை தான் வாழ்கின்ற ஆழமுள்ள நீரில் மற்ற உயிர்களை வெல்லும் வன்மையுடையது; ஆனால் நீரிலிருந்து நீங்கினால் அத்தகைய வன்மையுடைய முதலையையும், முதலையைக் காட்டிலும் வன்மை குறைந்த உயிர்கள் வென்றுவிடும் என்று உணர்த்துகிறார் வள்ளுவர்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.[33]

வேமனரும் இதனையே உணர்த்துகிறார். ஒரு செயலில் வெற்றி பெற இடவன்மையே (ஸ்த்தானபலம்) மிகவும் வேண்டியது. தன் இருப்பிடம் நீங்கினால் தன் வலியால் ஒரு பயனும் இல்லை; நீரில் வாழும் முதலை தன்னினும் பெரியதான யானையையும் ஆழ்ந்த நீரில் பிடிக்கும்; அந்த முதலை நீரிலிருந்து நீங்கினால், உருவில் மட்டுமின்றி வலிமையிலும் குறைந்ததான நாயால் பிடிக்கப்படும்; எனவே தன் வலிமையைக் காட்டிலும் இடவலிமையே மிகவும் வேண்டற்பாலது என்று வேமனர் அறிவுறுத்துகிறார்.[34]

ஈண்டு வள்ளுவர் பிற என்று குறிப்பால் சொன்னதை வேமனர் பிற என்பன நீரில் யானையும், நிலத்தில் நாயும் எனச் சுட்டிக் காட்டுகிறார்.

## நாவாய்

*2-2-1-4* இந்த 'இடனறிதல்' அவசியத்தை இருவரும் மற்றுமொரு உவவையால் தெளிவாக்குகின்றனர்.

................................கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து[35]

கடலில் ஓடும் நாவாய் நிலத்தில் ஓடாது; காரணம் நாவாய்க்குத் தக்க இடம் கடலே என்பது வள்ளுவர் வாய்மொழி.

வேமனரும் நாவாய் நீரில் நடந்து மெதுவாய்ச் செல்லும். ஆனால் நீரைவிட்டு நீங்கி நிலத்தில் ஒரு முழம் அளவும் செல்லாது.[36] என்று வள்ளுவர் வழிச் செல்லுகிறார்.

## 2-2-2 உவமை ஒன்று பொருள் வேறு

### கொக்கு

*2-2-2-1* ஒருவன் தனக்குத் தக்க காலம் வாய்க்கும் வரை கொக்குபோல் அமைதியாகப் பொறுத்திருக்க வேண்டும். தக்க காலம் வந்தபொழுது அதன் குத்துப்போல் செயலை வெற்றியாய் முடிக்கவேண்டும் என்று, எடுத்த செயல் வெற்றி யடையத் தேவையான வித்தகத்தைக் கொக்கை உவமையாகக் கொண்டு விளக்கியுள்ளார் வள்ளுவர்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.[37]

இந்தக் கொக்காகிய உவமைகொண்டு வேமனர் அரியதொரு தத்துவக் கருத்தையும் சமுதாய நீதியையும் அறிவிக்கிறார். வயிற்றுப் பிழைப்பு நோக்கத்தில் பல்வேறு சமயங்களில் பெயர் களைச் சொல்லிக்கொண்டு வாழ்வோர் பல்லாயிரவராவர். அவர்கள் தூய ஆதிபரம்பொருளை அறியார். அவர்கள் செயல் பத்தாயிரம் கொக்குகள் ஒன்று கூடி நாவாயை உடைக்க முற்கொண்டதைப் போலாகும். கொக்குகள் பத்தாயிரம் சேர்ந்தாலும் மரக்கலத்தை உடைக்க முடியாது. அதுபோலத் தூய மனமின்றிச் சமயப் பெயர்களால் இறைவனை அறிய முடியாது என்று சொல்லுகிறார்.[38]

மற்றும், ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்கு மிடம் தெரியாமல் அமைதியாக இருக்கும் வஞ்சகக் கலையில் வல்லது கொக்கு. இவ்வாறே சில ஆடம்பரவாதிகள் உண்மை யாய் வணங்குவதுபோல நடிப்பார்களேதவிர உண்மையான பக்தி இருக்காது என்ற உண்மையையும் வேமனர் உணர்த்து கிறார்.[39]

தாம் இருக்கும் ஊரில் வறுமை வர, வறுமையால் வாடுவதைக் காட்டிலும், அவ்வூரை விட்டு நீங்கி வாய்ப்பிருக்கும் இடத்துக்குச் செல்லுதல் உலக இயல்பு. இந்த உலகியல் இயல்பைக் கொக்கு உவமையைக் கொண்டு 'நீர் வற்றிய ஏரியில் கொக்குகள் தங்குமா' என்று வினவி வேமனர் தெளிவுறுத்துகிறார்.[40]

**காக்கை**

2-2-2-2 காக்கையைக் காணும்பொழுது இரு புலவர்களுக்கும் வெவ்வேறு வகையான எண்ணங்கள் எழுகின்றன. வள்ளுவருக்கு அந்தக் காக்கை உலகத்திற்கு அறம் போதிக்கும் ஆசானுகக் காட்சியளிக்கிறது. காகம் தனக்கு எது கிடைத்தாலும் தன்னந்தனியே உண்ணுது, கரைந்து தன் இனத்தாரை எல்லாம் கூவி அழைத்து அவற்ருேடு ஒன்று சேர்ந்து உண்ணும். இதனை அழகாக மக்களுக்கு வள்ளுவர் எடுத்துக் கூறுகிருர். காக்கையைப் போல் தாம் பெற்ற பொருளை மறையாது பிறர்க்குப் பகுத்தளித்து வாழ்வோர்க்கே ஆக்கம் சேரும் என்கிருர்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.[41]

காலம் கருதி, தக்க காலத்தில் செயல்புரிய வேண்டும் என்பதையும் காக்கையைக் கொண்டு விளக்குகிருர் வள்ளுவர். காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வெல்லும்; காரணம் கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது. எனவே தன்னினும் வலிய கோட்டானை வெல்லக் காக்கைக்குப் பகற் காலமே ஏற்றது. அதுபோல் பகையை வெல்லக் கருதும் அரசர்க்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும். இதனுல் 'காலம் வாய்த்தபோது கடமையைச் செய்' என்ற உண்மை அறிய வருகிறது.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.[42]

வேமனர் காக்கையின் பிற இயல்புகளை உவமைகளாகக் கையாள்கிருர். எங்கிருந்தோ பறந்துவந்த காக்கை, கூரை வீட்டின் இறவானத்தில் இருந்துகொண்டு, தலையைச் சாய்த்து ஒன்றிய நோக்கோடு வீட்டிலுள்ள சூழ்நிலைகளை அறிந்து, தனக்குத் தேவையானதைக் கொத்திச் சென்றுவிடும். இவ்வாறே யோகியும் ஒருமுகமாக உள்நோக்கி உண்மையைக் கண்டு முக்தியடைகின்ருன் என்கிருர் வேமனர்.[43]

இங்ஙனம் காக்கையை உயர்வுபடுத்தி இருவரும் பேசியிருக்கின்றனர். சில பாடல்களில் வேமனர் காக்கையை இழிவுபடுத்தியும் பேசியிருக்கிருர்.

ஞானிகளின் சொற்கள் குயில் குரல்போல் இனிமையாகவும், பாவத்துக்குரிய மூடர்களின் சொற்கள் காக்கைக் குரல்போல் கடுமையாகவும் இருக்கும் என்றும் உணர்த்துகிருர்.[44]

## நிழல்

*2-2-2-3* கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளக் கிடைத்த குளிர்ந்த மரநிழல்; அருகிலே குளிர்ந்த நீரோடை; நிழலும் இனியது; நீரும் இனியது; ஆயின் அந்த நிழலும் நீரும் உடல்நலம் காக்க வல்லதாக அமையவில்லை; நிழல் தருகின்ற மரம் நச்சுமர மாகவும், நீர் தருகின்ற ஓடை நஞ்சு கலந்ததாகவும் இருப்பின் என்ன பயன்? தூய்மையற்ற நீரும் நிழலும் முன்னர் இன்பம் தரினும் பின்னர்ப் பெருந்துன்பத்தையே நல்கும். அதுபோல் சுற்றத்தாராக இருந்தாலும் இனியவர்போல் இருந்து தீமை செய்வார்களானுல் தீயதே ஆகும்; நட்பும் உறவும் முன்னர்க் காட்டி அடுத்துக் கெடுக்கும் இத்தகையாரிடத்து விழிப்புணர்ச்சி யோடு இருத்தல் வேண்டும். நச்சு நிழலும் நீரும் முன்னர் இன்பம் தரினும் பின்னர் நோயினைத் தருவதுபோலவே இவர்களுடைய நட்பும் உறவும் புறத்தே இனியது, அகத்தே கொடியது; தீமையினை விளைவிப்பது. இந்த உயர்ந்த அறிவுரையை எல்லோரின் முன்னர்க் காணப்படும் நிழலும் நீரும் கொண்டு விளக்குகிருர் வள்ளுவர்.

'நிழலும் நீரும்இன்னுத இன்னு தமர்நீரும்
இன்னுவாம் இன்னு செயின்'[45]

இந்த நிழலும் நீருங்கொண்டு இன்னுமொரு கருத்தையும் தெளிய வைக்கிருர் வள்ளுவர். நீர் இயல்பின் இனியதே; அந்த இனிய நீரும் நிழலை அடுத்திருப்பின் மிகவும் இனியதாகும்; அவ்வாறின்றி வெயிலை அடுத்திருப்பின் இயல்பின் உள்ள இனிமையும் நீங்கும். அதுபோல ஊடலும் பொதுவாய் இனிமை யானதே; அந்த ஊடலும் அன்பு செலுத்துவோரிடத்துக் கொள் வதே இன்பமானது; அன்பு அல்லாதாரிடத்து ஊடல் கொள்ளின் அது தீயதாக முடியும்.

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.[46]

வேமனர் இந்த நிழல் உவமை கொண்டு தக்கதோர் தத்துவக் கருத்தைத் தருகிருர். விளையாட்டுள்ளம் படைத்தவர்கள் இளஞ் சிருர்; எதையுமே விளையாட்டு நோக்கில் பார்க்கிருர்கள்;

இவர்கள் தம்முடன் வரும் தன் நிழலையும் ஒரு விளையாட்டுப் பொருளாகவே நினைக்கிறார்கள்; அதனோடு விளையாடுகிறார்கள். வேமனர் இந்த இளஞ்சிறார்க்குப் பெரியோர்களின் செயலை ஒப்பிடுகிறார். பெரியோர்கள் தம் வாழ்க்கைச் சாயலாகும் (நிழலாகும்) செயல்களை நினைத்துக்கொண்டு, மெய்ம்மறந்து, முக்திக்கு வழிதேடாது, உலகியல் செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே தம் நிழலைப் பார்த்து விளையாடும் இளங்குழந்தைகளும், வாழ்க்கை நெறியறியாது அப்போதைக்கு மட்டும் இன்பந்தரும் மாயச்செயல்களில் ஈடுபடும் பெரியோரும் ஒன்றே என நினைக்கிறார் வேமனர்.[47]

வேமனர் மற்றொரு பாடலில் நிழலை ஞானத்துக்கு ஒப்பிடுகிறார். நிழல்தரும் மரமும், ஞானம் வழங்கும் குருவும் ஒரு நிலையில் வேமனரின் எண்ணத்தில் காட்சி கொள்கின்றனர். "மரவடியை யடைய, மரம் நிழலைத் தருகின்றது; குருவை அடைய குரு ஞானத்தை வழங்குகிறான்; மரம் இன்றி நிழலில்லை; குருவின்றி ஞானமில்லை."[48] என்றிவ்வாறாக ஞானத்தின் இன்றியமை யாமையை உணர்த்துகிறார் வேமனர்.

இங்ஙனம் நிழல் என்ற உவமை இரு புலவர்களின் நோக்கில் ஒரே வகையான பொருளை உணர்த்துவதாயும்,[49] வேறுவேறு பொருள்களை உணர்த்துவதாயும் அமைந்துள்ளது.

### பொன்

2-2-2-4 குற்றமின்றி முழுமையும் குணமுடையோராக மானிடர் இருப்பது அரிதே. அக் குற்றத்துக்குத் தக்க குற்றம் செய்துகொண்டே போனால் அதற்கு ஒரு முடிவில்லாமல் போகும். இத்தகைய நிலையை வேண்டாம் என்று நினைக்கிறது வள்ளுவர் மனம். எனவே, ஒருவர் பிறன் தனக்குத் தீங்கு செய்தவழிப் பொறுக்காமல் அவனை வருத்தினால் உலகத்தார் அவரை ஒரு பொருளாக மதியார். ஆனால் பொறுத்துக் கொள்வோரை, மற்ற உலோகங்களைக் காட்டிலும் சிறப்புடையதாகப் பொன்னைப் போற்றிக் கொள்வதுபோன்று மனத்துக்கண் வைத்து மதிப்பர் என்று, 'பொன்' என்ற உவமையால் பொறையுடைமையின் தேவையைத் தெளிவாக்குகிறார் வள்ளுவர்.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.[50]

பொன் என்னும் இந்த உவமையைக் கொண்டு, 'எவ்வாறு பொன் சுடச்சுட ஒளிவிடுமோ அவ்வாறே தவம் செய்வோருக்கும்

துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு பிறக்கும்' என்ற தத்துவத்தையும் உணர்த்துகிறுர்.[51]

வேமனர் இந்த உவமை கொண்டு வேறுசில கருத்துக்களைக் காட்டுகிறுர். சுடச்சுடப் பொன்னுக்கு ஒளிவருதலைப் போல, தலைவன் தலைவியிடையே ஊடல் தோன்றத் தோன்றத் தலைவிக்கு அன்பு அதிகமாகும். வயது ஆகஆக (மோகமும் உலோபமும்) காமமும் கஞ்சத்தனமும் அதிகமாகும் என்று சொல்லுகிறுர் வேமனர்.[52]

## எலி

2-2-2-5 அரசனுக்குத் தேவையான படைவகைகளில் மிகச் சிறந்த வீரரைக் கொண்ட மூலப்படையே சிறந்தது; எலிகள் போன்ற பலர் திரண்டுவந்து கடல்போல ஒலித்தாலும்.ஒரு பயனுமில்லை; நாகப்பாம்பு உயிர்த்த அளவில் அந்த எலிகள் கெட்டொழிவதுபோல, வீரர் அல்லார் பலரினும், மூலப்படையினர் போன்ற வீரன் ஒருவன் உயர்ந்தவன் என்று விளக்குகிறுர் வள்ளுவர்.[53]

வேமனர் 'எலி' உவமையைக் கொண்டு 'மூலத்தத்துவத்தை' அறியும் வழியைக் கூறுகிறுர். கூண்டில் விழுந்த எலி தப்பித்துக் கொள்வதற்குப் பலவகையில் முயல்வது போன்று, ஞானத்தைப் பெற நிலைநிறுத்திய மனம், பலப்பல கோணங்களில் நினைக்கும்; அங்ஙனம் போகும் மனத்தைக் கட்டுப்படுத்தி, மெய்மறந்து மூலதத்துவத்தை அறிவதற்கு அஞ்சாது முயல வேண்டும்.[54]

## காய், கனி

2-2-2-6 இன்சொல் கூறல் எல்லோருக்கும் வேண்டற்பாலதே; சிறப்பாக இல்லறத்தாருக்கு மிகமிகத் தேவை. இந்த இன்சொற்களைப் பேச, அல்லவை தேயும்; அறம் பெருகும். ஆதலால் எப்பொழுதும் இன்சொற்களே பேச வேண்டும்; அவ்வாறின்றித் தீயசொற்களைப் பேசுதல், தன்னிடம் காயும் கனியும் இருக்க, கனியை விட்டுக் காயை உண்பது போலாகும்[55] என்கிறுர்.

மக்கள் மரத்திலேயோ, அல்லது பழுக்க வைப்பதாலோ நன்ருகப் பழுத்த கனியை உண்ணுவார்களே தவிரக் காயை உண்ண மாட்டார்கள்; அதுபோலவே துறவிகள் இந்த உலக ஆசைகளை விரும்ப மாட்டார்கள் என்று உணர்த்துகிறுர்.[56]

இவ்வகையில் இருவரும் ஒரேவகையான உவமைகளைக் கொண்டு வேறுவேறு கருத்துக்களை உலகுக்கு உணர்த்துகிறுர்கள்.

## 2-2-3 பொருள் ஒன்று உவமை வேறு

### செய்ந்நன்றியறிதல்

2-2-3-1 நன்றியின் அளவினை அளந்து கூறுதல் இயலாது; அது நன்றியைப் பெற்றவன் நிலையைப் பொறுத்தது; அவன் பண்பைப் பொறுத்தது. நன்றியை அறியும் பண்புடையவன் தினையளவினதாகிய நன்றியை ஒருவன் செய்தாலும் அதனைப் பனையளவினதாக மதிப்பான்.

> தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார்.[57]

வள்ளுவர் சிறுமை, பெருமைகளை விளக்க தினை, பனை என்னும் பொருள்களைக் கொண்டார்.

இக்கருத்தையே வேமனர் வேறொரு உவமையைக் கொண்டு உளங்கொளச் செய்கிறார். உதவியின் பயனை அறியும் பண்பாள னுக்குச்செய்யும் உதவி உகிரளவினதாயினும், அவன் அவ்வுதவியின் பயனை மலையளவினதாக மதிப்பான். பண்பற்றவனுக்கு மலையள வினதாகிய உதவியைச் செய்தாலும் அதனின் பயனை யறியான், ஈண்டு வேமனர், சிறுமை பெருமைகளை விளக்க (உகிர்) நகம், மலை என்ற பொருள்களை ஆளுகிறார்.[58]

### வலியறிதல்

2-2-3-2 ஓர் அரசன் பகைவன் மேல் படையெடுக்க எண்ணும் பொழுது, அவன் தன் வலியையும் மாற்றான் வலியையும் ஆய்ந்து செயல்பட வேண்டும்; பகைவர் எளியவரே ஆயினும், தான் வலியானே ஆயினும் அவர்கள் ஒன்றுகூடின் தன் வலி அழியும் என்பதை அரசருக்கு உணர்த்த விரும்புகிறார் வள்ளுவர்.

> பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்.[59]

வேறொரு உவமையால் இக்கருத்தையே வேமனர் உணர்த்து கிறார். ஒருவன் தன் தோள்வலியை நம்பி எதிரியோடு போர் செய்ய முனையக்கூடாது. இடம், காலம், மாற்றான் வலி முதலிய வற்றை அறிந்தே செயலாற்ற வேண்டும். காரணம், வலியுடைய கல்லால் ஆகிய குடம் மென்மைத் தன்மையதாகிய பாலினைச் சூடேற்றி ஊற்றுவதால் உடைந்து போகும். பீலி மென்மையனது; அதனால் இரும்பு உடையாது; ஆயினும் அளவிற்குமேல் வண்டியில்

அது ஏற்றப்பட்டால் இரும்பச்சும் நொறுங்கிவிடக் கூடும். அப்படியே பால் மென்மையானது; கல்லோ வலிது; அதனுல் கற்குடம் உடையாது; பாலே மிகச் சூட்டோடு ஊற்றுவதால் அந்தக் கற்குடம் சிற்சிலபோது உடைந்து போதலும் உண்டு.[60]

எனவே இருவரும் வலியறிதல் என்னும் ஒரே கருத்தை வேறு வேறு உவமைகளால் அறிவுறுத்துகின்ருர்கள்.

## இடனறிதல்

*2-2-3-3* செய்யத் துணிந்தச் செயல் நிறைவேறுதற்கு வலி காலமறிதலோடு, இடனேயும் அறிதல் வேண்டும். பகைவர்க்கு, அடங்காது போர்க்களத்தில் வேல்வீரரையும் தாக்கித் தன் கொம்பில் கோத்துத் திரியும் களிற்றையும், அது தன் கால் ஆழ்ந்துபோகக்கூடிய சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால், நரியும் அதனேக் கொன்றுவிடலாம். எனவே ஆண்மையும் பெருமையும் உடையாரும், தமக்கேலாதே இடத்தில் சென்று அகப் பட்டுக்கொண்டால், எதிரிகள் மிகவும் எளியராயினும் அவரால் அழிவார்கள்.[61] ஆகவே, இடனறிந்து சமுதாய வாழ்க்கையில் மன்னரும், தலேவரும், பிறரும் தத்தம் செயல்களில் இறங்க வேண்டும் என்று களிறு, நரி உவமைகளேக் கொண்டு அறிவுறுத்து கிருர் வள்ளுவர்.

இந்தக் கருத்தையே வேறு உவமையால் வேமனர் அறிவுறுத்து கிருர். மலே உருவில் பெரியது; வன்மையும் வாய்ந்தது; பெரிய தாகிய அந்த மலேயும் கண்ணுடியில் சிறியதாகத் தெரிகிறது. எனவே தனக்குத் தகாத இடத்தில் மிக்க வன்மையுடையோருக்கும் தோல்வியைப் பெறும் நிலே வரலாம். ஆகவே, ஒருவர் தனக்குத் தகாத இடத்தில் தான் வன்மையுடையோமென்ருே, சிறப்புடை யோமென்ருே பெருமைப்படக் கூடாது; இவ்வாறு மலே, கண்ணுடி கொண்டு வேமனர் உணர்த்துகிருர்.[62]

## நன்றியில் செல்வம்

**2-2-3-4** ஈட்டியவற்றைத் தானும் அனுபவிக்காது, பிறருக்கும் ஈயாது பதுக்கி வைப்போரை வேறுவேறு உவமை களால் இருவரும் இழித்துப் பேசுகின்றனர்.

பொருள் இல்லாத வறியவர்க்கு ஒன்று கொடுத்து உதவும் இயல்பு இல்லாதவனின், ஒருவராலும் விருப்பப்படாத செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்ருற் போன்றது என்றும், ஊர் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றது

என்றும் நன்றியில் செல்வமுடையோரை இழித்துப் பேசுகிருர் வள்ளுவர்.[63]

வேமனரும் இத்தகைய ஈயாதோரிடத்துச் செல்வம் குடிக்கப் பயன்படாத கடல்நீரைப் போன்றது என்று இழித்துப் பேசுகிருர்.[64]

## இறைவன் எங்கும் நிறைந்தவன்

2-2-3-5 அகரமாகிய முதலெழுத்திலிருந்தே உயிர் எழுத்து கள், மெய் எழுத்துகள் தோன்றின; சொற்கள் தோன்றின. எனவே, மொழிக்கு அடிப்படை 'அ'கரமாகிய ஒலியே ஆகும். இந்த அகரத்தைப் போன்றே இறைவனுகிய முதன்மைப் பொருளி லிருந்தே உலகில் இயங்குவன, இயங்காதன, வான், வளி, தீ, நீர், நிலம் என்பன எழுந்தன என்பர்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.[65]

இங்ஙனம் இறைவன் உலக முழுவதும் சேர்ந்து நிறைந்திருப்ப தோடு, 'அகர ஒலி' தானேயாய் ஒலிக்கக் கூடியதைப் போன்று, இறைவன் தானே இயங்கும் ஆற்றலுடையவராகவும் இருக்கிருர் என்ற கருத்தும் இதனுல் தெரியவருகிறது.

வானத்தில் காற்று, கட்டையில் நெருப்பு சேர்ந்திருப்பதைப் போன்று, இறைவனும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் சேர்ந்து நிறைந்திருக்கிருன்; தானே ஒளிமயமாயும் உள்ளான் என்று வேமனரும் உணர்த்துகிருர்.[66]

இவ்விருவரும் ஒரே கருத்தை வேறுவேறு உவமைகளால் இவ்வாறு தெரியப்படுத்துகிருர்கள்.

## நிலையாமை

2-2-3-6 வாழும் உலகம் இத்தன்மையது; உடல் இத் தன்மையது; உயிர் இத்தன்மையது; செல்வம் இத்தன்மையது என்று முன்னமே அவற்றின் நிலையாமையை அறிந்துகொண்டால், பிரிவோ மாறுதலோ நேர்ந்தபோது மனம் கலங்கி வருந்திச் சோர்வடைய நேராது. எனவே நிலையாமைப் பற்றி அறிய வேண்டியுள்ளது.

இந்த நிலையாமையை வள்ளுவர் பத்துப் பாடல்களில் கூறுகிருர்; சில பாடல்களில் உவமைகளாலும் விளக்குகிருர்.

'பெருஞ்செல்வம் வந்து சேர்தல், கூத்தாடும் இடத்தில் மெல்ல மெல்லக் கூட்டம் வந்து சேர்வதைப் போன்றது. செல்வம் நில்லாமல் அழிதல், அந்தக் கூட்டம் கூத்து முடிந்தவுடனே சொல்லாமல் ஒருசேரக் கலைந்துபோதலைப் போன்றது' என்று உணர்த்துகிறார் வள்ளுவர்.[67]

இந்தச் செல்வ நிலையாமையை வேமனர் வேறு உவமைகளால் அறிவுறுத்துகிறார். இளநங்கைகளின் முலைகளின் முறுக்குத்தன்மை (இளமை) சில காலமே இருந்து, பின் அழிதலைப் போன்று, செல்வமும் ஒருவரிடம் நிலையாய் இல்லாமல் அழியும் என்கிறார். இந்தச் செல்வம் ஒருவரிடம் நிலையாய் இல்லாமல் நிலவும் இருளும் போல மாறிக்கொண்டே இருக்கும் என்றும் வேமனர் உணர்த்துகிறார்.[68]

அடுத்து, உடல் நிலையாமையையும் இருவரும் தெளிவுறுத்துகின்றனர். முட்டையும் முட்டைக்குள் கருவும் ஒன்றாகவே தோன்றுகின்றன. கரு வளர்ந்து முட்டையினின்றும் வேறாகும் துணையும் கருவுக்கு ஆதாரமாய் இருந்து, பின் பருவகாலம் வந்தபொழுது முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருக்கும் புள் பறந்து போதலைப் போன்று, உடம்போடு இருக்கும் உயிரும் காலம் வந்தபொழுது உடம்பைத் தனித்துவிட்டுப் பிரியும் என்று உவமை முகத்தால் விளக்குகிறார் வள்ளுவர்.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.[69]

இந்த உடல் நிலையாமையை நீர்க்குமிழி கொண்டு தெளிவுபடுத்துகிறார் வேமனர். நீர்க்குமிழி தோன்றிய சிறிது காலத்திலேயே அழிதலைப் போன்று இந்த உடலும் அழியும் தன்மையுடையது என்கிறார்.[70]

இங்ஙனம் திருவள்ளுவரும் வேமனரும் வேறு வேறு உவமைகளால் தாம் எண்ணிய ஒருதன்மைத்தான கருத்துக்களை உலகுக்கு உணர்த்துகின்றனர்.

**2-3-0** இவ்விருவருடைய உவமைகளை வேறொரு கோணத்திலும் ஒப்பிட்டு ஆராயலாம். வணிகர் தம் பொருள்களை மிகுதியாய் விற்பனை செய்வதற்குப் பலவாறு விளம்பரம் செய்கிறார்கள். பலர் அறியுமாறு செய்கிறார்கள். மிகுதியாய் விற்பனை செய்கிறார்கள். இந்தப் போக்கைப் புலவர்களிடையேகூடக் காணலாம். தாம் உலகுக்கு உணர்த்த விரும்பிய அறவுரைகளைப் பலவகையில்

உணர்த்துகிறுர்கள்; உணர்த்தி வருகிறுர்கள். எந்த வகையில் உணர்த்திஞலும் மனம் என்னும் ஒரே இடத்திற்கே எல்லாம் சேர்கின்றன. மனம் என்னும் இடத்தைச் சேர உணர்த்தும் வாயில் களாக ஐம்புலன்களேயும் புலவர்கள் கொண்டார்கள். இதனுல் ஐவகைச் சுவையோடு அறவுரைகளே உணர்த்தலாயினர். இந்தப் போக்கைத் திருவள்ளுவர், வேமனரிடம் காணலாம்.

காட்டுக்குச் சில :

மெய்

*2-3-1* யாரும் எப்பொழுதும் சினங்கொள்ளலாகாது; சிறப் பாகப் பிறர் தமக்கு இன்னுதவற்றைச் செய்தபொழுதும் சினங் கொள்ளலாகாது; இணரெரி தோய்ந்தாலன்ன இன்னுதவற்றைச் செய்யினும் வெகுளியைக் கொள்ளலாகாது என்று இன்னுமையின் மிகுதியைத் தெரிவிக்க மெய்யால் உணரப்படும் இணரெரியின் இன்னுமையை எடுத்துக்காட்டுகிறுர் வள்ளுவர்.

இணரெரி தோய்வன்ன இன்ஞ செயினும்
புணரின் வெகுளாமை நன்று.[71]

அழல் தொட்டால் சுடக்கூடியது; சுடும்செயல் மெய்யால் உணரப்படும். காமநோயும் சுடும் தன்மையது; தீயைக் காட்டிலும் கொடிய குணம் காம நோய்க்கு உண்டு; 'தீ' தொட்டால் சுடக்கூடியது; காமநோய் காதலர் பிரிவில் சுடும் தன்மையது என்றும் அறிவுறுத்துகிறுர்.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.[72]

வேமனரும்,

'தனது ப்ராதலெல்ல தானம்பு சேயங்க
தனகு பலமடம்சு மினுகராது
தனகு காலுகோய தனதம்முடு ஏட்சுஞ'[73]

'உடன்பிறந்தான் செய்த தானதருமம் தனக்குக் கிடைக்கும் என்று நினேக்கக்கூடாது; தன் கால் வெட்டுண்ட தனக்கு வலி உண்டாகுமேயல்லாமல் உடன்பிறந்தானுக்கு ஏற்படுமா?' என்கிறுர்.

ஒருவனின் உடல் உறுப்பாகிய கால் பெறும் உணர்ச்சியைக் கொண்டு, தருமம் செய்தவனுக்குப் பலனுண்டாகும் என்ற

நீதியை உணர்த்துகிறார் ஆசிரியர். உடல் உறுப்பாகிய தோல் கொண்டும் இக்கருத்தை வலியுறுத்துகிறார் ஆசிரியர்.[74]

## வாய்

*2-3-2* எல்லோரும் எப்பொழுதும் அறம் பயக்கும் இனிய சொற்களையே பேசவேண்டும்; அறம் பயவாத இன்னாதவற்றைப் பேசக்கூடாது என்ற இந்த அறவுரையை உலகுக்கு உணர்த்த விழைந்தார் வள்ளுவர். அவருக்கு வாய்க்கு இனிமையைப் பயக்கும் பழமும், கசப்பைக் கொடுக்கும் காயும் நினைவுக்கு வந்தன. ஒருவன் அறம் பயக்கும் இனிய சொற்களைப் பேசும் நிலையைத் தான் பெற்றிருந்தும், இன்னாதவற்றைப் பேசுதல், தன்னிடம் கனி யிருக்கக் காய் உண்டதைப் போலாகும் என்று உணர்த்துகிறார்.

> இனிய உளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.[75]

ஒருவனால் விரும்பப்பட்ட பணிமொழியாளரின் வாலெயிறு ஊறிய நீர் அவனுக்கு மிகவும் இனிமையுடையதே. இந்த இனிமையை இத்தகைத்தது என்று உணர்த்த எண்ணினார் வள்ளுவர். பாலொடு கலந்த தேனின் சுவை நினைவிற்கு வந்தது. எனவே பாலொடு கலந்த தேன்சுவையைப் போன்றது பணி மொழி வாலெயிறு ஊறிய நீரின் சுவை என்று கூறுகிறார்.

> பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயி றூறிய நீர்.[76]

வேப்பமரம் கசப்புடையது; மரம் மட்டுமன்று, காய், கனி, இலை எல்லாமே கசப்புடையன. அந்த மரத்தை எவ்வளவுதான் பால் ஊற்றி வளர்த்தாலும் அதனின் குணம் மாறாது. அது போலவே தீயவனைத் திருத்த எவ்வளவுதான் முயன்றாலும் அவன் திருந்தான் என்று நாக்கால் பெறும் சுவையைக் கொண்டு இதனை உணர்த்துகிறார் வேமனர்.[77] இவ்வாறே பலாச்சுளை, சருக்கரை, தேன் இவற்றின் சுவையைக் கொண்டும் கன்னிப்பெண் சொற் களின் இனிமையை வேமனர் உணர்த்துகிறார்.[78]

## கண்

*2-3-3* எலும்பு இல்லாத புழுக்கள் வெயிலின்கண் படும் துன்பத்தினை நாம் கண்ணால் கண்டுவருகிறோம்; அவை சாகவும் முடியாமல், வாழவும் முடியாமல் வெயிலின்கண் அவதிப்படு கின்றன. கண்ணால் நாம் காணும் இந்நிகழ்ச்சியைக் கொண்டு

அன்பில்லாதவர்களும் இத்தகைய துன்பத்தை எய்துவர் என்று வள்ளுவர் உணர்த்துகிறார்.

அன்பி லதனை வெயில்போலக் காயுமே
என்பி லதனை அறம்.[79]

பளிங்கு தன்னை அடுத்திருக்கும் பொருளின் நிறத்தை தானே காட்டும்; இது எல்லோரும் கண்ணால் கண்டுவரும் உண்மை. இந்தப் பளிங்குபோல் ஒருவனின் முகம் அவனின் நெஞ்சத்தின் நிலையைக் காட்டிவிடும் என்றும் வள்ளுவர் தெளிவுறுத்துகிறார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.[80]

மரக்கரி கருமையுடையது; கருமையைப் போக்க வேண்டு மென்று வெண்மையான பாலால் கழுவினாலும் கருமை போகாது. இது கட்பொறிக்குத் தெரிகின்ற உண்மை. இந்த உண்மையைக் கொண்டு தீயோன் எவ்வளவுதான் கற்றாலும், அறவுரைகளைக் கேட்டாலும் தன் இயல்பினின்று மாறமாட்டான் என்று மற்றோர் உண்மையை அறிவுறுத்துகிறார் வேமனர்.

எந்த சதுவு சதிவி எண்ணி வின்னனு
வரீனுடு அவகுணம்பு மானலேடு
பொக்கு பாவகடுக போவுனு சைலம்பு.[81]

சூரிய ஒளி உள்ள இடத்தில் இருள் இருக்காது. இது கண்ணுக்குத் தெரிந்த செய்தி. இதுபோலவே ஞானமுள்ள இடத்தில் அஞ்ஞானம் இருக்காது; மனம் எப்பொழுதும் நீதியி னின்றும், கண்ணோட்டத்தின்றும் நீங்காது[82] என்று, இவ்வாறாகக் கட்புலன்கொண்டு இருவரும் தாம் தாம் எண்ணிய உண்மைகளை உணர்த்துகின்றனர்.

## மூக்கு

*2-3-4* அனிச்சப் பூ மிக மென்மையானது; அதனை முகர்ந்துழி அது குழையும் தன்மையது. விருந்தினர்கள் இந்த அனிச்சம் பூவினும் மெல்லியர்; விருந்தோம்புவார் இன்முகங் காட்டாவிடின் விருந்தினர்கள் குழைவர். எனவே முகர்ந்த வழியல்லது வாடாத அனிச்சம் பூவினும் விருந்தினர்களைச் சேய்மைக் கண்ணேயே விருந்தோம்புவார் முகந்திரிந்து நோக்கக் குழைவர் என்ற உண்மையை வள்ளுவர் உணர வைக்கிறார்.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'.[83]

பொருள்கள் எல்லாம் ஒரு தன்மைத்தாய் இருப்பதில்லை; மலர்களிலும் எல்லா மலர்களும் மணங் கொண்டிப்பதில்லை. மணமில்லாத மலர்களும் உண்டு; கொத்தின்கண்ணே மலர்ந்தும் மணமில்லா மலர்கள் இருப்பதை மணமில்லாமையால் அறிகிறோம்; இந்த மலர்களைப் போன்ற மக்களும் இருக்கின்றனர்; அவர்கள் தாம் கற்று வைத்த நூலறிவைப் பிறர் அறியும்வண்ணம் விரித்துரைக்க மாட்டாதவர்கள் என்று தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர். நாற்றமில்லாத மலர்கள் பிறரால் சூடப்படாதவாறு போல, நூலறிவு இல்லாதவரும் பிறரால் சிறப்பிக்கப்பட மாட்டார்கள்.

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்[84]

என்றிவ்வாறு நாற்றத்தால் இருவகையான உண்மைகளைத் தெளிவுத்துகிறார் வள்ளுவர்.

''சந்தனம் நல்ல மணமுடையது; மணத்தால் சிறப்பும் உடையது; சந்தன மணத்தை நுகர்த்து அனுபவிப்போருக்கே அதன் பெருமை தெரியும்; பன்றியால் சந்தனத்தின் பெருமையை அறிய முடியுமா? அது போலவே நல்லோரே நல்லவரின் பெருமைமை அறிவர்; தீயோன் நல்லோரின் பெருமையை எங்ஙனம் அறிவான்? என்று இந்த உண்மையைச் சந்தன மரத்தைக் கொண்டு விளக்குகிறார் வேமனர்.[85] இக்கருத்தை விளக்க மற்றுமோர் உவமையையும் ஆளுகிறார் வேமனர். கள்குடத்திற்கு எப்பொழுதும் கள்ளின் நாற்றம் போகாது; நன்றாகக் கழுவி அலங்காரம் செய்தாலும் குடத்தின் உள்ளிருக்கும் கள் நாற்றம் போகாது; அதுபோலவே மூடனுக்கு உயர்ந்த பதவியைக் கொடுத்தாலும், அவன் பதவிக்கு ஏற்றவாறு நடக்கமாட்டான்; தன்னியல் பினின்றும் மாறமாட்டான் என்று அறிவுத்துகிறார்.[86]

## செவி

2-3-5 குழலொலி செவிக்கு மிகவும் இனிமையுடையதே; அவ்வாறே யாழொலியும் செவிக்கு மிகவும் இனிமையுடையதே; ஆனால், தம் மக்களின் மழலைச் சொற்களின்முன் இவற்றின் இனிமை குறைந்துபோகிறது; இவற்றின் இனிமையைக் காட்டிலும் தம் மக்களின் மழலைச் சொற்களே மிகவும் இனிமையைத்

தருகின்றன. தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டு, இனிமையை நுகராத பெற்றோருக்கே குழலொலியும், யாழொலியும் இனிமையைத் தரும் என்று, தம் மக்களின் மழலைச் சொற்களின் இனிமையின் மிகுதியைப் புலப்படுத்துகிறார் வள்ளுவர்.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.[87]

பாடற்கேற்றவாறு 'பண்' அமைய வேண்டும்; அப்படி அமைந்த பண்ணோடு கூடிய பாடல் செவிக்கு மிகவும் இனிமையைத் தரும்; பாடற்கேற்றவாறு பண் அமையவில்லை என்றால், அது செவிக்கு இனிமையைக் கொடுக்காது. கண்ணும் கண்ணோட்டங் கொண்டு அமைய வேண்டும். அப்பொழுதே அந்தக் கண்ணால் உலகுக்குப் பயனுண்டு; கண்ணோட்டம் இல்லாத கண்ணால் உலகுக்கு ஒரு பயனும் இல்லை.

பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்.[88]

'பித்தளைப் பாத்திரம் மிக்க ஒலியைக் கொடுக்கிறது; பொன் ஆபரணம் அதைவிடக் குறைந்த ஒலியைக் கொடுக்கிறது; செவிப்புலன் மிகுந்த ஒலியைக் கொடுக்கும் பித்தளையைக் காட்டிலும் குறைந்த ஒலியைக் கொடுக்கும் பொன்னாபரணத் துக்கே சிறப்புக் கொடுக்கிறது'.[89] எனவே வெளிஆடம்பரத்தால் ஒரு பொருளின் உண்மைத்தன்மையை அறிய முடியாது; அதனின் இயற்கை இயல்பாலேயே உண்மைத்தன்மையை அறியமுடியும் என்பது வேமனர் கருத்து. இந்த உவமையைக் கொண்டே நற்குண முடையான் பொன்போல் அமைதியும் சிறப்பும் கொண்டிருப்பான் என்றும், அல்லாதவன் ஆடம்பரமாய் இருப்பான் என்றும் உணர்த்துகிறார் வேமனர்.

'மூடன் தன்னைப் பண்டிதன் என்று நினைத்துக்கொண்டு அறிவாளியின் முன் நின்றாலும், அறிவாளி அவனைக் கணக்கிட மாட்டான்; பொறுமையாய் இருப்பான். நாய் குலைக்கக் குதிரைக்கு என்ன கணக்கா?'[90]

நாயின் குரலை குதிரை தன் செவியால் உணர்ந்தாலும் பொருட்படுத்துவதில்லை; காரணம் குதிரை அதனைத் தனக்குப் பாதகமில்லாத நாயின் ஒலி என்று தெரிந்து கொள்கிறது. இந்த உண்மையைக் கொண்டு, மூடனின் ஆடம்பரத்தையும் அறிவாளி

பொருட்படுத்த மாட்டான் என்ற கருத்தைச் செவிப்புலன் கொண்டு உணர்ந்துகிறுர் வேமனர். இவ்வாறு ஐம்பொறி உணர்ச்சிகளைக் கொண்டு, இருவரும் தாம் எண்ணிய கருத்துக்களை எடுத்தியம்புகின்றனர்.

*2-4-0* பெரும்பாலும் கிராமத்தில் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களையே உவமைகளாய்க் கொண்டு உண்மைகளை உணர்த்துவதில் திருவள்ளுவரைக் காட்டிலும் வேமனர் விஞ்சு கிறுர் என்று சொல்லலாம்.

*2-4-1* இல்வாழ்க்கை என்னும் வண்டிக்குக் கணவனும் மனைவியும் எருதுகள் போன்றோராவர். இருவருமே ஒருவருக்கொருவர் இணைந்து அறவழியில் வாழ்க்கையை நடத்த வேண்டும். ஆடவனுக்கு மனைவியே எல்லாச் செல்வங்களுமாவாள். ஆடவன் மாற்றான் மனைவியை உடன்பிறந்தாளாக நினைக்க வேண்டும். இவ்வாறு ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு நடத்தல் சமுதாயத்திலே அனைவருக்கும் வேண்டிய ஒன்று. இவ்வாறின்றி ஒழுங்குமீறி நடக்கச் சமுதாயத்திலும் ஒழுங்கு குலையும்; அறம் அழியும். ஓர் ஆடவன் இந்த ஒழுங்குகளினின்றும் மீறி, பிற பெண்ணை நினைத்தல் கூடாது. அப்படி நினைப்பது மடமையாகும். உழவன் ஒருவன் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் முற்றிய கதிருடைய தன் வயலைவிட்டு, பிறர் வயலில் கீழே விழுந்துள்ள நெற்கதிர்களைப் பொறுக்குகின்ற மடமையினின்றும் மனிதன் நீங்கவேண்டும் என்று அறிவுறுத்துகிறுர் வேமனர்.[91]

*2-5-0* தமிழ் அணியியலார் கூறுவது போன்று, தெலுங்கு அணியியலாரும் அணிகளைப் பல வகையாகப் பாகுபடுத்திக் கூறுகின்றனர். அந்த வகைகளுள் சில வேமனர் பாடல்களில் அமைந்துள்ளமை ஈண்டுச் சொல்லப்படுகின்றன.

### த்ருஷ்ட்டாந்தம்

*2-5-1* வேமனர் உவமையணிக்குக் கொடுக்கும் வேடங்களில் இது ஒன்று. கவிஞர்களுக்குத் தம் கருத்துக்களை அழகுற ஓர் உருவத்தில் வழங்குவதற்கு இந்தத் ‘திருஷ்ட்டாந்த அலங்காரம்’ பெரிதும் பயன்பட்டது.

> உபமான உபமேய வாக்கியங்களுக்கு வேறுவேறு குணங்களை பிம்ப, பிரதிபிம்ப பாவத்தால் சொல்லுதல் த்ருஷ்டாந்த அலங்காரமாகும்.

என்று தெலுங்கு அணிநூல் இதற்கு இலக்கணம் வகுக்கிறது.[92]

வேமனர் தம் பாடல்களில் பல இடங்களில் இவ் வலங்காரத்தை ஆண்டுள்ளார்.[93] காட்டாக,

‘குண்ட கும்பமன்ன கொண்ட பர்வதமன்னனு
உப்பு லவணமன்ன நொகடி காதே?
பாஷ விட்லுவேரு பரதத்வ மொகடி’[94]

பானை, கும்பம் ஒன்றே; மலை, பருவதம் ஒன்றே; உப்பு, லவணம் ஒன்றே; மொழிகள் வேறுவேறுயினும் அவை தெரிவிக்கும் செய்தி ஒன்றே; தெய்வ வடிவங்கள் வேறுவேறுயினும் பரதத்துவம் ‘ஒன்றே’.

இங்கு இறைவனை வேறுவேறு பெயர்களோடு அழைத்தாலும், குறிப்பது ஒரு பரதத்துவத்தையே என்பதை விளக்க, பானையைக் கும்பம் என்றும், மலையைப் பர்வதம் என்றும், உப்பை லவணம் என்றும் வேறு பெயர்களால் சொன்னுலும் குறிப்பது ஒரே பொருளையே ஆகும் என்று, எல்லோரும் அறிந்தவற்றைக் கொண்டு விளக்குகிருர் வேமனர். எனவே இது ‘திருஷ்ட்டாந்த’ அலங்காரமாகும்.

நுண்மையான உண்மைகளை எடுத்துக்காட்ட அனைவரும் அறிந்த உவமைகள் சிலவற்றைக் கூறுதல் அறிஞர் இயல்பு. இவ்வாறு அனைவரும் அறிந்த ஒரு காட்சியின்மூலம் உண்மையை உணர்த்துவதால், இதனை எடுத்துக்காட்டு உவமை என்றனர் தமிழ் அணிநூலார். ‘அதுபோல’ என்னும் தொடர் ஒன்றைச் சொல்லிக் காட்டுதலால், எடுத்துக்காட்டு உவமை என்ற வழக்கு பின்பு தமிழில் நிலைபெற்றுவிட்டது. உண்மையில் தெலுங்கு நூலார் கூறும் ‘த்ருஷ்ட்டாந்தம்’ என்ற கருத்து மிகவும் பொருத்தமுடையது என்பது இங்குக் கருதத்தக்கது. இந்நெறியே கடவுள் தத்துவத்தை விளக்குகின்ற திருக்குறள் முதல் பாடலில் கையாண்டிருத்தலும் நோக்கத்தக்கது.

### நிதர்ஷனுலங்காரம்

2-5-2 “பொருளுக்கும் உவமைக்கும் செயலில் அல்லது குணத்தில் ஒற்றுமை காட்டி. அவை பெறும் பயனில் வேறு படுத்திக் காட்டுவது” என்று விதியமைகிறது இவ்வணிக்கு.[95] வேமனர் பாடல்களில் இந்த அணி அழகும் ஆங்காங்கே அமைந் துள்ளது. காட்டாக,

இனுமு விரிகெனேமி இருமாறு மும்மாரு
காசி அதக நேர்ச்சு கம்மரீடு
மனசு விரிகனேமி மறியன்ட நோச்சுனு?[96]

'உடைந்த இரும்பை உருக்கி உருவாக்கலாம்; ஆனால் உடைந்த உள்ளங்களை ஒட்டி ஒன்றாக்க இயலாது'. இந்தப் பாடலில் உடைந்த இரும்போடு உடைந்த மனத்தை ஒன்றுபடுத்திச் சொல்லியிருப்பதால், நிதர்ஷனலங்கார அழகு அமைந்துள்ளது. அதாவது முறிந்த இரும்புக்கும், முறிந்த மனதுக்கும் முறிதலாகிய ஒற்றுமையுண்டு. ஆனால் முறிந்த மனம் சேராது; முறிந்த இரும்பு சேரும் என்பதால் வேற்றுமை காணப்படுகிறது. உவமைக்கும், உவமானத்துக்கும் ஒற்றுமைப்படுத்தி, அவை பெறும் பயனில் வேறுபடுத்திக் காட்டுவதால், இது நிதர்ஷன அலங்காரமாகும். பொருள், குணம், சாதி, தொழில் என்னும் பொதுத்தன்மை நான்கனுள் சில ஒத்திருந்து, ஏதேனும் ஒன்று வேறுபட்டு இருக்கு மாறு காட்டுதல் வேற்றுமையணி என்னும் தமிழ் அணியியலார் விளக்கம் தெலுங்கினும் விரிவானது என்பது இங்குக் கருதத் தக்கது.[97] தெலுங்கின் நிதர்சன அலங்காரத்தினின்றும் இவ்வணி வேறுபட்டது.

## அர்த்தாந்திய நாயசம்

*2-5-3* இழிந்த எடுத்துக்காட்டால் உயர்ந்த பொருளை விளக்க வேமனர் இந்த அணியை ஆண்டுள்ளார்.

"உள்ள செய்தியை விசேடத்தால் விளக்குவது 'அர்த்தாந் திர நாயசம்' அலங்காரமாகும்".[99]

சாகிகோக லுதுகி சீகாகு படஜேசி
மைலதீசி லெஸ்ஸ மடிசினட்லு
புத்தி செப்புவாடு குத்தின மேலயா?[99]

'அழுக்கு எடுப்பதற்கு வண்ணன் அழுக்குத்துணிகளை அடித்துத் தூய்மைப்படுத்துவான்; அதுபோலவே அறிவுரை புகட்டுவோன் குற்றம் செய்வோரைத் திருத்துவதற்கு அடித்தலும் நல்லதாகும்'.

உண்மையில் அறிவு புகட்டுவான், குற்றம் செய்வோரைத் தேவைப்பட்டால் அடித்தும் அறிவு புகட்டுவான் என்பது உலகத்தில் உள்ள செய்தி; இதனை வண்ணன் அழுக்குத் துணியில் இருக்கும் அழுக்கை அடித்து நீக்கும் செயலாகிய விசேடத்தைக்

கொண்டு விளக்குகிறார் வேமனர். உவம, உருவக அணி புறநடையில் இதனைக் கொள்வர் தமிழ் அணியியலார்.

## காவிய லிங்கமு

2-5-4 'கவி தான் சொல்ல நினைத்ததை அல்லது செய்வதை உறுதிப் படுத்துவதற்கு தனக்குச் சாதகமாய் இருக்கும் நிலையை உணர்த்தி உறுதிப்படுத்துவது காவியலிங்க அலங்காரமாகும்'.[100]

வேமனரிடம் இவ்வணி அழகுடைய பாடல்களும் உள்ளன.

'குலமு எச்சுதக்கு கொடவல பனிலேது
சானுஜாதமய்யெ சகல குலமு
எச்சு தக்கு மாடலு எட்லெரங்கக வச்சு'[101]

'மக்களிடையே காணப்படும் எல்லாக் குலங்களும் ஒன்றன் பின் ஒன்றாக மக்களால் உண்டாக்கப்பட்டவையே. இந்தக் குலங்கள் எல்லாம் உடன்பிறந்தார் போன்றவை'.

எல்லோரும் ஒரு வயிற்று மக்களே. இவர்களில் உயர்வு, தாழ்வு காண்பது மடமையாகும். இவர்களுக்கிடையே உயர்வு தாழ்வை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? ஆகவேதான், வேமனர் குலங்களில் உயர்வு தாழ்வுப் போராட்டம் வேண்டாம் என்றும், எல்லாக் குலங்களும் சமானமே என்றும், குலங்களில் உயர்வு தாழ்வைக் காண முடியாதென்றும் கூறுகிறார். இங்கு ஆசிரியர், குலங்களுக்கிடையே உயர்வு தாழ்வைக் காணமுடியா தென்பதை, எல்லாக் குலங்களும் உடன்பிறந்தார்போல் ஒன்றே என்ற செய்தியைக் கொண்டு உறுதிப்படுத்துவதால் இப்பாடலில் காவ்வியலிங்கா லங்காரச் சுவை அமைந்துள்ளது. இந்த அலங் காரத்தைத் தமிழில் உள்ள வேற்றுப்பொருள் வைப்பணியோடு ஒப்பிடலாம்.

## சாராலங்காரமு

2-5-5 இது வேமனர் கொள்ளும் உவமையின் வேடங்களில் ஐந்தாவதாகும். கவி தான் சொல்லக் கருதிய பொருளினும் சிறந்தது மற்றொன்று இல்லை என்று கூறும் வகையில் உவமை இதில் அமையும்.[102]

வெற்று ஆடம்பரமற்ற, இயற்கையழகு பொருந்திய, தூய மனமுடைய ஓர் கிராமத்துப் பெண் வேமனரின் கற்பனைக் கண்ணுக்குக் காட்சியளிக்கிறாள். நல்லுள்ளமுடைய எல்லோரை யும் கவரும் அன்பு மனம் உடையவள் அவள். அத்தகைய

ஒருத்தியின் வாய்ச்சொல் மற்றெல்லாப் பொருள்களின் சுவையைக் காட்டிலும் இனிமையுடையது என்பதை உணர்த்துகிறுர் வேமனர்; உணர்த்துங்கால், அவள் வாய்ச்சொல், பலாச்சுளேயைக் காட்டிலும், சருக்கரையைக் காட்டிலும், கரும்புச் சாற்றைக் காட்டிலும் மிக இனிமை உடையது என்கிறுர். இங்கு ஆசிரியர் ஓர் இளநங்கையின் இன்சொற்களுக்கு உலகத்திலிருக்கும் மிக மதுரமான பொருள்களும் ஈடாகா என்று கூறியிருப்பதால், இது சாராலங்காரமாகும்.

பனச தொனல கன்ன பன்சதாரல கன்ன
ஜுன்டி தேனெ கன்ன ஜுன்னு கன்ன
செரகு ரசமு கன்ன செலுல மாடலெ தீபி.[103]

இங்ஙனம், மக்களின் அன்ருட அனுபவத்திலுள்ள பொருள்கள் வெவ்வேறு கோணங்களில் உவமைகளாய் அமைந்து, பாடல் களுக்கு அழகு கொடுப்பதோடு, கருத்துக்களேயும் தெளிவாய் விளக்கியிருத்தலே அறியலாம். உவமையணியின் ஒருவகையாகிய 'பலவயிற்போலி' உவமையணியோடு ஒருவாறு இதனே ஒப்பிடலாம்; ஆனுல் எல்லாவற்றினும் உயர்ந்தது இது என்னும் முறை தமிழில் இல்லே.

## உருவகம்

*3-0-1* உணர்வும், அறிவும் மனிதனுக்கு இயல்பாய் அமைந் துள்ள அகக்கூறுகள். சிற்சிலபோது அறிவு மிகும்; சிற்சிலபோது உணர்வு மிகும். சிலபோது உணர்ச்சியே நிறைந்து அறிவை மறைத்து விடுவதும் உண்டு. உணர்ச்சியே நிறைந்தபோது மனம் உவமிக்கும் பொருளேயும், உவமையையும் ஒன்ருக நினேக்கிறது; இதனேயே 'உருவகம்' என்கிறேம்.

உவமையும் பொருளும் வேற்றுமை யொழித்து
ஒன்றென மாட்டின் அஃதுருவகம் ஆகும்.[104]

தண்டியலங்காரம் இவ்வாறு இதற்கு விதி வகுக்கிறது. உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றக் கூறுதல் உவமையணி யாகும். இருபொருளேயும் வேறுவேருகக் காணுமல் ஒன்றையே மற்றென்ருகக் காண்பது உருவக அணியாகும் என்பது இவருடைய கருத்து.

தொல்காப்பியரும் இவ்வேறுபாட்டைக் கருதியுள்ளார்.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃது உவமமாகும்[105]

என்று தொல்காப்பிய நூற்பா அமைந்துள்ளது.

*3-0-2* கருத்து நயமும், செவிக்கு இன்ப நயமும் பொருந்திப் பொருளாலும், சொல்லாலும் இந்த உருவகம் அழகுபடுத்தி நிற்கிறது. கவிதை சிறக்க உவமையணி போன்று இதுவும் காரணமாய் உள்ளது. உவமையைக் காட்டிலும் உருவகம் சுருக்கமாய் அமைவதால் கவிதை சிறக்க ஒருபடி அதிகக் காரணம் 'உருவகம்' என்றும் கூறலாம். இந்த 'உருவகம்' உவமையின் சுருக்கத்தால், நெருக்கத்தால் வந்திருக்கலாம். உவமையைச் சுருக்கிச்சொல்வதில் ஆற்றலும் அழகும் இனிமையும் இருப்பதாக உணர்ந்தனராதல் வேண்டும். எனவேதான், உவமை விரிகள் உவமத்தொகைகளாகிப் பின் தொகைகளும் சுருங்கி 'உருவகம்' ஆகியிருக்கலாம்.

*3-0-3* மேனாட்டு அறிஞர் ரில்லே என்பாரும் "'உருவகம்' என்பது அடக்கிச் செறித்த உவமையே" என்று கூறுவர்.[106] "கரும்புச்சாறு திரண்டு பாகாகிக் கற்கண்டு நிலையைப் பெறும் போது கற்கண்டு சுவைமிகுந்து காணப்பெறுவது போலவே, உவமையும் சுருங்கி அடங்கி உருவகமாக வெளிப்படுங்கால் அந்த அடக்கத்தில் புதிய ஆற்றலும் சுவையும் பிறப்பது ஒரு விந்தையே ஆகும்" என்றும் கூறுவர்.[107]

"ஒரு பொருளோடு நேரடியாகப் பொருந்தாத அல்லது நேர்ப் பொருள் சாராத பொருளையோ பண்பையோ, அதற்குப் பொருந்துவதைப் போன்று ஒப்புமையாக்கத்தாலும், உருவக அமைப்பு முறையாலும் சுட்டிக்கூறுவது உருவகமாகும். இவ்வாறு அஃது ஓர் அழுத்தமான ஒப்புமை ஆக்கமாக அமைகிறது; அது உவமை என்ற வடிவத்தினை உள்ளுறையாகக் கொண்டு வெளிப்படுகிறது"[108] என்று, 'என்சைக்ளோபீடியா பிரிடானிகா' கூறுகிறது.

*3-0-4* 'பிற அணிகளில் காண முடியாத நடைச் சிறப்பு, தெளிவு, அழகு ஆகியவற்றைக்கொண்டு உருவகம் கவிதையைக் கவினுறச் செய்கிறது' என்று அரிஸ்டாட்டில் குறிப்பிட்டுள்ளார்.[109] இத்தகைய பண்புகளை எல்லாம் வள்ளுவரிடத்தும் வேமனரிடத்தும் காணலாம்.[110] திருவள்ளுவர், தன் கால நிலைக்கேற்ற சில சொற்களால் பாடல்களை ஆக்கியமையால், ஓரிரு சொற்களிலேயே இந்த உருவக அணி நயத்தை அமைத்துக் காட்டுகிறார். வேமனர் திருவள்ளுவரைக் காட்டிலும் ஒவ்வொரு பாடலிலும் மிகுதியான

சொற்களை ஆண்டமையால் அவர் பாடல்களில் உருவகம் விரிந்த நிலையில் பல இடங்களில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் இவர்கள் கொண்ட யாப்பமைதியே ஆகும். இவ்வாறே உவமை முதலிய பிற அணிகளிலும் வள்ளுவர் சொற்சிக்கனத்தைக் கைக்கொள்ள, வேமனர் சிறிது விரிவாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

காட்டுக்குச் சில

*3-1-1* பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.[111]

இப் பாடலில் பிறவியைக் கடலாக உருவகம் செய்துள்ளார். கடலாகிய பிறவியைக் கடக்கும் கருவியை உருவகம் செய்யவில்லை. இறைவன் திருவடி நீந்தும் புணையாக உணரப்படுகிறது. இத் தகைய நயத்தோடு பல பாடல்கள் திருக்குறளில் உள்ளன.

*3-1-2* இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.[112]

ஈண்டு இரந்துவாழ்கின்ற எளியோர், பிறர் இல்லையென்றதும் மனமுடைந்துபோவர் என்பதனை நன்கு சித்திரித்துக் காட்டுகிறார் வள்ளுவர். வறுமை ஒரு பெருங்கடல்; அக்கடலைக் கடக்க 'இரவு' என்ற காவலற்ற தோணியினைப் பயன்படுத்த, அது இருக்கும் பொருளை ஒளித்துவைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லுகின்ற 'கரவு' என்னும் பாறையில் மோதிச் சிதைகிறது என்று, இரப்போர் மனமுடைந்துபோதலைப் பாறையில் மோதி அழியும் தோணிக்குப் பொருத்திக் காட்டுகிறார். இதனால் வறுமைக்கடலை முயற்சியால் கடக்காது, இரவு என்னும் தோணியால் கடக்க முயல்வது கொடிது என்றும் உணர்த்துகிறார். இப் பாட்டினைப் பரிமேலழகர் அவய உருவகத்திற்குச் சான்றாகக் காட்டிள்ளார்.

*3-1-3* வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.[113]

இப்பாடலில், உயர்ந்தோர், இழிந்தோர் என்னாது விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்களை உருவகம் செய்கிறார். அந்தத் தோள்கள் உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும் என்று இருபொருள்களையும் இயைபுபடக் கூறுகிறார்.

இவ்வாறு சொன்னவர் உள்ளம் ஒன்றிய காதலன் தன் காதலியின் தோளைப் பாராட்டுகையில் அது அமிழ்தாய் இருக்கிற தென்று சொல்வதாகவும் அமைத்துள்ளார் மற்ருெரு குறளில்.

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.[114]

இவை இரண்டையும் உடன்வைத்து நோக்கும்பொழுது, இந்த உருவக உவமைகளின் பொருத்தம் நன்கு புலனுகும்.

*3-2-0* வேமனர் பாடல்கள் குறட்பாக்களைக் காட்டிலும் ஓர் அடி அதிகம் பெற்று அமைந்துள்ளன. எனவே அவற்றில் உருவக அணிக்கு வள்ளுவரினும் மிகுதியான சொற்கள் ஆளப்பட்டுள்ளன. தெலுங்கு அணியியலார் வடமொழியார் கூறுவது போன்று உருவக அணியை 'ரூபகாலங்காரம்' என்று சொல்லுவர். திருவள்ளுவரைப் போன்று வேமனரும் அழகு செய்யவும், எண்ணிய கருத்தை விளக்கமாய்ச் சொல்லவும் இந்த அணியைத் தம் பாடல்களில் ஆங்காங்கு ஆண்டுள்ளார். தெலுங்கு அணி நூல் கூறும் அபேத ரூபகம், தாத்ரூப்ய ரூபகம்[115] ஆகிய இருவகைகளும் வேமனர் பாடல்களில் உள.

## அபேத ரூபகம்

*3-2-1* சித்வாஜினெக்கி சிச்சிம்ப நேரக
தத்ரபடி நந்த தருனு நொக்கோ?
வாரணசி தனகு வையாசி காபோலு.[116]

'மனமாகிய குதிரையேறி இதனை ஒழுங்காய் நடப்பிக்க வேண்டும்; அவ்வாறு செய்வதற்கு அச்சப்படுவதாலும், காசிக்குப் போவதாலும் ஒரு பயனும் இல்லை.'

இங்கு மனமாகிய குதிரையேறி அதனை நடப்பிக்க வேண்டும் என்று சொல்லுவதால், நடத்தும் மனிதனைக் குதிரையோட்டியாக உணரச் செய்கிருர் ஆசிரியர். இந்தப் பாடலில் மனத்துக்கும் குதிரைக்கும் வேறுபாடு காட்டாது, இரண்டையும் ஒன்றே என உருவகம் செய்வதால், இது அபேதருபகாலங்கார மாகும். தண்டி நூலாரின்படி இதனை ஏகாங்க உருவக அணியாகக் கொள்ளலாம்.[117]

## தாத்ரூப்ய ரூபகம்

*3-2-2* கடமு கான்கசேசி கனகுணமெத்துகா
தவலி கர்மமுலனு நுவுல கேசி
தெலிசி கானுகாடு திலகார காத்மமு.[118]

'உடலைச் செக்காய்க் கொண்டு, குணங்களை எருதுகளாய்க் கொண்டு, வினைகள் என்னும் எள்ளைச் செக்காடினால், எண்ணெய் ஆகிய மோட்சத்தைப் பெறலாம்.'

இப் பாடலில் உடலைச் செக்காகவும், குணங்களை எருது களாகவும், வினைகளை எள்ளாகவும், மோட்சத்தை எண்ணெ யாகவும், ஒற்றுமை உடையவற்றை வேறுபடுத்திக் காட்டி உருவகம் செய்வதால், தெலுங்கு அணியிலக்கண நூலார் இதனை 'தாத்ரூப்ய அலங்காரம்' என்பர். தண்டி இதனை இயைபு உருவகமாகக் கொள்ளும். இவையன்றி, ரூபகாதி யோக்தி முதலிய அணிவகை களையும் வேமனர் ஆண்டுள்ளார்.

## ரூபகாதி யோக்தி

*3-2-3* அந்தரானி பண்டு அடவி வென்னெலளபட
நுண்டு சூட பெத்த பண்டுகானு
பண்டு படின செட்டு பட்டங்கலேரயா?[119]

'முக்திப் பழம் எட்டாதது; அதனைக் கானகத்தில் நிலா வெளிச் சத்தால் தான் கண்டு அடைய முடியும்; அந்த முக்திப் பழமுள்ள மரத்தைக் காண்பது அரிது.'

இந்தப் பாடலை ரூபகாதி யோக்தியாகக் கொள்வர். தமிழில் உள்ள ஏகாங்க உருவகத்துக்கு ஒத்ததாக இதனைக் கொள்ள லாம்.[120] இவ்வாறு வேமனர் பல இடங்களில் வெவ்வேறு உருவங்களில் இவ்வணியை ஆண்டுள்ளார்.[121]

## முடிவு

*3-3-1* திருவள்ளுவரும் வேமனரும் உவமை, உருவகம், ஐம்புலன்கள் முதலிய கருவிகளால் பல கோணங்களில் தம் கவிதைத் திறமையைக் காட்டித் தாம் உலகுக்கு உணர்த்த விரும்பிய உண்மைகளை உணர்த்தியுள்ளனர். உண்மையை மயங்க வைப்பதால் புனைந்துரைகள் அறநூல்களில் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை; இதனால்தான் இராமாயணம், மகா பாரதம் முதலிய காவியங்களில் உள்ளவாறு திருக்குறளிலும்,

வேமனர் பாடல்களிலும் புனைந்துரைகள் பெருக இடம்பெறவில்லை. இருவரும் தாம் உணர்த்த விரும்பிய கருத்துக்களை வற்புறுத்திக் கூறும் நோக்கில் சில இடங்களில் அதிகப்படுத்திக் கூறிச் சிறந்த கவிநயமுடைய புலவர்களாகத் திகழ்கின்றனர். உவமைகளை ஆள்வதில் (எண்ணிக்கையில்), வேமனரே விஞ்சிநிற்கிறார் என்று கூறலாம். அவர் ஏறக்குறைய தாம் உணர்த்த விரும்பிய எல்லாக் கருத்துக்களையும் பொருத்தமான, மிகவும் எளிமையான, அன்றாட மக்கள் அனுபவத்திலுள்ள உவமைகளால் விளக்கியிருக்கிறார்.

*3-3-2* புலவர்கள் ஆளும் ஒருசில உவமைகள், உருவகங்கள், இந்திய மண்ணுக்கு, திராவிட மண்ணுக்குப் பொதுமையானவை. இவ்விரு புலமைச் சான்றோரின் ஒருசில உவமைகள் உருவகங்கள் அத்தந்த மண்ணுக்கேற்றவாறு அமைந்திருப்பினும், அவற்றால் உணர்த்தும் பொருள்கள் இந்தியமண்ணுக்கு திராவிட மண்ணுக் குப் பொதுமையானவை. அவர்கள் தாம் உலகுக்கு உணர்த்த விரும்பிய அறவுரைகளை ஐம்புலன்கள் வாயிலாக உணர்த்துதலும் ஒரு பொதுநெறி. இவ் உண்மைகள் இந்த இயலால் தெளிவு என்னும் பெறுகின்றன.

## குறிப்பெண் விளக்கம்

1. உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்ற மனிதனின் விருப்பமே கலையின் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணங்களில் முதன்மையானது என்று டாக்டர் மு. வ. கூறுகிறார். —இலக்கியத் திறன், பக். 49.

2. *Abhinavagupta, Abhinavabharathi, P. 10.*

3. *Rushton Fair elough, Horace Ars Poetica, P. 18.*

4. காண்க : இவ்வாய்வேடு, இயல் - 9.

5. காண்க : இவ்வாய்வேடு, இயல் - 9.

6. *Shelly, P.B., The Selected Poetry and Prose of Percy, P. 494.*

7. *Wincheste C.T. Some Principles of Literary Criticism, P. 118.*

8. *John Ruskin, Modern Painters, Vol. II, PP. 251-252,*

9. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பக். 821

10. *Abercrombie, L., Principles of Literary Criticism, p.86.*

11. *Richards, I.A., Principles of Literary Criticism*, pp. 118-119.

12. மாயாண்டி, சங்க இலக்கியத்தில் கற்பனை, பக். 47.

13. *Winchester, CT., Some Principles of Literary Criticism*, p. 123.

14. அறிவுக்கு விருந்து, பக். 77.

15. சங்க இலக்கியத்தில் கற்பனை, பக். 40-47

16. பிங்கல நிகண்டு, 3050.

17. சேக்கிழாரும் திருக்கண்ணப்ப நாயனாரும், பக். 29.

18. சேதுப்பிள்ளை, ரா. பி., திருவள்ளுவர் நூல்நயம், பக். 112.

19. திவாகரம் 28 அணிகளையும், தண்டி 35 அணிகளையும் கூறுகின்றன.

20. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக். 19.

21. தொல். உவமையியல், பக். 4.

22. தண்டி, சூத். 30.

23. *Wordsworth, Literary Criticism*, p. 164.

24. *Richards, I.A., Principles of Literary Criticism* p. 239

25. திரு. வ. மா. 45.

26. *Lyon, P. H. B., The Discovery of Poetry*, pp. 192-193.

27. வே. ப. ர. 380.

28. குறள் 37.

29. *V.V.* 471.

30. குறள் 208.

31. *V.V.* 803.

32. வே. ப. ர. 449.

33. குறள் 495.

34. வே. ப. ர. 610.

35. குறள் 496.

36. வே. ப. ர. 609.

37. குறள் 490.
38. வே. ப. ர. 153.
39. வே. ப. ர. 88.
40. வே. ப. ர. 807.
41. குறள் 527.
42. குறள் 481.
43. *V.V.* 239.
44. வே. ப. ர. 233, 153.
45. குறள் 881.
46. குறள் 1309.
47. வே. ப. ர. 697.
48. வே. ப. ர. 1863.
49. இவ்வாய்வேடு, பக். 232
50. குறள் 155.
51. குறள் 267.
52. வே. ப. ர. 1126.
53. குறள் 763.
54. வே. ப. ர. 817.
55. குறள் 100.
56. வே. ப. ர. 1239.
57. குறள் 104.
58. வே. ப. ர. 497.
59. குறள் 475.
60. *V.V.* 639.
61. குறள் 500.
62. வே. ப. ர. 456.
63. குறள் 1007, 1008.
64. வே. ப. ர. 2219.
65. குறள் 1.
66. வே. ப. ர. 1290.
67. குறள் 332.
68. வே. ப. ர. 1399.
69. குறள் 338. (பரிமேலழகர் இந்த உரையைக் கொள்கிறார்.)

70. வே. ப. ர. 1053.
71. குறள் 308.
72. குறள் 1159.
73. வே. ப. ர. 698.
74. வே. ப. ர. 583.
75. குறள் 100.
76. குறள் 1121.
77. வே. ப. ர. 440.
78. வே. ப. ர 2419.
79. குறள் 77.
80. குறள் 706.
81. வே. ப. ர. 19.
82. வே. ப. ர. 514.
83. குறள் 90.
84. குறள் 650.
85. வே. ப. ர. 63.
86. வே. ப. ர. 376.
87. குறள் 661.
88. குறள் 573.
89. வே. ப. ர. 362.
90. வே. ப. ர. 237
91. வே. ப. ர. 10.
92. முசனூரி வெங்கடசாஸ்த்திரி, வித்தியார்த்தி கல்ப தருவு, அலங். 18.
93. வே. ப. ர. 23, 96, 361, 456, 439, 2407.
94. வே. ப. ர. 206.
95. வித்தியார்த்தி கல்பதருவு, அலங். 19.
96. வே. ப. ர. 366.
97. தண்டி. நூற். 49.
98. வித்தியார்த்தி கல்பதருவு, அலங். 61.
99. வே. ப. ர. 692.
100. வித்தியார்த்தி கல்பதருவு, அலங். 60.
101. வே. ப. ர. 967.

102. வித்தியார்த்தி கல்பதருவு, அலங். 49.

103. வே. ப. ர. 2419.

104. தண்டி. நூற். 35.

105. தொல். உவமவியல், சூ. 9.

106. *Ridly, M.R., Poetry and the Ordinary Reader.* p. 64

107. சுப்பு ரெட்டியார், ந., கவிதை அனுபவம், பக். 216.

108. *Encyclopedia Britannica,* Vol. 15, p. 328.

109. *Hutchins Robert (Ed.), The Works of Aristotle,* Vol. 11, p. 65.

110. குறள் 8, 24, 29 38, 60, 71. 95, 168, 196, 299, 306, 361, 392, 393, 421, 482, 505, 555, 567, 575, 581, 600, 615, 627, 701, 710, 753, 759, 773, 796, 821, 853, 860, 872, 918, 919, 936, 983, 985, 986, 1014, 1016, 1029, 1030, 1032, 1040, 1087, 1093, 1102, 1113, 1163, 1164, 1166, 1167, 1227, 1228, 1251, 1324.

111. குறள் 10.

112. குறள் 1068.

113. குறள் 919.

114. குறள் 1106.

115. அடிதமு சூரகவி, ஆந்திர சந்திராலோகமு, பக். 42.

116. வே. ப. ர. 1162.

117. தண்டி. நூற். 37.

118. வே. ப. ர. 981.

119. வே. ப. ர. 783.

120. தண்டி. நூற். 37.

121. வே. ப. ர. 458, 898, 1032, 1205, 2039, 1878, 2176, 2103, 2061, 1176, 1833, 1651, 1386, 2352, 2446.

# இயல்—8

# வடிவம்

*0.* இலக்கியக் கலைக்குக் கற்பனை அகவடிவமாகும்; புறவடிவம் மொழியால் அமைவது. அவ்வடிவம் கற்பனையின் கீழே காணப் பட்டது; புற வடிவமாகிய மொழிக் கூறுகள் ஒலிநயம், சொல்லாட்சி, பழமொழி என இப்பகுதியில் நோக்கப் பெறுகின்றது.

## ஒலி நயம்

*1-0-1* ஒலிகள் அளவாலும், தன்மையாலும், முயற்சியாலும் வேறுபட்டு ஒழுங்காக அமைந்து, வந்த அமைப்பே திரும்பத் திரும்ப வந்து இன்பம் பயப்பது ஒலிநயம் எனப்படும்.

*1-0-2* இந்த ஒலிநயம் கேட்பவரின் செவி வாயிலாக அவருடைய உடல் நரம்புகளை இயக்குவது. கிறித்தோபர் கால்டு வெல் என்பவர், "கண் செவி முதலியவை வெளியுலகத்துப் பொருள்களில் ஈடுபடாதவாறு, ஒலிநயம் அவற்றின் செயலை ஒடுக்கி, உணர்ச்சிகளை உடம்பின் அளவில் அமைத்து நிறுத்திவிடும்" என்பர்.[1] "மனிதனின் மனம் அறிவுலகத்திலிருந்து உணர்ச்சி உலகத்தை எட்டும்போது, உடனே அதற்கு ஏற்றதாகிய ஒலிநயத்தை நாடும்" என்பர் ஓர் ஆய்வாளர்.[2]

*1-0-3* "பாட்டில் புலவரால் அமைக்கப்பட்ட உணர்ச்சியைப் படிப்பவருக்கு உய்ப்பது ஒலிநயமே. வெறுஞ் சொற்கள் கருத்துக் களை மட்டுமே விளக்கவல்லன. புலவரின் உணர்ச்சி அனுபவத்தை விளக்கும் ஆற்றல் அந்தச் சொற்களுக்கு இல்லை; அத்தகைய சொற்களின் வாயிலாக உணர்ச்சி புலப்படும்போது ஒலிநயம் வந்து உதவுகிறது. ஒலிநயம் இல்லாமல் புலவரின் உணர்ச்சி அனுபவம், பாட்டின் சொற்களில் வாழ வழியில்லை" என்று அபெர்கிராம்பி கூறுகிறார்.[3]

## ஒலிநயம், மோனை, எதுகை

*1-0-4* ஒலிநயம் வேறு; மோனை. எதுகை முதலியன வேறு· உணர்ச்சி மிகும்போதெல்லாம் அதற்கேற்றவாறு ஒலிநயம் அமையும்; அது தானாகவே வந்து அமையும். மோனை, எதுகை முதலியன தாமாகவே வந்து அமைதல் குறைவு; செய்யுள் இயற்றுவோர் விரும்பி அமைப்பதே மிகுதி. இந்த மோனை, எதுகை ஒலிநயம் சிறந்து நிற்கக் காரணமாய் உள்ளன. இயற்கையாய் ஒலிநயத்தோடு அமைந்த பாடல்களில், இயற்று வோரை அறியாமலே சிலபோது மோனை, எதுகை நயம் அமைதலும் உண்டு.

வள்ளுவர் பாடல்களிலும், வேமனர் பாடல்களிலும் இயற்கை யாய் அமையும் ஒலிநயமும், மோனை எதுகைகளால் அமையும் ஒலிநயமும் அமைந்து பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

## திருக்குறள்

*1-1-1* இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.[4]

இப்பாடலில் 'இறந்தார்' 'துறந்தார்' என்னும் சொற்கள் மீட்டும் மீட்டும் வந்து ஒலிநயம் பொருந்தியுள்ளது. ஈண்டு 'இறந்தார் இறந்தார் அனையர்' என்னும் தொடரில், சினத்தின் கண்ணே மிக்கார் செத்தாரோடொப்பர் என்றும்; 'சினத்தைத் துறந்தார் துணை' என்னும் தொடரில், சினத்தை நீத்தவர் சாதலையொழித்தார் அளவினர் என்றும் பொருள்பட்டு, 'இறந் தார்', 'துறந்தார்' என்னும் சொற்கள் வெவ்வேறு பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளன.

*1-1-2* ஒரேசொல் ஒரே பொருளில் வற்புறுத்தலைக் கருதிப் பன்முறை கூறுதலானும் ஒலிநயம் அமையும். இந்த உண்மையைத் திருவள்ளுவரின் கீழ்வரும் பாடல்களால் அறியலாம்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.[5]

*1-1-3* திருக்குறளில் 'எதுகைத்தொடை' நயம் பல பாடல் களில் உண்டு; மோனையும் எதுகையும் அமைந்த சொற்கள் ஒரே

பாடலிலே அமைந்து உள்ளன. இன எழுத்தோடு கூடிய மோனைத்தொடை அமைந்த பாடல்களும் உள்ளன.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.[6]

ஈண்டு, 'கெடுப்பதூஉம்', 'எடுப்பதூஉம்' சொற்கள் எதுகைத் தொடை நயத்தோடு ஓரோசை நயத்தையும் பெற்றிருக்கின்றன.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.[7]

இப்பாடலில் 'தன்னைத்தான்', 'தன்னையே' என்னும் சொற்களில் மோனையும், எதுகையும் அமைந்துள்ளன. மற்றும் காக்கின், காக்க, காவாக்கால் முதலிய சொற்களும் ஓரோசையோடு அமைந்து வந்துள்ளமையை அறியலாம்.

## வேமனர் பாடல்கள்

*1-2-1* எருக உண்டுவானிகி எருகயே உண்டுனு
எருக லேனிவானிகி எருக லேது
எருக லேனி எருகனு எருகுட தத்வமு'.[8]

'அறிவிலிக்கு உலக ஞானம் என்றும் கிடைக்காது; ஞானி எல்லாச் செய்திகளையும் அறிவான்; அந்த உத்தம ஞானத்தைத் தெரிந்துகொள்ளுதலே தத்துவ ஞானமாகும்.'

இந்தப் பாடலில் 'எருக' என்னும் சொல் மீண்டும் மீண்டும் உடன்பாட்டுப் பொருளினும் எதிர்மறைப் பொருளினும் வந்து பாடல் ஓசை நயத்தோடு அமைந்துள்ளது.

*1-2-2* பயலு பயலுகானு பரிகிம்ப ஜாலக
பயலு லோனிவாரு பயட படிரி
பயலு லோனிசாலு பரிகிம்ப தத்துவமென.[9]

'சாதனையாளர்கள் வெட்டவெளியை (பயலு) வெட்டவெளியாய் அறுந்துகொள்ளாது அவமானப்பட்டார்கள்; வெட்டவெளியில் இருக்கும் உண்மையை அறிதலே பிரம்மம் ஆகும்.'

இந்தப் பாடலில் 'பயலு' என்னும் சொல் இருபொருளில் மீண்டும் மீண்டும் வந்து பாடலுக்கு அழகைக் கொடுத்து நிற்கிறது.

*1-2-3* பரகலேமி சேத பந்துவுல் பகவாரு
பரகலேமி சேத பரமு தப்பு
பரகதேமி சேத பரபதியுனு தப்பு.[10]

'வறுமையாளனுக்குத் தன் சுற்றத்தாரே விரோதிகள்; வறுமையாளனுக்குப் பரத்தினும்' நல்ல நிலை கிடையாது; வறுமையாளனுக்குப் 'பரகதியும்' கிடைக்காது.'

இந்தப் பாடலில் 'வறுமை' என்று பொருள்தரும் 'பரகலேமிசேத' என்னும் சொல், ஒவ்வொரு அடியின் முதலில் ஒரே பொருளில் வந்து பாடலைப் பக்குவப்படுத்தி நிற்கிறது.

*1-2-4* ஆகடிகி தொலங்கு நாசார விதுவெல்ல
சீகடிகி தொலங்கு சித்தசுத்தி
வேகடித தொலங்கு வெனுகடி பிகியெல்ல.[11]

''சூல் கொண்ட பெண்ணுக்கு உடலின் பின்பாகம் உறுதியை இழத்தல் போன்று, ஆடம்பரவாதிக்குப் பசி எடுத்தபொழுது ஆசாரங்கள் இருக்கா; இரவு வர மனம் தளர்ந்து பெண்ணாசை கொள்வான்.'

இப்பாடலில் 'ஆகடிகி', 'சீகடிகி', 'வேகடிகி' என்னும் சொற்கள் ஒலியில் ஒற்றுமைபெற்று எதுகை நயத்தோடு அமைந்துள்ளன. 'தொலங்கு' (நீங்கு) என்னும் சொல் ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது.

இவ்வாறு பல்வேறு போக்குகளில் ஒலிநயம் பெற்று வேமனர் பாடல்கள் பல அமைந்துள்ளன.[12]

## சொல்லாட்சி

*2-0-1* இலக்கியத்திற்குக் கருத்து, உணர்ச்சி, கற்பனை. அழகிய வடிவம் ஆகிய உறுப்புக்கள் மிக இன்றியமையாதன, இவற்றுள் உணர்ச்சி, வீரம், காதல், இரக்கம், ஐயம் முதலிய நிலைகளும், கலைஞர் ஆளும் சொற்களால் வெளிப்படுகின்றன. எனவே, கலைஞர் ஆளும் சொற்கள் அவர்கள் கொண்ட உணர்ச்சிகளை எடுத்துக்காட்டும் முத்திரைகளாக அமைகின்றன. இத்த உணர்ச்சிகளின் காரணங்களும், உணர்ச்சிகளை எய்தும் முறைகளும் மனிதர்க்கு மனிதர் வேறுபட்டிருக்கலாம். ஆனல் உணர்ச்சிகள் ஒரே தன்மையானவை; உணர்ச்சியில் மாற்றம் காண இயலாது.

2-0-2 இலக்கியத்தில் பலவகையான உணர்ச்சிகள் இடம் பெறுகின்றன. இவற்றுள் மகிழ்ச்சி, வேடிக்கை, கவலையற்ற மன நிறைவு முதலிய நிலைகளில் பெறும் உணர்ச்சியைக் காட்டிலும், அச்சம், துயரம், கவலை முதலிய நிலைகளில் பெறும் உணர்ச்சியே மக்களால் அதிகம் விரும்பப்படுகிறது. இதனுல்தான் இலக்கியங் களுள் துன்பியல் இலக்கியங்களும், திரைப்படங்களுள் துன்பியல் படங்களுமே மக்கள் கவனத்தை அதிகம் ஈர்க்கின்றன. நீண்ட காலம் நிலைத்து வாழ்கின்றன.

2-0-3 "உயர்ந்த உணர்ச்சி நிலையின்போது கவிஞர்க்குத் தாமாகவே தக்க சொற்கள் வந்து அமைந்து ஏற்ற பொருளையும் ஒலியையும் பயந்து நிற்கும். சினம், இரக்கம் முதலிய உணர்ச்சி களுக்கும் பெருமிதம் முதலான மற்ற உணர்ச்சிகளுக்கும் ஏற்ற வாறு சிலசில சொற்கள் வந்து அமையும். அந்தச் சொற்கள் கற்பவரின் மனத்தில் அந்தந்த உணர்ச்சிகளை எழுப்பவல்லனவாக விளங்கும். அவை அந்த உணர்ச்சிகளுக்கு ஏற்ற வன்மை மென்மை ஒலிகளையும் பெற்றுக் கற்பவரின் உணர்ச்சிகளைத் தூண்ட வல்லனவாக அமையும்" என்பர்.[13]

2-0-4 இப்படி உணர்ச்சிக்கேற்ற சொற்கள் இயல்பாய் அமைந்தால்தான் அழகுண்டு. அவ்வாறின்றிப் புலவர் தாமாகத் தேடிவைத்தனவாக இருந்தால் அந்தக்கலை அழகுடன் அமையாது. இதனுல்தான் உரைநடையில் ஆளப்படும் சொற்களுக்கும் பாடலில் ஆசைப்படும் சொற்களுக்கும் ஆளப்படும் முறையில் வேறுபாடு உண்டு. உரைநடை முக்கிய கருத்தை நோக்கமாகக் கொண்டு அமைவது; பாடலோ கருத்தோடு கலையழகையும் கொண்டு அமைவது. பாடலில் சொற்கள் அமையும்போது வன்மையான உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் வன்மையான சொற்களும், மென்மையான உணர்ச்சிக்குரிய இடத்தில் மென்மையான சொற்களும், உணர்ச்சிமிக்க இடங்களில் உணர்ச்சிமிக்க சொற்களும், இனிமையும் நயமும் அமைந்த இடங்களில் நயமான சொற்களும் வந்து அமைகின்றன. இப்படிச் சொற்கள் அமைவதால் புலவன் எண்ணிய உணர்ச் சியை படிப்போனும் அடைய முடிகிறது.

திருவள்ளுவர் பாடல்களிலும், வேமனர் பாடல்களிலும் இத்தகைய சொல்லாட்சித் திறமை சிறந்து அமைந்துள்ளது.

### திருக்குறள்

2-1-1 குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.[14]

இந்தப் பாடலில் 'தம் மக்கள் சொல் இனிக்கும்' என்ற உண்மையை அறிவிப்பதே முதல் நோக்கமாகும். ஆனுல் வள்ளுவர் அந்தக் கருத்தை அப்படியே அறிவிக்காது தம் சொல்லாற்றலால் கலையழகுபட உணர்த்துகிருர். சிறுகுழந்தைகளின் இனிய ஒலிக்கு ஏற்றவாறு சொற்களும் சிறுமையும் இனிமையும் பொருந்தியுள்ளன. இக்கவிதையில் காணும் சொல்லோசை படிக்குந்தோறும் செவிக்கு இன்பம் ஊட்டுகிறது.

2-1-2 பொருள் ஆழமும், ஓசைநயமும் உடைய சொற்களே சிறந்த கவிதை தோன்ற உதவுபவையாகும். திருக்குறளில் இத்திறமை வாய்ந்த பாடல்கள் உள்ளன.

பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.[15]

இக்குறளில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒப்பற்ற பொருட்சிறப்புடையது. பெய்தல், ஊற்றல், வார்த்தல், சிந்துதல் முதலிய சொற்கள் ஒரு பொருளுடைய வாயினும், ஈண்டுக் காரணம் கருதியே 'பெய்தல்' என்ற சொல்லை ஆண்டுள்ளார்; கொடுக்கப்படுகிற நஞ்சு சொட்டுக் கணக்கில் இல்லாமல் மிகுதியும் இடப்பட்டிருத்தலை இச்சொல் அறிவித்து நிற்கிறது. அடுத்து, கண்களால் நன்கு கண்டு கொண்டிருக்கும் பொழுதே அள்ளி ஊற்றப்பெற்றது என்பதை அறிவித்தற்குக் 'கண்டு' என்ற சொல்லை ஆசிரியர் வைத்துள்ளார். 'நஞ்சுண்டு' என்ற சொல், நஞ்சு கொடியதாயினும் உண்பதற்கு ஏற்ற இனிமையும், மென்மையும் உடைய பொருளாகவே உண்பவர்கள் அதனை நினைக்கிருர்கள் என்ற கருத்தை, அந்தச் சொல்லிலுள்ள மெல்லோசை உணர்த்தி நிற்கிறது.

அடுத்து, 'அமைவர்' என்ற சொல் மிக இன்றியமையாதது. அச்சொல் வள்ளுவரின் தனித்திறமையை எடுத்தியம்புவது. 'அமைவர்' என்ற சொல்லுக்கு 'மேவுவர்' என்று பரிமேலழகர் பொருள் தருகிருர். நஞ்சை உண்ட பிறகு உண்டவர் மனத்தின் அமைதியை இந்தசொல் அறிவித்து நிற்கிறது. நண்பர் கொடுத்தது நஞ்சு என்று தெரிந்தும், உண்டபிறகு அவர்மேல் சிறிதும் காழ்ப்புக் கொள்ளாமல் பழைய நட்பைப் பாராட்டும் பண்பாட்டை உணர்த்தும் நோக்கில் இந்தச் சொல் ஆளப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பண்பாட்டை உடையவர்களே 'விரும்பத்தக்க நாகரிகம் உடையவர்' என்று குறள் கூறுகிறது.

இவ்வாறு கருத்துக்களைச் சில சிறுசொற்களால் உணர்த்திச் செல்லுகிருர் வள்ளுவர்.

2-1-3 'பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'.[16]

'மனித மனமோ ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டே இருக்கும்; சும்மா இருப்பதில்லை; எனவே உலகப்பற்றை விடவேண்டுமாயின் கடவுட்பற்றைப் பற்றிக்கொள்ள வேண்டும்; இல்லையேல் உலகப் பற்றை விடமுடியாது. கடவுட்பற்றையும் விடாப்பிடியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்; அவர்களே உலகப்பற்றை விட முடியும்' என்று இத்தனை சொற்களால் கூறும் கருத்தையே, ஏழே சீர்களில் கூறிவிட்டார் வள்ளுவர். அதோடு மிகவும் வன்மையோடு பற்றவேண்டும் என்பதை அறிவுறுத்துதற்குப்போலும் பாடலில் அதிகம் வல்லெழுத்துக்களையும் இடம்பெற வைத்திருக்கிருர் வள்ளுவர்.

2-1-4 இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு.[17]

இப் பாடலில் ஆளும் சொற்கள் அகச்சுவை அழகை அளந்து காட்டுகின்றன; தன் குடும்பத்தில் ஏற்பட்ட வறுமைத் துன்பத்தினைப் போக்குவதற்காக இரவு பகல் தன்னின்பம் பாராது உழைத்துக் கொண்டே இருக்கும் ஒருவனின் அவலநிலையை உணர்த்துவனவாய் இப் பாடலின் சொற்கள் அமைந்துள்ளன.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.[18]

ஒருவன், தான் முன்னுள்பட்ட வருத்தமெல்லாம் பெரிய உருக் கொண்டு மறுநாள் முன் நின்றபோது, அவன் கொண்ட அச்ச நிலையை உணர்த்துவனவாய் இப்பாடல் அமைந்துள்ளது.

2-1-5 தேவ ரனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழு கலான்.[19]

இந்தப் பாடலில் வரும் சொற்கள், உயர்ச்சியும், இழிவுமாகிய காரணவேறுபாடு குறிப்பாய்த் தோன்றும்படி அமைந்துள்ளன.

2-1-6 கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.[20]

கையில் இருந்த வேலால் யானையை எறிகிருன்; உடனே பிறிதொரு யானையை எதிர்ப்படுகிருன்; அதனை எறிந்து வீழ்த்தத் தன் கையில் வேல் இல்லை; ஆயின் மெய்யில் தைத்திருக்கும் வேல் கிடைத்தமைக்கு மகிழ்கிருன். இத்தனை சொற்கள் தரும் வீரஉணர்ச்சியை வள்ளுவரின் ஏழு சொற்களே தந்து நிற்கின்றன.

*2-1-7* கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.[21]

கொல்லுதல் பெரிய தீங்கு; எல்லாக் கேட்டையும் தரவல்லது என்று கூறும் வள்ளுவர்க்கு, உயிர்களை உடம்பிலிருந்து பிரிக்கும் இச்செயலைச் செய்வோரை எண்ணும்போது வெகுளி பிறக்கிறது. அந்த வெகுளியை இந்தப் பாடற் சொற்கள் வெளிப்படுத்து கின்றன. அவர்களைப் புலைவினையர் என்னும் அழகான சொல்லால் பழிக்கிறார் வள்ளுவர்.

*2-1-8* பொருள்களைக் கோவையாகக் கூறிவரும்போது அவைபற்றிய சில கருத்துக்களைக் குறித்துக் கேள்விகேட்டு, அதன் வாயிலாகத் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாங்கையும் இவரிடம் காணலாம்.[22]

இவற்றால் சிறந்த கவிதைக்குரிய சொல்லாட்சியை வள்ளுவர் எந்த அளவுக்கு ஆண்டுள்ளார் என்பது அறியப்படுகிறது.

## வேமனர்

*2-2-1* சக்கதனமு லேல சம்பதலு ஏல
வித்யயேல பூமி விரிவியேல
புத்ரபதவி கண்டே புட்டுனே பதவுலு?[23]

'அழகு, செல்வம், கல்வி, நிலவசதி முதலிய வளங்களைக் காட்டிலும் மக்கட்பேறே மிகவும் சிறந்தது'. இப் பாடலால் ஒவ்வொரு வருக்கும் மக்கட்பேற்றின் இன்றியமையாமையைப் பற்றிக் கூறுகிறார் வேமனர். மக்கட்பேற்றின் இன்றியமையாமையைக் கூறுங்கால், இன்றியமையாத அழகுடைய, சுருங்கிய சொற்களை ஆளுகிறார் ஆசிரியர். மற்றெல்லாச் செல்வங்களைக் காட்டிலும் மக்கட் செல்வமே ஒருவருக்கு அழகையும், மனமகிழ்வையும் கொடுப்பது என்பதைக் குறிப்பால் அறிவுறுத்தற் பொருட்டே வேமனர் (புத்ரபதவி) மக்கட்பேறு என்ற சொல்லை ஈண்டு ஆண்டுள்ளார்.

*2-2-2* சதுவுலந்து ராஜபதவுலந்துனு பாடி
மெதவுலந்து ஸ்ரீல பெதவுலந்துனு
ஆசலுடிகினட்டி அய்யலு முக்துலு.[24]

'கல்விமேல், பதவிகள்மேல், பால்கரக்கும் பசுக்கள் மேல், பெண்கள்மேல் ஆசையை விட்டவர்களே முக்தியைப் பெறுவர்.'

சதுவுலந்து, பாடிமெதவுலயந்து, பெதவுலயந்து என்று வரும் அழகுமிக்க சொற்களால் ஆக்கப்பட்ட இப்பாடல், எத்தனைமுறை படித்தாலும் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் தன்மை வாய்ந்தது. கதைகள் கூறி விளக்கக்கூடிய மூவாசைகளின் ஒழுக்கத்தைப்பற்றிப் பத்தே சீர்களில் அகப்பக்குவமாய் விளக்கு கிறார் ஆசிரியர் வேமனர். இதனல் முக்திக்கு வழியையும் அறிவிக்கிறார்.

2-2-3 சதுல கலயலேல சுதுலபடயனேல
வெதல படயனேல வெர்ரிதனமு
நேலமீதி ராயி நெத்திகி எத்திடைலு.[25]

'மனைவியோடு கூட்டம் ஏன்? பிள்ளைகளைப் பெறுவது ஏன்? பிறகு பல தொல்லைகள் பெறுவது ஏன்? நிலத்தில் இருக்கும் கல்லைத் தானாகவே தலையில் கொண்டதுபோல.'

இந்தப் பாடலால் வாழ்க்கையின் உண்மையை வேமனர் சில சொற்களால் அழகுபட அறிவிக்கிறார்.

2-2-4 அனகனனக ராகமதி ரம்மியமை உண்டு
பெனகபெனக சதிகி பிரேம புட்டு
தினகதினக வேமு தியனே உண்டுரா?[26]

'பயிற்சி பெறப்பெறப் பண் இனிமையாய் அமையும்; தன் காதலியோடு புணரப்புணர அன்பு அதிகமாகும்; தின்னத் தின்ன வேப்பந் தளிரும் இனிமையைக் கொடுக்கும்.'

இனிமைகளைத் தெரிவிக்க இனிமையான சொற்களாலேயே பாடல் ஆக்கியிருக்கிறார் ஆசிரியர். இப்பாடலில் 'அனகனனக, பெனகபெனக, தினகதினக' என்று வந்துள்ள சொற்கள் 'இரட்டைக் கிளவி' நயம்பட வந்துள்ளன.

2-2-5 உக்குசூர்ணமு தின நுடுகுனு கஷ்டம்பு
உக்குசூர்ணமு தின நுடுகுனு க்ஷயமு
உக்குசூர்ணமு தின நுடுகுனு கர்மமுல்.[27]

'ஒருவன் உலோகத் துகளை (பஸ்மம்) உண்டு, தன்னை அடைந்துள்ள இன்னல்களையும், காசநோயையும், பாவத்தொடர்புகளையும் நீக்கிக் கொள்ளலாம்.'

இந்தப் பாடலில் 'உக்குசூர்ணமுதின நுடுகுனு' என்ற முதல் அடியிலுள்ள தொடர், மூன்று அடிகளிலும் ஒரே பொருளில்

வந்து, ஒவ்வொரு அடியின் இறுதிச்சீராகிய பயனிலைச் சொல் மட்டும் வேறுபட்டு வேறுவேறு பொருளில் வந்துள்ளது.

2-2-6 திருவள்ளுவரைப் போலவே இவரும் வினவிப் பொருள் உணர்த்துமாறு சொற்களை அமைக்கும் திறமையுடையவராக இருக்கிறார்.

'தீயோருடன் நட்புச் செய்யின் தீமையே வரும்; நீர்க்கோழி, காக்கையோடு நட்புக் கொண்டால் தீமையைப் பெறாதா?'[28]

இந்தப் பாடலில் (பொந்தாதா?) பெறாதா? என்ற சொல்லை வினவாக அமைத்து, தீயோருடன் நட்புக்கொண்டால் தீமையைப் பெறுதல் உறுதி என்ற பொருளைக் கொள்ளவைக்கிறார் ஆசிரியர். இப்படி வினவாய் அமைந்த பாடல்கள் பலவற்றை வேமனரிடம் காணலாம்.[29]

## பழமொழிகள்

3-0 பழமொழி சொல்லாட்சிக்கு உயிர் போன்றது; சொற்கள் அமைப்புக்கு அழகு கொடுப்பது. பழமொழிகள் அகத்துறைத் தொடர்பான இன்பச்சுவையைக் கொடுப்பதாய் இருந்தால், அவை கொடுக்கும் ஆனந்தம் அளவிடற்கரியது. புலவன் எண்ணிய கருத்துக்களை விளக்க இந்தப் பழமொழிகள் உவமைகள்போல் பெரிதும் பயன்பட்டன.

3-1 திருவள்ளுவர் ஏழே சீர்களில் பாடல்களை ஆக்கியிருப்பதால் பழமொழிகளை அதிகம் பயன்படுத்தும் வாய்ப்பில்லாமல் போயிற்று. பாடல்களில் பழமொழிகளை ஆளும்பொழுதும் அவற்றைச் சுருங்கிய தன் சொந்தச்சொற்களுக்கு மாற்றியுள்ளார். திருக்குறளில் எண்பதுக்கு மேற்பட்ட பழமொழிகள் வாழ்வு பெற்றிருப்பதாக க. த. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார்.[30]

3-2 வேமனரின் வாய் இந்தப் பழமொழிகளுக்கு ஒரு 'புற்று என்றே சொல்லலாம். வேமனர் ஆண்ட பழமொழிகளுள் அவர் தானாக எண்ணி எண்ணி ஏற்படுத்தியவையே அதிகம். பரம்பரையாய்ப் பழக்கத்திலிருக்கும் பழமொழிகளையும் தான் ஆளும் பொழுது பக்குவத்தோடு ஆண்டுள்ளார்.

வேமனரின் பல பாடல்கள் பழமொழிகளைக் கொண்டு அமைந்துள்ளன.

காட்டுக்குச் சில :

1. 'குக்க தோகபட்டி கோதாவரீதுனு' —வே. ப. ர. 7.
(நாய் வாலைப் பிடித்துக் கோதாவரியை நீந்தும்)

2. 'கத்திமீத சாமு கட தேர போதயா' —வே. ப. ர. 10.
(கத்தியின் கூரிய முனை கடக்க விடாது)

3. 'பந்தி புரதமெச்சு பன்னீரு மெச்சுனு?' —வே. ப. ர. 14.
(பன்றி சேற்றை விரும்புமே தவிரப் பன்னீரை விரும்புமா?)

4. 'பச்சிகுண்ட நீள்ளுபட்டின நிலுசுனு?' —வே. ப. ர. 40
(சுடாத பச்சை மட்குடத்தில் நீர் பிடித்தாலும் நிற்குமா?)

5. 'மந்திர ஜலமுகன்டே மங்கலிஜல மெச்சு, —வே. ப. ர. .172.
(மந்திரம் போட்ட நீரைக் காட்டிலும் (தீர்த்தம்)
அம்பட்டன் நீரே சிறந்தது)

6. 'சக்தி மிகுலு நின்ட சம்சார மேலரா?' —வே. ப. ர. 283.
(பழுது மீறு வீட்டில் சம்சாரம் எதற்கு?)

7. 'எதுடவாரி த்ரவ்ய எல்லவாரிகி தீபி' —வே. ப. ர. 349.
(அயலாரின் செல்வம் அனைவருக்கும் இனிமையுடையது)

8. 'புட்டலோன செதலு புட்டதா? கிட்டதா?'
—வே. ப. ர.708.
(புற்றில் சிதல் தோன்றின் என்ன? அழிந்தால் என்ன?)

9. 'பொட்டி சேயிகாலு பொசகு கீடுரா?' —வே. ப. ர. 1503.
(குள்ளக் கையும், காலும் பெற்றிருத்தல் தீயதாகும்)

10. 'கொட்டு டாவுபாலு கோரின சேபுனு?' —வே. ப. ர. 2367.
(மலட்டுப்பசு மடியைக் கீறினும் பால் கொடுக்குமா?)

## குறிப்பெண் விளக்கம்

1. இலக்கியத் திறன், பக். 185.
2. வரதராசனார், மு., இலக்கிய வரலாறு, பக். 187.
3. *Abercrombie, L., Principles of Literary Criticism*, P.42.
4. குறள் 310.
5. குறள் 297, 320.
6. குறள் 15.
7. குறள் 305.
8. வே. ப. ர. 1309.
9. வே. ப. ர. 1539.
10. வே. ப. ர. 340
11. வே. ப. ர. 95.
12. வே. ப. ர. 14, 18, 71, 95, 96, 221, 235, 259, 265, 300, 470, 550, 608, 741, 861, 1013, 1062, 1148, 1371, 1506, 1750, 1909, 2036, 2109, 2217, 2352, 2420.
13. *Richards, I.A., Science and Poetry*, p. 26.
14. குறள் 66.
15. குறள் 580.
16. குறள் 350.
17. குறள் 1029.
18. குறள் 1048.
19. குறள் 1073.
20. குறள் 774.
21. குறள் 329.
22. குறள் 85, 144, 175, 190, 251, 272, 301, 315, 318, 340, 380, 397, 420, 436, 447, 483, 573, 862, 923, 932, 1029, 1070.
23. வே. ப. ர. 2381.
24. வே. ப. ர. 2041.
25. வே. ப. ர. 2476.
26. வே. ப. ர. 2352.
27. வே. ப. ர. 2363.
28. வே. ப. ர. 379.
29. வே. ப. ர. 21, 23, 29, 30, 32, 40, 57, 58, 60, 61, 63, 68, 73, 85, 88, 89, 104, 115, 124, 125.
30. ஒளிவிளக்கு, பக். 58-64.

# இயல்—9

## இலக்கிய உலகில் திருவள்ளுவர் வேமனர்

1-0 மாபெரும் புலமைச் சான்றோர் பாடல்களும், பாடல் தொடர்புகளும், கருத்துக்களும், பின்வரும் அறிஞர்களால் மேற் கொள்ளப் பெறுவது இயற்கை; எந்த அளவுக்கு எத்துணைப் பேர்களால் ஒருவர் பாடல்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளனவோ, அந்த அளவுக்கு அவர்க்கு இலக்கியவரலாற்றில் சிறந்த இடம் வாய்த்தல் இயல்பு. இந்த அடிப்படையிலே நோக்கும் பொழுது திருவள்ளுவர் தமிழ் இலக்கியத்தில் பெற்ற இடம் தலைசிறந்தது. இந்த இயலில் இச்செய்தி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றியமையா இடங்களில் அவ்விருவருடைய இலக்கியச் சிறப் புக்கு எடுத்துகாட்டாகச் சில சில பாடல்கள் விளக்கம் செய்யப் பெற்றுள்ளன.

1-1 தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களை வரலாற்று நோக்கோடு அன்றி, இலக்கிய நோக்கோடு நோக்கின், சங்க இலக்கியம், நீதி இலக்கியம், சமய இலக்கியம், காவிய இலக்கியம், சிற்றிலக்கியம், புதுமை இலக்கியம் என்று பலவகையில் பாகுபாடு செய்யலாம். சங்க இலக்கியத்திற்குப் பிறகு நீதிநூல்கள் தமிழ் இலக்கிய உலகில் சிறந்த இடத்தைப் பெற்றன. இந் நீதி நூல் களுக்கெல்லாம் முன்னோடியாகவும், முடிமணியாகவும் திருக்குறள் விளங்குகிறது.

### சங்க இலக்கியங்களின் தன்மை

2-1 சங்க இலக்கியப் பின்னணியில் திருக்குறள் தோற்றம் பெற்றிருப்பதால், இத்தகு பல்வேறு இலக்கிய வகைகளுள் அதனைச் சிறிது நோக்குதல் இன்றியமையாதது. சங்க இலக்கியங்கள் என்பன கி.மு.500 முதல் கி.பி.500க்கு இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததெனப் பெரும்பான்மையோர் முடிவு கொண்டனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை மட்டுமே சங்க இலக்கியங்கள் என்பது பெரும்பாலோர் கருத்து. எட்டுத்தொகை நூல்களில் எத்தொகுப்பும் தொடர்ந்து ஒன்றைச் சொல்லவில்லை. வெவ்வேறு

புலவர்கள் எழுதிய தனித்தனிப் பாடல்களோடு, பெரும்பாலும் அகவற்பாவாலேயே இந்தத் தொகுப்புக்கள் அமைந்துள்ளன.

2-2 இவற்றுள் சில குறைந்த வரிகளில், எண்ணி எடை போட்ட சொற்களால், புலவர்தம் பரந்த உலகியல் அனுபவத்தைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. பேராசிரியர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், "சங்க இலக்கியங்கள் தனிப்பட்ட பாடல்களாகவும், அவ்வப்பொழுது பாடியனவாகவும், ஒவ்வொரு பாடலும் தனிப்பட்ட கருத்துக் கொண்டு அமைந்துள்ளவை" என்று குறிப்பிடுகிறுர்.[1]

2-3 பத்துப்பாட்டு நூலில் நெடும்பாடல்கள் பத்து அடங்கியுள்ளன. தொகைநூற் செய்யுட்கள் தெய்வங்களையும், புகழ் பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. 'சுருக்கமாகச் சொல்லல் (Conciseness of expression), பொருளாழம் உடைமை (Pregnance of ideas), நவின்ருேர்க்கினிய நன்மொழி புணர்த்தல் (felicity of diction), பொருளின் ஒற்றுமை (Singleness of thought) ஆகிய குணங்கள் அமையப் பெற்றது சங்க இலக்கியம்' என்று அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.[2] இச் சங்க இலக்கியங்கள், தாய்மை, செம்மை, சீர்மை, புலமை, கொள்கை முதலிய சிறப்புகள் கொண்டு இலங்குவன.

2·4 சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்ற இரு பாகுபாடு கொண்டு அமைந்தவை. ஒருவனும் ஒருத்தியும் தம் உள்ளத்தால் உணரக்கூடிய உணர்வும், அதன் பயனுகிய இன்ப அனுபவமும் கொண்டதை அகமாகவும், புறத்தார்க்குப் புலனுகும்படி அறஞ் செய்தலும், அவற்றின் பயனும் ஆகியவற்றைப் புறமாகவும் கொண்டனர். அகவகையில் காதலைப்பற்றிய பாடல்களில் பெண்களின் உடல்வருணனை அதிகம் இடங்கொள்ளவில்லை. காமச் சேர்க்கை பற்றிய பாடல்களும் அதிகமாய் இல்லை. காதலின் உள்ளத்து உணர்வு பற்றியனவே அதிகமாக இருக்கின்றன. இந்த உண்மையைப் பல பாடல்கள் சுட்டுகின்றன.

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்பு பிறிது ஆகுவதாயின்
மறக்குவன் கொல் என் காதலன் எனவே[3]

என்ற பாடலை ஒரு காட்டாகக் கருதலாம்.

2-5 அன்பு, அருள், இறைமாட்சி, ஈகை முதலிய இல்லற துறவற அரசியல் அறங்களோடு, காமத்துப்பாலையும் திருக்குறள் தவிர வேறு எந்த அறநூலிலும் காணவியலாது. மேலும் அந்தக் காமத்துப்பாலை மற்ற அறம், பொருள் பாக்களோடு இணைத்தும் கூறியுள்ளார்; இது தமிழர் மரபாகும்.

2-6 அகப்பாடல்களில் தலைவியையோ, தலைவனையோ பெயரிட்டுக் குறிக்கும் மரபு இல்லை. வள்ளுவரின் காமத்துப்பாலும் இந்த மரபிலேயே அமைந்துள்ளது. அது சுருங்கிய சொற்களால் விரிந்த அகவாழ்வை நாடகப் பாங்கில் எடுத்தியம்புகிறது.

## நீதி இலக்கிய இயல்புகள்

3-0-1 நீதி இலக்கியப் பின்னணியில் திருக்குறள் நிற்பதால், நீதி இலக்கியங்களைப் பற்றியும் ஈண்டு ஓரளவுக்கு நோக்கப் பட்டுள்ளது.

3-0-2 நீதி இலக்கியங்கள் கற்பவரை உணர்ச்சிப் பெருக்கால் கிளர்ச்சியடையச் செய்யாது, சிறந்த கருத்துக்களை அறிவுறுத்தி. அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதை நோக்க மாகக் கொண்டவை. இவை கலையழகிற்கு முதலிடம் கொடுக் காமல் கருத்திற்கே முதலிடம் கொடுப்பவை. மனிதனின் உணர்ச்சி, விருப்பு, அறிவு ஆகிய மூவகை மனப்பண்புகளுள் அறிவாற்றலைத் தூண்டுவதாக அமைவதே நீதி இலக்கியமாகும்.

## தமிழில் நீதி இலக்கியங்கள்

3-0-3 தமிழில் நீதி இலக்கியத்தின் கருமுதல் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்து அவற்றை முதுமொழி, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்று அறிஞர்கள் பாகுபாடு செய்துள்ளனர் என்பதைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. அவை நன்கு வளர்ச்சியுற்ற நீதி இலக்கியங் களாக இருந்திருக்க இயலாது என்பது தொல்காப்பியர் கூறும் கருத்துக்களால் தெரியவருகிறது.[4] சங்க இலக்கியத்திற்குப் பிறகுதான் தமிழில் நீதிநூல்கள் என்னும் நிலையில் நூல்கள் தோன்றலாயின. அவற்றைப் பதினெண் கீழ்க்கணக்குப் பகுப்பில் அடக்கினர். இப் பதினெட்டுள் பதினொன்று நீதி ஆசாரங்கள் பற்றியவை. பதினொன்றிலும் நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம். முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்னும் எட்டும் மூதுரை இலக்கிய வகையைச் சேர்ந்தவை. திருக்குறள், நாலடியார், பழமொழி

மூன்றும் நீதி இலக்கியங்களாகக் கருதத் தக்கன. இந்த மூன்றனுள்ளும் திருக்குறள் முடிமணியாய் விளங்குகிறது.

*3-1-1* முதுரை வகையைச் சேர்ந்த நூல்களில் கருத்துக்களை எடுத்துரைக்கும் தொடர்மொழிகள் காணப்பெறுமேயல்லாமல், அவற்றில் கவிதை அழகையோ கற்பனை அழகையோ காண்பதரிது. பொதுவாய் இவை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றிற்கும் வாயிலாகவும், நல்லொழுக்கத்திற்கு நிலைக்களனுகவும் தேவையான கருத்துக்களைக் கொண்டு உள்ளன.

*3-1-2* அடுத்து, இடைக்கால நீதி நூல்களுள் முதுரை வகையைச் சேர்ந்த நூல்கள் ஆறு. அவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, நறுந்தொகை, நன்னெறி, அறநெறிச்சாரம் என்பனவாகும். இவை அனைத்நும் நல்வாழ்க்கைக்குத் தேவை யான நல்ல கருத்துக்களைச் சிலவாகிய சொற்களால் தெளிவாகப் பொருள்புரியுமாறு சொல்லுகின்றன.

*3-1-3* ஔவையார் இயற்றிய மூதுரை, நல்வழி என்பனவும் ஆசிரியர் பெயர் தெரியாத நீதிவெண்பா என்ற நூலும், குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கமும் நீதி இலக்கிய வகையைச் சேர்ந்தவையே. இவை கருத்து வளத்தோடு கற்பனை வளமும் பொருந்தியுள்ளன. எனினும், திருக்குறள் அளவுக்கு அனைத்து அழகுகளும் பொருந்தியவாக இந்த நூல்கள் அமைய வில்லை. ஔவையாரின் மற்றொரு நூலாகிய நல்வழி நீதிவழுவா நெறி முறையை உலகுக்கு உணர்த்துகிறது.

*3-1-4* இவையேயன்றி இன்றுவரை இன்னும் நீதிநூல்கள் தோன்றிக்கொண்டே உள்ளன. சதகங்கள் என்ற பெயரிலும் சில நீதிநூல்கள் இக்காலத்துத் தோன்றியுள்ளன. நீதி நூல்கள் அனைத்தும் சமயச்சார்புடையன. எனினும், மனித வாழ்க்கைக்குப் பயன்படும் நீதிக்கருத்துக்களை எடுத்துரைப்பதையே அவை சிறந்த நோக்கமாகக் கொண்டுள்ளன.

*3-1-5* சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை இயற்றிய நீதிநூலும், இந்நூற்றாண்டில் சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய புதிய ஆத்திசூடியும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படைத்துள்ள ஆத்திசூடியும் பழைய மரபையொட்டி முற்போக்குக் கொள்கைகள் பலவற்றையும் எடுத்துரைப்பனவாகும்.

*3-1-6* இவ்வனைத்து நீதிநூல்களிலும் கருத்துக்களை உணர்த்துவதற்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது

கருத்தை எடுத்துரைக்கும் முறையில் கலையழகு அருகியே வருகின்றன. இவற்றில் பல பாடல்களில் கருத்துக்கள் ஒன்றன் பின் ஒன்ருக அருகியே வருகின்றன. ஆயின் திருக்குறள் இவ்வனைத்துக் குறைபாடுகளும் இல்லாத ஒரு முழுமை இலக்கிய மாகத் திகழ்கிறது எனலாம். குறள் வெண்பா பாடல் துறையில் ஆசிரியர் முழுவெற்றியும் கண்டுள்ளார். இது மற்ற எந்த ஆசிரியர்களுக்கும் இல்லாத, வள்ளுவருக்கே உரிய தனிப்பெருமை யாகும்.

## இலக்கிய உலகில் திருவள்ளுவர் பாடல்கள்

*4-0-1* மனித வாழ்க்கை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகையான குறிக்கோளையுடையது. இதனை "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"[5] என்ற தொடரால் அறியலாம். இந்த நால்வகைப் பேறுகளும் ஒன்றேடொன்று தொடர்புடையவை. கற்பவருக்கு இந்த நால்வகைப் பயனும் அளிப்பதாக இலக்கியம் அமையவேண்டும். இவற்றுள் வீடு என்ற ஒரு குறிக்கோளை மட்டும் அறிய முயல்வது இயலாத செயல் என்பது முன்னோர் முடிபாகும்.[6] எனவே வீடொழிந்த மற்ற மூன்றும் எளிதில் அறியக் கூடியன; அடையக் கூடியன. இந்த மூன்றை அறிவதற்குரிய, அடைவதற்குரிய வழிவகைகளைத் திருக்குறள் சொல்லுகிறது. அவற்றின் மூலமாக நான்காவ தாகிய வீட்டையும் அடையலாம் என்பது வள்ளுவர் எண்ணம் போலும்!

*4-0-2* திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்ற பாகு பாட்டுமுறை முறையாகக் கருத்தழகோடு அமைந்துள்ளது. அவற்றிலுள்ள அதிகார முறையும் ஒன்றற்கொன்று தொடர்பு கொண்டு அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலிலும் ஏழே சீர் களில் மிக ஆழமான கருத்துக்களைச் சுருக்கிக் கலையழகோடு அமைத்திருக்கும் பெருமை திருவள்ளுவரையே சாரும்.

> இனிய உளவாக இன்னுத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.[7]

இப்பாடலில் யாரும் அறிந்த பொருளை, அதுவும் இனமான பொருளையே உவமையாக ஆண்டுள்ளார். இத்தகைய நயம் பல பாடல்களில் உண்டு. இனிய, இன்னுத; கனி, காய் முதலிய உடன்பாட்டுச் சொற்களும் எதிர்மறைச் சொற்களும் அமைத்துப் பாடும் திறமையும் இவரிடம் உண்டு. இவ்வாறு பலவகையான இலக்கிய உத்திகளை வள்ளுவர் தம் பாடல்களில் ஆண்டுள்ளார்.[8]

4-0-3 கவிஞன் மக்களுக்குப் புரியாதவற்றைப் புரிந்த வற்றின் மூலம் புலப்படுத்த வேண்டும்; அது அவன் வழி; கொள்கை. உவமைகளின் மூலம் செய்திகளைத் தெளிவாக்க வும் உருவங்களின் மூலம் அவற்றைச் சுவையாக்கவும் வல்லவன் கவிஞன். இது கவிஞர்களின் பொதுவான இயல்பு; ஆயினும் சிலர் இதில் விஞ்சிநிற்றலை நாம் காண முடியும். அச்சிலருள் திருவள்ளுவரும் வேமனரும் அடங்குவர்.

4-0-4 திருவள்ளுவர் உவமை, உருவக உத்திகளையேயன்றி, வேற்றுமையணி, முரண்பாட்டு அணி, புகழ்வதுபோலப் பழித்தல், நுவலா நுவற்சி, பின்வருநிலையணி முதலிய அணிகளை எடுத் தாளும் உத்தியையும் மேற்கொண்டுள்ளார். உவமையணியின் பல்வேறு இயல்புகளையும் நுட்பமாக அறிந்து 250 இடங்களில் அவற்றைத் தம் நூலில் பயன்படுத்தியுள்ளார்.[9]

4-1-1 கவிஞர்கள் கவிதைச் சுவை உண்டாவதற்கு என்னென்ன உத்திகளை ஆள்வார்களோ, அவற்றில் பலவற்றைத் திருவள்ளுவர் ஆண்டுள்ளார். ஒரு பொருளை உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முகமாகவும் வற்புறுத்தும் இயல் புடையவர் வள்ளுவர். ஒரே அதிகாரத்தில் மாறுன இவ்விரு முறைகளையும் மேற்கொண்டு பாடிய பாடல்களும் உள. அடக்கமுடைமை அதிகாரம் உடன்பாட்டு முறையிலும், அழுக் காறுமை எதிர்மறையாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்த பல அதிகாரங்களை வள்ளுவரிடத்துக் காணலாம்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.[10]

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.[11]

இப்பாடல்களில் உடன்பாட்டு, எதிர்மறைக் கருத்துக்கள் தனித்தனி வாக்கியங்களில் பொருந்தி வந்துள்ளமை காணலாம்.

4-1-2 நுண்ணிய பொருள் உரைக்கும் இலங்கு நூல்களை வள்ளுவர் ஐயந்திரிபற நன்கு கற்று, கற்றவற்றை கூற்றுகக் கூறுமல் நூலோர் கூற்றுகவே கூறியிருக்கிறுர். ஆகவேதான் 'என்ப', 'என்பர்' போன்ற சொற்களை ஆண்டுள்ளார்.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.[12]

*4-1-3* வள்ளுவரிடத்து, உலகில் வாழும் உயர்ந்தோராகிய சான்ருேர் கருத்து இதுவாகும் என்றும், அவர்கள் வழிநின்று ஒழுகுதலே அறிவுடைமையாகும் என்றும், உலகின் மேலிட்டு உரைக்கின்ற தன்மையையும் காணலாம்.

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.[13]

*4-1-4* முன்னே உடன்பாட்டால் சொன்னதை மீண்டும் எதிர்மறையால் வலியுறுத்திக் கூறும் பண்பையும் இவரிடம் காணலாம். காட்டாக,

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்[14]

என்னும் குறளைக் கூறலாம்.

*4-1-5* ஒரே பாடலில் கொள்ளத் தக்கதையும், தள்ளத் தக்கதையும் கூறும் பண்பாடும் இவரிடம் அமைந்துள்ளது.

நல்லா(று) எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.[15]

*4-1-6* இவர் பாடல்களில் விதிக்கும் முறையையும் வியங்கோள் முறையையும் காணலாம்.

விதிக்கும் முறை :

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவின்மின் என்று.[16]

வியங்கோள் முறை :

பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல்.[17]

*4-1-7* பொருள்களைக் கோவையாகக் கூறும்பொழுது அவை பற்றிய சில கருத்துக்களைக் குறித்துக் கேள்வி கேட்டு அதன் வாயிலாகவும் வள்ளுவர் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்திய இடங்கள் பல உண்டு.

கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.[18]

*4-1-8* ஒரே பாடலில் வினவி, அந்த வினவுக்கு ஏற்ற விடையையும் பாடலிலே அமைத்துக் காட்டுகின்ற திறமையையும், விளைவு கூறி அறிவுறுத்தும் தன்மையையும் இவரிடம் காணலாம்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.[19]

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.[20]

*4-1-9* வள்ளுவர் தாம் உணர்த்தக் கருதும் பொருளையும் அதனால் நேரும் விளைவுகள் முதலியவற்றையும் முற்படக்கூறி, அவை அங்ஙனம் ஆவதற்குரிய ஏதுக்களையும் தொடர்ந்து காட்டி விளக்குதலைப் பல இடங்களில் காணலாம்.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.[21]

*4-1-10* ஒரு நீதியோடு தொடர்புடைய பிற நீதிகளையும் இனமும் சார்பும் பற்றி இயைபுடையவற்றை ஒருங்குக் கூறுதல், உணர்த்தக்கருதிய பொருள்களின் இன்றியமையாமையை மேலும் விளக்கமுறச் செய்வதோர் உபாயமாம். இந்த உபாயத்தையும் இவரிடம் காணலாம்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.[22]

*4-1-11* ஒரு நீதியை விளக்குமிடத்தில் தாம் வற்புறுத்திக் கூற விரும்பும் மற்றொரு நீதியை உவமானமாக ஆசிரியர் திருவள்ளுவர் எடுத்துக்காட்டியுள்ளமை கற்பவர் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.[23]

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.[24]

*4-1-12* இவ்வாறு வள்ளுவர் பல்வேறு கருத்துக்களை விளக்குவதற்குப் பலவகையான முறைகளைக் கையாண்டு கற்பவர் உள்ளத்தில் அவற்றை ஆழப் பதிய வைக்கிறார். இவற்றுடன் சொற்களை எடுத்தாளும் முறையிலும் ஆசிரியர் சில நயமிக்க முறைகளைப் பயன்படுத்தியுள்ளார். ஒரே ஒலி திரும்பத் திரும்பக் கேட்குமாறு செய்வது ஒருமுறை. இதைப் பெரிதும் குறிப்பிட்ட ஒருசொல் ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வருமாறு சிறந்த முறையில் பொருத்தமான வகையில் வள்ளுவர் அமைத்துப் பாடியுள்ளார்.[25]

*4-1-13* ஏறக்குறைய ஒரேவகையான ஒலியுடைய சொற்களை வெவ்வேறு பொருளை உணர்த்தும் முறையில் வள்ளுவர் இயற்றியுள்ள குறட்பாக்களும் உண்டு.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.[26]

'நாட்டில் வாழ்வோர் தேடி வருந்தாமல் அவர்பால் தானே அடையுஞ் செல்வ வளத்தை யுடையவற்றை நாடென்று சொல்லுவர்; தேடி வருந்தச் செல்வம் அடையவிருக்கும் நாடுகள் நாடாகா.'

*4-1-14* சங்கப் புலவர்கள் சொற்களை மிகச் செறிவாகவும், பொருள்சிறக்கவும் பயன்படுத்தியதைப் போலவே, வள்ளுவரும் தம்முடைய குறட்பாவில் பொருட்செறிவு மிகுந்த சொற்களையும் தொடர்களையும் படைத்துள்ளார். சிறுசிறு தொடர்கள் படிப்பவர் மனத்துள் நன்கு பதியத் தக்கனவாய் உள்ளன. இவ்வாறு பல உத்திகளைக் கையாண்டிருப்பதால் வள்ளுவர் சொல்லேருழவராகத் திகழ்கிறார்.

காட்டாகச் சில :

1. 'அறத்தான் வருவதே இன்பம்'.
2. 'மங்கல மென்ப மனைமாட்சி'.
3. 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்'.
4. 'யாகாவா ராயினும் நாகாக்க'.
5. 'ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்'.[27]

*4-1-15* இவ்வாறு தம் அறிவுத்திறமை முழுதையும் பயன்படுத்திப் பல உத்திகளை மேற்கொண்டு வள்ளுவர் தம் நூலை

ஆக்கிய காரணத்தால்தான். அவரையும் அவர் நூலையும் அதற்குப் பின்தோன்றிய தமிழ் இலக்கியங்களில் பாராட்டிப் பேசியிருக் கின்றனர். குறளின் கருத்துக்களை அவருக்குப் பின்தோன்றிய நூல்கள் எல்லாம் எடுத்தாண்டுள்ளன என்ற உண்மையும் அறிஞர் பெருமக்கள் அறிந்ததே. இவ்வாறு முன்னோர் நூல்களின் தெளிவும், பின் நூலோர் போற்றும் பெருமையும் கொண்டு நடுநாயகமாகத் திகழ்வது திருக்குறள் எனலாம்.

## தமிழ்ப் புலவர்களிடையே வள்ளுவரின் செல்வாக்கு

*4-2-0* பண்டைத் தமிழ் இலக்கியத்தைப் பாட்டும், தொகையும், கீழ்க்கணக்கும் என்று சான்றோர்கள் பாகுபடுத்தி யுள்ளனர்.[28] இப்பாகுபாட்டால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பத்துப்பாட்டோடும், எட்டுத்தொகையோடும் ஒத்த சிறப்புடைய தாக ஒருங்கே வைத்துப் போற்றப் பெற்றமை புலனாகிறது. இக் கீழ்க்கணக்கு நூல்களுள் முப்பால் என்ற பெயரால் திருக்குறள் குறிப்பிடப் பெறுகிறது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களைப் பற்றிப் பேசும் இலக்கியமாகத் திருக்குறள் அமைந்திருப்பதால்தான், இந்நூல் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக அமைந்துள்ளது என்ற கருத்துண்டு.

*4-2-1-1* இத்திருக்குறளைப் பாராட்டிப் பேசும் நூல்களும், கட்டுரைகளும், சொற்பொழிவுகளும் பலவாகும். திருவள்ளுவ மாலையும் திருக்குறளைப் பாராட்டிப் பேசுகிறது. திருக்குறளின் அளவும் பொருளாழமும் கண்டு வியக்கின்றன சில; வடவேதத் திற்கும் இதற்கும் வேற்றுமை காட்டி ஏற்றம் கூறுகின்றன சில; வள்ளுவரைப் பாராட்டுகின்றன சில; முப்பாலின் இயற்பகுப்புகளை எடுத்து ஓதுகின்றன சில; திருக்குறளை அனுபவிக்குந்தோறும் விளைந்த இன்ப நுகர்ச்சிகளை எடுத்தோதுகின்றன சில; திருவள்ளுவ மாலையில் திருக்குறளைப் பாராட்டிய தெய்வப் புலவர்கள் அசரீரியும், சரீரியுமாக ஐம்பத்து மூவர். ஔவையார் இடைக் காடர் இவர்களையும் சேர்க்க ஐம்பத்து ஐவர்.

*4-2-1-2* இந்தத் திருவள்ளுவ மாலையிலுள்ள செய்யுள் ஒன்று வள்ளுவர் பாநலன்கள் அனைத்தும் நிறைந்து விளங்குமாறு முப்பாலை இயற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது. எழுத்து முதல் வண்ணம் ஈறாகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதல் இல்லாமல் எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இனிய குறள் வெண்பாக்களில் சொல்லப்பட்டன என்று அந்தப் பாடல் பேசுகிறது.[29]

4-2-2 இவ்வாறே இக்காலத்துப் புலவர்கள் பலர் பல தனிப் பாடல்களைப் பாடி வள்ளுவரைச் சிறப்பித்துள்ளனர்.[30]

4-2-3 இத்தகைய இந்த நூல் சங்க காலத்துக்கு முன்பே செல்வாக்கான நிலையில் இருந்திருக்கவேண்டும் என்ற கருத்தும் உண்டு.[31] "திருக்குறள் சங்க இலக்கிய வழியில் செப்பனிட்டு வள்ளுவரால் செய்யப்பெற்றது; ஆயினும், இதனால் வள்ளுவர் யாதும் புதுமையாகச் சொல்லி விடவில்லை என்றோ, திருக்குறளுக்குத் தனித்தன்மை இல்லை என்றோ கருத்துக் கொள்ளுதல் பிழை; ஒரே மலர் ஒரே நிலத்தில் தோன்றினாலும், புதுமரம், புதுச்செடி, புதுப்பூ என்று சொல்வதைப் போன்று, திருக்குறளும் புதுவதாய் அமைந்த ஒன்றாகும் என்ற கருத்தும் நிலவிவருகிறது.[32]

4-2-4 திருக்குறள் சங்க காலத்துக்கு முற்பட்டது என்று கூறுவோர், தக்க சான்றுகள் காட்டி, கீழ்வரும் கருத்துக்களைக் கூறுகின்றனர். சங்ககாலச் சான்றோர்கள் தங்கள் பாடல்களின் மூலம் உலகுக்கு உணர்த்த விரும்பிய (கருத்துக்களை) உண்மை களைக் கருத்துக் களஞ்சியமாகிய திருக்குறளிலிருந்து எடுத் தாண்டுள்ளனர். குறட்பாக்களை அப்படியே தம் பாடல்களில் சிலர் பயன்படுத்தியுள்ளனர். மற்றும் சிலர் குறட்பாக்களைச் சிறிது மாற்றியும், திரித்தும், புதிய மெருகு கொடுத்துக் கையாண் டுள்ளனர். வேறு சிலர் திருக்குறளில் விழுமிய கருத்துக்களைத் தம்முடைய அறிவாற்றலுக்கேற்ற வகையில் எளிமைப்படுத்திப் புதிய வடிவில் உவமைகளாகவும், மூதுரைகளாகவும் வழங்கி யுள்ளனர் என்று கூறுகிறார்கள்.[33]

4-2-5 சங்கப் பாடல்களில் மட்டுமன்றி வேறுபல தமிழ் நூல்களிலும் திருக்குறளின் சாயல் நேர்முகமாகவும், மறைமுக மாகவும் திகழ்கிறது. மகுடத்திற்கு அழகு செய்ய மணியைப் பதித்து வைப்பது போல் தத்தம் நூல்களை அணிசெய்யத் திருக்குறட் பாக்களை அப்படியே அமைத்தும், சில இடங்களில் குறள் நயங்காட்டும் தொடர்களை அமைத்தும் மகிழ்ந்தனர் நூலாசிரியர்.

'முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்'

என்ற சிலப்பதிகாரப் பாடல்,

பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்

என்ற குறட் பாடலோடு ஒத்துள்ளது.[34]

'பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்'

என்ற மணிமேகலைப் பாடல்,

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

என்ற குறளோடு ஒத்துள்ளது.[35]

'கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்'

என்ற குறளிலுள்ள இறுதித் தொடரைக் கம்பர் அப்படியே ஆண்டுள்ளார்.

'எடுத்தொருவ ருக்கொருவர் ஈவதனின் முன்னந்
தடுப்பது நினக்கழகிதோ தகவில் வெள்ளி
கொடுப்பது வியக்கொடியோய் உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடுகின்றுய்.'[36]

நுனிக்கொம்பர் ஏறினுர் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்

என்ற குறள் கருத்தை, அந்தச் சொற்களாலேயே வீரமாமுனிவர் தம் நூலில் ஆண்டுள்ளார்.

'நுனிக்கொம் பினும்ஊக் கினர் நொந்து இறப்பார் அனைய ஊக்கம்
குணிக்குமிடம் பரும்மா னிடரும் குனியாக் கெட்டார் என்னு'.[37]

4-2-6 இவ்வாறே நாலடி, நான்மணி, ஆதியுலா, நெஞ்சுவிடு தூது, நால்வர் நான்மணி மாலை, தமிழ்விடு தூது, இன்னிசை இருநூறு, இனியவை நாற்பது, சுந்தரர் தேவாரம், நீலகேசி, கல்லாடம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், திருமூலர் திருமந்திரம், மேருமந்திரம், திருவிளையாடற் புராணம், பாரத வெண்பா, திருக்களிற்றுப் படியார், பிரபுலிங்கலீலை, நல்வழி, இலக்கணக்கொத்து, கல்லாடம், புலவர் புராணம், பழமொழி, மனேன்மணீயம் முதலியவற்றின் ஆசிரியர்களும் குறள்

தொடர்களையும், குறள் கருத்துக்களையும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆண்டுள்ளனர்.[38] இவர்களே அன்றிப் பாரதியார் வரையிலும் தமிழ்ப் புலவரிடையே திருக்குறள் சாயல் சொல்லிலும் செயலிலும் இருப்பதை அறியலாம்.[39]

4-2-7 "இலக்கிய நீதிச் செய்யுளைக் கவிதையாகச் சேர்த்துக் கொள்வதற்கு கலைஞர்கள் ஒப்புவதில்லை; ஆனால் வேலைப்பாட்டின் சிறப்பும் கவிதைக் கனலின் ஒளியினால் ஆங்காங்கே நீதிபோ தனையை ஒளிரச்செய்யும் தகைமையும் இருக்குமாயின், எந்த நீதிச் செய்யுளையும் உண்மையான கவிதையாக ஏற்றுக் கொள் வது முறையாகும் என்றால், திருக்குறள் அத்தகைய கவிதை யாகும்" என்று பி. டி. சீனிவாச ஐயங்கார் கூறியுள்ளார்.[40]

4-2-8 இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவள்ளுவரைப் பற்றி ஆராய்ந்த தி. செல்வகேசவராய முதலியார் மரபுவழி வந்த தமிழ் இலக்கியக் கொள்கையின் அடிப்படையில் திருக்குறளை மதிப்பீடு செய்துள்ளார்.

> "நமது ஆசிரியர் இந்நூலை ஏனைப்பாக்களால் கூறாது குறட்பாக்களால் கூற எடுத்துக் கொண்டதனால், சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகள் இந் நூலில் இனிதாக அமைவனவாயின. ஒவ்வொரு அதிகாரத்தையும் பப்பத்துக் குறட்பாவாகக் கூறுவதனா லும், இந்நூலைக் குறளாற் கூறுதற்கு எடுத்துக் கொண்ட தனாலும் எழுகின்ற இடர்ப்பாடுகள் இன்றி, இந்நூலில் வழூஉச் சொல் புணர்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை முதலான குற்றங்கள் பலமுறை தேடித் துருவிப் பார்த்தவிடத்தும் காணப்படுவதில்லை.'[41]

என்பது அவருடைய மதிப்புரை யாகும். இக் கருத்துரை இலக்கிய இயல்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது திருக்குறள் என்ற உண்மையை உணர்த்துகிறது.

4-2-9 "மனித இனத்தின் வேதமாக விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவிநலனும், தாந்தேயின் காப்பிய அழகும், செகப் பிரியரின் உலகப் பொதுமையும், அரிஸ்டாட்டிலின் தெளிந்த அறிவும், பிளேட்டோவின் இலட்சிய நோக்கும், மார்க்கஸ் அரேலியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும் கலந்தும் காணப்பெறுகின்றன"[42] என்று ஓர் ஆசிரியர் சிறப்பிக்கிறார்.

4-2-10 "மனிதனுல் என்றும் வெளியிடப்படாத மிகவும் நுட்பமான கருத்துக்களைச் சுருக்கி இந்த ஆசிரியர் ஏழே சீர்களில் அமைத்திருக்கிறுர். இச் சிறிய இன்னிசைக் கருவியில், அவர் சிறந்த இன்னிசை வல்லுநனைப்போல, எத்துணை அழகாக இனிய கீதத்தை எழுப்பி இருக்கிறுர்; சுடரொளியோடு நகைச்சுவை, வற்புறுத்திக் கூறுதல், கற்பனை, முரண்பாட்டு நயம், வினுவுதல், ஓவியம் போன்ற உவமைகள் என்ற பல இலக்கியத்திறன்களை அவர் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு கருவிலே திருவுடைய கலைஞன் கையாளும் உத்திகள் பலவற்றுள் ஒன்றையும் அவர் இந்த முழுமையான கலைப்படைப்பில் ஆளாமல் விட்டுவிடவில்லை" என்று வ. வே. சு. ஐயர் தெளிவுறுத்தியுள்ளார்.[43]

4-2-11 ஒவ்வொரு திருக்குறளைப் பொறுக்கியெடுத்து அதனைப் பின் இரண்டடியாக அமைத்து வெண்பாக்களால் இயன்றனவாகிய நூல்கள் தமிழில் பலவுள. சிவசிவ வெண்பா, இரங்கேச வெண்பா, வடமலை வெண்பா, திருமலைவெண்பா முருகேசர் முதுநெறி வெண்பா, திருத்தொண்டர் வெண்பா, தினகர வெண்பா, சினேந்திர வெண்பா என்பன ஒரு சில. இவையேயன்றி இன்னும் பல இருக்கின்றன. மேலும் பல புலவர்கள் வேறுவேறு நோக்கில் ஆராய்ந்து திருக்குறள் மேல்நூல்களாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளார்கள்.[44]

எனவே, திருவள்ளுவமாலைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் முதற்கொண்டு இன்றுவரை, புலவர்கள் அனைவரும் திருக்குறளை ஒப்புயர்வற்றதோர் இலக்கியமாகவே கருதிப் போற்றினர் என்பது புலனுகிறது.

## அயல்நாட்டாரால் சிறப்பிக்கப்பட்டமை

4-3-0 தமிழ் மக்களால் பாராட்டப்பெற்ற திருக்குறள், அயல்நாட்டு அறிஞர்களாலும் பாராட்டப்பெற்றுள்ளது. அறிஞர் பலர் உரை எழுதுமாறு அவர்கள் உள்ளங்களைக் கவர்ந்து வருகிறது. இன்னும் புதுப்புது உரைகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இந்திய நாட்டு மொழிகளில் மட்டுமின்றி அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்ற பெருமை உடையது. கூடலூரு, சொக்கம், நரசிம்மலு நாயனி என்பவரால், 1892ஆம் ஆண்டு முதன்முதலாக 'திரிவர்க்கம்' என்னும் பெயரில் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

4-3-1 சார்லஸ், இ. கோவர் என்பவர், "குறள் ஓர் இலக்கியக் கருவூலம்; 'கவிதைக் குரல்' என்பதில் ஐயமில்லை.

கிரேக்கர்களுக்கு ஹோமரது காப்பியங்கள் எத்தன்மையானதோ அதைப்போன்று தமிழருக்குச் சொல்நயமும் நீதிக்கருத்துக்களின் சிறப்பும் மிகச்சிறந்த முறையில் அமைந்த இலக்கியம் திருக்குறள்" என்று பாராட்டியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.[45]

*4-3-2* மற்றும் ஏரியல், எம், என்ற பிரான்சு நாட்டு நல்லறிஞர், "திருக்குறள் தமிழிலக்கியத்துள் தலைசிறந்த இலக்கியப் படைப்பு; மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்த்த சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம்" என்று சிறப்பித்துள்ளார்.[46]

*4-3-3* இவ்வாறு திருக்குறள் அயல்நாட்டார் பலருடைய கருத்தைக் கவர்ந்திருக்கிறது.[47]

*4-3-4* பகவத்கீதைக்கு அடுத்தபடியாக இதுவே இந்தியாவில் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்ற நூலாக இருக்கலாம். ஆங்கிலத்தில் ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு பழமையானது; குறிப்பிடத்தக்கது. இவையன்றிப் பல ஆராய்ச்சி நூல்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இதனால்தான் திரு. டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள் தமிழுக்குக் கதியாவர் இருவர்; அவர்கள் முறையே 'க'—கம்பர், 'தி'—திருவள்ளுவர்[48] என்று கூறியுள்ளார்.

*4-4-1* இவ்வாறு திருக்குறள் தமிழில் மற்ற நீதிநூல்களைக் காட்டிலும் சிறப்பிடம் பெற்று வெற்றிபெற்ற ஒரு நூலாகத் திகழ்கிறது. கீழ்வருவனவற்றை அதற்குக் காரணங்களாகக் காட்டலாம். மற்ற நீதிநூல்களின் ஆசிரியர்கள் திருவள்ளுவரைப்போன்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் அறிவும் ஆற்றலும் பண்பும் பெற்றவர்களாக விளங்கவில்லை. அறிஞர், கலைஞர், சான்றோர் ஆகிய மூவருக்கும் இருக்கவேண்டிய குணங்களை இவர் ஒருங்கே பெற்றிருந்தார். இதனால் மற்றவர் நீதிநூல்கள் அம்முப்பண்பிலும் ஒன்றில் முதலிடம் பெற்றிருக்க, வள்ளுவர் குறளோ முப்பண்புகளையும் பெற்று விளங்கியது. எனவே, இந்நூல் தமிழ் நீதிநூல்களின் முடிமணியாய் விளங்கும் தன்மை பெற்றது.

*4-4-2* திருக்குறளைப் பொதுவாய் முழுமையாய் நோக்கும் பொழுது, வள்ளுவர் தனக்கென ஒரு புதுமுறையை நூல்நுதல் பொருளினும் நூல்வடிவினும் ஒருங்கே வகுத்துக் கொண்டார் என்பதை உணரலாம். அரிய கருத்துக்களை அளவறிந்து கூறுவதிலும், சீரியகருத்துக்களைச் சிந்தை மகிழக் கூறுவதிலும் வல்லவர் வள்ளுவர் என்பதையும் அறியலாம். இவர் நூலும் வெறும் கற்பனை

இலக்கியம் அன்று; அல்லது வெறும் நீதிநூல் மட்டுமன்று; இது ஒரு நீதி இலக்கியம் ஆகும். இதனுல் இலக்கிப உலகிற்கு மட்டு மல்லாமல், நீதி இலக்கியத்துறைக்கும் இவர் ஒரு புது வழி காட்டிய புலவர் ஏருகப் புகழ்பெற்று விளங்குகிருர் என்று துணியலாம்.

## தெலுங்கு இலக்கியத்தில் வேமனருடைய இடம்

*5-0* தென்னிந்தியாவிலுள்ள திருந்திய மொழிகளில் தெலுங்கு மொழியும் ஒன்று. இஃது ஆந்திர மாநிலத்து மக்களால் பேசப்பட்டுவரும் மொழியாகும். மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்துவந்த இந்த மொழி இலக்கண, இலக்கிய வளம் பெற்றுள்ளது. தமிழ்க்கவி பாரதி 'சுந்தரத் தெலுங்கு' என்று இதனைச் சிறப்பித்துள்ளார்.[49]

## புராண காலம்

*5-1-1* கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டில் இராசராச நரேந்திரனின் அரசவையில் வாழ்ந்த 'நன்னய'[50] என்னும் கவிஞனின் முதல் முயற்சி தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். நன்னயாவின் பாரதமே தெலுங்கு மொழியின் காவிய இலக்கியத்தில் முதல் நூலாகும். இதற்கு வடமொழிப் பாரதம் மூல நூலாகும். எனவே இதனை 'ஆந்திரிகரண நூல்'[51] என்று சொல்லுவர். அடுத்துத் தோன்றியவை திக்கன பாரதம்,[52] எர்ரன பாரதம்.[53] பாஸ்க்கர இராமாயணம்[54] போதனுவின் பாகவதம்[55] முதலியன. இவையும் ஆந்திரிகரணம் செய்யப் பெற்றவையே. இவையனைத்தும் கதையைச் சொல்வ தோடும், இலக்கிய வளத்தை நோக்கமாய்க் கொள்வதோடும் அமையாமல், நீதிகளைப் புகட்டுவதையும் நோக்கமாய்க் கொண்டவை. இவர்களை அடுத்து ஸ்ரீநாதர்[56] தெலுங்கு இலக்கியத்தில் சிறந்த இடத்தைப் பெற்றவராவார். இவர் பாடல்களில் எல்லாவகைச் சுவைகளையும் காணலாம். ஆந்திரி கரணம் செய்து பாடல்களைச் செய்வதில் இவர் வல்லுநர். இவர் பாடல்களில் அகச்சுவை நிரம்பியிருக்கிறது.

## பிரபந்த காலம்

*5-1-2* படிப்படியாய்ப் புராணமுறையினின்றும் மாறித் தெலுங்கு இலக்கியம் பிரபந்த முறையில் வளரத் தொடங்கியது. கிருட்டின தேவராயலு தானே ஒரு பிரபந்த கவியாக விளங்கிய தோடு, தன் அவையில் அஷ்ட திக்கஜங்கள்[57] என்னும் எண்மர் புலவர்களை ஆதரித்துத் தெலுங்கு பிரபந்த இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டு புரிந்தார்.

அதன் பிறகு பிரபந்த முறை சிறிது சிறிதாகக் குறைந்து சடாவுகள், தாராவலுலு, சதகங்கள் முதலிய பாவகையில் தெலுங்கு இலக்கியம் வளரலாயிற்று. இவற்றில் சதகங்கள் முதலிடம் பெற்றன.

## சதக இலக்கியமும் வேமனர் பாடல்களின் சிறப்பும்

*5-1-3* சதகங்கள் தனிப்பாடல்களைக் கொண்டவை. இச் சதகங்கள் எல்லா மொழி இலக்கியங்களிலும் இருந்தபோதிலும், தெலுங்கு இலக்கியத்தில் அவற்றிற்குத் தனிப்பட்ட இடமுண்டு. அவற்றின் எண்ணிக்கை ஐந்நூறுக்கு மேற்பட்டிருக்கலாம் என்பது பண்டித வங்கூரி சுப்பாராவ் அவர்களின் கருத்து.[58] வடமொழியில் கி. பி. ஆரும் நூற்றாண்டு முதலே சதக இலக்கியம் காண வருகிறது. இம்மொழியில் இவற்றை 'ட்சுத்ர' காவியங்கள் என்று சொல்லுவர். தமிழ்மொழியில் சதகம் என்ற சொல் மாணிக்க வாசகர் வாழ்ந்ததாகக் கருதப்படும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டி லேயே பெயரளவில் இருந்ததைத் திருவாசகத்தின் திருச்சதகம் வழியாகத் தெரியலாம். தமிழில் 'சதக இலக்கியங்கள்' என்ற நூலில் முப்பத்தொன்பது சதகங்கள் பற்றிய வரலாறு காணவருகிறது. தெலுங்கு மொழியிலும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே சதக இலக்கியம்இடங்கொள்ளலாயிற்று. இம்மொழியில் மல்லிகார்ஜுன பண்டிதரின்[59] சதகமே முதல் சதக நூலாகும் என்ற கருத்துண்டு.

5-1-4 பால்கூரி சோமநாதன்[60] எழுதிய 'உருஷாதிப சதகம்' சதகத்துக்குத் தேவையான அனைத்து இலக்கணமும் பொருந்தி அமைந்தது.

5-2-1 வேமனர் பாடல்களும் சதக இலக்கிய வகையைச் சேர்ந்தவையே.[61] நார்ல. வி. ஆர். அவர்கள் "வேமனர் புராணத்தையோ பிரபந்தத்தையோ எழுதாது இருந்திருக்கலாம்; இருந்தபோதிலும் பண்டைய இலக்கியப் புலவர் அவர் என்று கூறலாம்; அவர் பாடல்கள் பண்டைய இலக்கியத் தன்மை வாய்ந்தவை; பண்டைய இலக்கியத்திற்குரிய உலகப் பொது நோக்கே அவர் பாடல் தரும் செய்தியாகும்"[62] என்று குறிப்பிடுகிறார்.

5-2-2 மற்றும் நார்ல. வி. ஆர். வேமனர் பாடல்களின் சிறப்புக்களைப் பற்றி, "எவ்வகையில் ஆராய்ந்தாலும் வேமனர் மாபெரும் புலவர் ஆவர்; முற்கால, இடைக்கால, தற்காலத் தெலுங்குப் புலவர்களுள் இவர் தலைசிறந்தவர் என்பது மக்கள்

கவிஞர் என்ற அடிப்படையில் மிகப் பொருந்தும். ஒருவரும், இனிய பாடல்வல்ல போதனுவும், இவர் பெற்ற புகழில் பாதி கூடப் பெறவில்லை எனலாம்''[63] என்று பேசுகிருர்.

5-2-3 டாக்டர் ரெட்டி, சி. ஆர். "வேமனர் முதன்மையான விண்மீன்" என்று மதிப்பிடுகிருர்.[64]

5-2-4-1 கிரீசன், ஜி. ஏ., என்பவர்[65], "தற்காலத்துள்ள எல்லாத் தெலுங்குக் கவிஞர்களைவிட மக்களிடத்தே பெயர்பெற்ற புலவர் வேமனர் ஆவர். அவர் கையாளாத ஒரு பழமொழியோ, சாரமுள்ள சிறு வழக்குச் சொல்லோ இல்லை எனலாம்''[66] என்று சிறப்பிக்கிருர்.

5-2-4-2 நன்னய, திக்கன, எர்ரன, ஸ்ரீநாதன், போதன, பெத்தன, சூரன முதலிய முற்காலக் கவிகளை இகழும் நோக்கத்தில் நார்லாவும், கிரீசனும் இவ்வாறு கூறவில்லை. முற்காலக் கவிஞர்களின் இலக்கியப் போக்கு அறிஞரை மட்டும் நோக்கமாய்க் கொண்டு எழுதப்பெற்றவை. அவர்கள் கருத்தைக் காட்டிலும் கவிதைக்கே முதலிடம் கொடுத்தார்கள். இதனுல் இவர்களால் எழுதப்பெற்றவை பாமர மக்களுக்கு எளிதில் புரியும் நிலையில் இல்லை. அதோடு அந்நூல்கள் வடமொழி நூல்களை மூலமாய்க் கொண்டு எழுதப்பெற்ற மொழிபெயர்ப்பு நூல்களே. சிறந்த மொழிபெயர்ப்புக்கு இருமொழிப் புலமையும், திறமையும் வேண்டும். அத்திறமைகள் அவர்கள்பால் இருப்பினும் சொந்தக் காவியங்கள்போல மொழிபெயர்ப்பு நூல்கள் சிறப்புப் பெறு என்பது எல்லோரும் அறிந்த உண்மையே.

5-2-5 மற்றும் மேற்குறித்தோரின் பிரபந்தங்கள் பழைய பரம்பரை நம்பிக்கைகளை உட்கொண்டிருக்கின்றன. அந்தப் பழக்கவழக்கங்கள் நாளுக்குநாள் நாகரிகம் முதிர்ந்துவரும் தற்காலத்துக்கு ஒத்துவரவில்லை. யோகி வேமனரின் போக்கு அதற்கு முற்றிலும் வேறுபட்டது. பாடல் போக்கிலும் சொல் அமைப்பிலும் கருத்துப் போக்கிலும் வேமனர் தனக்கென்று ஒரு தனிப்போக்கை மேற்கொண்டார். பாடல்களில் ஒலிநயம் சொல்வளம், அவற்றைக் காட்டிலும் கருத்து வளத்திற்கே முதலிடம் கொடுத்தார். பாமரமக்கள் பேசும் அன்ருட மொழியையே அவர் தன் பாடல்களில் பயன்படுத்தினுர். அவர் பாடல்கள் கழிந்த காலத்தை நோக்கமாய்க் கொள்ளாமல், நிகழ்வு, எதிர்வு காலங்களை நோக்கமாய்க் கொண்டவை. சிக்கலான கருத்துக்களையும் எளிய சொற்களால் எல்லோரும் அறிந்ததும் அனுபவத்திலுள்ளதுமாகிய பொருள்களைக் கொண்டு

விளக்கியுள்ளமை அவருக்கே உரிய தனிப்பண்பாகும். தெலுங்கு மொழிப் பாவகைகளில் மிகத் தெளிவுடையதும், எளியதும், அழகுடையதுமாகிய 'ஆடவெலதி' பாவகையிலே தம் பாடல்களை ஆக்கியுள்ளார்.[67]

5-2-6 வேதம் வெங்கடராய சாஸ்திரியார், "சிதலும் கடிக்கக் கடினமாக இருக்கும் சுட்டுக்காய் போன்று கடினமாய் எழுதும் கவிஞர்களுக்கும், அக்கவிஞர்களின் காவியங்களைப் படிக்கும் சுவைஞர்களுக்கும், தேனில் பழுத்த வேமனரின் தேசியபாகு கிடைக்காததில் வியப்பொன்றுமில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.[68] அதனால் முன்னோர் பாடல்கள் கடினமான மொழியைக் கொண்டிருந்தன என்பதும், வேமனரின் பாடல்கள் இனிமையும், எளிமையும் வாய்ந்தவை என்பதும் அறியப்படுகிறது.

5-2-7 மருவூரி கோதண்டராமி ரெட்டி என்பார், வேமனர் பாடல்களின் பண்பையும் சிறப்பையும் கீழ்வருமாறு விளக்குகிறார். "மொழி போதாமல் கருத்தாகட்டும், கருத்துப் போதாமல் மொழியாகட்டும் வேமனர் கவிதைகளில் தடுமாற்றம் பெறவில்லை; குறுக அமைத்தல் வாக்கியத்திற்கு அழகு என்பர்; இந்தக் குறுக்குத் தன்மை (சுருக்கி எழுதும் தன்மை) காப்புக் கவியாகிய (சூத்திர வகுப்பைச் சேர்ந்தவர்) வேமனருக்கு அமைந்தாங்கு வேறு யாருக்கும் அமையவில்லை; இல்லாததைக் கூறும் அலங்காரமும் இவர் பாடல்களில் இல்லை"[69] என்கிறார்.

5-2-8 "வாழ்வின் பல்வேறு கூறுகளைச் சொந்தமாக அனுபவித்த ஒருவரின் நீதிநூல் போதனைகளே அவர் (வேமனர்) பாடல்களில் மிகுதியாய் உள்ளதென எனக்குத் தோன்றுகிறது; அதே நேரத்தில் அவர் வாழ்வின் குறிக்கோளையும் ஒதுக்கவில்லை" என்றும், "கவிதைக் கலையின் துணைகொண்டு, நெஞ்சை நேரே தொடுமாறு எளிய முறையில் உண்மையை வெளியிடுவது இன்று வரையும் பாமரராலும் பாராட்டத்தக்க அவருடைய சால்பு நிறைந்த தனித்தன்மையாகும்"[70] என்றும், மீர் மகமத் அலிகான் பாராட்டிப் பேசுகிறார்.

5-2-9 "உலகப் பொது அறிவின் இருப்பிடம், இந்திய நெஞ்சக் கவிதைச் சிந்தனை, சில தெலுங்குப் பண்பாட்டிற்கு உரிய தனித்தன்மை கொண்டன" என்று ஜி. வி. சீதாபதி, வேமனர் பாடல் கருத்துவளத்தைப் பற்றிப் பேசுகிறார்.[71]

5-3-0 இவற்றால் வேமனர் கவிதைக்குத் தெலுங்கு இலக்கியத்தில் எந்த அளவுக்குச் சிறப்பிருக்கிறது என்பது தெரிய

வருகிறது. எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சில பாடல்களால் மேற்குறித்த உண்மைகளை அறியலாம்.

*5-3-1* சொன்ன சொல்படி நில்லாது மாறிமாறிப் பேசு வோரைக் கண்டு வேமனர்,

நீடிலோனி வ்ராத நிலவக உன்னட்லு
பாடி ஜகதிலேது பரமுலேது
மாடி மாடிகெல்ல மாருனு மூர்க்குண்டு[72]

'மூடன், நல்லது இது, தீயது இது என்று எண்ணிப் பார்க்கா மலே அடிக்கடி சொற்களை மாறிமாறிப் பேசுவான். நீரிலுள்ள எழுத்துக்களைப் போன்று அவர்களின் வாக்குகள் பயனற்றவை'.

*5-3-2* 'நற்குலத்தில் ஒரு தீயவன் பிறந்தால் அவன் குலத்துக்கே கேடு வரும்' என்பதைக் 'கரும்பின் நுனியில் கதிர் வந்தால் அந்தக் கரும்பு முழுவதும் தித்திப்பின்றிக் கெடும்' என்ற ஓர் உவமையால் தெளிவுபடுத்துகிறார்.

குலமுலோன நொகடு குணவிஹீனுடு உண்டின
குலமு செடுனுவானி குணமுவலன
எலிமி செருகு நந்து என்னுபுட்டியட்லு.[73]

இந்தப் பாடலில் வந்துள்ள சொற்களும், எடுத்தாண்டுள்ள உவமையும் பாமர மக்களின் அனுபவத்திலுள்ள சொற்களே. இவ்வாறே மூடனை எவ்வளவு திருத்தினாலும் திருந்தான் என்பதைக் 'கட்டைக் கரித்துண்டைப் பாலால் எவ்வளவு கழுவினாலும் கரியின் கருமை நிறம் மாறாது' என்ற உவமையைக் கொண்டு விளக்குகிறார்.

'பொக்கு பாலகடுக போவுன மலிநம்பு'.[74]

*5-3-3* மனத்தூய்மையின்றிச் செய்யும் பூசைகளால் பயனில்லை என்பதையும், அச்செய்தியோடு தொடர்புடைய மற்றச் செய்தி களைக் கொண்டு விளக்குகிறார்.

ஆத்ம சுத்திலேனி ஆசார மதியேல
பாண்ட சுத்திலேனி பாக்கமேல
சித்த சித்திலேனி சிவபூ யேலரா[75]

'மனத்தூய்மையின்றிக் கொள்ளும் வெளி ஆடம்பர ஆசாரங்கள், தூய்மையற்ற பாத்திரத்தில் செய்யும் உணவுப் பொருள்கள் போலப் பயனற்றவையே'.

இப்பாடல் கருத்து நயமும், எளிய சொல்நயமும், ஒலிநயமும் கொண்டு அமைந்துள்ளது. மனத்தூய்மையே முக்தியாகும் என்ற தத்துவக் கருத்தையும் இப்பாடலால் அறிவுறுத்துகிறார்.

5-3-4 அகச்சுவையோடு வேமனர் பாடல்களை எழுதுவதில் திறமை வாய்ந்தவர் என்பதும், அதுவும் அனைவரின் அனுபவத்திலுள்ள சொற்களாலேயே ஆக்கக் கூடியவர் என்பதும், அவர் பாடல்களால் தெரியவருகிறது.

கன்னிதானி மேனு கஸ்த்தூரி வாசன
முசலிதானி மேனு முருகி கம்பு
வயசுதானி மேனு வர்ணிம்ப சக்கயமா?[76]

'கன்னிப்பெண் உடலுக்குக் கத்தூரி மணம், கிழவி உடலுக்குச் சாக்கடை மணம், பருவப்பெண் உடலழகை வருணிக்க முடியுமா?'

5-3-5 'பரத்தையாயினும், அவள்மேல் ஒருவனுக்கு மோகம் தோன்றின், அவன் கண்களுக்கு அந்தப் பரத்தை, பத்தினிப் பெண்ணாகவே காட்சி தருவாள்' என்ற உலகியல் அறிவுடைய பாடல்களையும் இவரிடம் காணலாம்.

சக்கர கலிபி தினங்கா
முக்கின தவிடைன லெங்ச மோகமுகதுர
நெக்குடு பானிச அயினன்
முக்குவ கனுதிவ்வ பாம மதிலோவேம.[77]

,மக்கிப்போன தவிடாயினும், அதில் சருக்கரையைக் கூட்டி உண்ணத் தித்திக்கும். அதுபோலவே பரத்தையாயினும், அவள் மேல் ஒருவனுக்கு மோகம் தோன்ற அவள் பத்தினியாகத் தோன்றுவாள்.'

5-3-6 தமக்குத் தகாதவற்றையும் வேண்டும் என்று நினைப் போரை நோக்கி நகைச்சுவையோடு பேசுகிறார் வேமனர்.

மொண்டி வானிகேல முன்சேயி கடியாலு
தொர்ரி வானிகேல கர்ர பண்டுலு
காடிதலகு ஏல கண்டமுல் மீசமுல்.[78]

'கைமுடவனுக்குக் கைக்கடியங்களும், பல்லில்லாக் கிழவர் கட்டிக் கொள்ளும் பற்களும், பேடிக்குத் தாடியும், மீசையும் பயனற்றவை.'

இவ்வாறு நகைச்சுவையோடு இகழ்வுபடப் பாடும் பெருமை இவரையே சாரும் என்று சொல்லலாம்.

5-3-7 திருவள்ளுவரைப் போலவே வேமனரும் சொற்களை மிகச் செறிவாகவும், பொருள் சிறக்கவும், தம் பாடல்களில் படைத்துள்ளார். அந்தத் தொடர்கள் படிப்பவர் உள்ளத்தில் நன்கு பதிந்து பொருட்டெளிவைக் கொடுக்கின்றன.

**எடுத்துக் காட்டாகச் சில :**

1. 'மன்சி காலமப்புடே மரியாதனு ஆர்த்தின்சு'
   (காலம் கூடிவரும்பொழுதே மதிப்பைப் பெற வேண்டும்)

2. 'மாடி மாடுகெல்ல மாருனு மூர்க்குண்டு'
   (அடிக்கடி மூடன் பேசும் சொற்களை மாற்றுவான்)

3. 'ஆத்ம சுத்திலேனி யாசார மதியேல'
   (மனத்தூய்மையில்லாத வழிபாடுகள் ஏன்?)

4. 'குண முமேலுகானி குலமேது மேலுரா?'
   (நற்குணமே மேலானது; குலத்தால் என்ன பயன்?)

5. 'புருஷுலந்து புண்ணிய புரிஷுலு வேரய்யா?'
   (மக்களுள் புண்ணியம் செய்தவர்கள் வேறு)[79]

5-4 இவ்வாறு திருவள்ளுவர் ஆண்டது போலவே, வேமனரும் பல இலக்கிய உத்திகளை ஆண்டுள்ளார். இவையேயன்றி, பல அணிவகை உத்திகளையும் யாப்புவகை உத்திகளையுங் கொண்டு, வெறும் கோடுகளால் ஆகிய ஓவியமாகத் தீட்டாமல், பலவகை வண்ணங்களைக் கொண்டு அழகுபடுத்திய ஓவியமாகத் தம் பாடல்களை ஆக்கியுள்ளார் வேமனர்.[81] சிறப்பாக எள்ளற்சுவை இவர் பாடல்களில் அமைந்த நேர்த்தி மிகவும் பாராட்டற்குரியது.

5-5-1 சில ஆய்வாளர்கள் வேமனர் பயன்படுத்திய மொழி கிராம மொழி என்றும், கிராம மொழியில் கவிதை அமைவது அவ்வளவு அழகில்லை என்றும் கூறுகின்றனர். திக்கன, போதன, ஸ்ரீநாதன் போன்ற சிறப்பிடம் பெற்ற கவிஞர்களும், தம் கவிதைகளில் தாம் வாழ்ந்த காலத்துப் பழக்கத்திலிருக்கும் மொழியை (சொற்களை) ஆங்காங்குப் பயன்படுத்தியுள்ளனர். எனவே இதனை ஒரு குறையாகக் கொள்ள இடமில்லை. மற்றும் சிலர் வேமனர்

பாடல்கள் எல்லாவற்றிலும் கவிதை அழகு அமையவில்லையாகையால், அவரைச் சிறந்த கவிஞர் குழுவில் சேர்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் கூறுகின்றனர். ஆயிரக் கணக்கான பாடல்களை இயற்றுவோரிடையே இந்தக் குறை இருத்தல் இயல்பே. உலகத்து நன்மையும், தீமையும் கலந்திருத்தலே இயற்கை. கவிதைகளிலும் இத்தன்மை இருத்தல் இயல்பே.

5-5-2 இதற்கு விடையாக வேமனரே கூறுகிறார்: "அழகிற்கு நல்ல நீலக்கல் ஒன்றே போதுமானது; வெளி ஆடம்பரத்தைக் கொடுக்கும் சாதாரணக் கற்கள் ஒருகூடை நிறைய இருந்தாலும் என்ன பயன்? அதுபோலவே பாடல்களிலும் எல்லாப் பண்புகளும் பெற்று அழகாய் அமைந்த ஒரு பாடலே போதுமானது" என்பதே அவர் விடை.

நிக்களமன மன்சி நீல மொக்கடி சாலு
தளுகு பெளுகு ராள்ளு கட்டடேல
சதுவ பத்தியமரய சாலதா யொக்கட்டி.[81]

நார்ல, வி. ஆர். என்பவர், "வேமனர் கவிதை முற்காலக் கவிஞர்களின் கவிதையைக் காட்டிலும் கருத்தில் குறைந்து ஒரு தனிப்பட்ட உருவத்தைப் பெற்றுள்ளது"[82] என்று சொல்லுவதும் ஈண்டு நினைக்க வேண்டியுள்ளது. எனவே, கவிதை கட்டுவதிலும், கருத்து அறிவுறுத்தலிலும் வேமனர் முற்காலக் கவிஞர்களினும் குறைந்தவரல்லர் என்பதை இதுவரை அவரைப் பற்றிக் கூறிய கூற்றுக்களால் அறியலாம்.

5-6-1 ஆயினும், ஆந்திர இலக்கிய உலகர் வேமனர் வாழ்ந்த காலத்தில் உருவாக்கிய புலவர் பட்டியலில் வேமனரைச் சேர்க்காது விட்டனர். 1914 ஆம் ஆண்டுவரை ஆந்திரப் புலவர்கள் வேண்டுமென்றே வேமனரின் புகழ்ச்சிக்குத் தடையாக நின்றனர். 1914 ஆம் ஆண்டுக்கு முன்பு பண்டிதர்களாகட்டும், ஆய்வாளர்களாகட்டும், வரலாற்று ஆசிரியர்களாகட்டும் யாருமே வேமனரைக் குறிப்பிடவில்லை. தெலுங்கு மொழி வரலாற்றை முதன்முதல் எழுதிய குருஜாட ஸ்ரீராமமூர்த்தி[84] கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு[85] ஆகிய இருவரும் ஆந்திரப் புலவர்கள் பட்டியலில் வேண்டுமென்றே வேமனரைச் சேர்க்காது விட்டனர். 1899 ஆம் ஆண்டு தோன்றிய 'ஆந்திர கவுல சரித்திரமு' (ஆந்திரக் கவிஞர்களின் வரலாறு) மிகப் பரந்துபட்ட ஒன்று. அந்த நூலில் குட்டிப் புலவர் பலரின் வரலாறுகள் இடங்கொண்டன. ஆனால் வேமனரின் வரலாறு அந்த நூலில் இடங்கொள்ளவில்லை. 1917 ஆம் ஆண்டு, மேற்குறித்த நூலில் மீண்டும் இருநூற்று இருபது புலவர்

களின் வரலாற்றைச் சேர்த்தனர். அவர்களுள்ளும் வேமனர் வரலாறு இடம்பெறவில்லை. இந்த இரு நூல்களுக்கு முன்பே 1828 ஆம் ஆண்டு காவலி வெங்கடராமசுவாமி என்பார், 'தெக்கணக் கவிஞர்களின் வரலாற்று அம்சங்கள்' (Biographical sketches of then Deccan poets) என்ற ஒரு நூலை வெளியிட்டார். இது ஆங்கில மொழியில் வெளியிடப் பெற்றது. இந்தப் பதிப்பில் நாற்பத்தேழு தெலுங்குப் புலவர்கள் வரலாறு இடங்கொண்டன. இவருள்ளும் வேமனரின் வரலாறு காணக்கிடக்கவில்லை.

*5-6-2-1* இவ்வாறு வேமனர் ஒதுக்கப்பட்டமைக்குக் கீழ் வரும் செய்திகள் காரணமாய் இருக்கலாம் என்று துணியலாம். முதலாவதாகத் தெய்வீக நூல்கள் என்று கருதப்படும் வேதங்களையும், வேதங்கள் கூறும் செய்திகளையும், புராணங்களையும் அந்தப் புராணங்கள் கூறும் கடவுள் அவதாரங்களாகக் கூறும் தலைவர்களையும், அறநூல்களையும் அந்த அறநூல்கள் கூறும் சமூக வேறுபாடுகளையும் வேமனர் வெறுக்கலாயினர்; இவர் உருவ வழி பாட்டுக் கொள்கையை ஒத்துக்கொள்ளாதவர்; ஆகையால் உருவ வழிபாட்டை வெறுத்துள்ளார். எனவே, இவர் சமூகத்தில் ஒரு புரட்சி வாதியாகக் கருதப்பட்டார். குலவேறுபாட்டை வெறுத்தார்; குலக்தின் உயர்வுதாழ்வு கருதுவோரை மிகவும் இகழ்ந்து பேசினர்; பறையர் என்னும் ஒரு பகுப்பாரைத் தொடுவதும் கூடாது என்று நினைத்தும், செய்தும் வரும் சமுதாயத்தைக் கண்டித்தார்; எல்லோரும் ஒன்றே என்று அறிவுறுத்தலாயினர். இக் காரணங்களால், இவரைச் சமயங்களின் விரோதி என்றும், 'வேமனர்' என்று பெயர் சொல்லுவதே பாவமாகும் என்றும் சொல்லலாயினர்.

*5-6-2-2* இரண்டாவதாக, வேமனர் வீர சைவ மதத்தைச் சேர்ந்தவராயினும், மனத்தூய்மையின்றிச் சிவலிங்கத்தை உடலில் அணிவோரை மிகவும் இகழ்ந்து பேசலாயினர்;[86] உண்ணுநோன்பு மேற்கொள்வோரையும், திருத்தலங்களுக்குப் போவோரையும், திருநீர் நிலைகளில் படிவோரையும் ஏளனம் செய்தார்.[87] எனவே சைவ மதத்தைச் சேர்ந்தோரும் வேமனரை மறைமுகமாக எதிர்க்கலாயினர்.

*5-6-2-3* மூன்றாவதாக, வேமனர் சூத்திர வகுப்பைச் சேர்ந்தவராகையால், பிராமணர்கள் இவரை வெறுக்கலாயினர். அப்பகவி[88] என்பார் சூத்திர வகுப்பைச் சார்ந்தோர் பாடிய பாடல்களை முன்பின் பாராது ஒதுக்கவேண்டும் என்று விதியையே உண்டாக்கினர். இவ்வாறு பிராமணர்கள் வேமனரை ஒதுக்கிய காரணத்தால்தான், பிரௌன், சி. பி., என்பார் முதன் முதலாக

வெளியிட்ட 'வெர்சஸ் ஆப் வேமன' என்ற நூலின் ஐந்நூறு பிரதிகளில் நானூற்று ஐம்பது பிரதிகளைச் சிலர் காணுமல் போகச் செய்தனர். இந்த நானூற்று ஐம்பது பிரதிகளும் பத்து வருடங்களுக்குப் பிறகு கல்லூரி நூல் நிலையத்தில் பாழ்ங்கிடங்கில் கண்டெடுக்கப்பட்டன. 'இந்தச் சங்க'த்திலிருந்த பழைய மரபறிவுடையோர் வேமனர் பாடல்களைப் பள்ளிக்கூடங்களில் பாடப் பகுதியாய் வைப்பதற்கும் தடை விதித்தனர். இவ்வாறு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேமனரின் புகழ் பரவாவண்ணம் பல சூழ்ச்சிகள் செய்யப்பெற்றன.

5-6-2-4 நான்காவதாக, மரபறிவு கொண்டு கவிமரபினின்று பிறழாமல் எழுதியோரே சிறந்த கவிஞர்களாக மதிக்கப்பட்டனர். மற்றவர்கள், தாம் எவ்வளவுதான் இயல்பாய்த்திறமை பெற்றிருந்தாலும், தம் நாட்டின் தன்மைக்கேற்றவாறு எளிமையும், வளமையும் உடைய பாடல்களைப் பாடினுலும், 'அரைகுறைக் கவிஞர்'களாகவே கருதப்பட்டனர். இதனுல்தான் வேமனரின் பாடல்கள் எவ்வளவு சிறப்புடையனவாயினும், அவரைச் சிறந்த கவிஞர் குழுவில் சேர்க்காது விட்டனர்.

5-6-2-5 இறுதியாக, வேமனர், அரசர்களையும், அரசவைகளையும், அரசவையிலிருந்த புலவர்களையும் மதிக்கவில்லை. அரசர்களால் பாராட்டுப் பெறுவதற்கோ, பொருள் பெறுவதற்கோ தம் கொள்கைகளை விட்டுக்கொடுக்கும் புலவர்களில் ஒருவராக வேமனர் விளங்கவில்லை. செல்வாக்கிற்கும், செல்வத்திற்கும் அடிமையாகாது, தம் புலமையை மக்களின் சீர்திருத்த வாழ்விற்குப் பயன்படுத்தும் புலவராக வேமனர் அமைந்தார். ஆனுல் அவர் காலத்திலிருந்த புலவர்களுள் பலர், நல்ல நிலையில் இருந்த செல்வந்தர்களாலும் அரசர்களாலும் மதிக்கப்படுவதற்காகத் தம்மை அடிமையாக்கிக் கொண்டவர்கள்; ஆகையால் வேமனரை மதிக்காது விட்டனர்.

5-7-0 இவ்வாறு, தெலுங்கு இலக்கிய உலகில் முதலில் வேமனரை மதிக்காது விட்டனர் ஆயினும், இந்திய நாட்டிற்கு வந்த அயல்நாட்டார் இவர் பாடல்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாயினர்.

5-7-1 அவர்களில் தி பிரெஞ்சு அப்பி, ஜெ. எ. டுபாஸ் என்பாரே முதன்முதலாக வேமனர் பாடல்களின் சிறப்பை உணர்ந்தவராவார். இவர், தான் எழுதிய 'தி இந்து மேனர்ஸ் கஸ்டம்ஸ் அண்டு செர்மினிஸ்'[99]' என்ற நூலில், தத்துவப் புலவர்

களைக் 'குறிப்பிட்டுள்ளார். அவர்களில் வேமனரும் ஒருவராக இடம் பெற்றுள்ளார்.

5-7-2 அடுத்து வேமனரை அறிந்த அயல்நாட்டு அறிஞர் சி.பி. பிரௌன் என்பவராவர். இவர் வேமனரைப் பற்றிக் கூறுங்கால், "கிரேக்க இலக்கியத்தில் அனைவரும் அறிந்த 'லூஷியஸ்' என்னும் மாபெரும் எழுத்தாளனைப் போல, இவரும் தெலுங்கு இலக்கியத்தில் மாபெரும் கவிஞராவார்"[90] என்று ஒப்பிட்டுப் பேசுகிறார்.

5-7-3 ஜி. யு. போப் என்பவர், "வேமனர் பாடல் இனிமையை, ஒலிநயத்தை மிஞ்சவல்லது எதுவும் இல்லை"[91] என்கிறார்.

5-7-4 மியாக்டோனல்டு, ஆர்.எம்., என்பவர் "வேமனரின் பாடல்களைப்போல ஐரோப்பியரின் கவனத்தை ஈர்த்த ஆசிரியர் பெரும்பாலும் தெலுங்கு இலக்கியத்திலேயே எவரும் இல்லை எனலாம்" என்று பாராட்டிப் பேசியுள்ளார்.[92] இவ்வாறே விலியம் காட்பெல், எச்., 1898இல் வேமனரை உணர்ந்து, வேமனர் இங்கிலாந்திலிருக்கும் 'விக்ளிப்' ஃபான்ரூன் என்கிறார்.[93] ஹென்றி பவர்சு, சார்லஸ் கோவர்[94] என்போரும் வேமனரின் பாடல் அமைப்பழகையும், பாடல் தரும் கருத்துச் சிறப்பையும் பலவாறு பேசியுள்ளார்கள்.

## வேமனரை மதித்த ஆந்திரர்கள்

5-8-1 1877-1923இல், முதன் முதலாக கோமர்ராஜு வெங்கட லட்சுமணராவ் என்பவர் வேமனரைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். இவருக்குப் பிறகு இவர் வழியில் மேலும் சிலர் தத்தம் திறமைக்கேற்றவாறு தொண்டு செய்தனர். வங்கூரி சுப்பாராவ் என்பவர் 1922ஆம் ஆண்டு விரிவாக வேமனரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினர். இராள்ளபல்லி அனந்த கிருஷ்ண சர்ம, நேதுகூரி கங்காதரம், ஸ்ரீராம கிருஷ்ணராவ், பூர்ணமாச்சாருலு, டாக்டர் சி.ஆர். ரெட்டி, வி.ஆர். நார்ல முதலியோரும் வேமனர் பாடல்களின் பெருமையைத் தாமும் உணர்ந்து மக்களையும் உணரச் செய்தனர். தெலுங்கு இலக்கியத்தில் இவருக்கு ஒரு முக்கிய இடத்தையும் கொடுத்தனர். சதக இலக்கியத்தில் தலைசிறந்தவராகவும் இவர் சிலரால் மதிக்கப் பட்டார்.[95] வேமனர்மேல் பலர் ஆய்ந்தனர்; ஆய்ந்தும் வருகின்றனர். பல்கலைக் கழகங்களும் வேமனரின் இலக்கியப் பெருமையை அனைவரும் அறியச் செய்ய வேண்டியன செய்து

வருகின்றன. அண்மையில் திருவேங்கடவன் பல்கலைக்கழகம் வேமனருக்கு ஒரு தனிப்பட்ட இடத்தைக் கொடுத்துள்ளது. அண்மையில் ஆந்திர அரசாங்கம் 'வேமனர் நிலையம்' ஏற்படுத்தி அவரின் சிறப்பை உலகுக்கு உணர்த்த முயன்று வருகின்றது.

5-8-2 வேமனர் தம் காலத்து மட்டுமின்றி எக்காலத்தும் ஒரு சிறந்த கவியாக மதிக்கத்தகும் தகுதி பெற்றிருக்கிறார். இவர் கருத்துக்கள் மற்ற உலக அறிஞர் கருத்துக்களோடு ஒத்திருக் கின்றன. தென்னாட்டுப் புலவர்களிலே இவரைத் தமிழ்நாட்டுத் திருவள்ளுவரோடும், வடநாட்டுக் கபீரோடும், கர்நாடகத்து சர்வக்ஞரோடும் ஒத்தவராகக் குறிப்பிடலாம்.

5-8-3 டாக்டர் ஜி. யு. போப், திருவள்ளுவரை 'உலக மக்கள் கவி' என்று புகழ்கிறார்; வேமனரையும் இவ்வாறே புகழலாம் என்று நார்ல, வி. ஆர். சொல்வதும் ஈண்டுக் குறிப் பிடத்தக்கது.

5-8-4 வேமனர், நாகார்ஜுனர் சங்கரர் போன்று முறை யான சிறந்த தத்துவவாதியாக விளங்கவில்லையாயினும், தனக் கென்று ஒவ்வொரு மனிதனின் நோக்கத்தை உட்கொண்ட ஒரு தனித்தத்துவத்தை மேற்கொண்டார். தெலுங்கு இலக்கிய உலகில் இவரை சமூக தத்துவ வாதியாகவும் (Social Philosopher), நீதி தத்துவவாதியாகவும் (Ethical Philosopher) சமயத் தத்துவவாதி யாகவும் (Religious Philosopher) காணலாம். இந்த மூவகை யான பண்புகளோடு பாடல்களை இயற்றிய பெருமை தெலுங்கு இலக்கிய உலகில் வேமனருக்குத் தவிர வேறு யாருக்காவது கிட்டுமா என்பது கேள்விக்குரிய செய்தியாகும்.

வேமனருடைய சீர்திருத்தக் கருத்துக்கள், சிறப்புச் சிந்தனைகள் இந்தியச்சிந்தனையாளர்பலருடைய கருத்தைக் கவர்ந்திருக்கின்றன. அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்பாக விளங்கியவர் அறிஞர் அண்ணுதுரை அவர்கள். அவர் 'பரதன்' என்னும் புனைபெயரில், 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எட்டாம் நாள் வெளியிட்ட தன்னுடைய 'திராவிடநாடு' வார இதழில்,வேமனரின் சீர்திருத்தக் கொள்கைகளையும், புரட்சிப்போக்கையும், தமிழாக்கம் கொண்ட பல பாடல்களைக் காட்டிப் பேசியுள்ளார். மற்றும், இன்றைய சமுதாயத்தில் இத்தகைய முறையில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய கட்டாயத் தேவையையும் தெரிவித்துள்ளார்.

## ஒப்பீடு

5-9-1 திருவள்வளுவர் தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்றுள்ள அளவுக்கு, வேமனர் தெலுங்கு இலக்கிய உலகில் புகழ் பெறவில்லை. திருவள்ளுவர் தான் வாழும் காலத்திலேயும் புகழ் பெற்ருர்; இப்பொழுதும் பெற்றுவருகிருர். வேமனரை வாழும் காலத்தில் யாரும் மதிக்கவில்லை; இப்பொழுதும் ஓரளவுக்கே மதிக்கப்பெற்று வருகிருர். திருவள்ளுவர் குறள் குறித்து ஆய்வுகள் பல தமிழகத்தில் தோன்றியதுபோல இப்போது ஆந்திரத்தில் வேமனருக்குத் தோன்றிவருகிறது; திருக்குறளுக்கு ஐரோப்பியர் களும் தமிழர்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புக்கள் செய்துள் ளனர்; வேமனர் பாடல்கள் முழுமைக்கும் இவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புக்கள் இல்லை; அயல்நாட்டாராகிய சி.பி. பிரௌன் வேமனர் பாடல்களில் சிலவற்றிற்கு ஆங்கிலத்தில் கருத்துரை கொடுத்துள்ளார். நார்ல. வி.ஆர்., மீர் காசிம் அலிகான் ஆகிய ஆந்திரர் இருவரும் வேமனர் பாடல்களில் சில பாடல்களை ஆங்கிலத்துக்கு மாற்றியுள்ளனர். ஆங்கிலத்தில் மட்டுமின்றி இந்திய நாட்டு வேறுமொழிகளில் திருக்குறள் பாடல்கள் மாற்றப் பட்டுள்ளன. வேமனர் பாடல்கள் திருக்குறள் அளவுக்கு வேறு மொழிகளுக்கு மாற்றம் பெறவில்லை. திருக்குறள் மேல் பல ஆராய்ச்சி நூல்கள் தமிழ் மொழியிலும் மற்ற மொழிகளிலும் தோன்றியுள்ளன; தோன்றிக்கொண்டே இருக்கின்றன. வேமனர் பாடல்கள்மேல் இப்பொழுதே ஆராய்ச்சி நூல்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. எனினும், திருக்குறள் அளவுக்கு வளர்ச்சி இல்லை.

5-9-2 திருக்குறள் மரபில் தோன்றிய பல வெண்பா நூல்கள் தமிழ் இலக்கியத்தில் உள்ளன. திருக்குறள் தொடர்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ள நூல்கள் தமிழ் இலக்கியத்தில் உள்ளன. தெலுங்கு இலக்கியத்தில் வேமனர் பாடல்கள் மரபில் தோன்றிய இலக்கியங்கள் இல்லை என்றே சொல்லலாம். சதக இலக்கியங்களில் சிலவற்றில் வேமனர் பாடல்களின் மரபு ஓரளவுக்கு உண்டு.

5-9-3 திருக்குறளில் தத்துவத்தை உணர்த்தும் பாடல்கள் இருப்பினும், நீதிகளை அறிவுறுத்தும் பாடல்களே பேரிடத்தைப் பெற்றிருக்கின்றன. நீதி இலக்கியம் என்று சொல்லும் தகுதியைத் திருக்குறள் பெற்றுள்ளது. வேமனர் பாடல்களில் நீதியைச் சொல்லும் பாடல்களைக் காட்டிலும் தத்துவத்தைச் சொல்லும் பாடல்களே அதிகம். திருவள்ளுவர் ஒரு நீதி நூல் ஆசிரியர்; வேமனர் சித்தர் வகையைச் சேர்ந்தவர்.

5-9-4 முன்னோர் நூல்களில் முதிர்ந்த அறிவை இருவரும் பெற்றிருக்கின்றனர். எளிய சொற்களை ஆளுதலைத் திருவள்ளுவரைக் காட்டிலும் வேமனரிடமே அதிகம் காணலாம். உவமைகளை ஆளுவதில் ஒருவரையொருவர் மிஞ்சி விடுகின்றனர். மக்களின் அன்றாட அனுபவத்திலுள்ள பொருள்களையே உவமைகளாய் இருவரும் ஆண்டுள்ளனர்.

5-9-5 வேமனர் தன்னுடைய கவிதையை எழுதினார் அல்லர்; அதனை வாய்மொழியாகவே கூறினார். இவரிடம் அமைந்த கவிதை திரும்பவும் நினைவூட்டும் மனவெழுச்சிகளாக அமையவில்லை; இவரிடம் ஏற்பட்ட மனவெழுச்சிகள் மனம் கொதிக்கும் நிலையில் ஏற்பட்டவையாகும்; அவை என்றும் அமைதி கொள்ளா நிலையில் இருக்கின்றன. எப்பொழுதும் கருத்துக்களை வாரிவாரிக் கொடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினார்; கவிதை அழகிற்கு அதிகம் கவனம் செலுத்தவில்லை. இலக்கண நூல்களையும் அவர் கற்றதாகத் தெரியவில்லை; எனினும் மிகச் சிறந்த கவிதையையே யாத்தார். காரணம், பிறப்பிலேயே அவர் மிகச் சிறந்த கவிஞராதலால் தன்னுடைய இதயத்தில் உண்மையாகவும் ஆழமாகவும் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை நயம்வாய்ந்த முறைகளால் அமைந்த கவிதை உருவில் வெளிப்படுத்தினார்.

5-9-6 இவர் கவிதைகள் சிலசமயம் மிகப் பெரிய வெள்ளமாகவும், சிலசமயம் வெடித்துக் கிளம்பும் எரிமலையாகவும், சில சமயம் கடல்களைத் தாக்கும் சூறாவளிக் காற்றாகவும், சில சமயம் தென்றல் காற்றுப் போலும் அமையலாயின.

5-9-7 இவர் தான் பேசிய கவிதைக்கு ஆடவெலதி என்ற பாவகையைத் தானே அமைத்துக் கொண்டார். ஆடவெலதி என்னும் சொல்லுக்கு 'நாட்டியமாடும் ஆரணங்கு' என்பது பொருளாகும். தெலுங்கு இலக்கிய உலகில் நன்னய முதற் கொண்டு பல கவிஞர்கள் இந்த ஆடவெலதியைப் பயன்படுத்தியுள்ளார்கள்; ஆனால் வேமனரைத் தவிர ஒருவரும் அதனை நாட்டியமாடச் செய்யவில்லை. காளிதாசருக்கு மந்தாகிரந்தா என்ற யாப்பு அமைவது போலவும், பவபூதிக்கு சிகரிணி என்ற யாப்பு அமைவது போலவும், திக்கனாவுக்கு கந்தம் என்ற யாப்பு அமைவது போலவும், வேமனருக்கு 'ஆடவெலதி' யாப்பு அமைந்தது.

5-9-8 வள்ளுவரோ தன்னுடைய கவிதையைத் தானே எழுதினார். வேமனரைப் போல உணர்ச்சிவயப்பட்டு எழுதாமல், உலக வாழ்க்கையை நன்கு உணர்ந்து, சமுதாயத்திலே வாழ்க்

கைக்குத் தேவையானவை இன்னின்ன என்று வரையறுத்துக் கொண்டு, திட்டவட்டத்தோடு நூலை ஆக்கியுள்ளார். கவிதைகளில் அமைந்த கருத்துக்களிலும், பாடல்கள் அமைந்த முறையிலும் ஏற்றத்தாழ்வுகள் இன்றி ஏறக்குறைய சமமான சாந்தமான நிலை காண வருகின்றது.

5-9-9 வேமனர் ஆடவெலதி யாப்பு வகையை ஆண்டது போன்று திருவள்ளுவர் குறள் வெண்பா வகையை ஆண்டார். ஆனால், வேமனர் போன்று இலக்கணங்களைக் கல்லாதவராக வள்ளுவர் காணப்படவில்லை; இலக்கணத்தையும் கற்றுக் கைதேர்ந்தவராக விளங்குகிறார் வள்ளுவர். ஆடவெலதி யாப்பில் வேமனர் மிஞ்சியவராகத் திகழ்வது போன்றே, அவரினும் ஒரு மடங்கு மிஞ்சி, குறள்வெண்பா யாப்பில் வள்ளுவர் சிறந்து விளங்குகிறார். பொதுவாகப் பார்க்கும்பொழுது இருவருமே சிறந்த புலவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

5-9-10 இவ்வியலால், இருபெரும் புலவர்களும் முன்னைய இலக்கியச்செல்வாக்குக்கு எந்த அளவு ஆளாகியுள்ளனர் என்றும், இவ்விருவர் இலக்கியங்களும் பின்னைய இலக்கியங்களில் எந்த அளவு மேற்கொள்ளப்பெற்றுள்ளன என்றும் உணர முடிகிறது. எனவே, ஒவ்வொரு கவிஞனும் ஓர் இலக்கியத்தைப் படைக்க அவன் ஏதோ ஒரு வகையில் தாக்கம் பெற்றிருக்க வேண்டும்; எந்தக் கவிஞனும் தனிக் கவிஞன் அல்லன்; பலர் கூடிய கூட்டுக் கவிஞனே என்ற உண்மையை இவ்வியல் உணர்த்தி நிற்கிறது.

## குறிப்பெண் விளக்கம்

*1. Meenakshisundaram, T. P., History of Tamil Literature, p. 33.*

*2. வையாபுரிப் பிள்ளை, எஸ்., இலக்கிய மணிமாலை (புறத்திரட்டு முகவுரை), பக். 8.*

*3. நற். 397.*

*4. தி. நீ. இ. பக். 329, 330.*

*5. நன்னூல், சூ. 10.*

*6. திருக்குறள் (பரிமேலழகர் உரை), உரைப்பாயிரம், பக். 1. கழகப் பதிப்பு - 1976*

7. சூ. 100.

8. விளக்கமாய், இயல் 7-இல் சொல்லப்பட்டுள்ளது.

9. இவ்வணிகளைப்பற்றி விளக்கமாய் இயல் - 7ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. குறள் 963.

11. குறள் 980.

12. குறள் 60, 246.

13. குறள் 117.

14. குறள் 26.

15. குறள் 222.

16. குறள் 1067.

17. குறள் 196.

18. குறள் 2.

19. குறள் 291.

20. குறள் 31.

21. குறள் 14.

22. குறள் 28.

23. குறள் 135.

24. குறள் 153.

25. குறள் 202, 350.

26. குறள் 739.

27. குறள் 39, 60, 65, 127, 214.

28. 1. தொல். பொருள். சூ. 470, பேரா. உரை.
2. தொல். செய்யுளியல், சூ. 235, நச். உரை.
3. நன்னூல், சூ. 387, மயிலைநாதர் உரை.

29. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம் - இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின்
இன்றிவர் இன்குறள் வெண்பா. —தி. வ. மா. 45.

30. பாடிய பாக்களுக்கும், ஆசிரியர் பெயர்களுக்கும் காண்க : திருவள்ளுவர் திருநாள் விழா மலர், பக். 52-56.

31. க. பொ. ம., 36. 1970

32. சிந். கள. (கட்டுரை : சங்க இலக்கியவழித் திருக்குறள்), பக். 197.

33. க. பொ. ம., 36.

34. சிலம்பு. 21, 3-4; குறள் பா. 329.

35. மணிமேகலை 16 : 86-87, குறள் பா. 349.

36. குறள் 176; கம்ப. பால. கா. வேள்வி ப. பா. 33.

37. குறள் 486; தேம்பாவணி 19 : 27.

38. தி. தி. வி, மலர், பக். 120-123; சென்னை, 1970.

39. தி. நீ. இ., பக். 401.

40. *Srinivasa Iyengar, History of the Tamils*, p. 15.

41. திருவள்ளுவர், பக். 40.

42. தி. தி. வி. மலர், பக். 62, சென்னை, 1937.

43. *Aiyar, V.V.S., The Kural or Maxims of Tiruvalluvar, Introduction*, P. XII.

44. தி. தி. வி. மலர், பக். 138.

45. *The Folk Songs of South India*, P. 98.

46. *Kural de Tiruvalluvar, Fragment traduits du Tamoul of Asiatic Society*, Vol. VI, P. 172.

47. தி. தி. வி. மலர். பக். 103-106,

48. திருவள்ளுவர், பக். 7.

49. பாரதியார் கவிதைகள், பாரத நாடு-5.

50. காண்க : பின்னிணைப்பு.

51. ,,

52. ,,

53. ,,

54. ,,

55. ,,

56. ,,

57. ,,

58. ,,

59. காண்க : பின்னிணைப்பு.

60. ,,

61. ,,

62. *Narla, V. R., Vemana, p. 47.*

63. *Narla, V. R., Vemana, p. 13.*

64. *Narla, V. R., Vemana, P. 54.*

65. இவ்வாய்வேடு, பின்னிணைப்பு.

66. *Narla, V. R., Vemana, P. 14.*

67. ஆடவெலதி பாடல் வகை பற்றிய விளக்கம், காண்க: வேமனர் பாடல்கள் அமைப்பு, இயல், 8.

68. ஆந்திர வான்மய சங்கிரம சரித்திரமு, பக். 66.

69. பிரஜாகவி வேமனயோகி, பக், 67.

70. *The musings of a mystic (Introduction), P. 7 & 9*

71. *History of Telugu Literature, P. 38.*

72. வே. ப. ர. 55.

73. வே. ப. ர. 380.

74. வே. ப. ர. 439.

75. வே. ப. ர. 99

76. வே. ப. ர. 2058.

77. வே. ப. ர. 2041.

78. வே. ப. ர. 2139.

79. வே. ப. ர. முறையே 50, 55, 99. 155, 192.

80. வே. ப. ர. முறையே 50, 55, 99, 155, 192.

81. எல்லா உத்திகளைப் பற்றியும் தெளிவாக இயல்-7ல் காட்டப்பட்டுள்ளன.

82. வே. ப. ர. 2407.

83. வேமன. பக். 5.

84. காண்க : பின்னிணைப்பு

85. காண்க : பின்னிணைப்பு

86. வே. ப. ர. 851, 2247.

87. வே. ப. ர. 969, 1042, 1266, 1324, 935, 1054, 1004, 1565, 2344.

88. காண்க : பின்னிணைப்பு

89. *The First English Edition, Published in 1971.*

90. *Vemana through the Western Eyes, p. 21.*

91. *Quoted by Narla, V. R., Vemana, P. 19.*

92. *Vemana through the Western eyes, P. 24.*

93. *Vemana through the Western eyes, P. 52.*

94. *Vemana through the Western eyes, P. 45 & 48.*

95. *Chenchariah Raju, P., & Bhujange Rao, M., (As Per the Narla, V. R., Vemana, p. 47).*

96. *Narla, V. R. Vemana, P. 65.*

# முடிவுரை

# முடிவுரை

*1-0* ஆய்வேட்டில் இயல்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள முடிவான சில கருத்துக்களைத் தொகுத்து நிறைவுரையாகக் காணும் இப்பகுதி இவ்வாய்வுக்கு முடிவுரையாக அமைகிறது.

*1-1* இந்த ஆய்வு வேறுவேறு நாட்டைச் சார்ந்த, வேறுவேறு காலத்தைச் சார்ந்த, வேறுவேறு மொழியையுடைய இரு புலவர்களையும் அவர்களின் பாடல்களையும் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளது. இந்த ஆய்வேட்டில் இடங்கொண்ட திருவள்ளுவர், வேமனர் ஆகிய இரு புலவர்களும், பல கோணங்களில் வேறுபட்டாலும், வெளிப்படுத்தும் உண்மைகளில் பேரளவு ஒன்றுபடுகின்றனர். இந்த ஆய்வில் முதலில் அவ்விருவர் வாழ்க்கை வரலாறு ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது.

*1-2* திருவள்ளுவர் காலத்தை ஏறக்குறைய கிறித்து தோன்றிய காலத்துக்குச் சிற்சில ஆண்டுகள் முன்னதாகவோ பின்னதாகவோ கொள்வதாலும், வேமனர் காலத்தை கி.பி. பதினேழாம் நூற்றூண்டாகத் துணியப்படுதலாலும் இருவருக்குமிடையே காலத்தில் பெருத்த இடைவெளி இருக்கிறது. இருப்பினும் ஏறக்குறைய இருவரும் ஒருதன்மைத்தான அறிவுரைகளை உலகுக்கு அறிவுறுத்தி இருக்கின்றனர். சிறந்த புலவர்களிடையே காலமும் இடமும் மொழியும் வேறுபட்டாலும் வெளிப்படுத்தும் கருத்துக்களில் அவர்கள் ஒன்றியிருப்பர் என்ற கூற்றுக்கு இவர்கள் சான்ருய் நிற்கிருர்கள்.

*1-2-1* இருவரின் முற்பகுதி வாழ்வில் வேறுபாடு இருப்பினும், பிற்பகுதி வாழ்வில் ஓரளவுக்கு ஒன்றியிருக்கின்ற உண்மை முதல் இயலில் காணவருகிறது. இறுதி வாழ்வில் இருவரும் தமக்காக அன்றிப் பிறர்க்காக வாழும் நிலையில் வாழ்ந்தனர்; சமுதாய நலத்தையே பெரிதும் எண்ணினர். சமுதாயம் நன்கு வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகளை அறிவுறுத்தும்போது, பழிக்க வேண்டிய இடங்களில் அஞ்சாது பழித்தும் அறிவுரைகள் வழங்கினர்,

பழித்து அறிவுரைகள் வழங்குவதில் வள்ளுவரைக் காட்டிலும் வேமனர் மிஞ்சியவராகக் காணப்பெறுகிருர்.

*1-3* நூல் வைப்பு முறையில் இருவர் பாடல்களுக்கும் ஒப்புமை இல்லே. வள்ளுவர் நூல் திட்டமிட்ட பாகுபாட்டோடு செய்யப்பெற்றது. வேமனர் பாடல்கள் திட்டத்தோடு செய்யப் படாதவை. வள்ளுவர் வேமனரைக் காட்டிலும் அதிகம் சொற் சுருக்கத்தைக் கையாண்டுள்ளார்; ஒவ்வொரு பாடலும் ஏழே சீர்களால் ஆக்கப்பட்டுள்ளது. வேமனர் பாடல்கள் மகுடத் தோடு நான்கு அடிகளேக் கொண்டு, அதாவது பதினறு சீர்களேக் கொண்டு அமைந்தவை.

*1-3-1* வள்ளுவரின் காமத்துப்பால் சுருங்கிய சொற்களால் விரிந்த அகவாழ்வை உட்கொண்டு நாடகப்பாங்கில் அமைந் துள்ளது. வேமனரிடம் இத்தகைய அமைப்பே இல்லே. காமத்துப் பால் பாடி, இல்வாழ்க்கை நடத்தும் தலேவன் தலேவிக்கு வேண்டிய பயிற்சியைக் கொடுக்கும் நிலேக்களனுகத் தம் நூலே அமைத்துள்ள பெருமை வள்ளுவருக்கேயன்றி வேறு யாருக்கும் கிடையாது.

*1-3-2* அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் என்னும் இருவகையான வாழ்வை விளக்கி, துறவறத்தினும் இல்லறமே சிறப்புடையது என்று நிலேநாட்டுகிருர் வள்ளுவர். வேமனரிடத்து இத்தகைய நிலேயைக் காண முடியாது. வாழ்க்கைத் துணேவியைத் தெய்வநிலேயில் வைத்துப் பேசுகிருர் வள்ளுவர்; அதோடு பிள்ளேப் பேற்றையும் சிறப்பித்துப் பேசுகிருர். வேமனர் சமண ஆகமங்கள் போக்கில், மனேவி மக்களேப் பெற்று வாழும் வாழ்வு மிகவும் சுமையான ஒன்று என்று இல்வாழ்வு முறையை வெறுத்துப் பேசுகிருர். வள்ளுவரைப் போன்று அறம், பொருள், வீடு பற்றிய செய்திகளே வேமனர் முறையாகப் பேசவில்லே. இம் முப்பொருளே முறையாக, முழுமையாக விளக்கும் நூல் திருக்குறளே ஆகும்; வேமனர் பாடல்கள் முப்பொருளேப் பற்றி விளக்கினுலும் திருக்குள் அளவுக்கு முழுமையாக விளக்கவில்லே.

*1-4* இருவரும் அன்புடைமையின் அடிப்படையில் இல் வாழ்வோர் இல்லறமாகிய நல்லறத்தைத் தொடங்கி, படிப்படி யாகக் குடும்பத்தில் பிறர்நலத்தைப் பேணிப் பின் குடும்பநலத் தையும் சமுதாய நலத்தையும் ஆட்படுத்தி, ஈகை ஒப்புரவுகளேச் செய்யும் சமுதாய நலத்தொண்டராக விளங்க வேண்டும் என்றும், இப்படி வாழ்வாங்கு வாழ்பவர் நிலேபேறுடைய புகழைப் பெறுவர் என்றும் எடுத்துரைக்கின்றனர். ஈகை, ஒப்புரவுகளேப் பற்றிப்

பேசுங்கால் வேமனர், வள்ளுவர் போன்று இரண்டையும் பிரித்துப் பேசாது, பிறருக்கு உதவவேண்டும், தானம் செய்ய வேண்டும் என்று பொதுவாய்ப் பேசுகிருர்.

*1-5* திருவள்ளுவரும் வேமனரும் மக்கள் வாழ்வை விளக்கி வழிகாட்டத் தோன்றிய சான்றேர்கள் என்பது அவர்களின் பாடற்கருத்துக்களால் தெரிய வருகிறது. அவர்கள் தத்தம் காலத்துச் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களே அறிவுறுத்தி யிருக்கின்றனர். அவ்வாறு அறுவுறுத்தும் கருத்துக் கள் எந்தச் சமுயத்திற்கும் தேவையான கருத்துக்களே ஆகும். இவர்கள் கூறும் ஆட்சிமுறை தேவையான அளவுக்கு உரிமை களேயுடைய ஒன்று என்று கூறினுல் தவருகாது.

*1-5-1* சமுதாயத்துக்குத் தேவையான உண்மைகளே வெளிப் படுத்துங்கால், வள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி ஆகிய மூன்றையும் முறையாகப் பேசுகிருர். வேமனர் கேள்வி அறிவைப் பற்றித் தனித்துப் பேசவில்லே. மக்கள் உடல்நலம் பேணுவதற்கு நோய் வந்தபொழுது தக்க மருத்துவம் வேண்டும் என்று இருவரும் பேசுகின்றனர்; ஆயின் வேமனர் தக்க மருத்துவம் மட்டும் போதாது; மருந்துக்கு இணையாகப் பால் எப்பொழுதும் அருந்த வேண்டும் என்றும் பேசுகிருர். சொல்வன்மை ஒருவனுக்கு நன்மையே பயக்கும் என்று இருவரும் கூறினுலும், வேமனர் சொல் வன்மை மோட்சத்துக்கும் காரணம் ஆகும் என்று மிகைப்படுத்திப் பேசுகிருர். வள்ளுவர் உழவின் இன்றியமையாமையைப் பேச, வேமனர் உழவால் உண்டாகும் உணவின் இன்றியமையாமையைப் பற்றிப் பேசுகிருர். இவ்வாறு இவர்கள் கூறும் அறக்கருத்துக்கள் குறிப்பிட்ட எந்தச் சமயத்திற்கும் உரியன அல்ல என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.

*1-6-0* சொல்லில் மட்டுமின்றிச் செயலிலும் இருவரும் சீர் திருத்தவாதிகளாகவும், புரட்சிப் போக்குடையவர்களாயும் திகழ் கின்றனர். சீர்த்திருத்தங்களேப் பற்றிப் பேசுங்கால் வேமனர் வள்ளுவரினும் தீவிரவாதியாக விளங்குகிருர். வேமனர் வேதங் களின் உண்மை நிலேயை உள்ளவாறே அறிவிக்கிருர்; வேதங்களேத் தீவிரமாக இகழ்ந்து பேசுகிருர்; இது வேமனருடைய தனிப் பண்பாகும். வள்ளுவர் பிறருக்குப் புண்படாவகையில் அறிவுரை களே வழங்குகிருர். இகழ்ந்து பேசும் பொழுதும் ஒருவகையான பெருந்தன்மை இவரிடம் காணவருகிறது; ஆனுல் அப்பண்பு வேமனரிடம் இல்லே. இவ்விருவரின் உரைகளால், எந்தக்காலத்தும் சமுதாயத்தில் சில அறியாமை நெறிமுறைகள் இருந்து வருதலே உணரமுடிகிறது.

1-6-1 பிறவியால் உயர்வுதாழ்வு கொள்ளுதல் மடமை யாகும் என்பது இருவர் கொள்கை. இந்தக் கொள்கையை வெளிப்படுத்துங்கால், எல்லோருக்கும் உடலும் ஊனும் அதில் ஓடும் இரத்தமும் ஒன்ருய் இருக்க, பறையர் என்று ஒரு வகுப்பாரை நிந்திக்க வேண்டிய தேவை என்ன என்று வள்ளுவர் கொள்கைக்கு விளக்கம் தரும் வகையில் கூறுகிருர் வேமனர். இப்படியே தான் உணர்த்த விரும்பிய ஒவ்வொரு கருத்தையும் விளக்கத்தோடு உணர்த்துகிருர் வேமனர். தெய்வங்களின் அவதாரங்களைப் பற்றி வள்ளுவர் பேசாது விடுகிருர்; வேமனர் அந்த அவதாரங்கள்மேல் நம்பிக்கையற்றவராய்த் திகழ்கிருர். சகுன நம்பிக்கையும், புராணங்களில் நம்பிக்கையும் உடைய வராக வேமனர் காணப்படவில்லை. வள்ளுவர் பாடல்களில் பெரிதும் நுண்மை அமைய, வேமனர் பாடல்கள் பருமையாய் அவற்றை விளக்குகின்றன.

1-6-7 சமய, தத்துவக் கொள்கையில் இருவரும் பெரிதும் வேறுபடுகின்றனர்; ஆயினும் மெய்யுணர்தலுக்கு வேண்டிய வழி வகைகளைத் தெரிவிப்பதில் இருவரும் ஒருபாதையில் நடக்கின்றனர். வேமனர்பாடல்களில் நீதிகளைக்காட்டிலும் தத்துவக்கருத்துக்களே பெருத்த இடம் பெற்றிருக்கின்றன. இதனுல் வேமனரை நாடு ஒரு சித்தராகப் போற்றியது. வள்ளுவர் பாடல்களில் தத்துவக் கருத்துக்களைக் காட்டிலும் நீதிகளே அதிகம்.

1-7-1 சமண மதத்தாரும், இந்து மதத்தாரும் திருக்குறளி லுள்ள சில தொடர்களைத் தமக்கு ஆதாரமாய்க் கொண்டு திருவள்ளுவரைத் தத்தம் மதத்தவராகக் கொள்கின்றனர். இவ்வாறு கொள்ளும் நிலை வேமனருக்கு இல்லை. முடிவாக வள்ளுவர் ஒரு சமயவாதியல்ல என்ருலும், தன் தெய்வம் என் தெய்வம் என்று பல சமயவாதிகளும் உரிமை கொண்டாடும் கடவுள் நிலைக்கு வாய்ப்பளிப்பது திருக்குறள். எனவே வள்ளுவர் எல்லாக் கொள்கைகளையும் தன்னுள் அடக்கியுள்ள ஒரு பொதுச் சமயவாதி என்று கொள்ளலாம். வேமனர் முதலில் சைவ மதத்தைச் சார்ந்தவராகத் தோன்றினுலும், சூழ்நிலைகள் அவரை அத்துவைதக் கொள்கையைத் தழுவச் செய்தன. அத்துவைதக் கொள்கையைத் தழுவிய வேமனர் சமணம், வைணவம், சைவம் முதலிய மதங்களைப் பற்றிப் பேசாது, உலக மாயையினின்றும் விடு பட்டுப் பிரம்மத்தை அடையும் நெறியை அறிவித்துள்ளார்.

1-7-2 சமயக் கொள்கையில் வள்ளுவரிடத்துப் பொதுமை யைக் காண்பது போன்று வேமனரின் தத்துவக் கொள்கையில் பொதுமையைக் காண இயலவில்லை. இவர் துவைத மதக்

கொள்கையைச் சார்ந்தவர் என்று முடிவு கொள்ள வாய்ப்புண்டு. வேமனரின் கடவுட்கொள்கை திருவள்ளுவர் கொள்கையினும் மாறுபட்டது. பரம்பொருள் வேறு, உலக உயிர்கள் வேறு என்று கொள்ளாது இரண்டற்ற எல்லாம் ஒன்றே என்ற அத்துவைதக் கொள்கையராக அவர் திகழ்கிறார்.

*1-7-3* மக்கள் வாழ்க்கையில் நிகழும் எழுச்சி வீழ்ச்சி, உயர்வு தாழ்வு, இன்ப துன்பம் முதலிய அனைத்தும் ஊழால் அமைவனவே என்று இருவரும் கொள்கின்றனர்; அதேநேரத்தில் தக்க முயற்சியும் வேண்டும் என்பதும் இருவர் கொள்கை. அண்டாவில் இருக்கும் நீரைச் செம்பு கொண்டு எடுக்கும்போது செம்பின் அளவுக்கு நீரைக் கொள்ளலாமேயன்றி மீறிக் கொள்ள முடியாது; ஆயின் முயற்சி குறைய செம்புக்குக் குறைவாகவும் நீரைக் கொள்ளலாம். வாழ்வில் பெறும் பேறுகளும் இத்தன்மை யனவே என்பது வள்ளுவர் வேமனர் முடிவான உரையாகும்.

*1-7-4* வேமனர் பள்ளியிலோ தனிப்பட்ட முறையிலோ தத்துவத்தைப் பயிலாதவரே ஆயினும், இவர் ஓர் இயற்கைத் தத்துவஞானியாக விளங்கினார்; இவ்வகையில் வள்ளுவர் வேறுபடுகிறார். அவர் தம் காலத்து நிலவிய உயர்ந்த ஞான நூற்கள் அனைத்தும் கற்றுள்ளார். அந்த அடிப்படையில் அவர் தத்துவம் அமைந்துள்ளது. இவ்வாறு இருவரும் கண்ட நெறியில் வேறுபடுகின்றனர்.

*1-7-5* இவ்விருவர் சிந்தனைகளை எல்லாம் தொகைவகைப் படுத்திப் பார்க்கும் பொழுது இருவரும் மெய்ப்பொருள் கண்ட தத்துவ ஞானிகள் என்பது புலனாகிறது; ஆயினும் திருவள்ளுவர் பக்திநெறிப்பட்ட சித்தாந்த சிந்தனையாளராகத் தோன்றுகிறார். வேமனரோ யோக நெறியைப் போற்றும் அத்துவைதியாகக் காட்சி தருகிறார்.

*1-7-6* மொத்தத்தில் இருவருடைய அறவுரைகளிலும், தத்துவ சமயச் சிந்தனைகளிலும், முன்னுரையில் கூறியவாறு அடிப்படையில் ஒற்றுமையும், கூறுபாட்டில் வேற்றுமையும் இருத்தல் உரைப்படுகிறது.

*1-8-1* திருவள்ளுவர், வேமனர் பாடல்களில் இராமாயணம், பாரதம் முதலிய காவியங்களில் உள்ளவாறு கற்பனை அதிகம் இடம்பெறவில்லை. இவை இரண்டும் நீதிகளையும், தத்துவத்தையும் உணர்த்துதலையே நோக்கமாய்க் கொண்டு இருக்கின்றன

எனவே இவை இரண்டும் நீதி இலக்கியங்கள் வரிசையில் வைக்கும் தகுதியைப் பெற்றிருக்கின்றன. வள்ளுவர் பாடல் வகையிலேயே மிகச் சுருங்கிய சொற்களால் ஆகும் குறள் வெண்பாவாலும், வேமனர் இவ்வாறே குறைந்த சொற்களால் ஆன ஆடவெலதி பாடல் வகையாலும் தம் பாடல்களை ஆக்கியுள்ளனர். எடுத்தாளும் சொற்களில் இருவரும் இனிமை தவழச் செய்துள்ளார்கள். இதனால், பெரும்பாலும் எல்லாப் புலவர்களும் அறவுரைகளைச் சிறிய பாடல்களாலேயே உணர்த்தினர் என்னும் பொதுநெறியை உணரலாம்.

*1-8-2* இருவரும் சொல்லும் பாங்கில் பலவகை உத்திகளை மேற்கொண்டுள்ளார்கள். உவமை, உருவகம் முதலிய அணி அழகும் இடம் பெற்றுள்ளது. இருவரும் ஒரே உவமை கொண்டு ஒரே பொருளையும், ஒரே பொருளை வெவ்வேறு உவமைகளாலும், வெவ்வேறு உவமைகளால் ஒரே பொருளையும் விளக்கியுள்ளார்கள். எனவே, ஒருசில உவமைகளும், அவ்வுவமைகளால் உணர்த்தப் படும் செய்திகளும் இந்தியாவுக்கே பொதுமையானவை என்ற உண்மைக்கு இவர்கள் சான்றாய் நிற்கிறார்கள்.

*1-8-3* இருவரும் அன்றாட அனுபவத்திலுள்ள தம்மைச் சுற்றியுள்ள பொருள்களையே உவமைகளாய் ஆண்டுள்ளார்கள். இத்துறையில் வள்ளுவரைக் காட்டிலும் வேமனர் மிஞ்சிவிடுகிறார்.

*1-8-4* பாடல்களில் வள்ளுவரைக் காட்டிலும் வேமனரே பழமொழிகளை அதிகம் ஆண்டுள்ளார். வேமனர் எடுத்தாண்ட பழமொழிகள் போன்ற தொடர்கள் தானாகவே எண்ணி எண்ணி படைத்துக் கொண்டவையே ஆகும். இவர் பரம்பரையாய்ப் பழக்கத்திலிருக்கும் பழமொழிகளையும் பக்குவ மாய்ப் பயன்படுத்தியுள்ளார்.

*1-8-5* இருவரும் ஐம்பொறிகள் வாயிலாகவும் தாம் உணர்த்த விரும்பிய கருத்துக்களை உணர்த்தியிருக்கின்றனர்.

*1-8-6* இயற்கையாய் அமையும் ஒலிநயமும், மோனை, எதுகை முதலியவற்றால் செயற்கையாய் அமையும் ஒலிநயமும் சிறந்த சொல்லாட்சியும் அமைந்து இருவர் பாடல்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

*1-9-1* இவ்வாறு வகையிலும் (Genee), வடிவத்திலும் (Form) அடிக்கருத்திலும் (Theme) உத்தியிலும் (Technique) இவ்விரு இலக்கியங்களிடையே ஒற்றுமை பல காணப்பெறுவது, பாடல்

வடிவில் திராவிட மண்ணுக்கு ஒரு பொது நெறி இருப்பதை அறிவிக்கிறது.

*1-9-2* இருவர் பாடல்களும் தம் நாட்டாரால் மட்டுமின்றி அயல் நாட்டாராலும் சிறப்பிக்கப் பெற்றிருக்கின்றன. ஆயினும் திருக்குறள் அளவுக்கு வேமனர் பாடல்கள் சிறப்பிக்கப் பெறவில்லை. தற்போது தெலுங்கு இலக்கிய உலகம் அவர் பாடல்களுக்குச் சிறப்புக் கொடுத்து வருகிறது. வள்ளுவர் குறள் வெண்பா வகையில் வெற்றி கண்டுள்ளார்; வேமனர் ஆடவெலதி பாவகையில் வெற்றி கண்டுள்ளார். திருக்குறள் தமிழ் நீதி நூல்களின் முடிமணியாய்த் திகழ்வதுபோன்று, வேமனர் பாடல்கள் தெலுங்கு நீதி இலக்கியத்தில் தலைமை இடம் பெறுகின்றன. முடிவாய் உள்ளடக்கத்தாலும், புறத்தோற்றத்தாலும், இலக்கியத் திறத்தாலும், உணர்த்தும் முறையாலும் திருக்குறள், வேமனர் பாடல்களைக் காட்டிலும் வீறுடன் விளங்குதலை இவ்வாய்வால் துணியலாம்.

*1-10-1* மொத்தத்தில் இந்த ஆய்வால், திருவள்ளுவருக்கும் வேமனருக்கும் இடையேயுள்ள பொதுத்தன்மைகளையும் சிறப்புத் தன்மைகளையும் தெரிந்து கொள்கிறோம். வள்ளுவர் இலக்கியப் போக்கையும் வேமனர் இலக்கியப்போக்கையும் அறிந்து கொள்கிறோம். திருவள்ளுவர் காலத்துத் தமிழ்நாட்டுச் சமுதாயச் சிந்தனையும், பண்பாடும், கலையுணர்வும், பழக்கவழக்கங்களும், வேமனர் காலத்து ஆந்திர மக்களின் சிந்தனையும், பண்பாடும், கலையுணர்வும், பழக்கவழக்கங்களும் இருந்த நிலையையும், வளர்ந்து வந்த வளர்ச்சியையும் காண்கிறோம். இதனால் இலக்கியம் ஒவ்வொன்றும், சிறப்புப் பண்புகளையும், பொதுப்பண்புகளையும் கொண்டுள்ளது என்பதை நாம் உய்த்துணர்ந்து கொள்ளலாம். மற்றும் உயர்ந்த கலைஞர்கள் ஒரு நாட்டில், ஒரு சூழலில், எந்தக் காலத்தில் தோன்றியவர்களாக இருந்தாலும், ஒரே தன்மையுடையவர்களாகத் தோன்றுகிறார்கள் என்ற உண்மையும் பெறப்படுகிறது.

*1-10-2* தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் ஓரின மொழிகள் என்பது மொழியியலார் கருத்து. இந்த ஆய்வில் இடங்கொண்ட தமிழ், தெலுங்கு இருமொழிகளும் தம்மில் பெரிதும் வேறுபாடுடையவை அல்ல என்பதும், இரு மொழிகளுக்கும் அடிப்படை ஒன்றே என்பதும், இவ்விருவரும் எண்ணும் எண்ணங்களிலும், அவற்றை வெளிப்படுத்தும் வழிவகைகளிலும் பெரிதும் ஒற்றுமை உண்டு என்பதும் இந்த ஆய்வால் தெரியவரு

கிறது. மேலும், திருவள்ளுவரையும் வேமனரையும்—மற்ற இலக்கியங்களிலுள்ள நீதி நூல்களோடு ஒப்பிட்டுப் பல பல உண்மைகள் காண வழியிருப்பதையும் அறிவிக்கிறது.

*1-10-3* பொய்யும் பொறாமையும் அற்ற, வறுமையும் கொடுமையும் அற்ற சமுதாயம் அமைய இருவரும் முயன்றனர்; அதேநேரத்தில் மனத்தூய்மையும், மீண்டும் பிறவாப் பேரின்ப நிலையும் அடையும் வழிவகைகளைக் காட்டி, மனிதன் மனிதனாக வாழ்ந்து முத்தி பெறுவதற்கு முதலுதவியாளராயும் நின்றனர்.

இவ்வகையில், இவ்வாய்வு இரு இலக்கியங்களைப் புரிந்து கொள்ளவும், இன்பம் துய்க்கவும் பயன்படுவதோடு, சில பொது நெறிகளையும் படைக்கிறது.

# பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு—1

# துணை நின்ற நூல்கள்

## 1. தமிழ் நூல்கள்

**ஆராய்ச்சி நூல்கள் :**


இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. 3 ஆம் பதிப்பு, மு. ரா. நாராயண ஐயங்கார் வெளியீடு, மானாமதுரை, 1960

இராசமாணிக்கம், மா., திருவள்ளுவர் காலம் யாது? செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1954.

இராசமாணிக்கம், மா., (உரை), பழமொழி நானூறு, கழக வெளியீடு, சென்னை, 1967.

இராமகிருஷ்ணன், எஸ்., கம்பனும் மில்டனும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1.

இலட்சுமணன், கி., இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.

இராமசுவாமி, உலகப் பழமொழிகள், வள்ளுவர் பண்ணை, சென்னை, 1975.

கந்தசாமி, சொ. ந., தமிழும் தத்துவமும், மணிவாசகர் நூலகம், 1976.

குளோரியா சுந்தரமதி, எஸ்., இலக்கியக் கொள்கை, பாரி நிலையம், சென்னை - 1966.

கைலாசபதி, க., ஒப்பிலக்கிய இரகசியம், பட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1969.

கோவிந்தசாமி, மு , குறள் மனம், பாரி நிலையம், சென்னை, 1958.

சஞ்சீவி, ந. (பொ. ப. ஆ.), பல்கலைப் பழந்தமிழ், சென்னைப் பல்கலைக் கழகம், 1974.

சண்முகம் பிள்ளை, மு., திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், சென்னைப் பல்கலைக் கழகம், 1971.

சண்முகம் பிள்ளை, மு., திருக்குறள் அமைப்பும் முறையும், சென்னைப் பல்கலைக் கழகம்.

ஜகந்நாதன், கி. வா. (பதிப்பாளர்), திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை, 1963.

சாமி. சிதம்பரனுர், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், இலக்கிய நிலையம், சென்னை, 1964.

சிவஞானம், ம. பொ., திருக்குறளிலே கலை பற்றிக் கூறுதேன்? பூங்கொடிபதிப்பகம், சென்னை, 1976.

சுப்பிரமணியன். ச. வே., வீராசாமி, தா. வே., தமிழ் இலக்கியக் கொள்கை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

சுப்பிரமணியன், ச. வே., ஆராய்ச்சி நெறிமுறைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 1975.

சுப்பிரமணிய அய்யர், ஏ. வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம், சென்னை, 1971.

சுப்பிரமணிய அய்யர், ஏ. வி., அறுவகைச் சமயம், சென்னை, 1973.

நார்ல, வி. ஆர்., வேமனர் (சுப்பு ரெட்டியார், ந. மொழி பெயர்ப்பு), சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1979.

சுப்பு ரெட்டியார், ந., அறிவுக்கு விருந்து, செந்தில்குமரன் பதிப்பகம், திருப்பதி, 1976.

சுப்பு ரெட்டியார், ந., கவிதை அனுபவம், கழக வெளியீடு, சென்னை, 1961.

சுந்தர மூர்த்தி, இ., திருக்குறள் அணிநலம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971.

சுந்தரமதி குளோரியா (மொ. பெ.), இலக்கியக் கொள்கை, ஐ, ஏ. டி. ஆர், சென்னை, 1966.

செயராமன், ந. வீ., சதக இலக்கியங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1966.

செல்வகேசவராய முதலியார், திருவள்ளுவர், சென்னை, 1934.

சேதுப்பிள்ளை, ரா. பி., திருவள்ளுவர் நூல்நயம், கழகப் பதிப்பு, 1965.

ஞானசம்பந்தன், அ. ச., இலக்கியக் கலை, கழக வெளியீடு, சென்னை, 1956.

ஞானமூர்த்தி, தா. ஏ., இலக்கியத் திறனுப்வியல், தமிழின்பம், 11 தாமுநகர், கோவை.

தண்டபாணி தேசிகர், ச., திருக்குறள் அழகும் அமைப்பும், தொல்காப்பியர் நூலகம், சென்னை, 1961.

தண்டபாணி தேசிகர், வள்ளுவரும் கம்பரும், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1975.

தண்டபாணி தேசிகர், ச., திருக்குறள் உரைவளம், இரண்டாம் பதிப்பு, 1957.

'தமிழண்ணல்' இராம பெரிய கருப்பன், சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள். மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.

'தமிழண்ணல்' இராம பெரிய கருப்பன், ஒப்பிலக்கிய அறிமுகம், சோலை நூலகம், மதுரை, 1977.

திருநாவுக்கரசு, க. த., திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971.

திருநாவுக்கரசு, க. த., திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை - 85, 1978.

திருநாவுக்கரசு, க.த., சான்றோர் கண்ட திருவள்ளுவர். மணியகம்' சென்னை - 85. 1979.

தெய்வநாயகம். மு., திருவள்ளுவர் கிறிஸ்துவரா?, மெய்ப் பொருள் பதிப்பகம், சென்னை, 1969.

பெரியண்ணா, ப. எ., திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை - 17.

மறைமலையடிகள், தமிழர் மதம், கழக வெளியீடு, சென்னை 1965.

மாணிக்கம், வ. சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962.

மாணிக்கம், வ. சுப., சிந்தனைக் களங்கள், (கட்டுரை - சங்க இலக்கிய வழி திருக்குறள்); மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1975.

மாணிக்கம், வ. சுப., ஒப்பியல் நோக்கு, மணிவாசகர் நூலகம். சிதம்பரம், 1978.

மாணிக்கம், வ.சுப., வள்ளுவம், பாரி நிலையம், சென்னை, 1958.

மாயாண்டி, இரா., சங்க இலக்கியத்தில் கற்பனை, எழிலகம், 4, இந்திராணி தெரு, சென்னை, 1980.

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., சேக்கிழாரும் திருக்கண்ணப்ப நாயனாரும், தருமபுர ஆதீன வெளியீடு, 1955.

வரதராசனார், மு., தமிழ் இலக்கிய வரலாறு (முதல் வெளியீடு), சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1972.

வரதராசனுர், மு., திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை, 1967.

வரதராசனுர், மு., இலக்கியத்திறன், பாரிநிலையம், சென்னை, 1966.

வையாபுரிப் பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், பாரி நிலையம், சென்னை - 1954.

வையாபுரிப் பிள்ளை, இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1954.

**இலக்கியங்கள் :**

கம்பராமாயணம்(பாலகாண்டம்), சாமிநாதய்யரவர்கள், உ.வே., சாமிநாதையரவர்கள் நூல் நிலையம், சென்னை, 1967.

கலித்தொகை, நச்சினுர்க்கினியர் (உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1967.

குறுந்தொகை, சாமிநாத ஐயரவர்கள் (உரை), தியாகராச விலாச வெளியீடு, (நான்காம் பதிப்பு), சென்னை, 1955.

சிலப்பதிகாரம், (சோமசுந்தரனுர், பொ.வெ., உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1970.

திருக்குறள், உ.வே.வை.மு.கோ., உரை, சென்னை, 1965.

திருக்குறள், வரதராசனுர், மு., தெளிவுரை, கழக வெளியீடு, சென்னை.

திருக்குறள், காளிங்கர்—பரிப்பெருமாள் உரை, டி.பி. பழநியப்ப பிள்ளை (பதிப்பாளர்), திருவேங்கடேசுரர் கீழ்க்கலை ஆராய்ச்சி நிலையம், திருப்பதி, 1984.

திருநாவுக்கரசு நாயனுர் தேவாரத் திருப்பதிகங்கள், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (பதிப்பு), தருமையாதீனம், தருமபுரம், 1963.

பத்துப்பாட்டு—பகுதி—2, சோமசுந்தரனுர், பொ.வே., (உரை),, கழகப் பதிப்பு, சென்னை, 1898.

பன்னிரு சதகத் திரட்டு, இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1971.

பாரதியார் கவிதைகள், எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை வெளியீடு (பதிப்பு—3), திருநெல்வேலி, 1968.

புரநானூறு, பகுதி—1, (வி.உரை), ஔவை துரைசாமி பிள்ளை, சு., கழகப் பதிப்பு, சென்னை, 1967.

பெருங்கதை, சாமிநாதையரவர்கள், உ.வே. (உரை), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் (நான்காம் பதிப்பு), சென்னை, 1968.

மணிமேகலை, சாமிநாதையரவர்கள், உ.வே. (உரை), தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1965.

நற்றிணை, நாராயணசாமி ஐயர் (உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1962.

நாலடியார், இளவழகனார் (உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1968.

வேமன பத்தியம், புதுவை நாராயணசாமி (தமிழ் உரை), துரைசாமி முதலியார், எஸ்., சென்னை.

**இலக்கணங்கள் :**

சூடாமணி நிகண்டு, ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1966.

சேந்தன் திவாகரம், கழகப் பதிப்பு, சென்னை, 1958.

தண்டியலங்காரம், சுப்பிரமணிய தேசிகர் (உரை), கழகப் பதிப்பு, சென்னை 1973.

தொல்காப்பியம்—பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் (உரை), கழகப் பதிப்பு சென்னை, 1971.

தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்), நச்சினார்க்கினியர் (உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1966.

தொல்காப்பியம் (சொல்லதிகாரம்), நச்சினார்க்கினியர் (உரை), கழகப் பதிப்பு, சென்னை, 1974.

பிங்கல நிகண்டு, கழக வெளியீடு, சென்னை, 1968.

நன்னூல் (ஆறுமுக நாவலர் பதிப்பு).

யாப்பருங்கலக்காரிகை, கழக வெளியீடு, சென்னை, 1956.

**கட்டுரைகள் :**

அண்ணாதுரை, வேமன்னா, திராவிடநாடு பத்திரிகை, 8-4-1945.

அன்பழகன், க., இல்லறமே நல்லறம், சேலம் தமிழ்ச்சங்கம், இரா.வை. கணபதி நினைவு மண்டபம் திறப்பு விழா சிறப்பு மலர், 6-9-1975.

சேதுரகுநாதனார், ந., ஒரு மறை (திருக்குறள்), கட்டுரை, பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு. சென்னை, 1966.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பொன்விழா மலர், 1970, சென்னை, கழகப் பதிப்பு.

திருவாட்டி மண்டோதரி கணேசன், திருக்குறள் உலகப் பொது மறையா?, இரா. வை. கணபதி நினைவு மண்டபம் திறப்பு விழா சிறப்பு மலர், 6. 9. 1975, சேலம் தமிழ்ச் சங்கம்.

திருக்குறளில் அறிவுத் துறைகள் (கட்டுரைத் தொகுப்புகள்), ஜைனர் இளைஞர் மன்றம் (பதிப்பு), சென்னை, 1977.

திருவள்ளுவர் திருநாள் விழா மலர், கழகப் பதிப்பு, சென்னை, 1968.

திருக்குறள் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (1968 - 1969) பகுதி - 2, வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.

பதினெண்கீழ்க்கணக்கு சொற்பொழிவுகள், சை. சி. நூ. ப. கழகம், சென்னை, 1966.

பிச்சமுத்து, பேரா. ந., திருவள்ளுவரின் சமுதாயப்பார்வை, இரா. வை. கணபதி, நினைவு மண்டபம் திறப்பு விழா சிறப்பு மலர், 6- 9- 1975, சேலம் தமிழ்ச் சங்கம்.

புருடோத்தம நாயுடு, பி. ஆ., திருவள்ளுவர் தெய்வக் கொள்கை (கட்டுரை), தொகுதி - 19, கீழைக்கலை ஆய்விதழ், சென்னை, 1964.

**கலைக்களஞ்சியம், அகராதி :**

கலைக்களஞ்சியம் - தொகுதி - 4, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு சென்னை, 1956.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பாகம் - 1, 2, இ. மா. கோபால கிருஷ்ணக்கோன் (வெளியிட்டது), சென்னை, 1956.

## 2. தெலுங்கு நூல்கள்

**ஆராய்ச்சி நூல்கள் :**

அப்பாராவ், ஜி., வேமன சர்வக்ஞுலு, ஆசிரியர் வெளியீடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1979.

ஆருத்ர, வேமன வேதம் (140 பாடல்களுக்கு மட்டும் உரை), யுவபாரதி வெளியீடு, ஹைதராபாத்.

ஆதிநாராயண சாஸ்திரி, ப., வேமனயோகி ஜீவிதமுலு, வாவிள்ள ராமசுவாமி சாத்ருலு & சன்ஸ், சென்னை, 1917.

நிடதவேலு வெங்கடராவு, ஆந்திர வான்மய சரித்திர, சென்னைப் பல்கலைக் கழகம், 1957.

ஆருத்ர, சமக்ராந்தர சாயித்யமு, பாகம் - 12, எம் சேஷாச்சலம் & கோ., சென்னை, 1968.

இராள்ளபல்லி அனந்தகிருஷ்ண சர்ம, வேமன, ஆந்திர விஷ்வகலா பரிஷத்து, 1947.

கட்டமன்கி இராமலிங்கா ரெட்டி, கவித்வ தத்துவ விசாரமு, ஆந்திர விஸ்வகலா பரிஷத், 1913

நேதுகூரி கங்காதரம் (பதிப்பாளர்), மகாகவி வேமனயோகி, கிருஷ்ணு டிப்போ, சென்னை, 1930.

பண்டாரு தம்மய்ய, வேமன சரித்ரமு, சைவ சாயித்ய கிரந்தமால, காகிநாட, 1968.

பிங்கலி லட்சுமி காந்தம், ஆந்திர சாஹித்திய சரித்திர, ஆந்திர பிரதேஷ் சாஹித்திய அகாதமி, ஹைதராபாத், 1974.

பூர்ணுயாசாருலு, வேமன யோகீந்திர சரித்ர, மசூலிப்பட்டனம், 1913.

பொங்கோரெ, பிரெளன் லேகலு, பிரஜெக்படு, ஸ்ரீ வெங்கடேஸ்வர யூனிவர்சிட்டி, 1976.

மருவூரி கோதண்டராமி ரெட்டி, வேமன பாசாயத்துலு' நெல்லூர் வர்த்தமான சமாஜம் வெளியீடு, நெல்லூர், 1974'

மருவூரி கோதண்டராமி ரெட்டி, பிரஜாகவி வேமனயோகி, ஆந்திர சாஹித்திய அகாதமி, ஹைதராபாத், 1976,

முசுகூரி வெங்கட சாஸ்திரி, வித்யார்த்தி கல்ப தருவு (தெலுங்கு மொழிச் செய்தி சுருக்கம் அடங்கியது), வெங்கடராம & கோ., சென்னை, 1967.

வங்கூரி சுப்பாராவ் & நிடுதவேலு வெங்கடராவ், சதக கவுல சரித்ரமு. நிடுதவேலு, 1957.

வங்கூரி சுப்பாராவ், வேமன, நரசாபுரம், 1951 (மறுபதிப்பு).

வெங்கடகிருஷ்ணசர்ம, வே., சதக வான்மய சர்வஸ்வமு, சென்னை, 1954.

**இலக்கியங்கள் :**

வேமனபத்தியமுலு, நேதுகூரி கங்காதரம், அத்தே பல்லி & கோ., ராஜமண்டிரி, 1960.

வேமன ஞானமார்க்க பத்தியமுலு, கிருஷ்ணு புக் டிப்போ, சென்னை, 1923.

வேமன சூத்திர ரத்னுகரமு, பூர்ணுயாச்சாருலு, (பதிப்பாளர்), மசிலிபட்டனம், 1913.

வேமன பத்யமுலு, வாவிள்ள இராமசுவாமி சாஸ்த்ருலு & சன்ஸ், சென்னை, 1955.

வேமன நீதி பத்ய ரத்னுவளி, பி.வி. கிருஷ்ணு புக் டிப்போ, சென்னை, 1961.

**இலக்கணம் :**

அடிதமு சூரகவி, ஆந்திர சந்தரா லோகமு, வாவிள்ள இராம சுவாமி சாஸ்த்ருலு & சன்ஸ், சென்னை, 1976.

**கட்டுரைகள் :**

நூதலபாடி கங்காதரம், வேமன மார்கதர்ஷி குருநாடகு, பாரதி, ஜனவரி, 1965.

கோபி, என்., வேமன பத்தியால பிரதுலு பரிஷ்க்கரண, பாரதி மாத பத்ரிகை, செப்டம்பர், 1980.

கோபி, என்., வேமன பத்தியால பரிஷ்க்கரண, பிரௌஊன்— நேபத்திய க்ருஷி, பாரதி மாத பத்ரிகை, அக்டோபர், 1980.

**நிகண்டு :**

தெலுங்கு நிகன்ட்டுவு (தெலுங்கு நிகண்டு), ஆந்திரப் பிரதேஷ் சாகித்திய அகாடமி, ஹைதராபாத், 1973.

# 3. ENGLISH BOOKS

## CRITICAL BOOKS

Abercrombie, L., Principles of Literary Criticism.

Aiyar, V.V.S., The Kural or Maxims of Tiruvalluvar, Amuda Nilayam, Madras, 1961.

Albert Guerard, Preface to world literature, New york, 1947.

Anderson, Durston, Poole, Thesis and Assignment Writing, Wiley Eastern Private Ltd., (First Edition) New Delhi, 1970.

Appa Rao, G., The Great Poets of the World, Madras University, 1973.

Ariel, E., Kural de Tiruvalluvar, Fragment Traduits de Tamoul, Journal of Asiatic Society, Vol. VI, Calcutta, 1848.

Philosophy in the fifteen Modern Indian Languages, Ed. Prof. Bedekar, V.M., Pune-30, 1979.

Besant, Annie, Universal Text-book of Religion and Morals, Theosophical Publishing house, Adyar, 1901.

Caldwell. R, A Comparative Grammar of Dravidian Languages, University of Madras, 1956.

Charles, Gover, E., The Folk Songs of South India, S.S.S.P.W., Madras, 1959.

Chennakesavan, S., The Concept of Mind in Indian Philosophy, Asia Publishing House, Bombay, 1960.

Datha & Chatterjee, An introduction to Philosophy, University of Calcutta, 1960 (10th Ed.).

Henry Gifford, Comparative literature, London, 1969.

Hariyanna, M., Popular Essays in Indian Philosophy, Kaivalya Publishers, Mysore, 1952.

Horace, Ars Poetica, Rushton Fair Elough, Cambridge Mass, 1936.

John Ruskin, Modern Painters, Tol. II, George Allen, London, 1903.

John. Samuel, R. Shanmugam, Comparative literature Vol. I, Academy of Comparative literature, Mani pathippakam, Madras-85.

Kailasapathy, K. Tamil Heroic Poetry, Oxford, 1968.

Krishna Reddy, D., Vemana and Samkara, Unpublished Theses, S.V. University, Tirupati.

Lyon, P.H.B., The Discovery of Poetry, Edward Arnold & Co., London, 1932.

Mahadevan, T.M.P., The Philosophy of Advaita, Ganesh & Co., Madras, 1957.

Mahadevan, T.M.P., Outlines of Hinduism, Madras, 1956.

Meenakshisundaran, T.P., A History of Tamil Literature, Annamalai University, 1965.

Mir Mahmood Alikhan, The Musings of a Mystic (Telugu Poems of Vemana rendered into English Verse), Hyderabad, 1966.

Narla, V.R., Vemana, Sahitya Academy, New Delhi, 1969.

Narla, V.R.(Ed.), Vemana through Western eyes, M. Seshachalam & Co., Madras, 1969.

Pope, G.U., The Poets of the Tamil Land, Tamilian Antiquary, Madras, 1912.

Pope, G.U., The Sacred Kural (Tr.) Henry Frowde, London, 1886.

Radhakrishnan, S., Indian Philosophy, Vol. I & II, George Allen & Unwin Ltd., London, 1930.

Radhakrishnan, S., Moral Values in Literature, P.K. Publications, Bangalore, 1950.

Ramaswami Sastrulu, Abhinavagupta, Abhinava Bharatha, Oriental Institutions, Baroda, 1957.

Rene wellek & Austion Warren, Theory of Literature, New york, 1948.

Richards, I.A., Principles of Literary Criticism, Routledge & Kegan paul, London, 1961.

Rudly, M.R., Poetry and the Ordinary Reader, G. Bell and Sons Ltd., London, 1930.

Senkararaju Naidu, S., Bhakthi Cults of Mannikka Vasahar and Kabirdas, Madras University, 1971.

Shelly, P.B., The Selected Poetry and Prose of Percy, Carlos Baker (Fd), The Modern Literary, New york, 1951.

Sitapathi, G.V., History of Telugu Literature, Sahitya Academi, Hyderabad. 1968.

Tirumathi Sornammal Endowment Lectures on Tirukkural, 59-60, 68-69. Part-I, University of Madras, 1971.

Titus Harold, H., Ethics for today, Eurasia Publishing House Ltd., New Delhi-1, 1966.

Varadarajan, M., The Treatment of Nature in Sangam Literature, The South India Saiva Siddhanta Works, (Ed. 2), 1969.

The Verses of Vemana, Venkateswara Sastrulu, V., Ramaswamy Sastrulu, V. (Ed.), Vavilla Press, Madras, 1955.

Vivekananda, Advaita Vedanta-the Scientific Religion. Advaita Ashram, No. 15, Delhi Entally Road, Calcutta-14, 2nd Edn., 1962.

Swami Vivekananda, What Religion is, Edited by Johnyale, Phoenix House, Ltd., London, 1962.

Werrer, Friederich, P. The Challange of Comparative literature and their addresses.

Winchester, C.T., Some Principles of Literary Criticism, Macmillan & Co., London, 1960.

Wordsworth, Literary Criticism, Nowell Smith, London, 1935.

## Essay, Manuscripts, Encyclopedia & Dictionary

Appa Rao, G., Vemana the World Poet (Essay), Vol. XXIII, Annals of Oriental Research, University of Madras, 1971.

Manuscripts Containing Vemana's Verses, Oriental Institute, S.V. University, Tirupati.

Manuscripts Containing Vemana's Verses, Oriental Manuscript Library, Triplicane, Madras.

Encyclopedia, Britannica, Vol. 11, 15, 17.

The OXFORD ENGLISH DICTIONARY, At the Clarendon Press, 1933.

பின்னிணைப்பு—2

## விளக்கக் குறிப்பு

**அஷ்டட திக் கஜங்கள்**

அல்லசானிபெத்தன, முக்குதிம்மன, பட்டபூர்த்தி, தெனலி இராமகிருஷ்ணன், தூர்ஜடி, பிங்கலிசூரன, மாதய்ய கவிமல்லன, அய்யலவாரி இராமபத்திரன்—இந்த எண்மர் புலவர்கள் அஷ்டட திக் கஜங்கள் என்று சொல்லப்பட்டனர்.

**ஆந்திரிகரணம்**

வடமொழியினின்று தெலுங்கு மொழிக்கு ஆக்கப்பட்டவை. இக்காவியங்களில் வடமொழிச் சொற்களும், தெலுங்குமொழிச் சொற்களும் கலந்திருக்கும்; வடமொழிச் சொற்கள் தெலுங்கு மொழிச் சாயலைப் பெற்றிருக்கக்கூடியவை.

**ஆருத்தரா**

1925ஆம் வருடத்தில் பிறந்தவர். இன்றும் சென்னையில் வாழ்ந்து வருகிறார்; தெலுங்கு, இந்தி, ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளை அறிந்தவர். திரைப்படங்களுக்குக் கதைகளை எழுதி வருபவர். தற்காலச் சிறந்த தெலுங்குமொழிக் கவிஞர்களில் ஒருவர். 'சமத்ர ஆந்திர சாயித்தியத்தை'ப் (ஆந்திர இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்) பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்து எழுதியவர்.

**இராள்ளபல்லி அனந்தகிருஷ்ண சர்ம**

தெலுங்கு, தமிழ், கன்னடம், வடமொழி, பாலி மொழிகளில் வல்லுநரான இவர் ஒரு தலைசிறந்த இசை அறிஞராகவும் விளங்கினார். தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதுபவர். வேமனரைப் பற்றி ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவுகள் ஆற்றியவர். வேமனர்மேல் நல்ல இலக்கியத் திறனாய்வு நூலையும் எழுதியுள்ளார். இவர் மைசூர் மகாராசர் கல்லூரியில்

கி.பி.1912லிருந்து 1949 வரை தெலுங்கு விரிவுரையாளராகப் பணியாற்றியவர். திருப்பதியிலும் பெங்களூரிலும் வாழ்ந்து, அண்மையில் இவ்வுலகத்தை விட்டு நீங்கினர்.

எர்ரன பாரதம்

பாரதத்தை வடமொழியினின்று தெலுங்காக்கியவர்களில் இவர் மூன்ருமவர். நன்னய்ய விட்டுச் சென்ற ஆரண்ணிய பருவத்தை முடித்த பெருமை இவரைச் சாரும். இதுவேயன்றி வேறு நூல்களும் எழுதியுள்ளார். இவர் மொழி பெயர்ப்பில் வடமொழியும், தெலுங்கு மொழியும் சமமாய்க் கலந்திருக்கின்றன.

கந்துகூரி வீரேசலிங்கம்: கி. பி.1848-1919

புதுச்சாடையில் அமைந்த தற்காலத் தெலுங்கு இலக்கியத்துக்கு வழிகாட்டியாய் நின்றவர். இவர் 120 நூல் களுக்குமேல் எல்லாவிதத் துறைகளிலும் எழுதியுள்ளார். ஐந்தாம் வகுப்பு நூல் முதல் ஆந்திர வரலாறு வரை எழுதியவர்.

காக்குநூரி அப்பகவி

இவர் கி.பி. 17ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இலக்கண யாப்பு நூல்களின் ஆசிரியர். நன்னயாவின் 'ஆந்திரசப்த சிந்தாமணி' நூலைத் தெலுங்கிற்கு மொழிபெயர்த்தவர்.

காப்பு குலம்

பிரௌன் தொகுத்த தெலுங்கு ஆங்கில அகராதியில் 'காப்பு' என்ற சொல்லிற்கு 'உழவர்', 'பயிர் செய்வோன்', 'குடியாள்', 'பட்டிக்காட்டார்' என்ற பொருள்கள் காணவருகின்றன. இந்த எல்லாப் பொருள்களுள்ளும் 'உழவர்' என்ற பொருளே பொதுவாய் அதிகமாய் ஆளப்பட்டு வருகிறது.

கிரீசன் ஜி.எ.

அயல்நாட்டு ஆய்வாளர். இந்தியாவிலுள்ள மொழிகளைக் கற்றுக் கொள்வதற்காகத் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தவர்.

குருஜாடை ஸ்ரீராமமூர்த்தி : கி. பி. 1851-1899

இவர் மொத்தம் ஏழு நூல்களை இயற்றியுள்ளார். அயல்நாட்டார் எழுதிய வரலாற்றின் அடிப்படையில் வரலாற்று நோக்கில் ஆந்திரத்தின் வரலாற்றை எழுதியவர்.

**திக்கன : கி. பி. 1220-1300**

வடமொழிப் பாரதத்தில் விராட பருவத்திலிருந்து பதினைந்து பருவங்களைத் தெலுங்காக்கியவர். உத்தர ராமாயணத்தையும் தெலுங்காக்கியவர்களில் இவர் இரண்டாமவர். 'கவி பிரம்ம' என்ற பட்டம் இவருக்குண்டு. இவர் மொழி பெயர்ப்பில் மூன்று கூறு தெலுங்கும் ஒருகூறு வடமொழியும் கலந்திருக்கும். இவர் இயற்றிய வேறு நூல்களும் உள.

**நன்னய்ய : கி. பி. 1000-1150**

இராசராச நரேந்திரரின் அரசவைப் புலவர். அந்த அரசரின் வேண்டுகோளுக்கிணங்க வியாச மாமுனி வடமொழியில் எழுதியுள்ள பாரதத்தில் ஆதிபர்வம், சபாபர்வம், ஆரண்ணிய பருவத்தில் ஒரு பகுதி ஆகியவற்றைத் தெலுங்காக்கியவர். வடமொழியிலும் தெலுங்குமொழியிலும் வல்லமை வாய்ந்தவர். இவர் மொழிபெயர்ப்பில் மூன்றுகூறு வடமொழிச் சொற்களும், ஒருகூறு தெலுங்குச் சொற்களும் கலந்திருக்கும். வேறுசில நூல்களையும் எழுதியுள்ளார்.

**பால்கூரி சோமநாதன்**

தெலுங்கு, கன்னடம், வடமொழிகளில் வளமான எழுத்தாளரான இவர், வீர சைவ மதத்தைத் தீவிரமாகப் பரப்பி வந்தார். பசவபுராணம், பண்டித ராத்ய சரித்திரம். அனுபவசாரம் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

**பாஸ்கர இராமாயணம் : கி. பி. 1240-1326**

பாஸ்கரர் என்பவரால் இயற்றப்பட்டதால் பாஸ்கர இராமாயணம் என்று பெயர் கொண்டது. தெலுங்கு மொழியில் தோன்றிய முதல் இராமாயணம் இதுவே ஆகும். இது பாடல் உருவத்தையும், உரைநடையையும் கொண்டது. இரங்கநாத இராமாயணம் இதற்கு அடுத்துத் தோன்றியது.

**பிரௌன் சார்லஸ் ஃபிலிப்ஸ் : கி. பி. 1798-1884**

இந்தியன் சிவில் சர்வீஸ் அலுவலர். இவர் தெலுங்கர்களிடமும், தெலுங்கு மொழி தெலுங்கு இலக்கியத்தின் மீதும் அதிக அன்பு காட்டினர். அவற்றிற்காகச் சிறந்த சேவையும் புரிந்தார். தெலுங்கு இலக்கணம், தெலுங்கு-ஆங்கிலம், ஆங்கிலம் - தெலுங்கு அகராதிகள் இவற்றை ஆயத்தம் செய்து வெளி

யிட்டதுடன், நூற்றுக்கணக்கான ஓலைச்சுவடிப் படிகளையும் சேகரித்தார். அவற்றை ஒப்புநோக்கிப் பதிப்பித்து அச்சிட உள் நாட்டுப் புலவர்களுக்கு உதவியும் ஊக்கமும் தந்தார். வேமனரின் இலக்கியப் புகழுக்காக இடை விடாது உழைத்து, அடிப்படைப் பணிகளைப் புரிந்தார்.

**பூசாரி சென்னய்ய**

அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள கதிரியை அடுத்துள்ள நல்லசெருவுபல்லெ கிராமத்திலுள்ள, சிவயோகியாய் உள்ள வேமனர் உருவமுடைய கோவிலில் பூசாரித் தொழில் செய்து வந்தவர்.

**பூர்ணயாச்சார்லு, ஆர்.**

வேமனரின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுள் மிகத் தொன்மை வாய்ந்தவர். இவர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் வேமனரிடம் கொண்ட பக்தியோ மிகுதி. பிரௌன் என்பார் வேமனர்மேல் மேற்கொண்ட பணியைத் தொடர்ந்து செய்தவர். வேமனரின் பனையோலைக் கையெழுத்துப் படிகளுக்காக நாடு முழுவதும் அலைந்து திரிந்தார். வாய்மொழி யாகப் பழக்கத்திலிருந்த நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதிக் கொண்டார். வேமனரின் வரலாற்றுச் செய்திகளாகத் தான் நம்பியவற்றை எழுதித் தொகுத்துக் கொண்டார். இம்முயற்சியின் விளைவாக *1913*இல், *4035* வேமனர் பாடல்கள் அடங்கிய கவிதைத் தொகுப்பினை வெளியிட்டார்.

**போதன : கி. பி. 1450-1510**

வடமொழியிலுள்ள பாகவதத்தைத் தெலுங்காக்கியவர், நினைப்பினும், சொல்லினும் உண்மையான பக்தியை மேற்கொண்டவர். இவர் குருவின்றித் தானாகவே கற்றுக்கொண்டவர். இவரின் வேறு நூல்களும் உண்டு.

**மல்லிகார்ஜுன பண்டிதர் : கி. பி. 1110-1158**

காக்கத்தியப் பேரரசர். சிறந்த புலவர். வாதமிடுவதில் வல்லவர். பொதுமேடைகளில் புத்த சமயத்தாரைப் பலசமயம் தோற்றோடச் செய்தவர். இவருடைய சிவதத்து வசாரம் சைவ மதத்தின் தத்துவத்தை விளக்கும் ஒரு நல்ல ஆய்வு நூல்.

மருபூரு கோதண்டராமி ரெட்டி

நெல்லூர் மாவட்டத்தைச் சார்ந்தவர். தெலுங்கு மொழியிலும், ஆங்கில மொழியிலும் நல்ல புலமை உள்ளவர். இஃனும் தெலுங்கு இலக்கியத்திற்குப் பலவகைகளில் தொண்டு செய்து வருகிருர். வேமனரைப் பற்றித் தெரிந்து கொள்ள ஓரளவுக்கு முயன்றவர். 'Vemana through Western Eyes' என்ற நூலை ஆங்கிலத்தினின்று தெலுங்கிற்கு மொழிபெயர்த்துள்ளார். பிரஜாகவி வேமனயோகி என்ற நூலின் ஆசிரியரும் இவரே.

ரெட்டி, டாக்டர் சி. ஆர். : கி. பி. 1880-1951

ஒரு சிறந்த கல்வி நிபுணர். ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டுகள் துணைவேந்தராகப் பணியாற்றியவர். சிறிது காலம் மைசூர்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்தவர். நகைச்சுவையோடு திறமையாகப் பதிலிறுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர். ஒரு சிறந்த பேச்சாளராகவும், புகழ்பெற்ற திறனாய்வாளராகவும் திகழ்ந்தவர்.

வங்கூரி சுப்பாராவ் : கி. பி. 1885-1923

சிறிய உற்பத்தியாளராகவும் வாணிகராகவும் வாழ்க்கையைத் தொடங்கியவர். பின்னர் தம்மை இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்திக் கொண்டார். இவர் வெளியிட்ட நூல்களில் வேமனரின் வாழ்க்கை வரலாறு, சதகக் கவிஞர்களைப் பற்றி ஓர் ஆய்வு நூல், தெலுங்கு இலக்கிய வரலாறு என்ற நூல்களும் அடங்கும்.

ஸ்ரீநாதர் : கி. பி. 1280-1445

இவர் சிறந்த அறிவாளி. வடமொழி, பிராகிருதம் தெலுங்கு மொழிகளில் மிகவும் திறம் வாய்ந்தவர். இளமையிலே கவிதை கட்டும் ஆற்றல் பெற்றிருந்தார். ஏறக்குறைய 13 நூல்களை இயற்றியுள்ளார். ஆந்திர இலக்கியத்தில் இவருக்குச் சிறந்த இடமுண்டு. வேமா ரெட்டி அரசர் காலத்தில் சிறந்த இருப்பிடத்தைப் பெற்றிருந்தார். மற்ற அரசர்களாலும் சிறப்பிக்கப்பட்டார். வடமொழிக் காப்பியத்தை முதன்முதல் தெலுங்காக்கியவர் இவரே. இவர் நகைச்சுவையும், அகச்சுவையுங் கொண்டு பாடல் செய்வதில் வல்லவர்.